# சின்னணைஞ்சான் கதை

## அரவமுத்து வீரன் கதை

(கிளைக்கதை)

பதிப்பாசிரியர்

முனைவர் சு. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

# சின்னணைஞ்சான் கதை

என்ற

# சிவனணைஞ்ச பெருமாள் கதை

(சமூகக் கதைப்பாடல்)

பதிப்பாசிரியர்

முனைவர் சூ. நிர்மலா தேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி

சென்னை - 600 113

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Cinnanañcān Kaṯai<br>Aravamuṯu Viran Kaṯai<br>(Kiḷaikkaṯai) |
| Author | : | Dr. S. Nirmala Devi, M.A.Ph.D.,<br>Dip. in Epigraphy &<br>Archaeology<br>Dip.in Manuscriptology, I.I.T.S. |
| Publisher | : | International Institute of Tamil Studies, C.I.T.Campus,<br>Taramani, Chennai- 600 113 |
| Publication No. | : | 313 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 70 GSM Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 Point |
| No.of copies | : | 1000 |
| No. of pages | : | ix + 302 |
| Price | : | Rs.75/- |
| Binding | : | Paper Pack |
| Printers | : | Parkar Computers and Publications<br>293, Rayapettah High Road<br>Chennai-600 014. |
| Subject | : | Folk Ballad |

முனைவர் ச.சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

# அணிந்துரை

பண்டைத் தமிழர்கள் கல், செம்பு, பனையோலை என்ற மூன்று வகையான முக்கிய எழுது பொருள்களில் தங்கள் எண்ணங்களை வடித்து வைத்துள்ளனர். கல்லில் வடிக்கப்பட்டவைகளைக் கல்வெட்டுகள் என்றும், செம்பில் வெட்டப் பெற்றவைகளைச் செப்பேடுகள் என்றும், பனையோலைகளில் எழுதப்பட்டவைகளைச் சுவடிகள் என்றும் அழைக்கிறோம். தொன்மைத் தமிழ் மக்கள் கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலியவற்றைக் காட்டிலும், ஓலைச் சுவடிகளை அதிகம் பயன்படுத்தியுள்ளனர். இங்ஙனம் தமிழர்களின் சிந்தனைகளில் ஆவணமாக விளங்குகின்ற சுவடிகள் உலகெங்கும் பரவிக் கிடக்கின்றன. இவற்றை ஒன்று திரட்டுவதும், இவற்றின் சரியான எண்ணிக்கையைக் கணக்கிடுவதும், சிறந்தவைகளையும், சிதைவு நோக்கிப் போய்க் கொண்டிருப்பவைகளையும் முதற்கண் அச்சில் கொண்டு வருவதும் தமிழர்களின் தலையாய பணியாகும்.

இலக்கியம், இலக்கணம், நிகண்டு, மருத்துவம், வரலாறு, நாட்டுப் புறவியல், கணிதம், சோதிடம், மந்திரம் என்ற பல்வேறு வகைப்பட்ட பொருண்மைகளில் சுவடிகள் அமைந்துள்ளன. கதைப்பாடற் சுவடிகள் கடந்த நான்கு நூற்றாண்டுகளுக்குள் எழுதப்பட்டவை எனலாம். இதிகாச, புராண, சமூக, வரலாற்றுக் கதைப்பாடல்களுள், சமூகக் கதைப் பாடல்கள் கி.பி. 16 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை உள்ள சமூக நிலைகளைத் தெளிவுறப் படம் பிடித்துக் காட்டுபவை. எனவே சமூகக் கதைப்பாடல்கள் விரைவில் வெளிக்கொணரப் பெற வேண்டியவையாகும். இவ்வகையில் 'சின்னணைஞ்சான் கதை' என்ற 'சிவனணைஞ்ச பெருமாள் கதை' எனும் சமூகக் கதைப்பாடல் இந்நிறுவனம் மூலமாக வெளியிடப் பெறுகின்றது. இதற்கு முன் ஒன்பது கதைப்பாடற் சுவடிப் பதிப்புகளை வெளியிட்டுள்ள இந்நிறுவனத்தின் பத்தாவது பதிப்பாக இந்நூல் வெளிவருகின்றது.

'சிவனணைஞ்ச பெருமாள் கதை' என்ற சுவடி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடியியல் புலத்தில் உள்ளது. பல இடங்களில் மிகுந்த சிதைவுடன் கூடிய இச்சுவடியையும், ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் சின்னணைஞ்சான் கதை என்ற பெயரில் நன்னிலையில் உள்ள சுவடியையும் ஒப்பிட்டு பார்த்துப் பதிப்பித்துள்ளார் இந்நூலின் பதிப்பாசிரியர் முனைவர். கூ. நிர்மலாதேவி

அவர்கள். ஒரே பெயரிலுள்ள, கதைவேறுபாடுகளுடன் கூடிய, வெவ்வேறு சுவடிகளைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டதன் மூலம், சமீப காலச் சுவடிப் படிகளுக்குள்ளேயே எவ்வாறு வேறுபாடுகள் புகுந்து விடுகின்றன என்பதைத் தெளிவாக ஆராய்ந்துள்ளார். இவ்விரு கதைப்படிகளுடன் இந்தச் சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கிளைக் கதையான அரவமுத்து வீரன் கதைப்பாடலையும் இத்துடன் பதிப்பித்துள்ளார்.

தேசிய இயக்க இலக்கியப் படைப்பாளர்கள் அண்ணல் காந்தி அடிகளின் தீண்டாமை எதிர்ப்புக் கொள்கையையும் திராவிட இயக்க இலக்கியப் படைப்பாளர்கள் சமூக விஞ்ஞானத் தந்தை பெரியாரின் சாதி ஒழிப்புக் கொள்கையையும் ஏற்றுத் தமிழில் இலக்கியம் படைத் துள்ளனர். சிவனணைஞ்ச பெருமாள் கதை எனும் இந்நூல் சாதி அமைப்பைத் தகர்க்கும் வெடிமருந்தாகும். 'தீண்டத்தகாத இனம்' என்று கருதப்பெற்ற வண்ணார் குலப் பெண் மீது நாடாளும் மரபில் வந்த சிவனணைஞ்ச பெருமாள் காதல் கொள்வதே கதைக் கருவாகவும், இக்காதலினால் நேர்ந்த விளைவுகளே கதை நிகழ்ச்சிகளாகவும் உருப் பெற்றுக் கதைப்பாடலாகியுள்ளது. கதைப்பாடலைக் கீழ்க்காணுமாறு சுருக்கிக் கூறலாம்.

தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தென்காசி, செங்கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகளைப் பிற்காலப் பாண்டியர் வழிவந்த சீவலமாறன் என்ற மன்னன் ஆட்சி புரிந்து வருகிறான். இவனுடைய தங்கை பொன்னுருவிக்கும், செம்பவளராசனுக்கும் சிவனணைஞ்ச பெருமாள் பிறக்கிறார். சீவலமாறன், தன் மகளைச் சிவனணைஞ்ச பெருமாளுக்குத் திருமணம் செய்து, தனக்குப் பின் தென்காசியின் மன்னனாக அவனை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்த வேண்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறான். இவனுடைய எண்ணத்தில் மண் விழுவதைப் போலச் சிவனணைஞ்ச பெருமாள், சின்னணைஞ்சி என்ற வண்ணார்குலப் பெண்ணை விரும்புகின்றார். இச்செய்தியை அறிந்த சீவலமாறன், தன் அமைச்சரையும், தன் தங்கையும், சிவனணைஞ்ச பெருமாளின் தாயுமான பொன்னுருவியையும் சிவனணைஞ்ச பெருமாளிடம் அனுப்புகிறார். அவர்கள் சென்று தீண்டத்தகாதவர்கள் எனக் கருதப் பெற்ற வண்ணார்குலப் பெண்ணின் தொடர்பை விட்டு, மாமன் மகளைத் திருமணம் செய்து, தென்காசியின் ஆட்சிப் பொறுப்பை அடையுமாறு அறிவுரைகளும், ஆசை வார்த்தைகளும் கூறுகின்றனர். சிவனணைஞ்ச பெருமாளோ 'தொட்டவளைக் கைவிட முடியாது' என்று, கொண்ட காதலில் உறுதியாக நிற்கிறார். 'தொட்டவளை விடவேண்டாம்; ஆனால் மாமன் மகளையும் திருமணம் செய்து கொண்டு முறைப்படி ஆட்சிப் பொறுப்பை அடைவாயாக' என்று பெற்ற தாயார் எடுத்துக் கூறிய போதும், 'இருபெண் தொடர்பு' கொள்ள மறுத்து விடுகிறார்

சிவனணைஞ்சவர். சமுதாயத்தில் இந்நிலை வழக்கிலிருந்த போதும், ‘என் வாழ்வில் ஒரு பெண்ணுக்கே நிரந்தர இடம்’ என்றுகூறி விடுகிறார். தீண்டத் தகாத சாதிப் பெண்ணை நாடாளும் மன்னன் தன் மனைவிபோல் வைத்து வாழ்ந்தால் மக்கள் அனைவருக்கும் இஃது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்து, சாதிக் கட்டுக் கோப்பைச் சீர்குலைத்துச் சமுதாய முரண்பாடுகளை உருவாக்கும் என்றெண்ணுகிறான் சீவலமாறன். எனவே, சிவனணைஞ்சவரைப் பிடிக்கப் படை அனுப்புகிறான். போர் நடக்கிறது. சிவனணைஞ்ச பெருமாளின் சிறுபடை தோல்வியைத் தழுவுகிறது. போரில் வண்ணாத்தி சின்னணைஞ்சி இறக்கிறாள். சிவனணைஞ்சவர் உயிருடன் பிடிக்கப்பட்டு மரண தண்டனைத் தீர்ப்புக்குட்பட்டு, மழுவால் வெட்டிக் கொல்லப்படுகிறார். இது ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடியின் கதையாகும்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடியில், போர் நடைபெறும் பொழுது, படையால் பிடிக்கப்பட்டுத் தன் கற்புக்கொரு களங்கம் விளையும் முன், தன் காதலன் கையாலேயே அதற்கு முன்னர் மரணத்தைத் தழுவ வேண்டும் என்று விரும்பிய சின்னணைஞ்சியின் வேண்டுகோளுக்கு இணங்க, அவள் கழுத்தை அறுத்த சின்னணைஞ்சவர், தானும் குத்திக்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாக வருகின்றது. இது போன்ற கதை வேறுபாடுகளையும், காரணங்களையும் ஆராய்ந்து பதிப்பித்துள்ளார் பதிப்பாசிரியர். தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்திலுள்ள சுவடிப் படி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப் படியுடன் கதை ஒப்புமை உடையது என்றும் எடுத்துக் காட்டியுள்ளார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப் படியில் சீவலமாறன் ஆட்சியில் நடந்த ஒரு நிகழ்ச்சி தனி ஒரு கதைப் பாடலாக அமைந்திருப்பதைப் பதிப்பாசிரியர் அறிந்தார். அச்சுவடி, ‘அரவமுத்து வீரன் கதை’ என்ற பெயரில் ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் உள்ளது என்பதையும் கண்டறிந்து, சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கிளைக்கதையான அரவமுத்து வீரன் கதையையும் இந்நூலில் பதிப்பித்துள்ளார்.

மானுட உணர்வுகளுள் காதல் நேயம் மாண்பு மிக்கது. காதலின் மகத்தான சக்தியை உணர்ந்து கொண்டதால்தான் ஆழ்வார்களும், நாயன் மார்களும் கூட, இந்நிலையை எய்தினால் இறைவனையும் அடைய இயலும் என்றனர். மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே விரித்துக் கொண்ட சாதி வலையைத் தகர்த்தெறிந்து, மனித குலத்தை ஒன்று படுத்தும் மாபெரும் சக்தி காதலுக்கு உண்டு. கொண்ட காதலுக்காகக் கிடைக்கவிருந்த ஆட்சிப் பொறுப்பையும் அரச வாழ்வையும் மட்டுமல்லாது, தன் இன்னுயிரையும் நீத்த சிவனணைஞ்ச பெருமாள்

இன்றும் தென் மாவட்டங்களில் தெய்வமாக வழிபடப்படுவதாக நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். சிவனணைஞ்சவரின் கதையினைப் பாடலாக வடித்த புலவர், இத்தகு தலைவர்கள் சமுதாயத்திற்குத் தேவை என்பதை இப்படைப்பின் மூலம் வலியுறுத்தியுள்ளார். தீண்டாமைத் தீயின் மேல் பாயும் பெருவெள்ளமாக இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வில்லை என்பதற்கும், 'ஒன்றே குலம்' என்ற திருமூலர் வாக்கிற்கும் வலிமை சேர்க்கும் படைப்பாக வரும் இச்சுவடிப் பதிப்பைச் செய்த பதிப்பாசிரியர் முனைவர் சூ. நிர்மலா தேவியைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

முனைவர் சூ. நிர்மலா தேவி அவர்கள் சுவடிகளைப் பதிப்பிப்பதில் நிறைந்த புலமையுடையவர். இவர் 'பணவிடு தூது' என்ற சிற்றிலக்கியச் சுவடியையும், 'கருவூரார் பலதிரட்டு' என்ற சித்த மருத்துவச் சுவடியையும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். சுவடி அட்டவணைகளையும் தயாரித்து வெளிக்கொணர்ந்துள்ளார். குறிப்பாகக் கதைப்பாடற் சுவடிகளைப் பதிப்பிப்பதில் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இவருடைய சின்னத்தம்பி கதை, உச்சினி மாகாளி அம்மன் கதை, குருக்குளாஞ்சி கதை (The wandering voice) வெங்கலராசன் கதை, (The Dateless Muse) பலவேச சேர்வைக்காரன் கதை (The unsung melodies) முத்தாரம்மன் கதை, தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை முதலிய கதைப்பாடற் சுவடிப் பதிப்புகள் இங்கு எடுத்துக் காட்டத் தக்கன. இவரின் ஒன்பதாவது கதைப்பாடற் பதிப்பாக அமையும் சிவனணைஞ்ச பெருமாள் கதையை நிறுவனம் மூலமாக வெளிக் கொணர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவர் மேன்மேலும் முயன்று உழைத்துப் பன்னூறு நூல்களைப் படைக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டி வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழிப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் **முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் **திருமிகு. இரா. சீனிவாசன்** இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த பார்க்கர் கம்ப்யூட்டர்ஸீக்கு எங்கள் நன்றி.

இயக்குநர்

# நன்றியுரை

செவ்விலக்கியப் பாடல்களைப் பயிலும்போது செம்மாந்து நிற்கும் மனம், வாய்மொழி இலக்கியப் பாடல்களை வாசிக்கும் போது வளைந்து குழைந்து, உருகிக் கரைந்து ஒன்றுக்குள் ஒன்றாகி விடுகின்றது. நாட்டார் இலக்கியத்தையே மனம் நாடிக் கற்றுக் கரைந்துருகுவதற்குப் பிறப்போடும், வளர்ப்போடும் கலந்து, கசிந்து நிற்கும் தென்னகத்து அச்சின்னஞ் சிறு கிராமத்து மண் சிறப்புக் காரணமாகலாம். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' எனச் சுவடிகளில் படிந்து கிடக்கும் நாட்டார் கதைப்பாடல்களின் நலத்தையும், நயத்தையும் வெளிக்கொணரும் பதிப்புப் பணி மேற்கொண்டிருப்பதில் பெருமகிழ்வும், மனநிறைவும் அடைகின்றேன்.

இத்தகு ஒரு நற்பேற்றினுக்கு வழி வகுத்தளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர். ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்குத் தலைதாழ்த்திய வணக்கங்களையும், நன்றியறிதலையும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அப்பெருமகனாரின் உந்துதலும், விரைவுபடுத்துதலும் இன்றேல், இத்தகு ஒரு சுவடிப்பதிப்பைக் குறுகிய காலத்துக்குள் வெளிக் கொணர்ந்திருக்க இயலாது என்பதையும் எண்ணிப் பார்க்கின்றேன். சுவடிகளில் மக்கி மறைந்து கொண்டிருக்கும் நாட்டார் பாடல்கள் மீது பெருங் கருணை கொண்டு, நிறுவனம் மூலமாக அவற்றை அச்சு வாகனத்தில் ஏற்றி உலா வரச் செய்யும் அன்னாருக்கு நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

1986 - 1990 -களில், ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் பணிபுரிந்த பொழுதே, அங்கிருந்த 'சின்னணைஞ்சான் கதை' என்ற சிவனணைஞ்ச பெருமாள் கதைச் சுவடியைப் படித்துப் பார்த்திருக்கின்றேன். 'சுவடிகள் குறைப்பிரதிகளாக இருந்தால், அவற்றைப் பதிப்பிக்கலாகாது' என்ற எண்ணமிருந்த காலகட்டம் அது. 1995-ல் திரும்பவும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துக்குப் பணியாற்ற வந்த போது இங்குள்ள சுவடிப் புலத்தில், 'சிவனணைஞ்ச பெருமாள் கதை' என்ற சுவடிப் பிரதியைப் படித்துப் பார்க்க நேரிட்டது. 'இது முன்பே தெரிந்த கதையாக உள்ளதே' என்று மனம் மகிழ்ந்தாலும், சுவடியின் மிகுந்த சிதைவு, மனம் நோக வைத்தது. என்றாலும், முயன்று படி எடுத்து முடித்தபின், 'ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடிப் பிரதி நன்னிலையில் இருந்ததே, அதனையும் ஒப்பிட்டுப் பதிப்பிக்க வேண்டும்' என்ற எண்ணம் வலுப்பெற்றது. அந்நிறுவன இயக்குநர் டாக்டர். ஜி. ஜான்

சாமுவேல் அவர்களை அணுகிக் கேட்டபோது, அன்போடு ஒத்துழைப்பு நல்கிச் சுவடியைப் படித்துக் குறிப்பெடுக்கவும், பின் முழுச்சுவடியையும், கிளைக் கதையான 'அரவமுத்து வீரன் கதை'யையும் நிழற்படப் பிரதிகள் (Xerox) எடுத்துக் கொடுக்கவும் அனுமதி அளித்தார். அன்னார் அவர்களின் ஒத்துழைப்பிற்கும், 'தமிழ்ச் சுவடிகள் வெளியீடு' என்ற நிலையில் ஒன்றுபட்டு நின்ற நன்மனப் போக்கிற்கும் நன்றி தெரிவிக்கும் கடப்பாடுடையேன்.

தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் 'சிவனணைஞ்ச பெருமாள் சுவாமி கதைப்பாடல்' என்ற சுவடிப்பிரதி உள்ளது. இச்சுவடி, கதையமைப்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிப் பிரதியுடன் ஒப்புமை உடையது என்பதை ஒப்பிட்டுப் பார்த்து உணர்ந்து கொண்டேன். இச்சுவடியையும், சிவனணைஞ்ச பெருமாளின் தந்தை, தாய் பற்றிய செய்திகளையும், சிவனணைஞ்ச பெருமாளின் பிறப்புக்கு முந்தைய செய்திகளையும் விளக்கும், 'செண்பகமாற பாண்டியன் கதை' என்ற ஒரு சுவடிப் பிரதியையும் கொடுத்துப் பதிப்புக்கு உதவி புரிந்த முனைவர். ஆ. தசரதன் அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மிகுந்த ஒத்துழைப்புடன், குறைந்த காலத்துக்குள், நூலை 'மேசை அச்சுப்பொறி' (D.T.P.) செய்து கொடுத்த நிறுவன நிர்வாக அலுவலர் திரு.சு. கண்ணன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

முனைவர். சூ. நிர்மலா தேவி

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பதிப்பாசிரியர் முன்னுரை | 1 - 12 |
| 2. | ஆராய்ச்சி முன்னுரை | 13 - 74 |
| 3. | சுவடி எண்.46-47. சின்னணைஞ்சான் கதை என்ற சிவனணைஞ்ச பெருமாள் கதை (மூலம்) | 75 - 161 |
| 4. | கட்டு எண்.376. சிவனணைஞ்ச பெருமாள் கதை (மூலம்) | 162 - 241 |
| 5. | சுவடி எண்.10ஏ. அரவமுத்து வீரன் கதை (கிளைக்கதை) | 242 - 269 |
| 6. | அருஞ்சொற் பொருள் விளக்கம் | 270 - 289 |
| 7. | சமூகக் கதைப்பாடல்கள் - அகரவரிசைப் பட்டியல் | 290 - 292 |
| 8. | துணைநூற் பட்டியல் | 293 - 294 |
| 9. | சிறப்புச் சொல்லகராதி | 295 - 302 |

# பதிப்பாசிரியர் முன்னுரை

தமிழக வரலாற்றில் 16 ஆம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டு முடிய உள்ள காலகட்டத்தை ஐரோப்பியர் ஆட்சிக்காலம், சிற்றிலக்கியக் காலம், உரைநடை வளர்ச்சிக் காலம், பிற்காலம் என்று பலவாறாக அழைக்கலாம். பலவகைக் கதைப்பாடல்கள் எழுந்துள்ளதும் இக்காலக்கட்டத்தில்தான் என்பதால் இதனைக் "கதைப்பாடல்கள் காலம்" என்றும் குறிப்பிடலாம். 16-19ஆம் நூற்றாண்டுத் தமிழக வரலாற்றையோ, இலக்கிய வரலாற்றையோ எழுத முனைபவர், கதைப்பாடல்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஆராய்ந்து, அவ்வரலாறுகளை எழுதும்பொழுதே அது முழுமையான வரலாறாக அமையும் என்பது உண்மை. கதைப்பாடல்களிலும் சமூகக் கதைப் பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூக வரலாற்றுக் கதைப் பாடல்கள் என்ற மூவகைக் கதைப்பாடல்களும், மேற்குறிப்பிட்ட அக்கால கட்டத்தைய சமூக, வரலாற்று, சமய, பண்பாட்டு, பழக்க வழக்க, கலை இலக்கியக் குறிப்புகளை உள்ளடக்கியனவாக இருப்பதால், தமிழக வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு பற்றி ஆராய்வோருக்கு இத்தகு கதைப்பாடல்கள் அரிய கருவூலமாகத் திகழ்வன என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் தெய்வக் கதைப்பாடல்கள், புராணக் கதைப்பாடல்கள், இதிகாசக் கதைப்பாடல்கள், காவியக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்களுக்கு உள்ள முக்கியத்துவம் சமூகக் கதைப்பாடல்களுக்குத் தரப்படுவதில்லை என்றே கருதத் தோன்றுகிறது. இதற்கு அடிப்படைக் காரணங்களாக,

1. சமூகக் கதைப்பாடல்கள் குறிப்பிட்ட மாவட்டங்களில் குறிப்பிட்ட மக்களிடம் சுவடி வடிவில் தேங்கிக் கிடக்கின்றமை,

2. சமூகக் கதைப்பாடல்கள் சமூகச் சீர்திருத்த ஆற்றல் கொண்டவை ஆதலால், இச் சீர்திருத்த்தை விரும்பாதவர்களால் வெறுத் தொதுக்கப்படுகின்றமை,

3. குல, இன, சாதி, சமயக் காழ்ப்பை வேரறுப்பவையாக இருக்கும் நிலையில், இவ்வேறுபாடுகள் அகற்றப்படக்கூடாது என்ற எண்ணம் உள்ளவர்களால் கதையின் உயிர்நாடி கொல்லப்பட்டு, கதையின் ஆற்றல் சிதைக்கப்பட்டு, எதற்காக அக்கதைப்பாடல் படைக்கப்பட்டதோ அந்த நோக்கமே அழிக்கப்பட்டு, 'இது ஒரு சாதாரணக் கதைததான்' என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கும் விதத்தில் உருமாற்றம் செய்யப்படுகின்றமை,

4. சமூகக் கதைப்பாடல் தலைவர்கள், தம் உயிர் நீங்கக் காரணமானவர்களைப் பழிவாங்கிப் பின் கொடூர தெய்வமாகவும், வாதை யாகவும் ஆகிவிடுவதால், பிற தெய்வீக, புராணத் தெய்வங்கள் போன்று

பரவலாகப் பெரும்பான்மையினரால் வணங்கப்படாது, குறிப்பிட்ட சில பகுதியிலுள்ள, குறிப்பிட்ட சில இன மக்களால் மட்டும் வணங்கப்படுகின்றமை, அப்போது மட்டும் அவர்களது கதை வரலாறுகள் பாடப்பட்டுக் குறுகி நிற்கின்றமை என்ற இவற்றைச் சுட்டலாம்.

கதைப்பாடல்கள் திரைப்படங்களாகக் குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் எடுக்கப்பட்டபோது, மதுரைவீரன் கதை, காத்தவராயன் கதை, மலையூர் மம்பட்டியான் கதை, ஜம்புலிங்கம் கதை என்ற சில சமூகக் கதைப்பாடல்கள் மட்டுமே திரைப்பட வடிவில் வெளியாயின. இவையும் பெரும்பாலான மாறுதல்களுடன், இவற்றின் சமூகச் சீர்திருத்த ஆற்றல் அறவே நீக்கப்பட்டு, முன்பிறவிக் கதை இணைப்புகளுடனும், பிற்சேர்க்கைகளுடனும் வெளியிடப்பட்டன.

இன்றைக்கு இதுவரையும் கிடைத்துள்ள சமூகக் கதைப் பாடல்கள் அனைத்தும், தனித்தனித் திரைப்படமாக அமையும் கருச்செறிவும், நீண்மையும், பருமையும் உடையனவாக இருந்தும், திரைப்படத் துறையினரின் கவனம் இவற்றின் மேல் திரும்பாமலிருப்பது, தமிழர் செய்த தவக்குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். இதுபோன்று பிற சக்தி வாய்ந்த தொடர்புச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சிகளில் நாடகங்களாகவும், மேடை நாடகங்களாகவும் கூட இவை உருக்காட்டப்பெறவில்லையே என்று கதைப்பாடல் பதிப்பாசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் வருந்தாமலிருக்க முடியாது.

சமூக முக்கியத்துவம் வாய்ந்த சமூகக் கதைப்பாடல்களுக்கு இன்னமும் சமூக முக்கியத்துவம் தரப்பெறவில்லை என்பது வருந்துதற்குரியது.

சமூகக் கதைப்பாடல்கள் வாய்மொழியாக, வில்லுப்பாடல் போன்ற வடிவுகளில் பாடி வரப்பட்டு, வருங்காலச் சந்ததியினரைக் கருத்தில் கொண்டு, பின்னர் சுவடிகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளன. வாய்மொழியாகவும், எழுத்துருவாகவும் உள்ள சமூகக் கதைப்பாடல்கள் சுமார் 50 இருக்கலாம் எனத் தெரிகிறது. பின்னிணைப்பில் இவை தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

சில சமூகக் கதைப்பாடல்கள், பல ஆண்டுகளின் முன்னே நூல் வடிவம் பெற்றுக் குறுகிய வட்டத்துக்குள் நின்றுவிட்டன. இத்தகு சமூகக் கதைப்பாடல்கள் மறுபதிப்புச் செய்யப்பட்டுப் பரவலாக்கப் பெற வேண்டும். பதிப்பிக்கப் பெறாத சமூகக் கதைப்பாடல்கள் பதிப்பித்து வெளிக் கொணரப்பெறவேண்டும். தனியார்களால், தனி நிறுவனங்களால் செய்யப்படும் இத்தகு பணி முற்றமுடியவும், பரவலான முறையிலும் அமைவது அரிது என்பதால், அரசு நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும், பதிப்பிலும், வெளியீட்டிலும் ஈடுபட்டால் இப்பணி முழுமை பெறும் என்பது உறுதி.

டாக்டர் நா. வானமாமலை அவர்கள் மூலமாக மதுரைப் பல்கலைக் கழகம், சில சமூகக் கதைப்பாடல்களைப் பதிப்பித்து வெளிக் கொணர்ந்தது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் முனைப்பாகச் சில சமூகக் கதைப்பாடல்களைப் பதிப்பித்துள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகம், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம் போன்ற அரசு நிறுவனங்களும், உ.வே.சா. நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், ஆசியவியல் ஆய்வு நிறுவனம் போன்ற தனியார் சுவடி நூலகங்களும் சமூகக் கதைப்பாடல் சுவடிகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டவேண்டும். அத்துடன் பரவலாக்க முறைகளுக்கும் இவை வழிவகை செய்ய வேண்டும். இவ்வாறமையின் இலக்கியத் தொண்டாக மட்டும் இல்லாமல், சமூகத் தொண்டாகவும் இது அமையும் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் சமூகக் கதைப்பாடல்களின் கருப்பருமையும், கதை வடிவங்களும் அத்தகு ஆற்றல் வாய்ந்தவை என்பதைக் கதைப்பாடல் பதிப்பாசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் நன்கறிவர்.

சமூகக் கதைப்பாடல்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் முயற்சியின் பேரில், சிவனணைஞ்ச பெருமாள் கதை என்ற சமூகக் கதைப்பாடல் பதிப்பித்து வெளிக்கொணரப் பெறுகின்றது. இக்கதைப் பாடல் பற்றிய வேறுபட்ட குறிப்புகள் சில நூல்களில் சுட்டப்பெற்றுள்ளன. "ஊருக்குத் தலைவரான நாடாரின் மகன் நாவித இனத்தைச் சேர்ந்த பெண்ணை விரும்பி மணந்ததினால், காதலனும், காதலியும் கொல்லப்படும் நிகழ்ச்சி விவரிக்கப்படுவதே சிவனணைஞ்சி கதை" எனத் தமிழில் கதைப்பாடல்[1] என்ற நூலில் குறிப்பு காணப்படுகின்றது.

"தென்பாண்டி நாட்டில் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர்களில் சீவலமாறன் என்பானின் தங்கையாகிய பொன்னுருவியின் மகனும், செண்பகராம பாண்டியனின் மகனுமாகிய சிவனணைந்த பெருமாள் ஒரு வண்ணாத்தியை வசியம் செய்து வைத்துக் கொண்டதைத் தொடர்ந்து, அரசியல் சூழலால் ஏற்பட்ட போரில் அவன் தற்கொலை செய்துகொண்டதும், இறைவனிடம் வரம் வாங்கி, மீண்டும் வந்து பழிவாங்கிப் பாமரர்களால் கோயில் எடுக்கப்பட்டு வழிபடப்படு வதையும் விளக்குவது சிவனணைந்தபெருமாள் சுவாமி கதைப்பாடல் என்ற குறிப்பும் கிடைத்துள்ளது.[2]

சிவனணைந்த பெருமாள் வண்ணாத்தியை "இறுதிவரை விடமுடியாது"எனக் கொண்ட காதலில் உறுதியாக நின்றதால், மாமனும்,

---

1. டாக்டர் ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பக்.143.
2. சிவனணைந்த பெருமாள் சுவாமி கதைப்பாடல் சுவடி, தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம்.

மன்னனுமான தென்காசிச் சீவலமாறனால் வெட்டிக் கொல்லப் பட்டதாகக் குறிக்கப்பெற்ற சுவடிகளும் கிடைத்துள்ளன.[3]

அணஞ்ச பெருமாள், குமரி மாவட்டம் அகத்தீசுவரம் தாலுகாவில் ஒரு வாதையாகவும், தலைமைத் தெய்வமாகவும், துணைத் தெய்வமாகவும் வணங்கப்பட்டு வருவதாகத் தெரிவதால்[4] இக்கதை நிகழ்ச்சிகள் உண்மையில் நடந்தவை எனக் கருத வாய்ப்புள்ளது.

இக்கதையிலுள்ள சமூக, வரலாற்று முக்கியத்துவம் கருதியும், குலத்தில் தாழ்ந்த பெண்ணை விரும்பியதால், தன் உயிரை இழக்கின்ற சூழல் நேர்ந்தும், தொட்டவளை விட்டிடாத நல்லாண்மைத் திறத்தின் உறுதி இயம்பும் கதைக்கருச் செம்மை கருதியும், சமூக ஏற்றத் தாழ்வுகள் அகல, இத்தகு காதல் மணங்களே ஏற்புடையவை என்பதால், இத்தகைய கதைப்பாடல்கள் இன்றைய சமுதாயத்தினரைப் பரவலாகச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்திலும் இக்கதைப் பாடல் பதிப்பிக்கப் பெறுகின்றது.

இக்கதைப் பதிப்பில், கதை வேறுபாடுடைய பல சுவடிக் கருத்துகளும் ஆராயப்பட்டுள்ளன. கதை வேறுபாடுகளுடன் கூடிய 46, 47-சிவனணைஞ்ச பெருமாள் கதை (ஆசியவியல் நிறுவனம்), 376-சிவனணைஞ்ச பெருமாள் கதை (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) என்ற இரு சுவடிப் பிரதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப் பெறுகின்றன. இத்துடன் 10ஏ, அரவமுத்து வீரன் கதை (ஆசியவியல் ஆய்வு நிறுவனம்) என்ற சுவடியும் பதிப்பிக்கப்பெறுகின்றது. இது சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கிளைக்கதையாகும்.

கடினமான சொற்கள் கொண்ட 46, 47 - சிவனணைஞ்ச பெருமாள் கதைக்கு அருஞ்சொற் பொருள் விளக்கம் தரப்பெற்றுள்ளது.

பொதுவாகச் சுவடிகளில் காணப்படும் ா-ர என்ற எழுத்து களிடையே வேறுபாடின்மை, ெ-ே என்ற எழுத்துகளை ெ என்றே எழுதுதல், ஒற்றுக்குப் புள்ளி இல்லாமை என்ற எழுத்து முறைகள் இச்சுவடிகளிலும் பின்பற்றப்பட்டுள்ளன.

### 376-சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பதிப்பு

இதில் புராணக்கதைப் போக்கு மிகுந்துள்ளதால் பிற்பட்டது எனக் கருதத் தக்கதாயினும், எழுத்து வடிவங்கள் பழமையானவை களாகவும், சிக்கலானவைகளாகவும் தோன்றுவதால், இக் கதையின்

---

3. 46,47-சிவனணைஞ்ச பெருமாள் கதை, ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடி.
4. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள், பொன். கோவிந்தசாமி, பக்.22

எழுத்து வடிவங்கள் கீழே தொகுத்துத் தரப்படுகில் ்றன. சுவடிகளின் எழுத்து வடிவங்களை அறிய விரும்புவோருக்கும், தமிழ் எழுத்து ஆராய்ச்சி செய்வோருக்கும் இவை பயன் தரும் என்ற நோக்கிலும், சுவடி பெயர்த்தெழுதும் பொழுது பதிப்பாசிரியருக்கு நேர்ந்த இடர்ப்பாடுகளை வெளிக்காட்ட வேண்டும் என்ற நோக்கிலும் இவ்வெழுத்து வடிவங்கள் தரப்படுகின்றன. உண்மையான வடிவங்களும் நேராகக் கொடுக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
|  | - | இ |
|  | - | டி |
|  | - | பொன்னுருவி |
|  | - | ஈ |
|  | - | நம்பிக்குறிச்சி |
|  | - | த்த, க்க, க்கு, ற்ற, ற்று |
|  | - | பகபதிற்றாயாரே |
|  | - | ட்டி |
|  | - | நடந்து |
|  | - | கய்க்குளத்தில் |
|  | - | ல்ல |
|  | - | வெ |
|  | - | அ |
|  | - | பெருமாளே |
|  | - | க்கு |
|  | - | வா |
|  | - | பொ |



- ஈரான
- தூ
- முதல்
- ந்து
- க்கு
- சிலவு
- கருக்குருவி
- இ
- ற்றி
- ற்று
- வே
- பிள்ளை
- பெரு
- வல்ல
- ளம்
- வம்
- ரா
- ந்து
- பெருமாள்
- காகம்
- பெருமாளும்
- முற்றுக்குறி

- வராது
- ராசு
- பெருமாளும்
- ழு
- சுவாமி
- யும்
- க்கூ
- த்தூ

கவனக்குறைவால் நேர்ந்த பிழை வடிவங்கள் சில சரியான வடிவத்தில் தரப்பட்டுள்ளன. அவை:-

| | | |
|---|---|---|
| காணமால் | - | காணாமல் |
| சோயென்று | - | சேயென்று |
| உன்னோடி | - | உடனோடி |
| காணமோவென்ன | - | காரணமோவென்ன |
| ஆயிழையான் | - | ஆயிழையாள் |
| இருப்பனாயான் | - | இருளப்பனாயான் |
| தெவருதிலே | - | தெருவதிலே |

உடம்படு மெய் இடுவதில் நேர்ந்துள்ள சில பிழைகளும் அகற்றப் பட்டுச் சரியான வடிவத்தில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவை:-

| | | |
|---|---|---|
| கூட்டி வர யனுப்பி | - | கூட்டி வர வனுப்பி |
| கலக்க யொருத்தி | - | கலக்க வொருத்தி |
| வளமையுள்ள யகத்தியரை | - | வளமையுள்ள வகத்தியரை |

பேச்சு வழக்குச் சொற்களில் எவ்வித மாற்றமும் செய்யாது, இருந்தபடியே தரப்பட்டுள்ளன. ஆனால் சில இடங்களில் இப்பேச்சு வழக்குச் சொற்கள் பொருளை மாறுபடுத்தும் பொழுது, அவை எழுத்து வழக்கில் மாற்றப்பட்டுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவை:-

'மங்க பரமாயி' என்பது மங்குதல் என்ற தவறான பொருள் தருமாறும் அமைந்துள்ளதால் 'மங்கை பரமாயி' என்று ஆக்கப் பட்டுள்ளது.

'பிறவைத்து' என்பது பிறவற்றை வைத்து என்ற பொருளையும் தருவதால் 'பிறை வைத்து' என்று சரியான பொருள்பட அமைக்கப் பட்டுள்ளது. இவைபோன்று பொருள் மாறுபாடு தராத வகையில்,

| | | |
|---|---|---|
| வாத்தது போல | - | வார்த்தது போல |
| சிலபோல் | - | சிலைபோல் |
| மெத்த | - | மெத்தை |

என்ற சொற்களும் திருத்தமுறப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

குழந்தைகள் என்பது ஏட்டில் குழந்தகள் என்றும், வார்ப்புருக்கி என்பது வாப்புருக்கி என்றும் பொருள் மாறுபடுத்தாமல் இருப்பதால் பேசுவதுபோல் எழுதப்பட்டுள்ள அம்முறைப்படியே தரப்பெற்றுள்ளன.

ஏட்டில் காணப்பெற்ற சில சொல்வடிவங்கள் எவ்வாறு பதிப்பிக் கப்பெற்றுள்ளன என இரு வடிவங்களும் கீழே தொகுத்துக் கொடுக்கப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| கய்குளந்தை | - | கைக்குழந்தை |
| பரதவிற்றாள் | - | பரதவித்தாள் |
| பைய்ந்தொடியாள் | - | பைந்தொடியாள் |
| கய்யை | - | கையை |
| வீசிவர் | - | வீசுவர் |
| பவுள்சு | - | பவுசு |
| தெண்ங்கரை | - | தென்கரை |
| உன்னோடி | - | உடனோடி |
| மய்க்குழலாள் | - | மைக்குழலாள் |
| நம்பியேயுந் | - | நம்பியேயுன் |
| வனமுங் தேசமும் | - | வனமுந் தேசமும் |
| நோய்ம்பிருந்து | - | நோம்பிருந்து |
| முந்னாழி | - | முந்நாழி |
| அடியாள்க்கு | - | அடியாளுக்கு |
| யேனடன்து | - | யேநடந்து |
| யல்லோனி | - | யல்லோ நீ |
| தேன்திளையும் | - | தேந்திழையும் |
| தந்னால் | - | தன்னால் |
| வைய்பாய் | - | வைப்பாய் |

| | | |
|---|---|---|
| பேர்கு | - | பேர்க்கு |
| விய்க்கும் | - | விக்கும் |
| தயித்து | - | தைத்து |
| வேண்டுமந்த | - | வேண்டுமென்ன |
| கடன்தேகி | - | கடந்தேகி |
| முகுன்தனெங்கே | - | முகுந்தனெங்கே |
| னோக்கி | - | நோக்கி |
| னன்தவனத்தில் | - | நந்தவனத்தில் |
| முறுகமெல்லாம் | | மிருகமெல்லாம் |
| னகத்து வசெய்கள் | | நகைத்து வசைகள் |
| யக்கழஞ்சி | - | பத்துக் கழஞ்சி |
| இன்தா வந்தேன் | - | இந்தா வந்தேன் |
| தன்தானில்லை | - | தந்தானில்லை |
| இன்ம்பமுடன் | - | இன்பமுடன் |
| முன்ம்பில் | - | முன்பில் |
| கட்டுரைற்றார் | - | கட்டுரைத்தார் |
| மருத்துவற்றாள் | - | மருத்துவத்தாள் |
| கெற்ப | - | கெர்ப்ப |
| நண்ணுதலாள் | - | நன்னுதலாள் |
| மானிலம் | - | மாநிலம் |
| மருத்துவற்றாழும் | - | மருத்துவத்தாளும் |
| கலக்கயொருத்தி | - | கலக்கவொருத்தி |
| புற்பராகம் | - | புட்பராகம் |
| வேணுமெந்த | - | வேணுமென்ன |
| ஓரின்றான | - | ஓரிரண்டான |
| அளத்திடுவீர் | - | அழைத்திடுவீர் |
| மூநூ | - | மூணு |
| அல்ப்பியாசம் | - | அப்பியாசம் |
| நீன் | - | நீள் |
| கொன்றைய் | - | கொன்றை |
| ஈய்ந்தார் | - | ஈந்தார் |
| கிருப | - | கிருபை |
| விசெ | - | விசை |
| செங்கயில் | - | செங்கையில் |
| கேள்க்க | - | கேட்க |
| பவுள்சு | - | பவுசு |
| சந்தோள்சமா | - | சந்தோசமா |
| அண்டைய்வீட்டு | - | அண்டைவீட்டு |
| மகனுக்கு வேண்டிய் | - | மகனுக்கு வேண்டி |
| வாள்வி | - | வாவி |
| இருள்சி | - | இருசி |
| பொக்குள்சம் | - | பொக்குசம் |

இச்சுவடியில் வரி முடிவு உணர்த்த + குறியீடும், பாடல் முடிவு காட்ட  என்ற குறியீடும் பயன்படுத்தப்பெற்றுள்ளன.

இடையிடை வரிகள் சிதலமாகியிருந்ததால் கதை நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தி அறிவதே மிகுந்த சிரமமாக இருந்த நிலையில், ஏடுகள் வரிசைப்படி இல்லாமல் முன்பின்னாக மாற்றியும் கட்டப்பட்டு, சுவடியின் இடது ஓரப்பகுதியும் முற்றிலுமாகச் சிதைந்து போயிருந்ததால், இதழ் எண் பார்த்துச் சரியாக அடுக்கிக் கோர்வையாகக் கதைப்பாடலைப் படிக்க இயலாது மிகுந்த சிரமம் ஏற்பட்டது. உள்ளபடியே படி எடுத்து விட்டுப் பின் கதை நிகழ்ச்சிகளின் பொருண்மையும், தொடர்ச்சியும் நோக்கிச் சரி செய்யப்பட்டது. இது குறைப்பிரதியாகும்.

## 46,47 - சிவனணைஞ்ச பெருமாள் கதைப் பதிப்பு

இச்சுவடி சிதைவுகளின்றியும், எழுத்துத் தெளிவுடனும் காணப்படுகின்றது. இச்சுவடியில் காணப்பட்ட எழுத்து வடிவங்களும் அவை எவ்வாறு பதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன என்பதும் கீழே குறிக்கப் படுகின்றன.

- பிள்ளை
- போவென்று
- ராசன்
- முகம்
- என்ன
- மொன் வசையை
- ஊரான
- பகராரோ
- ஈரல்
- இன்பமுள்ள
- விக்கும்
- பெருமாளே
- முற்றுக்குறி

இதுவும் குறைப்பிரதியாகவே உள்ளது. சுவடியில் வில்லுப்பாட்டு வடிவில் பாடி வைத்தவர் ஆறுமுகப் பெருமாள் புலவர் என்ற குறிப்பு கதைப்பாடலில் காணப்பெறுகின்றது.

## அரவமுத்து வீரன் கதைப்பதிப்பு

இச்சுவடியில் ஒற்றுக்குப் புள்ளி உள்ளது. ெ-ே- வேறுபாடும் உள்ளது. இதிலுள்ள சில எழுத்து முறைகளும், பதிப்பில் அமைக்கப் பட்டுள்ள முறைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஈய்ந்து | - | ஈந்து |
|  | - | த்து, க்கு |
| | - | முற்றுக் குறியீடு |
| | - | வரி நேராக்கும் குறியீடு |
| கேழ்க்க | - | கேட்க |
| திருநாள்க்கு | - | திருநாளுக்கு |
| வெல்லதந்தோமென்றார் | - | வெல்லத் தந்தோமென்றார் |

ஷ, ஜா என்ற வடவெழுத்துகள் சுவடியில் காணப்படுகின்றன. அவை உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இது முழுமையான பிரதியாகும். இதனை வில்லுப்பாட்டு வடிவில் இச்சுவடியில் வடித்தவர் ஆறுமுகப் பெருமாள் புலவர் என்ற குறிப்பு சுவடியிலேயே காணப்படுகின்றது. கொல்லமாண்டு 1109 (கி.பி.1934) ஏழாவது மாதத்தில் எட்டாம் தேதியன்று இச்சுவடி எழுதப்பட்டது என்ற குறிப்பும் சுவடியில் காணப்படுகின்றது. இச்சுவடிகள் பதிப்பில் செய்த பிற சீர்மைகளாக,

1. வரி எண்கள் அளித்திருத்தல்
2. சிறு தலைப்புகள் தந்திருத்தல்
3. நாட்டுப்புற யாப்புப்படி சீர்பிரித்து அமைத்திருத்தல்
4. சிதைந்த எழுத்துகளை ஊகித்து அடைப்புக்குள் அமைத்திருத்தல்

5. கடினச் சொற்கள் கொண்ட 46, 47 -சிவனணைஞ்ச பெருமாள் கதைக்கு அருஞ்சொற்பொருள் விளக்கம் அமைத்திருத்தல் என்பனவற்றைச் சுட்டலாம்.

இரு சுவடிப் பிரதிகளும் குறைப்பிரதிகள்தான் என்றாலும், கதை முடிவு நிலைக்கு வந்ததன்பின், ஒருசில ஏடுகள் மட்டுமே இல்லாதது என்று தெளிவாகத் தெரிகின்றதால், பதிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. குறைப்பிரதிகளைப் பதிப்பிக்கலாகாது என்ற எண்ணம் உள்ள பதிப்பாசிரியர்கள் உள்ளனர். குறைப்பிரதியைப் பதிப்பிப்பவர்கள் வேறு சுவடியோ, அல்லது பதிப்பில் வெளிவந்த சுவடியோ முழுமையானதாக இருந்தால், அதிலுள்ள இறுதிப்பகுதியை எடுத்துக் குறைப்பிரதியுடன் இணைத்துக் கொள்ளலாம் என்ற கருத்துடைய பதிப்பாசிரியர்களும் இருக்கின்றனர். ஒவ்வொரு கதைப்பிரதியும் தன்னளவில் தனித்தன்மை

வாய்ந்தது. அதில் மற்றொரு சுவடியின் இறுதிப் பகுதியை எடுத்து ஒட்டவைப்பது, அதன் தனித்தன்மையைச் சிதைக்கும் முயற்சி என்பதால், குறிப்பிட்ட சுவடிப்பிரதி குறையுடையதாக இருந்தால், அதை அதன் அளவில் வெளியிடுவதே சிறந்த பதிப்பு என்ற எண்ணத்துடன் சுவடிகள் உள்ள அந்நிலையிலேயே பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

சமூகக் கதைப்பாடல்கள் அனைத்தும் மாவட்ட வாரியாக முறையாகத் திரட்டித் தொகுக்கப்பெற்றுப் பதிப்பிக்கப் பெற வேண்டும். பல்லாண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பெற்றவை, மறுபதிப்புச் செய்யப்பட வேண்டும். 16-19ஆம் நூற்றாண்டைய சமூக, வரலாற்றுக் கருவூலங்கள் ஆதலின் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைக்கப்பெற்று, சுவடிச் செய்திகள் வருங்காலச் சமுதாயத்தைச் சென்றடைய வழி செய்யவேண்டும். சமூகக் கதைப் பாடல்கள் குறித்த சிறப்பாய்வுகள் பெருக வேண்டும். இன்னோரன்ன நிறைவேறின் தமிழுலகமும், தமிழ் இலக்கிய உலகமும் மேலும் வளம் பெற்றதாக அமையும் என்பது உறுதி.

**முனைவர் சூ. நிர்மலா தேவி**

* * *

## ஆராய்ச்சி முன்னுரை

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்பது வள்ளுவர் வாக்கு. மானிடராகப் பிறந்தவருள் சிலர், தாம் செய்கின்ற அரிய செயலால் பெரியவர் எனப் போற்றப்படுகின்றனர். சீரிய செயல் செய்ததால் சிறந்த தெய்வமாகவும் மக்களால் வணங்கப் பெறுகின்றனர். சமூகக் கதைப்பாடல் தலைவர்கள், பிறர் செய்யாத அரிய காரியத்தைச் செய்து, தெய்வமாக வணங்கப்பட்டு வருதலை இன்றும் கண்கூடாகக் காணுகின்றோம். இத்தகு கதைப்பாடல் தலைவர்களுள் சிவனணைஞ்ச பெருமாள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறான். தான், நாடாண்ட மன்னர் பரம்பரையில் வந்தவனெனினும், தாழ்ந்த குலம், தீண்டத்தகாத இனம் என்று கருதப்பெற்ற வண்ணார் குலப் பெண்ணை விரும்பிய காரணத்துக்காக, உயிரையும் இழக்கத் துணிந்து நின்ற இவனின் வீரத்துக்காக, இன்றும் தெய்வமாக வணங்கப் பெற்று வருகிறான்.

சமூகக் கதைப்பாடல் கருக்களில் முக்கியமான ஒன்று, 'சாதிவிட்டுச் சாதி காதல் கொள்வது' என்பதாகும். இதனால் விளையும் சிக்கலே கதை நிகழ்ச்சிகளாகவும், முடிவில் தீர்வாகக் கதைப்பாடல் தலைவன், தலைவியர் சமூகச் சட்ட திட்டங்களை மீறியவர்களாகக் கருதப்பட்டுக் கொலை செய்யப்படுவதும் காணப்படும். சான்றுகளாக, முத்துப்பட்டன் கதை, மதுரைவீரன் கதை, காத்தவராயன் கதை, குருக்குளாஞ்சி கதை, தடிவீரசுவாமி கதை, சிதம்பர நாடார் கதை போன்றவற்றைச் சுட்டலாம். இவைபோன்று சிவனணைஞ்ச பெருமாள் கதையும் சாதிவிட்டுச் சாதி காதல் கொள்வதையே கதைக் கருவாகக் கொண்டிலங்குகிறது.

சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பாடல்கள் கோயில்களில் வில்லுப்பாடலாகப் பாடப்பட்டு வருகின்றன. சுவடிகளிலும் எழுதி வைக்கப்பெற்றுள்ளன.

### 46, 47 - சிவனணைஞ்ச பெருமாள் கதை - கதைச்சுருக்கம்

தென்காசி, செங்கோட்டையின் சில பகுதிகளை ஆண்ட செம்பவளராசன், தென்காசி மன்னவனான சீவலமாறனின் தங்கையான பொன்னுருவியை மணமுடிக்கிறான். குழந்தைப் பேறின்றி வருந்தும் பொன்னுருவி பல கோயில் தலங்களுக்கும் சென்று குழந்தை வரம் கேட்கிறாள். மலைமேல் சென்று, மலைக் குறத்தியிடம் குறி கேட்க,

அக்குறத்தி, 'பரம்பரையினர் ஆண்ட பதியில், பகவதி கோயில் மதிலிடிந்து கிடப்பதாகவும், அதைக் கட்டிக் கோயிலில் பூசை நடத்தினால் ஆண் குழந்தை பிறக்கும்' எனக் குறி கூற, தோழியருடன் நாடு திரும்புகிறாள் பொன்னுருவி. குறத்தி குறி கூறியதுபோல் கோயிலைக் கட்டிப் பூசை நடத்துகின்றனர். பொன்னுருவியின் கனவில் சிவபிரான் குறுமுனிபோல் தோன்றுகிறார். பின்னர் பொன்னுருவி கருத்-தரிக்கிறாள். ஆண் மகவு பிறக்கிறது. சிவன் தந்த குழந்தைக்குச் சிவனணைஞ்ச பெருமாள் எனப் பெயர் சூட்டுகின்றனர். கல்வி, ஆயுதப் பயிற்சிகள் அளித்ததுடன், சிலம்பப் பயிற்சி, அடவு முறைகள் படிக்க, இருளப்பனாயான் பணிக்கன் என்பவரை வரவழைத்துப் பயில வைக்கின்றனர். சிவனணைஞ்ச பெருமாள் வால வயது எய்தியபோது, தென்காசிப் படைவீட்டில் தேசமரசாண்டு வீற்றிருக்கிறார்.

தென்காசிப் பகுதியில் துணி வெளுக்கும் துவர வண்ணார் குலத்தில், சடையன் வண்ணான் மகளாகச் சின்னணைஞ்சி பிறந்து வளர்கிறாள். மாடவண்ணானுக்கு மணம் முடிக்கப்பட்ட இவள், பன்னிரு வயதில் பருவமடைந்ததும், கணவனுக்குத் தொழில் உதவி புரிந்துகொண்டு, சிறந்த மனைவியாகச் சீரிய வாழ்க்கை நடத்தி வருகிறாள். அழுக்குத் துணி எடுக்கவும், வெளுத்த துணி கொடுக்கவும் பல வீடுகளுக்கும் சென்று வரும் தொழில் செய்பவள் ஆனாலும், கண்ட இடத்தில் நின்று கண்டவருடன் பேசாத நற்குணமும், நற்பண்பும் வாய்க்கப் பெற்றவளாகத் திகழ்கிறாள். பேரழகும் பெருங்குணமும் வாய்க்கப் பெற்ற இவள் தெருவில் அழுக்கெடுக்க வரும்போது, தோழர்களுடன் சோலையில் சிட்டுத் தெறித்து நிற்கும் சிவனணைஞ்சவர் கண்டு மையல் கொள்கிறார். தன் ஆசையை அவளிடம் வெளியிட்ட போது, சின்னணைஞ்சியால் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளான சிவனணைஞ்சவர், பின்னர் மறத்தலைவனைத் தூதனுப்புகிறார். அதிலும் காரிய வெற்றி கிட்டாததால், மலைக்குச் சென்று வசியமருந்து பெற்றுவந்து வெற்றிலையில் வைத்து, சிறுக்கன் கையில் கொடுத்து அனுப்பிச் சின்னணைஞ்சியிடம் தரவைத்துத் தின்ன வைத்து, அவளை மயக்கித் தன்னிருப்பிடத்துக்கு வர வைக்கிறார். வசிய மருந்தால் உண்டான மயக்கத்துடன் இருக்கும் சின்னணைஞ்சியைக் கூடிக் களித்து, உடன் தங்க வைத்துக் கொள்கிறார். சின்னணைஞ்சியும் உடல், உள்ளத்தால் ஒன்றுபட்டுச் சிவனணைஞ்சவருடன் உடன் இருந்து விடுகிறாள்.

ஊருக்குள் சென்ற சின்னணைஞ்சியைக் காணாது கணவன் மாட-வண்ணான் கலக்கமுற்று, அவளுடைய தாய்வீடு சென்று விசாரித்து, அங்கும் அவள் இல்லையென அறிந்து, ஆறு, குளங்களில் தேடியும் அகப்படாது போக, இறுதியில் மன்னன் சீவலமாறனிடம் கண்டுபிடித்துத் தரவேண்டும் என்று முறையிடுகிறான். தேடி அவளைக் கண்டுபிடிக்குமாறு கடும் ஆணையிட்டான் சீவலமாறன். இரண்டு

பாத்திரங்களில் சோறும், இரண்டு வாழையிலைகளும் சிவனணைஞ்சவர் கொலுவிருக்கும் மண்டபம் கொண்டு செல்லுவண்த அறிந்த காவலர், உடன் தங்கியுள்ளவர் யார் என விசாரித்து, அது வண்ணாத்தி சின்னணைஞ்சி எனச் சொல்லக் கேட்டு, மன்னனிடம் அறிவிக்கின்றனர். மன்னர், மந்திரியையும் பின் தன் தங்கையும், சிவனணைஞ்சவரின் தாயுமான பொன்னுருவியையும் அனுப்பி அறிவுரை கூறவைத்தும், 'சின்னணைஞ்சியை விட முடியாது' என உறுதியாக மறுத்த சிவனணைஞ்சவர்மீது கடுங்கோபமுற்றுக் கீழ்ச்சாதிப் பெண்ணுடன் ஆழ் காதல் கொண்ட சிவனணைஞ்சவரைப் பிடித்து வருமாறு படைகளை அனுப்புகிறார்; போர் நடக்கிறது. போரில் சின்னணைஞ்சி, மறத் தலைவன், இருளப்பனாசான் மடிகின்றனர். படை சிவனணைஞ்சவரை உயிரோடு பிடிக்கிறது. தன் மருமகனே ஆயினும், "தாழ்குலப் பெண்ணை மனைவியாக வைத்து வாழ்வேன்" என்று கூறிக் கொடும்பாவம் செய்த சிவனணைஞ்சவரை, உயிரோடு இருக்க விடக் கூடாது; இருந்தால் அது, இது போன்ற தவறு செய்பவர்களுக்குத் தக்க ஒரு முன்மாதிரியாக ஆகிவிடும் என்று எண்ணிய சீவலமாறன், அமைச்சர்களின் ஆலோசனைப்படி, சிவனணைஞ்சவரை வெட்டிக் கொல்ல ஆணையிடுகிறான். இள வயதும், வீரமும், பேரழகும் வாய்ந்த சிவனணைஞ்சவருக்கு நேரப்போகும் முடிவு கருதித் தாயும், சுற்றமும், ஊர்ப் பெண்களும் கதறி அழ, சிவனணைஞ்சவர் ஊருக்கு வெளியே வெட்டுமிடத்துக்கு அழைத்து வரப்படுகிறார். தலையாரி சிவனணைஞ்சவரை வெட்டிக் கொல்ல மழுவெடுக்கிறான் என்பது வரை கதைப்பாடல் முற்றுப்பெறாது நிற்கிறது. ஆனால் பிற பிரதிகள் கொண்டும், சிவனணைஞ்சவர் கொல்லப்பட்டுப் பின் வாதையாகவும், தலைமைத் தெய்வமாகவும், துணைத்தெய்வமாகவும் வழிபடப்பட்டு வருவதும் வெளிப்படையாகத் தெரிவதால் சிவனணைஞ்சவரின் மரணம் நிகழ்ந்திருப்பது தெளிவாகிறது.

**கதைக்கரு**

உயர்குலத்தை, அதிலும் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்மகன் ஒருவன் கீழ்க்குலத்தில், தீண்டத்தகாத சாதி எனக் கருதப்பட்ட, அழுக்குத் துணிகளை வெளுத்துத் தரும் வண்ணார்குலப் பெண்ணை விரும்பிக் காதல் கொண்டதால் விளைந்த சிக்கல் கதைக் கருவாக அமைந்துள்ளது. தொடக்கத்தில் இருவரும் மனமொத்துக் காதல் கொள்ளாமல், முதலில் ஆண் மட்டுமே விரும்பி, வசிய மருந்து தந்து மயக்கிப் பெண்ணை வலிய அடைந்ததாகக் கதைப்பாடல் காட்டுகிறது. என்றாலும் பின்னர் இருவரும் மனமொத்து, ஒருவர் இல்லாமல் மற்றவர் இல்லை என்று ஈருடல் ஓருயிர் கொண்டவராக ஒன்றிப் பிணைந்தவராக ஆகிவிடும் காட்சிகளையும் கதைப்பாடல் காட்டுவதால், இது மனமொத்த

காதல்தான் என உறுதியாகக் கூறமுடிகிறது. முதலில் விருப்பப்படாத பெண்ணை விருப்பப்பட வைக்கச் சொக்குப்பொடி, மந்திர வித்தைகளைக் கையாளுவதை வேறு சில சமூகக் கதைப்பாடல்களிலும்[1] காணமுடிகிறது.

உயர்சாதி ஆண், கீழ்ச்சாதிப் பெண்ணை விரும்பி உறவு கொள்வதும், கீழ்ச்சாதி ஆண் உயர்சாதிப் பெண்ணை விரும்பி உறவு கொள்வதும் என்ற இருநிலைகளுமே சமுதாயத்தில் காலங்காலமாக நிகழ்ந்து வருகின்றன. ஆனால் அந்த ஆண், பெண்ணிடை நிகழும் உறவு, மண உறவு போன்று, 'உயிருள்ள வரை பிரியோம்' என்ற நிலைக்குத் தள்ளப்படும் பொழுது, அங்கு சாதிச் சட்ட விதிகள் புகுந்து, சாதிக் கட்டுப்பாட்டை மீறிய அவர்களைப் பிரித்து விட முனைப்பு காட்டுகின்றன. அக்காதலர்கள், தம் உயிரைத் துச்சமென மதித்துத் தாம் கொண்ட காதலுக்காகத் தம்மையே பலியிட்டுக் கொள்ளும் பொழுது, அவர்கள் கதைப்பாடல் தலைவன், தலைவியாக ஆகித் தெய்வநிலைக்கும் உயர்த்தப்பட்டு விடுகின்றனர். இந்தச் சிவனணைஞ்ச பெருமாள் கதையிலும் இதுதான் நடந்திருக்கிறது. வண்ணார் குலப் பெண்ணின் பேரழகில் மயங்கிய சிவனணைஞ்ச பெருமாள் அவள்மேல் மையல் கொண்டு அவளை அடைந்து, தன் ஆசையைத் தீர்த்துக் கொண்ட பின், அவளைத் தூசாகக் கருதித் தள்ளியிருந்தால் சாதாரண மனிதனாக ஆகியிருப்பான். அவ்வாறில்லாமல், "தொட்டவள் தன்னையும் விட்டுவிட்டால் வெகுதோசம்" - வரி 2808 என்றுரைத்து, 'தன் உயிர் உள்ளளவும் அவளை விடமுடியாது' என்று சாதித்துக் காட்டிய நல்லாண்மைத் திறமே அவனைக் கதைப்பாடல் தலைவனாக உயர்த்து கிறது. தான் தொட்ட பெண்ணைச் சாதிக் கட்டுப்பாட்டுக்குப் பயந்து, கைவிட்டிடாத மன உறுதியும், கீழ்ச்சாதி, மேல்சாதி என்ற பாகுபாட்டை உடைத்தெறிந்த தீரமுமே அவனைத் தெய்வநிலைக்கு உயர்த்துகிறது.

இவனைப் போன்றே சின்னணைஞ்சியும், ஏற்கனவே மணமானவளாக இருந்தாலும், சிவனணைஞ்சவரைக் கலந்தபின்,

> "உன்னைவிட்டு யினிப்போக வொட்டுமோ
> உயிரு ரண்டு மொன்றாகிப் போச்சுதே" வரி : 2621 - 2622

---

1. The Wandering Voice, Ed. Dr. R.Nirmala Devi, p.142
   "மாயநல்ல பொடியால்தானும் மயக்குனாரே கன்னியரை
   கைவசமாய்ப் போனாளிந்தக் கன்னியரும் பூரண வல்லியுந்தான்"
தடிவீரசுவாமி & வன்னியராயன் கதை, பதிப். முனைவர். சு.நிர்மலாதேவி, பக்.178 - 179.

என்று இயம்பி, சீவலமாறனால் படை ஏவப்பட்டுச் சிவனணைஞ்சவரைப் பிடிக்க வந்தபோது, சிவனணைஞ்சவரே,

"இனத்திடந் தன்னிலே நீபோடி பெண்ணே" - 2858

என்று சொன்னபோது, உயிருக்குப் பயந்து ஓடிவிட்டிருந்தால் அவள் ஒரு சாதாரண வண்ணார் குலப்பெண்ணாகவே இருந்திருப்பாள். ஆனால்,

"போறதில்லை போறதில்லை புண்ணியனே நானும்
போங்காலம் வந்தால் பொன்றிடுவே னையா" - 2861 - 2862

என்று கூறிப் போர்க்களம் புகுந்து, போரிட்டு மடிந்த சின்னணைஞ்சியின் இறுதிவரை மாறாத காதலுறுதியே அவளைக் கதைப்பாடல் தலைவியாக ஆக்கியுள்ளது.

சாதிகளையும், சாதிகளை உருவாக்கிய மனிதர்களையும், சாதிகளுக்குரிய சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், விதிமுறைகளையும் விட, மனித உணர்வான காதல் நேயம் மாண்புமிக்கது; உயர்ந்தது என்பதை உணர்த்தித் தம் உயிரைப் பலியிட்ட சிவனணைஞ்சவர் - சின்னணைஞ்சி வாழ்க்கையைக் கதைப்பாடலாகப் பாடியதன் மூலம் இத்தகு காதலுணர்வே சாதி வேறுபாடுகளைக் களையும் களைக் கொல்லியாக ஆக முடியும் என்பதைப் பாடிய புலவர் உணர்த்தியுள்ளார்.

## கதை நிகழ்ச்சிகள்

வில்லுப்பாடல் வடிவில் பாடப்பட்டுள்ள இக்கதைப்பாடல் நிகழ்ச்சிகள் சீராகவும், கோவையாகவும் இருக்குமாறு, ஓரிடத்திலும் முன்பின் முரணான நிகழ்ச்சிகள் இடம் பெறாதவாறு சிறப்புக் கவனத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆசிரியர்கள், எளிய, இனிய நடையில், கல்லாரும் பொருள் விளங்கிக்-கொள்ளுமாறு, கண்முன் காண்பது போன்ற காட்சியமைப்புகளுடன் கதைப்பாடல் நிகழ்ச்சிகளை அமைப்பதில் வல்லவர்கள் என்பதற்கு, இக்கதைப்பாடல் ஒரு தக்க சான்றாகத் திகழ்கிறது.

"மாது பொன்னுருவி கதை வையகத்தில் கூற" என்று தொடங்கும் கதையின் முன்பகுதியில் பொன்னுருவி மகப்பேறு வேண்டித் தவம் செய்த நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன.

இரண்டாவதாகக் குழந்தை பிறந்ததும், வளர்ந்ததுமாகிய பகுதிகள் உள்ளன.

மூன்றாவதாகச் சின்னணைஞ்சியின் வரலாறு இடம் பெற்றுள்ளது.

நான்காவதாகச் சிவனணைஞ்ச பெருமாள் - சின்னணைஞ்சியின் காதல் வாழ்வாகிய கதைச்சிக்கல் நிகழ்ச்சிகள் அமைக்கப்பெற்றுள்ளன.

ஐந்தாவதாக இவர்களின் முடிவு பற்றிய செய்திகள் இறுதியில் உள்ளன.

இதனுடன் ஒப்புமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள 376-சிவனணைஞ்ச பெருமாள் கதைப் பிரதியில் இல்லாத, இப்பிரதியில் மட்டும் உள்ள கதை நிகழ்ச்சிகள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.

1. செங்கோட்டை மன்னன் செம்பவளராசன் வலங்கைக் குலத்தில் உதித்தவன் - (21)

2. தென்காசி, செங்கோட்டைப் பகுதிகளை ஆண்ட மன்னன் செம்பவளராசன் (41-45).

3. ஐவர் ராசாக்கள் தென்காசியை ஆண்ட காலகட்டத்துக்குட் பின் செம்பவளராசன் தென்காசியில் ஆட்சிக்கு வந்தான் (44-45).

4. ஐந்து ஆண் மக்களுடன் ஒரு பெண்ணாகப் பிறந்தவள் பொன்னுருவி என்ற செய்தி சுட்டப்பட்டுள்ளது (46).

5. குழந்தை மணம் வழக்கில் இருந்ததும், தக்க கணவனைத் தேர்ந்தெடுத்து முதலில் மணம் செய்து விடுவதும், அதன்பின் பெண் பூப்பெய்தியதும் கணவனுடன் இணைந்து வாழச் செய்த நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன (48-52, 1630-1641)

6. கனவில் குறுமுனி வடிவில் சிவபிரானைக் கண்டதால் குழந்தை பிறக்கும் என மகிழ்தல் (945 - 957)

7. கல்வி, வீரப்பயிற்சிகள் பெற்று முடித்த சிவனணைஞ்ச பெருமாள் வீதியில் உலா வந்த நிகழ்ச்சிகள் உள்ளன (1540-1588)

8. சிவனணைஞ்சி கணவனுடன் இணைந்து தொழில் உதவி புரியும் நிகழ்ச்சி உள்ளது (1700 - 1742)

9. சிவனணைஞ்ச பெருமாள் சின்னணைஞ்சியிடம் தன் விருப்பத்தை அவளிடம் நேரடியாகவே கூறி, இதனால் இருவருக்கும் தருக்கம் நடந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன (1845-1875, 1964-2023)

10. சின்னணைஞ்சியின் மேல் கொண்ட மையலால் வருந்தி யிருந்த சிவனணைஞ்ச பெருமாள், மறத்தலைவன் விசாரிக்க, அவனிடம் நடந்த செய்திகளைச் சிவனணைஞ்சவர் கூறிய நிகழ்ச்சி உள்ளது (2085 - 2129).

11. மறத்தலைவன் விபீடணன் போல் இடித்துரைத்தலும், சிவனணைஞ்ச பெருமாள், இராவணன் போன்று அதைக் கேளாமலிருந்த நிகழ்ச்சிகள் (2130 - 2153)

12. மலையில் இருளப்பனாயானிடம் வசிய மருந்து பெற்ற நிகழ்ச்சி (2436 - 2504).

13. வசிய மருந்து வகைகளை விவரித்தல் (2492 - 2503)

14. சின்னணைஞ்சி மாறுகண் உடையவள் (2694)

15. குற்றம் புரிந்தோரைக் கழுவிலிடும் வழக்கம் குறிப்பிடப்படல் (2712)

16. தவறு செய்வோரைத் தலைவெட்டும் வழக்கம் சுட்டப்படல் (2713)

17. கணவன் மன்னனிடம் முறையிட, மன்னன் சின்னணைஞ் சியைத் தேட ஆணையிட்ட நிகழ்ச்சி (2709 - 2713).

18. மாமன் சீவலமாறனின் மகள் பெயர் இன்பக்கனி என்ற குறிப்பு (2750).

19. சின்னணைஞ்சியை 'இனத்திடந் தன்னில் போ' எனச் சிவனணைஞ்ச பெருமாள் கூறியும் அவள் போகாதிருந்தமை (2858).

20. போர்க்களத்தில் போர் செய்து சின்னணைஞ்சி இறந்தாள் என்ற செய்தி (2884 - 2885).

21. சிவனணைஞ்சவரை வெட்டத் தலையாரி மழுவெடுத்த நிகழ்ச்சி உள்ளது. (3036). இதனால் சிவனணைஞ்சவர் தலை வெட்டப்பட்டு இறந்தார் எனக் கொள்ள இடமுள்ளது.

## பாத்திரப் படைப்புகள்

கதைத்தலைவன், கதைத்தலைவி பாத்திரப் படைப்புகள் சாதாரண மனிதர்களின் விருப்பு, வெறுப்புகளுடன் காணப்பட்டாலும், தனிமனிதப் பண்புகள் தெளிவாகத் துலங்கிடும் வண்ணம் படைக்கப் பட்டுள்ளன. கல்வி, வீரம், அழகு, ஆளுமைத் திறன் வாய்ந்த தன்னோரிலாத கதைத் தலைவனாகச் சிவனணைஞ்ச பெருமாளும், பேரழகு, கற்புத்திண்மை, சொல்வன்மை, பெண்டிருக்குரிய அனைத்து நற்பண்புகளும் வாய்க்கப்பெற்ற தன்னோரிலாக் கதைத் தலைவியாகச் சின்னணைஞ்சியும் படைக்கப்பட்டுள்ளனர்.

## சிவனணைஞ்சவர் பாத்திரப் படைப்பு

சிவனணைஞ்சவரின் பேரழகு,

"இணக்கமுள்ள தோழரோடே யிவர்தெருவில் உலாவுவாராம்
தோழன்மார் தங்களிலும் சூரியனைப் போலழகாம்" (1369-1370)

"சூரியப் பிரகாசமுள்ள அணைஞ்சவனார்" (1584)

என்றும் "ஆண்பிள்ளைச் சிங்கம்" (1582), 'வீரவான்' (1584) என்றும்

"போர்பொர வேந்த னெழும்பு வாராம்
கோழிப் போரு பொருதாப் போலே
கூண்டு சிரம்பஞ் செய்கிறார் பாராய்
ஒரோகுத் ததுவும் மூன்று முறிவாய்
உடன் முறிந்திது பணிக்க ருக்கு
கனத்த வன்னியர் கண்டவர் நின்று
கையைப் பிடித்தவர் கண்ணிலே வொத்த
இணக்கத் துடனே உடைவாள் வெட்ட
இங்ஙனே வேந்தனைக் கண்டது மில்லை" - 1474 - 1482

என்று, ஆயுதப் பயிற்சி அளித்த பணிக்கன் இருளப்பனாசானையே பயிற்சிப் போரில் வென்று வாகை சூடிய சிவனணைஞ்சவரின் வீர்தீரமும், தான் கொண்ட காதலை அடையத் தன்னைச் சூழ இருப்ப வர்கள் அனைவரையும் ஏவல் கொண்டு, தான் எண்ணியதை நிறை வேற்றிக்கொண்ட அவரின் ஆளுமைத் திறனும் கதைப்பாடலில் திறம்பட விளக்கிக் கூறப்பட்டுள்ளன (2113 - 2620).

சிவனணைஞ்ச பெருமாள் கொள்கை உறுதியுடையவராகவும், கீழ்க்குலம், உயர்குலம் என்ற சாதி வேறுபாடு கருதி, மனிதர்களைத் தரக்குறைவான எண்ணத்துடன் நோக்காதவராகவும் படைக்கப் பட்டுள்ளார். 'தீண்டத்தகாத சாதியில் பிறந்தவளா இவள்' எனச்

சின்னணைஞ்சியின் பேரழகு கண்டு வியந்து பேசுறுகிறார். பேரழகு வாய்ந்த பெண்ணைக் கீழ்க்குலத்தில் பிறக்க வைத்த விதியையும், பிரமனையும் எண்ணிப் பெருவியப்படைகிறார்.

"தாராள மாகிய சின்ன ணைஞ்சிதான்
தாழ்ந்த குலத்தில் பிறக்க விதியோ
விதித்த பிரமனுக் கேது செய்தாளோ
வெளுத் தெடுப்பான் குலத்தில் படைத்தாரோ" (1821 - 1824)

என்று வருந்துகின்றார்.

தீண்டத்தகாத சாதியில் பிறந்தவள் என்று அறிந்தும், அவள்மீது மாறாக் காதல் பூண்டு, மாமனின் மகளை மணந்தால் தென்காசி ஆட்சி யுரிமையின் அடுத்த வாரிசாக அமையும் நற்சூழல் வாய்க்கப் பெற்றிருந்தும், காதலுக்காகக் கிடைக்கவிருக்கும் அரசர் பதவியையும் தூக்கியெறிந்த சிவனணைஞ்ச பெருமாளின் மாபெரும் தியாகம் பெருவியப்புக்குரியது.

உயர்குலத்தவர், தாம் உயர்குலத்தைச் சேர்ந்தவர்கள்; அரச பரம்பரையில் வந்து மக்களைத் தம் குடைக்கீழ் அடக்கி ஆளும் வல்லமை சான்றவர்கள் என்ற மமதையில் கீழ்க்குலப் பெண்ணைத் தம் விருப்பத்துக்கு அடிபணிய வைப்பதும், பின்னர் தூக்கி எறிந்து விட்டுத் தம் செய்கைக்காக எவ்விதப் பாதிப்பும் அடையாமல் சென்று கொண்டே இருப்பதும், நடைமுறையில் பெருவழக்காக இருந்த ஒரு கால கட்டத்தில், தான் விரும்பிய பெண்ணை இறுதிவரை கைவிட முடியாது என்று கூறிய சிவனணைஞ்சவரின் தீரமும், அவள் பொருட்டுத் தம் உயிரையும் இழந்த வீரமும் மகத்தானவையாகும்.

சிவனணைஞ்சவரின் மறத்தலைவன், 'நாடாளும் மன்னர் வழியில் வந்த நீர், ஒரு வண்ணாத்தியின் மீது ஆசை கொள்வது வரம்பு தப்பி நடப்பதாகும்' என்று இடித்துரைத்தபோது, முருகன் குறத்தியான வள்ளிமீது மையல் கொண்டதையும், பாண்டிய மன்னன் பாடும் பரசி மீது கொண்ட காதலையும் சுட்டிக்காட்டி,[2]

---

2. வரம்புதப்பி நடக்கலையோ மலையிலொரு குறத்திதன்னை
உரம்பெரிய வடிவேல ருகந்தெடுத்துப் போகலையோ
கரந்தனிலே மழுவேந்துங் கடவுள்பர மேஸ்பரனார்
பரம்பதில்மீன் போட்டுவிக்கும் பரத்தியைக்கொண் டிருக்கலையோ
. . . . . . . . . . . . . .
நல்லபுகழ் பாண்டிமன்னர் நாடறிய முன்னாளில்
பல்லியங்கள் படித்துவரும் பாடுகிற பரசியிடம்
இல்லதில்சென் றவதரித்து இருப்புத்தங்கம் சேர்க்கலையோ
(2135 - 2142)

"கருப்பூத்த சின்னணைஞ்சி காரிகையைப் பழித்தாயே
மருப்பூத்த பூந்தொழில் மாணிக்க முத்திருந்தால்
பொருளாயதை வையாமல் போடுவரோ பெரியோர்கள்
பெரியமுடிக் காவலர் பூசணங்க ளானவர்கள்
விரிகடலில் சிப்பியிலே விளைந்தமுத்தைத் தானெடுத்து
வரிசையுடன் பணிசமைத்து மகுடமுடி சேர்க்கலையோ"
(2144 - 2149)

என்று உறுதிபட வினவி, 'தான் கொண்ட காதல் நியாயமானதே' என நிறுவுகிறார்.

சிவனணைஞ்சவருக்குப் புத்தி கூறச் சீவலமாறனால் அனுப்பப் பட்ட மந்திரி வந்து,

"வண்ணாத்தி யோடேநீ காலங்கடத்தாதே யப்பா
வாய்த்ததோர் தென்காசி யூருக்கெல்லாம் வசையாச்சே"
(2748 - 2749)

என்றும்,

". . . . ஆசை கொண்டாய் வேப்பங்காய் மேலே
தீண்டாத சாதியைத் தீண்டினாரென்று சிரிப்பார்
தீர்த்தமுமாடி யழுக்கைத் தொடுவையோ சீசீ"
(2751 - 2753)

என்று இழித்துப் பேச, சிவனணைஞ்ச பெருமாள் மிகச் சினந்து,

"வேண்டாத வார்த்தை பறைகின்ற தாரடா வீணே
வெட்டிப் பட்டிநாயின் குட்டிக்கிடுவேன் விருந்தாய்
. . . . . . . . . . .
ரெண்டு துண்டாக்குவே னென்று உடவாளெடுத்தான்"
(2754 - 2755, 2759)

தாய் பொன்னுருவி வந்து நயந்தும்,[3] பயங்காட்டியும்[4] வண்ணாத்தியின் தொடர்பை விட்டு விடுமாறு அறிவுரை கூறியபோதும்,

---

3. "வண்ணாத்திக் காகவோ கண்ணாளா ஒன்னை வளர்த்தேன்
மாதர்கள்சீலை வெளுத்திட வேண்டாம் மகனே" (2786 - 2787)

"தண்டமிழ் சேரும் சிவனணைஞ்ச பெருமாளே
தாய்வார்த்தை கேளாதான் நாய்வாய்ச் சீலைபோ லானாய்"
(2784 - 2785)

"சால யிம்மையில் தாய்சொல்லும் வார்த்தை கேளாதார்
சாத்திக் கழித்திடு மாலைபோல் சந்தியி லாவார்" (2802 - 2803)

4. "கள்ளியைத் தள்ளாமல் உள்ளாக்கி வைத்து யிருந்தால்
கல்தூணிலே முட்டிச் சாகிறே னென்பழி காண்பாய்" (2790 - 2791)

"தொம்பர வண்ணாத்தி யோடேநீ பங்கப்படுவாய்" (2809)

"தொட்டவள் தன்னையும் விட்டுவிட்டால் வெகுதோசம்"
(2808)

"வண்ணாத்தி யோடவே வாழாமல் லென்னை மறித்தால்
வால சன்யாசியைப் போலவே போவேன் மலைமேல்"
(2806 - 2807)

என்று கூறித் தான் கொண்ட காதலில் உறுதியோடு நிற்பதைப் பார்க்கிறோம்.

காதலுக்காக, தான் அந்தணர் குலத்தில் பிறந்தவனாயிருந்தும், தன்னால் காதலிக்கப்பட்டவர்கள் சக்கிலியப் பெண்களாதலின், தன் குலத்துக்குரிய பூசை, புனஸ்கார, சப, தபங்களைக் கைவிட்டு, தானும் ஒரு சக்கிலியனைப் போலவே மாறி, அவர்கள் தொழிலான மாட்டுத் தோல் அறுத்தல், பதப்படுத்தல், குதிரைச் சேணம் தைத்தல், செருப்புத் தைத்தல் போன்ற தொழில்களைச் செய்து, ஒரு பிறவிச் சக்கிலியனாகவே வாழ்ந்து காட்டி, இறுதியில் அக்குலத்துக்காகவே மடிந்த முத்துப்பட்டன்,[5]

'ஆண்டவனும், ஆளும் வர்க்கமும் செய்யும்போது அது தவறல்ல; கீழ்க்குலத்தில் பிறந்தவன் என்பதால் தான் செய்தது மட்டும் தவறாகுமோ' என்று வாதிட்டு, 'தான் உயர்சாதிப் பெண்ணையும், பிற சாதிப் பெண்கள் சிலரையும் விரும்பி மணந்தது குற்றமில்லை' என்று காதலுக்காக மன்னனையே எதிர்த்து வாதிட்டு, கழுவேறும் தண்டனை விதிக்கப்பட்டபோதும், 'தான் கொண்ட கொள்கையும் செய்த செய்கைகளும் சரியானவைதான்' என்பதை நிரூபித்து, கழுவேறி மரணமடைந்த காத்தவராயன்,[6]

அந்தணர் குலப் பெண்ணைப் பாம்பு கடித்த விஷத்தன்மையிலிருந்து தக்க சமயத்தில் காப்பாற்றிய நிகழ்ச்சியால் விளைந்த காதலை, சாதி வேறுபாடு காட்டிப் பிரிக்க எண்ணிய உயர்சாதியினரை எதிர்த்துக் குடித்தனம் நடத்திக்காட்டி, இறுதியில் சாதி வெறியர்களால் கபடமாகக் கொல்லப்பட்ட சிதம்பர நாடார்,[7]

மாபெரும் வீரனாகத் திகழ்ந்தும், அரசனின் நாயகிமேல் காதல் கொண்டான் என்ற காரணத்துக்காகக் கள்வன் என்ற போர்வையில் பழிவாங்கப்பட்ட மதுரை வீரன்,[8]

---

5. முத்துப்பட்டன் கதை, பதிப். டாக்டர் நா.வானமாமலை.
6. காத்தவராயன் கதை, பதிப். டாக்டர் நா.வானமாமலை.
7. சிதம்பர நாடார் கதை, பதிப். சு.தங்கதுரை.
8. தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு (கட்டுரை) ஆராய்ச்சி இதழ் 2 மலர் 2 நா.வானமாமலை, பக். 135 - 136

உயர்குலப் பெண்ணின்மீது கொண்ட காதலால் இருப்பிடம் பெயர்ந்து, பிழைப்பு தேடிக் காஞ்சியிலிருந்து கொட்டாரக்கரை வந்து சேர்ந்து, துயருற்று, மன்னனிடம் சேவகம் செய்து, வயிற்றுப் பிழைப்பு நடத்தி வந்தபோதும், காதலியின் அண்ணன்மார்களால் சிறைப்பிடிக்கப் பட்டுக் கொல்லப்பட்ட தூண்டி முத்து முதலியார்,[9]

மந்திர தந்திரங்களால் தன்னை யாரும் வெல்ல இயலாது என்று தன்னேரிலாத தலைவனாகத் திகழ்கின்றவனாயினும், தங்கள் அழுக்குத் துணி வெளுக்கும் தீண்டத்தகாத வண்ணார் குலத்தவனான அவன், 'தங்கள் தங்கைமீது காதல் கொள்வதா' என்று சினந்து, உயர்குலத்தவரான ஆட்சியாளரின் அனுமதியோடு காதலியின் அண்ணன்மார்களால் வெட்டிக் கொல்லப்பட்ட மந்திரமூர்த்தி[10] என்ற இவர்கள் சாதி வேறுபாடுகளைக் கருதாது காதல் கொண்டவர்கள் என்ற காரணத்துக்காகக் கொல்லப்பட்டவர்கள் ஆவர். இத்தகையோர் பட்டியலில் மேலும் ஒருவராக இணையும், சிவனணைஞ்ச பெருமாள், இவர்கள் எல்லோரையும்விட ஒரு படி மேலேயே நிற்கக் காண்கிறோம். காரணம் மாமன் மகளை மணந்தால் தென்காசி அரசாட்சியுரிமைக்கு அடுத்த வாரிசாக அமையும் பெருவாய்ப்பு அமையப் பெற்றிருந்தும், காதலுக்காக அவ்வாய்ப்பையும், வசதியையும் தூக்கி எறிந்தவர் என்பதால் ஆகும்.

மருமக்கள் தாயம் வழக்கிலிருந்த பகுதிகளாதலின், தென்காசி மன்னன் சீவலமாறனின் மருமகனாய சிவனணைஞ்சவருக்குத் தென்காசி ஆட்சியுரிமை அடுத்ததாக அமையும் வாய்ப்பு இருந்தது. வாரிசுரிமை கருதியே கோவிக்கல் ராசனாகச் சிவனணைஞ்சவரை ஆக்கி வைக்கிறான் சீவலமாறன். மகளை மணம் செய்வித்துத் தென்காசி மன்னவனாகச் சிவனணைஞ்சவரை ஆக்கவேண்டும் என்பது சீவலமாறனின் எண்ணம்.[11] கோவிக்கல் ராசன் சிவனணைஞ்சவர் என்பது கதைப்பாடலில் சுட்டப் பட்டுள்ளது.

"கோவிக்கல் வாச லணஞ்சவ ராசனை" (1509)
"கோவிக்கல் வாசல் குமாரனைக் கூட்டி வருவாய்" (2777)

சிவனணைஞ்சவருக்கெனத் தனி மாளிகையும், மண்டபமும் அதில் அவர் கொலுவிருந்த காட்சியும் விவரிக்கப்பட்டுள்ளது (2044-2073). கதைப்

---

9. குருக்குளாஞ்சி கதை, The Wandering Voice, Ed. R.Nirmala Devi.
10. தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை, பதிப். சூ.நிர்மலாதேவி.
11. "கண்ணொத்த மாமன் மகளான யின்பக் கனியைக்
காதல் கொள்ளாமல் ஆசைகொண்டாய் வேப்பங்காய் மேலே"
(2750 - 2751)

பாத்திரங்கள் 'மன்னவர்' என்றே சிவனணைஞ்சவரை அழைப்பதும் கவனிக்கத்தக்கது.[12] தான் கொண்ட காதலுக்காகப் பெற்றிருந்த ஆட்சியுரிமை, வரவிருந்த ஆட்சியுரிமை என்ற அனைத்தையும் இழந்து, இறுதியில் மரண தண்டனைக்காட்பட்டு உயிரையும் இழக்கிறார் சிவனணைஞ்ச பெருமாள்.

## சின்னணைஞ்சி பாத்திரப்படைப்பு

சின்னணைஞ்சி பாத்திரப் படைப்பு, கதை வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது. அக்கால கட்டத்தைய குடும்பப் பெண்ணின் மனநிலைகளின் வன்மை-மென்மைகளைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடியாக இக்கதைப்பாடல் திகழ்கின்றது. சின்னணைஞ்சி பக்குவமடைவதற்கு முன்பே அக்கால, அக்குல வழக்கப்படி மணம் செய்விக்கப்படுகிறாள்(1630 - 1632). பக்குவமடைந்தபின்னர் கணவனுக் கேற்ற மனைவியாக, கணவன் செய்யும் தொழிலில் தக்க உதவி புரிபவளாய் ஒரு நல்ல குடும்பப் பெண்ணாகக் காட்டப்படுகிறாள் (1700 - 1751). வீட்டைவிட்டுத் தெருவிலிறங்கிப் பல இல்லங்களுக்கும் சென்று அழுக்கெடுத்து, வெளுத்த துணி கொடுக்கும் தொழில் செய்பவள் ஆனாலும், எவ்விதப் பேச்சுக்கும் ஏச்சுக்கும் இடமளிக்காதவளாய்க் கணவனோடு மனமொத்த வாழ்க்கை நடத்தி வருகிறாள்.

"மிடுத்தனமாய்த் தன் கணவன் வெளுத்தெடுப்பான் றன்னை விட்டு
விட்டுப் பிரிந்தறியாள் வேத்தூரில் தங்கறியாள்
கட்டுந் தறியைவிட்டுக் கடராத ஆவினம்போல்
மட்டுவிட்டுக் கடரறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்"
(1657 - 1660)

என்றமையும் வரிகள் கணவனோடு ஒத்த வாழ்க்கை நடத்தி வந்தமையைத் தெரிவிக்கின்றன. பேரழகுடன் பண்பாடு மிக்கவளாகவும், பெண்டிருக்குரிய அனைத்து நற்பண்புகளும் வாய்க்கப் பெற்றவளாகவும் காட்டப்படுகிறாள். இவளின் பேரழகு,

"அழகா லிலைவயிறு மாசாரச் சொல்லுங்கை வீச்சழகும்
புகழான வாய்மலரும் பொட்டுபொங்காரமும் கண்மடலும்
இனமான மயிலது போலவ ளிங்கிதமான குறுநடையும்
நடையுந் துடியிடையு நாணயச் சொல்லுட பாவனையும்
மடவாள் மதிமுகமும் வர்ண வரிக்குறிப் பொட்டழகும்"
(1769 - 1773)

---

12. "முன்னிருந்த மன்னவர்கள் மூதாக்க ளானவர்கள்
மன்னவனே யிப்படித்தான் வரம்புதப்பி நடந்தாரோ" (2133 - 2134)

என்று விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1764 முதல் 1780 வரை உள்ள பாடல் வரிகளில் இவளின் அழகுத்தோற்றம் சிறப்பாக வருணிக்கப் பட்டுள்ளது. இவளுடைய நற்பண்புகள் கதைப்பாடலில் பல இடங்களில் ஆங்காங்கு சுட்டப் பெற்றிருப்பினும், 1655 முதல் 1674 வரை உள்ள வரிகளில் சிறப்பாக விளக்கப் பெற்றுள்ளன.

"ஒப்புரவா யமுக்கெடுத்து ஊருசுத்தி வருநேரம்
ஊரிலுள்ளோர் தங்கள்முன்னே வொழுங்குதப்பி நடக்கறியாள்
பேருசொல்லி ஷிளித்தாலும் பெருவழியில் நிக்கறியாள்
மூக்கறையர் போல்திரியும் முகடர்கண்ணில் முழிக்கறியாள்
வாக்கறியா வார்த்தைசொல்லும் வண்டரைக்கண் டுறவாடாள்"
(1668 - 1672)

என்று சின்னணைஞ்சியின் நற்பண்புகள் குறிக்கப்பெற்றுள்ளன. சிவனணைஞ்சவரை இவளின் பேரழகே முதலில் மையல் கொள்ள வைக்கிறது.[13] சிவனணைஞ்சவர் சின்னணைஞ்சியிடம் நேரடியாகத் தன் விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவள் மறுத்த விதமும், தூது வந்த மறத்தலைவனை அவள் தூசாகக் கருதிப் பேசிய விதமும், அவளை எப்படியும் அடைந்தே தீருவது என்ற தீவிரத்தை வளர்க்கக் காரணமாக அமைகின்றது. சின்னணைஞ்சிக்குச் சிவனணைஞ்சவர் வசிய மருந்து தந்து, வஞ்சகமாக ஏமாற்றி அவளை வசப்படுத்திய பின்னர், தன் வீட்டுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்றே சின்னணைஞ்சி விரும்புகிறாள்.[14] இவ்வாறு இவள் விரும்பியதாலோ என்னவோ அவளை நிரந்தரமாகத் தன்னுடன் தங்கவைத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் தீவிரமாகிறார் சிவனணைஞ்சவர். தன் கணவன் தன்னைத் தேடி அலைவதைத் திட்டிவாசல் வழிபார்த்த சின்னணைஞ்சி, சிவனணைஞ்சவரை விட்டுச் செல்ல ஒரு யுக்தி செய்கிறாள்(2663-2671).

---

13. "ஒப்புடன் கொப்பு குழைக்காதும் பொன்னும்
உடலழகைக் கண்டு வுள்ளாசை கொண்டார்
செப்புத் தனமுஞ் சிறந்த முகமும்
தேசத்தி லிப்படியுங் கண்டதில்லை" (1811 - 1814)

"அல்லும் பகலு மிருந்து நம்மோடே
ஆசார வார்த்தைகள் பேச வாராளோ" (1817 - 1818)

14. "மையல் தீர்ந்தபின் கையை நெரிக்கிறாள்
மனையில் தாய்மாரை நினைந்து தேடுவாள்
வந்து மூன்றுநா ளாகிப் போச்சுதே
மாயமா யென்னை யேது செய்தீரோ
வீட்டில் போய் முகங்காட்டி வருகிறேன்
வேந்தனே யென்னை விட்டிடுவா யென்றாள்" (2626 - 2631)

அந்தத் தந்திரமும் சிவனணைஞ்சவரிடம் பலிக்காது போனபின்னர்தான், நிரந்தரமாக அவருடனேயே தங்கிவிடுகிறாள் சின்னணைஞ்சி. இவ்வாறு தொடக்கத்திலும், இடையிலும் சின்னணைஞ்சியிடம் காதலின் அரும்பையும் காணமுடியாத சூழலைக் கதைப்பாடல் காட்டுகிறது. இது ஐவர் ராசாக்கள் கதை,[15] தோட்டுக்காரி கதை[16] காட்டும் ஒருதலைக் காதலோ என்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது. என்றாலும், இறுதிக் கட்டங்களில் சின்னணைஞ்சி சிவனணைஞ்சவரை ஆழமாக நேசிக்கத் தொடங்கி, அவரே 'நீ சென்றுவிடு' என்று சொன்னபோதும், 'வாழ்ந்தாலும் உம்மோடே இறந்தாலும் உம்மோடே, உம்முடன் உள்ளபோது போகுங்காலம் வந்தால் பொன்றிடுவேன்' (2857-2862) என்று கூறும் அளவுக்குக் காதலில் உறுதி காட்டுபவளாக ஆகிவிடுவதால், இது ஒருதலைக் காதல் அல்ல; 'இருவரிடமும் ஆழமாக வேரூன்றிய காதல்தான்' என்பது தெளிவாகின்றது. இறுதியில் காதலுக்காகப் போர்க்களம் புகுந்து போர் செய்து மடியும் வீரமங்கையாகச் சின்னணைஞ்சி சித்திரிக்கப்படுகிறாள் (2860, 2884 - 2885)

## ஆய்வுக்குரிய சில குறிப்புகள்

1. சீவலமாறனின் தங்கையான பொன்னுருவி, செம்பவளராசனின் மனைவியாக ஆகிறாள். இந்தச் செம்பவளராசன் செங்கோட்டை, தென்காசி மன்னவன் என்ற குறிப்பு காணப்படுகின்றது.

"நாடான நாடதிலே நல்லதென்காசி நாட்டில்
தேசமான தேசத்திலே செங்கோட்டை யானதிலே
ஊரான ஊரதிலே உத்ததென் காசியிலே
அஞ்சிமுடி மன்னவர்க ளாண்டிருந்து போனகாலம்
ஆண்டிருந்தார் செம்பவள ராசன்" (41 -45)

---

15. இக்கதையில் குலசேகரப் பாண்டியன் மீது கன்னடியன் மகள் மட்டுமே ஒருதலையாகக் காதல் கொள்கிறாள். இறுதி வரை அவளை விரும்பாத குலசேகர பாண்டியன், கன்னடியரை விடத் தம் குலம் பெருமை வாயந்தது என்று கருதி, மணம் செய்ய ஒப்பாமல், தற்கொலை செய்து மரணமடைகின்றான். கன்னடியன் மகள் அவன் பிணத்துக்கு மாலையிட்டு உடன்கட்டையேறி மடிகிறாள்.

- ஐவர் ராசாக்கள் கதை, பதிப். நா.வானமாமலை

16. இக்கதையில் குமரப்பராசா மட்டுமே தோட்டுக்காரிமீது காதல் கொள்கிறான். தனக்காக நடந்த போரில் பெற்றோர், உற்றாரின் மரணத்தைக் கண்ட தோட்டுக்காரி மனம் பொறாது தானும் தீப்பாய்ந்து மடிகிறாள். அதே தீயில் குமரப்பராசனும் விழுந்து மடிகிறான்.

-தோட்டுக்காரி கதை, பதிப். வ.அலமேலு

என்று உள்ளது. இந்தச் செம்பவளராசனின் மனைவியாகிய பொன்னுருவியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதும்,

"ஆணுவமாய்ச் செங்கோட்டை நாட்டையர சாண்ட
அம்மைகதை" (10 - 11)

என்றும்,

"சீர்சிறக்குஞ் செங்கோட்டை நாட்டை யாண்ட மன்னன்
செல்வி பொன்னுருவி யம்மை" (21 - 22)

என்றும் சுட்டப்பட்டுள்ளது. அதே சமயம் பொன்னுருவியின் தமையனான சீவலமாறனும் தென்காசி மன்னவன் என்று கதைப் பாடலின் பின்பகுதியில் குறிக்கப்படுகின்றான். செங்கோட்டையைத் தலைநகராகக் கொண்டு, சுற்றியுள்ள பகுதிகளைச் செம்பவளராசனும், தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு சூழ இருந்த பகுதிகளைச் சீவலமாறனும் ஆட்சி செய்தனரா என்று சிந்திக்க இடமுள்ளது. கதைப்பாடலின் இடையில், "பண்டுமுன்னாள் தென்காசிப் பதியாண்ட ராசமன்னன்" (1386) என்று செம்பவளராசன் சுட்டப்படுவதால் செம்பவளராசனின் ஆளுகைக்குட்டிபட்டிருந்த தென்காசி, செங்கோட்டைப் பகுதிகளைப் பின்னர் சீவலமாறன் கைப்பற்றி ஆட்சி செய்தானா? என்ற வினா எழுகின்றது. கதையின் பின்பகுதியில் செம்பவளராசனைப் பற்றிய எக்குறிப்பும் காணப்படாததால், தன் தங்கையின் கணவனான செம்பவளராசனை வெற்றி கொண்டு சீவலமாறன் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கலாம் எனவும் கருத இடமுள்ளது. போரில் செம்பவளராசன் இறந்துமிருக்கலாம். செம்பவளராசனின் மகனும், சீவலமாறனின் மருமகனுமாகிய சிவனணைஞ்ச பெருமாளும் தென்காசிப் பகுதிக்கு ஒரு மன்னனாகக் கொலுவிருந்து ஆட்சி செய்ததைக் கதைப்பாடல் காட்டுகின்றது. (2042 - 2079) சின்னணைஞ்சியின் தொடர்பால் இவனும் பின்னர் சீவலமாறனால் ஏவப்பட்ட படையால் பிடிக்கப்பட்டுக் கொலையுண்ணப் படுகின்றான். சாதி மீறிய காதல் மட்டுமின்றி, இவன் கொலைக்கு அரசியல் நோக்கமும் உள்ளதா என்பது ஆய்வுக்குரியது. பொன்னுருவியும், சிவனணைஞ்ச பெருமாளும் தென்காசிப் படை வீட்டிலேயே தங்கியிருந்ததாகக் கதைப்பாடல் காட்டுகிறது. நாஞ்சில் வளநாட்டில் மருமக்கள் தாயம் வழக்கிலிருந்தபடியால் இவர்களிடை யேயும் இவ்வழக்கம் பின்பற்றப்பட்டு, இதனால் இவர்கள் தென்காசிப் படைவீட்டில் நிரந்தரமாக வீற்றிருந்தனரா என்பது ஆய்வுக்குரியது. மருமக்கள் தாய முறைப்படி சிவனணைஞ்ச பெருமாளே மன்னனாவான் என்பதால் 'வண்ணாத்தி தொடர்பு' ஒரு காரணமாகக் காட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டானா என்பதும் சிந்தித்தற்குரியது.

2. செங்கோட்டை மன்னன் செம்பவளராசன், வலங்கைக் குலத்துதித்தவன் என்ற செய்தி கதைப்பாடலில் காணப்படுகிறது.

"பத்திரமா காளியருள் புத்திரனென் றேதான்
பாருலகி லேவலங்கைக் குலத்துதித்த செல்வன்
சீர்சிறக்குஞ் செங்கோட்டை நாட்டையாண்ட மன்னன்" (19-21)

என்றமைந்துள்ளது. எனவே செம்பவளராசனின் மகனான கதைத் தலைவன் சிவனணைஞ்ச பெருமாள் வலங்கைக் குலமான நாடார் குலத்தவன் என்பது பெறப்படுகின்றது. இந்தக் கதைப்பிரதியுடன் ஒப்பிடப்படுகின்ற 376 - சிவனணைஞ்ச பெருமாள் கதைப் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) பிரதியில் கதைத் தலைவனின் குலம் பற்றிய குறிப்பு காணப்படவில்லை. கதைத்தலைவன் குறிப்பிட்ட குலத்தில் வந்தவனாயின், இக்குறிப்பு முக்கியமான ஒன்றாதலின், அவன் இன்ன குலத்தில் வந்தவன் என்று குறிக்கப்படுவது எல்லாப் பிரதிகளிலும் காணப்படல் வேண்டும். ஆனால் ஒரு பிரதியில் குலம் பற்றிக் காட்டப் பட்டும், மற்றொரு பிரதியில் குலம் பற்றிய குறிப்பு எவ்விடத்திலும் சுட்டப்படாமலிருப்பது வினாவுக்குரிய ஒன்றாக உள்ளது. குலம் சுட்டி அமைந்துள்ள கதைப்பாடற் பிரதியைப் பாடியுள்ளவர், 'புலவர். ஆறுமுகப் பெருமாள் நாடார்' ஆவார். தன் குலமான வலங்கைக் குலத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில், கதைத்தலைவனும், இக்குலத்தைச் சேர்ந்தவன் என்று பாடி வைத்துள்ளாரா என்பது ஆய்வுக்குரியது. சிதம்பர நாடார் கதையில் ஐவர் ராசாக்களை நாடார்கள் என்று குறித்துள்ள பாடல் வரி காணப்படுகின்றது. "அஞ்சிமுடி நாடார்கள் ஆண்டிருந்து போன காலம்" என்று உள்ளது. சிதம்பர நாடார் கதைப்பாடலின் ஆசிரியர் குட்டி நாடார் என்பவர் ஆவார். ஐவர் ராசாக்களைப் பாண்டிய மன்னர் பரம்பரையில் வந்தவர்கள் என்று ஐவர் ராசாக்கள் கதைப் பாடலைப் பதிப்பித்த நா.வானமாமலை அவர்கள் குறிப்பிடுகின்றார். பாண்டிய மன்னர் பரம்பரையில் வந்தவர்களை நாடார்கள் என்று குறிப்பிட்டுள்ள குட்டி நாடார் போன்று, ஆறுமுகப்பெருமாள் நாடாரும் சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கதைத்தலைவனை நாடார் என்று குறித்தாரா என்பது சிந்தித்தற்குரியது.

3. "அஞ்சி முடி மன்னவர்க ளாண்டிருந்து போனகாலம்" (44) என்ற கதைப்பாடல் வரியால், ஐவர் ராசாக்கள் எனும் பஞ்சபாண்டியர் களான குலசேகர பாண்டியன், கோமாறன் வீரபாண்டித்தேவர், கோமாறன் ஜடாவர்மன் பராக்கிரம பாண்டிய தேவர், சடியவர்மன் குலசேகர பாண்டிய தேவர், ஜடாவர்மன் விக்ரம பாண்டிய தேவர் என்ற ஐந்து சகோதரர்கள் தென்காசியைப் புகழோடு ஆண்டவர்கள் என்றும், கி.பி.1370 முதல் 1422 வரை இவர்கள் ஆட்சி இருந்தது என்றும், இவர்கள் ஒருவருக்குப்பின் ஒருவர் ஆண்டனரா அல்லது இருவர், மூவர்

ஒரே காலத்தில் பல தலைநகர்களிலிருந்து தேசத்தைப் பிரிவு செய்து கொண்டு ஆண்டனரா என்பது புரியாத புதிராக உள்ளது என்றும், டாக்டர் நா.வானமாமலை அவர்கள் குறிப்புகள் தருகிறார்.[17] செம்பவளராசன் இந்த ஐவர் ராசாக்கள் ஆண்ட காலத்தின்பின் ஆட்சி செய்தான் என்பதால் 15ஆம் நூற்றாண்டுகளின்பின் 16-17களில் ஆட்சி செய்தவனாக இருத்தல் வேண்டும். இக்கதைப்பாடல் அதன்பின், அதாவது 17-18ஆம் நூற்றாண்டினது என்ற அளவில் காலத்தை நிர்ணயிக்கலாம். இந்நூற்றாண்டுகளில் நாடார்கள் நாடாள்பவர்களாகத் திகழ்ந்தனரா என்பது சிந்தித்தற்குரியது. காரணம் இக்கால கட்டத்தில் இக்குலத்தினர் மிகக் கீழான நிலைக்கு ஆளாக்கப்பட்டுத் துடிதுடித்துக் கொண்டிருந்த காலகட்டம் என்பதைத் தமிழக வரலாறு எடுத்துக் காட்டுகிறது. நாராயண குரு, வைகுண்டசாமி போன்றவர்கள் இவர்கள் நிலை உயரப் பாடுபட்டிருக் கின்றனர்.[18] எனவே இக்கதைப்பாடல் களிலுள்ள இவ்வரலாற்றுச் சிக்கல்கள் ஆய்வுக்குரியன.

4. "ஊருக்குத் தலைவரான நாடாரின் மகன் நாவித இனத்தைச் சேர்ந்த பெண்ணை விரும்பி மணந்ததினால் காதலனும், காதலியும் கொல்லப்பட்ட நிகழ்ச்சியை விவரிப்பது சிவனணைஞ்ச பெருமாள் கதை" என்ற அமைப்புடைய சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பிரதியும் உள்ளதாகத் தெரிகின்றது."[19] ஊருக்குத் தலைவரான நாடார் மகன் என்றும், கதைத்தலைவன் குறிப்பிட்ட ஒரு ஊருக்கு மட்டும் தலைவனாகத் திகழ்ந்தவரின் மகன் என்றும் 'மிக எளிமையான ஒருவன் கதைத் தலைவன்' என்று இப்பிரதி சித்திரிக்கின்றது. ஆனால் 46-47, 376- சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பிரதிகள், தனியாக மந்திரியும், கொடி, படையுடன், ஆள், அரண்மனையும் வைத்து அரசர்களாக ஆண்டவர்களின் மகனும், மருமகனுமானவன் கதைத்தலைவன் என்று, சிவனணைஞ்ச பெருமாளை மன்னர் பரம்பரையில் வந்தவனாகக் காட்டு கின்றன. (2043-2077). இத்தகு கதை வேறுபாடுகளும் ஆய்வுக்குரியன.

5. மன்னர் பரம்பரையில் வந்த உயர்ந்த நிலையில் உள்ளோரும், தீண்டத் தகாதவர் எனக் கருதப்பட்ட தாழ்ந்த நிலையில் உள்ளோரும், குறிப்பிட்ட காலகட்டத்தில் குழந்தை மணம் புரிவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதை இக்கதைப்பாடலில் அகச்சான்றாகக் காணமுடிகின்றது. அரச பரம்பரையில் வந்த பொன்னுருவிக்கு பக்குவமடைவதற்கு முன்பே மணம் செய்விக்கப்பட்டதாகவும், பக்குவமடைந்தபின்னர் அவள் கணவனோடு இணைந்து இல்வாழ்க்கை நடத்தியதாகவும் கதைப்பாடல் விவரிக்கின்றது.

---

17. ஐவர் ராசாக்கள் கதை, முன்னுரை, பக்.13-14
18. திரு. நாராயண குருவும், தமிழகமும், பதிப். டாக்டர் கி.நாச்சிமுத்து, பக்.47 - 59
19. தமிழில் கதைப்பாடல், டாக்டர் அ.நா. பெருமாள், பக்.143

"வாழுஞ் செம்பவள ராசன் மங்கையரை மாலையிட்டார்
மாலையிட்டு மணம்புணர்ந்து வயசுபன்னிரண்டு செல்ல
பன்னிரண்டு திருவயசில் பாவைநல்லாள் திருப்பூத்தாள்
திருப்பூத்த கலியாணம் சேரவங்கே தானடத்தி
விருப்பமுத்த பொன்னுருவி மெல்லிநல்லாள் வாழ்ந்திருந்தாள்"
(48 - 52)

என்று அமைந்துள்ளது. இதேபோன்று வண்ணார் குலத்தவளான சின்னணைஞ்சியும் பக்குவமடையுமுன் மணம் செய்விக்கப்பட்டுக் கணவன் வீட்டில் வாழ்வதும், பக்குவமடைந்தபின் கணவனோடு இல்லறம் நடத்திய செய்திகளும் கதைப்பாடலில் கீழ்க் காணுமாறு விவரிக்கப் பெற்றுள்ளன.

"பன்னிரண்டு திருவயதில் பாவைநல்லாள் தன்தனைத்தான்
மண்ணுலகில் வெளுத்தெடுப்பான் வண்ணார மாடனுக்கு
கன்னியர் சின்னணைஞ்சி தன்னைக் கருத்துடனே மாலையிட்டார்
மாலையிட்ட நாள்முதலாய் வாழ்ந்திருந்தா ரிருபேரும்
சேலைசுத்தும் பெண்கொடியாள் தேன்மொழியாள் சின்னணைஞ்சி
சாலைமதிப் பூங்குழலாள் சாமத்திய மாகின்றாளே
சாமத்தியச் சடங்குசெய்யத் தன்னினத்தார் தான்கூடி
. . . . . . . . . . . . . . . . . . . . .
சடங்கதெல்லா முடித்ததற்பின் தையல்நல்லாள் சின்னணைஞ்சி
மடந்தையரு மன்னவனு மகாசிநேக மாயிருந்தார்"
(1630 - 1641)

கதைப்பாடல் எழுந்த காலகட்டத்தில் குழந்தை மணம் வழக்கிலிருந்தது என்பதை விளக்கும் அகச்சான்றுகளாக இவை திகழ்கின்றன. இதனால் கணவனோடு இணைந்து இல்லறம் நடத்திய ஒரு நன் மனைவியையே சிவனணைஞ்ச பெருமாள் விரும்பிக் காதல் கொண்டான் என்ற நிலையை 46-47 - சிவனணைஞ்ச பெருமாள் கதை உருவாக்கியுள்ளது. ஆனால் 376 - சிவனணைஞ்ச பெருமாள் கதை பக்குவமடைந்து தாய்தந்தையோடு இருக்கும், மணமாகாத கன்னிப்பெண்ணான சின்னணைஞ்சியையே சிவனணைஞ்சவர் கண்டு விரும்பியதாகக் குறிப்பிடுகின்றது (1594 - 1683). இவ்வாறு இரு கதைப்பிரதிகளிலும் இம்முக்கிய மாறுபாடு அமையக் காரணமென்ன என்பது சிந்தித்தற்குரியது. 376- சிவனணைஞ்ச பெருமாள் கதை, புராணப் போக்குகள் மிகுந்ததாக உள்ளதால் பிற்காலத்தது எனக் கருத வாய்ப்புள்ளது. குழந்தை மணச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டின் பின்னர் இப்பிரதி எழுதப்பெற்று, அதனால் சின்னணைஞ்சி, குழந்தைப் பருவத்திலேயே மணம் செய்யப்படாதவளாய், பக்குவமடைந்தும் மணமாகாதவளாகக் காட்டப்பட்டாளா என்பது ஆய்வுக்குரியது.

6. சிவனணைஞ்சவர் வீரப் பயிற்சிகள் பெற்றதாக அமையும் பகுதியில் சிலம்பப் பயிற்சிகள், அடவு முறைகள், அடிமுறைகள், வாள் வித்தைகள் போன்றவற்றை ஆசானிடம் முறையாகக் கற்றதாக விவரிக்கப்பட்டுள்ளது. இத்தகு பயிற்சிகள் பெறுவதற்கெனவே தனியாக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து முறைப்படி கட்டி முடித்தனர் எனத் தெரிகிறது.

"தேஞ்சொரியுந் தென்காசி பூங்காவனத் தருகில்
தெற்பக்குள மட்டுக்கும் விலாசம்வேண்டிக் கண்டார்
பச்சைக்கம்பு வெட்டிக்கெட்டி யிலங்கப்புரை முகித்து
பண்டகசாலை வேறேயொன்று பக்கத்திலே முகித்தார்
மட்டில்லாத வாள் சிரம்பம் கட்டுடனே படிக்க
மன்னர்தோழன் மார்கள் மக்களொன்றாக் கூடி"

(1415 - 1420)

என விளக்கப் பெற்றுள்ளது. பயிற்சியைத் தொடங்குமுன் எவ்வாறு தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர் என்பது,

"கைதனிலே கண்கறுத்த தேங்காயை யெடுத்து
கணபதியே துணையெனவே தரைமெழுகி உடைத்தார்
சரீரமெல்லா மெண்ணையிட்டுச் சல்லட மணிந்து
சட்டமாகப் பட்டுக்கச்சை கெட்டியழ காக
கைதனிலே தகடமேந்திக் கட்டியே யெடுத்து
கால்பகுந்து மெல்லவைத்துக் கரிமுகனைத் தொழுது"

(1421 - 1426)

என விவரிக்கப் பெற்றுள்ளது. சிலம்பப் பயிற்சி பெற்ற முறைகள்,

"வலதுகாலை முன்னேவைத்து வாய்த்தாரங் கூறி
வட்டமிட்டுக் கையைமெல்லத் தட்டிக்கும்பிட் டாராம்
கவடுவைத்து அடமான் றடவுகளி லெழும்பி
சூழச்சூழ வாரகம்பை மாறிப்பிடித் தாரே
இடதுகாலை முன்னேவைத்து யேழடி முன்னெழும்பி
இடசாரி வலசாரி யிருந்தெழும்பு வாராம்
தடதடென வடித்தகம்பைத் தான்பிடித்துக் கொண்டு"

(1429 - 1435)

என இயம்பப்பெற்றுள்ளது. அடவுமுறை, அடிமான முறைகள் செய்யத் தகடமேந்திப் பயிற்சி பெற்ற முறைகள் விரிவாகப் பேசப்பெற்றுள்ளன (1436 - 1461). தகட வகைகள் குறித்த விவரங்கள்,

"பொன்னிட்ட தகடம் பூவிட்ட தகடம்
புலித்தோ லுறைகள் கெட்டிய தகடம்
மின்னிட்ட தகடம் விருதிட்ட தகடம்
வீரச மணியது கெட்டிய தகடம்"

எனத் தரப்பெற்றுள்ளன. தகடமேந்தி எவ்வாறு பயிற்சி பெற்றனர் என்பது காட்சிகளைக் கண்முன் காண்பது போன்ற அமைப்புடன் விவரிக்கப்பெற்றுள்ளது (1447 - 1461).

"கட்டியலுங் கையும் பாராய்
கையு மவருட மெய்யும் பாராய்
வலதுகாலை வலதே வைத்து
வலதடி தகடம் வீசிடுவாராம்
இடதுகாலை யிடத்தே வைத்து
இடதடி தகடம் வீசிடுவாராம்
. . . . . . . . . . . . .
மண்டி போட்டு யிருந்து கொண்டு
மணியில் வீச்சிகள் வீசிடு வாராம்" (1447 - 1460)

என உள்ளது. வாட்பயிற்சி செய்த முறைகளும், 'ஆசான் என்று பாராமல் எதிர்த்துப் போர்ப்பயிற்சி செய்வாயாக' என்று ஆசான் கூற, ஆசானையே வீழ்த்திவிடும் அளவுக்குப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தவராகச் சிவனணைஞ்சவர் காட்டப்படுகிறார் (1465-1485).

சிலம்பக்கலை, வர்மக்கலை, அடிமுறைகள் குறித்து ஆய்வு செய்பவர்களுக்கு இப்பகுதிகள் மிகுந்த பயன் தருபவைகளாக அமையும் என்பது உறுதி.

## 376- சிவனணைஞ்ச பெருமாள் கதை - கதைச்சுருக்கம்

தென்காசி மன்னவனான சீவலமாறனின் தங்கை பொன்னுருவியைச் செண்பகமாராசன் மணக்கிறான். குழந்தைப் பேறின்றி வருந்திய இவர்களுக்குச் சிவனணைஞ்ச பெருமாள் மகனாகப் பிறக்கிறார். சிவனின் ஆணைப்படி வேர்வை பத்திரன் (வீரபத்திரன்) இவ்வாறு வந்து பிறந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. 'பூலோகத்தில் எனக்கேற்ற பெண் துணை ஒன்று வேண்டும்' என்று வேர்வை பத்திரன் சிவனிடம் வேண்ட, தேவலோக அரம்பையருள் ஒருத்தியைச் சின்னணைஞ்சியாக, அரசிவிளத்தோப்பிலிருக்கும் மாடன் - பரமாயி வண்ணாரத் தம்பதியருக்கு மகளாகப் பிறக்குமாறு செய்கிறார் சிவபெருமான். வண்ணார் குலத்தில் அவள் வளர, தென்காசி மன்னன் மாமன் சீவலமாறனின் ஏற்பாட்டின்படி, கல்வி, வீரப்பயிற்சிகள் பெற்றுச் சிவனணைஞ்ச பெருமாளும் வளர்ந்து வருகிறார். இவருக்கு இத்தகு பயிற்சிகள் அளிக்கும் இருளப்பனாசானும் திருக்கூட்டத்தேவர் ஒருவரின் அவதாரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. திருக்குற்றாலத்தில் அம்மையப்ப பிள்ளை - தாயி அம்மையின் அருந்தவத்தால் அவர்களின் மகனாகத் தோன்றியவர் இருளப்பனாசான். இவரிடம் அனைத்துப் பயிற்சிகளும் பயின்று முடித்து வால வயதடைகிறார் சிவனணைஞ்ச பெருமாள்.

இவ்வாறிருக்க, மணிக்காஞ்சியில் (மணியாச்சி) மாடப்பூத் தலைவன் - மந்திரப்பூமாலை என்பவர்களுக்குச் சிவபிரானருளால் கைலை வாசல் காத்து நிற்கும் வன்னியராசன் என்ற தேவதை வன்னியத்தேவனாகப் பிறக்கிறான். இவன் வளர்ந்து வாலிப வயதடைந்து பலவகை வித்தைகளும் கற்றுத் தேர்கிறான். சீவலமாறன் உடையார் என்பவரை மந்திரியாக இருத்தி நல்லாட்சி செய்து வரும்போது, மணிக்காஞ்சி மாடப்பத்தேவன் மகன் வன்னியத்தேவனை வரவழைத்து மந்திரியாக இருத்தவேண்டும் என்று மனதிலெண்ணிய சீவலமாறன் ஓலையனுப்புகிறான். ஓலை கொண்டுசென்ற ஓட்டன் வேட்டைத் தலத்தில் வன்னியத் தேவனைக் கண்டு ஓலை தந்து செய்தி கூற, உடன் புறப்படுகிறான் வன்னியத்தேவன். மந்திரிப் பதவி ஏற்ற வன்னியத்தேவன், மற்றொரு மந்திரியான உடையாரை ஒழித்துக்கட்ட ஏது நோக்கியிருக்கிறான். அரசன் சீவலமாறன் எண்ணைக் காப்பு சாற்றும்போது கழற்றிவைத்த திருவாழியை, யாருமறியாது உடையாரின் உடைவாள் உறைக்குள் போட்டுவிடுகிறான் வன்னியத்தேவன். திருவாழியைக் காணாது மன்னனும், பிறரும் தேடியபொழுது வன்னியத் தேவன், உடையாரின் உடைவாளை உருவி உறையைத் தட்ட, திருவாழி கீழே விழுகிறது. திருட்டுப் பட்டம் கட்டப்பெற்ற உடையார் அவமானத்துக்கு அஞ்சிக் கழுவேறி மாள உறுதி கொள்கிறார். அரசன் மனம் கலங்கி, 'வேண்டாம்' என மறுத்தும் பிறரும், கழுவேற வேண்டாம்' என்று கெஞ்சியும், உடையார் கழுவேறி மாள்கிறார். இதன்பின், வன்னியத் தேவனின் சூழ்ச்சிதான் இது என்று அறிந்த சீவலமாறன், சிவனணைஞ்ச பெருமாள் மந்திரியின்றி இருப்பதால் வன்னியத் தேவனை, 'அங்கு சென்று மந்திரியாகப் பணிபுரிந்துகொள்' என்று அனுப்பி விடுகிறான்.

தனியாக மண்டபமொன்று சமைத்து, மந்திரி வன்னியத்தேவன், இருளப்பனாசானுடன் வீற்றிருக்கும் சிவனணைஞ்ச பெருமாள் ஒருநாள், மந்திரி, ஆசானுடன் மூங்கில் மரச் சோலையில் சிட்டுத் தெறித்து விளையாடிக் கொண்டிருக்கிறார். அப்போது பன்னிரு வயதுப் பருவமடைந்த மங்கையாகத் தெருவழியே வந்துகொண்டிருக்கும் சின்னணைஞ்சியைக் கண்டு, அவள் அழகில் மயங்கிக் காதலுறுகிறார். இருளப்பனாசானிடமும், வன்னியத்தேவனிடமும் அவள் யாரென விசாரிக்கிறார். அவளைத் தன்னுடன் சேர்த்து வைக்க ஆவன செய்ய வேண்டும் என்று ஆசானை வேண்டுகிறார். ஆசானும் சின்னணைஞ்சியைக் கண்டு செய்தியைக் கூற, அவள் 'என்னை வேசியென்று நினைத்தீரோ' என்று வசைமாரி பொழிய, ஆசான் சினமுற்று, 'பின் கட்டாகக் கட்டி உன்னைக் கொண்டுபோவது உறுதி' என்று வஞ்சினம் கூறிப் புறப்படுகிறார். நடந்த செய்திகளைச் சிவனணைஞ்சவரிடம் கூறி, மலைநாடு சென்று வசியமருந்து வாங்கி வந்து, சின்னணைஞ்சியை மயக்கி வசப்படுத்த வேண்டும் என்று

ஆலோசனை வழங்குகிறார். பின் தானே வசியமருந்து பெற்றுவர மலைநாடு செல்கிறார். வசியமருந்து பெற்று வந்து, சிவனணைஞ்ச பெருமாளிடம் தர, அவர் வசியமருந்தை வெற்றிலையில் தடவிச் சிறுக்கனிடம் கொடுத்து, சின்னணைஞ்சியிடம் தருமாறு அனுப்புகிறார். சிறுக்கனும் தந்திரமாக வெற்றிலையைச் சின்னணைஞ்சியிடம் தந்து தின்னச் செய்து, மயங்கிய நிலையில் அவளை மண்டபத்துக்கு அழைத்து வந்து விடுகிறான். இச்செயல்களெல்லாம் சீவலமாறன் அறியும் முன்னர், 'தென்காசிவிட்டுப் பரதேசம் போகிறேன்' என்று கூறிய ஆயானைத் தடுத்துத் தைரியம் சொல்லிய சிவனணைஞ்சவர், சின்னணைஞ்சியை மருவி, மனைவிபோல் வைத்து வாழ்கிறார்.

மகளைக் காணவில்லை என்று மாடன் வண்ணான் அனைத்து இடங்களிலும் தேடி,இறுதியில் மன்னன் சீவலமாறனிடம் முறையிடுகிறான். சீவலமாறன் தன் சேவகர்களிடம் தேடிக் கண்டுபிடிக்குமாறு கடுமையான ஆணை பிறப்பிக்க, அவர்களும் தேடிச் சிவனணைஞ்ச பெருமாளின் மண்டபத்தில் சின்னணைஞ்சி உள்ளதை அறிந்து சொல்கின்றனர். சீவலமாறன் முதலில் தன் மந்திரியையும் பின்னர் சிவனணைஞ்ச பெருமாளின் தாயும், தன் தங்கையுமான பொன்னுருவியையும் அனுப்பிப் புத்தி கூறியும், 'சின்னணைஞ்சியை விடமுடியாது' என உறுதியாக மறுத்த சிவனணைஞ்ச பெருமாளின் மீது கடுங்கோபமுற்று, அவரைப் பிடிக்கப் படையை அனுப்புகிறார். சிவனணைஞ்ச பெருமாளின் மந்திரி வன்னியத்தேவன், அரசன் சீவலமாறனின் உப்புத் தின்றவன் ஆதலால், 'அவரை எதிர்த்துப் போர்புரியலாகாது' என்று தானே குத்திக்கொண்டு இறக்கிறான். போரில் இருளப்பனாசானும் மடிகிறார். பகைவரால் பிடிக்கப்பட்டுக் கற்புக் கெட்டு நிற்பதைவிடத் தன் உயிரைப் போக்கிக் கொள்வதே உசிதம் என்று எண்ணிய சின்னணைஞ்சி, சிவனணைஞ்சவரிடம் தன் கழுத்தை அறுத்துவிடுமாறு கூற அவரும், அவ்வாறே செய்து தானும், கத்தியால் குத்திக்கொண்டு மரணமடைகிறார்.

மரணமுற்று இருவரும் சிவலோகம் சென்று சிவபிரான் மூலமாகத் தங்கள் பிறவிப் பேற்றை உணர்கின்றனர். இவர்கள் இருவரையும் அவுணரை அழிக்கச் சிவபெருமான் அனுப்புகிறார். அவுணரைத் தந்திரத்தால் வென்று முடித்த இவர்களைத் தன் திருத்துடையில் வைத்துப் பெருமைப்படுத்துகிறார் சிவபிரான். பின்னர் 'பூலோகம் சென்று தெய்வமாகி இருப்பீர்களாக' என்று வரம் கொடுத்து அனுப்புகிறார். அவர்களும் அவ்வாறே பூமியில் வந்து தெய்வங்களாகப் பூசையுண்டு வீற்றிருக்கின்றனர்.

## காலத்தால் பிந்தைய பிரதி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடியியல் புலத்தில் இருக்கும் 376- சிவனணைஞ்ச பெருமாள் கதை என்ற இச்சுவடி மிகவும் சிதலமான

நிலையில் காணப்படுகின்றது. எழுத்து வடிவச் சிக்கல்களால் பழமையானது எனக் கொள்ள வாய்ப்புள்ளதெனினும், கதையமைப்பால் பிற்காலத்தது எனக் கருத இடமுள்ளது. ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் உள்ள 46-47- சிவனணைஞ்ச பெருமாள் கதை என்ற சுவடியின் கதையமைப்பு, இயல்பாக, நடக்கின்ற நிகழ்ச்சிகளை எளிமையாகச் சொல்லியிருக்க, பிறப்பிலும், இறப்பின் பின்னும் என்று அமையும் நிகழ்ச்சிகளில் புராணப் போக்குகளைக் கைக்கொண்டிருப் பதால் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி காலத்தால் பிற்பட்டது எனக் கணிக்க முடிகின்றது. காரணம், கதை எழுதப்பட்ட காலத்தில் தன்னளவில் இயல்பானதாக இருந்து, பலகாலங்களில், பலரால் பல இடங்களில் படி எடுக்கப்படும்பொழுது இறைமைக் கூறுகளையும், புராணப் போக்குகளையும் கதையின் முன்பின் நிகழ்ச்சிகளில் இணைத்துவிடுதல் உண்டு என்பதைக் காத்தவராயன் கதையைப் பதிப்பித்த டாக்டர் நா.வானமாமலை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார். காத்தவராயன் பிறப்பால் பறையனாயிருக்க, அவன் முற்பிறப்பில் தேவனாயிருந்து சிவனின் ஆணைப்படி மனிதனாகப் பிறந்தான் என்றும், தேவனான காத்தவராயன் இவ்வுலகப்பிறப்பிலும் மனுதர்மம் மாறாமல் ஆரியமாலை என்ற பிராமணப் பெண்ணை மணந்தான் என்றும் உள்ள அமைப்புகள் பிற்சேர்க்கை என்கிறார். 'பறையன் பிராமணப் பெண்ணை மணந்து நாடுவிட்டு நாடு போய் வாழ்ந்துவிட்ட உதாரணம் பரவி விட்டால் சாதி முறை குலைந்துபோகும், சாதி அமைப்பை அடிப் படையாகக் கொண்ட நிலவுடைமை முறையும் சீர்குலைந்து போகும். இதனைத் தடுக்கவே பிற்காலத்தில் மேல்சாதியினர் கதையின் ஆற்றலைப் போக்கச் சில மாறுதல்கள் செய்தனர். அதில் ஒன்றுதான் கைலை வாசமும், சாபமும். அவன் தேவனாயிருந்து சாபத்தால் மனுதர்மத்திற்கு விரோதமான மணத்தைப் புரிந்தான். மனிதனாகிச் செய்திருக்க மாட்டான். கதைப்பாடலின் பிற்சேர்க்கையின் நோக்கமே இதுதான் என்கிறார் டாக்டர் நா.வானமாமலை. நாட்டுப்புற மக்களின் கதைப்பாடல்களுடன் அவற்றிற்கு முரணான பிற்சேர்க்கைகளையும், இடைச்செருகல்களையும் பின்னர் இணைத்திருக்கின்றனர். ஆராய்ச்சியாளர்கள் அவற்றை அடையாளம் காணவேண்டும் என்றும் கூறுகிறார்.[20]

இவ்வாறு காத்தவராயன் கதையில் கீழ்ச்சாதி ஆண்மகன் உயர் சாதிப் பெண்மீது காதல் கொண்ட விதத்தில் கதைத் தலைவன், கதைத் தலைவி இருவரும் முன்பு தேவனாகவும், தெய்வ மங்கையாகவும் இருந்தவர்கள் என்று புராணப்போக்கில் கதையில் பிற்சேர்க்கை அமைந்துள்ளது. இதுபோன்று, இந்தச் சிவனணைஞ்ச பெருமாள் கதையிலும் சிவனணைஞ்ச பெருமாள் தக்கனை வென்ற வேர்வை பத்திரன் (வீரபத்திரன்) என்றும், சின்னணைஞ்சி தெய்வலோக அரம்பை என்றும் (839 - 850) புராணப் போக்கில் முற்பிறவிக் கதை இணைக்கப்

---

20. காத்தவராயன் கதைப்பாடல், Op.cit. பக்.1 - 6

பட்டுள்ளது. காதல், சாதி உயர்வு, தாழ்வு பாராமல் வருவது' என்ற நடப்பியல் உண்மை மறைக்கப்பட்டு, 'சாதி உயர்வு, தாழ்வு அகற்றப்பட இதுபோன்ற காதல் திருமணங்கள் தக்க வழி வகுப்பவை' என்றுணர்த்தும் கதையின் சமூகச் சீர்திருத்த ஆற்றலும் அழிக்கப்பட்டு, நாடாளும் பரம்பரையில் வந்த ஒருவன், தீண்டத்தகாத வண்ணார்குலப் பெண்ணை விரும்பியதற்குக் காரணம், முற்பிறவியில் அவர்கள் இருவரும் தெய்வப்பிறவிகளாக இருந்தவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் இணைக்கப்பட்டுள்ள இச்சேர்க்கை பிற்காலத்தது என்பது உறுதிப்படுகின்றது. இவர்கள் தெய்வப் பிறவிகள் என்ற கருத்து கதையின் வெவ்வேறு இடங்களிலும் ஆங்காங்கு சுட்டப் பெற்று வலிமைப்படுத்தப்பட்டும் உள்ளது. அத்தகு இடங்களாக,

"மனுவாகப் போயழிந்து வருவதற்கு என்கூட
வேணுமொரு கன்னியென்று விளம்பிடவே பத்திரனும்
அருகே நின்ற வரம்பையரில் அழகாயொருத்தி தனையழைத்து
தென்காசி சேந்திருக்கும் சிறந்தரசி விளத்தோப்பில்
வண்ணார்குல மானதிலே மங்கைபர மாயியர்க்கு
பிள்ளையதாய் நீபிறந்து பெருவாழ்வு தான்வாழ்ந்து
பத்திரனும் நீயுமதாய்ப் பாருலகில் மோகமுத்து
ஈரெட்டு வயதானதில் இருபேருந் தானிறந்து
வரவேணு மென்றுசொல்லி மகாதேவர் தானனுப்பி"

(1576 - 1584)

என்றும்,

"முன்னா லெனக்குப் பிரமன் விதித்த விதியை
மோசமென்று சொல்லித் தள்ளிட ஒங்களா லாமோ"

(2132 - 2133)

என்றுமுள்ளவற்றைக் குறிப்பிடலாம்.

'வேர்வைபத்திரன் எனப்படும் வீரபத்திரன், தக்கன் யாகத்தில் பல உயிர்களைக் கொன்றதால், அப்பாவம் தீரப் பூலோகம் சென்று மக்களின் அழுக்குத் துணிகளை வெளுக்கும் வண்ணானாகத் தொழில் செய்ய வேண்டும்' என்று சிவன் சாபம் தந்ததாகப் புராணக்கதை உள்ளது. வீரபத்திரனின் வாரிசுகள் வண்ணார்கள் என்ற இப்புராணக் கதையை அடியொற்றியே வண்ணார்களுள் பெரும்பான்மையினர் வீரபத்திரன் என்று பெயர் சூட்டிக் கொள்வது உண்டு என்றும் தெரிகின்றது. (Castes and Tribes of Southern India, p.315 - 316) ஆக வீரபத்திரத் தெய்வம் வண்ணானாகப் பிறந்தவன் ஆதலின், அவன் வண்ணார் குலப் பெண்ணை விரும்பினான் என்று கூறப்பட்டு, சாதி மீறாமலேயே அவன் காதல் நிகழ்ந்தது என்று புராணக் காரணம் காட்டி, உண்மையிலேயே சாதி கடந்த இக்காதலுக்குச் சமாதி கட்டப்

பட்டுள்ளது. இக்கதைப் பாடலில் இவ்வாறு கதைத்தலைவன் - கதைத் தலைவி பாத்திரப் பிறப்பில் மட்டுமல்லாது, பிற பாத்திரப் பிறப்புகளிலும் புராணப் போக்குகள் மலிந்துள்ளன.

கதைத்தலைவன் சிவனணைஞ்ச பெருமாளின் ஆசான் இருளப்பன் திருக்கூட்டத் தேவரில் ஒருவர் என்று இவரும் தெய்வப் பிறவி எனக் குறிக்கப்பட்டுள்ளது (1309 - 1320).

முதலில் சீவலமாறனின் மந்திரியாகவும்; பின்னர் சிவனணைஞ்ச பெருமாளின் மந்திரியாகவும் பணிபுரிந்த மணிக்காஞ்சி நாட்டு வன்னியத் தேவன் கைலை வாசலைக் காவல் செய்யும் வன்னியராசன் என்ற தேவதையின் பிறப்பு என்று கூறப்பட்டுள்ளது.

"கணக்கதிலே யில்லாவிட்டால் கைலைவட வாசலிலே
வணக்கமுடன் காத்துநிற்கும் வன்னிய ராசனையும்
இணக்கமுடன் பிறவிசெய்து ஏந்திழைக்குக் குழந்தையதாய்
கொடுமெனவே சிவனார் சொல்லக் குழந்தையதாய்ச்
செனிப்பதற்குப்
பிரமாவைத் தான்வருத்திப் பிள்ளையதாய்ச் செனிக்கச் சொல்லி"
(1379 - 1383)

என உள்ளது.

கதைத் தலைவன், கதைத்தலைவி இறப்பின் பின்னர் உள்ள நிகழ்ச்சிகள் முழுக்கவுமே புராணக்கதை போன்று, தெய்வலோகத்தில் நடக்கும் காட்சிகளாகவே உள்ளன. சிவனைக் காணுதல், சிவபிரான் இவர்களின் முற்பிறவிப் பெருமையை உணர்த்துதல், 'வீரபத்திரனாயிருந்த தக்கனை வென்றது போன்று அவுணரை அழிக்கச் செல்வீர்களாக' என்று சிவனணைஞ்சவர் - சின்னணைஞ்சியைச் சிவபிரான் ஏவுதல், அவர்களிருவரும் அவ்வாறே சென்று தந்திரங்கள் செய்து அவுணரை அழித்து மீளுதல், பின் அனைவரும் உமையாள் விருப்பப்படி கயிலையில் நடனக்காட்சி கண்டு மகிழ்தல், சிவன் வரங்கள் அருளுதல், வரங்கள் பெற்றுப் பூலோகம் மீளும் வழியில் மலைவளம் காணுதல், பூலோகம் மீண்டு தெய்வமாகிப் பூசையுண்டு இருத்தல் என்று அமைந்துள்ள அனைத்தும் புராண நிகழ்ச்சிகள் கொண்ட புராணக்கதை போன்றே அமைக்கப்பட்டுள்ளன. புராணப் போக்குகள் மலிந்த இப்பிரதி பிற்காலத்தது என்பதை இவை அகச்சான்றுகளாகி விளக்கி நிற்கின்றன. இத்தகு புராணப் போக்குகள் எதுவும் இல்லாது, நடப்பியல் உண்மைகளுடன் படைக்கப்பட்டுள்ள 46 - 47 - சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பிரதி முந்தையது என்பது தெளிவுபடுகின்றது.

## இக்கதைப்பிரதியில் காணப்படும் சிறப்புச் செய்திகள்

46 - 47 சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பிரதியை விட, இது காலத்தால் பிந்தைய சுவடி என்றாலும் முன்னதில் இல்லாத சில சிறப்புச் செய்திகளை இப்பிரதியில் காணமுடிகின்றது. இவை மூலக்கதை மீட்டுருவாக்கத்திற்குப் பெரிதும் பயன்படும் என்ற நோக்கில் அத்தகு குறிப்புகள் குறித்த விளக்கங்கள் கீழே தரப்படுகின்றன.

### கதைத்தலைவன் - கதைத்தலைவியின் குலம்

46 - 47 - சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பிரதியில் கதைத்தலைவன் சிவனணைஞ்ச பெருமாள் வலங்கைக் குலத்தில் உதித்தவன் என்ற குறிப்பு உள்ளது என்பது முன்னரே சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. இப்பிரதியில் சிவனணைஞ்ச பெருமாள் எக்குலத்தில் உதித்தவன் என்ற குறிப்பு எவ்விடத்திலும் சுட்டப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நாடாண்ட மன்னர் பரம்பரையில் வந்தவன் என்ற அளவில் மட்டுமே சுட்டப் பெற்றுள்ளது. அரச பரம்பரையில் வந்தவன் அழுக்கெடுக்கும் வண்ணார் குலப்பெண்ணை விரும்பிக் காதல் கொண்டான் என்ற நிலையில் மட்டுமே இப்பிரதியில் செய்திகள் இடம் பெற்றுள்ளன. வண்ணார் குலத்தவர் கீழ்க்குலத்தோராகவும் தீண்டத் தகாதவர்களாகவும் கருதப்பட்டமைக்கு முன்பிரதியில் ((46 - 47 - சிவனணைஞ்ச பெருமாள் கதை) பல இடங்களில் அகச்சான்று கிடைக்கிறது.[21] இப்பிரதியிலும் சில இடங்களில்,

"தொண்டு செய்யும் வண்ணார்குலம்" (1569)

"தீண்டாத சாதியென்று மதிக்கவொண்ணா தென்று" (1801)

என்று உள்ள குறிப்புகளால் வண்ணார் குலத்தவரின் தாழ்நிலை வெளிக்காட்டப்பெற்றுள்ளது. எனவே சாதி உயர்வு, தாழ்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமூக மதிப்பு ஆகியவற்றைக் கடந்த நிலையில் இவர்களின் காதல் திகழ்ந்தது என்பது இப்பிரதியில் கூர்மைப் படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

---

21. "தாராள மாகிய சின்ன ணைஞ்சிதான்
தாழ்ந்த குலத்தில் பிறக்க விதியோ" (1821 - 1822)

"மெத்தப் படித்தாலும் சுத்தமில்லாச் சாதிநாங்கள்" (1873)
"தீண்டாத சாதியல்லோ ஆண்டவரே நானும்" (2281)
"தீண்டாத சாதியைத் தீண்டினாரென்று சிரிப்பார்" (2753)

## தென்காசி மன்னவர் யார்?

கதைத்தலைவன் சிவனணைஞ்ச பெருமாளின் தந்தை செண்பகராசன், மாமன் சீவலமாறன் என்ற இருவருமே தென்காசி மன்னவர்கள் என்று இப்பிரதி குறிப்பிடுகின்றது.

"செண்மையுள்ள தென்காசி யாண்டிருந்த மன்னன்
தேவியென வந்துதித்த பொன்னுருவித் தாயார்" (88 - 89)

என்று செண்பகராசன் தென்காசி மன்னவன் என்றும்,

"ஆண்டரச னானகுல தென்காசி மன்னன்
ஆண்டிருந்தார் சீர்வலம ராசனென வேதான்" (8 - 9)

என்று சீவலமாறன் தென்காசி மன்னவன் என்றும் உள்ள குறிப்புகள், காணக்கிடைக்கின்றன. இவர்கள் இருவரும் ஒரே காலகட்டத்தில் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு இருவேறு பகுதிகளை ஆண்டனரா என்பதில் கதைப்பாடல் தெளிவு காட்டவில்லை. ஐவர் ராசாக்கள் கதையைப் பதிப்பித்த டாக்டர் நா.வானமாமலை அவர்களும் இவ்வாறே, "ஐவர் ராசாக்கள் ஐவரும் பல தலைநகர்களிலிருந்து ஐந்து பகுதிகளாக நாட்டைப் பிரிவு செய்துகொண்டு ஆண்டனரா என்பது நமக்குப் புரியாத புதிராக உள்ளது,[22] என்று குறிப்பிடுவதும் ஈண்டு ஒப்பு நோக்கற்குரியது. கதையில் சிவனணைஞ்ச பெருமாளின் பிறப்பின் பின்னர் அவனின் தந்தையான செண்பகராசனின் செல்வாக்கு குன்றிக் காணப்படுகின்றது. சிவனணைஞ்ச பெருமாளுக்குக் கல்வி, ஆயுதப் பயிற்சிகள் அளிக்கத்தக்க ஆசானை ஏற்பாடு செய்யவேண்டும் என்று செண்பராசன் சீவலமாறனிடம் கேட்க,[23] சீவலமாறன் 'இருளப்பனாயானே தகுதியானவர்' என்று அவரை வரவழைத்துப் பயிற்சிகள் அளிக்க ஏற்பாடு செய்வதாகவும்,[24] இறுதியாக ஆசானுக்குத் தக்க சன்மானங்கள் அளித்து அனுப்பி வைப்பதாகவும் குறிக்கப்

---

22. ஐவர் ராசாக்கள் கதை, பக்.14.
23. "மகிழ்ந்தவர் சீவலமார்பன் மன்னவ னுடனே
மன்னவன் செண்பக ராசனு மேதுசொல் வானாம்
புகழ்ந்திடவே யந்தப் பொன்னணைஞ்ச பெருமாளுக்கு
புத்தியுடனே பலகல்வி வருத்தவேணு மென்றார்" (1288 - 1291)
24. "கருத்தாக செண்பராசனுஞ் சொன்ன பொழுது
காவலன் சீவல மாறனுஞ் சொல்வார்
அண்ணாவி யென்றுநாட்டி லநேகம் பேருண்டு
அறிவுக் கிருளப்ப னாசனைப்போல் காணாது
பண்ணான கல்வி பலதும் வருத்திக் கொடுக்க
பண்பா யிருளப்பனாசான் வரவேணு மென்றார்" (1333 - 1338)

பெற்றுள்ளது.[25] இவற்றைச் 'சிவனணைஞ்ச பெருமாளின் மாமன்' என்ற உரிமையில் செய்தானா? 'நாட்டு மன்னவன்' என்ற அதிகாரத்தில் சாதித்தானா என்பது கேள்விக்குறியே ஆயினும், செண்பகராசனுக்கு இவ்வதிகாரம் அப்போது இல்லை என்பது இக்கதைப் பிரதி காட்டும் வெளிப்படைச் செய்தியாகும். சிவனணைஞ்சவர் வாலிப வயதடைந்ததும் அவருக்குத் தனிமண்டபம் அமைத்துக் கொடுத்துத் தனி மந்திரியும் வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்பவரும் சீவலமாறனாகவே உள்ளார்.

"தயவுள்ள சிவனணைஞ்ச பெருமாள் ராசனுக்கு
தனித்தொரு மண்டபஞ் செய்து முகித்தார் தலைவர்
சிங்கார மண்டபம் பால்காச்சிக் குடியேறி" (1560 - 1562)

என்றும்,

"மருமகனிளவல் மந்திரியில் லாதிருக்க வையகந் தன்னில்
முறைமையில்லை யென்று சொல்லி
வன்னியத் தேவனை மந்திரியாக அனுப்பி
மருமகனார்க்கு நீட்டு கொடுத்து விட்டாரே"
(1554 - 1557)

என்றும், கதைப்பாடல் வரிகள் காணப்படுகின்றன. சிவனணைஞ்சவர் வண்ணார்குலப் பெண்ணை விரும்பித் தவறு செய்தபோது அவருக்குத் தக்க தண்டனை வழங்கித் தீர்ப்புக் கூறுபவர் சீவலமாறனாக இருக்கிறார். தென்காசி மன்னவன் என்ற முழு அதிகாரமும் மிகக் கொண்ட சீவலமாறனைக் கதையின் தொடக்க முதல் இறுதி வரை சீராகக் காட்டுகிறது இப்பிரதி.

## சிவனணைஞ்சவரின் காதல் வலிமை

இப்பிரதியில் சிவனணைஞ்சவரின் காதல் வலிமையைக் கூர்மைப் படுத்திக் காட்டும் குறிப்புகள் ஆங்காங்கு சுட்டப்பட்டுள்ளன. இவரது மாமனும், தென்காசி மன்னவனுமான சீவலமாறனுக்கு ஒற்றைக்கொரு மகள் உண்டு என்பதும், அவள் சிவனணைஞ்சவருக்காகவே வளர்ந்தாள் என்பதும், இத்திருமணம் உறுதியாக நடந்துவிடும் என்று சீவலமாறன் மனமகிழ்வுடன் இருந்ததாகவும், சிவனணைஞ்சவரின் தாயான பொன்னுருவி, தன் அண்ணன் சீவலமாறனின் மகளைத் தன் மகன் சிவனணைஞ்சவருக்குப் பெண் கேட்டு ஆளனுப்ப, திருமணம்

---

25. "காவலன் வல்ல சீவலமார்பன் மகிழ்ந்து
கைமுழுகிட்ட இருளப்பனாசான் தனக்கு
ஆவலுட னெல்லோரும் வெகுமானஞ் செய்ய
அன்பா யிருளப்ப னாயானும் வாங்கியே போனார்" (1357 - 1360)

செய்துகொள்ளச் சீவலமாறனும் உடன்பட்டு விட்டதாகவும், இத் திருமணத்தின் பின்னர், தென்காசி மன்னவனாகும் வாய்ப்பு சிவனணைஞ்சவருக்கு அமையும் என்பதுமான தெளிவான குறிப்புகளை இப்பிரதி காட்டுகின்றது.[26] இத்தகு நல்வாய்ப்பு அமைந்திருந்தும், 'தன் மாமன் மகளை மணந்தால் அரசுரிமை தனக்குத்தான்' என்ற நிலை இருந்தபோதிலும், அரசுரிமைக்காகத் தன் காதலை விட்டு விடாத சிவனணைஞ்சவரின் மன உறுதியை இப்பிரதி தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. "மோகமாய்த் தொட்ட சின்னணைஞ்சியைக் கை விடவேண்டாம். ஆனால் அரசுரிமைக்காக முறையாக மாமன் மகளைத் திருமணம் செய்துகொள். நிச்சயம் பேசி முடிக்க வந்து சேர்வாயாக"[27] என்று தாய் பொன்னுருவி கெஞ்சி அழைத்தபோதும், சிவனணைஞ்சவர் செல்லவில்லை. ஆசைக்கு ஒருத்தி, ஆஸ்திக்கு ஒருத்தி என்ற இந்நிலை அக்காலகட்டச் சமுதாயத்தில் ஒரு வழக்கமாகவே திகழ்ந்து வந்தது என்றாலும், இத்தகு இரட்டை வாழ்க்கையை எல்லா மட்ட நிலையிலுள்ளவர்களும் வாழ்ந்துதான் வந்தார்கள் என்றாலும், இதனை ஒரு குற்றமாகக் கருதாமல் சமுதாயம் இதனை அங்கீகரித்தே வந்தது என்றாலும், இத்தகு நிலைகள் தவறானவை என்பதை உலகினுக்கு உணர்த்தவந்த ஒரு மாமணிபோல் சிவனணைஞ்சவர் திகழ்ந்தமையை இக்கதைப்பிரதி விளக்குமுற எடுத்துக் காட்டுகின்றது. தன் வாழ்வில், தான் காதல் கொண்ட ஒரு பெண்ணுக்கு மட்டுமே இடம் உண்டு என்பதை இறுதிவரை நிலைநிறுத்திக் காட்டிய சமுதாயப்புரட்சி வீரனாகச் சிவனணைஞ்சவர் திகழ்கிறார். பிறசாதிப் பெண்ணை, அதிலும் தீண்டத்தகாத சாதிப் பெண்ணை விரும்பிச் சாதிச் சட்டதிட்டங்களைக் குலைப்பவர்களுக்கு மரண தண்டனை[28] என்ற நிலை நிலவிய காலகட்டச் சமுதாயத்தில் தோன்றிய சிவனணைஞ்சவர்

---

26. "விவாகஞ் செய்ய வேணுமென்று நினைத்து உனக்கு
மாமன் மகளை வளர்த்துப் பிராயம தாக்கி
சந்தோசமாகக் கல்யாணம் பண்ணிட வென்று
தமையனாரிடம் ஆள்சொல்லி விட்டதின் பின்னே
ஆகட்டெனவே சம்மதப்பட்டு இருக்க" (2116 - 2119)

"விபாக முடித்திட வேணுமென்றே யவர் (சீவலமாறன்)
மெத்த மனது சந்தோசமாக யிருக்கு" (2102 - 2103)

"மேதினியில் காசினி யாண்டிடும் படிக்காக
கன்னிக் கலியாணம் செய்து அரசாள வேணும்" (2141 - 2142)

27. "மோகமாய்த் தொட்டதைக் களைந்திட வேண்டா மகனே
மேதினியில் காசினி யாண்டிடும் படிக்காக
கன்னிக் கலியாணம் செய்து அரசாள வேணும்
காரியம் பேசவே வாவென்று சொல்லிப் போனார்" (2140-2143)

28. "வண்ணார் குலந் தொட்டுநீ
மாண்டங் கிறந்தா லெனக்கு மகனாரு" (2127 - 2128)

இந்நிலைகளெல்லாம் தெரிந்தே காதல் கொண்டு (1980-1994) காதலுக்காகவே இறுதியில் மரணத்தைத் தழுவிய தீரம் போற்றற்குரியது. 'வாழ்ந்தால் தான் விரும்பும் சின்னணைஞ்சியுடன் தான் வாழ்க்கை; இல்லையெனில் துறவறம்'[29] என்று கூறிய இவரின் காதல் உறுதியே கதைச்சிக்கலின் முக்கிய முடிச்சாகி, இறுதியில் மரணமுடிச்சாகவும் ஆகிறது. காதல் உறுதியுடன் வாழ்ந்து, காதலுக்காக உயிர் துறந்து கதைப்பாடலில் வாழ்கிறார்; தெய்வமாக வணங்கவும் படுகிறார்.

சிவனணைஞ்சவர், சீவலமாறன் அனுப்பிய படையுடன் போர் புரிந்து, இறுதியில் படையினரால் பிடிக்கப்படும் நிலை வந்துற்றபோது, அவர்களிடமிருந்து தப்பிக்கத் தனக்குத் தானே குத்திக்கொண்டு மரணத்தைத் தழுவியதாக இப்பிரதி கூறுகிறது.[30] (2188-2241) 46 - 47 சிவனணைஞ்சவர் கதைப்பிரதி, சிவனணைஞ்சவர் சீவலமாறனின் படையினரால் பிடிக்கப்பட்டு, அரசாணைப்படி மழுவால் வெட்டிக் கொல்லப்பட்டதாகக் கூறுகிறது (2898 - 3036). இவரது மரணம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதில் இருபிரதிகளும் கருத்து வேறுபட்டாலும், சிவனணைஞ்சவர் இறுதியில் காதலுக்காக மரணமடைந்தார் என்பதில் வேறுபாடு காட்டவில்லை.

"நாடாளும் மன்னனான மாமனின் மகளை வண்ணார்குலப் பெண்ணுக்கு வேலைக்காரியாக ஆக்குகிறேன் பார்"[31] என்று தீரத்துடன் போர் புரிந்த சிவனணைஞ்சவரின் வீரம், பேரரசனின் பெரும் படையுடன் மோத இயலாத சிற்றரசனின் சிறிய படையாதலின், தோல்வியைத் தழுவுகிறது. சமூகக் கதைப்பாடல் தலைவர்கள் வரிசையில் தான் கொண்ட காதலுக்காகப் போர்புரிந்த முதல் கதைத்தலைவனாகச் சிவனணைஞ்சவரைச் சந்திக்கிறோம். இவர் காதலுக்காகச் செய்த போரில் தோல்வியைத் தழுவினாலும், காதலில் முழு வெற்றி பெற்றவராக ஆகிறார்.

## சின்னணைஞ்சியின் காதல் உறுதி

முன் பிரதி போன்றே இப்பிரதியிலும் சின்னணைஞ்சி பேரழகும், பெருங்குணங்களும் பெண்டிருக்கே உரிய பல நற்குணங்களும் கொண்டவளாகக் குறிக்கப்பட்டுள்ளாள்.

---

29. "மாலணஞ்சி யோடேநீ வாழாம லென்னை மறித்தால்
வால சன்னாசியைப் போலவே போவேன்" (2134 - 2135)

30. "கொண்ட கோலத்துடன் தன்னுட நெஞ்சில்
குத்தினார் குமரப்பன் சமுதாடு கொண்டு"(2240 - 2241)

31. "வண்ணார் பெண்ணுக்குச் சீதனம் வெள்ளாட்டி
மாமன் மகளைக் கொண்டு வருகிறேன் பாரு"(2194 - 2195)

"வஞ்சிக்கொடி யிடையழகும் மையிட்ட கண்ணழகும்
கொஞ்சும்சிமிழ் மூக்கழகும் கோரிமுடிந்த தலைமுடியும்
குளுந்தமுல்லை யிருவாச்சிபிச்சி கொண்டையில்பூச் சூடிக்கொண்டு
பட்டழகு மொப்பினையும் பார்த்தவர்க்கு மையல்கொள்ளும்
குழந்தைகள்போல் சொல்லழகும் கோவில்சிலை போலழகும்
ஒப்பனையும் உடலழகும் ஒருபாகந் தலைமுடியும்
செந்தூரம் பொட்டுமிட்டுத் திருநீறுந் தான்பூசி
கெண்ணிதமாய்ச் சின்னணைஞ்சி கீழ்மாறிப் பார்த்தகண்ணும்
சின்னணைஞ்சி வண்ணாத்தி தேவரம்பை போலவேதான்"
(1631 - 1639)

என்று சின்னணைஞ்சியின் ஒப்பற்ற பேரழகு விவரிக்கப்பட்டுள்ளது.

"கட்டுத்தறி தன்னைவிட்டுக் கடராத ஆவினம்போல்
மட்டுத்தப்பிப் போகறியாள் வாழ்மயிலாள் சின்னணைஞ்சி
தனித்துவழி நடக்கறியாள் தங்கூரில் போகறியாள்
இனத்தில் வண்ணார் தன்னோடே யிருந்துவிளை யாடறியாள்
வஞ்சகங்கள் சொல்லறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்
தப்பாகச் சொல்வாரோடே சரசம்விளை யாடறியாள்"
(1654 - 1659)

என்றும்,

"ஊரிலுள்ள பேர்கள்முன்னே ஒழுங்குதப்பி நடக்கறியாள்
பேருசொல்லி விளித்தாலும் பெருவழியில் நிக்கறியாள்
இரக்கமில்லாக் கசடருட னெதுத்துமொழி பேசறியாள்
மூக்கரைப்போ லேமுழிக்கும் முகடர் கண்ணில் முழிக்கறியாள்
வாக்கிடறா வார்த்தைசொல்லி வண்டரிடம் ஒறவாடாள்"
(1661 - 1665)

என்றும் சின்னணைஞ்சி கொண்டிருந்த சிறந்த பண்புகள் விவரிக்கப் பட்டுள்ளன.

சிவனணைஞ்சவரின் விருப்பத்தைக் கூறி அவரது ஆசைக்கு இணங்குமாறு வற்புறுத்திய இருளப்பனாசானிடம் சின்னணைஞ்சி சினந்து கூறும் வார்த்தைகள், 'கீழ்க்குலப் பெண்தானே' என்று இளக் காரமாக எண்ணி நெருங்கும் ஆடவர் அனைவருக்கும் விழும் சாட்டை யடிகளாக அமைந்துள்ளன.

"வேசியென்றா நீநினைத்து யிங்குவந்தா யிப்பம்
வெடுவெடெனச் சின்னணைஞ்சி வேகமதாய்ச் சொல்வாள்
தொட்டுப் போட்டுப் பின்புதள்ளி விட்டிடுவா னானால்
சோலிவேண்டாம் வேசைகளைத் தாலிகட்டச் சொல்லு

மட்டுத்தப்பி யென்னைவந்து பெண்பிடிப்பா னானால்
வாழ்விழந்து ஓங்களுயிர் மாளுவது திட்டம்
நந்நி கெட்ட ஆணெனவே கெஞ்சிடுவா னானால்
நஞ்சிதின்று சாகச் சொல்லு . . . .
பத்திரமா யென்னைவந்து பிடித்திடுவா னானால்
பல்லுபறி போமெனவே மெள்ளச் சொல்லு" (1870 - 1879)

என உள்ளது. தவறான ஆசைக்குப் பலியாகாத முனைப்பும், 'உயர்குலத்தவராயிற்றே, தன் உயிருக்கே உலை வைப்பரே' என்று எண்ணி அஞ்சி ஒடுங்காத தீரமும் இவள் வார்த்தைகளில் தெறித்து விழக் காண்கிறோம்.

முன்பிரதி (376 - சிவனணைஞ்சபெருமாள் கதை) சின்னணைஞ்சியைத் திருமணமாகிக் கணவனுடன் வாழ்க்கை நடத்துபவளாகக் காட்டித் திருமணமான சின்னணைஞ்சியையே சிவனணைஞ்சவர் விரும்பியதாகக் கூறியிருக்க, இப்பிரதியோ கன்னி கழியாத இள மங்கையான சின்னணைஞ்சியையே சிவனணைஞ்சவர் விரும்பியதாகக் கூறியுள்ளது. சின்னணைஞ்சிக்குத் திருமணம் நடத்த நிச்சயம் செய்யப்பட்டிருந்தது என்ற குறிப்பும் கிடைக்கிறது ("கட்டுடனே நிச்சயித்த கனமக்கா" -2078) பன்னிரு வயதில் பக்குவமடைந்து திரட்டுக்கலியாணம் செய்யப் பெற்று, ஆபரணங்கள் அனைத்தும் பூண்டு அணிகலனே அணிகலன்கள் சுமந்து நடந்துவரும் பாவனையில் சின்னணைஞ்சி வரும்பொழுதுதான், சிவனணைஞ்சவர் கண்டு காதல் கொண்டதாக இப்பிரதி விவரிக்கின்றது (1595 - 1683). முன்பிரதி போன்றே இப்பிரதியும் சின்னணைஞ்சியின் பேரழகே சிவனணைஞ்சவரை மயக்கியது என்று தெரிவிக்கின்றது. அணிகலன் பூண்டுவந்த அவளது அழகை வியந்து பேசும் சிவனணைஞ்சவரின் வார்த்தைகள் இதை மெய்ப்பிக்கின்றன (1697 - 1737).

"உச்சிப் பிறையுட அழகதைக் கண்டாக்கால்
உலகம் விலைகொள்ளு மென்று சொல்லலாம்" (1695 - 1696)

என்றும்,

"கட்டுவம் பீலி கண்டதே உண்டானால்
காம மோகத்தை யாருங் கருதுவார்" (1717 - 1718)

என்றும்,

"கைவிரல்பத்து மோதிரமும் பார்த்தால்
கண்ணு மயங்கிடும் காம விரியாலே" (1727 - 1728)

என்றும் அணிகலன் அணிந்த சின்னணைஞ்சியின் அழகுத் தோற்றத்தை வியந்து பாராட்டுகிறார் சிவனணைஞ்சவர். இருளப்பனாசானைச் சின்னணைஞ்சியிடம் தூதனுப்பியபோது, அவள் கூறிய வார்த்தைகளின் கூர்மையே அவளை எப்படியும் அடைந்தே தீருவது என்ற உறுதியைச் சிவனணைஞ்சவரும், அவளைச் சிவனணைஞ்சவரிடம் எப்படியும் சேர்த்தே தீருவது என்ற உறுதியை இருளப்பனாசானும் எடுக்கக் காரணமாகின்றது.

வசிய மருந்தால் மயக்கப்பெற்ற சின்னணைஞ்சி சிவனணைஞ் சவரைச் சுய நினைவின்றியே கூடுகிறாள். பல கூடல்களின் பின்னர், அவரைச் சிறிதும் விட்டு விலகாத நிலைக்கு ஆளாகிறாள். சிவனணைஞ்சவர் சீவலமாறன் அனுப்பிய மந்திரியிடமும், தாய் பொன்னுருவியிடமும் சின்னணைஞ்சியை விடமுடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டதால், சிவனணைஞ்சவரைப் பிடிக்கச் சீவலமாறன் படையை அனுப்புகிறான். படைவந்து சிவனணைஞ்சவரின் மண்டபத்தைச் சூழ்ந்ததும், சிவனணைஞ்சவர், இருளப்பனாயான், மந்திரி வன்னியத்தேவனுடன் சேர்ந்து தானும் போர்க்கோலம் பூண்டு போர்க்களம் புகுகிறாள் சின்னணைஞ்சி.

"என்னுடைய மன்னவனே நானும் வருகின்றேன்
எனக்குமொரு சமுதாடு தாருமென்றாளே
உன்னுடைய சேவுகங் காண்பேன் நானும்
உடுதற்சீலை நீக்கியொரு சட்டையு மிட்டு
கொங்கை கனத்துக் குலுங்காமல் நிக்க
கொச்சு மஞ்சள் பட்டினால் கட்டினாளே" (2216 - 2221)

எனச் சின்னணைஞ்சி பூண்ட போர்க்கோலம் விவரிக்கப்பட்டுள்ளது.

"மங்கையுங் கோவித்து வாசலிடித் தாளே
. . . . . . . . மதகரி வெட்டி விட்டாளே
. . . . . . . . . . ஆனையது விழவே
ஆயிழையாளு மதிகோபங் கொண்டாளே" (2222 - 2225)

எனச் சின்னணைஞ்சி செய்த போர் நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்டுள்ளன. 'சமூகக் கதைப்பாடல் தலைவிகளுள் காதலுக்காகப் போர்க்களம் புகுந்து, வாளேந்திப் போர்புரிந்த ஒரே பெண்ணாகச் சின்னணைஞ்சியைப் பார்க்கிறோம். போரில் தோல்வியடையும் சூழல் நெருங்கியபோது, பிடிக்கப்பட்டுத் தன் கற்புக்கொரு பங்கம் நேர்ந்து விடக்கூடாது என்றும், பிறர் கையால் மடிவதிலும், காதலன் கையால் மடிவதையே விரும்பிய சின்னணைஞ்சி உயிர் போகுமாறு தன் கழுத்தை அறுத்துவிடுமாறு சிவனைஞ்சவரிடம் கூறுகிறாள் (2232 - 2239). அவரும்

அவ்வாறே செய்கிறார். காதலுக்காகக் காதலன் கையால் கொல்லப் பட வேண்டும் என்று விரும்பி மரணத்தைத் தழுவிக்கொண்ட ஒரே பெண்ணாகவும் சின்னணைஞ்சி திகழ்கிறாள்.

## பிற குறிப்புகள்

முன் பிரதியில் இல்லாத, இக்கதைப்பிரதியில் மட்டும் காணப்படும் குறிப்புகளும், முன்பிரதியினின்று மாறுபாடாக அமைந்த குறிப்புகளும் கீழே தரப்படுகின்றன.

## பிற கதைப்பாடல்கள் பற்றிய குறிப்புகள்

இராமாயணக்கதை, கன்னடியன் படைப்போர், ஐவர் ராசாக்கள் கதை, நீலி எனும் இசக்கி கதை, தோட்டுக்காரி கதை, பஸ்மாசுரன் கதை, சாஸ்தா கதை, மோகினி கதை, ஐயனார் கதை என்ற இதிகாச, புராண, வரலாற்று, சமூகக் கதைப்பாடல்கள் இப்பிரதியில் வரும் பாத்திரத்தின் வாயிலாகச் சுட்டப்பெற்றுள்ளதால்[32] இத்தகு கதைகள் மக்கள் மத்தியில் பெரு வழக்காக அறியப்பட்டிருந்த காலக் கட்டத்தில் இப்பிரதி எழுதப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. அத்துடன் இத்தகு கதைப்பாடல்கள் தோன்றிய பின்னரே இக்கதைப்பாடல் தோன்றியுள்ளது என்பதும் தெளிவாகின்றது.

இக்கதைப்பாடற் பிரதியில் சுட்டப்பெறும் சிவனணைஞ்ச பெருமாளின் மந்திரியாகிய வன்னியத்தேவன், வன்னியராசனின் பிறப்பே

---

32. "வாலிபட்ட பாடதிலும் ராவணன்பட்ட பாடும்
வாசித்தறி யாதமுழு மட்டியளோ நீங்கள்
சீதையென்ற பெண்ணாலே தென்னிலங்கை யழிந்த
செய்திகளை யறியல்லையோ திருட்டுதனக் காரா
கன்னடியன் மகளாலே வள்ளியூ ரழிந்த
காரணங்கள் தெரியாதோ யென்று . . . .
கன்னடியன் மகளா . . . . . .
கதை தெரியாதோ . . . . . .
பாவைநீலி யதனாலே பழகை (நல்லூ ரழிந்த)
பாவினைகள் தெரியாத . . . . . .
கோதை தோட்டுக் காரியா (லே) கும (ரப்பராச)
குத்தம் குறை தெரியாத கொடும்பாவி. . .
அரக்கனுரு கொடுத்தவரஞ் செயிக்கவென்று ஆயன்
அழகா (ன) பெண்வடிவு கொண்டதறி யல்லையோ நீயும்"
(1852 - 1865)

என்றும் இப்பிரதி சுட்டுவதால்[33] வன்னியராசன் கதை என்ற சமூகக் கதைப்பாடலின் தோற்றத்தின் பின்னர்தான் இப்பிரதி எழுதப் பெற்றிருக்க வேண்டும் என்பதும் உறுதிப்படுகின்றது.

## பாத்திரப் பெயரமைதி

இப்பிரதியில் பாத்திரப்பெயர்கள் வேறுபட்ட முறைகளில் வழங்கப்பட்டும் வடிவ மாற்றங்களுடன் காணப்படுகின்றன.

### சீவலமாறன்

தென்காசி மன்னனின் பெயர் சீர்வலமராசன் (9) சீர்வலமராச மன்னன் (12) சீவலமாறன் (173) சீவலமார்பன் (2180) என்று பல திரிபு வடிவங்களுடன் இப்பிரதியில் சுட்டப்பெற்றுள்ளன. இவை அனைத்தும் சீவலமாறன் என்ற பெயரின் மாற்று வடிவங்கள் எனக் கொள்ளலாம். மாறன் என்ற இணைப்புடைய இப்பெயர் பாண்டிய மன்னர்களின் வம்சாவழிப் பெயராகும். இது வெற்றித் திருமகளைக் கொண்டவள் என்ற பொருள் கொண்டதாகும்.

### செண்பகராசன்

சீவலமாறனின் தங்கையான பொன்னுருவியை மணம் செய்த தென்காசி, செங்கோட்டை மன்னனின் பெயர் செண்பகன் ராசன் (18) செண்பகமாராயன் (174) செண்பகராசன் (1333) என்று இப்பிரதி பலவாறாகக் குறிப்பிடுகின்றது. முன்பிரதி இப்பாத்திரப் பெயரைச் செம்பவளராசன் (48) எனச் சுட்டுகின்றது. இவை அனைத்தும் செண்பகமாறன் என்ற பெயரின் திரிபு வடிவங்கள் எனக் கொள்ளலாம்.

### சிவனணைஞ்ச பெருமாள்

சிவனணைஞ்ச பெருமாள் என்ற பெயர் அணஞ்ச பெருமாள் (1284), அணஞ்சவராசன் (1350) பொன்னணைஞ்ச பெருமாள் (1290) அணஞ்சவர் (1670) சிவனணைஞ்சவர் (1673) சின்னணைஞ்சவர் (1996) என்று பல வடிவ மாற்றங்களுடன் இப்பிரதியில் குறிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சிவனணைஞ்ச பெருமாள் என்ற பெயரின் வடிவ மாற்றங்கள் என்பது வெளிப்படை. இது சிவனை மோகினி அணைந்த திருமாலின் பெயராகும்.

---

33. "கணக்கதிலே யில்லாவிட்டால் கைலைவட வாசலிலே
வணக்கமுடன் காத்துநிற்கும் வன்னிய ராசனையும்
இணக்கமுடன் பிறவி செய்து ஏந்திழைக்குக் குழந்தையதாய்"
(1379 - 1381)

## சின்னணைஞ்சி

சிவனணைஞ்ச பெருமாள் என்ற பெயர் சின்னணைஞ்சவர் என்று வழங்கப்பட்டுள்ளமை இப்பிரதியிலேயே காணப்படுவதால் சிவனணைஞ்சி என்ற பெயரே சின்னணைஞ்சி என ஆகியிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்தச் சின்னணைஞ்சி என்ற பாத்திரப் பெயரே பெரும்பான்மையான இடங்களில் ஆளப் பட்டுள்ளது என்றாலும் இப்பெயரே சின்னணை (1605) அணஞ்சி (1758) என்ற திரிபு வடிவங்களுடன் இப்பிரதியில் சுட்டப்பெற்றுமுள்ளது.

## பொன்னுருவி

சிவனணைஞ்ச பெருமாளின் தாயின் பெயராக இப்பிரதியில் வந்துள்ள இப்பெயர் பொன் போன்ற உருவமுடையவள் என்ற பொருளுடையதாகும். இப்பெயர் இதிகாச நாட்டுப்புறக் கதைப்பாடலான மகாபாரதத்தில் கர்ணனின் மனைவியின் பெயராகவும் அமைந்துள்ளது. இதனைப் பொன்னுருவி மசக்கை, பொன்னுருவி புலம்பல் போன்ற கதைப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

## மாடன்

மாடன் என்ற பெயரை மக்கள் பெருவழக்காகச் சூட்டிக் கொண்டிருந்தனர் என்பதை இப்பிரதி மூலம் அறியமுடிகிறது. சின்னணைஞ்சியின் தந்தை பெயர் மாடன் வண்ணான் (1569). மந்திரி வன்னியத்தேவனின் தந்தை பெயர் மாடப்பத் தலைவன் (1364), முன்பிரதி குறிப்பின்படி சின்னணைஞ்சியின் கணவன் பெயர் மாடன் (1631) என்று தெரியவருகின்றது.

## ஊர்ப்பெயர்

மந்திரி வன்னியத்தேவனின் ஊராக மணிக்காஞ்சி (1371) குறிக்கப் படுகின்றது. இது இன்றைய மணியாச்சியெனத் தெரிகின்றது. எனவே மணியாச்சியின் பழைய பெயர் மணிக்காஞ்சி என இப்பிரதி கொண்டு மீட்டுருவாக்கம் செய்யலாம்.

## காசு வகைகள்

சிவனணைஞ்ச பெருமாள் பிறந்தவுடன் பெண்கள் பலர் கூடித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் முகமாகக் காசுகளைப் பொலிவு பொலித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்தக் காசு வகைகள், கதைப்பாடல் காலகட்டத்தில் வழக்கிலிருந்திருக்க வேண்டும் என்ற வரலாற்று உண்மை

இதனால் தெரியவருகின்றது. குழந்தை பிறந்தவுடன் அண்டை, அயலார், உற்றார், உறவினர் பொன்னையும், மணியையும், முத்தையும், நவரத்தினங்களையும், நெல்லையும், காசையும், தங்கள் சக்திக்கியன்ற வாறு கொண்டு தருதல் உண்டு (1175 - 1188) என்ற அக்காலத்திய நடைமுறை வழக்கமும் அறியவருகின்றது.

"தன்னா லியன்றது யின்னாரு மென்ன சந்தமிக்காசி பொலித்தா
ளொருத்தி" (1176)
"பட்டத்துக் கேத்த மதுரைப்பணமும்" (1179)
"கலியம் பணமொரு முன்னூ றெடுத்துக் கலத்திலே வந்து
பொலித்தாளொருத்தி" (1184)
"ஆளிட்ட காசியும் வில்லிட்ட காசியும் அவரவர்வந்து
பொலித்ததை யெல்லாம்"(1185)
"விந்தைபெறு சந்தமிக் காசி விராகன் வெள்ளி ஒருபொன்னு
மதுரைப் பணமும் (1187)

என்று அக்காலத்தில் புழங்கிவந்த காசுகளின் பெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன.

### சந்தமிக்காசி

சந்தம் என்பது துளை எனும் பொருள் தருவது ஆதலின், இவ்வகைக் காசு துளையுடையதாக இருக்கக்கூடும்.

### மதுரைப்பணம்

மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாட்டுப் பகுதிகளில் இக்காசு வழக்கிலிருந்திருத்தல் வேண்டும்.

### கலியம் பணம்

கலி பணம் என்று அழைக்கப்பெற்ற இக்காசு 3½ அணாவுக்கும், 4 சக்கரத்துக்கும் 1/10 பொன்னுக்கும் சமமான மதிப்புடையது எனத் தெரிகின்றது. ஈமச் சடங்கின்போது இந்நாணயம் புழங்கப்பட்டது என்றும் தெரிகின்றது.[34]

---

34. தமிழ் அகராதியினின்றும் பெற்ற குறிப்பு.

## ஆளிட்டகாசி

மனித உருவம் பொறிக்கப்பட்ட காசாக இருக்கலாம் என்பது பெயர் மூலமாகத் தெரியவருகின்றது. ஈழ மனிதன் உருவம் பொறித்த செப்புக் காசுகள் முதலாம் இராசராசனால் வெளியிடப்பட்டு வழக்கிலிருந்திருக்கின்றன என்பதற்குச் சான்று உள்ளது.[35]

## வில்லிட்டகாசி

வில் சேரரின் அடையாளச் சின்னமாதலின் வில் பொறிக்கப் பெற்ற இக்காசு சேரநாட்டுப் பகுதிகளில் புழங்கிய காசாக இருக்கலாம் என்பது இப்பெயர் மூலமாக அறிய வரும் செய்தியாகும். பிற குறிப்புகள் தெரியவில்லை.

## விராகன்

வராகன் என்று அழைக்கப் பெறும் இக்காசு மூன்றரை ரூபாய் மதிப்புள்ளதும் பன்றி முத்திரை கொண்டதுமான ஒருவகைப் பொன் நாணயம் எனத் தெரிகின்றது.[36]

## பொன்

10 பணத்துக்குச் சமமானதும், ஒன்றேகால் ரூபாய் மதிப்புள்ளது மான பொன்னாணயம் எனத் தெரிகின்றது.[37]

## சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கிளைக்கதை - அரவமுத்து வீரன் கதை

சீவலமாறன் ஆட்சியில் நடந்த ஒரு முக்கிய நிகழ்ச்சியாக, சீவலமாறனின் மந்திரியாகப் பணியாற்றிய உடையார் என்பவர் மீது திருட்டுக் குற்றம் சாட்டப்பெற்று அவர் கழுவேறினார் என்பது இப்பிரதியில் சுட்டப்பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி முன் பிரதியில் காணப் பெறவில்லை. இந்நிகழ்ச்சி குறித்த விளக்கங்கள் கதைச் சுருக்கத்தில் முன்பே தரப்பெற்றுள்ளன. இந்நிகழ்ச்சியே தனி ஒரு கதைப்பாடலாக

---

35. ஈழமனிதன் உட்கார்ந்தும், நின்றும் உள்ள நிலைகளிலுள்ள செப்புக் காசுகள் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. முதலாம் இராசராசனின் ஈழ வெற்றியைக் குறிப்பதாக இத்தகு காசுகள் வெளியிடப் பெற்றிருக்கலாம். தினமலர் (27.112.97) நாளிதழிலும் இத்தகு காசுகள் இராமநாதபுரத்தில் கண்டறியப்பட்டதாகச் செய்தி வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

36. தமிழ் அகராதியினின்றும் பெற்ற குறிப்பு.

37. மேற்படி.

“அரவமுத்து வீரன் கதை” என்ற பெயரில் பாடப்பெற்றுச் சுவடியில் உள்ளது. அரவமுத்து வீரன் கதைச்சுவடி ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் காணப்படுகின்றது. சிவனணைஞ்ச பெருமாளின் கிளைக் கதையான அரவமுத்து வீரன் கதையும் இந்நூலில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

## அரச மரபினர் குறித்த கதைப்பாடல் புலவர்களின் அணுகுமுறைகள்

கதைப்பாடலைப் பாடும் புலவர்கள், அரசர்களைப் பாத்திரங்க ளாகக் கொண்ட கதைப்பாடல்களைப் பாடும்பொழுது, கதைத்தலைவன் கதைத்தலைவிக்கோ, பிற பாத்திரங்களுக்கோ அவர்கள் தவறு செய்தவர்கள் என்று கருதி, அரசர்கள் தண்டனை வழங்கியதாகக் கதையில் பாடவேண்டிய தேவை ஏற்படும்பொழுது, சுவடியில் குறிப்பிட்ட தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாக அமைந்திருப் பினும், அது குற்றவாளிகளே மனமுவந்து ஏற்றுக்கொண்டதுதான்; குறிப்பிட்ட அரசர் அத்தண்டனையை அளிக்கவில்லை என்ற முறையில் மாறுபடப் பாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். “இது அரசு மக்கள்மீது கடுமையான அடக்குமுறையைக் கடைப்பிடிக்கவில்லை என்பதை வலியுறுத்துவதாக அமையும் அமைப்பு” என்று டாக்டர் நா.வானமாமலை அவர்கள் குறிப்பிடுகிறார்.

சான்றாக நா. வா. அவர்கள் பதிப்பித்துள்ள காத்தவராயன் கதையில், தாழ்குலத்தவனான காத்தவராயன் ஆரியமாலா என்ற உயர்குலப் பெண்ணை விரும்பி மணந்துகொண்டு, சாதிச் சட்ட திட்டங்களை மீறிய குற்றம் புரிந்தவனாதலின் அவனைக் கழுவேற்ற வேண்டும் என்று அந்தணர்கள் அரசரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். காத்தவராயனோ கடவுளரும், நாடாளும் மன்னனும் இவ்விதம் ஏற்றத்தாழ்வு கருதாது மணம் புரிந்துள்ளமையைச் சுட்டிக் காட்டி, 'தான் செய்தது தவறு அல்ல' என்று வாதிடுகிறான். அவன் கூற்றில் உள்ள நியாயத்தை உணர்ந்த அரசனும், 'கழுவேற வேண்டாம்' என்று கூறி விடுகின்றானாம். ஆனால் காத்தவராயனோ, 'தான் கழுவேறிச் சாகவேண்டுமென்பது ஒரு சாபம் என்றும், அச்சாபம் நிறைவேறும் வகையில் தன்னைக் கழுவேற்றியே ஆகவேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டதன் பேரில் கழுவேற்றப்பட்டதாகவும் கதைப்பாடல் பாடப்பட்டுள்ளது. காத்தவராயன் கழுவேற்றிக் கொல்லப்பட்டான் என்பது நடந்த உண்மை. இதனைக் கதையில் இல்லை என மறுப்பது இயலாது. எனவே, அரசன் கழுவேறும் தண்டனை விதித்தான் என்ற நடைமுறை உண்மை மாற்றப்பட்டுத் தானே கழுவேற ஒப்புக்கொண்டு கழுவேறினான் என்று திரிக்கப்பட்டுள்ளது. இது அரசு, மக்களின் மேல் கொண்டிருந்த கடுமையான சட்டதிட்டங்களையும், அடக்குமுறை

களையும் மறைக்கும் முயற்சியாகும் என்று டாக்டர் நா.வானமாமலை அவர்கள் தன்னுடைய காத்தவராயன் கதைப்பதிப்பில் எடுத்துக் காட்டியுள்ளார். இந்தச் சிவனணைஞ்ச பெருமாள் கதையைப் பொறுத்த அளவிலும், இதே மாதிரியான நிலைதான் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது. வன்னியத் தேவனின் சூழ்ச்சியால், உடையார் மீது, அரசனின் திருவாழியைத் திருடி வாளுறைக்குள் மறைத்து வைத்தார் என்ற திருட்டுக் குற்றம் நிரூபிக்கப்பட்டபின், உடையார் மானத்துக்கு அஞ்சித் தானே கழுவேற ஒப்புக் கொண்டதாகவும், ஆனால் அரசனும் பிறரும் 'வேண்டாம்' என்று மனங் கலங்கிக் கெஞ்சியதாகவும் உள்ள அமைப்பு காணப்படுகின்றது.

"இஷ்டமதாக யிறக்க உடையாருஞ் செல்ல
இன்பமான சீவலமார்பன் விலக்கி யிருக்க
திருவுளத்தின் வாழிதானே திருடின தாலே
சீக்கிரமாகக் கழுவி லிறந்து விடுவேன்
ஆரு தடுத்தாலுங் கேட்டிட மாட்டேனே யென்று
அரனா ராணை நீங்கள் தடுக்கவும் வேண்டாம்
என்றவன் சொல்லிடவே சீவலமார்பனுங் கேட்டு
இரங்கி மனது கலங்கியே மண்டபஞ் சென்றார்" (1540 - 1547)

என அமைந்துள்ளது.

இதேபோன்று முன்பிரதியிலும், சிவனணைஞ்சவரைச் சீவலமாற மன்னன் மழுவால் வெட்டிக் கொல்லச் சொல்லவில்லை என்று கருதும் சில வரிகள் அமைக்கப்பட்டுள்ளன.

"நட்டமாம் பட்டாலும் வெட்டொண்ணாது யென்று
நாட்டில் சொல்லு வார்களதைக் கேட்டிருந்தோம் நாமள்
குத்திப்போடு யென்றுசொல்லிக் கொடுமை சொல்வதில்லை
கூட்டிப்போங்கோ தாய்தகப்பன் வீடுமட்டும் நீங்கள்"

என்று சீவலமாறன் தன் சேவகர்களிடம் கூறியதாக ஓர் அமைப்பு உள்ளது. ஆனால் கதையில் பல இடங்களில் சிவனணைஞ்சவர் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டிச் சீவலமாறன் தண்டனை விதித்ததாக உள்ள வரிகளும் காணப்படுகின்றன.

"அந்தமருந் தென்காசி யூருக்கிவ னிருந்தால்
அரசழிப்பான் குடிமுழுதும் பரிசழிப்பா னையா" (2912 - 2913)

என்று சீவலமாறன் கூறும் வரிகள் சிவனணைஞ்ச பெருமாள் இனி உயிருடன் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதாகவும்,

"கழுவிலிடும் போதுனக்குக் காச்சலுள்ள பேரை
கைகாட்டிக் கூப்பிடுநீ கழத்திவிடச் சொல்லு" (2924 - 2925)

என்று அமைந்துள்ள வரிகள், கழுவிலிடுவது உறுதி என்ற சீவலமாறனின் எண்ணத்தை வெளிக்காட்டுவதாகவும்,

"வெட்டிப்போட மழுவதும் வெத்திலைபாக்கு கொடுத்து"(2958)

என்றுள்ள வரிகள் வெட்டிக்கொல்ல உறுதி செய்து கொண்டதையும் தெளிவாகக் காட்டுகின்றன. எனவே, கதைப்பாடல் பாடும் புலவன் அரசன் விதித்த தண்டனைகளை நேரடியாகக் காட்டி அவன் கொடுமையானவன் என்ற எண்ணத்தை மக்கள் மனதில் பதியச் செய்யாமல், 'அன்பின் வடிவானவனே மன்னன்' என மக்கள் கருதுமாறு சில அமைப்புகளைக் கதைப்பாடலில் அமைத்து முன்பின் வரிகளுக்குள் முரண்பாடு காட்டுகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

## உவமைகள், உருவங்கள்

மிக எளிமையான, நடைமுறை வழக்கிலிருந்த உவமைகளும், உருவகங்களும் கதைப்பாடல் நடைக்கு அழகூட்டிக் கருத்துகளுக்கு விளக்கம் சேர்க்கும் முறையில் அமைந்துள்ளன.

"தேடுவாளாம் புதைத்துவைத்த திரவியத்தைக் கொடுப்பவர் போல்" (274)
"ஆற்றில் கரைத்த புளிபோலே யாச்சுது" (661)
"கட்டுத்தறி தன்னைவிட்டுக் கடராத ஆவினம்போல்" (9654)

என்பன போன்ற உவமைகள் இடம்பெற்றுள்ளன.

"இயல் கறையா னிதமாக யேட்டை வைக்கு மோதான்" (147)
"ஆலிலையைப் போலேபுல் கூத்தாடவே தொடுத்தால்" (1866)
"பசுகிழடு ஆனாலும் பாலுருசி போமோ" (752)

என்பன போன்ற உருவகங்கள் இடம்பெற்றுள்ளன.

## சிவனணைஞ்சவத் தெயவ வழிபாடு

சிவனணைஞ்சவர் சின்னணைஞ்சியின் வேண்டுகோளின்படி அவளுடைய கழுத்தை அறுக்குமுன்,

"உன்னையல்லா லெனக்கொரு ஆதாரமில்லை
அரனா ரிடத்தில்போ யிருக்கலா மென்று"

கூறி அவள் கழுத்தை அறுத்துவிட்டுத் தானும் குத்திக் கொண்டு மடிகிறார். இறந்த இருவரும் சிவலோகம் சேர்வதாகவும், சிவனுடைய திருத்துடைகளில் வீற்றிருக்கும் பேறு பெற்றவர்களாக ஆனபின், சிவபிரான் அவர்களைப் பூலோகத்தில் சென்று பூசையுண்டு இருங்கள் என்று பூவுலகத்துக்கு அனுப்பி வைக்கிறார் என்று கூறும் கதைப்பாடல் வரிகள் அமைந்துள்ளன.[38] பூலோகத்தில் இவர்கள் தெய்வமாக வணங்கப் பெற்றுப் பூசை பெற்று வந்ததை வெளிக்காட்டும் வரிகளும் இடம் பெற்றுள்ளன.

> "புகழ்பெறச் சிந்தூரவேலர் பதித (ன்னில்) சென்றால்
> பூசைகள் வெலிகள்நமக்குப் போதரவே தருவார்" (2787 - 2789)

என்று கைலாயத்திலிருந்து மீண்ட சிவனணைஞ்சவர் திருச்செந்தூருக்கு வந்ததாகவும், செந்தில் வேலவர்,

> "குளுந்தமரக் காவில் குன்று(டைய) அய்யன் கோவிலிலிருந்து
> கூடவேஅங்கே நின்றுடன்பூசை குணமுடன் கண்டிருங்கோ
> அந்த யிடத்திலே யுங்களுக்கும்பூசை யனுதினஞ்செய்ய
> அரியெண்ண. . . . சந்தன மெல்லா மனுப்பியே ம. . . .
> விந்தையுடன் பூசை யுண்டங்கிருந்து வேண்டு" (2831 - 2833)

என்று கூற, சிவனணைஞ்சவர் பூசை பெற்றுத் தெய்வமாக நிலை பெற்றிருந்ததாகவும் கதைப்பாடலிலேயே அகச்சான்று காணப்படுகின்றது.

சிவனணைஞ்ச பெருமாள் குமரி மாவட்டம் அகத்தீசுவரம் தாலுகாவில் வாதை, துணைத் தெய்வம், தலைமைத் தெய்வம் என்ற மூன்று நிலைகளிலும் இன்றும் தெய்வமாக வணங்கப்பட்டு வருகின்றார்.[39] 21 வாதைகள் பட்டியலில் அணஞ்ச பெருமாள் இல்லாத ஒரு நிலையும் உள்ளது என்ற குறிப்பும் கிடைக்கிறது.[40] இதனால் துணை, தலைமைத் தெய்வம் என்ற நிலையில் வணங்கப்படலே பெரும்பான்மை என்பது தெரியவருகின்றது.

---

38. "ஆதிசிவனார் மகிழ்ந்து அதியவரம் கொடுத்தார்
பூலோக மானதிலே அய்யன்மா ரிடத்தில்
பூசையுண்டங் கிருவுமென்று புண்ணியனார் சொல்ல" (2307 - 2309)

"புத்திசொன்னேன் உன்னிடத்தில் பூலோகத்தில் போயிருநீ
சத்தியுமையும் நானுந் தயவுசெய்வோ மிங்கிருந்து" (2601 - 2602)

39. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள். பொன்.கோவிந்தசாமி, பக்.22.

40. மேற்படி பக். 28.

## *சிவனணைஞ்ச பெருமாள் கதைகள் - கலந்துரையாடற் கருத்துகள்

வண்ணாத்தி சின்னணைஞ்சியின் இறப்பின் பின்னர் 'வண்ணார் கலகம்' என்ற ஒன்று தென்காசியில் ஏற்பட்டதாகவும், அதனால் அங்கிருந்த அரசர் பரம்பரையினர் சிதறிப் பல இடங்களுக்கும் சென்று விட்டதாகக் கள ஆய்வுச் செய்தி கிடைக்கின்றது.தென்காசியில் 'சிவனணைஞ்சான் கோட்டை' உள்ளதாகத் தெரிகின்றது.

'மண்டக்'என்ற இனத்தவர் (மண்டைக்காட்டுப் பகவதி இவர்களின் குல தெய்வம்) மார்த்தாண்ட வர்ம மன்னருடன் மாறுபட்டு மூலப்பொழி வந்ததாகவும், அப்பொழுது சிவனணைஞ்ச பெருமாள் தெய்வம் உடன் வந்ததாகவும், மூலப் பொழியில் நிலை பெற்றுத் தெய்வமாக வணங்கப் பெற்றதாகவும் தெரிகிறது. இன்றும் சீவலப்பேரிக்கு அருகிலுள்ள மருதூர், மானூர், தென்காசி, குறும்பலாப் பேரி ஆகிய இடங்களில் ஊர்த்தெய்வமாகச் சிவனணைஞ்ச பெருமாள் வணங்கப்பட்டு வருகின்றார்.

சிவனணைஞ்ச பெருமாள், பாண்டியர் வம்ச வழி வந்தவன் என்பதற்கான சுவடிச் சான்றுகள் உள்ளன. இவனின் தந்தையார் பெயரில் 'செண்பக மாற பாண்டியன் கதை' என்ற ஒரு கையெழுத்துப் பிரதி உவரி அருகிலுள்ள நவ்வலடியில் கிடைத்தது இது. குறும்பலாப்பேரி ஏடுபார்த்து எழுதியதெனத் தெரிகின்றது. தற்பொழுது தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் உள்ளது. சிவனணைஞ்ச பெருமாள் கதைச் சுவடிகளில் செண்பகராசன், செண்பகமாராயன், செம்பவளராசன் என்று குறிக்கப்பட்டுள்ள இப்பெயர் செண்பக மாறன் என செண்பகமாற பாண்டியன் கதைச் சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது. சிவனணைஞ்ச பெருமாள் பாண்டியர் வம்சவழி வந்தவர் என்பதற்கு இச்சுவடி தக்க சான்றாகத் திகழ்கின்றது.

சின்னணைஞ்சி சின்னம்மை எனவும் அழைக்கப்பட்டிருக்கிறாள். 'சின்னம்மை கதை'என்றே ஆறுமுகப் பெருமாள் நாடார் சின்னணைஞ்சி கதையைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் எனத் தெரிகின்றது.

இலக்ஷுமியம்மன் தவநிலை போன்று பொன்னுருவி தவநிலை என்ற பெயரில் சுவடி உள்ளது. செண்பகமாறன் கதைச் சுவடி போன்று இச்சுவடியும் சிவனணைஞ்சவரின் பிறப்பு வரை உள்ள கதையைச் சொல்கின்றது.

---

* இத்தலைப்பின் கீழ்க்காணும் குறிப்புகள் முனைவர். ஆ. தசரதன் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) அவர்களுடன் உரையாடிப் பெற்ற கருத்துகளாகும்.

சிவனணைந்த பெருமாள் கதைப்பாடல் என்ற ஒரு சுவடிப்பிரதி (சுவடி எண்.10) தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையத்தில் உள்ளது என முன்பே சுட்டப் பெற்றது. குறும்பலாப் பேரியில் கிடைத்த இவ்வேடு 45x3 செ.மீட்டர் உடையதாக 43 ஓலைகளுடன் காணப்படுகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சிவனணைஞ்ச பெருமாள் கதைச் சுவடியுடன் கதையில் பெரிதும் ஒப்புமையுடையதாக உள்ளது. இதுவும் முற்றுப் பெறாததாகவே இருக்கிறது.

## அரவமுத்து வீரன் கதை - கதைச் சுருக்கம்

மணிக்காஞ்சி நாட்டில் ஒத்தைக்காலன் விளை என்ற ஊரில், வெங்கலக் கோட்டை அமைத்துக்கொண்டு இணைசூரமாயன் சிவகாமியம்மை தம்பதியர் வாழ்கின்றனர். இவர்கள் குழவிப் பேறின்றி நெடுநாள் வருந்துகின்றனர். பின், மதுரைச் சொக்கநாதர் அருளால் ஆண்மகவு ஒன்று தோன்றுகின்றது. அக்கினிக் கபாலத்தில் உதித்த அம்மகவுக்கு 'அரவமுத்து' என்று பெயரிட்டுத் தங்கத் தடுக்கில் வைத்துச் சொக்கர் அனுப்புகிறார். உடன் பிறந்த வெள்ளிக் கழுவை வெள்ளி மலையில் சொக்கர் நாட்டி வைக்கிறார். தங்கத் தடுக்கில் வந்த குழந்தையை இணைசூரன் - சிவகாமி தம்பதியர் அன்புடன் எடுத்து வளர்க்கின்றனர். மதுரை மீனாட்சி அருளால் அதே தங்கத்தடுக்கில் பெண் மகவு ஒன்று தோன்றுகின்றது. 'அம்மையாரம்மை' எனப் பெயர் சூட்டி அக்குழந்தையையும் அருமையுடன் வளர்க்கின்றனர்.

உரிய பருவத்தில் அரவமுத்துவுக்குக் கல்விப் பயிற்சி அளிக்க மணிக்காஞ்சி நாட்டிலுள்ள சந்திரக்குட்டி அண்ணாவியை ஏற்பாடு செய்கின்றனர். திண்டுக்கல் கோட்டையிலிருந்து சுந்தரப் பணிக்கரை வரவழைத்து ஆயுதப் பயிற்சியும் அளிக்கின்றனர். கல்வி, வீரப்பயிற்சிகள் பெற்ற அரவமுத்து, மந்திரப் பயிற்சிகள் பெற விரும்பி மலைநாடு சென்று, மந்திரவேலனிடம் மாய்மாலங் கற்று வருகிறார். வரும் வழியில், தென்மதுரை வந்த அரவமுத்துவின் பேரழகு கண்டு இலட்சுமி எனும் தாசி இச்சை கொண்டு 'வீட்டுக்கு வரவேண்டும்' என்று வேண்டுகிறாள். 'ஊர் சென்று எட்டு நாளில் திரும்பி வருவேன்' என்று அரவமுத்து கூறி, ஒத்தைக்காலன் விளைக்கு வருகிறார். தாய், தந்தையர் அறியாமல் மலைநாடு சென்றதால் கலங்கியிருந்த பெற்றோருக்கு ஆறுதல் கூறிவிட்டு, லட்சுமித் தாசிக்கு வாக்களித்தபடி எட்டாம்நாள் சொக்கர் பதியாம் மதுரைக்கு வருகிறார். இலட்சுமித்தாசி வீட்டில் இரவு தங்கிவிட்டு, மறுநாள் காலை புறப்படும் பொழுது அந்நாட்டையாளும் அழகேசன் என்ற மன்னன் தாசியில்லம் வருகிறான். இல்லத்தின் உள்ளிருந்து வரும் அரவமுத்துவைக் கண்டு, தனக்குரிய தாசியைப் பங்கம் செய்ததால் சினமுற்ற மன்னன் அவனை வெட்டிக் கொல்லுமாறு ஆணை பிறப்பிக்கிறான்.

தலையாரி, அரவமுத்துவின் அழகு கண்டு வெட்ட மனமின்றி இருக்கிறான். சிறுக்கன் மனம் விட்டு அழுகிறான். நாட்டு மன்னன் ஆணையை நிறைவேற்றுவது கடமை என்றுணர்ந்த தலையாரிமார், அழகாபுரிக் கோட்டை கடந்து, காட்டு வழியாக அரவமுத்துவை அழைத்துச் செல்கின்றனர். சிறுக்கனைச் 'சொக்கர்பதி சென்றுவிடு' என்று கூறி அனுப்பிவிட்ட அரவமுத்து, தலையாரி வெட்டுமுன்னம் தான் கற்ற மந்திர சக்தியால் ஒரு பறவையாக உருமாறிப் பறந்து விடுகிறார். பறந்து வந்து மதுரையம்பதி சேர்ந்து, சிறுக்கனையும் அழைத்துக்கொண்டு ஊர் திரும்புகிறார். சின்னாள் கழிந்தபின், சொக்கநாதர் பதியில் திருவிழாக் காணச் சிறுக்கனுடன் அரவமுத்து வருகிறார். இலவாணிச்சி வள்ளி இவர் மீது ஆசைகொண்டு அழைக்க, ஊர் சென்று விட்டுப் பின்னர் வருகிறேன் என்று கூறிவிடுகிறார். கூறியபடி பின்னர் வந்து வள்ளியின் இல்லில் தங்கிப் பின் ஊர் மீள்கிறார். பெற்றோர் இவருக்குப் புத்தி கூறித் திருமண ஏற்பாடு செய்ய முனைகின்றனர். சோதிடம் கேட்டபோது, முப்பத்திரு வயதில் மரணம் வரும் என்று சோதிடர் கூறி விடுவதால், சிவன் செயல் என்று பெற்றோர் திகைத்து இருந்து விடுகின்றனர். சோதிடர் கூறியபடி எண்ணான்கு வயது எய்தியபோது, திண்டுக்கல் அரசன், அரவமுத்துவை அழைத்து வர ஒட்டனை அனுப்புகிறான். ஒட்டன் மூலம் அரசனின் அழைப்பை அறிந்த அரவமுத்து, தங்கக் கனிகள் சமைத்து, தங்கத்தட்டில் வைத்து, மூட்டையாகக் கட்டிச் சிறுக்கன் தலையிலேற்றித் திண்டுக்கல் வந்தடைகின்றார். அரவமுத்து அரசனைக் கண்டு வணங்கி, தங்கக் கனி வகைகளைக் காணிக்கையாக்கிய பின், அரசன் அளித்த விருந்தினை ஏற்று, அங்குச் சிலநாள் தங்கியிருக்கின்றார். அரசன் சனிவாரத்தன்று எண்ணைக் காப்பிற்காகத் திருவாழி கழற்றி வைத்தபின், மறவீரன் எண்ணை தேய்க்கிறான். அச்சமயம் சிறுக்கனுடன் அங்குவந்த அரவமுத்து வீரன், தன் சிறுக்கனை விட்டு எண்ணெய் தேய்க்க வைக்கிறார். மறவீரன் சினத்து விலகுகிறான். அரசனுக்கு, அயலான் வந்து எண்ணெய் தேய்த்தால், அரசன் மறுநாள் தன்னை மதிப்பானோ என்று சிந்தித்த மறவீரன் அரவமுத்துவைப் பழிவாங்க எண்ணுகிறான். எண்ணெய் தேய்த்தபோது மன்னன் கண் துயின்று விடுகிறான். மறவீரன் அரசனின் திருவாழியை எடுத்து, அரவமுத்துவின் உடைவாள் உறைக்குள் இட்டு, உடைவாளையும் போட்டு மறைத்து வைத்துவிடுகிறான். அரசன் நீராடி முடித்து பருவட்டம் சார்த்தி, 'திருவாழி எங்கே' எனக் கேட்க, காணாமல் அனைவரும் தேடிப் பார்க்கின்றனர். கருமறவன்தான் எடுத்திருக்க வேண்டும் என்று அரசன் உரைக்க, சினம் கொண்ட கருமறவன், ஓடிவந்து சிறுக்கன் கையிலிருந்த அரவமுத்துவின் உடைவாளை உருவி உறையைத்தட்ட, அரசனின் திருவாழி கீழே விழுகின்றது. 'பார்த்துக் கொள்ளுங்கள்' என்று கருமறவன் கூற, மந்திரிமார், 'இதுவும் கருமறவன் செய்த சூழ்ச்சி' என்று கூற, அரவமுத்துவோ, 'எந்தன் உடைவாளுக்குள்

தொண்டி கண்டபோதே, இனிமேலும் பூதலத்தில் இருப்பதில்லை' என்று கூறி 'கழுவேறி மாளவேண்டும்' என்கிறார். அரசனும் மந்திரிமாரும் தடுத்தும் கேளாது, 'இதுவரையுமே தான் பூதலத்தில் இருக்க வரமுண்டு; இனிமேல் நான் இருப்பதில்லை' என்று கூறி வெள்ளி மலை நோக்கி நடக்கிறார். சிறுக்கனும் உடன்வர, 'ஊர் சென்று ஒருவருக்கும் உள்ளது ஒன்றும் உரையாமல் இருந்துகொள்வாயாக' என்று அரவமுத்து சிறுக்கனை ஊருக்கு அனுப்ப முயல, சிறுக்கனோ. 'இருந்தாலும் உம்மோடே, இறந்தாலும் உம்மோடே' என்று உரைத்து உடன் வருகிறான். அரவமுத்து வெள்ளிமலை அடைந்தவுடன் வெள்ளிக் கழுதோன்ற, அரவமுத்து அதில் சாடி இருக்கிறார். உடனே அரவமுத்துவின் எதிரே வாளூன்றி அதில் வீழ்ந்து சிறுக்கன் உயிர் துறக்கிறான்.

திண்டுக்கல்லில் மோர் விற்க இடைச்சியர் வர, கழுவிலிருக்கும் அரவமுத்து 'தாகமாயிருப்பதால் மோர் தருவீராக' என்று வேண்டுகிறார். கழுவருகே வர இடைச்சியர் அஞ்சுகின்றனர். மாரிமுத்து என்ற ஒரு இடைச்சி மட்டும் அஞ்சாது வந்து அரவமுத்துவுக்கு மோர் தருகின்றாள். மகிழ்ந்த அரவமுத்து, 'உன் பானையில் மோர் குறையாது எப்பொழுதும் நிறைந்து நிற்கும்' என்று வரம் கொடுக்கிறார். ஆறு நாளாகத் தொடர்ந்து மாரிமுத்து இடைச்சி மோர் தருகிறாள். ஆறாம் நாள் இரவில், தன் தங்கை அம்மையாரம்மையின் கனவில் அரவமுத்து தோன்றி, வெள்ளி மலைக்கு மோர் கொண்டு வரப் பணிக்கிறார். அம்மையாரம்மை அண்ணனைக் கனவில் கண்டு அழுதுபுரண்டு, தங்கக் குடத்தில் மோர் கொண்டு புறப்படுகிறாள். உண்மையறிந்த தாய், தந்தையரும் உடன் வருகின்றனர். வெள்ளிமலையில் வெள்ளிக்கழுவிலிருக்கும் அண்ணனின் அவலக் கோலம் கண்ட அம்மையாரம்மை சிவனை வேண்டித் தணல் வேள்வி பெறுகிறாள்; உள்ளே குதிக்கிறாள். மக்களின் கொடூர முடிவு கண்ட பெற்றோர் அத்தணல் வேள்வியில் வீழ்ந்து உயிர் விடுகின்றனர். கழுவினைச் சாய்த்து இறங்கித் தணல் வேள்விக் கரையில் வந்து, காற்பெருவிரல் ஊன்றித் தவம் செய்கிறார் அரவமுத்து. தீக்குள் இருக்கும் அம்மையாரம்மைக்கு வரங்கள் தர, கரையில் வருமாறு அழைக்கிறாள் மதுரை மீனாட்சி. கரையேறிய அம்மைக்கும், அரவமுத்துவுக்கும், சிறுக்கனுக்கும் பூசை கொள்ளவும், பழிவாங்கவும் வரங்கள் தருகின்றார் ஈசன்.

தாசி தொடர்பால் கொல்ல ஆணையிட்ட அழகேசன் என்ற மன்னனையும், திண்டுக்கல் அரசனின் கருமறவன் குலத்தினரையும் அழித்து ஐந்து மரக்காலில் குறையாத தாலியையும் அற்று அண்ணரின் கழுவடியில் வைத்துப் பழி தீர்க்கிறாள் அம்மையாரம்மை. காந்தல், உதிரங்கக்குதல், கனகனப்பு, காய்ச்சல் என்று பரவிய நோய்களைக் கண்டு அஞ்சிச் சோதிடம் கேட்டறிந்து, உண்மையை உணர்ந்த மக்கள் அரவமுத்துவுக்கும், அனற்காரி அம்மையாரம்மைக்கும் பீடமிட்டுப் பூசையிடுகின்றனர்.

இதன்பின் அண்ணனும், தங்கையும் பல தலங்கள் சென்று இறுதியில் கோட்டை விளையில் கோயில் கொண்டு தங்குகின்றனர்.

## சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கிளைக்கதை

இதிகாசக் கதைகள் போன்று சில கதைப்பாடல்கள் கிளைக் கதைகளைக் கொண்டவைகளாகத் திகழ்கின்றன. வரலாற்றுக் கதைப் பாடலான ஐவர் ராசாக்கள் கதையின் கிளைக்கதைகளே 'வீணாதி வீணன் கதை', 'இடைச்சி கதை' என்பன என்று ஐவர் ராசாக்கள் கதையைப் பதிப்பித்த டாக்டர் நா.வானமாமலை அவர்கள் குறிப்பிடு கின்றார்.[41] இவை போன்று சிவனணைஞ்ச பெருமாள் கதையின் கிளைக் கதையே அரவமுத்து வீரன் கதை என்பது தெளிவாகத் தெரிகின்றது. காரணம் சிவனணைஞ்ச பெருமாள் கதையில் சுருக்கமாகச் சொல்லப் பட்ட ஒரு பாத்திரத்தின் கதையே, தனியொரு கதைப்பாடலாக, அச்சிறு பாத்திரமே கதைப்பாடல் தலைவனாக ஆக்கப்பட்டு, விரிந்த நிலையில் ஒரு தனிக் கதைப்பாடலாக அமைந்துள்ளது தான் அரவமுத்து வீரன் கதைப்பாடல். கதையின் வெவ்வேறு நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஒரே வரலாற்றைச் சொல்லும் பல்வேறு பெயர்கள் கொண்ட கதைப்பாடல்களும் உண்டு என்று ஐவர் ராசாக்கள் கதைப்பதிப்பு முன்னுரையில் நா.வா. அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றார். ஐவர் ராசாக்கள் கதை, பஞ்சபாண்டியர் கதை, கன்னடியன் படைப்போர், உலக முழுதுடையாள் கதை, வெட்டும் பெருமாள் கதை, மாலையம்மை கதை என்ற ஆறு பெயர்கள் கொண்ட கதைப்பாடல்கள் அனைத்தும் ஒரே வரலாற்றைச் சொல்லுவன என்றும் குறிப்பிடுகின்றார் நா.வா. அவர்கள்.[42] இதுபோன்றே பொன்னுருவி கதை, சிவனணைஞ்ச பெருமாள் கதை, அரவமுத்து வீரன் கதை என்ற பெயர்கள் கொண்ட அனைத்துமே ஒரே வரலாற்றைக் கூறும் கதைப் பாடல்கள் ஆகும். மாலையம்மை கதை என்பது ஐவர் ராசாக்கள் கதையின் முதல் பகுதி என்றும், இதில் குலசேகர பாண்டியனும் அவன் தம்பியரும் பிறப்பதற்காக, அவர்களது தாய் செய்யும் தான தருமங்களும் அவர்களது பிறப்பும் கூறப்படுவதாக டாக்டர் நா.வா. அவர்கள் குறிப்பிடுகின்றார்.[43] இது போன்றே 46 - என்ற எண்ணுள்ள பொன்னுருவி கதை என்ற ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடி சிவனணைஞ்ச பெருமாளின் தாய், குழவிப் பேறின்றிப் பல தலங்களுக்கும் சென்று தவம் செய்து சிவனணைஞ்ச பெருமாளைக் குழந்தையாக அடைவதைக் குறிப்பிடுவதாக உள்ளது. ஐவர் ராசாக்கள் கதையில் கதைத்

---

41. ஐவர் ராசாக்கள் கதை, பக். 4, 26.
42. ஐவர் ராசாக்கள் கதை, Op. cit. பக்.1
43. மேற்படி, பக்.30

தலைவனான குலசேகர பாண்டியனின் காலத்தில் அவன் ஆளுகைக்குட்பட்ட வள்ளியூரைச் சேர்ந்த வீணாதி வீணனைப் பற்றிய விளக்கமான கதையே ஐவர் ராசாக்களின் கிளைக்கதையான வீணாதி வீணன் கதையாகும்.[44] இதுபோன்றே 376 - சிவனணைஞ்ச பெருமாள் கதையில் குறிப்பிடப்பட்டுள்ள உடையார் என்ற பாத்திரம் பற்றிய விரிவான நிகழ்ச்சிகளே அரவமுத்து வீரன் கதை என்ற கிளைக்கதையாக அமைந்துள்ளது. 46-47-சிவனணைஞ்ச பெருமாள் கதையில் 'உடையார்' என்ற அரவமுத்து வீரன் தொடர்பான நிகழ்ச்சிகள் முற்றிலுமாக விடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## 376-சிவனணைஞ்ச பெருமாள் கதையில் அரவமுத்து வீரன்

இக்கதைப்பிரதியில் 1406 முதல் 1557 வரை உள்ள 151 வரிகளில் அரவமுத்து தொடர்பான நிகழ்ச்சிகள் சுருக்கமாகச் சொல்லப் பட்டுள்ளன. அரவமுத்து வீரன் இக்ககதைப் பிரதியில் உடையார் என்ற பெயரில் அழைக்கப்படுகிறார். சீவலமாறனின் மந்திரியாக இவர் இருந்தார் என்ற செய்தியுடன் இப்பகுதி தொடங்குகின்றது. மணிக் காஞ்சியில் மாடப்பத் தேவன் மகன் வன்னியத் தேவனின் வீர, தீரத்தை அறிந்த சீவலமாறன் அவனை அழைத்து வந்து, மற்றொரு மந்திரியாகத் தன் அரண்மனையில் இருத்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பு கின்றான். இது அறிந்த உடையார் மிக்க மகிழ்ச்சி அடைந்து அரசனின் ஆணைப்படி, தக்க சிறப்புகளுடன் வன்னியத் தேவனைத் தென்காசியினுள் அழைத்துவந்து, மந்திரியாக அமையும் ஏற்பாடுகளும் செய்கிறார். வன்னியத் தேவனோ வந்த நாள் முதலாகத் தன் உள்ளத்தில் கள்ளம் வைத்து, உடையாரைக் கொன்றுவிட்டுத் தான் ஒருவனே அரசனின் மந்திரியாக வீற்றிருக்க வேண்டும் என்று திட்டமிடுகிறான். அவ்வப்போது உடையாரைப் பற்றி இல்லாத, பொல்லாத செய்திகளை யெல்லாம் மன்னனின் காதில் போட்டுக் கொண்டே வருகிறான். உடையாரைக் கொல்ல, தக்க தருணத்தை எதிர்நோக்கியும் இருக்கிறான்.

அரசன் எண்ணை நீராடும் பொருட்டுத் திருவாழியைக் கழற்றிவைக்க, அதனை யாரும் அறியாமல் எடுத்து வன்னியத் தேவன், அங்கிருந்த உடையாரின் உடைவாளை உருவி அதனுள் திருவாழியைப் போட்டு, அதன்மேல் உடைவாளையும் இட்டுத் தன் இல்லம் சென்று விடுகிறான். நீராடி முடித்த சீவலமாறன், 'திருவாழி எங்கே' என உடையாரைக் கேட்க, உடையார் ஆழியைத் தேடுகிறார். தேடிப் பார்த்தும் கிட்டாததால் 'காணோம்' என்று கூற, உடையாரைத் தவிர, ஒருவரும் அங்கு வந்து போகவில்லை என்று கூறிய பிறர், அவரது உடைவாளை உருவி உறையைத் தட்டிக் காட்டுமாறு கூறவேண்டும்

---

44. மேற்படி, பக்.26

என்று மன்னனிடம் வேண்ட, மன்னனும் அவ்வாறே கூற, உடையார் தன் உடைவாளை உருவி உறையைத் தட்டத் திருவாழி கீழே விழுகின்றது. இது கண்டு மன்னன் மனவருத்தத்துடன் இருக்க, உடையாரோ, 'சட்டப்படி என்னைக் கழுவில் போடுங்கள்' என்று அரசனிடம் கூறுகிறார். அரசனும் பிறரும் வேண்டாம் என்று விலக்கியும் கேளாத உடையார், மானம் போனபின் உயிர்வாழ விரும்பாது, திடலில் கழுவை நாட்டச் சொல்லிக் கழுவேறி மாள்கிறார். இவரது இறப்பின் பின்னர் உண்மை உணர்ந்த அரசன், 'வஞ்சகமாக உடையாரைக் கொன்ற வன்னியத் தேவன் இனி எனக்கு மந்திரியாக இருக்கவேண்டாம்' என்று கூறித் தன் மருமகனான சிவனணைஞ்ச பெருமாள் இதுவரையில் மந்திரியில்லாதிருக்கிறான்; அது முறைமையாகாது என்று கூறிச் 'சிவனணைஞ்ச பெருமாளிடம் சென்று மந்திரியாக இருந்து கொள்வாயாக' என்று அனுப்பி வைத்து விடுகிறான்.

## அரவமுத்து வீரன் கதை - ஆய்வுக்குரிய குறிப்புகள்

இக்கதையில் ஆய்வுக்குரிய கருத்துகள் கீழே விவரிக்கப்படுகின்றன.

## அரவமுத்துவின் பிறப்புப் புதுமை

சொக்கநாதர் அக்கினிக் கபாலத்தை மேலுலகத்தை நோக்கி ஏந்த, உடன் அக்கபாலம் அனலாயெரிய, அதில் ஆதித்தன் உதயம் போன்று ஒரு ஆண்குழந்தை தோன்றியதாகவும், அதைத் தங்கத் தடுக்கில் வைத்து, ஈசன், இணைசூரன் - சிவகாமியம்மை தம்பதியரிடம் அனுப்பி வைத்ததாகவும் அரவமுத்துவின் பிறப்பு, புதுமையான முறையில் விவரிக்கப்பட்டுள்ளது (136 - 160). புராணத் தெய்வங்களின் பிறப்புப் போன்று அரவமுத்துவின் பிறப்பு விவரிக்கப்பட்டு, கதைத் தலைவனின் பிறப்பிலேயே புராணத்தன்மை இக்கதைப்பாடலில் புகுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. சீதை தோன்றியபோது, வில்லும் உடன் தோன்றியதாக இராமாயணக் காவியத்தில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்று இந்த அரவமுத்து வீரன் கதையிலும் அரவமுத்து பிறந்த போதே அவனுடன் ஒரு வெள்ளிக்கழுவும் தோன்றியதாகக் கதைப் பாடல் கூறுகின்றது (144 - 149). 'பின்னால் நடக்க உள்ள துயர முடிவை முன்கூட்டிக் குறிப்பிடுதல்' என்ற அடிப்படையில் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. 'கழு உடன் தோன்றியது' என்று கூறியிருப்பதால் அரவமுத்து கழுவேறி மாள்வது உறுதி என்ற எண்ணத்தைப் படிப்பவர் மனத்தில் விதைத்து, அது எங்ஙனம் நிகழும் என்பதை அறியும் ஆவலுடன், கதையைத் தொடர்ந்து படிக்கும் ஆர்வத்தைத் தூண்டி விடுவதாக, பின்வருவதை முன் உணர்த்தும் உத்தியாக இச்செய்தி பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

## அரவமுத்து - பெயர்க்காரணம்

'அரவமுத்து' என்ற பெயரைச் சிவபிரான், அரவமுத்து அக்கினிக் கபாலத்தில் பிறந்ததால் வைத்தார் என்று கதைப்பாடலில் பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது.

"அக்கினிக் கபாலமது அனலா யெரிந்திடவே
ஆதித்த னுதயமது போலே
பன்னொரு பிராயமுடன் பாலகனுந் தானுதிக்க" (142 - 144)

என உள்ளது. இது 'பெயருக்கு ஒரு காரணம் கூறுதல்' என்ற 'கதைப் பாடல் மரபு' அடிப்படையில் உரைக்கப்பட்டுள்ளது எனலாம். 'அரவம்' என்பது ஒலி, தமிழ், பாம்பு என்ற முப்பொருளைத் தருவதாக உள்ளதால், ஒலிக்கின்ற முத்து, தமிழ்முத்து, பாம்புமுத்து என்ற பொருள்பட இப்பெயர் அமைந்துள்ளது. சிவன் தந்த குழந்தையாதலின், சிவனின் அணிகலனான பாம்பைக் குறிப்பதாக இப்பெயரால் அழைத்திருக்கக்கூடும். அரவமுத்து வடுகர் குலத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரு குறிப்பு இக்கதைப்பாடலில் காணப்படுகின்றது.

"வடுகர்குலந் தனிலுதித்த வடிவழக னதிபெலவான்" (14)

என்று உள்ளது. தெலுங்கு பேசும் குலத்தில் பிறந்தாலும், தமிழகத்தில் வாழ்ந்ததால் அரவமுத்துவுக்குத் 'தமிழ் முத்து' என்ற பொருள்படவும் இப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம். முத்து என்று பெயரிடுதல் தென்பாண்டி நாட்டு வழக்கு. அதன்படி 'ஒலிக்கின்ற முத்து' என்று பொருள்படவும் இப்பெயர் இட்டிருத்தல் கூடும்.

## பெயர் மாறுபாடு

376 - சிவனணைஞ்ச பெருமாள் கதையில் அரவமுத்துவின் பெயர் உடையார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மந்திரிப் பதவி ஏற்றபின் தரப்பட்ட பட்டமாக இந்த 'உடையார்' என்பது இருத்தல் கூடும்.

## அரவமுத்து பெண் பித்தரா?

கதைப்பாடல் தலைவன் அரவமுத்து, இருதாசியர்களுடன் தொடர்பு கொண்டதாகக் கதைப்பாடலில் குறிக்கப்படுகின்றது (370 - 448, 516-550). சமூக் கதைப்பாடல் தலைவர்கள் மணமாவதற்கு முன்பும், மணமான பின்பும் தாசியர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகப் பல சமூகக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன.

மதுரைவீரன் கதைப்பாடலில் மதுரைவீரன், பொம்மியை மணம் செய்ததன் பின்னர், அரசனுக்கே உரிய தாசியான வெள்ளையம் மாளுடன் தொடர்பு கொண்டதைக் காட்டுகின்றது.

1613 - சின்னத்தம்பி கதையில்,[45] சின்னத்தம்பி, மணமாகு முன்பு தாசி வீட்டில் தங்கியிருந்தான் என்ற குறிப்பு வருகின்றது.[46]

வன்னியராயன் கதையிலும்[47] வன்னியராயன் (மணமாகாதவன்) நெல்லையம்பதியில் சின்னக்கண்ணாள் என்ற தாசியின் வீட்டில் தங்கியிருந்ததாகக் காட்டப்பட்டுள்ளது.

"சின்னக் கண்ணாள் வீடதிலே
சிறப்பாக யிருக்கும்போது
சாப்பிட்டு யிளைப்பாறி
தாம்பூலம் தான்தரித்து
சப்ர முஞ்சல் கட்டிலிலே
சயனஞ் செய்தா ரிருபேரும்" (335 - 337)

என உள்ளது.

பலவேச சேர்வைக்காரன் கதையில்[48] பெரிய பலவேசம் மணமானபின்னர் சந்தனமுத்தம்மை என்பவளுடன் தொடர்பு வைத்திருந்ததைக் காட்டுகிறது.

"தையல் நல்லாள் சந்தனமுத்தம்மையுடன் சென்று
சஞ்சரித்துப் பெரியபல வேசமன்னன் தானும்" (946 - 947)

என்று அமைகின்றது.

மணமாவதற்கு முன்பும், மணமானபின்பும், தாசியர்களுடனும், பிற பெண்களுடனும் தொடர்பு கொள்ளுதலை இத்தகு கதை நிகழ்ச்சிகள் நடந்த காலகட்டச் சமுதாயம் தவறாகக் கருதவில்லை என்பதே இக்கதைப்பாடல்கள் வழி புலனாகும் உண்மையாகும். இவைபோன்று இந்த அரவமுத்து கதையிலும், அரவமுத்து, மணமாவதற்கு முன்பு தாசியர் விரும்பியதால் அவர்களுடன் தொடர்பு கொண்டமை விவரிக்கப்பட்டுள்ளது. மதுரையிலுள்ள இலட்சுமி, வள்ளி என்ற இருதாசியர்கள் மனைகளில் அரவமுத்து தங்கிச் சென்றதாக விவரிக்கப்பட்டுள்ளது. அரவமுத்து தானாக விரும்பித் தாசியரிடம் செல்லவில்லை என்பதும், தாசியர் விரும்பி வற்புறுத்தியதாலேயே சென்றார் என்பதும் தெளிவாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

---

45. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடி.
46. The Wandering Voice, பதிப்பாசிரியர் இரா.நிர்மலாதேவி, பக். LVIII.
47. தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை, பதிப்பாசிரியர். சூ.நிர்மலாதேவி.
48. The Unsung Melodies - Publisher : The Institute of Asian Studies.

"இலங்கும் லட்சுமி என்றந்தத் தாசியும்
இட்டமா யவர் கிட்டவே வந்துதான்
என்ம னைக்குநீர் வந்துபோ மென்றனள்" (381 - 383)

என்று இலட்சுமித்தாசியே முதலில் அரவமுத்துவிடம் அழைப்பு விடுத்தாள் என்பது தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது.

"அல்லவருங் கூடிநிற்கையில் வள்ளிஅரவ முத்தின்மேலே
கண்ணோட்ட மாயவள் நீங்கவே சென்றந்தக் காரிகை யானவளும்
காமன் கணையினால் வாடினேன் நானுமே கட்டழகா நீரும்
எந்தன் மனைக்கிங்கே வாருமெனச் சொல்ல" (527 - 530)

என்று வள்ளி என்ற தாசியே அரவமுத்தினை முதற்கண் அழைத்த வளாகவும் சித்திரிக்கப்பெற்றுள்ளது. இவ்வாறு தாசியர்கள் முதலில் விரும்பி வற்புறுத்தி அழைத்ததால்தான் அரவமுத்து அவர்கள் மனைக்குச் சென்றார் என்று கதைப்பாடல் வரிகள் தெளிவாகக் குறிப் பிட்டுள்ளன. மேலும் தாசியுடன் தொடர்பு கொள்ளுதல் அக்கால கட்டச் சமுதாயத்தில் ஆண்களுக்கிருந்த சலுகை, உரிமைகளின் அடையாளம் என்பதால், தாசியர் தொடர்பால் அரவமுத்துவின் பண்புக்கு இழுக்கு நேர்ந்துவிடவில்லை என்பது இங்கு சிறப்பாகச் சுட்டத்தக்க ஒன்றாகும். இதனால் அரவமுத்து ஒரு பெண்பித்தர் எனக் கருதக் கிஞ்சிற்றும் வாய்ப்பில்லை என்பதே இக்கதைப்பாடல் வழி புலனாகும் உண்மையாகும்.

அரவமுத்துவைக் கழுவிலேற்றிக் கொன்றதாகக் கதைப்பாடல் காட்டுகிறது. அரவமுத்துவின் கழுவேற்றத்தைக் காணுமுன் கழுவேற்றம் பற்றிய சில விளக்கங்களை முன்வைத்தல் நலம் என்ற நிலையில் கீழ்க் காணும் செய்திகள் விவரிக்கப்பெறுகின்றன.

## கதைப்பாடல்கள் காட்டும் கழுவேற்ற முறைகள்

பண்டைக் காலந்தொட்டு, இந்தியாவிலும், தமிழகத்திலும் 'கழுவிலேற்றிக் கொல்லுதல்' என்ற மரணதண்டனை முறை வழக்கில் இருந்து வந்திருக்கின்றது. மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகளில்[49], இதற்கான குறிப்புகளைக் காண முடிகின்றது. நாலாயிரம் சமண

---

49. மாண்டவ்யர் என்ற முனிவரைத் திருடர்கள் தலைவன் என்று தவறாகக் கருதிக் கழுவேற்றியதாகவும், அவர் தபோவலிமையால் உயிர் நீங்காது கழுவிலிருக்கக் கண்டு, பின் அவரை உண்மை முனிவர் என்று உணர்ந்து இறக்கி, மன்னன் மன்னிப்புக் கேட்டதாகவும் உள்ளது.

முனிவர்களைக் கழுவேற்றிக் கொன்றதாக நாலடி நானூறு குறித்த வாய்மொழி வரலாறு தெரிவிக்கின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றில் நாட்டார் கதைப்பாடல்களில் 'கழுவேற்றிக் கொல்லுதல்' சில சமூகக் கதைப்பாடல்களில் விவரிக்கப்பட்டுள்ளன. சான்றாகக் காத்தவராயன் கதையில் காத்தவராயனைக் கழுவிலேற்றிக் கொன்ற செய்தி விவரிக்கப் பட்டுள்ளதைக் கூறலாம். கழுவில் ஆணிகளை மாட்டி வைப்பர்; அது 'கழுவாணி' எனப்படும் என்பதும், கழுவின் அடிப்பகுதி 'கழுவடி' எனப்படும் என்பதும், கழுமரத்தில் ஏறப் படிகள் உண்டு என்பதுமான குறிப்புகள் இக்கதைப்பாடல் மூலமாகக் கிடைக்கின்றன. கழுமரத்தைத் 'தூண்டி' என்றும் அழைப்பது உண்டு என்றும் இக்கதைப்பாடல் மூலம் அறிய வருகிறது. உடலில் ஆங்காங்கு கூர் ஆணிகள் பாயுமாறு செய்யப் பெற்ற கழுமரம் தூண்டி எனப்பட்டது போலும். ஆணிகளுடன் கூடிய கழுமரம் செய்யுமாறு காளி ஆணையிட்டாள் என்ற குறிப்பும் இக்கதைப்பாடலில் உள்ளது.[50]

> "கால்வைக்கு மிடங்களெல்லாம் கட்டாணி பாய வேண்டும்
> கால்வைக்கு மிடங்களெல்லாம் கழுவாணி தைக்க வேணும்
> நாபியிற் றைக்கு முள்ளூ நாசிக்குருவ வேண்டும்
> பக்கம் பதினாறு பழுவெலும் பாவதற்கு
> ஒப்பிட்ட ஆணியது ஒவ்வொன்றாய்த் தைக்க வேண்டும்"[51]

குருக்குளாஞ்சி கதைப்பாடலில்[52] தூண்டிமுத்து முதலியாரைத் தூண்டியிலிட்டார்கள் என்ற குறிப்பு வருகின்றது.

> "வட்டப் பிலாமரத்தில் அவரை வாய்த்ததொரு தூண்டிலிலே
> தூண்டிலிலே போட்டார்கள் அந்தத் தூண்டிமுத்து முதலியாரை
> மண்டையிலே பட்ட தூண்டில்அவர்க்கு-மறுபிறத்தில் பாயுதப்பா
> தொண்டையிலே பட்ட தூண்டில்-அவரைத்-துளைக்குதே மறு
> பிறத்தில்"[53]

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பலவிதமான மரணதண்டனை முறைகள் இருந்ததைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. வெட்டிக் கொல்லுதல் (தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை), மாறுகால், மாறுகை

---

50. காத்தவராய சுவாமி கதை (பெரிய எழுத்துக்கதை), பக்.180 - 187.
51. மேற்படி, பக்.180
52. The wandering Voice, பதிப்பாசிரியர் முனைவர் இரா.நிர்மலாதேவி
53. மேற்படி, பக். 157 - 158.

வாங்கிக் கொல்லுதல் (மதுரைவீரன் கதை) ஆகிய கொலைத் தண்டனை முறைகளைக் கதைப்பாடல்கள் காட்டுகின்றன. தீப்பாய்ந்து இறத்தல் (முத்துப்பட்டன் கதை), நாவில் சீலை சுத்தி நாவிழுத்து மரணமடைதல் (துடிவீர சுவாமி கதை & வன்னிராயன் கதை), கிணற்றில் விழுந்து இறத்தல் (பூலங்கொண்டாளம்மன் கதை) என்பன தற்கொலை முறைகளாகக் காட்டப்பட்டுள்ளன.

## கழுமரம், கழுவேறல் பற்றிய சில குறிப்புகள்

கழுவேற்றிக் கொல்லுதல் எவ்வாறு என்ற விரிவான செய்தி களைப் பிற இலக்கியங்களில் காண இயலவில்லை. கழுவேற்றிக் கொல்லும் முறைகள் பற்றி அரிய அவாக் கொண்டு, தான் எழுதிக் கொண்டிருந்த குறிப்புகளை அப்படியே வைத்துவிட்டு, கோவில்பட்டி நூலகத்துக்குச் சென்று 'தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்' வெளியிட்ட வாழ்வியற் களஞ்சியத்தைப் புரட்டியதாகவும், அதில் கழுமரம் பற்றியும், கழுவேற்றிக் கொல்லும் முறைகள் பற்றியுமான செய்திகள் இல்லை என்பதறிந்து மிகவும் வருந்தியதாக நாட்டார் கதாசிரியர் கி.ராஜநாராயணன் அவர்கள் தனது 'கரிசல் காட்டுக் கடுதாசி' என்ற கட்டுரைத் தொகுப்பில், "கழுகுமலை இருக்கு கழுமரத்தைக் காணலை" என்ற தலைப்பின்கீழ் (பக்.115-119) குறிப்பிட்டுள்ளார்.

கழுவேற்றிக் கொல்லுதலில் சில முறைகள் உண்டு என்று தெரிகின்றது. கழுமரங்களும் இதற்கேற்பப் பல வடிவங்களில் செய்யப் பட்டன என்றும் தெரியவருகின்றது.

1) கழுவேற்றிய உடன் உயிர் பிரிந்துவிடுமாறு கழுவேற்றுவது
2) வேதனையால் சித்திரவதை அனுபவித்துச் சின்னாள் கழிந்து உயிர் நீங்கும் முறையில் கழுவேற்றுவது என்ற இரு முறைகள் இருந்திருக்கின்றன. இந்த இரண்டாம் முறையில் உடலிற் குறிப்பிட்ட இடங்களில் குத்திக் குறிப்பிட்ட இடங்களில் வெளிவருமாறு உள்ள கூர் அமைப்புகளுடன் கூடிய கழுக்களும் அடங்கும்.

உடனே உயிர்நீங்குமாறு கழுவேற்றுவது கழுத்துடன் தொடர்பு டையதாகலாம். சில நாள் கழித்து வேதனையில் துடித்துச் சாகும் முறை குறித்த ஒரு குறிப்பு கி.ராஜநாராயணன் அவர்களின் 'கோபல்ல கிராமம்' என்ற நாவலில் விவரிக்கப்பட்டுள்ளது.

'குற்றவாளியின் கைகளைப் பின் கட்டாகவும், கால்களைப் பின்பக்கம் மடித்துக் கட்டியும் உள்ள நிலையில் அவனைத் தூக்கிக்

கழுமரத்தின் நுனியில் உட்காரவைத்து அழுத்துவார்கள். கழுவின் நுனி ஊசி அவனுடைய அபானத்துக்குள் புகுந்து, பின்கழுத்தின் பிடரி வழியாக வெளிவரும். மலமும், இரத்தமும் அபானத்தின் வழியாய்க் கசியும். கழுமரத்தின் நுனி அவன் தலைக்கு மேல் ஒருமுழம் நீட்டிக் கொண்டிருக்கும். இந்நிலையில் அவனுடைய கட்டுகளையெல்லாம் அவிழ்த்துவிட்டு விடுவார்கள். தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அவன் கழுமரத்தின் குறுக்கு விட்டத்தில் உட்கார்ந்து கால்களைத் தொங்கப் போட்டுக்கொண்டு, தலையைக் கவிழ்ந்து தரையைப் பார்ப்பது போலத் தெரியும்'.[54] இத்தகு விளக்கங்களைத் தரும் இந்நாவல் மூலம் கழுவேறல் தொடர்பான வேறுசில செய்திகளும் அறியக் கிடக்கின்றன. அவை:

1) குற்றவாளிக்குக் கழுவேறல் தண்டனை விதிக்கப்பட்ட பின்னர், தச்சர்களைக் கொண்டு கழுமரம் செய்வித்தல் உண்டு.

2) கழுவேறுகின்றவனின் உயரம், எடைக்குத் தக, கழுமரத்தின் நீள, அகலம், கனம் அமையும்.

3) கழுவேறியவனைக் 'கழுவன்' என்று அழைப்பர்.

4) கழுவேற்றியபின் கழுவேறியவனின் உயிர் பிரியும் வரை அவனது பின்பக்கம் நின்றுகொண்டு காவல் காப்பர். கழுவேறியவனின் பார்வையில் படக்கூடாது என்பதும், கழுவேறிய நிலையிலுள்ளவன் எது சொன்னாலும் பலிக்கும் என்பதாலும் அவன் பார்வையில் படாமல் நிற்பர் என்றும் தெரிகின்றது.

5) கழுவேறியவனின் பார்வை ஊரின் மீது படாதவாறு ஊருக்கு மறுபுறம் பார்த்து இருக்குமாறு கழுவேற்றுவர் என்றும் தெரிகின்றது.

6) அமர்ந்த நிலையில் கழுவேற்றப்படுபவனுக்குத் தண்ணீர்த் தாகம் மிகுதியாக இருக்கும்.

7) இத்தகு நிலையில் கழுவிலிருப்பவன் நான்குநாள் கழித்தும் உயிர் துறத்தல் உண்டு.

8) செத்துப்போனபின் கழுவனைக் கழுமரத்திலிருந்து உருவி எடுத்துப் புதைத்து அடையாளக் கல் நடுவர்.

---

54. கோபல்ல கிராமம், பக்.180-இன் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுதியது.

9) கழுவேறியவனைத் தெய்வமாக வழிபட·· உண்டு

10) குழந்தைகளுக்குக் கழுவேறியவனின் பெயர்சூட்டி விளங்க வைத்தலும் உண்டு.[55]

கழுமரம் பற்றிய குறிப்புகளை அகராதிகளிலும், களஞ்சியங் களிலும் காணமுடியவில்லை என்று ஆதங்கப்படும் கி.ராஜநாராயணன் அவர்களுடைய நாவலிலேயே கழுமரம், கழுவேறல் குறித்த இத்தகு செய்திகள் கிடைத்திருப்பது தமிழர் செய்த தவப்பேறு என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், கழுவேற்றுதல் ஒரு மரண தண்டனையாகப் பண்டு தொட்டு வழக்கிலிருந்து வந்திருந்தாலும், கழுமர வகைகள் பற்றியோ, கழுவேற்ற முறைகள் பற்றியோ, அதன் தொடர்ச்சியாக உள்ள நிகழ்ச்சிகள் குறித்தோ உள்ள செய்திகள் எதுவும் இலக்கியச் சான்றுகளாகக் கிட்டவில்லை. இந்நிலையில், இவை பற்றிய செய்திகளை நாட்டுப்புற மக்கள் பாதுகாத்து வைத்திருக்கின்றனர் என்ற செய்தி மிக்க மகிழ்வுக்கு உரியதாகும். தன் நாவலில் கழுமரம் பற்றிய செய்திகளைத் தன் ஊரில் கண்டது கொண்டும், தன் ஊர்ப்பெரியவர்கள் கூறக்கேட்டும் எழுதியதாக கி. ராஜநாராயணன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.[56]

## அரவமுத்துவைக் கழுவேற்றிய முறை

அரவமுத்து வீரன் கதையில், அரவமுத்து கழுவேற்றப்பட்ட விதம், 'கோபல்ல கிராமம்' நாவலில் காணப்படும் கொலைக் குற்றவாளியைக் கழுவேற்றிய முறைபோல் அமைந்திருத்தல் கண்கூடு. சித்திரவதைப்பட்டு, உடல் வேதனை அனுபவித்து, ஆறு நாட்களுக்கு மேல் கழுவில் இருந்து, பின்னர் மரணமடையும் விதத்தில்தான் அரவமுத்துவின் கழுவேற்ற முறையும் அமைந்துள்ளது. அரவமுத்து, கழுவேற்றிய உடன் மடியாமல், கோபல்ல கிராமக் குற்றவாளி போன்று தண்ணீர்த் தாகமுற்று திண்டுக்கல்லுக்கு மோர் விற்கச் சென்ற இடைச்சியர்களை, மோர் கொண்டு தருமாறு கூவியழைத்த செய்தியும் கதைப் பாடலில் இடம்பெற்றுள்ளது சுட்டத்தக்கது (713 - 715). கழுவின் கூரிய முனையில், அமர்ந்த நிலையில் அரவமுத்து கழுவேறியிருந்தான் என்று தெரிவிக்கும் குறிப்பும் காணப்படுகின்றது.

"கழுவளைய அதன் முனையில் கட்டழக னரவமுத்து
சாடியவ னிருக்கையிலே" (701 - 702)

என்ற வரிகள் சான்றாகும்.

---

55. கோபல்ல கிராமம், Op.cit., பக். 177 - 189 வரை உள்ள பக்கச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பத்துக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன.
56. கரிசல் காட்டுக் கடுதாசி, பக். 116 - 117

கழுவில் விழுந்ததில் காயம் ஏற்பட்டிருந்தது என்ற குறிப்பும் உள்ளது.

"வாடாமற் கழுவதிலே வந்துவிழுந்த வடுவும்" (712)

என்றமைந்துள்ள வரி சுட்டத்தக்கது. மாரிமுத்து இடைச்சி என்பவள் ஆறு நாட்கள் மோர் கொடுக்க, அதை அருந்திக்கொண்டு அரவமுத்து கழுவில் ஆறுநாளும் உயிருடன் இருந்திருக்கிறான் என்ற செய்தியும் கிடைக்கிறது.[57] ஆறாம் நாளிரவில் அரவமுத்து தன் தங்கை அம்மையாரம்மையின் கனவில் தோன்றியும் மோர் கொண்டு வருமாறு கூறுவதாகவும் ஒரு குறிப்பும் உள்ளது.

## அரவமுத்துவின் கழுவேற்றம் - சில பின்னணி உண்மைகள்

அரவமுத்து கழுவேற்றிக் கொல்லப்பட்டான் என்பது நடந்த உண்மை. கதைப்பாடலில் இந்த நடந்த உண்மைக்குப் பின்னணியில் பல பூச்சுக்கள் கொடுத்து வேறுபட்ட தோற்றம் தருமாறு படைக்கப் பட்டுள்ளது. அரவமுத்து சிறந்த வீரனாகத் திகழ்ந்திருத்தல் வேண்டும். வீரப்பயிற்சிகளில் வல்லவனாகத் திகழ்ந்ததைக் கதைப்பாடல் விளக்கிக் காட்டியுள்ளது (255 - 263). "அரவமுத்து வீரன்" என்றே அழைக்கப் பட்டும் உள்ளான்.[58] மிகுந்த வீரத்துடன் ஆசானே வியப்புறும்படியாக மந்திரப் பயிற்சிகளில் வல்லவனாகவும் (315 - 338) சிறந்த அழகனாகவும் (257, 451, 701) திகழ்ந்திருக்கிறான். அழகாபுரி, மதுரை என்ற இடங்களுக்கு இவன் சென்றபொழுது, அங்குள்ள இலக்குமி, வள்ளி என்ற இரு தாசியர்களுடன் இவன் கூடிக் களித்தான் என்று கதைப்பாடல் காட்டுகின்றது. இது அரவமுத்துவைப் பெண்பித்தனாகக் காட்டச் செய்யப்பட்டுள்ள முயற்சியாகும். மதுரைவீரனை வெள்ளையம்மாள் போன்ற மூன்று பெண்களுடன் தொடர்புகொண்டவனாகக் காட்டி, அவன் காமுகன் ஆனதால் கொல்லப்பட்டான் என்று சில கதைப் பிரதிகள் காட்டுவது, கதையின் அழுத்தத்தை மாற்றச் செய்துள்ள முயற்சி என்று மதுரைவீரன் கதை வேறுபாடு பற்றி டாக்டர் நா.வானமாமலை அவர்கள் குறிப்பிட்டிருப்பது[59] ஈண்டு ஒப்புநோக்கற்குரியது.

---

57. "மாரிமுத்து இடைச்சியவள் மகிழ்ந்தாறு நாளாக
கொடுத்துவர. . . . . ."

58. அரவமுத்து வீரன் கதை (கதைத் தலைப்பு)
"அரவமுத்து வீரனுட பிறவிதன்னை" (8)
"வீரனவ னரவமுத்து" (266)

59. தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு, டாக்டர் நா.வானமா மலை, பக்.136, ஆராய்ச்சி (இதழ்) மலர்.2, இதழ்.2.

திண்டுக்கல் அரசன் அரவமுத்துவை ஆள்விட்டு அழைத்துவரச் செய்தததாகக் கதைப்பாடல் காட்டுகின்றது (565 - 567). என்ன காரணத்துக்காக அழைத்தான் என்று கதைப்பாடல் தெளிவுபடுத்த வில்லை. வந்த இடத்தில் அரசனுக்கு எண்ணை தேய்த்து விடுதலில் அரவமுத்துவுக்கும், கருமறவனுக்கும் நேர்ந்த கௌரவச் சிக்கலில் அரவமுத்து, அரசனின் திருவாழியைத் திருடியவன் என்ற குற்றச் சாட்டுக்கு இலக்காக்கப்படுகின்றான். இதனால் அவனே விரும்பிக் கழுவேறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இதில் அரவமுத்துவின் நேரடி எதிரியாகக் கருமறவன் காட்டப்படுகின்றான். 376-சிவனணைஞ்ச பெருமாள் கதையில் வன்னியத்தேவன் (கருமறவன்), தான் மட்டுமே மந்திரியாக வீற்றிருக்க வேண்டும் என்று திட்டமிட்டு உடையார் (அரவமுத்து) மீது பழி ஏற்படுத்தியதாக உள்ள செய்தி, இந்த அரவமுத்து வீரன் கதையில் குறிப்பிடப் பெறவில்லை. கருமறவன் அரசனுடைய திருவாழியை எடுத்து அரவமுத்துவின் உடைவாளுக்குள் போட்டதற்கு, அரவமுத்து, தன் சிறுக்கனை விட்டு அரசனுக்கு எண்ணெய் தேய்த்து விட்டதே காரணம் என்று கூறப்பட்டுள்ளது (624 - 627). மறவனின் தீய செயலுக்கு 'மந்திரிப்பதவி ஆசை' என்ற சிவனணைஞ்ச பெருமாள் கதை காட்டும் அரசியற் காரணமே பொருத்தமானதாகத் தெரிகின்றது.

இதுபோன்று திண்டுக்கல் அரசன், அரவமுத்துவைப் பற்றி அறிந்ததும், அரவமுத்துவை மணிக்காஞ்சியிலிருந்து வரவழைத்ததன் காரணம் தன்னுடைய விருந்தாளியாகத் தங்கிச் செல்வதற்காக என்று அரவமுத்து வீரன் கதை கூறும் காரணமும் பொருத்தமானதாகத் தெரியவில்லை (609 - 610, 636 - 637). அரவமுத்துவுக்கு மந்திரிப்பதவி அளிக்கவே மன்னன் அவரை அழைத்திருக்க வேண்டும். சீவலமாறனின் மந்திரியாக உடையார் (அரவமுத்து) இருந்ததை 376- சிவனணைஞ்ச பெருமாள் கதை காட்டுகின்றது. திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டவுடன், அவமானத்துக்கு அஞ்சிச் சட்டப்படி அரவமுத்து கழுவேறி மாள உறுதி கொள்கிறார். அரசனும் மந்திரிமாரும் வேண்டாம் என்று விலக்கியதாகவும், அழுததாகவும், சிவனணைஞ்சபெருமாள் கதை,[60] அரவமுத்து வீரன்

---

60. "இஷ்டமதாக யிறக்க உடையாருஞ் செல்ல
இன்பமான சீவலமார்பன் விலக்கி யிருக்க" (1540 - 1541)

"சீக்கிரமாகக் கழுவி லிறந்து விடுவேன்
ஆரு தடுத்தாலுங் கேட்டிட மாட்டேனே யென்று
அரனா ராணை நீங்கள் தடுக்கவும் வேண்டாம்
என்றவன் சொல்லிடவே சீவலமார்பனுங் கேட்டு
இரங்கி மனது கலங்கியே மண்டபஞ் சென்றார்"(1543 - 1547)

கதை[61] இரண்டிலுமே குறிக்கப்பட்டுள்ளது. இங்கு காத்தவராயன் கதையில் காத்தவராயனின் கழுவேற்றத்தை 'வேண்டாம்' என்று தடுத்த அரசன் பற்றி இக்கதையின் பதிப்பாசிரியர் டாக்டர் நா.வானமாமலை கூறும் கருத்துகள் ஒப்புநோக்கத்தக்கன.

அந்தணர் குலப் பெண்ணான ஆரியமாலையையும், பிற சாதிகளி லிருந்து பிற பெண்களையும் மணந்துகொண்டிருந்த காத்தவராயன், தேவாதி மூவர்களும், ஏன் அரசனுமே, பலதார, பலசாதி மணம் செய்தவர்களே என்பதால், தான் இவ்வாறு பலதார, பலசாதி மணம் செய்துள்ளமை குற்றமில்லை என்றும், இதற்காகத் தன்னைக் கழுவேற்றிக் கொல்லுதல் அநீதியான செயல் என்றும் வாதிடுகின்றான். அவன் வாதத்தில் இருந்த உண்மையை உணர்ந்ததும் அரசன் மனம்மாறி, கழுவேற்றத் தண்டனையி லிருந்து காத்தவராயனுக்கு விலக்கு அளித்து, "ஆரியமாலையோடும் பிற மனைவியரோடும் வாழ்ந்து கொள்க" என்று கூறியதாகக் கதைப் பாடலில் உள்ள அமைப்புகள் அரசு, சாதி முறையைப் பாதுகாப்பதில் கடைப்பிடித்த கடுமையான அடக்கு முறையை மறைப்பதற்காகும் என டாக்டர் நா.வானமாமலை அவர்கள் இக்கதைப்பாடல் பதிப்பின் முகவுரையில் இனம் பிரித்துக் காட்டியுள்ளார். இந்தச் சிவனணைஞ்ச பெருமாள் கதை, அரவமுத்து வீரன் கதைகளிலும் அரசன், உடையார் என்ற அரவமுத்துவின் மீது பரிவு காட்டுவதாக உள்ள பகுதிகள், அரசனின்மீது எக்குற்றமும் இல்லை; அரவமுத்துவின் கழுவேற்றத்துக்கு அரவமுத்துவேதான் காரணம் என்பதை வலியுறுத்த அமைந்த அமைப்புகள் என்பது ஐயமற விளங்குகின்றது.

'காத்தவராயன், கடவுள் சாபத்தை நிறைவேற்றத் தானே கழுவேற முன்வந்தான்' என்று காத்தவராயன் கதையில் அமைந்துள்ள அமைப்பு போன்றே, இந்த 376 - சிவனணைஞ்ச பெருமாள் கதை, அரவமுத்து வீரன் கதைகளிலும், அரசனும், மந்திரிமார்களும் தடுத்தும் கேளாமல், அரவமுத்து, தான் கழுவேறி மாளவேண்டும் என்பது 'அரனார் ஆணை' என்று கூறுவதாக உள்ளது.[62] 'இதுவரையும் மட்டுமே தனக்குப்

---

61. "இருப்பதில்லை என்றுசொல்லி அரவமுத்து உரைக்க
ராஜனுடன் மந்திரிமார் கூடிஇரைந் தழுது" (660 - 661)

"ஆணையிட்டு இருப்பதில்லை என்றுரைத்த போது
அரசனுடன் மந்திரிமா ரெல்லோரு மழுதார்"(666 - 667)

62. "ஆரு தடுத்தாலும் கேட்டிட மாட்டேனே யென்று
அரனா ராணை நீங்கள் தடுக்கவும் வேண்டாம்"
376 - சிவனணைஞ்ச பெருமாள் கதை வரிகள் (1545 - 1546)

பூதலத்தில் இருக்க வரம் உண்டு'[63] என்றும், 'தப்பாமல் சொக்கநாதர் தந்த வயதும் இத்துடன் சரியாகவிட்டது'[64] என்றும் கூறி, 'இனி உயிரோடு இருக்கமாட்டேன்' என்று அரவமுத்துவே கழுவேறி மாள உறுதி கொள்வதாகவும் கதைப்பாடல் காட்டுகின்றது.

இத்துடன் அரவமுத்து பிறந்த பொழுதே கழுவும் உடன் தோன்றியதாகவும், அக்கழுவை இறைவன் வெள்ளிமலையில் உள்ள வேங்கை மரத்தின் நடுவில் வைத்து விட்டதாகவும், அரவமுத்து கழுவேற முடிவெடுத்து வெள்ளிமலை நோக்கி வந்ததும், வேங்கை மரத்தின் நடுவிலிருந்த வெள்ளிக் கழு வெளிப்பட்டதாகவும், அரவமுத்து கழுவேறுவதற்கு வாகாக அக்கழு வளைந்து கொடுத்ததாகவும் உள்ள செய்திகளும் காணப்படுகின்றன (146-149, 696-700). புராணப் போக்கில் அமைந்துள்ள இத்தகு இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் மூலக்கதையின் ஆற்றலைக் குறைக்கப் பிற்காலத்தில் இணைக்கப்பட்ட இடைச் செருகல்களாக இருத்தல் வேண்டும்.

அரவமுத்துவின் பிறப்பும், மனிதனால், மனிதப் பெண்ணின் வயிற்றிலிருந்து அல்லாமல், அரவமுத்துவை தங்கத்தடுக்கில் அரனார் வைத்து அனுப்பியதாகவும், அப்பொழுதே பன்னொரு வயதுச் சிறுவனாக அரவமுத்து இருந்தார் என்றும் உள்ள அமைப்புகளும் (157-160, 143-144) இடைச் செருகல்கள் ஆகும். சமூகக் கதைப்பாடல் நெறி களுக்கு உட்படாத இத்தகு நிகழ்ச்சிகள் கதைப்பாடலின் உண்மையான நோக்கத்தை அறிந்துகொள்ள அமைக்கப்பட்டுள்ள தடைக்கற்களாகும்.

இத்தகு தடைக்கற்களை எல்லாம் நீக்கிவிட்டு மூலக்கதை உணர்த்தும் கருத்தை மட்டும் காண்பவர்களுக்கே கதையின் கனம் தெளிவாகப் புரியும். அரவமுத்து என்ற ஒரு வீரமகன் அரசனால் வரவழைக்கப்பட்டு மிகக் கேவலமான முறையில் திருட்டுக் குற்றத்துக்கு ஆளாக்கப்பட்டுக் கழுவேற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறான். அரவமுத்து - கழுவேறலின் பின்னணியில் உள்ள பூச்சுக்களை அகற்றிவிட்டு நோக்கினால் இவ்வுண்மை விளங்கும்.

அரவமுத்து இவ்வாறு அநீதியாகக் கொல்லப்பட்டதால் மக்கள் மனத்தில் கனன்று எழுந்த உண்மைத்தீயே அவனைப் பற்றிய கதைப் பாடலை மக்கள் மத்தியில் படைத்து உலவவிட நாட்டுப்புறக் கவிஞனைத் தூண்டியிருக்கின்றது. மக்கள் வாய்மொழியாக வழங்கி வந்த இவனதுகதை, தக்க ஒருவனால் கவிதை வடிவம் பெற்றிருக்கிறது. அரவமுத்துவுக்கும், அவன் தங்கைக்கும் கோவில் அமைத்து வழிபாடு நடத்தி, அவர்கள்

---

63. "இதுவரையும் பூதலத்தி லிருக்கவர முண்டு" - அரவமுத்து வீரன் கதை (664)
64. "தப்பாமல் சொக்கநாதர் தந்தவயதுஞ் சரியே" -- மேற்படி நூல் (689)

கதையை வில்லுப்பாடலாகவும் அவர்கள் கோவிலில் பாடி மகிழ்ந்து வருகின்றனர். பல தலங்கள் சென்று இறுதியாகக் கோட்டைவிளை என்ற ஊரில் அரவமுத்து கோயில் கொண்டதை இக்கதைப்பாடலின் இறுதிப்பகுதி தெளிவுபட விளக்கிச் சொல்லுகிறது (901 - 928).

## அரவமுத்து தெய்வமாகக் கோயில் கொண்டுள்ள இடங்கள்

அரவமுத்துவும் அவர் தங்கை அனற்காரியான அம்மையாரம்மையும் புதுவூர், எருக்கலைவெட்டி, உவரி, நட்டாறு, கொத்தங்குளம், கூடங்குளம், உப்பாறு, பண்ணையூர், கன்னங்குளம், காணிமடம், அஞ்சுகிராமம், ஒற்றைப்பனை, கோட்டை வாயல், பஞ்சலிங்கபுரம், சுக்குப்பாறை, கோட்டைவிளை என்ற இடங்களில் கோயில் கொண்டதாகக் கதைப்பாடல் காட்டுகின்றது. இவ்விடங்களிலெல்லாம் அரவமுத்து வீரன் கோயில் கட்டித் தெய்வமாக வணங்கப்பட்டு வந்திருக்கிறான் என்பதுணர்த்தும் அகச்சான்றுகளாக 901-928 ஆகிய வரிகள் அமைந்துள்ளன.

* * *

## சுவடி எண். 46 - 47.
## சின்னணைஞ்சான் கதை என்ற
## சிவனணைஞ்ச பெருமாள் கதை (மூலம்)

### ஹரிஓம்

### கடவுள் வாழ்த்து

வெள்ளிலங்குந்[1*] தென்கயிலை வாழுமர னாரும்[2]
பூதலம் பூந்ததிரு மாலுந்[3]துணை யாமே
கன்னிபர மேஸ்பரியா ளீன்றெடுத்த பாலன்
கணபதியுஞ் செந்தில்வளர் கந்தன்றுணை யாமே
வந்தருள வேணுந்தெய்வ யானைவள்ளித் தாயே
மாது பொன்னுருவி கதை வையகத்தில் கூற
செந்தமிழுங் காவியமுஞ் சீருந்தவ றாமல்
செல்விசர சோதியே[4]ஒன் சியல்[5]தரவே வேணும்
வேணுந்தமி ழெந்தனுக்குத் தாணுமாலை நாதா
வில்லினுரை[6] ஒன்னருளி னாலே சொல்லுதற்கு
ஆணுவமாய்ச்[7] செங்கோட்டை நாட்டையர சாண்ட
அம்மைகதை பாடவுன் னருள்தரவே வேணும்
தருவாயெனக் குன்னருள் தாயே சரசோதி
சந்ததியும் பாக்கியமுந் தவறாமல் தருவாய்
உருவாக யெவ்வுயிரு மொன்றாக நின்று
உத்தமியே அத்தரிடம்[8] வாழுஞ்சிவ காமி
அத்தரிடம் வாழுகின்ற நித்திய கலியாணி
அம்மையவி ராமி[9]திரி சூலிசிவ காமி

### பாடலாசிரியர் வரலாறு

பத்திரமா காளியருள் புத்திரனென் றேதான்
பாருலகி லேவலங்கைக் குலத்துதித்த[10] செல்வன்
சீர்சிறக்குஞ் செங்கோட்டை நாட்டையாண்ட மன்னன்
செல்வி பொன்னுருவியம்மை செந்தமி முரைத்தேன்
பார்சிறக்கும் பரமசிவன் றன்னருளா லுதித்த
பரமசிவ னருள்பால னறுமுகவன் சொன்னான்

---

* எண்கள் குறிக்கும் சொல் விளக்கங்களை 'அருஞ்சொற்பொருள் விளக்கம்' என்ற தலைப்பில் காண்க.

## அவையடக்கம்

சொன்னதமி ழென்னவகை போலவேதா னானால்
சூரியனுக்கு வீரியஞ்சொல் மின்வெட்டம்[11] போலே
பொன்னுலகில் மன்னனுட வேழமதுக்[12] கொப்பாய்
பூவுலகில் மண்ணனை[13]தான் சரியென்றாப் போல
முன்னமே தமிழ்ப்புலவர் சொன்னவுரை கேட்டு
மொழிந்ததமி ழானதுக்கு மோசங்கள் வாராமல்
பொற்படிக்கு[14] கல்படி[15] சரியென் றுரைத்தாக்கால்
பொன்னுக்கிணை யாகக் கருங்கல்லுஞ் சரியாமோ
அப்படியே போல்நானு மறியா துரைத்த தெல்லாம்
ஆனாலுந் தமிழ்ப்புலவ ராதரித்துக் கொள்வீர்
கானமயி லாடக் கண்டுதன்னிற் கைவிரித்து
வான்கோழி யானதுவுஞ் சரியென் றுரைத்தாப்போல்
பொன்னுலகில் பெரியோர்க ளுரைத்தசொல்லைக் கேட்டு
புகழ்ந்துரைத்தேன் பொன்னுருவி அம்மைகதை தன்னை
பொன்னுருவி யம்மைகதை பூவுலகில் கூற
பெரியோர்கள் பொறுத் தாதரித்துக் கொள்வீரே.

## பொன்னுருவி திருமணம்

நாடான நாடதிலே நல்லதென்காசி நாட்டில்[16]
தேசமான தேசத்திலே செங்கோட்டை யானதிலே
ஊரான ஊரதிலே உத்ததென் காசியிலே
அஞ்சிமுடி மன்னவர்க ளாண்டிருந்து[17] போனகாலம்
ஆண்டிருந்தார் செம்பவளராசன்[18] ஆயிழையாள் பொன்னுருவி
அய்பேருக்கு[19] முடன்பிறந்தா ளாயிழையாள் பொன்னுருவி
மங்கைநல்லாள் பொன்னுருவி வாழ்ந்திருக்கும் நாளையிலே
வாழுஞ் செம்பவளராசன் மங்கயரை மாலையிட்டார்
மாலையிட்டு மணம்புணர்ந்து வயசுபன்னிரண்டு செல்ல
பன்னிரண்டு திருவயசில் பாவைநல்லாள் திருப்பூத்தாள்[20]
திருப்பூத்த கலியாணம் சேரவங்கே தானடத்தி
விருப்பமுத்த பொன்னுருவி மெல்லிநல்லாள் வாழ்ந்திருந்தாள்

## குழவிப் பேறின்மையின் கொண்ட வருத்தம்

வாழ்ந்திருக்கு மன்னாளில் மக்களில்லை யெனவுரைத்தாள்
பாலக னருளில்லாமல் பாவைநல்லாள் தான்மயங்கி
மக்களில்லா வாழ்வதுதான் வையகத்தில் குறைவாழ்வு

குழந்தையில்லா வாழ்வதுதான் கொற்றவர்க்கு மாகாது
கொள்ளிவைத்துக் குடஞ்சுமக்க[21] குழந்தையொன்று வேண்டாமோ
வேண்டாமோ யென்கணவா மேதினியோர் தங்கள்முன்னே
மாய்த்திடுவேன் என்னுயிரை மகாதேவா நானொருபெண்
ஆண்டபடை கரிபரியு மரசாளப் பாலனில்லை
மலடி மலடியென்று மாநிலத்தார் சொல்லுகிறார்
இருளி[22] இருளியென்று யெல்லோருஞ் சொல்லுகிறார்
இருளியென்ற யென்வயறி லிளவரசர் தரியாமல்[23]
முத்தத்திலே[24] முருங்கைநட்டாள் மொய்குழலாள் பொன்னுருவி
முருங்கையது காய்க்காமல் முழுமலடா யிருந்ததென்ன
இத்தனைக்கு மாபாவம் செய்தேனோ யீஸ்பரனே
பக்கத்தில் வாழையது பரிவினுடன் முழுமலடாய்
நான்றான் மலடிருந்தேன் நான்பாவம் செய்ததினால்
பெட்டகத்தின்[25] புடவையதைப் பிள்ளையது கேட்கவில்லை
வட்டிலிலே சாதம்வைத்தால் வாரியுண்ணப் பாலனில்லை
வாழைக்குமோ பிள்ளையுண்டு வாய்த்ததள்ளை[26] பிள்ளையென்றும்
வருஷத்துக்கும் பிள்ளையுண்டு மிலைபூ காயான தெல்லாம்
கல்லுக்கும் பிள்ளையுண்டு கருதியம்மி குழவி[27]யென்றும்
இருபத்திரண்டு திருவயசி ளமலடாய்ப் பொன்னுருவி
குருவினிட உபதேசம் குன்றாமல் மனதிலுன்னி
முப்பத்திரண்டு வயசுமட்டு முழுமலடாய் மொய்குழலாள்
முன்னெத்தி[28] நரைத்தேனே முகங்களெல்லாஞ் சுரித்தேனே[29]
இட்ட யெழுத்தின் படியே யிறையவனார் கல்பனையோ[30]
தொட்டு வலக்கைபிடித்துச் சுத்திவந்த பாவமிதோ[31]
முன்செய்த தீவினையோ முதல்வன் செய்ததுவோ
பின்செய்த பொல்லாங்கோ பிள்ளையில்லாமல் போனதெல்லாம்
மதகரியும் வாள்படையும் வையகம் உண்டாகிலென்ன
விதமுடைய பொன்னுமுத்தும் வேண்டுமட்டுந் தேடிலென்ன
சதர்கோடி[32] திரவியங்கள் தானுமிகப் படைத்தாலும்
மதலையில்லா வாழ்வதுதான் வாழ்வதிலும் வாழ்க்கையில்லை
புருஷனுக்குப் பின்புசெல்ல பிள்ளைமண மதிகமல்லோ
விதிவசமோ முன்னாளில் வேதனிட்ட[33] கல்பனையோ
மழைபொழிந்து மண்ணுருகி வழிந்தோடும் இம்மணலில்
வளையலொலி வோசையிட மற்றுஞ்சிறு பிள்ளைகளும்
மண்ணளந்து சேறாடி மகன்மடியில் வந்து ஏறானோ
மண்ணைத் துடைத்திடேனோ மடியில்வைத் தூட்டேனோ
சேறாடி நடந்துவரும் பிள்ளைவிளையாட்டைக் காணேனோ

திண்ணமனை தனிலிருத்திச் சிறுகலத்தில் சோறுமிட்டு
உண்ணுமுண்ணு மகனேயென்று ஊட்டேனோ மடியில்வைத்து
நல்லோர் மனைதனிலே நாமிருபேர் பெண்பேசி
சாலநல்ல கலியாணம் சாஸ்திரங்கள் தான்முடித்து
கோலத்தோடே மகனார்நம்மைக் கும்பிட்டுக் கைதொழும்போது
மாலைக் கழுத்தோடே மகிழ்ந்துமுத்தங் கொள்ளேனோ
வேல்கண்விழி மடவார்கள் மெல்லியர்கள் பந்தலின்கீழ்
பால்கொச்சையாய்[34] நாறுதென்று பகராரோ யென்மேலே
மதுரமொழி மடவார்கள் மலடியென்று சொல்லயிலே
சரீரமெல்லாங் குழறுதய்யோ சம்பிமுகம்[35] வாடுறேனே
ஈரல் கருகுதய்யோ எலும்புகழ லாகுதய்யோ
தெருவதிலே பந்தடித்துச் சிறுவர்விளை யாடுகையில்
உன்பிள்ளை யடித்துதென்று வொருவர்வரக் காணேனே
முறத்தா[36] லடிப்பேனென்று முறங்கொண்டு செல்லேனோ
பொன்னைமெத்தப் படைப்பானேன் புத்திரந்தா னில்லாமல்
பணத்தைரெம்பப் படைப்பானேன் பாலகன்றா னில்லாமல்
எந்தன்மனை தனில்வளர்ந்து இடுகாட்டில் போறபொழுது
நீர்க்குடமுந் தலயில்வைத்து நெட்டோல[37] மிட்டழுது
கோர்க்குமந்தக் கனல்மூட்டிக் கொள்ளிவைக்க வேண்டாமோ
வேண்டாமோ யென்கணவா மேதினியோர் தங்கள்முன்னே
பெத்தெடுப்பார் தங்கள்முன்னே வெற்றுடம்பாய் நிற்பேனோ
என்றுசொல்லிப் பொன்னுருவி யேங்கிவயித் தொட்டித்தான்
ஆண்டவனே தஞ்சமென்று அடிதொழுது தானிருந்தாள்
நன்றிசேர் புகழ்படைத்த நாயகரே யென்கணவா
நாட்டிலுள்ளோர் தங்கள்முன்னே நானுமுடம் பெடுத்தேனே
குன்றாது செல்வமது குழந்தைநமக்குப் பிறந்தால்
குறையல்லவோ யிதுநமக்குக் குழந்தையொன்று இல்லையானால்
இன்ப முள்ளதொரு நல்மகனை யீன்றேதான்
எல்லோர்க்கு மன்னமிட் டேற்கமகிழ வேண்டாமோ
அல்லனய[38] குழலார்கள் கூட்டத்தி லேதான்
அன்பாய் மகனையு முன்பாயெடுத்து நில்லேனோ
முன்பாக முத்தத்தி லென்மகன் றன்னையிருத்தி
முன்பில் விளையாடக் கண்டுமகிழ வேண்டாமோ
வல்லமகனை மடிமே லெடுத்து யிருத்தி
மகனே யெனச்சொல்லி வாய்மொழிகேட்க வேண்டாமோ
நல்லமகனை மணித்தொட்டில் மேலே கிடத்தி
நாடி விளக்கேத்தி வோடியேதா ராட்டேனோ

அன்பாய் மகனுக்கு கிங்கிணி[39] நூல்புரங்[40] கொஞ்ச
ஆதர வாய்வரும் பாவினை[41]காண வேண்டாமோ
பாவினையாக[42] மகனாரைப் பள்ளிக்கு வைத்து
பள்ளி புகுந்து படிப்பதுகேட்க வேண்டாமோ
ஆவலுடன்பல வாயுத வித்தையுங் கற்று
அங்கத்தில்[43] வென்றிடுஞ் சங்கீதங்[44]காண வேண்டாமோ
மேவுமட வாரை மிய்க்கக்[45] கலியாணஞ் செய்து
வெற்றி முரசுகளொக்க வதிர்ந்திட வேதான்
தாபமா யுள்ள சடங்குபலது முகித்து
தாயாரைக் கைதொழ வாசையினால் மகிழேனோ
ஏனோநமக்கு மதலைதா னில்லாத பாவம்
ஏந்திழையா ளந்தப் பொன்னுருவித் தாயார் சொல்வாள்
மகனை யெடுத்து மடிதனில்நான் வைத்திராமல்
மகாகோடி பாவங்கள் மாபாவிநான் புரிந்தேனோ
தேனார் மொழியாள் திகைத்தந்தப் பொன்னுருவித்தாய்
செப்பிடவுமுடி மன்னவனை முகம் நோக்கி

**பொன்னுருவி - செம்பவளராசன் உரையாடல்**

செய்யாத தீவினை செய்தபடியே வுண்டானால்
சிந்தை கலங்கினால் வந்தவினை விடுமோதான்
மெய்யார்க்கு மெய்யாக வீத்திருந்த வுமைதேவர்[46]
விதித்த விதிப்படி மின்னனையே[47] சலியாதே
உய்யும் புவிதனி லெத்தனையோ பிள்ளையில்லா
உடையோன் விதித்த விதிப்படி யொன்னுதலே யென்றார்
உரைத்திடவே மன்னவனு முரைகுழறி வாய்வெருவி[48]
வரைத்தடஞ்சேர் பொன்னுருவி மன்னவனோ டேதுசொல்வாள்
நடைதமக்குச் சோம்பினபேர் நயமறிய மாட்டார்கள்
சந்ததிக்குத் தவம்புரிய தார்குழலாள் போறேனென்றாள்
மைந்தனுக்குத் தவமிருக்க மன்னவனே போய்வாரேன்
என்னசொன்னாய் பெண்கொடியே யேதுமில்லாக் காரியத்தை
நம்மைப்போலப் பிள்ளையில்லார் நாட்டகத்தில் மெத்தவுண்டு
நாட்டுக்குப் பாட்டோலை[49] காட்டாதே நன்னுதலே
உத்தபுகழ் பட்டணத்தி லுனக்கேத்த பாலனுண்டால்
சொல்லாயோ பெண்கொடியே தெப்பெடுத்து[50] நான்றருவேன்
தெப்பெடுத்த பிள்ளையது என்றலையில் பல்லியல்லோ[51]
வளத்தாள் பிள்ளையது வாசல்நடைப் பல்லியல்லோ
பெத்தாத்தாள் பிள்ளையென்றால் புழக்கடையில் நீர்க்குதவும்

கோடிப்பணங் கொடுத்தாலுங் கொண்டபிள்ளை யென்பார்கள்
வாரிப்பணங் கொடுத்தாலும் வளத்தபிள்ளை யென்பார்கள்
கொத்துக் கோட்டை மச்சேறுமோ[52] கொண்டமோர் கடைவார்களோ[53]
இறுமாந் திருப்பதெல்லா மிழுக்கல்லவோ யென்கணவா
மாறுபட்ட தென்காசி மனுசருக்கு வசையல்லவோ

## பொன்னுருவி குழந்தை வரம் கேட்டுப் புறப்படுதல்

ஏழுநல்ல தோழிமாரை யேந்திழையாள் வரவழைத்தாள்
கெட்டுப்பொட்டி[54] தனையவிழ்த்துப் பட்டுப்பருவட்ட[55] மெடுத்தாள்
பணிச்சேலை[56] யுள்ளதெல்லாம் பகுத்தாக யெடுத்துடுத்தாள்
மாணிக்க கோமேதகம் வயிரம் வயிடூரியங்கள்
ஆணிப்பொன் திரவியங்க ளழகுமணி ரெத்தினமும்
காணிக்கை போடவென்று கனமுதலைத்[57] தானெடுத்தாள்
பர்த்தாவைத்[58] தான்தொழுது பாதத்தி லடிவணங்கி
தானுமந்தத் தோழியருஞ் சகலபணி பூண்டுகொண்டு
அன்னசுத்தத் தாரையெல்லா[59] மடிதொழுது தான்வணங்கி
தென்காசிப் படைவீடு[60]விட்டுத் தெருவதிலே செல்லுவாளாம்
ஆதித்த பகவானுக்கு[61] அடையமுது[62] நேருவாளாம்
சூரிய பகவானுக்குச் சுத்துப்பொங்கல் நேருவாளாம்
அரசியின்[63]கீழ் நாதருக்கு அரியபட்டு நேருவாளாம்
செக்கடியி லீசருக்குத் தேருவைக்க நேருவாளாம்
தென்காசி லூருமிட்டுச் சேயிழைமார் சூழ்ந்துவர
பொன்னிட்ட வளைபுகழ்ந்து தோணிதலைச் சுமடாய்
அழகுதண்ணீ ராறுமிட்டு ஆனைக்கால் பாலமிட்டு
தொழுதுநின்ற மடவார்கள் சூழ்ந்துநின்று குரவையிட[64]
சிலம்புதண்டை யோலமிட சென்னல்வயல் தடமு[65]மிட்டாள்
வலம்புரிச்சங் கோசையது[66]வான்மட்டு மோசையிட
கொய்தகங்கள்[67] குடையிடவே கூந்தல்குலைந் தலைந்துவர
மைவிழி மடவார்கள் வழிநடைகொண் டேநடந்தார்
கந்தமரும் பூங்குழலாள் கன்னிநல்லாள் பொன்னுருவி
வாழ்ந்திருக்கப் பேறுதாரு மாயனேநா ராயணனே
தாழ்ந்திருந்தா லெந்தரத்தோர்[68]தலையெடுக்க வேவொட்டார்
வசைக்குமிது யிடையாச்சே வாய்பிளக்கப் போகாது
விசையத்த பம்பரம்போல் மெய்மறந்து வாடுறேனே
கயறத்த பம்பரம்போல் கட்டவிழ்ந்து விழுங்காலம்
உயிரத்த காலமெனக் கொருகுழந்தை வேண்டாமோ
வாழ்ந்திருக்கும் காலமதில் வல்லவரு[69] முதவியுண்டு

நாழ்ந்தகால மொருவர் தான்பார்க்க மாட்டார்கள்
ஆந்தையது வலம்போக அதுகுறியைத் தான்பார்த்து
சாந்தணிந்த வேல்விழியாள் சாலைவழி யாய்நடந்தாள்
நடந்தார்பெண்க ளனைவோரும் நான்வார வழிதனிலே
கடந்தே யாந்தல்[70] பறந்தோடக் கண்டகுறிதா னல்லதம்மே
மடந்தைக் குழலாள் பொன்னுருவி வாடுங்கவலை தீருமினி
துடர்ந்தேபெண்கள் முன்னும்பின்னுஞ் சுருதியாக[71] வழிநடந்தார்
விடந்தாங்கு[72] மென்முகத்தாள் விதியின்பயனா லறிவழிந்து
வாடை தென்றல்வீச வழிநடந்தா ளம்மைபொன்னுருவி

**குழந்தை வரம் கேட்டுப் பல்தலமும் செல்லுதல்**

வாகாய்க் கரையாளன்மடமுஞ் செட்டியார் மடமுமிட்டு
தேசப் பரிநடத்தும் தேவர்மட நாவல்குளத்தில் வந்து
கட்டுச்சாத முண்டு கைவிளக்கிப் பாக்குத் தின்றுகொண்டு
வெயில்கள் எழும்புமுன்னே வெள்ளமடங்கடந் தம்மை சொல்வாள்
குழந்தை விளையாட்டும்மகன் கோலத்தையெப்போது காண்பேனடி
சடைத்து[73]இருந்தாலுஞ் சாகுமட்டுமாசை தீராது
படைத்தா னிலையோபிரமன் என்னைப் பாவியாய் வைத்த படிதானோ
ஒத்தக்கண் பொத்தைவிட்டு உருக்கிராம்பூசி மடத்தில்வந்தார்
வேனல்[74]பொறுக்கரிதாய் வேர்வை யெடுத்தம்மை மெய்மறந்து
சரிந்தாள் தோழிமடியில் தையலர்க்குமனம் வேறாகி
சமர்த்தில்[75] வலக்காரம்[76] சாத்துகிறேன்[77]கேளுந் தோழிமாரே
பிள்ளை யிருந்ததுண்டால் பீடை[78]வராது பில்லு[79]முண்டு
கொள்ளி யில்லாதபடி கூடுபோலாவி குலைந்துதேடி
புள்ளிக்காரி[80]யெனவே பெருமையாய் வையார்[81]சிலபேர்கள்
அல்லல்பட்டே யவளு மந்தியாகுமட்டுஞ் சந்தியிலிருந்து
கல்லும் பருமணலும் காலைமிதிக்க வொட்டாதபடி
மெல்லநடந் தம்மைதான் விசிறிய கைவள யோசையிட
ஆடை துவண்டசைய வளராபரணமது தானாட
மாலைக் குழல்முடித்து மல்லிகை பிச்சி மலரணிந்து
நெத்திப் பிறைக்கிணங்க நேர்விழி ரண்டுக்கு மையெழுதி
கச்சிக் களபதனம்[82] கனதனம் இரண்டும் பளபளென
ஆச்சிப்[83] பெருநுதலா ளாலங்குளமது தன்னில்வந்தாள்

**விருத்தம்**

வந்தா ளாலங் குளமதிலே மடவார் நின்று குரவையிட
செந்தா மரைபோல் பொன்னுருவி சிறக்க மனசு களிகூர்ந்து

கொந்தார்[84] குழலார் மனமகிழக் குழந்தைப்பதவி புரியுமய்யா
கந்தாவுனது பதமெனவே கனிவாய்மொழியா ளேதுசொல்வாள்

ஆலங்குளந் தன்னில்வந்து பொன்னுருவித் தாயார்
அருகில் நின்ற தோழிமாரோ டேது மொழிசொல்வாள்
வரையடங்க[85] யேழுலோக மாண்டதிரி சூலி
வாக்குத் தவறாத வம்மை பத்திரமா காளி
தடவரையி லாவினங்கள் மேய்த்தவன்[86] தங்கையாம்
தர்மவாட்டி யிவளொருத்தி புண்ணியவாட்டி யென்ன
காளியுட கோவில்நாமள் போவோமென்று சொல்லி
கன்னியர்கள் கைப்பிடித்து முன்பதிலே வந்தார்
கொள்ளியில்லை யென்றுசொன்ன வார்த்தைதனைக் கேட்டு
கொண்டவேக மண்டைமுட்டிக் கோவில்தேடி வந்தேன்
பூச்சக்கற் றாடையுமொரு[87] பொற்கலையு[88] மிடுவேன்
புள்ளிக்காரி யல்லவென்று யெண்ணிக்கொள்ள வேண்டாம்
கலையேறு மாகாளி யலைவிதம்[89] பண்ணாதே
காணிக்கைக்கு முப்பதுபொன்[90] மாணிக்கமுந் தருவேன்
முழுகிமூன்று நாள்வரைக்கும் தவசிபண்ணிக் கொண்டு
முழுதும் விரதமிருந்தும் மோச்சமது[91] காணாள்
ஆச்சுதடி தோழியரே வாய்த்த கருமங்கள்
அம்மையொன்றுஞ் சொல்லாமல் சும்மாயிருந் தாளே
சடைத்திருந்தால் மனதிலுள்ள பீடைகள் தீராது
சாகுமட்டுந் தவசிருந்து ஆகுமட்டும் பார்ப்போம்
பல்லடந்த பூங்குழலாள் சொல்லிரக்க முடையாள்
மாகாளி வீரமாகாளி கோவில் விட்டாள்
உல்லாசமாய் நடந்து மானூரு விட்டு
உறுதவசி பண்ணவென்று திருமனசு கூர்ந்தாள்
மானூரு அம்பலத்தில் வாழ்ந்திருக்கும் தெய்வமே
நானொருத்தி பேய்போலே நாட்டுவழி திரிகிறேன்
அறுபதுபோய்[92] கிறுகிறுத்தா லாரிருந்தெ னார்போயென்
சிறுகுழந்தை பெற்றபின்பு செத்தாலு மோச்சமுண்டு
கொன்றைசூடி யென்னையுநீ கூறாட்டு[93] பாராதே
இன்னமொரு மாசத்திலே யிருநூறு பொன்றருவேன்
என்றழுது பொன்னுருவி யிருந்தும்பலன் காணாமல்
தன்னையறி யாமல்கண்ணீர் தான்பாய வேநடந்தாள்
ஆலடிப் பட்டிதனி லரசிக்கரைக் கிட்டிணரை
மாலயனே கலியுகனே மலடிமுகம் பாரீரோ
மானுமழுவு வுமக்கு வாகனமும் பொன்னாலே
தேன்மொழியாள் திருத்தவசி[94] செய்தும்பலன் காணாமல்

கதிரவன்றா னுதிக்குமுன்னே கரும்புழியூர் தான்கடந்து
அதிர்முரசப் பணிமாற வடுத்தமாற னதிகண்டார்

**விருத்தம்**

கண்டாள் கமலத் துடையோனை கவ்வை[95] மொழிவாய் கத்தவனே
உண்டா யமிர்தந் தனைக்கடைந்து வுண்ணும் படிக்கு வமுதளித்தாய்
வெண்டா மரையை யிடத்திருத்தி விரைந்தே பரணி சுமந்தோனே
தண்டா நுதலாள் பொன்னுருவி தவசி யிருக்கத் தான்போனாள்

போனாள்நட சாலைவிட்டுப் புத்தன்குறிச்சிக்குத் தெக்காக
அங்குமிங்கு மில்லாம லலயத்தக்க விதியாச்சே
ஆத்தங்கரைக் கயமதிலே[96] வீத்திருக்கப் போறேனென்றாள்
மங்கையந்தப் படியுரைக்கச் செங்கையினா லணைந்து
மாத்தமில்லாத் தோழி தேத்தமெடுத்[97] துரைத்தாள்
அழுந்துவது தகுதியல்ல விளம்பியசொல் கேளாய்
ஆண்டவனார் விளையாட்டை யாரறியப் போறார்
விழுந்தபல்லு நிமிர்ந்தபல்லு யின்னும்வரவு மில்லை
வெள்ளிநரை யானதொன்றும் வெளியில்வர வில்லை
மலைபோ லொசந்தகொங்கை தலைசாய வில்லை
மடக்கொடியே பதினாறு வயசுவர வில்லை
கோப்புடைய திருச்செந்தூர்[98] வரைக்குஞ் சென்று
குழந்தைகொண்டு வரவென யெழுந்திருந்து போனாள்
பூப்படையா ளவளுடைய கோப்பதுவுங் கடந்து
பொருளேந்திக் கடந்தேறித் திருநகரி கண்டாள்
செட்டிச்சி பிள்ளையாகப் பளிக்குள்ளே
திருநடனம் செய்து நின்ற தெய்வமே
அட்டவந்தனஞ்[99] செய்து தருகிறேன்
அரிகிட்டிணா நாராயணா வென்றாள்
கொட்டுந் தம்பட்டம்[100] வெங்கலப் பேரிகை[101]
குதிரை மேலிட்ட டம்மானந்[102] தருகிறேன்
நாட்டுக்கு மெந்தன் வீட்டுக்கு மாகவே
நல்ல பிள்ளைதர வேணுந் தெய்வமே
தொட்ட காரியந் தோத்துப் போகாமலே
சுந்தரப் பிள்ளை தந்துதுணை செய்வாய்
இப்படிச் சொல்லி முப்பது நாளதாய்
இருந்துமே பலன் காணாமல் போகினாள்
செப்பமாய் நடசாலை[103] கடந்துதான்

சேரவே தென்றிருப்பதி செல்லுவாள்
தீர்த்த மாடித் தெருச்சுத்தி வந்தபின்
தெண்ட னிட்டுத் திருப்பாதஞ் சேவித்தாள்
கரையகத் தண்ணலே குழல் காதனே
காத்துக் கொள்ள முழுதுங்கடன் கண்டாய்
பாவ நாசப் பராபரத் தெய்வமே
பத்து மாசந் திருநாள்[104] நடத்துவேன்
கும்பிட்ட கைக்கு கூலிகொ டென்றுதான்
கூடி வந்த தோழிகள் பேசினால்
அப்படியே பெண்க ளஞ்சாறு நாளதாய்
அங்கே யிருந்தும் பலன் காணாமல்
தப்பில் லாமல் திருப்பதி யொன்பதும்
தவமிருந்து சலித்துவிட் டேகினாள்
ஓடையும் வயல்காடும் கடந்துபோய்
உத்த ரட்டாதி யம்மன் சிவாலயம்
மாட மண்டக வாசல் முகப்பிலே
வந்து கும்பிட்டேன் மனக்குறை தீரம்மா
வரம் நீக்கி மகன்றருவா யம்மா
மாச மூன்றுந் திரிந்தொன்றுங் கண்டிலேன்
மல்லுக்கெட்டிப் பிச்சை வாங்குவா ருண்டா
மாதாவே யென்று வழிநடை கொண்டாள்
தந்திர மாகநடந்து கால்சடைத்து கைசடைத்து
சாலைவழி நடந்து சலித்தேன்
மத்தியான வேளையிலே சுத்திச்சுத்தி யேதிரிந்து
மதிகெட்டேன் யென்றலை விதிதான்
இத்தரை[105] பெண்களைப்போல் வீட்டி லிருந்திடாமல்
ஏதுக்குநான் வீணிலே நடந்தேன்
கொத்துமலை கோவில்சூழ்ந்த கோவிலென்ற கோவில்தோறும்
கூலியில்லா வேலை செய்ய வந்தேன்
கோதையர்க ளோடியோடி குட்டை நாட்டிலே குறும்பை
கோபுரத் தாடி தனிலே வந்தாள்
மாதுசெறி தென்குரும்பை கோவில்வல மாகவந்து
மண்டக முகப்பருகே வந்தாள்
காரண வழியடுமை யாகவே யடிதொழுது
காணிக்கையாய் மாணிக்கத்தை வைத்தாள்
தானுமெந்த னாசைதீரச் சந்ததிதந்தா லெனக்கு
தங்கப் பல்லக்குச் சமைத்துத் தாரேன்

எண்ணில்லாத பெண்கள்முன்னே நானுமொரு பெண்ணெனவே
இறுமாந்து நிற்பதற்கு மில்லை
இத்தரைக்கும் பாடுபட்டுப் புத்திரனில்லாதே போனால்
எத்தனை பேர்க் குத்திரம்[106] நான்சொல்வேன்
பித்தமீறிக் கொண்டுபோச்சு செத்துப்போவே னானினி மேல்
பெண்பழியைப் பார்த்திரங்க வேணும்
மெய்ப்புட னிருந்தும்பிள்ளை பாக்கியமில்லாதே போனால்
வேறொருவர் நம்மைச்சிரி யாரோ
ஆண்டவனார் கோவில்விட்டு முதலி யழகப்பனார்
அன்ன சத்திரங் கடந்து போனாள்
கால்நடையதாக மெள்ளவந்து சந்தி யுள்புகுந்து
கதிர்மையுடன்[107] பொங்கியம்மை வுடனே
வேனலுள்ள மத்தியான வெயிலுக்குள் சாலையிலே
விதிவச மென்றே யவளிருந்தாள்.

## விருத்தம்

இருந்து சாலை. . . .ரிணலிடமா யெண்ணியெண்ணி மனசுநொந்து
சரிந்தாள் தோழி மடிதனிலே சற்று முறக்கம் வாராமல்
வருந்திட் டம்பு குறுகுறென்று மான்போல் மறுகி மானனையாள்
பொருந்திப் பயிர்போல் முகம்வாடி புரண்டங் கெழுந்து வருவாளாம்.

ஏந்து குழந்தைதா னில்லையென்றால் எந்தப் படியோநான் பிழைக்கப் போறேன்
கையில் குழந்தைக்குக் கனவுகண்டு கணவன் முகஞ்சென்று காண்பதெப்போ
ஆனைக் கால்பட்ட தேரையானேன் ஆற்றில் கரைத்த புளியானேன்
வருந்தி யழுகின்ற குரலோசை மதுரங் கிளிகளே கேளீரோ
திருந்தி ஒருத்திநான் பெண்பிறந்து தேசப்பரதேச மானேனே
வாராய் பேடை யன்னந் தாராவே மலடி முகத்திலே விழிக்கொ ணொதே
வானில் பறக்கின்ற கிளியினங்காள் வாணாள்[108] மறுக்கத்தைப்[109] பாரீரோ
பிள்ளைக் கிரைதேடு மயிலினமே பிழைக்கும் படிக்கொரு புத்திசொல்லு
என்று புலம்பியங் கழுதவளை யேந்தி யொருதோழி தேறுவாளாம்[110]
அன்ன நடையாளே நீபுலம்பி யழுதால் கிடைக்குமோ காடுதனில்
கொங்கைக் குடமிரண்டு மதலை வசைய கோலச் சரப்பணி[111] புரண்டாட
அம்மான்பேட்டை தன்னருகாக வய்யன் கோவிசால் கோட்டையிலே

தர்ம மடங்களும் பனங்காடுந் தருவை வீதியுங் கடந்தேகி
கவலை யொழிந்திது நமக்கெனவே கவண்டர் மடமிட்டுத் தான்போனார்
இன்னம் வெகுதூர மிருக்குதென்று யெதிரே சொல்லிக்கொண் டொருத்திவர
சடக்கன் மடமிட்டுக் கிழக்காக தாண்டுந் தூரண்டுகோல் மூர்த்திதன்னை
படைக்கப் பழம்இளநீர் சொரிந்தே பழையகோபுர வாசல்வந்தாள்
செந்தூரில் வந்தெங்கள் பொன்னுருவித் தாயார் சிறப்பெல்லாங் கண்டபோது
தெய்வத் தலமிது தானெனக் கண்டவள் சிந்தையுடன் மகிழ்ந்தாள்
நந்தூர் பொழிப்பு மலவாக் கரையும் நன்னகர் கோபுரமும்
நல்ல தெருவீதி ஞான வொலியான நாயகி கண்டு நின்றாள்
கண்டு புதுமையெல்லாங் களிகூர்ந்தவள் கண்கண்ட தெய்வமென்று
கன்னிய ரொன்றாகத் தீர்த்தமு மாடிக் கரையேறி மாத்துடுத்தாள்
உண்டொரு வேளை சந்நதி வாசல் முகப்பதி லேயிருந்து
ஒண்டொடியாள் விழுந்தே தொழுதுபணிந் தேதுரை சொல்வாளாம்
ஆதரவான குமரப்பனே செந்தி லாதிபனே கடம்பா
அநியாயங் கேட்டிரங் காயோ நீயுமமரர் பதிக்கரசே
பாலகி நானொரு பாலகனுக்காகப் பாடுபட்டே னடியாள்
பாலனெனும் பாக்கியமுந் தருவாய்நான் பவுசியுடன்[112] போக
அப்பனே ஒப்பிலாத மணியே யருமைமக னில்லாமல்
அங்கம் பறக்கிது ஆவியுஞ் சோருது[113] வாறுமுகத் தோனே
தப்பாமல் நீயினக்கா யிரங்கியொரு சந்ததி தந்ததுண்டால்
சப்பிர மஞ்சத்தேர்[114]வைப்பேன் றிருக்கோவில் தங்கத் தாலே முகிப்பேன்
ஒப்பரவாக[115] முடிப்பே னென்றுசொல்லி வுத்ததவ மிருந்தாள்
உள்ள விதிப்படி யல்லா லினியில்லை யென்றவள் வாடிவிட்டாள்
சுப்பிரமண்ய சாமி யிப்படிச் சொன்னால் துணையெனக் காருபெண்ணே
தோழியரே திருச்சந்நதி கண்டுதொழுது வணங்குமென்றாள்
சென்றாளே கடல்கரையில் தீர்த்தமாடி மாத்துடுத்தாள்[116]
மாத்துடுத்து நடைதனிலே வந்துநின்றங் கேதுசொல்வாள்
குமரா செந்தூர் வேலா குறத்தியுட மணவாளா
தப்பாமல் சந்நதியி லிப்படித் திரிந்து
தலையி லெழுத்தின் படியே யலைந்தேன்
பொற்புடைய பொன்னுருவி யிப்படிப் புலம்ப
பூவைநறுந் தோழியரே வாருமென்று போனாள்
நடந்துஅந்தப் பொன்னுருவி நாகரம்மன் கோவில்கண்டாள்
தீர்த்தமாடி மாத்துடுத்துச் சேயிழையாள் தவசிருந்தாள்
அதினாலே வொருபலனு மாயிழையுங் காணாமல்
வாருமம்மா தோழியரே மறுபதிக்கே[117] போவோ மென்றாள்

சேயிழையுந் தோழியரும் செட்டிகுளந் தான்கடந்து
நடந்துகடி தாகவேதான் நடுக்காட்டிசக்கி கோவில் கண்டார்
இசக்கியம்மன் கோவிலிலே யிருந்தாளே யருந்தவசாய்
இருந்தும்பலன் காணாம லினிப்போவோந் தோழியரே
பாவையர்க ளெழுந்திருந்து பஞ்சவர்ணக் காடுமிட்டாள்[118]
பரபரென வழிநடந்து பார்பதிய ளகரமிட்டாள்[119]
சோறுபல காரம்விக்கும் சுங்கான் கடையுமிட்டு
சுங்கான் கடையுமிட்டுத் துறட்டிகொட்டு மடமுமிட்டு
விறுவிறெனத் தானடந்து வில்லுருதியுங் கடந்து
பேடைமயில் மாதுநல்லாள் புலிக்குறிச்சி விட்டாள்
பாவையருந் தோழியரும் பல்பனாபுரம்[120] வந்துகண்டார்
பல்ப னாபப் பெருமாளுட கோவில்நடை தனில்வந்து
பாவை நல்லாள் பொன்னுருவி யம்மை
எழுதின படியென்று யேதுங் காணாமல்
தளிர்த்தவுடன் காடுசாலை வழியாக
தலைதூக்கி வயல்தான் கடந்தாளே
கன்னியர்க ளிருபிறமுங் குரவையொலி பாட
கன்னிக் குறிச்சியில் கலியுகரைக் கண்டாள்
தெண்டம்[121] பண்ணிச் சுந்தர னாச்சியைத் தொழுது
திருமால் பூசைச் சிறப்பது கொடுத்தாள்
கலியுக வரதர் கலியாணி தனக்கு
காணிக்கை போட்டுக் கடிதாய் நடந்தாள்
மான்போலே நின்று மறுகியே சொல்லுவாள்
வழிநடையிலே பொன்னுருவி யம்மை
பாவமோ நான்செய்த பழவினைகள்[122] தானோ
பட்டாங்கு[123] சொல்லப் பழநூ லறியேன்
முட்டாள் தேசமோ முன்பிறப் பதுவோ
மூதாக்கள்[124] செய்த பாவமோ வறியேன்
கட்டுவதா லிக்கழுத்தைக் கொடுத்தேன்
கைதொட்டுக் காவலன்[125] சுத்தி வந்ததுவோ
பட்ட பாடெல்லாம் விட்டுநான் சொன்னால்
பாவியுட சொல்லதை யார்கேட்கப் போறார்
நஷ்டம் வராதுயினி பொன்னுருவி யம்மே
நாமள் சந்நதி காணுவோ மென்றாள்
கருங்காடு போலே மாங்கா வுக்கும்
கல்மாளிகைக் காரக்கோவில் கண்டாளே
ஆதியான புத்திரா கருக்குமா லய்யா

அடியாளு மொருபிள்ளைக் காக வலைந்தேன்
பூமருவுந் தென்காசி யூராளத் தந்தால்
பொற்றேரும் விட்டுநான் பூசைக்குறை தீர்ப்பேன்
தெப்பமுங் கட்டித் திருநாள் நடத்துவேன்
சிவபூசை தவறாமல் குருபூசை செய்வேன்
ஆதார மாகவுன் சந்நதி வாசலில்
ஆலித்தட்டிக் காரர்[126] பொன்னா லிடுவேன்
இன்னுமறிந்தே னில்லையென்று யேங்கிமுகமு மிகவாடி
சொன்னான் சாஸ்திரத்தை துணிந்துமுன்னூல் பாராமல்
அன்னாள்கருவி லமைத்தபடி யல்லால் வருமோயெனநடந்தாள்
நடந்தாள் கடந்தாளே பொன்னுருவி யம்மை
நன்னுத லார்கள் குரவைகள் பாட
தந்திர மாக வழிநடந் தேதான்
தானவளுங் கொட்டாரத் தூரு கடந்தாள்
அச்சங் குளத்துட னுச்ச மலையும்
ஆண்டாருட மடம் வந்து கண்டாளே
கண்டந்தப் பொன்னுருவி யம்மையுந் தோழியும்
கட்டுடனே தெய்வேந்திரன் சுனையில் வந்தாள்
சிறப்புடனே வந்தவளுந் தவமிருந்தாள்
அதினாலே வொருபலனு மாயிழை காணாமல்
தொட்டிப்பாலம் விட்டுச் சாலைவழி யாகத்
துரிதமுட னொட்டன் கோவில விட்டாள்
ஏழுதோழி மாருடனே சாலைவழி யாக
ஈத்தங்காட்டு மடம் வந்து கண்டாளே
வாகுபெறு[127] தோழியருஞ் சோலைவழி யாக
வழுக்கன் பாறை யதுவும் வந்து கண்டாளே
மூங்கிலடி யிசக்கியம்மை கோவிலிலே வந்து
முப்பது நாளாகத் தவசிபுரிந் தாளே
அதினாலே வொருபலனு மாயிழை காணாமல்
அழகுடனே உப்பாறு தானுங் கடந்தாள்
மூங்கி லடியில் முளைத்த பெருமாளே
முழுது மலடியென்று வைத்த தென்ன
கைக்குழந்தை கொண்டு கணவன் முன்னே
காசினி[128] தென்காசியிலே நான்போன துண்டால்
ஆண்டில் ரண்டு திருநாள் நடத்தி
அடியாள் திருநாமப் பேரு மிடுவேன்
தேச மெய்க்கும்புகழ் தென்கரைமா லய்யன்
தெரிசனம் பண்ணவென்று சித்தூர்தனில் வந்தாள்

அத்தூர் தன்னில்வந்து அடிமைசிவனார் மகனைச்சிந்தை செய்து
புத்தூ ருறையு மதியானே பேதையிரக்கம் பாராயோ
மத்தூர் சுத்திப் பதஞ்சேவித்தேன்[129] மலடிமறுக்கம் பார்த்திரங்கும்
இத்தூரம் நான்வந்தே னய்யா இரங்கிப்பிள்ளை தாருமென்றாள்
சேவித்து நாலுதெருவும் வலமாக வந்து
சேயிழை யானவள் கோயில் முகப்பதில் சென்றாள்
கர்ப்பூர ஆலாத்தி[130] யேந்திப் பணிமாறுங் காலம்
கட்டளைப் பூசை[131] நடத்திப்பின் கிட்டவே சென்றாள்
பெண்ணுக் கிரங்கியே பிள்ளைதர வேணுங்கோவே
பூமண்டலஞ் சுத்தியெங்கு மலைந்துநான் வந்தேன்
என்றுபுலம்பி யிருந்தும் பலனில்லை யென்ன
இடை கருங்காடு ஈத்தங்கரை நாடுமிட்டார்
மட்டில்லாப் பெண்கள் மதுரங்கிளிபோ லலைந்து
மண்ணாட்டுக் கேட்கவே வந்திங் கொருவரைக் காணோம்
கட்டுந் திரவியங் கொண்டுவந்த தெல்லா மழித்தேன்
காணிக்கைக்கு முதல்[132] யாவரிடத்தில் கடன் கேட்பேன்
வட்டிக்கு வேண்டி[133] வலக்காரம்[134] பண்ணவோ போறாய்
வள்ளியூர் தன்னில் மடியாமல் செல்லுவோ மம்மே
கிள்ளை மொழியர்க ளல்லும் பகலு நடந்து
கீர்த்தியாய்ப் பொன்முடி பாண்டியன் கோட்டை கண்டார்
வட்டமிட்டு மயிலாடும் வள்ளியூ ரதிலேவந்தாள்
வள்ளியூரில் மூன்றுமுகம் கொண்டாளைத்[135] தெண்டனிட்டு
பெண்ணுக்குப் பெண்ணேதுணை பெருவிழிக்கு மையே துணை
கண்ணுக்கு இமையே துணை காதுக்குப் பொன்தோடு துணை
மண்ணுக்கு மனைக்கு மெந்தன் வாழ்வுக்கும் பிள்ளை வேணும்
பெண்ணிரக்கம் பாத்திரங்கும் பூமாதே பொன்மாதே
கண்ணிரக்கம் பார்க்க வேணும் கவுந்துகொண்[136]டிருந்திராதே
என்னிரக்கம் பார்த்ததுண்டா லேழுலெட்சம் பொன்தருவேன்
சுத்தரங்கு மாளிகையுஞ்[137] சூழநல்ல திருமதிலும்
பத்திபத்தி யாகநன்றாய்ப் பசும்பொன்னால் மேய்ந்திடுவேன்
அத்தியுரித் தாடைசாற்று மரசனிடத்தி[138] லமர்ந்தவளே
சத்தியொரு வாக்குரைக்கத் தவஞ்செய்தோ மில்லையடி
வள்ளியூர் தான்கடந்து வாணுதல் பொன்னுருவி யம்மை
ஊட்டுபற்று குமாரபற்று நம்பிபற்று தளவாபுரம்
பாம்பன்குளம் பழையபதி பாவைநல்லாள் தான்கடந்தாள்
வெள்ளைத் தலைவருக்கு விடலைகொண்டு சொரிந்திடுவாள்
வள்ளல் குழல்நுதலாள் வந்தாள்தொட்டிச்சி குளமதிலே
திட்டுக்கல்லு நடசாலை திக்கணம்பொத்தைக் காடுமிட்டு
கொட்டுவரை மடமாது குரவையொலி[139] முகுமுகென

வாரியூர் பால்குளமும் வட்டக்கோட்டை கடந்து
காரிகை பொன்னுருவியம்மை கன்னிமா குமரிகண்டாள்
கண்டாள் செய்த பாவந்தீர காரிகை பகவதி யம்மனைத்தான்
செய்தபாவந் தோஷந்தீர தீர்த்தமாட வேணுமென்றாள்
அரிசித்துறை தகட்டுத்துறை யாயிழைமார் தீர்த்தமாடி
தரிசிமணி யிட்டதுறை சங்கிலித் துறையுங் கண்டாள்
தாண்டுவாங் கயறில் தீர்த்தம் தடமுலையார் தானாடி
பண்டுபோல் பகவதியாள் பாதம் பணியவென்று
கொண்டைக்குப் பூமுடித்துக் குமுர்தவண்ணப் பட்டுடுத்து
கொண்டைவிழி பிரண்டதுக்குங் கெருவிதமாய்[140] மையெழுதி
தண்டைசிலம் போலமிட தங்கவளை கைவீச
வண்டணியும் பூங்குழலாள் மலர்பாதந் தெண்டனிட்டு
சங்கைபெறத் தென்குமரி சந்நியென்றே வீற்றிருந்தாள்
எங்கேயெல்லாந் திரிந்தேனம்மா யென்துயரந் தீருதற்கு
அங்கங்கே திரிந்ததுவு மலைந்துநான் சடைத்ததுவும்
பங்கயஞ்சேர் பகவதியே படுமறுக்கம் பார்க்கலையோ
தேசமதில் கோவிலெல்லாந் திரிந்தும்பலன் காணாமல்
வாசமத்த பூவானேன் மதிலிடிந்த வீடானேன்
காயமத்த[141] சீவனானேன் கசையிழந்த[142] குலமானேன்
ஓசையத்த முரசானே னூமைகண்ட கனவானேன்
தேசமத்த யகுதியைப்[143] போல் திரிந்துவுன் னிடத்தில் வந்தேன்
நாயகியே நீயெனக்கு நடுவல்லவோ[144] தென்குமரி
மாயமோ யிதுவுமென்ன மரமிதுபோ லிருப்பேனோ
காசினியை யாளவொரு கைக்குழந்தை நீதருவாய்
வைகாசித் திருவிழாவும் மாசாந்தம்[145] நடத்தி வைப்பேன்
நேசமுட னொருபலனும் நேரிழையாள் காணாமல்
வாருமம்மா தோழியரே மறுபதிக்கே போவோ மென்றாள்
கன்னிமா குமரிவிட்டுக் கவ்வைமனம் புண்ணாகி
சென்னியுற[146] வேவணங்கி செங்கொடிவா ளய்யனைக் கண்டாள்
முன்னாளென்னைப் படைத்தபடி முழுதும்பாவி யானேனையா
இப்படிச் சொல்லி யிருந்தம்மை நொந்து
ஈசன் விதியென்று எழுந்து நடந்தாள்
படுவைபு மில்லங் குடிவய்யன் கோவில்
பாங்கான சிவத்தா புரமதிலே வந்தார்
ஏழை வயிறோனே யானை முகத்தோனே
புள்ளயாரே நானும் பெண்புத்தியி னாலே
பித்தமீறி[147] வந்துவிட்டேன் செத்து விடாமல்
பேணியென்னைக் காத்துவந்து வரந்தரவும் வேணும்
அஞ்சி நாளாய்த் தவசி யம்மன் புரிந்து
ஆதார மாகவொரு ஆண்பிள்ளை காணாள்

தாமச மில்லையினிப்[148] பொன்னுருவி யம்மே
தந்திர மாக கல்வெட்டாங் குழியில்
மருதுமலை யய்யனே வுனது பாக்கிசம்[149]
மலடியா யெத்தனைநா ளிருப்பேன்
குடியழிவு வராமல் குழந்தையது தந்தால்
குதிரையுங் குதிரை மேலாளும்[150] விடுவேன்
அதினா லொருபலனு மாயிழை காணாமல்
அய்யனுட சந்நதி யிவ்வளவோ வென்ன
கல்லுங் கரும்பனை[151] யாறுங் கடந்து
கனகமொழி மாதர் குரவை யொலியிட
சாயங்கால வேளைச் சமைத்தமு துண்டு
சாத்தான் குளம் புதுக்குளமுங் கடந்தாள்
ஒட்டுடையும் பட்டமரஞ் சேரி கடந்து
ஓயாதே பாதையில் உக்காந் திருந்தார்
கூடியே பெண்களும் ரகசியம் பேசி
குறவனுட கண்ணாறும் விசய நாராயணம்
மருதுமலை நாயனைத் துதித்தருள் பணிந்து
மாயனே நாராயணப் பெருமாளே
அலையாத படிமாய னருளிதோ வென்ன
அமுர்த மொழி மாதர் திருவிளம்[152] இரங்கலையோ
விதமான விசய நாராயணங் கடந்து
வீறாய்க் குளங்கரை யாறதுவும் விட்டார்
கூலிக்குப் பிள்ள கொடுப்பாய்நீ யய்யா
கும்பிட்ட கைரண்டுங் கூழயாய்ப்[153] போச்சே
ஆமட்டுஞ் சொல்லி யழுது புலம்பி
அடையாள முத்திரி[154] கிடையாமல் போனாள்
முழுதுநான் பாவியோ முன்செய்த குறையோ
மூன்றுநாலு மாசம் இப்படி யலைந்தேன்
தோழியர்தன் கூடவே பொன்னுருவி யம்மை
தோகையருங் கோட்டாறு பட்டணங் கண்டாள்
மோருக்கு முத்தளக்கு நன்னாஞ்சி[155] நாடு
முதியோர்கள் தங்கள் மொழிமறவாத நாடு
பாருக்குள் நெறிமுறை யுள்ளபுகழ் நாடு
பஞ்சவர்கள்[156] முன்னாளி லாண்டதொரு நாடு
காரு[157] பாசானமும் விளையுமந்த நாடு
கவிஞோர்கள் கலிதீர்க்கும்[158] நாஞ்சிவள நாடு
பேரான மும்மாரி பெய்யுகின்ற நாடு
பெருமையது கூறத் துலையாத நாடு
சோதனையோ யென்முகம் பாராத்த தேது
சொல்பெரிய மாயனே நாரா யணனே

பேடை மயில்போல வலைந்து திரிந்தேன்
பேடியா[159] யுன்னுடைய கோவிலிலே வந்தேன்
சடைவு வைத்து நீதள்ளி விடாதே
சண்டாளப் பேய்களைக் கும்பிட்ட பாவம்
வாணாள் குறைந்து மதிகெட்டுப் போனேன்
மனையா ளொருமகனைக் கண்ணிலே காணேன்
தேச மாளவொரு சிறுமதலை தந்தால்
சிங்கார வில்லுந் திருவுருவும்[160] விடுவேன்
ஆனைமேல் பேரிகை பொன்னால் தருவேன்
ஆண்டவா வுன்பாதம் தந்தனுப்பு மையா
அமரர் பதிக்கரசே வாறுமுக வடிவேலா
தென்காசி நாடாளவொரு சிறுவனைத் தந்ததுண்டால்
பிறக்குகின்ற பிள்ளைக்குவுன் பேரிடுவேன் றப்பாது
ஈன்றெடுக்கும் பாலனுக்கு இடைக்கிடை[161]பொன் நான்தருவேன்
தேரதுவு முகித்து[162]வைப்பேன் திருநாள்[163] நடத்திவைப்பேன்
வருஷமாண்டு திருவிழாவும் மாதாந்தக் கட்டளையும்[164]
நடத்திவைப்பே னானடியாள் நல்மதலை தரவும்வேணும்
என்றுசொல்லி யருந்தவசா யிருந்தும்பலன் காணாமல்
இருந்தபதி விட்டிளகி[165] யேந்திழையுந் தோழியரும்
ஆயிரங்கால் மண்டபமு மகரத்தெரு வீதிகளும்
கடந்து பொன்னுருவியம்மை கரிமுகனார் கோவில்கண்டாள்
அரசடிவாழ் பிள்ளையார்க்கு அவலடைகள் நேருவாளாம்
ஆனதினா லொருபலனு மாயிழையுங் காணாமல்
இருந்தபதி விட்டிளகி யேந்திழையாள் தானடந்தாள்
நடந்தார் துடந்தார் கடந்தாரே பெண்கள்
நல்ல தோழிய ரடப்பம்[166] பிடிக்க
குடம்போல் தனத்தாருடன் காடுமிட்டு
குன்னிமலை யய்யனுட கோவிலிலே வந்தார்
என்று முழுப் பாவியாகி யிருப்பேனோ
இரங்கா திருப்பதேன் ஏன்றம்பு ரானே[167]
அந்தவித மாகநா னுன்னுடைய கோவிலில்
ஆண்பிள்ளைக் காக வலைந்தோடி வந்தேன்
பொன்னாலே வாகனமும் புலிக்குட்டியும்
பேரா தரவாக வடியாளும்[168] வைப்பேன்
எண்ணமெல்லா மெண்ணியே யேழெட்டு நாளாய்
தென்காசி நாடாள சிறுவனைநீ தந்ததுண்டால்
தேரது பொன்னால் முகித்து வைப்பேன்
வருசமொரு திருவிழாவு மாசாந்தக் கட்டளையும்
வச்சிரமணி மேடை[169] செய்து வைப்பேன்
என்றுசொல்லிப் பொன்னுருவி யிருந்தா ளருந்தவிசாய்[170]

ஏந்திழை யாளும் பலன் காணாமல்
வாருமென்று தோழியரைக் கூட்டிக்கொண்டு தாயாரும்
வாய்த்த மேலக் கோட்டை கடந்தாரே
சேரவே வழிநடந்து சேயிழையுந் தோழியரும்
திருவட்டாறு தான்கடந் தாரே
ஈஸ்பரன் செயலெனவே யிலந்தையம்பலங்[171] கடந்து
ஏத்த களியக்கா விளை விட்டார்
குருபரன் சியலெனவே[172] கோதையருந் தோழியரும்
குழித்துறை யாறுகடந் தாரே
பாவையருந் தோழியரும் பாரச்சாலையுங் கடந்து
பாதை வழியாக நடந்தாரே
நேரிழையுந் தோழியரு மோடிவோடி யேநடந்து
நெய்யாத்தங் கரைகடந் தாரே
விணிக்குத்தூர் தான்கடந்து மெல்லியருந் தோழியரும்
வீறுடனே நேமங் கடந் தாரே
காட்டூர் தனைக்கடந்து கரமனை யாறுமிட்டு
காரிகையாள் பொன்னுருவி யம்மை
சாலைக் கடைகடந்து தையலருந் தோழியரும்
சந்தோஷமாய்த் திருவனந்தா புரம்வந்து கண்டாரே
திருவனந்தா புரத்தில்வந்து சேயிழையாள் பொன்னுருவி
சிவபெருமான் தன்னைக்கண்டு அடிவணங்கி நின்றாள்
அமுர்தகுண வாயழகி பொன்னுருவி யம்மை
ஆயிழையாள் மனத்துயரஞ் சொல்லவே வாய்திறந்தாள்
தென்காசி நாடாள யென்றன் பெருமாளே
சிறுவன்தரா திருப்பதென்ன யெந்தன் பெருமாளே
கொத்தைக்[173] குறைத்தேனோ யெந்தன் பெருமாளே
குறைமரக்கால் வைத்தேனோ யெந்தன் பெருமாளே
பிச்சைக்கு வந்தவரை யெந்தன் பெருமாளே
பின்னேவரச் சொன்னேனோ யென்றன் பெருமாளே
பட்டறையில்[174] நெல்லதிலே யெங்கள் பெருமாளே
பதரை[175]யள்ளிக் கலந்தேனோ யெங்கள் பெருமாளே
நிறைய விளைந்ததிலே யெங்கள் பெருமாளே
நீர்ச்சாவி[176] கலந்தேனோ யெங்கள் பெருமாளே
வைத்தவ ரடைக்கலத்தை[177] யெங்கள் பெருமாளே
வயிறெரியப் பண்ணினேனோ யெங்கள் பெருமாளே
கோவிலுள்ள வுடமைகளை யெங்கள் பெருமாளே
கொள்ளையிட்டுக் கொண்டேனோ யெங்கள் பெருமாளே
காணாமல் குளங்கரையை யெங்கள் பெருமாளே
கருதிவெட்டி முறித்தேனோ யெங்கள் பெருமாளே

காணாத தேசமெல்லாம் நானலைந்தே னையா
கைக்குழந்தை தாருமய்யா யெங்கள் பெருமாளே
உண்டுமென்று மில்லையென்று மெங்கள் பெருமாளே
ஒருவார்த்தை சொல்லிடு மென்றாரே
வாருமம்மா தோழியரே வாழ்பதிக்கே போய்விடுங்கோ
இருந்தததினால் பலனுமில்லை இறந்திடுவேன் மலையதில்போய்
கடலதில்போய் விழுந்தாலுங் கடலுங்கைக் கொள்ளாதே
நஞ்சுதின்று செத்தாலும் நாட்டிலுள்ளோர்க் கேறாது[178]
அப்போது தோழியர்க ளவரேது சொல்லுவாராம்
செத்தாலு முன்னோடே சேர்ந்தாலு முன்னோடே
வாழ்ந்தாலு முன்னோடே மடிந்தாலு முன்னோடே
என்றுசொல்லித் தோழியரு மேந்திழையும் வழிநடந்தாள்

**மலையில் பொன்னுருவியும் தோழியரும்**

வடக்குமலை மேருவுதன்னில் வந்துமலை வளம்பார்த்தார்
மயிலாடுங் குயில்கூவு மருதுணிகள்[179] பூப்பூக்கும்
மந்திகளுங் குரங்கினங்கள் சிந்தமல ரெறியும்
வடகாவு[180] நடுவாவி மழைமாரி பொழியும்
வாடைதென்ற லூடாட வான்சோலை காவும்
கண்ணாடிச் சோலைகளுங் காவுகளுங் கடந்து
காவுதனி லாரியங்கா வய்யனைத் தொழுது
பெண்ணரசி பொன்னுருவி கன்னியர்க ளோடே
போகவட காவுதன்னில் மகிழ்ந்தவர் நடந்தார்
சொல்லரிய மலையிலுள்ள நல்லருமை யெல்லாம்
சொல்லுகிறேன் கேளுமெடி தோழியரே யென்றாள்
பளிங்கிநிலந் தனிலேவந்து பொன்னுருவி யம்மை
பாதாள வாசல்கண்டு பயந்துனேரு சொல்வாள்
ஏழை விதியோ யெழுத்துவிதி தானோ
எல்லாரு மலைதனிலே யிறக்கவென்றே வந்தோம்
மலையிலந்த வாழ்மிருகம் வாய்பிளந்து நிற்க
மலடிதன்னைத் தின்பதுக்கு வருகுதேடி தோழி
மலையிலுள்ள குறவரிங்கே வழிவரவுங் காணோம்
மட்டுத்தப்பாய்ப்[181] பண்ணிப்போடும் மலையிலிந்த மிருகம்
உம்பளமாய்[182] வேலைகொண்டாள் சம்பளமில் லாமல்
உயர்மலைக்குள் வந்துநமக் கலைவிதமுண் டாச்சு
கருதி மனந்தான் கலங்கி வொருத்திவந்தா ளிங்கே
கருமலையில் கடுவாய்புலி தின்றுவிடுந் தோழி

அலம்பலில்லை[183] சடைத்துவந்த அலவிதமு மில்லை
ஆச்சுதெடி மலைக்குள்வந்த பூச்சியங்க ளெல்லாம்[184]
விம்மிவிம்மி யழுதழுது பொன்னுருவி யம்மை
விதியின் பயனோ பிரமன் விட்டகுறை தானோ
அருமையுடன் கனிவாய் திறந்து சொல்லு முன்னே
அருகிருந்த மந்தி கையைத் தட்டிச் சிரித்தேதான்
பருவரையி[185] லுயர்ந்தமரம் பாய்ந்துகுதித் தேறி
பழுத்தகனி தனைப்பறித்தே பாலனென்றே யிடுக்கி
சிரித்துக்கொண்டு மந்தியுந்தான் சிறுவனான கனியை
சிநேகமுடன் தின்னவென்று அம்மைகையில் கொடுக்க
மந்திகையில் கனிவாங்கிப் பொன்னுருவி யம்மை
மலடிமுகம் பார்த்துனக்கு மனதிரக்க மாச்சோ
கவலையில்லை யினிநமக்குக் கவ்வை[186]யொன்று மில்லை
கடந்தோங்கு மாமலையுங் காவுகளு மிட்டு
குமடுகளுந்[187] தடவரையுங்[188] கூகையாறு மிட்டு
குறவர்குடில் நோக்கியவர் கெருவிதமாய் நடந்தார்
சாய்வுமலை சருகுமலை சந்தனவாழ் மலையும்
தவசிமுனி யோர்கள்மலை சன்யாசி மலையே
காவுதோறுங் கூவுமயில் கவிபாடு மலையே
கருமலையில் சென்றேறி காரிகைமார் வரவே
வழிவரப் பொன்னுருவியம்மை வாய்த்ததுடை மிருகம்
மங்கையரைக் கண்டுநின்று மாறி[189]விழுந் தோட
அசையாத மனமுடையாள் பொன்னுருவி யம்மை
அய்யோநான் பாவமது செய்தேனோ சிவனே
பொல்லாதாள் நான்பாவி பிறந்துவளந் தேனோ
பொற்கொடியாள் பொன்னுருவி புலம்பிவழி நடக்க
பிள்ளையில்லாப் பாவிதன்னைக் கொன்றாலும் பாவம்
பிழைக்கும்படி மலைமிருக மிளைத்துவிழுந் தோடி
தின்றாலுஞ் சிவன்றனக்கு மேறாது யென்று
தெய்வமலை மிருகமது பிறங்காணித்து[190] நிற்க
மற்றுமொரு மாமலையில் மங்கைவிரைந் தோடி
மடிபிடியாய்க்[191] கைப்பிடித்து மலையில்கொண்டு போனாள்
கொடுபோய்க் குறப்பெண்களைத்தான் கொடியிடைமார் தனக்கு
குத்தியில்[192]தேன் கரும்புடனே சர்க்கரையுங் கொடுத்தாள்
பருத்தபிலாக் கனியுடனே பருவாழைக் கனியும்
பரபரப்பாய்ச் சிறுகிழங்கும் பிடிகிழங்குங் கொடுத்தாள்
கொடுத்தவகை தனைவாங்கிக் கொடியிடைமா ரருந்தி
குடிலுக்கப்பால் பருத்தமரம் குளிர்ந்தநிழ லதிலே
இருத்திவைத்துக் குறப்பெண்கள்தா னேந்திழைமார் தனக்கு
இனியதொரு [illegible]க்காயும்[193] பழுத்திலையுங்[194] கொடுத்தார்

**மலைக்குறத்தி குறி கூறுதல்**

தரந்தரமே[195] தின்றவர்கள் தங்கள்மன மகிழ்ந்து
தயங்காதே வுந்தன் மனத்தின் கவலைதீரும்
நிறைநாழி[196] நெய்விளக்கு கொடுவாடி மகளே
நினைத்தகுறி[197] சொல்வேனா னுன்கவலைதீர
தரைமெழுகிக் கோலமிட்டுத் தக்கமலர் போட்டு
தந்திமுகத் தைங்கரனைத்[198] தனக்கெதிரே வைத்து
விடலை[199]பொரி யவல்தேனு மிக்கபய றெள்ளும்
விதம்விதமா முன்பதிலே கெருவிதமாய்ப் படைத்தாள்
சமயமிது வேளையிது தானுதவ வேணும்
சாம்பிராணி தூபதீபம் சண்டமிர்தம்[200] போலே
வஞ்சியிடை குறவர்மகள் தேக்கிலையி லிருந்து
வலதுகையை நீட்டுமென்று மாதுகுறி வுரைத்தாள்
வள்ளிக்கன்று வேங்கைமர மானவடி வேலா
மலையிலுள்ள கன்னிமாரை வாழ்த்தியவள் தொழுது
வள்ளியம்மா யென்குறிக்கு வந்ததுதகு வாயே[201]
பண்டு முன்னாள் நானுரைத்த குறிவகுப்பைக் கேளு
படிப்படியே சொல்லுகிறேன் பொன்னுருவித் தாயே
அன்றுவொரு சொல்லுடை யரிச்சந்திர ராசன்
அற்புதக் கோசிகனார்[202] தவமருளிடுவா ரென்றேன்
விதியாலே நமன்றனையும்[203] வேண்டுஞ் சனிபிடித்து
விரைவுனுட னவர்தமக்கு வருங்குறியைச் சொன்னேன்
பதியிழந்து பாழ்மடத்தில் படுத்திருப்பா ரென்றேன்
பஞ்சவரு நூறுவரும் பாருல காளும்நாளில்
அப்படிப்போ லென்குறிதான் பொய்யாதொரு நாளும்
அம்மையுந்தன் குறிதனையுஞ் சொல்லுகிறேன் கேளு
ஒழுங்காகக் குறவர்மகள் ஒருபிடிநெல் வாரி
ஒருவித்துநீ குறியடியோ பலவித்துக் குறியாதே
இங்கிதமாய்ப் பொன்னுருவி நீகுறித்த விதைதான்
என்னுடைய வலதுகைப் பெருவிரலி லிருக்கும்
அந்தவித்தை நீகுறித்தா யென்றுஅவள் சொல்ல
அருகிருந்த தோழியர்கள் திருமுகத்தைப் பார்த்தாள்
சந்தோஷமாய்ப் பொன்னுருவி தன்மனசு மகிழ்ந்து
தலையசைத்துக் கேட்டுக் கொண்டாள் தவக்குறித்தி சொல்ல
உன்ஊரு தென்காசிப் படைவீடு தாயே
ஒன்கணவன் செம்பவள ராசனெடி யம்மே
வரும்போது வலக்கெவுளி[204] சொன்னதுவும் உண்டு

மணவாள னுன்னையுமோ விலக்கினது முண்டு
பிள்ளையொன்று இல்லாத வாட்டமதி னாலே
பெண்புத்தி கொண்டுநீயும் பேய்போலே யலைந்தாய்
காணிக்கைக்கு ஆயிரம்பொன் கைமுதலுந் தோத்தோய்[205]
கண்டகண்ட கோவிலெல்லா மண்டையுருண் டாயே
தேடின திரவியத்தை வீணிலே நீயழித்தாய்
தெய்வமது உன்னளவு மில்லையென்று போச்சே
உறிதனிலே தயிரிருக்க வூர்புகுந்து வெண்ணை
ஊர்தனிலே நீதிரிந்தால் கிடைக்குமோடி தாயே
வீட்டகத்தே விளக்கொளி யிருந்து யிலங்கிடவே
வெளிதனில்போய் தீகண்டால் கிடைக்குமோடி தாயே
பண்டுமுன்னா ளுன்னுடைய காரணவ ராண்ட[206]
பதியுள்ள கோவில்தன்னில் சத்தியுள்ள தெய்வம்
உலகாண்ட மகமாயி பகவதியாள் தனக்கு
திருக்கோவி லானதிலே திருமதிலு மிருந்து
சின்னாபின்ன மாகச் சுவரிடிந்து நிற்குதம்மா
குடிவழிக்குக் கிளைவழிக்குங் கும்பிட்டதோர் தெய்வம்
கோவங் கொண்டு வுன்மேலே யேது[207]வைக்க லாச்சு
அந்தமுடன்[208] கோவில்கெட்டிப் பூசையது செய்தால்
அம்மாநீ மதலையென்று ஆண்பிள்ளையே பெறுவாய்
பிறந்தாலு முந்தனக்கு முழுதும்பிள்ளை யில்லை
பெண்ணொருத்தி வண்ணாத்தியால் தேசமர சாளான்
சந்தோசமாய்ப் பொன்னுருவி தலையசைத்துச் சிரித்து

## பொன்னுருவி குறமகளுக்குக் கொடுத்த பரிசுகள்

தாக்குடைய குறமகளுக்கு வாக்கெடுத்து வுரைத்தாள்
அயலறிய[209] அஞ்சிமாச மானதுண்டால் தாயே
அங்கழைப்பே னுன்கிளைக்கு மாசாரம்[210] செய்வேன்
குறத்திகுறி மெய்யானால் குதிரைக் கொடை தருவேன்
குடுக்கைமுட்டப்[211] பொன்றருவேன் குறமகளே வருவாய்
கஞ்சமரும்[212] பூங்குழலாள் பொன்னுருவி யம்மை
காறை[213]தன்னைக் கழத்தியவள் கழுத்திலே போட்டாள்
பூட்டிவைத்த பொற்கொடிமா ராபரண மெல்லாம்
பூசணங்க ளானதுடன்[214] பொற்சரிகை கொடுத்தாள்
மஞ்சாருங்[215] குறத்திமகள் வலதுகையைப் பிடித்து
வழியனுப்பிக் கொண்டுபெண்கள் வான்குலவை யிட்டார்

## பொன்னுருவி பின்னும் பல தலங்கள் சுற்றுதல்

அம்பா சமுத்திரம் போகவேணு மென்றுதங்கி
ஆதித்த வேளையில்[216] சென்றாளே சிங்களூர் தன்னில்
பரமன் றிருவுளம் பாவநாசத் துறைதன்னில்
பாவையர் சித்திர தீர்த்தம் பணிந்து கொண்டாளே
முத்தமிழ் பெற்ற வகஸ்தீசர் வாழ்மலை தன்னில்
முற்றும் வலமாகச் சுத்தியே கோவில் முகப்பில்
சித்திர தீர்த்தம் திருநாள் பணிவிடை கொண்டு
தேவச் சுடர்மணி யென்றுபோய்த் தெண்டனிட்டாளே
இத்தனை தூரமும் பத்தியே[217] வந்தது பாவம்
ஈசனே பாவ னாயகரைக் கண்டபோது
நித்தியம் நித்தியம் செத்துப் பிழைத்தது போலே
நெஞ்சிக் கவலைகள் கஞ்சிகுடிக் கொட்டுதில்லை[218]
கொத்துச் சரப்பளி[219] மார்பிலே கோதண்ட ராமன்
கோல மதயானை கொண்டவடிக் கொண்டுதருவேன்
முப்பதுஞ் சென்றால்[220] முழுதுங்கிழவி யென்பார்கள்
முட்டுப்பட் டெத்தனை[221]நாளுக் கிருப்பேன் முதல்வா
செத்துக் கிடந்திடில் புத்திர னில்லாதே போனால்
சீத்துவக் கேடியைக்[222] காட்டி லிழுத்தெறி யென்பார்
வாயிலே பொன்னிட்டுத் தீயிலிடுவானைக் காணேன்
வந்து பிறந்தேனே முந்தச்சகுனியைப் போலே
சுண்டைக்காய் தன்னிலே சூத்தை[223]போனால் கறிக்காமோ
தூரப் போனா லெந்தன் பாவத்தை யாரார் சுமப்பார்
கோனாரு விட்ட குறட்டாடு[224] போலவே சுத்தி
கோவிலுந் தெய்வமு மொக்கவே கும்பிட்டு வந்தேன்
ஆனா லொருவரு மிங்கே யிரங்கினா ரில்லை
ஆத்தில் முளைத்ததோர் கோரையைப் போல வலைந்தேன்
இப்படிக் கும்பிட்டு யேழெட்டு நாளா யிருந்து
ஏதும்பலனில்லை வாருங்கோடி தோழி மாரே
செப்பமாய்ப் பொல்லாத பேர்களைக் கூட்டியே வந்து
செத்துப் போகவென்றால் சற்றும் விடுகிறா ரில்லை
ஊதியங் கெட்ட[225]வுடம்போடே வூர்தனில் போனால்
ஒட்டம் நடையத்து வீட்டில் கிடப்பது நன்றே
சாதிக் கழிவாக வைத்துதே தெய்வமும் நம்மைச்
சோத்துக்கு முன்னே சுணயல்லோ[226] ரெம்பப் பெரிது
தூங்கியொரு வீட்டில் வாங்கிக் குடிப்பது நன்றோ
வீட்டி லிருந்தாக்கா லித்தர சோலியு[227] மில்லை
விம்மிப் பெருமூச்சு விட்டெழுந் திருந்தாளே

மங்கையர் கூடி யெழுந்தவர் முன்னே நடக்க
வரும்போது திருமஞ்சனக் குடங் கண்டாள்
மங்கைப் பாதம் வருந்தவே மெல்ல நடந்து
பாவையர் சேரத் தெற்பங்[228]காண வேணுமென்றார்
தெற்பக் குளமதில் தீர்த்தமு மாடி
சிவனே பராபரத் தெய்வமே யென்ன
பாவமது தீர்ந்துதே பாவ நாயகரே

## பொன்னுருவியுந் தோழியரும் தென்காசி திரும்புதல்

பண்டுபோல் தென்காசியில் சென்று போறேன்
தென்காசிப் பாலம் வடபாதை விட்டு
செட்டியர் குளத்தூரு தன்னிலே வந்தார்
கல்லாறு கருணையாறுங் கடந்து
கடிதாக ஆழ்வார் குறிச்சியில் வந்தார்
ஆனைக் காத்தய்யன் கோவிலில் சென்று
அடிபணிந் தாளே பொன்னுருவி யம்மை
பணிந்தம்மை அய்யனுட பாதத்தில் வீழ்ந்து
பாவையர் சேர வழிநடை கொண்டாள்
வாகைக்குளங் கிட்டினா புரம் விட்டு
வந்தார் கடையத்தூர் நாடது தனிலே
கலியாணி யம்மனே காளிதிரி சூலி
கங்காளி பத்திரமா காளி யம்மா
இனியாகிலும் பிள்ளை நீயே தருவாய்
என்றடி பணிந்தவளுந் தொழுதாள்
மண்டபம் சிங்காசனமு மதிலும்
மகர தோரணம்[229] பொன்னாலே விடுவேன்
கண்டார் மகிழவே பூந்தல விதானம்[230]
கனகமுடிச் சப்பிரத் தேரொன்று விடுவேன்
அற்ப முனக்கிது வல்லவோ வம்மா
அடியாளுக் கொருபிள்ளை தந்தனுப் பென்றாள்
இப்படிச் சொல்லியே யேழெட்டு நாளாய்
இருந்தும் பலனொன்றுங் காணாமல் போனாள்
தோரணம் பொத்தை யிடையன் குளமும்
தோகையர்கள் சேரக் கடிதாய் நடந்தார்
மந்தாரஞ்[231] சேரும் பொன்னுருவி யம்மை
மத்தாளப் பாறை தனைக்கடந் தாளே
குத்தால நாதர் குழல்வாய் மொழியை

கும்பிட்டுப் பெண்கள் குரவையிட் டாரே
காட்டா ளம்மனைக் கண்டு பணிந்து
கர்மவினை தீராதோ கன்மவிதி தானோ
வாரிட்ட[232] பெண்கள் மடவார்கள் நின்று
மகிழ்ந்தங் கொருநாள் சிலவுங் கொடுத்தார்
ஏகாந்த மாகச் சிலம்பு புலம்ப
எருது விழுந்தான் பாறையானது மிட்டு
ஒய்யாரப் பெண்கொடியாள் பொன்னுருவி யம்மை
ஊருந் தென்காசி தன்னிலே வந்தாளே
தேரோடும் வீதிகளுஞ் சிகரநாலு கோபுரமும்
வாரேறும் மடைப்பள்ளியும் மண்டப சிங்காசனமும்
காரேறும் பூங்குழலாள் கணவனுட முன்பில்வந்தாள்

**கணவரிடம் சென்று வந்த விவரம் கூறுதல்**

கண்டார் செம்பவள ராசன் கன்னிகையாள் முகத்தழகை
சென்றாளே தவசிருக்கத் திரும்பிவந்தா ளென்றுசொல்லி
பெண்ணேநீ போனதினால் பிள்ளைப்பலன் கண்டதுண்டோ
மனையாளே நானறியேன் வந்தவரலாறு சொல்லு
தேசமெங்குந் தவசிருந்தேன் சிறுவனைநான் கண்டேனில்லை
தேடின திரவியத்தை தேசத்திலே யழித்துவிட்டேன்
கல்படிந்த காடதெல்லாங் கடுகப்பொடியாய் நடந்தேன்
நடந்தேன் திரிந்தலைந்தே னாலும்பலன் கண்டேனில்லை
கடந்து மலைதனிலேறி காட்டூடே வருகையிலே
கருங்குறத்தி மகளொருத்தி கைப்பிடித்தா ளென்னைவந்து
மைவிழியா ளவள்வீட்டு வாசல்மட்டுங் கூட்டியேபோய்
வந்தவகை வாரதெல்லாம் வகையாக யெடுத்துரைத்தாள்
அந்தமுட னூர்தனக்கு அனுப்பிவிட்டாள் போவெனவே
வாழ்ந்ததுவு மிருந்ததுவும் வையகத்தை யாண்டதுவும்
வச்செடுத்தாப் போலேயல்லோ மலங்குறத்தி சொல்லி விட்டாள்
திருக்கோவில் கட்டவேணுந் திருவிழாவும் நடத்தவேணும்
திருத்தவசு புரியவேணுஞ் சிறுவனைநான் பெறுவதற்கு

**கோயில் திருப்பணி செய்தல்**

வார்த்தைகேட்டுச் செம்பவளராசன் மாந்தயரை வரவழைத்து
வந்துநின்று மாந்தயர்கள் வரவழைத்த தேதெனக்கேட்டார்
இருந்த மதிலுந்தேரு மிமைக்குமுன்னே முடித்துவாரும்
கடுகமன்ன னுரைகேட்டுக் கண்ணாளர்[233] கூடியொன்றாய்

கல்மாளிகையுந் தேரும் கதிர்நொடியி[234] லேமுகிததார்
பூசைச் சிலவுக்கென்று பொன்னூறு தான்கொடுத்தார்
ஆசையுடன் பால்பசுவு மமுதுசம்பா[235] நிலமுமிட்டாள்
தஞ்சமெனக் கோவிலதில் தவசிருக்க வேணுமென்று
கிஞ்சுகமாய் நம்பிமார்கள் கெருவிதமாய்க் கொடியேற்றி
ஒன்பதாந் திருவிழாவி லோடவைத்தார் தேர்தனையும்

### பொன்னுருவி தவமும் சிவனார் தந்த கனவும்

அன்பாக அவள்மெழுகி யருந்தவசி தானிருந்தாள்
நனைத்தமுந்தி[236] துவராமல்[237] நாற்பது தவசிருந்தாள்
சந்ததிதான் வேணுமென்றே தரைமெழுகி யசனமுண்டாள்[238]
மைந்தனது வேணுமென்று வலதுகையைப் பணயம்வைத்தாள்
முளைத்தமரம் தான்பூத்து முதுகெல்லாந் தானுதிர
குழைத்துமஞ்சள் குளித்தவுடன் கொண்டையெல்லாம் பூவுதிர
அந்தநல்ல வருந்தவசை ஆதிசிவன் றானறிந்து
கந்தமருங் குழலாளுக்குக் கனவுகாண வேணுமென்று
குஞ்சி[239]நல்ல சடைபுரளக் குறுமுனிபோல் வேசங்கொண்டு
சித்தாண்டார் வடிவாகத் திருச்செவியில் சொல்லுவாராம்
கட்டுவெத்திலை கொண்டு கைதனிலே தரவுங்கண்டாள்
புத்தகமும் ஏடுங்கண்டாள் பொன்னின்எழுத் தாணிகண்டாள்
உடுத்திருந்த சேலைதன்னி னுள்முந்தித் தலையதிலே
இடைசிறிய வெட்டுவாளி[240] யெடுத்துவந்து வொருபுழுவை
குகையதிலே[241] வைத்தூதிக் குஞ்சியது[242] பறக்கக்கண்டேன்
பாம்புவந்து மடியேறிப் படமெடுத்து ஆடக்கண்டேன்
கண்டுஅம்மை திடுக்கெனவே கன்னியரு முழித்திளகி

### கண்ட கனவு கணவனோடுரைத்தல்

கண்டகனா வானதெல்லாங் கணவனுட முன்பில்வந்து
இன்றிரவு வொருகனவு யென்கணவா கண்டேனான்
கண்டகனா வத்தரையுங் கணவனுக்கே கட்டுரைத்தாள்
சர்ப்பமது கண்டதுண்டால் கெர்ப்பமல்லோ பெண்ணரசே
செய்தவத்தால் பிள்ளையுண்டு தேன்மொழியே பதறாதே
பொழுதுதான் போனபோது புகுந்தடைத்தார் கோவிலைத்தான்[243]

### கெர்ப்பமடைதலும் கர்ப்பகால அவத்தைகளும்

மகிழ்ந்தகுழல் மங்கையுட வயத்தில்கெர்ப்ப மவதரித்தார்
தரித்தகருக் குழிதனிலே சகலவுதிரமுந் தான்றிரண்டு

உருவாகக் கருவாகி யுகந்துவளர்கின்ற நாளதிலே
நின்ற நாளில் இருபத்தெட்டாம் நாளில்
நிச்செயமாய்த் திருப்பூ[244] மறந்தம்மை
நன்றியுட னெங்கள் பொன்னுருவித் தாயார்
நாயகனே சரணமென்றே யிருந்தாள்
இருந்தபோது ரண்டான திங்களிலே
இதமா யோடி யுதிரந் திரண்டுதாம்
பொருந்த மூன்றான திங்கள் பிறந்திட
போசனம் வெறுத்தே யிறங்காமலே
இளநேரம் வெயில் வெறிக்கும் போது[245]
இருகண்ணும் விறியால்[246] கிறக்கிடும்[247]
அளவில்லாத புளிப்பெல்லாம் போசனம்
அன்னங் காணும்போழ் சத்திப் பெடுக்குமாம்[248]
நாலுமாசம் பிறந்த பொழுதிலே
நாயகனை வெறுத்தங் கிருந்தம்மை
வேலை[249]யென்ற விழியுங் கிறாவியே[250]
வெயில் தன்னிலே நித்திரை யாகினாள்
மாலை திருமுடி தன்னி லணியாமல்
மஞ்சணையுங்[251] கழுத்திலே பூசாமல்
சினந்த மங்கை விழிநுத லாளுக்கு
சிறந்ததோ ரஞ்சி மாசம் பிறந்திட
அஞ்சி மாசம் பிறந்த பொழுதிலே
அரை வயிறு கருவுரு வாகினாள்
கனத்ததோர் தலைமயிர் குலைந்திட
காரிகை மார்கள் வாரி முடிந்திட
அனர்த்த முண்டே[252] திருவயத்துக் கென்ன
அன்புடன் பெண்கள் சோதித்துக்[253] கேட்டிட
சோதித்துக் கேட்ட மங்கைமார் தன்னோடே
சொல்லுவாள் சற்றே லெச்சையுண்[254] டாகியே
ஆதித்தன் வந்துதிக்கு மன்னேரத்தில்
அப்போ சற்றே துடிக்கு துடம்பினில்
ஆறு மாசம் பிறந்த பொழுதிலே
அயலறிந் தார்க ளாயிழை மாரெல்லாம்
விம்மியே தனம் மேனி புளகிதம்
வீறில்லா மாச மேழும் பிறந்திட
ஏழுமாசம் பிறந்த பொழுதிலே
ஏந்திழை மாரொரு குறி பார்த்திட
சித்திரம் போலத் தேமல் பிறந்திட
திருவயிற்றிலுங் கொங்கைகள் மார்பிலும்

மொந்தை செப்புப்போ லொத்த தனபாரம்
மோதித் தலை சற்றே சரியுமாம்
குன்றுபோ லொத்த கொங்கைகள் ரண்டிலும்
கூடவே சிறு பால்நரம் போடுமாம்
செத்த ஆலிலை போலே திருவயிறு
இலங்கும் பொன்னின் குடம்போல் வளருமாம்
தாழ்வு வராது பொன்னுருவி யம்மைக்கு
தக்கதோர் பிள்ளை யாண்பிறக்கு மென்றார்
இப்படிப் பெண்கள் செப்பி யிருக்கவே
இவளுக்கு யெட்டு மாசம் பிறந்திட
எட்டு மாசம் பிறந்த பொழுதிலே
எண்ணிப் பட்டாங்கு[255] பாத்திருந்தாள்
எட்டான மாசமதி லெழுந்திருக்கக் கூடுதில்லை
கட்டாக யென்னுடம்பு கருகிரெம்பச் சோருதேடி
பட்டாங்கு நானுரைக்கப் படுமறுக்க[256] மாகுதேடி
பக்கவிலாவு ரெண்டும் படைத்தெடுத்த குறுக்கெலும்பும்
சிக்கெனவே யடிவயிற்றில் சிறுவன்விளை யாடுறதும்
சுக்கானும் பாய்மரம்போல் சுழலுதெடி யென்னுடம்பு
மோதிரங்கள் பூணுகின்ற மொழிகளெல்லா[257] னோகுதெடி
ஏதுசழன்[258] வந்துதெடி யென்னுடைய தோழியரே
காத்துத்து வந்தசழன் கருத்தழிக்க வந்ததுவோ
தண்டைக ளணிந்திருந்த கெண்டைக்கால் நோகுதெடி
பண்டுமுன்னா ளிதுநோவைப் பட்டறியேன் கேட்டறியேன்
பாதசரம் பூணுகின்ற படங்களெல்லாம்[259] நோகுதெடி
கூடாக யென்சீவன் குறையுதெடி யென்வாணாள்
கட்டுவிட்டு[260] வருகுதெடி கைதருவாய் தோழியரே
திட்டுவாள் பயமென்பாள் சிவனைரெம்ப நொந்திடுவாள்
உடலோடே உயிர்பொருந்தி யுறக்கமுந்தான் வருகுதில்லை
கடலடித்த திரைபோலே கண்ணுறக்க மற்றேனே
தவசிருக்கப் போனதுக்கோ சனியைவலித்துக்[261] கொண்டேன்
அம்மாடி யென்னுயிர்தா னந்தரத்தே போகுதெடி
இனிநான் பிழைப்பதில்லை யெடுபிடியாய் நோகுதெடி
அநியாயங் கூறிடவே யதுகடந்து யெட்டுமாசம்
ஒன்பதான மாசமது உதித்தெழுந்து பிறந்திடுமாம்

**ஒன்பதாம் மாதத்தில் செய்தவை**

ஒன்பதாம் மாசமதிலே உடையவர்க்குப் பொங்காலை[262] யிட்டாள்
உடையவர் தனக்கொரு பொங்கலு மிட்டு
உண்மையாய் மங்கையர்க் குரைத்திட

வடிவேல் மார்பனுட பொன்னுருவி யம்மைதிரு
வயிறது வாழ்ந்து களி கூரவே
உலை யடுப்பினில் வைத்த நிறைநாழி நெல்பொரி
ஒருகொம்ப னரிசியு[263] மிட்டாள்
அண்டமாய் நிறைமரக்கால்[264] பொரிகும்பம்
அன்பான கற்கண்டு சீனியும்
தட்டினார் தேங்காய் திவசமது[265] தப்பாமல்
தான்சமைப் பானையது யேத்தினார்
ஏத்தியே வுலையதி லன்பா யமுது சமைப்பார்
இட்டார் கொதித்திட் டிறக்கினார்
மாத்தவே பொன்னுருவி யம்மனு மொழுகியே[266]
வந்தாள் பணிப்பட்[267] டுடுத்தவள்
எழுகதிரோ னொளியெனவே மாணிக்கக் கொப்பிட்டு[268]
ரெத்தினப் பணிக்காதி லிட்டாள்
பழுதறப் பச்சைநிற மொத்தகை ரெண்டிலும்
பவளம் வெள்ளிக் கடைய மிட்டாள்[269]
இட்டாரே பொன்னரைஞாண் இடைமணி மேகலைகள்
இரவிமதன்[270] மையல் கொள்ளச் சாத்தினாள்
பட்டினா லுத்தரீக மிட்ட[271] லெக்ஷுமி
பங்கயப் பெண்ணென் றிருந்தவள்
இருந்தார்கள் சூழவே யேலங் குழலாளுக்கு
ஏந்திழைமார் சடங்கு செய்யவே
மின்னனைய ரெற்றின விதப்பலகை[272] யதின்மேலே
மேகவர்ண மாந்தளிர் விரித்தனர்
அன்னையர்கள் தாதியர்கள் மூப்பியர்க ளும்மகிழ்ந்து
ஆண்பெறுவா யம்மையெனத் தேத்தவே
கூற்றை யுதைத்தோர்[273] சொக்கநாத ரருளாலே
கோதுகுலப்[274] பொன்னுருவி மாசம்பத்து மானாள்

**ஈத்துப் புரை கட்டுதல்**

பத்துமாச முருவளர்ந்து பாலன்பிறக்க வரும்நாளில்
கர்த்தர் விதித்த வருளாலுங் கன்னிசெய்த தவத்தாலும்
அத்தர்[275] சித்த ருளமறவா ரன்னநடையாள் பொன்னுருவி
விஸ்தாரமா[276]யீத்துப்புரை[277]விரைவினுடன்கட்ட
வேணுமென்றாள்
வார்த்தைகேட்டுச் செம்பவளராசன் மாந்தயரை[278] வரவழைத்து
வந்துநின்ற மாந்தையர்கள் வார்த்தையேது சொல்லுவாராம்

ஈத்துப்புரை சித்திரகூட மின்பமுடன் கட்டவேணும்
உரைகேட்டு மாந்தையர்க ளுத்தமனை தன்னில்சென்று
ஆயுதங்கள் வகைவகையா யாசாரி மாரெடுத்து[279]
வழிநடந்து மாந்தையர்கள் மாமலைமேல் சென்றேறி
வானமதை நோக்கியல்லோ வளர்ந்தமரம் தன்னைக் கண்டார்
இந்தமரம் நல்லமரம் ஈத்துப்புரைக் கேத்தமரம்
ஒருமரங்கொண் டுள்ளபணி வொக்கவேதான் முடித்திடலாம்
மரங்கள்வெட்ட வேணுமென்று மாந்தையர்கள் மனமகிழ்ந்தார்
மரத்தடியில் சென்றுநின்று வாய்த்தமரந் தன்னைச்சாய்த்தார்
மரங்கள்தன்னைப் பணிப்படுத்தி[280] வண்டியின்மேல் தானேத்தி
தென்காசிப் படைவீட்டில் சேர்ந்தல்லோ மரங்கள்வந்து
வாள்மேலே வாள்நிறுத்தி வாள்மானந் தான்பார்த்தார்
சரிந்தம்மை பின்னாகச் சதுரவளை தானறுத்தார்
பிடித்திருந்து பின்னாகப் பிடிபலகை தானறுத்தார்
தோழிமார்க்குச் சாய்ந்திருக்கத் தூணும்கடைந்தே நாட்டி
நாட்காலுந்[281] தானாட்டி நல்லவளை[282] மேலேத்தி
மந்திரிமார் வந்திருக்க மணிமாட கூடம்வைத்தார்
ஈத்துப்புரை முடிந்தபோது ஏத்தகண்ணாளர் தமக்கு
சம்பளமும் வெகுமானம்[283] தான்கொடுத் தனுப்புவாராம்
மாந்தயர்கள் போனபோது வாணுதலாள் பொன்னுருவி
பாப்பார்கள்[284] வேதியர்க்குப் பாற்பசுவைத் தானமிட்டாள்
கோப்பான வேதியர்க்குக் கொண்டிற்கூலி[285] கொடுத்தார்
வலதுகால் முன்னேவைத்து மாதுநல்லாள் குடிபுகுந்தாள்

**பிரசவம் பார்க்க மருத்துவச்சியை அழைத்துவரல்**

குடிபுகுந்த நாழிகையில்[286] கூண்டநோவு துடங்கிடுமாம்
வாராயென் மன்னவனே வயிறுரெம்ப நோகிதுகாண்
எந்தயெந்த மருத்துவத்தை யிமைக்குமுன்னே கூட்டிவர
எட்டுச்செட்டி யென்றொருத்தி யிருப்பாள்ராச மருத்துவத்தை
கர்ப்பூர வடிவாளைக் கைமேலே கூட்டிவாரும்
வார்த்தைகேட்டு ராசமன்னன் வரவழைத்தார் சிறுக்கனையும்[287]
சிறுக்கனைத்தான் வரவழைத்துச் செய்திசொல்லி யனுப்புவாராம்
நெற்றியிலே நீறணிந்து நிறையசோறு பசியாறி
கச்சைகெட்டி[288] நாமமிமட்டுக் கையருவாள் தோளில்வைத்து
இஞ்சிவிளை தான்கடந்து யெலுமிச்சித் தோட்டமிட்டான்
மஞ்சள்விளை தான்கடந்து மருதுணித் தோட்டமிட்டான்
ஆயத்துறை தான்கடந்து யமுர்தசம்பா நிலமுமிட்டான்

குத்துக்கல்லு மீதேறிக் கூப்பிட்டானே மூன்றுசத்தம்
மருத்துவமே மருத்துவமே வாடியென்று தான்விளித்தான்
ஆரடவா தூதுவனே யங்குநின்று விழித்தவன்றான்
நானல்லவோ தூதுவன்றான் நாடிஉனைத் தேடிவந்தேன்
சேனைவென்ற விழியாளுக்குத் திருவயறு நோகுதென்று
மானைவென்ற விழியாளை வருத்திவரச் சொல்லிவிட்டார்
பொன்கழஞ்சி[289] யொத்ததொழியப் பிறகாலே வருகுவேனோ
ஒருகழஞ்சிப் பொன்றருவேன் ஒண்ணுதலே மருத்துவமே
ஒருகழஞ்சிப் பொன்னுக்கு ஊருவிட்டு வருகுவேனோ
இருகழஞ்சிப் பொன்தருவே னெழுந்திரெடி மருத்துவமே
மூன்றுகழஞ்சிப் பொன்றருவேன் மொய்குழலே மருத்துவமே
மூன்றுகழஞ்சிப் பொன்னதுதான் முத்தத்தில்[290] முருங்கைதரும்
நாலுகழஞ்சிப் பொன்றருவேன் தட்டாதே மருத்துவமே
நாலுகழஞ்சிப் பொன்னதுதா னடைப்படிக்கல் சிலவடவா[291]
அஞ்சிகழஞ்சிப் பொன்றருவே னாயிழையே மருத்துவமே
அஞ்சிகழஞ்சிப் பொன்னதுதா னருமையல்ல நீபோடா
ஆறுகழஞ்சிப் பொன்றருவேன் தட்டாதே மருத்துவமே
ஆறுகழஞ்சிப் பொன்னதுதான் சோறுகறிக்குத் தப்பாது
ஏழுகழஞ்சிப் பொன்றருவே னெழுந்திரெடி மருத்துவமே
ஏழுகழஞ்சிப் பொன்னதுக்கு யிருப்பிளகி[292] வருவேனோ
எட்டுகழஞ்சிப் பொன்னொத்தபோது கிட்டவந்து தலையசைத்தாள்
பத்துக்கழஞ்சிப் பொன்னொத்தபோது படிகடந்து (கிட்டே வந்தாள்)
ஓட்டனோடே[293] மருத்துவமுங் கேட்டாளே வொருவார்த்தை
நான்கிழவி யுன்னோடே நடக்கவுந்தான் மாட்டேனே
நீகிழவி யானாலு நெஞ்சித்திடம் போய்விடுமா
குப்பையிலே போட்டாலுங் குன்றிமணி[294] மங்கிடுமோ
பசுகிழ டானாலும் பாலுருசி போய்விடுமா
நான்மாட்டேன் போடா நல்லபுகழ் தூதுவனே
என்னைப் போலப் பலபேருண்டு இப்பெரிய பட்டணத்தில்
பாத்தழைத்துக் கொடுபோநீ பாவைநல்லாள் பதறாமல்
இத்தனைபேர் மருத்துவத்தா ளிருந்தாலு மிப்போது
உன்னையல்லோ சொல்லிவிட்டா ளொண்ணுதலாள் பொன்னுருவி
பண்டுபோல நான்மகனே பரபரென நடக்கமாட்டேன்
காதவழி[295] நடக்குமுன்னே கால்கடுக்கு முடலிளைக்கும்
வெயிலதிலே நடக்கமாட்டேன் விழுந்திடுவேன் வழிதனிலே
கைதாங்கிக் கொடுபோவேன் கன்னியரே வாருமென்றான்
கூன்கிழவ னொருவனுண்டு கூடரண்டு குழந்தைவுண்டு
கஞ்சிவைக்க வொருவரில்லை காலதாமச முண்டானால்[296]

நான்வார தில்லையென்று நகட்டி[297]மொழி பேசிவிட்டாள்
ஆனாலு மருத்துவமே ஆபத்துக் குதக[298] வேணும்
அறிவே னறிவேனடா யங்கேயுள்ள பெண்டுகளை
பண்டுநா னங்கேவந்து பட்டசழன் ரெம்பவுண்டு
தலைக்கெண்ணை தந்தாளில்லை தானேயந்தப் பெண்டுகள்தான்
துகிலாடை தாரேனென்றாள் சொல்படிக்குத் தந்தாளில்லை
கொத்தியார்க்கு நிறமரக்கால் வித்தளந்து வைத்தாளில்லை
உள்ளபடி பதிவதிலும்[299] ஒட்டிரெட்டி[300] வாங்கித்தாரேன்
உரைத்தமொழி தனைக்கேட்டு உத்தபுகழ் மருத்துவமும்
இருகைக்கு வளைபூட்டி யிலங்குமணிப் பட்டுடுத்தாள்
கெட்டுப்பெட்டி தனையவிழ்த்துப் பட்டுப்பருவட்ட மெடுத்தாள்
கூழைப் பிரம்பெடுத்தாள் கூனிக்கூனி வழிநடந்தாள்
வாரபோது வழிதனிலே வந்தெதிப்பு[301] பார்க்கலுற்றாள்
வட்டமிட்டுக் கெருடாழ்வார் வலமிருந் திடம்பாய்ந்தார்
சட்டமாய் நல்குறிகள் தான்பார்த்தேன் தூதுவனே
பெறுவதுமே யாண்பெறுவாள் பேறுமுண்டு யெந்தனுக்கு
பொன்னுருவி வீத்திருக்கும் புகழீத்துப் புரைதனிலே
அஞ்சாதே யென்றுசொல்லி யறைபுகுந்தாள் மருத்துவமும்

**பொன்னுருவியோடு மருத்துவத்தாள் உரைத்தவை**

ஓடியே தூதுவன் வந்தபொழுதில் வாராமல்
உடனே துரிதமாய் வாராதிருப்பது யேது
கூட்டிக்கை யடிதொழுது மருத்துவத்தா ளுரைப்பாள்
குழந்தைக ளஞ்சாறுவுண்டு கஞ்சிக்கில்லை தாயே
புருஷனோடே பிள்ளை யேழுநாலு முதலாக
பொய்யல்லகா ணும்மாணை ஒன்பது பேருண்டு
பொறுத்திருநான் சல்லி[302]ஈட்டில்[303] கூடன்வாங்கிக் கொடுத்து
புகழ்பெரிய தூதுவனார் கூடவந்தே னானும்
வருகிற தவர்களுக்கு வார்த்தைசொல்லி வந்தேன்
வாணுதலாள் பொன்னுருவி திருவயறு வாழ்ந்தால்
தருகிறதோர் பொன்பணமும் பருவட்டமுஞ் சேலை
தலைச்சுமடாய்க் கெட்டிக்கொண்டு வாரேனென்று வந்தேன்
திருவாணைப் படியேதான் நீவேணு மம்மா
சீக்கிரமா யோடிவந்தேன் தாமசிக்க வில்லை
பொன்னுருவி தன்னோடே மருத்துவத்தா ளிருக்க
பொன்னரிய சித்திரகூடந் தன்னிலிருந் தாளே

## மருத்துவச்சி பிரசவ நேரத்துப் பொருட்களை வரவழைத்தல்

விளக்கினொடு நிறநாழி கொண்டுவாடி மகளே
மிக்கயெண்ணை புண்ணாக்கு மஞ்சணையும் வேணும்
நாவிலிட்டால் நனையத்தக்க பருவட்டமும்[304] வேணும்
நன்மையாக நூத்தெட்டுப் பொன்[305]கட்டி வைக்கவேணும்
பெரியபொன்னுங் கலமுந் திருவன் உறை[306]வேணும்
பெரியமுத்த கொத்தியார்க்கு குறுணி[307]நெல்லு வேணும்
இருக்கவொரு முக்காலி யிலையதுவும் வேணும்
எண்ணையோதிப் போடவொரு கிண்ணிவட்டில் வேணும்
நஞ்சுண்ட மனுசரைப்போல் கஞ்சி விசாரத்தால்[308]
நாலுதட்டா[309] வளையவொரு பூவாடை வேணும்
மஞ்சணைவேல் விழியாளுக்குத் தாகம்வந்தால் குடிக்க
பன்னீருச் செம்பதிலே வென்னீரும் வேணும்
தியக்கம்வரும் போதிலொரு வேர்வைவந்து தானால்
திருமுகத்தில் வீசவொரு வீசறியும் வேணும்
உடல்குளிர்ந்து நடுநடுங்கி வாரபோது குடிக்க
உறப்பாக வொருசுங்கான்[310] புகையிலையும் வேணும்
எண்ணமில்லாத் தோழியர்கள் சொன்னதெல்லா மறிந்து
ஏந்திழையாள் கேட்டதெல்லா மெடுத்தவள் கொடுத்து
கொடுத்ததெல்லாம் வாங்கியவ்ள் கொத்தியார்க்கு வைத்து
கொடியிடையாள் மருத்துவமும் வயிறுகளையும் பார்த்தாள்

## பிரசவ வேதனையால் பொன்னுருவி புலம்புதல்

ஆகோவென் றழுவா ளலறிமண்ணில் விழுவாள்
ஒகோகோ மருத்துவமே யினிவுனக்கே பதமென்பாள்
பொன்போல சரீரம்விசர்ப்பாள்[311] புவியில் புரண்டழுவாள்
புவியைப் படைத்தோனே யிந்தப் பொல்லாங்கெல்லாஞ் செய்தாய்
நஞ்சோ நடுவயிற்றில் நாதன் தரிப்பித்தாரோ
நானோ யிதுபடுவேன் தெய்வம் நடுவில்லையோ[312]
கெர்ப்பமென்றே யிருந்தேன் கிலேசமென்[313] றறியாமல்
இருப்பேனோ பாருலகி லினிப்பாலகன் வேண்டாம்
முன்பாடு பட்டறியேனென்று மொழிவாள் குழறிடுவாள்
ஆரூர் பெருமானே அபயம் உமக்கபயம்
வாழைத் தடைபோ[314]லொத்த வர்ணத் துடையிரண்டும்
காளைகட்டுங் கயறதுபோல் கட்டுவிட்டு வருகுதேடி
காலமே சிறுநாளில் கைப்பிடித்த கணவனை

மாலைதந்து அனுப்புமென்ற மணவாளனா ரெங்கே
மன்னா உயிர்கன்னுதே மரிப்பேன்கண்ணில் முழிப்பாய்
இரங்கியவர் திருவுளமா யீசுரனார் தன்மேலே
மலங்கிமட வார்கள்சிலர் வாய்பதறி யேதுசொல்வார்
ஈன்றறியேன் எடுத்தறியே னேதும்வழி நானறியேன்
ஈன்றெடுத்த தாய்மாரே யெனக்குப்புத்தி சொல்லயளோ
குடலையெல்லாம் பிடுங்கியொன்றாய்க் கூடுதெடி மருத்துவமே
அப்போது மருத்துவத்தா ளவளேது வார்த்தைசொல்வாள்
இந்தவகை யெடுபிடியா யெடுக்குதெடி யின்னோவு
ஈசர்திரு வாக்குவுண்டு யிக்குழந்தை யாண்பிள்ளைதான்
என்றுசொல்லி மருத்துவத்தை யேதுசொல்வாள் பொன்னுருவி
சாவேனோ பிழைப்பேனோ தார்குழலே மருத்துவமே
சாவதுக்குங் குறிசொல்லடி யாவதுக்குங் குறிசொல்லடி
குறிக்குமுன்னே கூன்பல்லிதான் குரவையிட்டுச் சொல்லிடுமாம்
நின்றநிலையில் சொன்னபல்லி நீலமென்னு மிடைசிவப்பு
எல்லையிது வென்குறிதா னெழுதிடலாம் செம்பேட்டில்
நல்லதம்மே உண்மைசொன்னே னடுக்கமுற வேணாமே
நடுங்குதம்மா யெந்தனுளம் நன்னுதலே மருத்துவமே
கொடும்பகையோ கடுஞ்சனியோ கொல்லவந்த கோலமிதோ
இடும்புசெய்யு மென்வயற்றி லேதுபிள்ளை மருத்துவமே
மன்றாடித் தவமிருந்தேன் வரமளித்தாள் சாகவென்றோ
சாவதுக்கு லெக்கே[315] தூசணித்த[316] பிள்ளையால் வயிறு
நோவதுக்குங் குறைகளில்லை நுன்பலப்பட்டே[317]னுடல்தான்
போவதுக்குக் குறிசொல்லடி பெண்ணேநீ மருத்துவமே
கொன்றையணியுஞ் சிவனே கூத்தாட்டுப் பாராதே
பண்டைவிதியோ சிவனே படுமறுக்கம் பார்க்கலையோ
பருத்திபடாப் பாடதிலும் பன்மடங்கு பாடுபட்டேன்
ஒருவரினக் குதவியில்லை யுடையவரே யென்றழுதாள்
தவமே செய்த மகனால்பட்ட சழனே வுலகறியும்
தாய்பத்து மாசம் சுமந்துபெற்ற தறிவாரிந்த வுலகோர்
அகமேயிது நோவைமக னறியர்ன் மருத்துவமே
ஆயிரந் தேள்கொட்டும் விழமே பொறுப்பேனோ
என்றுசொன்ன பொன்னுருவிக் குரைப்பாள் மருத்துவமும்
என்செய்வோம் நமக்குள்ளநோவிது வுனக்கோ சகலருக்கும்
புவியிலுள்ளோர் கேட்கவாய்விட் டலறாதே நகையாமல்
பொன்னம்மா பதறாதேநீயும் புத்திரன்றன்னைப் பெறுவாய்
திட்டுவாள் பிடித்திடும்பேரையுஞ் சிவனேதஞ்ச மென்றாள்
சிறுவன்மேல் மனம்வைப்பதைவிடச் செத்துப்போறது நல்லது

கூத்துவா யென்னைக் கொல்லவேசிறு பிள்ளையா யவதரித்தாய்
கொடியாளுன்னைப் பெறுமுன் னுயிர்கொண்டு போமென மொழிவாள்
ஆயிழையா ளிவள்படும் பாடுகண் டவையோ முறையென்பாள்
அரனேபிச்சை போடுயென்பா ளழுவாள் புரண்டிடுவாள்
சிலபேர் புலம்பிடுவா ரதில்சிலபே ரமத்திடுவார்[318]
சிவசிவா யென்ன செய்குவோமென்று செம்பவளராசன் புலம்ப
இப்படி இவர்கள்புலம்ப யேதுசொன்னாள் மருத்துவமும்
ஏதுக்கு மஞ்சாதேயுங்க ளிப்போபெறுவா ளெனவே

### குழந்தை பிறத்தல்

குலமான்போல் பொன்னுருவிக்கு குமுர்தக் குடமுடைய[319]
கோதைமார் பொன்னுங்கலத்தில் கொண்டார்வாழை யிலைபோட்டு
உடனாகவே யிருந்ததோழி யொருத்தி யேந்திடுவாள்
உலகமது மகிழ்புதல்வ னுருட்டுவதிகமாய்க் காணுதென்பாள்
சற்றுநேர நீங்கள் பொறுத்திடுங்கோ சலியாதிவனும் பிறந்திடுவாள்
சரியேநீசொன்னாய் மருத்துவமே தாங்களன்னால் முடியாதென்றாள்
நொந்தே திருவயறு நொன்பலப்பட்டு வருகுதென்பார்
சந்து விடுகுதென்பாள் சரிந்தாள் தன்னுட தோழியர்மேல்
ஆத்தா மலங்காதே அணைப்பா ரெடுப்பா ரவையமென்பார்[320]
அபயம் பகவதிக்கே சொக்க ரங்கயக்கண்ணிக் கவயமென்பார்
வெளிப்படி யிரங்க யெல்லோரு மண்மேல் விழுந்தழுதார்
மண்ணாள வேணுமென்று மகாதேவனிட்ட விதிப்படியால்
பொன்னான திருவயறு பிள்ளைபிறக்கத் தலைதெரிய
எண்ணங்கள் சாஸ்திரத்தில் இருபத்தேழு நட்சத்திரமதில்
பக்கமது சொல்லக்கேள் பஞ்சமிநல்ல சித்தயோகம்
ஒக்கவொரு முகிர்த்தங்கொண் டுத்திரநாளில் பயிற்றிடுமாம்
புதல்வன்பிறந்து நிலத்தில்விழ பொங்குகடல்போ லொலிமுழங்க
குதலைமொழியார் குரவைகொடிசே ரிடையார்மிகச் சூழ
மதலைபிறந்து நிலத்தில்விழ மயில்போல்மொழியாள் பொன்னுருவி
இதலமொழியாள் தான்மயங்கி யிருந்தாளேபஞ்சணை மீதேறி
பாலன்பிறந்து நிலத்தில்விழவே பாவைநல்லாளு மயங்கிவிழுந்தாள்

### குழந்தை பிறந்தபின் நடந்தவை

காயமிளகு புளியுடன்சுக்கு கடைச்சரக்கொன்றா யரைத்துத்திரட்டி
கூசாமல் சேலையைக் கூட்டி யிறுக்கி
கும்பிக் கடிக்கு[321] மருந்து கொடுத்தார்

மஞ்ச ளரைத்துத் திரட்ட வொருத்தி
வாயிலே சுக்கிட் டூத வொருத்தி
தட்டிக் கவுத்திப் போட்டோட வொருத்தி
கூடியவிளம் பரப்ப வொருத்தி
கொண்டுபோய்க் குண்டணி[322] சொல்லவொருத்தி
கட்டமண் தட்டி விழுந்தா ளொருத்தி
கைதட்டி நின்று சிரித்தா ளொருத்தி
கூப்பிட்டுச் சண்டை பிடித்தா ளொருத்தி
குலாவிக் குடங்கொண் டோட வொருத்தி
நாடாள வொருபாலன் பிறந்தான்
தேசமாள வொருபாலன் பிறந்தான்
செல்லப்பிள்ளை யொருபாலன் பிறந்தான்
கொப்பாடை[323] நீக்கிக் குழந்தை யெடுத்து
கொப்பி ளறுத்துக் குரவையு மிட்டார்
ப்ாலகன் றன்னையு மஞ்சள் நீராட்டி
பஞ்சணை மெத்தையில் கிடத்தி வைத்தார்

**தாராட்டும் பெயர் சூட்டலும்**

எங்கள் குடிவாழப் பிறந்தவனோ
ஈனா இளவாழை யீன்ற கன்றோ
தங்கடங்கள்[324] தீர்க்கவந்த தாவத்துணையோ நீராரோ
கட்டிக் கரும்போ கனியோகற்கண்டோ பெருந்தேனோ
துட்டர்குலம் வேரறுக்கச் சோழர் குலத்தானோ
ஆருடைய பேரிடுவோ மருமையுள்ள மகனார்க்கு
மாமனய்யன் பேரிடவோ மச்சினத்தார் பேரிடவோ
சேரன்சோழன் பேரிடவோ தெய்வபாண்டிமன்னர் பேரிடவோ
சிவனிரங்கித் தந்தமகன் சிவனணைஞ்ச பெருமாளென்றார்
பேருமிட்டுக் குரவையிட்டுப் பெண்கொடிமா ரேவல்செய்ய
வாராட்டுங்[325] குழல்மடவார் மஞ்சள்நீ ராட்டுவாராம்
பாலூட்டி யுச்சிபொத்திப் பாலகனைத் தான்வளத்தார்

**மணித்தொட்டில் சமைத்தல்**

பாலனுக்குப் பள்ளிகொள்ள பைம்பொன்மணித் தொட்டில் கட்ட
தொட்டில்கட்ட வேணுமென்று தூதுவனை வரவழைத்தார்
தூதுவனை வரவழைத்துச் சொல்லுவாராஞ் சடுதியிலே
மாந்தையரை வ்ரவழைத்து வரவேணுந் தூதுவனே

தூதுவன்றான் சென்றபோது சொல்பெரிய மாந்தையர்கள்
மாந்தையர்கள் வந்துநின்று வார்த்தையது கேட்கலுற்றார்
மாணிக்க வலைவீசும் மாணிக்கத் தாலே
வண்மையாய்த் தொட்டில் சமையுமென் றாரே
என்ற பொழுதிலே தெய்வக் கண்ணாளர்
இணையில்லா உளியுடன் வாச்சிக ளெடுத்தார்[326]
குன்றுபோல் நின்று குலாவுமத யானையுடகொம்பை
கொம்பைச் செதுக்கிக் கடைந்தொப்ப மிட்டு
மனமதிர விலைகொண்ட காவலு க(லை) வாணி
மற்றுமொரு சந்தனப் பலகையது சேர்த்தார்
சேர்த்துநவ ரெற்றின முத்து மாணிக்கம்
செம்பவளம் பெரிய கோமே தகங்கள்
சீத்துவத்[327] துடனாலு திக்கிலு நிறுத்தி
சிறப்பாகவே மணித்தொட்டில் சமைத்தார்
சமைத்தாரே தொட்டிலது தானிலங்கிடவே
சங்கையுடன்[328] பட்டினா லெங்கும் பொதிந்தார்
அமைச்சர்திரு மாளிகையில் கொண்டு செல்லவே
அகமகிழ்ந்தார் தாதிமார்கள் முகம் நோக்கி
முகிழ்த்தமது[329] கண்டவர்க்குப் படிகொடுத்து
முத்தமிளக்கிப்[330] பாலகனைக் கிடத்தி
பாலகன் றன்னை மணித்தொட்டில் மேலே
பாங்குடன் தாதிமார் மந்திரி மாரும்
சாலுகை[331] பஞ்சணை மேலே விரித்து
தன் பாலகனை யிதமாய்க் கிடத்தி
சீராகவே வந்து சேவிக்கும் பெண்கள்
சிறப்பாகவே யெடுத்துத் தாராட்டி வைத்தார்

**சீராட்டி வளர்த்தல்**

தாராட்டி ஆராட்டி சங்குமுத்தைத் தான்முத்தி
வாராட்டுந் தேன்மடவாள் வளத்தாளே பாலகனை
அருமையுள்ள மகன்றனக்கு அமுதூட்டித் தான்வளத்தாள்
ஒருகுழந்தை யானதுதான் ஒக்கரையில்[332] பாலனது
தள்ளிநடை பாலகனுந் தவழுங் குழந்தையுமாய்
தீட்டுமுடி யிறக்குவாராந் திருக்குடும்பி வைக்கிறாராம்
குத்திநன்றாய் வடித்திறக்கிக் குழல்காதில் குண்டலமாம்
அஞ்சுநல்ல திருவயதி லழகுநல்ல பாலகனுக்கு
கொஞ்சுங் குழந்தையது குடுமிதனில் பூமுடித்து

## கல்விப் பயிற்சி

திருவயசு ஆறேழு சென்றபின்பு பாலனுக்கு
குருவின் உபதேசம் வைக்கக் கூட்டிவந்தார் வாத்தியாரை
நன்னூலும் தொன்னூலும் நால்வேத சாத்திரமும்
பண்ணும் சிவஞான பஞ்சாக்ஷர மஞ்செழுத்தும்
ஆகமங்கள் ஓதிவைக்க அண்ணாவி வந்தார்காண்
ஏகாந்தக் கூட்டமதி லெழுந்தருளி விநாயகரை
அருகுகொன்றை தும்பைமல ரணியுஞ்சிவன் மகன்றனக்கு
குறும்விடலை நிறைநாழி குவித்தார்மலர் தூபதீபம்
தெச்சனைக்கு லெக்ஷம்பொன்னைத் திருமுன்பில் தான்குமித்தார்
பச்சிலையு மடைக்காயும் பழம்இளநீரும் படைத்தார்
அடவுடைய விடலைதன்னை யடித்துடைத்துத் தான்படைத்தார்
மடமடென்று சிவஞான மந்திரத்தை உச்சரித்தார்
சிவஞான முகிந்தபோதே சிவனணைஞ்ச பெருமாளுக்கு
அரிவிரி யேடதுவும் அண்ணாவி தானெடுத்து
ஓதிவைத்தார் பாலனுக்கு வுலகிலுள்ளோர் தானறிய
அரியேடு கொன்றைவேந்தன் ஆத்திச்சூடி எண்சுவடி
கற்றாரே பல்கலைநூல் கணக்குமுத லத்தனையும்
அள்ளிப்பொன் வெகுமான மாயானுக்கே[333] கொடுத்தார்
கணக்கதுவு முடிந்தபோது கனகசிவ னணைஞ்சவனார்
இணக்கமுள்ள தோழரோடே யிவர்தெருவில் உலாவுவாராம்
தோழன்மார் தங்களிலும் சூரியனைப் போலழகாம்
கோழையில்லை யிவர்தனக்குக் கொத்தவரும்[334] பயப்படுவர்

## களரிப் பயிற்சி ஆயுதப் பயிற்சிகள் பெறுதல்

இவர்வயசு ஈரேழு யிதமுடனே சென்றபோது
அவருடைய வாள்சிரம்ப மதுபடிக்க வேணுமென்றார்
தன்றரத்துத் தோழரோடே தாடாள னேது[335]சொல்வார்
எந்தயெந்தப் பணிக்கனோடே[336] யினிச்சிரம்பம்[337]
படிப்போமென்றார்
இருளனென்ற ஆயானோடே யினியடவு[338] படிக்கவேணும்
மறுக்கவொரு சிறுக்கனைத்தான் வரவழைத்தார் சடுதியிலே
சிறுக்கன்கையில் நீட்டெழுதி[339] செய்திசொல்லி யனுப்புவாராம்
சறுக்காமல் வழிநடந்து தானேபுளியரைக் கோட்டையிலே
பணிக்கரைத்தான் கூட்டிக்கொண்டு பரபரென ஓடிவாடா
மணிமுரசு வார்த்தைகேட்டு வழிநடந்தான் சடுதியிலே

ஓட்டமு நடையுமாக வொருநொடியில் செல்லுவானாம்
புளியரையி லிலங்கப்புரை புகுந்தானே சிறுக்கனுந்தான்
சென்றுதகை யாறாமல்[340] சீக்கிரம்நீட்டைக் கொடுத்தான்
கண்டுநின்று வாங்கியொரு கணக்கர்நன்றாய் வாசிப்பாராம்
பண்டுமுன்னாள் தென்காசிப் பதியாண்ட ராசமன்னன்
இன்றுஉம்மிடம் படிக்க யெழுதிவிட்டார் நீட்டதென்றார்
அன்றுஅவர் மகிழ்ந்து ஆயானு மேதுசொல்வார்
நன்றுநன்று யென்றவர்தா னாமளிப்போ போல்லாமென்றார்[341]
பதினெட்டுப் புத்திரரும் பணிக்கருமாய் வழிநடந்தார்
அதில்சிரம்ப மடவுகம்பு அவருடைய வாள்கேடயமும்
தகடப்பொந்தி[342] கட்டாரி[343] தான்பதினெட் டாயுதமும்
விகடமில்லாக் கள்ளவாளும் வெட்டுங்கத்தி கேடயமும்
கச்சைகெட்டி விதவிதமாய்க் கனகவர்ண விருது[344]பூட்டி
இச்சையுள்ள தென்காசி யிருளனாயான் சொல்லுவாராம்
கண்டுசிவ னணைஞ்சவரும் கைகுவித்துத் தான்தொழுதார்
நன்றுநன்று ராசமன்னா நானுமினி உந்தனக்கு
எந்தனுட தொழில்களெல்லா மினிஉனக்குத் தருவேனென்றார்
அன்றுதிரு மனமகிழ்ந்து ஆயானைக் கூட்டிக்கொண்டு
சென்றுமணி மேடையிலே சிறப்பாக வீற்றிருந்தார்
வீற்றிருக்கும் நாளையிலே சிவனணைஞ்ச பெருமாள்
விஸ்தாரமாய்ப் படியரிசி வெத்திலைபாக்கும் கொடுத்தார்
சாயமுச்சை[345] வேளைதன்னில் விடுதிவைத் துண்டு
சட்டமாக யிலங்கப்புரை கட்டிமுகி[346] யென்றார்
மட்டல்லாத மந்திரிமார் மக்கள்புடை சூழ
மலையடந்த கண்ணாளர் வரவழைத்தா ருடனே
தெண்டஞ்செய்து நமஸ்கரித்து ஆண்டவனே யென்று
சீக்கிரத்தில் நாங்கள்வந்த பணிவிடைக ளேது
நன்றுநன்று நீங்களெல்லா மொன்றுபோலே வந்து
நல்லமர மாகப்பச்சை மூங்கில்வெட்டி வாரும்
குன்றுமலை யானதிலே சென்றுமரம் பார்த்து
கோணலில்லா யீரமூங்கில் கொடிப்பிரம்பு மறுத்தார்
தானமுட னாளெடுக்கும் பாரந்தலைச் சுமடாய்
தடவரை[347] கடந்தவர்கள் நடைமேலே வந்தார்
தேஞ்சொரியுந் தென்காசி பூங்காவனத் தருகில்
தெற்பக்குள மட்டுக்கும் விலாசம்[348]வேண்டிக் கண்டார்
பச்சைக்கம்பு வெட்டிக்கெட்டி யிலங்கப்புரை முகித்து
பண்டகசாலை வேறேயொன்று பக்கத்திலே முகித்தார்
மட்டில்லாத வாள்சிரம்பம் கட்டுடனே படிக்க

மன்னர்தோழன் மார்கள் மக்களொன்றாக் கூடி
கைதனிலே கண்கறுத்த தேங்காயை யெடுத்து
கணபதியே துணையெனவே தரைமெழுகி உடைத்தார்
சரீரமெல்லா மெண்ணையிட்டுச் சல்லட மணிந்து[349]
சட்டமாகப் பட்டுக்கச்சை கெட்டியழ காக
கைதனிலே தகடமேந்திக் கட்டியே யெடுத்து
கால்பகுந்து[350] மெல்லவைத்துக் கரிமுகனைத் தொழுது
அண்ணாவி தெய்வனிலை புத்திர னிலயில்
அடவுவடி மானத்தொழில் பலவிதமுஞ் செய்தார்
வலதுகாலை முன்னேவைத்து வாய்த்தாரங்[351] கூறி
வட்டமிட்டுக் கையைமெல்லத் தட்டிக்கும்பிட் டாராம்
கவடு[352]வைத்து அடிமான் றடவுகளி லெழும்பி
சூழச்சூழ வாரகம்பை மாறிப்பிடித் தாரே
இடதுகாலை முன்னேவைத்து யேழடி முன்னெழும்பி
இடசாரி வலசாரி யிருந்தெழும்பு வாராம்
தடதடென வடித்தகம்பைத் தான்பிடித்துக் கொண்டு
தட்டிமறு தொழில்கள்செய்யத் தகட மெடுத்தார்
இன்னமொரு தொழில் சொல்லவே கேளு
இலங்கு சிவனணைஞ்ச பெருமாளே
எடுவு மென்றாரே தகடத் தொழில்
இளவலுடன் இருளன் ஆயான் முன்னே
பொன்னிட்ட தகடம் பூவிட்ட தகடம்
புலித்தோ லுறைகள் கெட்டிய தகடம்
மின்னிட்ட தகடம் விருதிட்ட தகடம்
வீரச மணியது கெட்டிய தகடம்
திருக்கப் பரிசையாம்[353] உடைவாளாம்
செம்பொன் னேரிட்ட கட்டியலாம்[354]
கட்டியலுங் கையும் பாராய்
கையு மவருட மெய்யும் பாராய்
வலது காலை வலத்தே வைத்து
வலதடி தகடம் வீசிடு வாராம்
இடதுகாலை யிடத்தே வைத்து
இடதடி தகடம் வீசிடு வாராம்
முன்னந்தம்[355]எழும்பிடு வாராம்
முன்னடி வீச்சிகள் வீசிடு வாராம்
முன்னந்தம் பத்தாள் புருஷம்[356]
முதல் வீச்சிகள் வீசிடு வாராம்
பின்னந்தம் எழும்பு வாராம்
பின்னடி வீச்சிகள் வீசிடு வாராம்

மண்டி போட்டு[357] யிருந்து கொண்டு
மணியில் வீச்சிகள் வீசிடு வாராம்
தகடத் தொழிலது செய்கிறார் பாராய்
தாடாளன் சிவனணைஞ்ச பெருமாள்
இருளன் என்ற ஆயா னோடே
இன்னமொரு தொழில் சொல்லக் கேளும்
சக்கப் போருகள்[358] செய்யவும் வேண்டாம்
சபர்தஞ்[359] சொல்லிப் பொருவோ மென்றார்
ஆயா னென்று பார்க்கவும் வேண்டாம்
புத்திர னென்று பார்க்கவும் வேண்டாம்
அண்ணாவி விரைந்து கூடி
அணஞ்சவ ராசன் பிறத்திலே[360] வொத்த
முன்னே வந்த வாளுட முனையை
முனையட வதிலே தட்டி விட்டாராம்
பொன்னாங் குருவிச் சிரம்ப மதிலே
போர்பொர வேந்த னெழும்பு வாராம்
கோழிப் போரு பொருதாப் போலே
கூட்டு[361] சிரம்பஞ் செய்கிறார் பாராய்
ஒரோகுத் ததுவும் மூன்று முறிவாய்
உடன் முறிந்திது பணிக்கருக்கு
கனத்த வன்னியர்[362] கண்டவர் நின்று
கையைப் பிடித்தவர் கண்ணிலே வொத்த
இணக்கத் துடனே உடைவாள் வெட்ட
இங்ஙனே வேந்தனைக் கண்டது மில்லை
போதும் போதும் சிவணைஞ்சவரே
பூரை யிட்ட[363] போரது போதும்
உடைவாள் வெட்டின் பூரே பூரே[364]
உடனே அணஞ்சவர் மனது மகிழ்ந்து
ஆர முடனே அண்ணாவிக்கு
அழகுடன் சிவனணைஞ்ச பெருமாளும்
கால்நடையாய் வந்தவருக்கு
கனத்த தண்டிகை[365] தானுங் கொடுத்தார்
பதினெட்டுப் புத்திரன் மாரும்
பாவினை யாகவே போன பொழுது
அண்ணாவி யிருளன் ஆயானும்
அழகு சிவனணைஞ்ச பெருமாளும்
தென்காசிப் படை வீடது தனிலே
தேச மரசாண்டு வீற்றிருந் தாரே

### யானையேற்றம் குதிரையேற்றம் பயிலுதல்

வீத்திருக்கு நாளையிலே சிவனணைஞ்ச பெருமாள்
விஸ்தாரமாய் யானையேற்று படிக்கவேணு மென்றார்
மேகத்தி லோடியது மீண்டுவரும் தம்புரான்
வெண்தூள் பறக்கவோடி மீண்டுவருங் குதிரை
குப்பாய மிட்ட[366] குதிரைப் படையும்
குதிரைக்கு நல்ல சேவுகன் கூட்டம்
செப்பமாய் சிவனணைஞ்சவ ராசனை
சேவித்த மன்னவர் பாவித்த நேரம்
பாவித்துப் பாளயம்[367] கூடாரஞ் செய்து
பல்லக்கு பத்தி பத்தியாய்ப் பிடித்து
ஆவித்து நன்றா யடியுமோ திறந்து
ஆயிரந் தண்டக்காரரை[368] நிறுத்தி
கோவிக்கல் வாச லணைஞ்சவ ராசனை
கொலுவி லிருந்து தெருப்பவனி காண
சேவிக்கும் பெரும்படை தன்னை யழைத்து
சீக்கிரம் இப்போது வாரு மென்றாரே

### சிவனணைஞ்சவனார் உலா வருதல்

வாருமென்ற போது காலாள்க ளாயிரம்
வாக்கான சேவுகர் நோக்குமுன் வந்தார்
ஊருத் தெருவில் பவனிகள் காண
உடனே மதகரி ஒக்கவர வென்றார்
ஆருக் கடங்காப் பெரும்படை யெல்லாம்
அணஞ்சவனார் சேர்ந்தபோதில் வரவே
சூரியப் பிரகாசமுள்ள அணஞ்சவனார்
துலங்கு பொன்னானை யலங்கரி யென்றார்
ஆரிய நாட்டானை[369] சூரிய வட்டம்
அந்தானை தன்னை யலங்கரி யென்றார்
ஆனைக்கு நல்லதோர் குப்பாய மிட்டு
அழகாய் மணியுங் கழுத்திலே பூட்டி
காலு நாலுக்குஞ் சிலம்புதண்டையு மிட்டு
கட்டுடன் கரித்தா ளானை தன்னை
வந்தமத யானைக்கு வீரமணி கெட்டி
வயிடூரியம் பச்சை கோமேதக மணிந்தார்
ஆனைமேல் கூடாரம் சட்டையு மிட்டு
ஆரியப் பட்டாலே யானை விதானித்தார்
தேயாதி சிங்க னணஞ்சவ ராசன்
சிங்காரமா யானை கொண்டு வந்தாரே

காயம்பூ மேனி யணஞ்சவ ராசன்
கண்டந்த யானையைக் கொண்டாடிக் கொண்டார்
கூசாமல் யானைமேல் கும்பிட்டங் கேற
கோவிலு மேள வாத்தியங்கள் முழங்க
மாய வடிவ னணைஞ்ச பெருமாள்
மதயானை மீதேறித் தெருவில்பவனி வந்தார்

**உலாக் கண்ட பெண்டிர் செயல்**

ஆனைக் கழுத்தி லணஞ்சவராச னழகாய்ப் பவனிவர
அந்தத் தெருவினில் கண்ட மடவா ரவரைக் கண்டாசை கொள்வார்
சந்தோச மாக அணஞ்சவ ராசனுந் தானும் பவனிவர
சதயம் பிறந்த நாளு முகூர்த்தத்தில் தானும் பவனிவர
வான லோகம் பூலோக மகிழ்ந்திட வல்லயக் காரர்[370] வர
வந்தார் தெருவி லணஞ்சவ ராசன் மடவார்க ளாசை கொள்வார்
அந்தத் தெருவினில் கண்ட மடவா ரவனுக்கே யாசைகொள்ள
ஆளிலழக னணைஞ்ச ராச னவரைக்கண் டாசை கொள்வார்
ஓடி வருவார் பேணிக் கண்ட பெண்கள் நாணிப் போகாதபடி
ஓடி வந்தொக்க வொழித்து நின்றுபார்த்து வுள்ளாசை கொண்டிடுவார்
தேடித் திரிந்தா லிவரழகைப் போலத் தேசத்தில் கிட்டாது
சிங்கார வில்லு மம்புங் கையில் கொண்டு சங்கையாய்[371] வாரானடி
சங்கைக்கு நல்ல சமர்த்த னிவன்காணுஞ் சமயிற் தாயக்காரன்[372]
தன்னாசை யென்னையுங் கொல்லுதே பாவிகா ளென்னாசை தீரானோ
நெற்றியி லிட்ட பொட்டென்னை மயக்குது நெஞ்ச முருகுதய்யோ
நேரிட்டு யென்னோடே சீரிட்டு யின்றைக்கு நித்திரை கொள்ளானோ
புத்தி மயங்குது போத மழியுது[373] பொய்யல்ல தோழிப் பெண்ணே
பொன்னணைஞ்ச பெருமா ளென்னையுஞ் சேரானோ யென்னாசை தீராதோ
என்னையிவன் வந்து யின்றைக்குச் சேராட்டால் இறந்து விடுவேனான்
எத்தனைபேர் நீங்கள் சொன்னாலுமே நான்சற்றுங் கேட்பதில்லை
மன்னன் சிவனணைஞ்ச பெருமாளும் மயக்கிறான் பெண்களையும்
மாறாடிப் பெண்கள் சீராடிக் கொண்டு மயங்கித் திரிவாரும்
சேலை யுடைகள் நெகிழ்த்திட சிங்கிகள்[374] சிங்காரம் பூட்டிடுவாள்
செஞ்சிலை தண்டை சிலம்பு புலம்ப தியங்கிவந்தா ளொருத்தி
மாலையுஞ் சந்தனம் மஞ்சணை பூசி மயக்கி வந்தா ளொருத்தி
வட்டத் தனமேல் குறுவேர்வை யாக மயக்கி வந்தா ளொருத்தி

வம்புக் காரியவள் கொண்டை குலைய வலியச் சென்றா ளொருத்தி
மருட்டி மயக்கிய மணிமாதர் கூடி வந்தெட்டிப் பார்த்து நின்றார்
கட்டச்சி[375] வட்டத் தனத்தா ளொருத்தி காணிக்கை கொண்டு வந்தாள்
கைகாட்டிப் பெண்கள் வெகு சித்திரமாகக்[376] கண்ணால் மருட்டுவார்
வாக்கு நோக்கும் வடிவையுங் கண்டு மருந்து[377] கொடு வருவார்
வாசகனே மக ராசனே யின்றைக்கு வந்தொரு முத்தந் தாரும்
பேய்போலே நின்று திகைப்பாள் நடுங்கிப் புருஷனைக் காணாமல்
பொன்னணைஞ்ச பெருமாளு மப்போது பெண்களைப் பார்த்துச் சொல்வார்
ஆசைகொண்ட பெண்கள் மோசம் போகாமலே அணஞ்சவர் கண்டு சொல்வார்
அகம்புடையா னவனில்லையோ[378] உங்களுக் கழகான கன்னிகளே
தாகமா யும்மோடே சஞ்சரித்தா லெங்கள் மோகமெல்லாந் தீரும்
சந்தோசமா யும்மை நாடித்தேடி வந்தோம் அஞ்சாவிதங்கள் செய்ய
ஆக முருகிது ஆசை பெருகுது ஆண்பிள்ளைச் சிங்கனுக்காய்
அன்பா யிருந்து சுகநலம் பாராட்டிக் கொஞ்சி மகிழானோ
தீபத் தெருவி லணஞ்சவ ராசன் கெம்பீரப் பவனிவர
கிளிகளைத் தூதுவிட்டே சிலபெண்கள் வழிகேட்டுக் காத்திருப்பார்
அழகன் பெருமா ளணைஞ்சவ ராசன் ஆனைக் கழுத்தில் வர
ஆண்பிள்ளைச் சிங்கன் பெண்கள்மணவாள னணைஞ்ச பெருமாளும்
வீணாக நாம ளவனுக் காசைகொண்டு வாணாளும் போகுதடி
வீரவான் வார பவனியைப் பார்த்து மெல்லியர் கூடிச்செல்வார்
கூடி மடவார் குரவை யொலிக்கக் கூட்டக் களரியிலே
கூட்டப் படையெல்லாஞ் சேவித்துப் பின்வர குதிரைப் படைநெருங்க
நாட்டமாய்க் குஞ்சங்கள் போட்டு வரவே நடைதிடிமன் முழங்க
நாத னருளை நினைத்து அணஞ்சவர் நன்றாய்ப் பவனி வந்தார்

**சின்னணைஞ்சி வரலாறு**

நாடான நாடதிலே நல்லதென் காசியிலே
தேசமான தேசத்திலே தென்காசிப் பதிதனிலே
மங்காத புகழ்படைத்த வளவன்சிவ னணைஞ்சவனார்
செங்கண்மத யானைகளுஞ் சேனைபெரும் படையுடனே
திங்கள்முடி யணஞ்சவனார் சிறந்திருக்கும் நாளையிலே
இருக்குமந்த நாளையிலே. . . . . . . . . . .
கருப்பு வில்லுக்[379] கிலக்கான காமனுட மோகினிபோல்

முருக்கிதழ்[380]வாய்ப் பெண்கொடியாள் வெளுத்தெடுப்பான் பெற்றமகள்
மருப்புகழுஞ் சின்னணைஞ்சி வந்தகதை கேளுமினி
கேளுமிவள் வரலாறு கெருவிதமா யுள்ளவர்கள்
வாழும்வட னாடதிலே வன்னியர்கள் சீர்மைமட்டும்
ஏழுபிடாகை[381]தனிலு மெடுத்தழுக்குத் தான்வெளுத்து
ஆணழக னறுவரை விண்ணா னரசுவிளை குடியிருப்பு
அரசுவிளை குடியிருப்பு வாத்தங்கரை வெள்ளாவி[382]த்துறை
கரைசிறந்த பதி[383]தோறுங் கையாச்சை[384] காணி[385]கொண்டு
வரைசிறந்த துவரைவண்ணான்[386] வாழ்ந்திருந்தான் மாடவண்ணான்
மாடவண்ணான் தான்பிறந்து வாலசிங்க னானபோது[387]
தாடாண்மை யுள்ள சடையன்வண்ணான் தன்மனைவி தன்வயற்றில்
தேடரிய கருவலம்[388]. . . . . . . . .
பேடையிள மயில்போலே பிறந்தாளே சின்னணைஞ்சி
பிறந்து நன்றா யவள்வளர்ந்து பேருஞ்சின் னணைஞ்சியென்ன
கறந்த பால்போல் மனமுடையாள் கன்னியர்சின்
னணைஞ்சிதன்னை
அறந்தழைக்கத் துவரவண்ணா னாசையுடனே வளத்தான்

**சின்னணைஞ்சியின் வடிவழகு**

வளந்தாளே சின்னணைஞ்சி வார்ப்புருக்கி[389] வார்த்தாப்போல
அளந்துகுறித் துருவாக்கி யச்சதிலே[390] சேர்த்தாப் போல
குழந்தைகள்போல் சொல்லழகுங் குமிழ்மூக்கு மொப்பினையும்
ஒப்பினையு முடலழகு மொருபாகந் தலைமுடியும்
மெய்ப்பனைய பூந்தனத்தாள் மேனியெல்லாந் தளதளென்ன
கற்பனையாள் சின்னணைஞ்சி கமலமுகத் தழகுகொஞ்ச
கொஞ்சுமொழி வாயழகுங் குமிழ்மூக்கு[391] மொப்பினையும்
அஞ்சனக்கண் வேல்விழியா ளாடுகொப்புங் குழல்காதும்
துஞ்சிநுத லிட்டபொட்டுந் திருநீத்துப் பூச்சழகும்
மஞ்சணைபூசுங் கழுத்தில் மாலையிட்ட பொற்பணியும்
பணிசுமந்த பூந்தனமும் பச்சுடம்பு[392] மொப்பினையும்[393]
அணிவகுத்த கொடியிடையு மாலிலை போலேவயிறும்
கிளிமொழியாள் சின்னணைஞ்சி கீழ்மாறிப் பார்த்தகண்ணும்
மணிபுகுந்த பூங்குரலும் வல்தோளி லேற்றாப்பும்[394]
ஏத்தாப்பு நடையுடையும் இருகரத்தின் வீச்சழகும்
மாத்தாப்பாய்ச் சின்னணைஞ்சி வளையலிட்ட கையழகும்
பூத்தாமரைக் கரத்தாள் பொற்கொடியாள் சின்னணைஞ்சி
சின்னணைஞ்சி வாழ்மயிலாள் தெய்வரம்பை போல்வளந்தாள்

## சின்னணைஞ்சி திருமணம்

பன்னிரண்டு திருவயதில் பாவைநல்லாள் தன்தனைத்தான்
மண்ணுலகில் வெளுத்தெடுப்பான் வண்ணார மாடனுக்கு
கன்னியர்சின் னணைஞ்சிதன்னைக் கருத்துடனே மாலையிட்டார்
மாலையிட்ட நாள்முதலாய் வாழ்ந்திருந்தா ரிருபேரும்

## சின்னணைஞ்சி பக்குவமடைதலும் சடங்கும்

சேலைசுத்தும் பெண்கொடியாள் தேன்மொழியாள் சின்னணைஞ்சி
சாலைமதிப் பூங்குழலாள் சாமத்திய மாகின்றாளே[395]
சாமத்தியச் சடங்குசெய்ய தன்னினத்தார் தான்கூடி
சேமமதாய் வடநாட்டில் தென்காசி வண்ணார்கூடி
பூவத்திய குழல்மடவார் பூவயர்சின் னணைஞ்சிதன்னை
மாமய்ய னுறமுறையார் வந்துசடங்கு முகித்தார்
சடங்கதெல்லா முடித்ததற்பின் தையல்நல்லாள் சின்னணைஞ்சி
மடந்தையரு மன்னவனு மகாசிநேக மாயிருந்தார்

## சின்னணைஞ்சியின் பேரழகு கண்ட ஆடவர்நிலை

அடந்ததென் காசியிலே யவரவர்கள் மனைதோறும்
நடந்துசென் றழுக்கெடுத்து நன்னுதலாள் வருநேரம்
வரும்வழியில் சின்னணைஞ்சி வடிவுகண்டங் காடவர்கள்
பெருவிரலை மூக்கில்வைத்துப் பேதலித்து நிற்பாரும்
ஒருவருண்டோ யிவள்தனைப்போ லொப்பமுள்ள பெண்ணெனவே
தெருவதிலே கண்டவர்கள் தியங்கிமதி மயங்கிடுவார்
கண்டாசைப் பட்டிடுவார் காமப்பேய் கொண்டிடுவார்
மன்றாடுஞ் சின்னணைஞ்சி மையலினால் சிலபேர்கள்
கொண்ட மையலாள் சிலபேர் குளிர்பிடித்துத் தான்கிடப்பார்
இன்றுநம்மோ டேயிருந்து யிணங்கிமுகம் பாராளோ
பாராளோ வாராளோ பஞ்சணையில் வந்திவள்தான்
நேராக வார்த்தைசொல்லி நிலையுடனம் மிடத்திருந்தால்
சீரான நாடுபரி திரவியமுங் கொடுத்திடலாம்

## சின்னணைஞ்சியின் நற்பண்புகள்

கொடுத்திடினு மொருவரிடம் கூசாமல் சென்றறியாள்
கடுத்தவரோ டுறவாடாள் கண்டவர்மே லாசைகொள்ளாள்
மிடுத்தனமாய்த் தன்கணவன் வெளுத்தெடுப்பான் றன்னைவிட்டு
விட்டுப் பிரிந்தறியாள் வேத்தூரில் தங்கறியாள்

கட்டுந் தறியைவிட்டுக் கடராத ஆவினம்போல்
மட்டுவிட்டுக் கடரறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்
தப்பாசைக் காரரோடு சரசமிட்டு விளையாடறியாள்
பட்டுடையு மொப்பினையும் பனித்தமலர்க் குழலழகும்
தனித்துவழி நடக்கறியாள் தங்கூரில் போகறியாள்
இனத்தில்வண்ணார் தன்னோடே யிருந்துவிளை யாடறியாள்
மனத்தில்வஞ்சக மறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்
அற்புதஞ்சேர் விழியழகி யமுர்தகுண வாயழகி
வேப்பிலைபோல் விழிமடவாள் மெல்லிநல்லாள் சின்னணைஞ்சி
ஒப்புரவா யழுக்கெடுத்து ஊருசுத்தி வருநேரம்
ஊரிலுள்ளோர் தங்கள்முன்னே வொழுங்குதப்பி நடக்கறியாள்
பேருசொல்லி விளித்தாலும் பெருவழியில் நிக்கறியாள்
மூக்கறையர்[396] போல்திரியும் முகடர்[397]கண்ணில் முழிக்கறியாள்
வாக்கறியா வார்த்தைசொல்லும் வண்டரைக்[398]கண் டுறவாடாள்
உரைசேரு மாத்ததிக முள்ளதங்கப் பொன்னதுபோல்
விரைசேருங் குழல்மடவாள் மெல்லிநல்லாள் சின்னணைஞ்சி
அரசுவிளைக் குடியிருப்பு ஆயிழைதன் மனையில்வந்தாள்

## விருத்தம்

வந்தாள் மனையில் புடவைகொண்டு வண்ணார் மாடன் மனமகிழ
. . . . . . . வனவே சுமடுதன்னை யிறக்கித் தரையில் மெல்ல வைத்து
கொந்தார் குழலாள் மனமகிழ்ந்து குறைய யமுது பசியாறி
சிந்தா மணிபோல் சின்னணைஞ்சி சிறப்பாய் வெளியில் வந்தாளே.

## மாடனும் சின்னணைஞ்சியும் துறைக்கு வருதல்

வந்தாள் வெளியிலே சந்தோசமாய்ச் சின்னணைஞ்சி
வண்ணானுந் தானு மகிழ்ந்து துறைதனில் போக
கொந்தாரும் பூங்குழல் கோதையர்தன் புடைவையும்
குல்லாவுஞ் சல்லாரிச் சேலை[399] முழப்பணிச் சேலை[400]
சேலை பருக்கன்[401] பருமுறி[402] துப்பட்டி[403] வேட்டி
சித்திரப் பொற்சருகை தலப்பா ளுருமாலும்[404]
வாலைப் பருவ மதாகிய சின்னணைஞ்சிதான்
வாக்குடன் சேலை வகைவகையாக மடித்தாள்
பருக்கன் பருமுறிச் சேலையைக் கீழே விரித்து
பச்சரிக்[405] கஞ்சிவைத்து முடிந்து கொண்டாளே
கஞ்சிக் கரிசியுங் கையிலே நீலமுங் கொண்டு
கட்டிச் சுண்ணாம்பொரு பொட்டணமாய்க் கெட்டிக்கொண்டாள்
வஞ்சிக் கொடியாளைக் கொண்டவண்ணா னவன்றானும்

வாக்குடன் சேலை வகைவகையாக மடித்தான்
எடுத்துக் குழிதாழி[406] சட்டியுங் கையிலிடுக்கி
ஏத்தாப்பாய்த் தோளிலெடுத்தொரு மாராப்புப் போட்டான்
போட்டான் விறகுபிளக்கவே கோடாலி தோளில்
போதரவா யுவர்மண்ணும் பொதியேற்றிக் கொண்டான்
கோட்டானைச்[407] சூவென்றடித்து நடத்தி வண்ணானும்
கொம்பனை யாளோடு[408] அன்பாய்த் துறைதனில் வந்தான்

### விருத்தம்

### கணவனும் மனைவியும் துறையில் செய்த பணிகள்

துறைதனில் வந்தபோது தோகை சின்னணைஞ்சி வண்ணான்
விறகது கீறிப்போட்டு வெள்ளாவிதான் வளைய வென்றே
தரைதனில் விளைந்தவுவர் சாணியு முறிக்கிச் சேலை
கறையற வெளுக்க வென்றே கன்னியா ளாற்றில் வந்தாள்

ஆத்தங் கரையும் வெள்ளாவித் துறையும்
அழகான நல்ல விளமரத் தோப்பும்
ஊத்தங் கரையு மொத்த மாலுங் கிணறும்
ஒழுங்கொழுங் காக வெள்ளாவிக் கல்லும்
கல்லுந் துறையுங் கலுங்கு முகமும்[409]
கட்டான வட்டத் தருவையும்[410] போக்கும்
அல்லும் பகலுந் தினந்தினம் வண்ணார்
அவரவர் கூடி வெளுக்குந் தலமும்
வெளுக்குந் தலத்தி லழுக்கையும் போட்டு
வெள்ளத்தையுங் குழிதாழியி லிட்டு
ஒழுக்கத் துடனந்த சின்னணைஞ்சி தான்
உத்தளமாய்ச் சேலை கொய்து மடித்து
கொய்து மடித்துப் பிடித்து நன்றாக
கொஞ்சவே தண்ணீரில் மிஞ்ச நனைத்து
நெய்த பருவட்டக் கோடிக[411] ளெல்லாம்
நீரி லடித்துச் சாணாகமு[412] மூட்டி
சாணாகமு முவர்மண்ணு முறிக்கி
சாயமுங் கொட்டி வெள்ளாவியில் வைத்தாள்
மானார் குழல் மடவாள் சின்னணைஞ்சி
வண்ணானுஞ் சந்தோசமாக மகிழ்ந்து
வெள்ளாவிப் பானைக்குத் தண்ணீரு மிட்டு
மேலே பருவட்டச் சேலை வளைந்து

கிள்ளை மொழியாளெனுஞ் சின்னணைஞ்சி
கெம்பீரமாய்த் தீயடுப்பிலே யிட்டாள்
தீயாவி கொள்ளப் புகையுச்ச மேற
தீட்டுக் கறையு மழுக்கு மிளக
மாயக் குழலி யெனுஞ் சின்னணைஞ்சி
வைத்த வெள்ளாவி நிறமொத்த போது
போதரவாய்ச் சேலையொக்க யிறக்கி
பொதிந்தெடுத் தானே வெளுத்தெடுப்பானும்
ஆதர வாகவே சின்னணைஞ்சிதான்
அப்பிலே[413] தப்பி யடித்தாளே சேலை
அடித்தார் பிடிவை[414] யிருபேரு மாக
ஆர வெனவே அசந்து புலம்பி
ஒப்பத்துடன் சேலை துப்பட்டி வேட்டி
ஒக்கவே கொக்கிறகு போலே வெளுத்து
செப்பத்துட னந்தச் சின்ன ணைஞ்சிதான்
சேலைக்கு நீலமும் கஞ்சியும் வைத்து
வைத்துப் புடவை விரித்து உலர்த்தி
வண்ணாத்தி யோடேதான் வண்ணானுஞ் சொல்வான்

### சின்னணைஞ்சியை ஊருக்குள் அனுப்புதல்

ஊரிலே சென்று சேலை கொடுத்து
ஒப்பமுடன் கொத்து வாங்கி வாவென்றான்
சீக்கிரத்தில் வாடி சின்னணைஞ்சி நீ
சேலை கொடுத்துமறு மாத்தும் வாங்கி
மாத்துடன் கொத்துக் கரிசியுங் கொண்டு
மால்மயங்கு முன்னே வாடி பெண்ணே
பூத்தான மாகவே[415] சின்ன ணைஞ்சியை
போவென்று சொல்லி வண்ணானும்வழி யனுப்பலுற்றான்

### விருத்தம்

### சகுனத்தடைகண்டு அஞ்சுதல்

அனுப்பியே வண்ணான் நிற்க வழகுசின் னணைஞ்சி தானும்
தனுப்புடன்[416] புடவை யெல்லாந் தலைதனி லெடுக்கும் போது
மனுப்புடன் கெவுளி[417] சொல்ல மங்கைய ரிடத்தே தும்ம
கனப்புடன் துள்ளிக் கோட்டான்[418] காவென விளிக்கக்
கேட்டாள்

### விருத்தம்

கேட்டவள் தடைகண் டஞ்சிக் கிளிமொழி மனது நொந்து
வாட்டமாய்ச் சின்னணைஞ்சி தானும் வலதுகால் வைக்கும் போது
ஈட்டமாய் வெருகு[419] சாட யிடமொரு காக மோட
கொட்டுமா முலையாள் தானுங் குசவனை யெதிர் கண்டாளே

### விருத்தம்

கண்டோங் கொடிய தடைநமக்குக் கால மிதுவே போறாது[420]
சென்ற யிடத்தில் பகைவருமோ சேலை பருவட்டம் பறிபோமோ
கொண்ட கணவன் றனக்கேதோ கொடியார் தமக்கு நமக்கேதோ
என்று புலம்பிச் சின்னணைஞ்சி இளமயில் போல நடந்தாளே

### தென்காசி நோக்கி வரும் சின்னணைஞ்சியின் அழகுத் தோற்றம்

நடந்தாள் மயிலது போல நன்னுதலா ளந்தச் சின்னணைஞ்சி
குடந்தாங்கு மென்தனத்தாள் கோல மெழுதின சித்திரம்போல்
அடந்தயிளந் தோப்பு மாத்தங்கரைச் சுமதாங்கி விட்டு
படந்தயிடு காடுமிட்டுப் பைங்கொடியா ளந்தச் சின்னணைஞ்சி
மடந்தைக் கிளிமொழியாள் மஞ்சண வாடையு மழகும்
அழகாலிலை வயறு மாசாரச் சொல்லுங்கை வீச்சழகும்
புகழான வாய்மலரும் பொட்டு பொங்காரமும்[421] கண்மடலும்
இனமான மயிலது போலவ ளிங்கிதமான குறுநடையும்
நடையுந் துடியிடையு நாணயச் சொல்லுட பாவனையும்
மடவாள் மதிமுகமும் வர்ண வரிக்குறிப் பொட்டழகும்
அடவான பொற்பணியு மாடுகொப்புங் குழல் காதழகும்
திடமா யெடுத்துடுத்த முந்திச் சேலைக் கசவு[422] கசகசென
கஞ்சிச்சேலை யுடுத்துக் கையில் வளைகள் கலகலவென
வஞ்சிக்கொடி யிடையாள் மையிட்ட கண்ணு மதிமுகமும்
கொஞ்சுங் குயில்மொழியாள் கோதிமுடிந்த தலையழகும்
முடியுந் துடியிடையு முந்தாங்கிச்[423] சேலையு மேத்தாப்பும்
பிடி[424]போல நடையழகி பேடைமயில் போலே சின்னணைஞ்சி
கடிதாய் வழிநடந்து தென்காசி புரமென்ற பட்டணத்தில்
மடியாமல் சின்னணைஞ்சி வாழ்மயிலாள் வரும் நேரத்திலே

### சிவனணைஞ்சவர் சின்னணைஞ்சியைக் கண்டு மையல்கொள்ளுதல்

படை வீட்டில் சேவுகரும் பக்கத்திலேநல் சிறுக்கருமாய்
துடியான மண்டலீகர்[425] தீரன் சிவனணைஞ்ச பெருமாள்

பெருமாள் குபேரனென்னும் பூலோகத் தெய்வேந்திர னெனவே
திருமா லருள்மறவான் வெகுதீரன் சிவனணைஞ்ச பெருமாள்
கருமான் முகிலதுபோல் சித்திர காமன் சிவனணைஞ்ச பெருமாள்
திருவான பூங்குழலா ளந்தச் சிவனணைஞ்சி வரும் வீதியிலே
வீதித் தெருவதிலேயவர் வேந்தன் சிவனணைஞ்ச பெருமாள்
சோதிமதி முகத்தான் கையில் சிங்கார வில்லு மெடுத்துக்கொண்டு
மோதி வளர்ந்து நிற்கு மிக்கான சோலை மரங்களிலே
கோது மலர்கிளியுங் கொண்டங் கிளாத்தியுஞ்[426] சிட்டுகளும்
கூவுங் குயில்மயிலுங் கோல நெடுந்தெரு வீதியிலே
தெருவி லிளமரத்தில் சிட்டுத்[427] தெறித்தவர் நிற்கையிலே
பருவயிள மடவாள் பக்குவ மாகிய சின்னணைஞ்சி
வரும் போதவள் வடிவைக்கண்டு மையல்கொண்டார் சின்னணைஞ்ச பெருமாள்
மையல் கொண்டேங்கி மயங்கி விட்டாரே மாரன் சிவனணைஞ்ச பெருமாளும்

**சிவனணைஞ்சவர் சின்னணைஞ்சியின் நலம் பாராட்டல்**

கையில் தெறிவில் லொருபிறஞ் சேரக்கண்டு வண்ணாத்தியைக் கொண்டாடிக் கொண்டார்
கொண்டாடிக் காமக் குளிரும் பிடித்துக் கோமான் சிவணைஞ்ச பெருமாளும்
மண்டலந் தன்னிலவள் தன்னைப் போலே
வாக்குஞ் சுவடும் வடிவில்லை யென்ன
வாக்குஞ் சுவடும் வடிவையுங் கண்டு
வண்ணாத்திக் காகவே யெண்ணப் பட்டாரே
தீரன் சிவனணைஞ்ச பெருமாளும்
சின்ன ணைஞ்சியுட வொப்பனை கண்டு
ஒப்புடன் கொப்புங்[428] குழைக்காதும் பொன்னும்
உடலழகைக் கண்டு வுள்ளாசை கொண்டார்
செப்புத் தனமுஞ் சிறந்த முகமும்
தேசத்தி லிப்படியுங் கண்டதில்லை
இல்லை நமக்கு யிவள்தனைப் போலே
இப்படிப் பெண்ணொருத்தி கிடையாது
அல்லும் பகலு மிருந்து நம்மோடே
ஆசார வார்த்தைகள்[429] பேச வாராளோ
வாராளோ சின்னணைஞ்சி யென்று சொல்லி
வாயாலே சொல்லி யணஞ்சவ ராசன்

**சின்னணைஞ்சியைத் தொடர்ந்து சென்று நிற்கக் கூறுதல்**

தாராள மாகிய சின்ன ணைஞ்சிதான்
தாழ்ந்த குலத்தில் பிறக்க விதியோ
விதித்த பிரமனுக் கேது செய்தாளோ
வெளுத்தெடுப்பான் குலத்தில் படைத்தாரே
சிரித்தமுகச் சின்னணைஞ்சியைக் கண்டு
சிவனணைஞ்ச பெருமா ளாசை கொண்டார்
சின்ன ணைஞ்சவனார் சிவ னணைஞ்சவனார்
தீரன் முத்தணஞ்ச பெருமாள் தானும்
பொன் னணைஞ்சவனார் புக ழணைஞ்சவனார்
போரில் ஒபரிய வணஞ்சவ ராசன்
பூவதில் வண்டு துடர்ந்தது[430] போலே
பொன்னணைஞ்ச பெருமாள் சின்ன ணைஞ்சியை
கோவிலு கொட்டார வாசலு[431] மிட்டு
குருவான நந்தி மரமுங் கடந்து
ஆவலுடன் பொன்னணைஞ்ச பெருமாள்
அன்பாகவே சின்னணைஞ்சியைக் கண்டு
தாகத்துயர் காம மோகத்தி னாலே
தையலே யேகாதே நில்லுநில் லென்றார்

**விருத்தம்**

**சிவனணைஞ்சவர் - சின்னணைஞ்சி தருக்கம்**

நில்லென்று சொன்ன வார்த்தை நேரிழை செவியில் கேட்டு
மெல்லவே திரும்பிப் பார்த்து விழியினா லருவி சாட
தொல்லையோ வழியில் கண்ட தொடுகுறி தடையின் கூறோ
அல்லவோ சிவனே நானொன் றறிகிலே னென்று நின்றாள்

நின்ற மடமயில் சின்னணைஞ்சி முகம் நோக்கி
நேரிட்டுப் பொன்னணைஞ்ச பெருமாளேது சொல்வார்
கெண்டைக்[432]கண் மடமானே உன்னைநான் தேடி
கீழத் தெருவெல்லாஞ் சுத்தித் திரிந்து வந்தேனே
வந்தேனடி பெண்ணே சின்னணைஞ்சி வுனைத்தேடி
வாழ்மயிலே நானும்வந்த கருமத்தைக் கேளு
நில்லென்று சொல்லி நெறுத்தாதேயுங்[433] காண்சுவாமி
நேத்து வரைக்கும் துறைதனில் நான்போக வில்லை
வல்லவனே பொன்னின் சிவனணைஞ்ச பெருமாளே

வார்த்தை சொல்லிவிட்டால் மாத்துக்கொடுத்து விடேனோ
மாத்துக் கல்லவேடி சின்னணைஞ்சி வுன்னைத்தேடி
வாழ்மயிலே நானும்வந்த கருமத்தைக் கேளு
பூத்தான மாகவே நாமிருபேரு மொன்றாக
பூவணை[434] மீதிலிருந்து நலஞ்செய்ய வாடி
வாடி யென்றென்னை மோடி[435] பறைந்நீரே[436] வய்யா
வையக மெய்க்கத்[437]துரை மாலணஞ்ச பெருமாள்
தேடிய பொன்னுந் திரவியமுந் தருவேனான்
தேனே மரகத வாழ்மயிலே சின்னணைஞ்சி
பொன்னும்பணமும் புதைய லெனக்கது வேண்டாம்
பேர்சொல்லிக் கஞ்சி குடித்துப் பொறுத்திருப்பேனான்
வன்மருட்டுங் கண்மருட்டுஞ் சித்திரம் போலே
வாக்குச் சொல்லிவிட்டால் போக்கிவிடாதே நீபெண்ணே
பெண்ணுக்குப் பெண்ணான ராசதுரை மக்களுண்டு
பொல்லாத்துவர வண்ணாத்தியை நீதொட வேண்டாம்
கண்ணுக்குக் கண்மணியாகிய சின்னணைஞ்சி கேள்
காமனுக்குக் கண்கண்ட விடமறி யாயோ
கண்டவர்க் கேறாத வண்டத்தனஞ்[438] செய்யவேண்டாம்
கண்டார்க்கு முந்திவிரிக்குங் கசுமாலி[439]யல்ல
திண்டு முண்டான விசனத்தை[440] நீபறையாதே
சித்திரவார்த்தைகள் மெத்தப் படித்தவர் போலே
மெத்தப் படித்தாலுஞ் சுத்தமில்லாச் சாதிநாங்கள்
வேந்தன் வெறுத்ததுண்டா லெனக்கார் துணையுண்டு
பத்தித்[441] துடர்ந்துவர உமக்காசார மில்லை[442]
பண்புட னாளைநானு மன்புடன் வாரேனென்றாள்

## விருத்தம்

### சின்னணைஞ்சியை எண்ணி ஏங்குதல்

நாளைநான் வாரேனென்று நன்னுதல் போன பின்பு
வேளென்னு[443] மதனவேந்தன் மெத்தவே மனது நொந்து
ஆளிலு மழகனான அணஞ்சவ ராசன் றானும்
வேளை யிதல்லவென்று விளங்கு மாளிகையில் வந்தார்

மாளிகைப்பூ மேடையிலே மணிமாட மண்டபத்தில்
நாழிகைக்கு வந்திருந்து நல்லசிவ னணைஞ்சவனார்
வாழிசைப்பூங் குழலியுட வழமை[444]யொன்று முரையாமல்
ஒன்றுமுரை யாடாமல் உள்மனதுக் குள்ளடக்கி

அன்றுவிட்ட பெருமூச்சு அலகை[445]விழி யெறிந்தாப்போல்
மூச்செறிந்து வாய்வெருவி மொய்குழல்மே லாசையுற்று
வாச்ச[446] புகழ் மலைமார்பன் வடிவன்சிவ னணைஞ்சவனார்
காய்ச்சலுடன் குளிர்பிடித்துக் கண்ணுறக்கம் வாராமல்
வாரேறும் பூந்தனத்தாள் மங்கையர்சின் னணைஞ்சிதன்பால்
ஏரேறும் மாளிகையில் இலங்கியபூ மெத்தையிலே
காரேறுங் குழல்சரிய கன்னிநலம் பாராட்டி
சீரேறுங் குழலிநம்மைச் சேராளோ சின்னணைஞ்சி
சின்னணைஞ்சி தன்னாலே சிநேகமதா யணைஞ்சவனார்
வண்ணமுகம் விழிக்காமல் மஞ்சத்தில் நீராடாமல்
அன்னந்தண்ணீர் குடியாம லமுதேத்தங் கூடாமல்
பன்னுதமிழ் கேளாமல் பாக்கிலையு மருந்தாமல்
திருந்தி மலரணையில் திருநீறும் பூசாமல்
வருந்திரெம்பப் புலம்பலுற்றார் மாலணைஞ்ச பெருமாளும்
புலம்புவாராந் தனித்திருந்து பொருள்பறிக்கக் கொடுத்தவர்போல்
நலம்புகழு மலைமார்பன் ராசன்சிவ னணைஞ்சவனார்
தலம்புகழ வொருகுடைக்குள் தரணியர சாளாமல்
குலம்பகைக்க வேணுமென்றோ கொஞ்சவண்ணான் பெண்ணாலே
பெண்ணாலே காதல்கொண்டு பேதலித்து முகம்வாடி
மண்ணாளுங் காவலவன் வடிவன்சிவ னணைஞ்சவனார்
எண்ணாத யெண்ணியெண்ணி யேந்திழையாளைத் தேடி
உண்ணாமல் தானிருந்தா ரொருபொழுது விடியுமட்டும்
விடியுமட்டுந் தானிருந்து வேந்தன்சிவ னணைஞ்சவனார்

## சின்னணைஞ்சியைத் தேடியலைதல்

பிடிபோல் நடையுடைய பெண்மயிலைத் தேடலுற்றார்
தேடரிய மலைமார்பன் சிவனணைஞ்ச பெருமாளும்
கூடவொரு குடைக்காரன் கொஞ்சும்வெண் சாமரைக்காரன்
ஆகயிவர் மூபேரு மருளணைஞ்ச பெருமாளும்
தென்காசி ஊருமிட்டுச் சின்னணைஞ்சி தனைத்தேடி
காவுமரச் சோலைவிட்டுக் கரிமுகனார் கோவில்விட்டு
சேவுமரக் காவைவைத்த சிறந்தபள்ளி வாசல்விட்டு
வீதிநெடுந் தெருவுமிட்டு வெள்ளியணையுங் கடந்து
செய்திசொல்லத் தோழன்மாருஞ் சிவனணைஞ்ச பெருமாளும்
மாதுநல்லாள் சின்னணைஞ்சி வாரபெரு வழிதனிலே
பெருவழிக்கு நேர்வடக்கே பேராழிக் குளங்கரையில்
குருவின்மொழி மறவாத கோமான்சிவ னணைஞ்சவனார்
திருவிளமே செயலெனவே சிவனணைஞ்சி தனைத்தேடி

இருவிழியால் தேடுவாரா மெங்கேவருவா ளெனவே
இங்கே வருவாளெனவே யிலங்குசிவ னணைஞ்சவனார்
மங்கையர் சின்னணைஞ்சி வரும் வாய்ந்த
பேராழிக் குளங்கரையில் வந்தார்.
இப்படி வழிதனிலே யெங்கே வருவா ளெனவே
என்றணஞ்சவ னிருக்கும் நேரம்

**சின்னணைஞ்சி வருதல்**

ஒப்புடைய மாதுமின்னாள் கற்புடைய சின்னணைஞ்சி
ஊழிவிதி வாரதறி யாமல்
மெய்ப்புடன் புடவையது துப்பட்டி வேட்டி யுருமால்
மேன்மை பெறவே வெளுத்துக் கெட்டி
கெட்டிப் பருவட்டமொடு கட்டித் தலைமே லெடுத்து
கெம்பீரமாய்ச் சின்னணைஞ்சி தானும்
சீட்டி முறிச்சிகூட்டி வீரவர்ணப் பட்டுடனே
சேலையு முடிந்து தோளில் போட்டாள்
மட்டிருக்கும் வேல்விழியாள் மங்கைநல்லாள் பெண்கொடியாள்
வாடை யுடையு[447] நடையுமாக
நடையுந் துடியிடையும் நாணயக்கை வீச்சழகும்
நன்னுதலாள் தெய்வ ரம்பை போலவே
குடைபோல மலையெடுத்த கோபாலர் ஸ்ரீண்டோதரனை
கொல்லவந்த கோலமது போலவே
கோலநெடு மால்துயிலு மாலமரச் சோலைவிட்டு
கொம்பனையாள் சின்னணைஞ்சி தானுமே
ஏலநெடும்[448] பூங்குழலாள் சாலைவழியுங் கடந்து
எல்ல வாரத்துக் கடையு மிட்டாள்
ஒப்புடனே மாதர்சுனை யாடுந்துறையுங் கடந்து
ஓசைமணி நாயன்கோவில் விட்டார்
மாலைவட மார்பசைய மங்கையிளம் பெண்கொடியாள்
வழிநடந்து வாய்த்தபேராழிக் குளங்கரையில் வந்தாள்

**விருத்தம்**

வந்தாள் குளத்தங் கரைதனிலே
        வானில் கதிரோ னுதித்தாப்போல்
செந்தா மரைப்போல் சிற்றிலங்குந்
        தேனார் மொழியாள் சின்னணைஞ்சி
கொந்தார் குழல்சே ராசகுலங்
        கோமா னணைஞ்ச பெருமாளும்

ஈத்துப்புரை சித்திரகூட மின்பமுடன் கட்டவேணும்
உரைகேட்டு மாந்தையர்க ளுத்தமனை தன்னில்சென்று
ஆயுதங்கள் வகைவகையா யாசாரி மாரெடுத்து[279]
வழிநடந்து மாந்தையர்கள் மாமலைமேல் சென்றேறி
வானமதை நோக்கியல்லோ வளர்ந்தமரம் தன்னைக் கண்டார்
இந்தமரம் நல்லமரம் ஈத்துப்புரைக் கேத்தமரம்
ஒருமரங்கொண் டுள்ளபணி வொக்கவேதான் முடித்திடலாம்
மரங்கள்வெட்ட வேணுமென்று மாந்தையர்கள் மனமகிழ்ந்தார்
மரத்தடியில் சென்றுநின்று வாய்த்தமரந் தன்னைச்சாய்த்தார்
மரங்கள்தன்னைப் பணிப்படுத்தி[280] வண்டியின்மேல் தானேத்தி
தென்காசிப் படைவீட்டில் சேர்ந்தல்லோ மரங்கள்வந்து
வாள்மேலே வாள்நிறுத்தி வாள்மானந் தான்பார்த்தார்
சரிந்தம்மை பின்னாகச் சதுரவளை தானறுத்தார்
பிடித்திருந்து பின்னாகப் பிடிபலகை தானறுத்தார்
தோழிமார்க்குச் சாய்ந்திருக்கத் தூணும்கடைந்தே நாட்டி
நாட்காலுந்[281] தானாட்டி நல்லவளை[282] மேலேத்தி
மந்திரிமார் வந்திருக்க மணிமாட கூடம்வைத்தார்
ஈத்துப்புரை முடிந்தபோது ஏத்தகண்ணாளர் தமக்கு
சம்பளமும் வெகுமானம்[283] தான்கொடுத் தனுப்புவாராம்
மாந்தயர்கள் போனபோது வாணுதலாள் பொன்னுருவி
பாப்பார்கள்[284] வேதியர்க்குப் பால்பசுவைத் தானமிட்டாள்
கோப்பான வேதியர்க்குக் கொண்டிற்கூலி[285] கொடுத்தார்
வலதுகால் முன்னேவைத்து மாதுநல்லாள் குடிபுகுந்தாள்

### பிரசவம் பார்க்க மருத்துவச்சியை அழைத்துவரல்

குடிபுகுந்த நாழிகையில்[286] கூண்டநோவு துடங்கிடுமாம்
வாராயென் மன்னவனே வயிறுரெம்ப நோகிதுகாண்
எந்தயெந்த மருத்துவத்தை யிமைக்குமுன்னே கூட்டிவர
எட்டுச்செட்டி யென்றொருத்தி யிருப்பாள்ராச மருத்துவத்தை
கர்ப்பூர வடிவாளைக் கைமேலே கூட்டிவாரும்
வார்த்தைகேட்டு ராசமன்னன் வரவழைத்தார் சிறுக்கனையும்[287]
சிறுக்கனைத்தான் வரவழைத்துச் செய்திசொல்லி யனுப்புவாராம்
நெற்றியிலே நீறணிந்து நிறையசோறு பசியாறி
கச்சைகெட்டி[288] நாமமிட்டுக் கையருவாள் தோளில்வைத்து
இஞ்சிவிளை தான்கடந்து யெலுமிச்சித் தோட்டமிட்டான்
மஞ்சள்விளை தான்கடந்து மருதுணித் தோட்டமிட்டான்
ஆயத்துறை தான்கடந்து யமுர்தசம்பா நிலமுமிட்டான்

அழுக்கெடுத்து வெளுப்பதுதா னயனெழுத்துக்[454] கல்பனையே[455]
இழுக்கில்லைகா ணெங்களுக்கு யெவ்வூரு மறியாரோ
ஊருசுத்தி மாத்தெடுத்து வீடுகள்தோறுந் திரிந்து
ஆருமத்தார் போல்திரிந்து அலையவுமென் விதிதானோ
அலையாமல் கொலுவதிலே அரசமன்னா நீரிருப்பீர்
துலையாத கல்போட்டுத் துகிலடிக்கும் சாதியல்லோ
கல்லதிலே மல்பொரவுங்[456] காரணமென் சின்னணைஞ்சி
அல்லனைய குழலாளே ஆடரங்கில் வாடிபெண்ணே
ஆடரங்கில் வாரதுக்கு அம்மான்மார்[457] மக்களுண்டு
ஆகெடியம்[458] பறையாம லூரகத்தே போங்களென்றாள்
ஊரிடத்தில் சென்று ஆரிடத்தி லிருந்தாலும்
உன்னுட ஆசை யொருநாள்மறக் கொட்டுதில்லை
ஆசை யுடனே யடியாளைவைத் தாதரித்தால்
அப்பிலே தப்பி யடித்துப்புடவை தருவேன்
தப்பிப் புடவை சலுவை[459]செய்து தரவேண்டாம்
தையலே யென்னுட மையலைத்தீர் சின்னணைஞ்சி
மையு மிருளு மழைக்காலென்றுறக் கேட்டிருப்போம்
மத்ததொன்றுக்கும்நா னுத்திரஞ்[460] சொல்லவு மாட்டேன்
உத்திர வார்த்தை யொருக்காலே பேசுறாய் பெண்ணே
கூடம் ஒன்றுபோடச் சுத்தியல்[461]ரண்டு போட்டாப்போல்
சுத்தி கழத்திக ளேத்திகள் வேறுண்டும் போம்போம்
சுட்ட மண்ணும் பச்சைமண்ணுந் துணையி தாமோ
மண்ணைப் பிடித்தொரு பெண்ணுருவ் வாக்குவர் முன்னே
வம்புக்கோ துன்பம் வகுத்த பிரமன் படைத்தார்
என்னைப் படைத்தவ ருன்னையும் பெண்ணையுங்கண்டு
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவியிடச் சொல்லவில்லை
இல்லை யென்றாலிந்தத் தொல்லைகளார்க்கு வருமா
ஏழைமதி[462] பறையாதே யேந்திழையே போடியென்றார்

### சிவனணைஞ்சவர் வன்மங் கூறுதல்

உரைத்தா ளொருமொழி சிரித்தவர் மகிழ்ந்து
உறுதியுடன் சிவனணைஞ்ச பெருமாளும்
தர்க்கிச்சி[463] வார்த்தை பறைந்தாய் நீயென்னோடே
தார்குழ லாளே சின்னணைஞ்சி யேநீ
உக்கிர மான செய்தியும் வார்த்தையும்
உன்னுடைய துடிதுடிப் பானதுவும்
சக்கரம் விட்டு நூல்பெருங் காணவே
சந்தியி லிட்ட பம்பரம்போ லாக்காட்டால்
ஆட்டங் கண்டுந்தன் மெட்டித் தனத்தை[464]நான்

அட்டி[465] சொன்னதுக் காகவே நானுன்னை
கோட்டி செய்துந்தன் பொட்டுக் குலைத்துநான்
கூத்துப் பார்த்துக் குரங்காட்டங் கொள்ளாட்டால்
வாழுங் காஞ்சிபுரம் நகராள்கின்ற
மண்டலக் கரைமகன் நானல்ல
கோழிக் குஞ்சியை வாழ்கெருடன் சென்று
கொண்டு போனதுபோல் கொடு போகாட்டால்
பூமிகூ முலகமேழு மெய்க்கவே
பொன்னுஞ் சிவனணைஞ்ச பெருமாள் நானல்ல வென்றார்

**சிவனணைஞ்சவர் கொலுவிருக்கும் திருக்காட்சி**

என்றவர் வாதுகூறி யேந்திழை யாளைவிட்டு
சென்றவர் தோழரோடே சீக்கிரம் காஞ்சிநாட்டில்
மண்டபந் தனிலேசென்று மாளிகை புகுந்தபோது
கண்டுமற் றுள்ளோரெல்லாங் கருத்துடன் போற்றிநின்றார்
போற்றிவாழ்த்திக் கைதொழுதார் பொன்னணைஞ்ச பெருமாளை
போதப்பல் வாத்தியங்கள் மேளங்கள் முழங்கிடுவார்
எதிர்த்துநின்று மந்திரிமா ராண்டருக்குஞ் சேவிக்கவே
இங்கிதத் தமிழ்ப்புலவர் சங்கீதங்கள் பாடிடவே
படிப்பாராம் ராமர்கவி பைந்தமிழ்க் கவிவாணர்கள்
பக்கத்திலே வெஞ்சாமரைக் காரரொரு தகுதி
அடிப்பாரா மவரதுக்கா ரங்குமிங்கு நின்றுகொண்டு
அய்யா பராக்கென்று மெய்யாய்க் கட்டியங் கூறிடுவார்
கட்டியங்கள் கூறிடுவார் கைவிளக்கு தானெடுப்பார்
கன்னியர்க ளாலத்திக[466] ளேந்திவலம் வருவார்
தட்டு மத்தாளத் தொனிகள் நட்டுவர் வட்டமிடுவார்
தத்தி தத்தியென்று சில தாசிப்பெண்க ளாடிவர
ஆடுவாராம் பொன்னணைஞ்ச பெருமாள் திருமுன்பிலே
அரிசிப்படிச் சனங்க ளங்கங்கே சேர்ந்து நிற்க
சூடுவாராம் பொற்பணியும் செல்வலரி மாலைகளும்
சித்திரச் சிவனணைஞ்ச பெருமாள் திருமுன்பிலே
மேனிகாத்துப் பக்கத்திலே வெஞ்சாமரை வீசிவர
வெட்டு முடைவாள் பரிசைக்கார ரொருபத்தி
கானில் வடுகர் தொட்டியர்[467] கர்நடர் தெலுங்கர்களும்
கட்டுடனே வெட்டும்பரி ராவுத்தன் மாருஞ்சேர
சேரும் பரிசைக்காரர்[468] தெக்கித்துப்[469] பணிக்கன் மாரும்
சிங்களர் வங்களர் சில சேவுக்களும்[470] சூழ்ந்துவர
பெருமைச் சிவனணைஞ்ச பெருமாள் திருமுன்பிலே

பிள்ளைபோலே வளத்த மறத்தலைவ னருகிருக்க
மறவன் வல்லாளதேவன் மாடப்பன் தூதோடும்வீரன்
வன்னியடி மறவனோடே மறத்தலைவன் முன்னே
இறைவ ரடிபணிய யிலங்கு மணைஞ்சவனார்
இப்படிக் கொலுவதாக யிருந்தார் சிங்காதனத்தில்
சிங்காசன மானதிலே சிவனணைஞ்ச பெருமாளும்
சிறப்பாய்க் கொலுவதாக தெய்வேந்திரன் போல்பவுசாய்
மெய்யான தவத்தோர்போற்றும் விமலனையுந் தொழுதுகொண்டு
வீரன்சிவ னணைஞ்சபெருமாள் விரசாய்க்[471] கொலுவிருந்தார்

**மனத்துயருக்கான காரணத்தை மறத்தலைவன் வினவுதல்**

தொழுது வணங்கிப் பணிவிடை கேட்டவர் தோத்திரஞ் செய்துகொண்டு
தொழாதவீரர் துரைமக்களெல்லாந் தொழுதுகொண்டு போனார்
போன பொழுது அணஞ்சவராசனும் பொன்னணைஞ்சியாலே
புத்தி கலங்கிக் கிலேச முத்தேமனம் புண்ணாக யெண்ணியெண்ணி
விஸ்தார மான மலரணை மீதில் விழியுந் துயிலாமல்
வீரன் சிவனணைஞ்ச பெருமாள் விசாரமுற் றங்கிருந்தார்
இப்படி விசாரமுற்று யென்செய்வோ மென்றுசொல்லி
என்றணைஞ்சவ ரிருக்கும் நேரம்
சொல்படி பணிவிடைகள் செய்துகொண் டருகில் நிற்கும்
தூதோடு மறத்தலைவன் சொல்வான்
கட்டுடனே உம்முடைய கமலமுகஞ் சடைத்து
கவ்வை யுற்று நீரிருப்ப தென்ன
அட்டதிசை யெட்டுமொரு மட்டுப்படுத்தி உலகை
ஆண்டிருக்கு மெங்கள் தம்பிரானே
தம்பிரானே யெங்களுட பொன்னுமுடிக் காவலரே
தானுமக்கு வந்தகுறை யென்ன காவலரே
எம்பிரானையுந் தொழுது தம்பிரானே வீதியிலே
எழுந்தரு ளாதே யிருப்ப தென்ன
என்னகுறை தானுமக்கு வர்ணமுகம் வாடினது
என்னோ டுரையுந் தம்பிரானே
பொன்னறை கருவலங்கள் பொக்கிஷ மழிந்ததுண்டோ
போர்க்களத்தில் வீரர் மடிந்தாரோ
வீறுடனே நம்முடைய கோட்டையடந் தேறிசிலர்
வெட்டிச்சிறை கொண்டுபோன துண்டோ
பாயும்பரி வாரணங்கள் வீறுட னொழிந்ததுண்டோ
பன்னக சாலை[472] யழிந்த துண்டோ
மாத்தான் படையெடுத்து தோரணமுங் கெட்டிக்கொண்டு

ஏத்த துரைமக்க ளெவராகிலு மும்மோடே
வந்தகப்பங் கேட்டதா ரும்மோடே
இட்ட சட்ட மீறிநடந் தாரோ
அந்தணரை வந்தி[473]செய்து தானங்கள் தனைத்தவிர்த்து
ஆகம சாலை யழிந்த துண்டோ
எந்தவகை போவறியோந் தேவரீர் திருமனசு
இப்படிச் சடைத்திருப்ப தென்ன
சித்தமுடனே தொழுது மந்திரி உரைத்தபோது
சிவனணைஞ்ச பெருமா ளேது சொல்வார்

**மனத்துயர்க் காரணத்தை மறத்தலைவனுக்கு உரைத்தல்**

புத்தியுட னென்னுடைய மந்திரி மறத்தலைவா
புதுமையுட னொருவார்த்தை புகலுகிறேன் கேளுமென்றார்
கேளுமென்று மறத்தலை வனைத்தான்
கிட்ட வாவென் றருகழைத்து
வாழும் மறத்தலைவனுடன் வடிவன்சிவ னணைஞ்சவனார்
சுத்து கையில்[474] நின்றபேரைத் தூரநிற்கச் சொல்லிவிட்டு
ஆரொருவ ரறியாம லந்தரங்கம் பறைவதுக்கு
சிவனணைஞ்ச பெருமாளுந் தீரன்மறத் தலைவனுமாய்
மவுன ரகசியமாய் மண்டபத்தில் வந்திருந்து
தந்திரமாய் மறத்தலைவா தயவாய்நா னுன்னோடே
எந்தன்மனத் தங்கடத்தை நானுரைக்க நீகேளு
வாழுவட நாடுதனில் வண்ணான்மக ளென்றொருபெண்
வேழனைய பூந்தனத்தாள் வெளுத்தெடுப்பான் பெற்றமகள்
ஆளிலழ கானமின்னா ளன்னமென்னுஞ் சின்னணைஞ்சி
சூழுலகில் கண்டதில்லை துவரவண்ணான் தன்மகள்போல்
உண்டான செய்தியிது உன்னாணை யெனவுரைத்தார்

**தான்கொண்ட ஆசையை நியாயப்படுத்துதல்**

சொன்னமொழி யானதெல்லாந் துன்பமுறத் தான்கேட்டு
மன்னவனை முகம்நோக்கி மறத்தலைவ னேது சொல்வான்
என்னமொழி சொன்னீர்காண் இலங்குசிவ னணைஞ்சவரே
முன்னிருந்த மன்னவர்கள் மூதாக்க ளானவர்கள்
மன்னவனே யிப்படித்தான் வரம்புதப்பி நடந்தாரோ
வரம்புதப்பி நடக்கலையோ மலையிலொரு குறத்திதன்னை
உரம்பெரிய வடிவேல ருகந்தெடுத்துப் போகலையோ
கரந்தனிலே மழுவேந்துங் கடவுள்பர மேஸ்பரனார்
பரம்பதில்[475]மீன் போட்டுவிக்கும் பரத்தியைக்[476]கொண் டிருக்கலையோ

இல்லையோடா மறத்தலைவா யெத்தனைபே ரிப்படித்தான்
நல்லபுகழ் பாண்டிமன்னர் நாடறிய முன்னாளில்
பல்லியங்கள்[477] படித்துவரும் பாடுகிற பரசியிடம்
இல்லதில்சென் றவதரித்து இருப்புத்தங்கம் சேர்க்கலையோ
இருப்புத்தங்கம் சேர்க்கலையோ யென்னுடைய மறத்தலைவா
கருப்பூத்த சின்னணைஞ்சி காரிகையைப் பழித்தாயே
மருப்பூத்த பூந்தொழில் மாணிக்க முத்திருந்தால்
பொருளாயதை வையாமல் போடுவரோ பெரியோர்கள்
பெரியமுடிக் காவலவர் பூசணங்க ளானவர்கள்
விரிகடலில் சிப்பியிலே விளைந்தமுத்தைத் தானெடுத்து
வரிசையுடன் பணிசமைத்து மகுடமுடி சேர்க்கலையோ
செந்தாமரை முகத்தாளைச் சின்னணைஞ்சி தன்னையுநான்
பார்த்தகண்ணு மாறுதில்லை பரதவிப்புந் தீருதில்லை
சீத்தமுட னீயவளைச் சென்றழைத்து வாராட்டால்
மாய்த்திடுவே னென்னுயிரை மறத்தலைவா தேடாதே

**மறத்தலைவன் கூற்றும் சிவனணைஞ்சவரின் திடமொழிகளும்**

தேடரிய மலைமார்பா சிவனணைஞ்ச பெருமானே
பாடதிகம் பறைந்தீரே பரதவிக்க வேண்டாமே
என்றுசொல்லிப் பூங்குழலா ளிலங்குசின் னணஞ்சிதான்
அந்தரமாய் நான்போய்க்கூட்டி யரைநொடியில் வாரேனென்றான்
கூட்டிவருவே னெனவே குளிர்ந்தமொழி பறைந்தபோது
வாட்டமறத் தலைவனைத்தான் மகிழ்ந்துமுத்திப் புகழ்ந்துகொண்டு
நாட்டமுட னுந்தனக்கு நல்வரிசை தருவே னென்றார்
வரிசையுடன் குதிரைகுடை மாணிக்கமுந் தருவேன்
வடகரையில் நாற்பதுமா[478] நிலமும்விட்டுத் தருவேன்
உரிமையுடன் சின்னணைஞ்சி தன்னைக்கூட்டி வந்தால்
ஒன்பது பிடாகை குறிச்சூரும்[479] விட்டுத் தருவேன்
தருவேனடா பொற்சரிகை வளையலுங்கை முடுகும்[480]
தண்டிகையு மிட்டுக் கோட்டைத் தலமுமிட்டுத் தருவேன்
விரைவினுடன் கூட்டியெந்தன் முன்னேகொண்டு விட்டால்
விழிக்குள்வைத்துச் சாத்திடுவேன் வெளியில்விட மாட்டேன்
மாட்டோமென்று சின்னணைஞ்சி வலுமை[481]பறைந்தாலும்
மடிபிடித்தாலுங் கொடு வாடா மறத்தலைவா
கூட்டமிட்டு வந்தவர்க ளநியாய மென்றுரைத்தால்
கோசிமைக்கு[482] நானல்லாதே கேட்பவர் வேறுண்டோ
உண்டான செய்தியெல்லா முரைத்தேன் மறத்தலைவா
உலகிடத்தில் வேறெயொரு பூதரறி யாமல்
வண்டாடுங் குழலாளைக் கொண்டுவரு மட்டும்
மாதுளம்பூ மேடையிலே வழிபார்த்தங் கிருப்பேன்

**மறத்தலைவன் பெற்ற சிறப்பும் சென்ற தூதும்**

இருப்பேனென்று வார்த்தைசொல்லிச் சிவனணைஞ்ச பெருமாள்
இதமுடனே தூதோடும் மறத்தலைவன் றனக்கு
விருப்பத்துடன் திருக்கையினால் சிறப்பதுவுங் கொடுத்து
வீரவாளி[483] பட்டுமொரு பட்டரஞாண் கொடுத்தார்
கொடுத்த வுடைவாள் சிறப்பா யடுத்துநின்று வாங்கி
கும்பிட்டு நமஸ்கரித்துக் கொண்டுமறத் தலைவன்
எடுத்தகருமந் தவறாமல் காணவேணு மென்ன
ஈஸ்பரனையும் தொழுதுபூசி நீறுஞ் சாத்தி
சாத்துமலர் முடிபுனையு மணஞ்சவனார்க் காக
சாதிசிறு குலமடந்தை யானாள்தன் மீதில்
ஏத்தபிள்ளை சுந்தரர்க்காய் பரவையிடந் தன்னில்
ஈஸ்பரனார் முன்றூது நடந்தவகை போலே
புன்சொல்லா லணஞ்சவனார் சோதிமைய லாலே
பூத்தமலர்க் குழலழகி சின்னணைஞ்சி தன்பால்
போகவென்று தூதுவனு மணஞ்சவனார்க் காக
புகழ்ந்துகொண்டு மறத்தலைவன் மகிழ்ந்துதூது போனான்
தூது போக மறத்தலை வீரனும்
தேசமெங்கு மணஞ்சவர்க் காகவே
வாது சொன்ன சின்னணைஞ்சி தன்முன்பிலே
வாய்த்த தூது மறத்தலைவன் போக
போறே னென்று சடுதியில் நன்றாக
பொங்கார மாக மறத்தலை வீரனும்
மோகமாய்ப் பொற்கச்சை வேட்டி யுடுத்தவன்
முண்டிறுக்கியே[484] சட்டையு மிட்டனர்
கட்டினான் கருங்கச்சை யிடையிலே
கடின முள்ள மறத்தலை வீரனும்
கெட்டினான் பட்டு துப்பட்டிக்குமே
கெம்பீரமாய் வலித்திறுக்கிக் கொண்டான்
உடுத்துக் கெட்டி யுருவின் தொங்கலும்[485]
உல்லாச மான குல்லாவுஞ் சல்லாவும்
எடுத்துப் பூட்டின வெள்ளி யரஞாணும்
ஏத்த மார்பி லாணிமுத்துத் தாழ்வடமும்
வடிவ தாகவே தக்க வல்லயம்
வாய்த்த தாயிற்று[486] வெள்ளிக் கடயமும்
கடயந்[487] தாயித்து கைக்கயிறுங் கட்டி
காதில் ரெம்பக் கடுக்க னிலங்கவே[488]
நடையின் பாவனை சிங்கார மாகவே

நல்ல வீரன் மறத்தலைவன் றானும்
சாச்சிக் கெட்டின கொண்டைக்குத் தொங்கலும்
சங்கயான சமுதாடு[489] கொஞ்சவே
பூசுஞ் சந்தனப் பொட்டுங் குறியிட்டு
போட்டான் தோளிலே யேத்தாப்பு தூவட்டம்[490]
தூவட்ட மிட்ட யேத்தங்[491] கொஞ்சவே
துப்பட்டியின் மடிக்குள்ளே வட்டுவம்[492]
பூவிட்ட விரலாழிகளு மிட்டு
பெருக்க காதில் முருகு மிலங்கவே
இலங்கவே கழுத்திலிட்ட அட்டியல்
எறியும் பாரவளையும்[493] வளதடி[494]
துலங்கக் கட்டாரி[495] சொட்டை உடைவாளும்[496]
துய்ய வெள்ளி கெட்டின குறடுமாய்[497]
குறடுங் கையில் வளதடி சேரவே
கொம்பு போலே முறுக்கின வீசையும்
திருடுங் கள்ளன் மறத்தலை வீரனும்
சேர்த்துக் கொண்டான் சமுதா டிடையிலே
இடையில் சமுதாடு மிலங்கவே
ஏத்த கள்ள மறத்தலை வீரனும்
உடையும் பாவினை சிங்கார மாகவே
ஒத்த பட்டுருமாலுங் கெட்டிக் கொண்டான்
தலைவனுந்தன் சிறுக்கனு மாகவே
தந்திரமாய் வழிநடந் தேகினான்
களப[498] கஸ்தூரி வாடைமணம் வீச
கையில் சிங்கார வில்லு மிலங்கவே
வில்லுந் தொழிலே யம்புறாணிக் கூடுமாய்[499]
வெண்டாய மிட்ட[500] பாசக் கயிறுமாய்
செல்லு நேரம் பெருவழி தன்னிலே
சின்னணைஞ்சி யெதிர்வந்து தோன்றினாள்

**மறத்தலைவன் - சின்னணைஞ்சி தருக்கம்**

தோன்றுமா வடமயிலைக் கண்ட பொழுதேதான்
தூதோடு மறத்தலைவ னேதுசொல்லு வானாம்
வேண்டுங் கரும மாச்சு தாண்டவனா ரருளால்
விருப்பத்துடன் நாமள்வந்த வேட்டை வாச்சுதென்றார்
சொல்லுவானா மறத்தலைவன் சின்னணைஞ்சி யோடே
சொகுசு பெற வந்தரங்க மாகவொரு வார்த்தை

அல்லனைய குழலழகி நில்லுநீ போகாதே
ஆண்டவனாரு பொன்னணைஞ்ச பெருமாள் திருவாணை
திருப்பயிலு மலைமார்பா சிறந்தமறத் தலைவா
தேவாதி தேவர் திருவாணை விடுவானேன்
கருப்பயிலு மொழியாளே சின்னணைஞ்சி நீகேளு
காதல் கொண்டா ரெங்கள் பொன்னணைஞ்ச பெருமாளும்
பெருமையுட னீயுமவ ரிடமதிலே வந்தால்
பூவாலே நாருங்கெதி பெற்றவகை போலே
உருமையுட னுந்தனக்குப் பொன்னுடமை பலதும்
ஒருக்காலே பணமுநல்ல திரவியமுந் தருவார்
தருவார்நல் லணைஞ்சவனா ரிடமதிலே வந்தால்
தரணியெல்லா முன்னுடைய சட்டப்படி நடக்கும்
திருவான பூங்குழலே சின்னணைஞ்சி கேளு
தேவையுடன் கேளுமுனக் கிச்சையுள்ள தெல்லாம்
கேளுமென்று மறத்தலைவ னுரைத்தமொழி கேட்டு
கெணிதமுடன் சின்னணைஞ்சி யேதுமொழி சொல்வாள்
மாளுவே னுன்னாலே மறத்தலைவா நீயும்
வம்பதிலே பண்புகெட்ட வார்த்தை பறையாதே
வார்த்தைபறை யாதேயென்ற சின்னணைஞ்சி கேளு
மகாமேர்வைச்[501] சேர்ந்திருந்தால் காகம் பொன்னிறமே
ஏத்த மொழிபறைந்து யெந்தன்மனதை யுருக்காதே
இந்தக் கொட்டுக்கும் பாட்டுக்கு மென்மேல்பேய் வராது
வாரேறு பூந்தனத்தி னாளே சொல்லக் கேளு
மன்னவனா ருனைவிரும்பி யென்னதவஞ் செய்தார்
சீராறு மலைமார்பா சிறந்தமறத் தலைவா
செட்டுப்[502] பலியாது யென்னை விட்டுவிடு நீதான்
பலியாதோ யெலிபாய்ந்தால் பூனையது விடுமோ
பராக்கிரம மாகவொரு வாக்கிரமஞ்[503] சொல்லாதே
சலியாதோ யென்னுடைய மனசு கலக்காதே
தலைவா யென்னைத் தலைகுலைந்த நூலாக்க வேண்டாம்
வேண்டா வரிசையெல்லாம் வேண்டித் தருவேனே
வேந்தனைச் சார்ந்திருந்த துண்டா(ல்) வேறுபயமுண்டோ
தீண்டாத சாதியல்லோ ஆண்டவரே நானும்
சிங்கத்தோடே வங்கு[504]நரி சேர்ந்து வாழ்ந்திடுமோ
வங்கத்துக்[505] காகாத பொன்னைத் தங்கமிட லாமோ
வண்ணான்கலம் துறைக்குப் போனால் மாணிக்கக் கல்லாமோ
பங்கத்துக்கே யெனைவருத்தி பரிசி[506] கெடுப்பதுக்கோ
பாசையிட்டா ரென்னோடேமுன் சின்னணைஞ்ச பெருமாள்
பாசையிட்ட தெல்லாமுன்மே லாசை யிருந்ததினால்

பக்ஷமுடன்[507] கூட்டிவர நிச்செயமாய்ச் சொன்னார்
கூட்டிவரச் சொன்னா லுந்தன் வீட்டில் மடவாரை
கொண்டுபோய்க் கண்டவிலை கூறிவில்லும்[508] போம்போம்
வீட்டில்போற தெல்லாமுன்னைக் கூட்டிக்கொண் டல்லாதே
விட்டுப் போட்டுப் போறதில்லை சின்னணைஞ்சி உன்னை
விட்டுவிடப் போறதில்லை யென்ற தம்புரானே
மிஞ்சப்பறையா தேயும்போம் கொஞ்சத்தன மாக
கொஞ்சத்தனமோ பறைந்தாய் வஞ்சகக்காரி நீதான்
குட்டுப்பட்டுப் பொட்டுக் குலைந்து போகாதே
பொட்டுக் குலைப்பதுக்கு பிள்ளை தள்ளையல்ல
பெட்டி[509]மகளே உனைநான் வெட்டிப்போடு வேனே
வெட்டிநீ ரிட்ட மொட்டகட்டப் புளிதன்னை
ஷெத்தப்பத மாச்சிது கத்தாளைகா ணுமக்கு
கத்தாளையை வெட்டு முன்னே கையாயுத முன்னே
கண்டிருக்கக் கொண்டு போறேன் வண்டக்காரி யுன்னை
வண்டத்தன மாகநீங்க ளென்னோடு எதிர்த்தால்
மாலையிட்டு வெட்டாவெளி[510] கொட்டுக்கொட்டு வாரே
கொட்டு கொட்டென்றே பேசுறாய் பெட்டி மகளேநீ
குத்திப் போடுவேனே வல்லயத்தி னாலே நானும்
குத்துவார்த் தல்லவோ நேத்துப் போட்ட புழுங்கல்
கோழியலுங்[511] கப்பியு[512]மறாமல்[513]கிடக்கிதுகாண்
கப்பியறத் தீட்டுமுன்னே கைப்பிடித்து வுன்னை
கட்டி யடிக்கிறேன்பார் வெட்டாவெளி தன்னில்
கட்டியடிக்க வுனக்குக் கைவருமே யானால்
மேற்கே வயலில் போங்கோ கொத்துத் தருவார்கள்
கொத்துத் தருவா ரெவருஞ் சுத்தப்பர மானால்
குல்லாத்தன மானதெல்லாஞ் சொல்லுகிறேன் பாரு
சொல்லும் பல்லி யானால் வெகுதெய்வம் நீயலவோ
தேட்டமுள்ள[514] பேர்களுண்டால் ஊட்டுத்[515]தரு வார்கள்
ஊட்டுக் கொடுத்தாலு முன்மேலாட்டமுங் கொள்ளாமல்
ஓட்டினபேய் விட்டுவிட மாட்டா தும்மானை
உன்னைப்பிடித்த பிரமன் என்னைப் பிடித்தாக்கால்
ஒழிப்பது வேறேயொரு கழிப்புமுறை யுண்டு
களித்துக் களித்து விளையாட வலவோயெங்கள்
காவலவ ராவலாக வுன்னைத் தேடுகிறார்
ஆவலது தீர்த்துக் களித்துக் கொடுத்தால்
அக்கரைக் குண்டானால் செட்டிபைக் கறைக்குள்ளே
பக்கம் பாராமல் துணை வக்கணம்[516] பறைந்தாய்
பாத்திருப்பே னுந்தன் கூத்துப்பாவினைக ளெல்லாம்
கூத்துப்பார்த்து பஞ்சாத்துக்கண் பூத்துப்போய் வந்தாக்கால்
கொஞ்ச மாகிலு முறங்கு மஞ்சிக் கரையிலே

மஞ்சிக் கரையில் வருவே னெஞ்சைக் கலக்க
வாதுசொல்லி மறத்தலைவன் வந்தாரணஞ்சவர் முன்பதிலே

## விருத்தம்

### தூதுத் தோல்வியும் சிவனணைஞ்சவர் ஏச்சும்

தொழுதுபணிந்து மறத்தலைவன் தூதுபோன துயரமெல்லாம்
எழுதிமுசியா தொருவன்ஓலை யேட்டிலடங்கவு மாட்டாது
முழுதுமுரைக்க வேணுமென்றால் முசியாதுராமர் கதைபோலே
வழுகா தவளை மதிமசக்க மருந்துபலது வேணுமென்றார்

தூதுசென்ற மறத்தலைவன் றிரியவந்து அணஞ்சவர்முன்
சொகுசுபெற அணஞ்சவனார் சொல்லுவாரா மொருவார்த்தை
வண்டணிசேர் பூங்குழலாள் மங்கையர்சின் னணைஞ்சிதன்னை
சென்றுகண்ட தல்லாதே சீக்கிரத்தில் நீயவளை
கொண்டுவரக் கண்டிலையே கூடவுந்தன் கையோடே
கையோடே கூட்டியவர் கண்டிலையோ யென்றுசொல்லி
அய்யோடா வுன்திறத்தை யாரோடே சொல்லப் போறேன்
மெய்யோடே நீயுரைத்த விசழமெல்லா[517] மித்தனையோ
பய்யரவுட வாளணியும் பரமனறி வாரெனவே
அறிவுடனே முத்தமிழ்நூ லாராயு மணஞ்சவனார்

### வசிய மருந்து வாங்க மலைநாடு செல்லல்

சேர்த்தமுகத் தனத்தழகி சின்னணைஞ்சி தனைவருத்த
வலுவுடனே யிவ்வூரில் வகுத்தமருந் தில்லையென்ன
வருத்தியவள மசக்க[518] மருந்ததுதான் வேண்டுதற்கு
கருத்துடைய மறத்தலைவன் கண்ணான சேவகனும்
உருத்துடைய[519] சிறுக்கனுட னுச்சாயஞ்[520]சேர் மந்திரியும்
கருத்துடனே நால்பேருங் காஞ்சிபுரம் நாடும்விட்டு
காஞ்சிபுரம் நாடுமிட்டு கரும்புரவி தனிலேறி
ஏத்தபுக ழணஞ்சவனா ரிருள னண்ணாவியைத் தேடி
பார்த்தன்பரி நடந்ததுபோல் பரபரெனச் சடுதியிலே
தேன்சொரியுஞ் சோலைவிட்டுத் தென்னவர்கள் போகையிலே
பேராறு வாவிகளும் பெருவனமுந் தான்கடந்து
தாரேறுஞ் சோலைவிட்டுத் தட்டாட்டப் பாறைவிட்டு
வட்டநெடும் பாறைவிட்டு மயிலாடுஞ் சோலைவிட்டு
இட்டமுடன் கழுகுமலை யின்பமுடன் பழனிமலை
அட்டகிரி போலுயர்ந்த வருவிமலை குருவிமலை
குருவிமலைச் சருகுமிட்டுக் கொடிபிடித்தான் மலையுமிட்டு

பெருகிய நீரோடும் பொய்கை வனமும் கடந்து
சோலை வனமுங் கடந்து துலையாத மலையுமிட்டு
. . . . . . . . . . . பெற்றவடி வணஞ்சவனார்
சாலவித மானவித்தை தான்படிக்க வேணுமென்ன
கூடுகொம்பன் மலையும்விட்டுக் கொடிபடர்ந்தான் மலையும்விட்டு
வந்துசிவ னணைஞ்சவனார் மலைவளப்பம் கண்டனராம்

**மலை வளப்பம் காணுதல்**

அந்தமலை வளமுரைக்க வம்புவியோர் கேளுமினி
மந்தியினங்கள் குதிபாயும் மயிலாடக் குயில்கூவும்
சந்தனங்கள் மாமருது சற்றேமணம் வீசாதோ
விந்தைசெறி வலம்புரிகள் முனிவர்சங்கு முழங்கி வர
கொந்து[521] கொந்தாய்த் தவசியர்கள் கூண்டோமம்[522] வளத்திடுவார்
வளமான ஆளிசிங்கம்[523] வரிப்புலி ஓநாய்கரடி
ஒரமான வாவியிலே வொருதுறையில் நீரருந்தும்
அன்னமிருந் தாடல்செய்யு மானைமதம் பொழிந்துநிற்கும்
இன்னஞ் சொல்லத் துலையாது யிந்தமலைப் புதுமைதன்னை
கன்னலுடன் கதலிகளும் கனிவருக்கைப் பழமுதிரும்
புதுமைகண்டு மனமகிழ்ந்து பொன்னணைஞ்ச பெருமாளும்
கதின்மையுட[524] னொருவார்த்தை கருத்துடனே சொல்லுவாராம்

**பின்னும் மலையேறிச் செல்ல அஞ்சுதலும் துணிதலும்**

சொல்லுவார் பொன்னணைஞ்ச பெருமாளும்
சூரன் மறத்தலை வீரனவ னோடே
கல்லுங் குமடும்[525] வனமுங் கடந்து
காஞ்சிபுர மிட்டு வந்தோ மித்தூரம்
வந்தோமே யிந்த மலைக்குள்ளே நாமள்
மாயப் பிரமைநான் கொண்டதி னாலே
இந்த மலைக்குள் தடந்தெரி யாது
இனிமேல் நமக்குப் பயங்கார முண்டு[526]
பஞ்சமா பாதகரே யிந்தப் பாதை
பயமா யிருக்கிதினிப் போக வேண்டாம்
பூத்தான வார்த்தை யணஞ்சவர் சொல்ல
புத்தி மறத்தலைவ னேது சொல்வான்
கூத்துக் கோலஞ் சமைத்து வந்தாக்கால்
கொட்டுக்கு நாணிப் பயப்பட லாமோ
வார தெல்லாம் வரட்டும் தம்பிரானே
மருந்து வாங்காதே திரும்புவது மில்லை

சிந்தை கலங்கிச் சடைக்கவும் வேணாம்
தேறி யல்லோ மலையேறி வந்தோம்
ஏலாத[527] உச்சமலை யெல்லா மேறி
எங்கெங்கு முள்ள குமடுங் கடந்து
வாராரோ பொன்னணைஞ்ச பெருமாள்
மந்திர வேல னிருப்பிடந் தேடி
தேடிச் சிவனணைஞ்ச பெருமாளும்
சீக்கிரத்தில் கூடு கொம்பன் மலைக்குள்
வாடிச் சடைத்து வருகிற நேரம்
மலையிலே வாழுங் குறவர்கள் கண்டார்

## மலைக்குறவர் உபசரிப்பும் விசாரிப்பும்

இந்த மலையுங் குமடுங் கடந்து
எங்கிருந் தெங்க ளிடத்திலே வந்தீர்
பட்டாப் பகலே வழி போகலாமோ
பாத்திருக்கக் கடுவாய்[528] கொடுபோமே
துஷ்ட மிருகங்கள் விட்டு விடாதோ
சூஷ்சமாய் வாய்கெட்ட மந்திர முண்டோ
அய்யய்யோ நீங்க ளருதாய்ப் பிழைத்தீர்
ஆரு மறியா வனத்திலே வந்தீர்
பொய்கையு மாத்தங் கரையுங் கடந்து
பிழைத்தது நீங்க ளருமை யல்லவோ
சந்தோச மாக வந்தக் குறவர்கள்
சமத்தன்மா ருங்களைப்போ லில்லை யென்ன
இருத்தி யுபசார வார்த்தையுஞ் சொல்லி
இளைப்பாறத் தேனுங் கனியுங் கொடுத்தார்
கருதின படிவந்த செய்திக ளெல்லாம்
காட்டிலே வாழுங் குறவர்கள் கேட்டார்

## சிவனணைஞ்சவர் செய்திகூறிச் சிறப்புகள் தருதல்

கேட்ட பொழுதே யணைஞ்சவ ராசன்
கெம்பீர மாக மனசு மகிழ்ந்து
வாட்ட மினக்கென்று வேறில்லை யிப்போ
வம்பு சொன்னாளொரு கொம்பனை யாளும்
வம்பு சொன்னவளக் கற்பழிக்கவே
வாது கூறி யெட்டுநா ளுண்டுமய்யா
செம்பொன் முடியுஞ் செங்கோலு மிருக்க
தேவரீ ருங்களைத் தேடிநான் வந்தேன்

வந்தே னென்று மனத்தங்கடஞ் சொல்லி
மன்மதன் பொன்னணைஞ்ச பெருமாளும்
பந்துபோல் தங்க முடியுங் கொடுத்து
பட்டுச்சேலை பருவட்டமும் வைத்தார்
கட்டோடே கப்பரைப்[529] புகையிலை வைத்து
கள்ளரக்குக் குத்தி முனையிலே வைத்தார்
இஷ்டத்துடன் கோழி முட்டையதும் வைத்து
எய்யுங் கணையு மொருவில்லும் வைத்துக் கண்டார்

**இருளப்ப னாயான் குடிலில் சேர்தல்**

இத்தூரம் பத்தாத காரியத்துக் காக
ஆயா னிருளப்ப னண்ணாவி முன்பில்
போகட்டு நாங்கள் கூடவே நீங்கள்
பொன்னணைஞ்ச பெருமாள் வாருமென்ன
வாவென் றணஞ்சவ ராசனைக் கூட்டி
மலையில் குறவர்களும் வேடன் மாரும்
ஏகமாய்க் கைவாளு மேந்தித் தரித்து
இருளப்ப னாயா னிடத்திலே வந்தார்
அருள்பதம் பெற யிருளப்ப னாயான்
அண்ணாவி தன்னுட மந்திரத்தி னாலே
பொருப்பிலே வாழும் புலிகடு வாயும்
பேய்பிசாசி வந்து காத்துக் கிடக்கும்
பொங்கலுக் கான விறகு சுமக்கும்
புலிகடுவாய் வந்து காத்துக் கிடக்கும்
தெள்ளு புகழுள் ளிருளப்ப னாயான்
சேவிக்கு மந்திர வித்தையி னாலே
கொள்ளிவாய்ப் பேய்கள் பந்தம் பிடிக்கும்
கூளி[530] காளிவந் தூழியஞ் செய்யும்
காகத்தைப் போலப் பறக்கத் தொழிலும்
கயித்துக்கு மேலே நடக்கத் தொழிலும்
மேகத்தி லாகாசத்தி லிவ னோடே
வித்தையுஞ் சித்தத் தொழிலுமே வுண்டு
தந்திர நாவடக்க கண்மசக்கும்
சரீர காவலு மெதிரேத்து முண்டு
மந்திர மும்பல மூலியுங் கற்று
மலைக்குள்ளே நல்ல குடிலுமே கட்டி
இந்திரமா ஞால வித்தையுங் கற்று
இருந்தார் மலைக்கு ளிருளப்ப னாயான்
அப்படி மந்திர வேல னிருக்க
அணஞ்சவ ராசனு மலைவேடன் மாரும்

எப்படியுங் காரியங் காணவேணு மென்று
இருளப்ப னாயா னிடத்திலே வந்தார்

**சிறப்புச் செய்து செய்தி உரைத்தல்**

வந்து யிருளப்ப னாயன்றன் முன்னே
வாழை யிலையில் பணமுஞ் சொரிந்தார்
சந்தத்துடன் கருங்கச்சை யுருமால்
சதங்கை யிட்டவரைச் சல்லடம் வைத்தார்
இத்தரையும் வைத்தடி யிறைய தாக
இருளப்ப னண்ணாவி தன்னைத் தொழுதார்
தொழுதுநின்று படிப்படியே சொல்லுவாராந் துயரமெல்லாம்
எழுதிவைத்த பழங்கதைபோ லிருளப்ப னண்ணாவிக் குரைப்பார்
கேளுமென் னாயானே கீர்த்தியாய்நான் சொன்னதெல்லாம்
வாழும் நாடதிலே வண்ணாத்தி யென்றொரு பெண்
பெண்களிலும் வடிவழகி பூவுலகில் கண்டதில்லை
கண்டவுடன் மதிமயங்கிக் காதல்கொண்டே னவள்மேலே
எண்ணமெல்லா மவள்மேலே யிச்சையுற்று மயலானேன்
மயலான பேது[531] கொண்டு மறத்தலைவ னினத்தாக
ஒயிலாகத் தூதுசென்று வுரைத்தமொழி ரெம்பவுண்டு
தூதுசென்ற தோழனைத்தான் சுளிக்க[532] அவள் வார்த்தை சொன்னாள்
சொன்னாளே வசையதுதான் சுணைக்கேடு[533] உமக்கல்லவோ
வாதுசொல்லி நானுமிந்த மலைக்குளும்மைத் தேடிவந்தேன்
தேடிவந்தே னென்றுசொல்லிச் சிவனணைஞ்ச பெருமாள்சொல்ல

**இருளப்பனாயான் வசிய மருந்துகள் அளித்தல்**

கோடிமுகம் வாடாதே கொத்தவனே யென்றுரைத்தான்
நாடுமெய்க்க வுந்தனக்கு நல்மருந்து நான்றருவேன்
நால்திசையுங் கீர்த்திபெற நல்லசிவ னணைஞ்சவர்க்கு
கூத்துமருந் தானதெல்லாங் கொடுத்தனுப்ப வேணுமென்ன
காத்துப்போலப் பறத்தியையும்[534] கதவுதட்டி யெழுப்பியையும்[535]
வெறுத்தவரை உறவாக்கும் மேகவர்ணப் பச்சிலையும்
மறுத்துமொரு பச்சிலையு மாதருற வாட்டியையும்[536]
வட்டாரப் பாம்பாட்டி வருத்திவைக்கும் மூலியையும்
தேடிஸ்திரு[537] யடுத்துவரும் சிவந்தநிழல் வாடியையும்
கூடிப் பிரியாதநல்ல கோங்குமரத்தின் பிசினும்
நல்லபுருஷனை மறந்து நடுநடுக்க மெடுத்துவரும்
கைப்பிரளி மூலிகையுங் கையறுத்தான் பச்சிலையும்
காட்டிலுள்ள மூலிகையுங் காளையின் கோரோசனையும்

கூட்டியெல்லாம் பொடியாக்கிக் கொண்டிருள ளாயானும்
ஆத்தாமல் மடலெடுத்து அடந்தேடி[538] வாறபேரை
மாத்திவைக்க வொருமருந்தும் வருத்திவைக்க வொருமருந்தும்
திங்கள்முடி யணஞ்சவனார் திருக்கையிலே தான்கொடுத்தார்
ஆயானே யிம்மருந்தை யன்பினுடன் தந்தீரே

**சின்னணைஞ்சவனார் பலிப்புச் சோதனை பார்த்தல்**

தந்தீரே மருந்தினுட தன்பலிப்புச்[539] சோதனைதான்
எந்தவித மாகவென்று யெனக்கறிய வேண்டாமோ
அறிவதற்குச் சோதனைதா னணைஞ்சவனார் கண்காண
காணாத தடவரையில் காராக்கள்[540] மேய்கையிலே
ஈனாத கிடாரியின்மேல் லக்காக[541] யெறிந்துவிட்டார்
பரியநின்ற[542] பசுக்கள்மேலே பச்சிலையை விட்டெறிந்தார்
மருந்துபட்ட பசுவின்கன்று மறுகுதல்லோ[543] யவர்மேலே
தன்னினத்தைத் தேடாமல் தளிர்த்தபுல்லு மருந்தாமல்
பொன்னணைஞ்ச பெருமாளிட பிறகாலே துடருதென்ன
பிறவேறு மாவினத்தின் புதுமைகண்டு அணஞ்சவனார்
மாத்திவைக்க வேணுமென்று மறுமருந்தைத் தூவிவிட்டார்
மறுமருந்தின் தூளுடைய வாடையது பட்டபோது
முறுக்கிவா லெடுத்தோடி மூண்டிவரைப் பாராமல்
திடமான காவிடத்தே சென்றுநிற்கு மினத்தோடே
இடமான காவிடத்தே யினத்தோடே சேர்ந்ததுவே
பாடுபட்ட துயரங்கண்டு மனமகிழ்ந்து அணஞ்சவனார்
பாடுபட்ட துயரமெல்லாம் பழுதாகப் போகவில்லை
நாடுதனி லிப்படித்தான் நாமள்கண்ட தில்லையென்ன
பலிப்புநன்றாய் வாச்சுதென்று பாராளு மணஞ்சவனார்
சலிப்பினிமேல் நமக்கில்லைகாண் தங்கடங்கள் தீர்ந்துதென்றார்

**நாடுதிரும்புதலும் வசியப்படுத்தச் சிறுக்கனைப் பயன்படுத்துதலும்**

கூடுகொம்பன் மலையும் விட்டுக் குமடுபல வனங்கடந்து
நாடுதென் காசிபுரம் நகர்தனிலே வந்திருந்தார்
வந்திருக்கும் வேளையிலே வாய்த்தநல்ல அணஞ்சவனார்
மருந்துவச மானபோது வாதழிப்பே[544] னென்றுசொல்லி
சிறுக்கன் றன்னை வரவழைத்துச் சிமிழில்மருந்தைக் கொடுத்து
கருமமது காணவென்று கைமயக்கஞ் செய்து விட்டார்
ஒருமருந்தை வெத்திலையி லூட்டியவர் கைக்கொடுத்து
வெத்திலையில் மருந்தூட்டி வீதியிலே கொண்டுசென்றார்
வீதியிலே செல்லும்போது விரைவானாள் சின்னணைஞ்சி
கண்ணான சிறுக்கனவன் காத்திருந்து கண்டுகொண்டான்

## விருத்தம்

### சின்னணைஞ்சியைச் சிறுக்கன் வசியப்படுத்துதல்

கொண்டே குமென் தனத்தாள்தான் கொடிசே ரிடையாள் வரும்போது
வெண்டா மரைசேர் முகத்தழகு வெள்ள வெத்தி லையும்எடுத்து
கொண்டே போக வேணுமென்று கூர்மை ¡புடனே சிறுக்கனவன்
தின்கும் பாரு கொடுப்பதற்குச் சிமிழில் மருந்தை யூட்டுவானாம்

## விருத்தம்

ஊட்டியே மருந்து தன்னை யுபாயமா யடக்கஞ் செய்து
நீட்டியே கொட்டப் பாக்கை நேர்மையாய்ச் சீவிக்கொண்டு
சாட்டியே சீலைக் குள்ளே சட்டமாய் வைத்துக் கெட்டி
காட்டியே கொடுப்பதற்குக் கற்புடை யாளைக் கண்டான்

கண்டான் மனங்குளிர முகங் காட்டியே சந்திப்பு வேட்டை
யென்ன
மண்டை தலைவிரித்து கோணவாய்க்குள்ளே மூக்கு வடிந்தொழுக
புடைவைகொடிச் சீலையுள்ளே பொத்திக் கொண்டான்
கட்டுவெத்திலையை
சோத்துக் குறையாலே சுள்ளென்று கண்ணும் விறிபார்த்து
கஞ்சிக் கிறக்கமது காலுநடக்க வொட்டாதபடி
முடவித் தடியூன்றி அப்போ முன்பில் சிறுக்கனு
மேதுசொல்வான்
அம்மா பெரியவளேநா னஞ்சாறு நாளுண்டு கஞ்சிகண்டு
சும்மா தரவேண்டாம் பழஞ் சோத்துக்கு வெத்திலை நான்தாரேன்
உனக்கேற்ற வெத்திலைதான் ஒன்றுரண்டு தாரேன் தின்றுபாரு
புனக்கோல் வாழ்மயிலே மெள்ளப் போகலாம் வெற்றிலை போட்டுக்
கொள்வாய்
எதிராக நின்று கொண்டு யெடுத்தான் மடிக்கு ளடக்கமதை
கள்ளனவன் சிறுக்கன் கண்கவடியே[545] சிங்கியைப்பூட்டி விட்டான்
மெத்தப் பரமாத்தி[546] வெத்திலையாகிய சத்துருவை
வேண்டிச் சிரித்துக்கொண்டாள் விதியின்பொருட்டால் மதிமறந்தாள்
தீண்டிப் பிடித்தவளுஞ் சீவியவெற்றிலை பாக்குச்சுருட்டி
வாயில் கொடுக்குமுன்னே மாதுக்குக்கொங்கை மதப்படுமாம்
செய்யு மலைமருந்து சுள்ளென்று வேகஞ் சுறுக்கிடவே
வேர்வை முகத்துக்குள்ளே விறுவிறுத்தவளுங் கிறுகிறுத்து
பாதி யுடைநெகிழ உடல்பறக்கவே கால்களுந் தள்ளாடி
எனக்கோர் படியாச்சே யென்றுசொல்ல அவனேது சொல்வான்

## சிறுக்கன், வசிய மயக்கத்துக்கு வேறு காரணங்களுரைத்தல்

பாக்குச் சொருகியதோ பாவக் குணங்கள் பலித்ததுவோ
வாக்கு கழறுதம்மா புலமாட னிருளப்பன் பிடித்தானோ
பித்தஞ் சிரசில் கொண்டோ பேய்போலேநின்று புலம்புதய்யோ
கொட்டுகள் கேட்குமுன்னே கொட்டாவி கொள்ளுதே ஆடுதற்கு
அய்யன் பிடித்தானோ வறுகுல மாட னணுகினானோ
கையை நெரிக்குதென்ன காலுமுடம்பும் விறைக்குதல்லோ
வாடைமணங் காட்டஉங்கள் வண்ணாத்தி மாரை வரச்சொல்லட்டோ
சண்டை பிடியாதே சாம்பிராணி பொய்க்கச் சம்மதமோ
பொங்கலிடச் சொல்லட்டோ பூப்படை[547] போட்டு விளயாட
துள்ளுமறி வேணுமோ சொல்லடி யம்மாநீ வாய்திறந்து
திரையை வளையுதற்குச் சீலைக்கு மூப்பனுக்[548] காள்விடட்டோ
தாங்கிப் பிடிப்பதற்குத் தாயார்க்குச் சொல்லி விடட்டோ
வண்ணார்க்கு நல்லதெய்வம் மாமிக்கும் பேய்க்கும் வசையாச்சே
நாய்ப்பறை கொட்டுமுன்னே நடுச்சொல்லென்று வாயைப் பிளக்குதம்மா
இயமன் பிடித்தானோ யேக்கறைத் தெய்வங்க[549] ளிச்சித்ததோ
குளிர்போலே யாட்டுதென்ன முன் கும்பிட்ட தெய்வக் குறைதானோ
முருகன் பிடித்தானோ மூலயில் பேய்கள் குறையுமுண்டோ
சும்மாயிருக் கொட்டுதில்லை சூத்திரமாகக் கலைக்கு தென்ன
முட்டாங்கு[550] யிட்டிடட்டோ உங்கள் மூப்பிட்ட வண்ணாரைக் கூப்பிடட்டோ

## சின்னணைஞ்சியைச் சிறுக்கன் மண்டபஞ் சேர்த்தல்

கிட்டக்கிளை யாச்சே கிடவாமலே[551] மெல்ல நடவுமென்று
நடந்தா ளிடைதுவள நல்லசிறுக்கன் வழிகாட்ட
துடந்தாளே சின்னணைஞ்சி வெகுதூரத்தில் வாரதை ராசன்கண்டார்
பல்தீட்டிப் பொட்டுமிட்டார் வாயில் பாக்கிட்டுக் கொண்டையில் பூவுங்கெட்டி
வாடை புழுகணிந்தார் வாரோளோ யில்லையென்றே பார்த்தார்
பத்தியவள் நடையைப் பார்த்துக் கொண்டார் கவி பாடிக் கொண்டார்
அம்மை யழகுகண்டு யயிராணி[552] யென்றே சிரித்தா ரவரும்
கண்டார் மனங்குளிர யென் கவ்வை[553] யொழிந்திது யின்றைக் கென்றார்
தைய லழகுரெம்ப தங்கக் கட்டிலில் வாவென்று கைகாட்ட
வருவேனோ மண்டபத்தில் மாயத்தினால் களவாண்டவனே
தருவேனோ மாத்துனக்கு சீலைதந்தே யனுப்பு சழக்காரா[554]
நிலமேலே நிற்பேனோ யென்ன நெஞ்சடிக் காச்சலு நிற்கொட்டுதோ

கருத்து ஒன்மேலே வைத்தேன் கட்டி ஒருமுத்தந் தாருமென்றார்
பதறாதே பெண்கொடியே பஞ்சணை மீதில் படுத்திருப்போம்
கொஞ்சுங் கிளிமொழியைக் கூட்டிக்கொண்டு வனுபோகஞ்[555] செய்ய
வாழ்ந்து யிருப்பேனென்று வந்துமடி பிடித்துக்கொண்டு போனார்
கொண்டு போயினார் மண்டபத் துள்ளே
கொடிமை யாகிய சிறுக்கன் சொல்லுவான்
வண்டி மலயனு[556] மண்டபந் தன்னிலே
வண்ணாத்தியு மண்ட பத்திலே
இனியெல் லோருங் கயிலையில் சேரலாம்
என்று சிறுக்கனும் வாசல் காத்தான்

**சிவனணைஞ்சவர் - சின்னணைஞ்சி கூடல்**

பொன் னணைஞ்சவர் சின்ன ணஞ்சியை
பூவின் மெத்தையின் மேலிருத்தினார்
சின்னச் செப்புக்குள் சந்தன மதை
திலர்தம் தீட்டினார் கலகம் காட்டினார்
குத்துமாம் தனத்தி யாகவே
கொண்டை குலையவே குழைகள் பின்னவே
மெத்தை மீதிலே முத்த மிட்டனர்
விந்தை யாலொரு சிந்தைப்[557] பாடினார்
கட்டி யிருபேருஞ் சட்ட மாகவே
காச்சல் தீரவே கைநெகிழ்ந்தனர்

**சின்னணைஞ்சி நிலையாகத் தங்குதல்**

உன்னை விட்டு யினிப்போக வொட்டுமோ
உயிரு ரண்டு மொன்றாகிப் போச்சுதே
விசர்த்த வேர்வை சீலை துவைத்திட
வீசறியினால் விசர்வை வீசினாள்
வாயில் பாக்குதான் சீவிக் கொடுக்குமுன்
மையல் தீர்ந்தபின் கையை நெரிக்கிறாள்
மனையில் தாய்மாரை நினைந்து தேடுவாள்
வந்து மூன்றுநா ளாகிப் போச்சுதே
மாயமா யென்னை யேது செய்தீரோ
வீட்டில் போய்முகங் காட்டி வருகிறேன்
வேந்தனே யென்னை விட்டிடுவா யென்றாள்
கொடிய தாய்தம ருண்டு மென்றாக்கால்
கூட வருகிறேன் வாடி யென்றனர்
கூட வந்திடில் நாடு கொள்ளுமோ
கொச்சைப் பேச்சுக்கோ[558] யிச்சை யாகினீர்

வீடு வேண்டிலேன் நாடு வேண்டிலேன்
உடைய நாயகா யடியவர் கிட்ட
ஊர்க டந்திடில் நாட்டி லேசுவார்
வடுவில் லாமலே சின்ன ணஞ்சிதான்
மண்டபந் தன்னில் வாழ்ந்தி ருந்தார்
வாழ்ந்திருக்குங் காலமதில் வண்ணார்கள் தான்கூடி

## வீட்டவர் சின்னணைஞ்சியைத் தேடுதல்

சூழ்ந்திருந்த கிளைமனுசர் தோகையரைத் தேடுவாராம்
அருங்கான மலைநாடும் ஆறுகுளம் காடுசெடி
குளங்கூவ லாறுகளில்[559] குளியோடித்[560] தேடுவாராம்
வீடுதெரு தென்காசி வீதியெங்கும் காணாமல்
ஆடுகின் றம்பலமு மவரவர்கள் மனைதோறும்
வாடியந்த வண்ணானும் வழிதோறும் தடம்பார்த்தான்
தேடியவன் றான்திரிந்தான் தேன்மொழியைக் காணாமல்
எங்கேதான் போனாளோ யென்னுடைய வண்ணாத்தி
தாயுடைய வீடதுக்குச் சண்டையிட்டுப் போனாளோ
பேய்போல நானலையப் பிரமன் விதிப்படி தானோ
மாமியார் வீட்டில்சென்று மருமகன்றா னேதுசொல்வான்
என்னுடைய சின்னணைஞ்சி யிங்கேதான் வந்தாளோ
என்மகளைக் கொன்றுவிட்டு யேதுகொண்டு வந்தாயோ
பழிசுமப்பாய் வண்ணானே யென்றுபாவை பழிக்கலுற்றாள்
நரைத்தலையை விரித்தழுது நாணங் கெடாதே யென்னை
கரைந்தாளே கூன்கிழவி கண்மகளை யிழந்தேனென்று
நாடுடைய தென்காசி நாடுமட்டுங் காணாமல்
தேடிவந்தே னுன்வீட்டில் செய்தியெல்லாஞ் சொல்லவந்தேன்

## தேடல்கண்ட சின்னணைஞ்சியின் மனமாற்றம்

ஓடிவந்தேன் தென்காசி ஊரோடே வருகையிலே
திட்டிவாசல்[561] தனிலேநின்று யெட்டியவள் பார்க்கலுற்றாள்
மட்டித்தன மாயவர்க்கு வாக்குமது நான்கொடுத்தேன்
கண்ணான சின்னணைஞ்சி கதவருகே பார்த்துநின்று
வண்ணான் படுமறுக்கம் வாய்பிளக்க மாட்டாமல்
வாசமிட்டுப்[562] போகவென்று மனதிலொரு சடவாச்சு
பாசமதை மறந்துவிடப் பகட்டுவித்தை தான்படித்தாள்
வெத்திலையைத் தான்சவைத்துத் தம்பலத்தின் சர்கமதை[563]
சுத்தியவ ளுடுத்திருந்த துயிலாடையில் துப்பிவிட்டாள்
மாதவிடை யானேனே மறுகாதே[564] யென்னையும்நீர்
சூதகமா யிருக்கிறேன்[565] தொடாதே யென்னையுநீர்
முட்டாகி யிருக்குகிறேன் விட்டுவிடு யென்னையும்நீர்

## மனமாற்றம் உணர்ந்த சிவனணைஞ்சவரின் செயல்

இந்தப்புத்தி ஆருசொன்னா ரேந்திழையே சின்னணஞ்சி
கிட்டாது வுன்னைவிட்டால் கிடைக்குமோ தென்காசியிலே
கட்டி யெடுத்தவளைக் கனிவாயில் முத்தமிட்டார்
விட்டுப் பிரியாத வேசை ஆசையின்மேல் சிங்கிபூட்டி
பன்னீரு சந்தனமும் பரிமளமுங் கமகமென
பைந்தொடியாள் சிலம்பலம்ப பாதமலர் வேற்றொழுக[566]
செங்கைவளை வோலமிடச் சென்றுகுறுக் கிடுவாளாம்
மங்கையிட மோகமதை மகராசன் கலக்கிவிட்டார்
வளம்பெறவே யிருபேருட மனதாசை தீர்ந்தவுடன்
கட்டவிழ்ந்து யிருபேரும் கைநெகிழும் வேளையிலே
மட்டுகந்த திருமுகத்தில் மறுவேர்வை வேர்த்திடுமாம்
முந்தியது தனைவிரித்து முகமதிலே வீசுவாளாம்
செந்திருவே ஒன்னுடைய சிநேகம் விட்டுப் பிரியாது
இவர்களிரு பேருமாக யிருந்துசுகம் பாராட்ட

## சின்னணைஞ்சியைக் காணவில்லையெனச் சீவலமாறனிடம் அறிக்கையிடல்

அவர்களுட கோட்டைக்கு மரண்மனை வாசல்கடந்து
தென்காசி சீவலமார்பன் திருமுன்பே யறிக்கையிட்டான்
வன்காசி தென்குமரி மட்டுமர சாளுமன்னா
மாத்தெடுத்து வரப்போன வண்ணாத்தியைக் காணேனே
நால்திசையெல்லாந் தேடி நானவளைக் காணாமல்
வாட்டமுத்து வந்தேனான் மனக்குறையைத் தீருமென்றான்
தேட்டமுறத் தெள்ளமுதைத் திருடிக்கொண்டு போனாரோ
சோறுதின்று குடல் கொழுத்தோர் தொட்டவளைப் பிடித்தாரோ
மாறுகண்ணி[567] முகம்பார்த்து மருந்துசெய்து மறைத்தாரோ
ஏதுவைத்துப் பேய்பிணங்கள் இடைவழியி லடித்ததுவோ
பெண்ணுடைய அழகுகண்டு பிலக்காரர்[568] பிடித்தாரோ
மண்ணாளும் ராசமக்கள் வைப்பு வைத்துக் கொண்டாரோ
கண்ணுமணிப் பெண்ணாசை கண்டெடுத்த கற்பகத்தை
பெண்மணியை யிழந்தேனென்று புலம்பியவன் பரதவித்தான்
வல்லாண்மைக் காரரவர் மாத்தெடுக்க வரவே சொல்லி
சொல்லாலே வசப்படுத்தச் சோத்தில்மருந் திட்டாரோ
மருந்துவெறி கொண்டவளை மறுத்துவர வொட்டுதில்லை
குருந்தேறு ராசமன்னர் கூத்தாட்டுப் பார்க்கிறாரோ
சாடைசொல்லிப் போய்வருமுன் தான்பேசப் போகாது
ஆடையது வெளுத்துவந்து அஞ்சாறுநா ளுண்டுமய்யா
நாடுவிட்டுப் போனவளை நாகமது கடித்ததுவோ

வீடுவிட்டுப் போனவளை மீண்டுவரக் காணேனே
எப்படியோ நான்காணேன் என்றவனும் தொழுதான்

### சீவலமாறனின் ஆணையும் காவலரின் கண்டுபிடிப்பும்

செப்பமுள்ள சீவலமார்பன் செய்தியெல்லாங் கேட்டிருந்து
காவலுள்ள சேவகரைக் கண்காட்டி வரவழைத்து
என்னசெய்வோம் வண்ணாத்தி யெங்கேயென்று பாருமென்றார்
களவதுநீ பிடியாட்டால் கழுவிலுன்னை யிட்டிடுவேன்
செந்நாய்மந்தி நாய்க்கிரையாய்ச் சிரத்தைவெட்டித் தூக்கிடுவேன்
எண்ணும்பதி யாளுமன்ன னியம்புதல்கேட் டவர்பயந்து
ஒருகாத வழிவரைக்கும் ஓடியங்கே யவர்பார்த்தார்
நாலுதிக்கும் பார்த்தவர்கள் நன்னுதலைக் காணாமல்
பதினாறாம் சாமத்திலே பதிவு[569]வைத்துக் காத்திருந்தார்
சேவுகர்கள் தங்களிலே செய்தியெல்லாஞ் சொல்லுவாராம்
காத்திருந்தோர் மூன்றுநாளாய்க் கண்டுதில்லை தொண்டி[570]யொன்றும்
என்றிருந்து காவல்காரர் இழந்தோம் தலையிழந்தோம்
இப்படியே யவர்கள்சொல்லி யிருக்குகின்ற நேரமதில்
செப்பமுள்ள சீவலமார்பன் சிவனணைஞ்ச பெருமாளுக்கு
அவிசேகமாய்ச் சோறுகறி யாக்கிவுறி மேலேவைத்து
காவிகொண்டு வருகையிலே காத்திருந்த சேவுகர்கள்
சீறியந்த மடையனுடன் சேவுகர்க ளேதுசொல்வார்
கொலுவிருக்கு மண்டபத்தில் கொண்டுவந்து கொடுப்பானேன்
வலுவுடைய வீடதற்கு வாரதுக்கு நேரமில்லை
வாழையிலை ரண்டுகொண்டு வருவானேன் ஒருவனுக்கு
நாள்வரைக்கு மிருந்தவரை நாங்களுமுன் னறிந்திருப்போம்
உள்ளபடி யெங்களுக்கு வொளியாமல் சொல்லுமென்றார்
அதட்டியவர் கேட்கையிலே யச்சமுண்டாய் நெஞ்சத்திலே
பகட்டியவர்[571] கேட்கையிலே பரமார்த்தஞ்[572] சொல்லிவிட்டார்
மெல்லமணி மண்டபத்தில் மேடையிலே சின்னணஞ்சி
அழுக்கெடுத்து வெளுத்தாக்கா லாகாது யென்றுசொல்லி
கொழுப்பெடுக்க வந்திருக்காள் கொடுபோறேன் சோறவளுக்கு
என்றவனுஞ் சொல்லிடவே யேத்தமுள்ள சேவகர்கள்
சென்றுசொன்னார் தென்காசி சீவலமா ராசனுக்கே

**விருத்தம்**

### சீவலமாறன் சிவனணைஞ்சவரிடம் மந்திரியை அனுப்புதல்

சொன்னார் சீவல மார்பனுக்குத் தொழுது சேவகர் பகுத்தறிவாய்
மன்னா யிவ்வூர்க் கதியரசே மருமகன் சிவனணஞ்ச பெருமாள்
அன்னா[573] பசும்பொன் மண்டபத்தி லழுக்கெடுக்க வந்ததொரு

பொன்னார் சின்னணஞ்சி தன்னைப் போகவிடாதே யிருத்திக் கொண்டார்

உரைத்தா ரவருஞ் சிறுக்கனவ னுடனேதான்
உடன்கூடச்சென்று கூட்டிவர சிவனணஞ்ச பெருமாளை
மன்னவர் புகழுஞ் சீவலமார்பன் மருகா
மாப்பிள்ளை ராசாவே மாம னழைக்கிறார் வாரீர்
மின்னிடை வண்ணாத்தி தன்னை வெளியிலே விட்டு
மேலுங் கலியாணஞ் செய்யலாம் வாவென்றுரைத்தார்
வண்ணாத்தி யோடேநீ காலங் கடத்தாதே யப்பா
வாய்த்ததோர் தென்காசி யூருக்கெல்லாம் வசையாச்சே
கண்ணொத்த மாமன் மகளான யின்பக்கனியை
காதல் கொள்ளாமல் ஆசைகொண்டாய் வேப்பங்காய் மேலே
தீண்டாத சாதியைத் தீண்டினாரென்று சிரிப்பார்
தீர்த்தமு மாடி யழுக்கைத் தொடுவையோ சீசீ
வேண்டாத வார்த்தை பறைகின்ற தாரடாவீணே
வெட்டிப் பட்டிநாயின்[574] குட்டிக்கிடுவேன் விருந்தாய்
மாமன்மகளுக்கு மாப்பிள்ளை யில்லையே யானால்
மாச்சிமைத்[575] தாலியைக்கட்டி மடத்திலே வைப்பாய்
கெய்த்துப் பேய்[576]போ லமுகிறாயே வண்ணாயென்றே
ரெண்டு துண்டாக்குவே னென்றுஉட வாளெடுத்தான்
பொட்டிமக[577] ளோடேநீ பட்டுக்கிடக்கவோ போறாய்
புத்தி கெட்டாயென்று மந்திரியப்பாலே போனான்
சீவலமார்பன் றிருமுன்பில் சென்றுபோயா னேரு
செய்திக ளெல்லாம் செப்பினான் தப்பாம லேதான்
வாரந் தவறாத ராசகுமாரனே கேளும்
வண்ணாத்தி யாசை மறவாதவ ரொருநாளும்
புத்திக்குத் தக்கதாய் சித்தமகிழ்ந்து அருள்வீர்
பூலோக மாள்கின்ற சீவலமார்பனே யென்றார்
தொட்டவள் தன்னை விடுவேனோ நானென்று சொல்லி
சொல்லத்தக்க பேரைவிட்டுக் காரியஞ் சொல்வீர்

## பொன்னுருவியைத் தூதனுப்புதல்

அந்தவுரை தன்னைக்கேட்ட பொழுதிலே ராசன்
அழைத்தாரே புத்திக்குத் தங்கச்சியா ரவள்தன்னை
தங்கச்சி யாகிய பொன்னுருவித் தாயார்க்கு
சற்றேவோ ராள்விட் டழைத்தாரே மூத்ததமயன்
பொங்கிச் சினத்தந்த தூதுவன் சொன்னபொழுது
பொன்மணி மண்டப வாசலதிலே புகுந்தாள்
கொலு விருக்குங் கெருவிதமான[578] மகனை
கோவிக்கல் வாசல் குமாரனைக் கூட்டிவருவாய்

தமய னுரைத்திடும்வாக்குத் தவறாமல் சென்று
சந்தனமேடை சமூகத்தில் சென்றவள் கண்டாள்
விந்தை குலாவிய சின்னணஞ்ச பெருமாளே
விரைவாகப் பொன்மணி மேடையை விட்டுவருவாய்
பழிகாரா வுன்னைநான் பாலகனென்று வளர்த்தேன்
பார்த்தபேர்க் கெல்லாம் பழிப்பிடமாச்சு மகனே
தண்டமிழ் சேரும் சிவனணைஞ்ச பெருமாளே
தாய்வார்த்தை கேளாதான் நாய்வாய்ச்சீலை போலானாய்
வண்ணாத்திக் காகவோ கண்ணாளா ஒன்னைவளர்த்தேன்
மாதர்கள் சீலை வெளுத்திட வேண்டாம்மகனே
எண்ணாமல் ராசாக்கள் கோவிக்கல் தன்னிலேயேற்றி
இருக்கின்ற பேருக்குச் சற்றாகிலும் ரோசமில்லை
கள்ளியைத்[579] தள்ளாமல் உள்ளாக்கி வைத்துயிருந்தால்
கல்தூணிலே முட்டிச் சாகிறே னென்பழி காண்பாய்
கூத்துவா யெந்தன்வயிற்றில் செனித்த குமரா
குமரிகள்மே லாசைவைத்தால் பிரிய வொட்டாது
எத்தனை கோடி திரவியந்தன்னை யிழந்தேன்
எந்தனக்கோ வென்றுவுன்னைப் படைத்தார் பிரமன்
வித்தகா யெந்தனக்குத் துணையாய் வந்தவீரா
வீணிலே உன்னையும் பாழிலிழக்க விதியோ
சுட்டித் தலையனைப்போல் புத்திகொண்டு திரிந்தால்
சூட்டுக்கோல் கொண்டு சுட்டாலும் ரோசம்வராது
நன்மைசொல்லக் கன்மமென்று[580] நினைத்தாய் மகனே
நாளை வருவது வேளையறிய வொட்டாது
சாலயிம்மையில் தாய்சொல்லும் வார்த்தை கேளாதார்
சாத்திக் கழித்திடு மாலைபோல் சந்தியி லாவார்
பிள்ளையை யிப்படிப் பேசுவதோ நீயுமம்மா
பெண்சின்ன ணஞ்சிக்கா யுந்தன் வயித்தில் பிறந்தேன்
வண்ணாத்தி யோடவே வாழாமலென்னை மறித்தால்
வாலசன்யாசியைப் போலவே போவேன் மலைமேல்
தொட்டவள் தன்னையும் விட்டுவிட்டால் வெகுதோசம்
தொம்பர வண்ணாத்தி[581] யோடேநீ பங்கப்படுவாய்[582]
இட்ட விதியால் யியமன்கைக்கொள்கிற வேளை
எத்தனையோ சொல்லிச் சற்றுமயக்கம் வராதே
முட்டிக் குனியாதபுத்திநீ யென்னோடே சொன்னால்
மோசப் படாமலு மொன்வசையைத் தள்ளவொட்டாது
கோதை யிவளையும் விட்டுவிட்டால் கிடையாது
குத்தம் பொறுத்தருள்வா யம்மா யென்று
பெத்த தாயாரைக் கும்பிட்டான்
கும்பிட்ட பாலகன் தன்னையும் விட்டு

கொடுமையோ முன்செய்த கெடுமதிகள் தானோ
தானோ வொருவர் தரணியி லிப்படி
தாய்வார்த்தை கேளாத தவப்பேறு தானோ
பேறா யிதுவோ பிரமன் விதியோ
பெற்ற தவப்பலனோ யித்தரை யுண்டாச்சு
ஆச்சுதே காரியம் வாச்சுதே யென்ன
அழகான சீவலமா ராசன்முன் வந்தாள்
வந்தாள் சிவனணஞ்ச பெருமாள் சொன்ன
வார்த்தை வொழிக்காம லண்ணர்க் குரைத்தாள்

## பிடித்துவரப் படையனுப்புதல்

மருமகனார் சொன்ன வார்த்தையைக் கேட்டு
வாய்பிளக்க விசம் மண்டை மட்டேற
ஏறியிரு விழிநீ ரருவியாய்
ஏந்திழை பொன்னுருவித் தாயார் பயந்தாள்
பயந்தவள் நின்றதைக் கண்டு தமயன்
பால சக்கரப் படைதன்னை யழைத்தார்
அழைத்தா ரவருட படைகளை யெல்லாம்
அவனோ டெதிர்த்துப் பொருதுவர வென்ன
வரவென்ற போதிலே சேனைபடை வீரர்
வாய்த்தார மிட்டவர்[583] வான்குரவை பாட
வண்ணாத்திக் காகவே யிப்போது சாக
வந்துதோ உண்டசோற்[584] கொல்லுதே யென்பார்
உண்டதோ ருப்புக் குபகாரஞ் செய்யார்
உயிரோடே வெந்நரக வேதையில்[585] வீழ்வார்
விடுவனோ யென்றுமுன் வீரவாட்காரர்
வில்பரிசை சிங்கார விற்காரர் கூட்டம்
கூட்டமு மாயுத பாணிகள் சேர
கொலுவு மணிமண்டபம் சுத்தி வளைந்தார்

## போர் நடத்தலும் சின்னணைஞ்சி சிறுக்கன் மடிதலும்

வளைந்த பேர்களை வாவென்று சொல்லி
வாசல் நாலுக்கும் வகுத்தார் படையை
படையுடைய ஆரபாரங் கேட்டிருளன்
பையவே வல்லயங் கைதனிலே வாங்கி
வாங்காமல் நாமளிரு பேருஞ் சென்று
வாசல் திறந்துபொர வேணு மென்ன
அடைத்து நாமள் கோட்டைக்குள்ளே யிருந்தால்

அவத்தம்[586] வருமே சிவனணஞ்ச பெருமாள்
என்றிருள னாயான் சொல்லவே கேட்டு
ஏது சொல்லுவராஞ் சிவனணைஞ்ச பெருமாள்
ஒய்யாரப் பெண்கொடியே சின்னணஞ்சி
ஓயாது சேனை வருகுதே யிங்கே
இங்கே யிருக்க வசமில்லை நீயும்
இனத்திடந் தன்னிலே நீபோடி பெண்ணே
பெண்ணேநீ போவென்று சொன்னா லடியாள்
போருக்கு அஞ்சிப் பிறங்காட்டு வேனோ
போறதில்லை போறதில்லை புண்ணியனே நானும்
போங்காலம் வந்தால் பொன்றிடுவே னையா
இராசாவின் கையில் சமுதா டெடுத்து[587]
இவர்வாங்கிக் கச்சை யிறுக்கி யழகாய்
அழகொத்த வீர னணஞ்ச பெருமாளும்
அண்ணாவி யிருளனுஞ் சிவ னணஞ்சவரும்
தூசிப் படையோடே வெத்திலைச் சிறுக்கன்
துஞ்சிப் பொரவென் றாயுத மெடுத்தான்
எடுத்தான் சிறுவுடை வாளுங் கேடயமும்
எங்கடா வென்றிவன் வெளியில் வந்தான்
வந்தவனு மஞ்சாறு பேர்களை வெட்டி
வளைந்து கொண்டானே யெதித்தவரை யெல்லாம்
அவத்தமாய் வந்தோம் சனத்திலகப் பட்டோம்
அய்யய்யோ வென்றுவழி தேடுவாராம்
தேடுவா ரோடுவார் காட்டி லொளிப்பார்
சிவசங்கரா கடவுளென்றே நினைப்பார்
ஒளிப்பார் பதுங்குவார் ஒதுக்கிடம் பார்ப்பார்
ஓகோகோ வென்று வுரை கூறிடுவார்
இடுவார் படுவார் கெடுவார் களத்தில்
இவரோ டெதிர்க்கப் படாதினி யென்பார்
என்பார் குதிரைத் திவலகள்[588] நெருங்க
இனிப்போக வொட்டா ரென்றே பொருவார்
பொருத களந்தனில் வெத்திலைச் சிறுக்கன்
பொன்னணஞ்சி சின்னணஞ்சியும் பட்டார்

## இருளனாயான் மடிதலும் சிவனணைஞ்சவரைப் பிடித்தலும்

பட்டாலினி நாமிருப்பது மில்லை
பரிசை யுடைவாளது கைதனில் வாங்கி
வாங்கின பொழுதிலே வந்தபேரை யெல்லாம்
வல்லயத்தா லிருகூறாகச் செய்தார்

செய்யும் படிக்கொருத்த ருண்டோதான்
செருமியே வாயுதங் கையி லெடுத்தார்
எடுத்த வுடனே யெதிர்நின்ற பேரை
ஏழெட்டுப் பேர்களைக் குத்திச் சரித்தார்
சரித்த பொழுதிலே யிருள னாயானை
சண்டாளர் ரண்டு துண்டாய் வெட்டிவிட்டார்
வெட்டிக் களத்தில் விழுந்தா னிருளன்
வெண்குரவை பாடவே செங்குருதியாய்
பாச்சலாய்ச்[589] சிவனணஞ்ச பெருமாளை
பாலனைச் சென்று பிடித்துக் கொண்டோரே

### சின்னணைஞ்சவரைச் சீவலமாறன் முன் நிறுத்தல்

கொண்டா ரிறுகவே பின்கட்டாய்க் கெட்டி
குமார சமுதா டுடைவாள் பறித்தார்
பறித்தாரே கள்ளவாளுஞ் சிறுவாளும்
பாராண்ட மன்னவன் முன்பதிலே வந்தார்
சறுக்காப் புலிபோ லணைஞ்ச பெருமாளை
சங்கீத மண்டபந் தனில்கொண்டு வந்தார்

### விருத்தம்

வந்தார் கொலு விருக்கையிலே வளமாய்ப் படைத்தல
வீரரெல்லாம்
செந்தா மரையது போல்முகமுஞ் சிறப்பாய்த் தொழுது அடிபணிந்து
பந்தே கழங்கம்[590] போலாகிப் பட்டார் சிலபேர் பட்டார்கள்
எந்தம்பு ரானே யின்றுநாங்க ளிவரைப் பிடித்து வந்தோமென்றார்

### சீவலமாறனின் குற்றச்சாட்டும் ஆணையும்

வந்தோமென்ற வேளையிலே சிந்தையது மகிழ்ந்து
வாக்குத் தவறாதபடி சீக்கிரமா யுரைத்தார்
அந்தமருந் தென்காசி யூருக்கிவ னிருந்தால்
அரசழிப்பான் குடிமுழுதும் பரிசழிப்பா[591]னையா
கெடுமதிகொண் டேயிவனும் படுவதறி யாமல்
கெட்டகுடி யிவனாலே மாட்டுச்சொல்லப் போமோ
பட்டங்கெட்டி யிவனைவைத்தால் கெட்டகுடி யாமே
பல்லுப்பறி போகாமல் சொல்லுக்கேளா திருந்தான்
கெட்டிக்காரன் புத்தியது சுட்டித்தன மாச்சு
கேள்விமக்க சீர்மையென்றோ தூசிபோட்டுக் கொண்டாய்

மட்டித்தொழில்[592] பண்ணினவன் பட்டுக்கொள்வா னென்று
மாறிச் சொன்ன பேரையெல்லாஞ் சீறிப்பார்த்து விட்டான்
குட்டுப்பட்ட பேரைப்போலக் கொஞ்சப்பட்டுப் போனால்
கூத்திமகள் தன்னைவந்து கூட்டிப்போகச் சொல்லு
கழுவிலிடும் போதுனக்குக் காச்சலுள்ள பேரை
கைகாட்டிக் கூப்பிடுநீ கழத்திவிடச் சொல்லு
நட்டமாம் பட்டாலும் வெட்டொண்ணாது யென்று
நாட்டில் சொல்லு வார்களதைக் கேட்டிருந்தோம் நாமள்
குத்திப்போடு யென்றுசொல்லிக் கொடுமைசொல்வ தில்லை
கூட்டிப்போங்கோ தாய்தகப்பன் வீடுமட்டும் நீங்கள்
ஆண்டவனார் சீவலமா ராசனுரை கேட்டு
அந்தநேரந் தலையாரி மார்கள்கொடு போனார்

## பொன்னுருவி புலம்பல்

வடுவில்லாத பொன்னுருவி மகனழகைக் கண்டு
வந்துதோ யந்தவிதி யெந்தனுட மகனே
சிந்தை தளர்ந்து சந்தோசம் போச்சு
சிரிப்பாணி[593] யவருடைய சிநேகமெல்லாம் போச்சு
மார்படர்ந்த பேரழகா சிவனணஞ்ச பெருமாள்
மகனெனவே வந்துதித்த திலர்தவடி வழகா
பஞ்சுபோல் தலைநரைத்து பல்லும்விழுந்த போது
பாலகனாய் நீயொருவ னாகவந்து பிறந்தாய்
தேடின திரவியமும் தேசமும் நானிழந்தேன்
செத்துப்போற புத்திவந்தால் செய்வதொன்று மில்லை
சீதையொரு பெண்பிறந்து தென்னிலங்கையும் போச்சே
சின்னணஞ்சி தன்னாலே தென்காசிக் கலைவாச்சே
கர்ணகையாள்[594] பெண்பிறந்து கனமதுரையும் போச்சு
காவிரிப்பூம் பட்டணத்தில் கப்பல்செட்டி பட்டார்
அம்மையப்பர் கோவிலொரு தாசிமகள் பிறந்து
அரசாளுங் கரையாளர்[595] எழுபதுபேர் பட்டார்
மச்சமில்லா தொருமகனை சிறுத்தொண்டனை யறுத்து
விருந்துவைத்துக் கொடுத்தவர்கள் விண்ணாந்து[596] யிருந்தார்
மண்டலத்தோர் காணயியமன் வலைக்கயிற்றால் வீசி
மார்க்கண்டனைக் கண்டுபின்போய் மனந்தேத்தி யிருந்தார்
அவரவர்க்கே யமைத்தபடி யல்லாது கிடையாது
ஆசைவைத்தால் வேறேமிச்ச மார்கொடுக்கப் போறார்
ஊருக் காகாதபிள்ளை யுடம்பெடுத்த துண்டால்
உன்னையோ நினைந்திருக்க நன்மையுண்டோ மகனே
கெடுமதிதான் இதுநமக்கு கேட்டபேர்க்கும் வசைதான்

கெட்டிக்கெட்டி மழுவரசா வெட்டிப்போடு யென்றார்
வெட்டிப்போட மழுவதும் வெத்திலைபாக்கும் கொடுத்து
வேந்தனுட வழகுகண்டு ஏந்திழைமாத ரழுதார்
அழுதாள் கண்ணீர் பாய
ஆரைக் கண்டுமனந் தேறிக் கொள்வேன்
பெற்றே னுனை மகனே
பெருமை சொல்லச் சிவன்வைத்தா னில்லை
கட்டுமத வானைக் கோவில்
கல்லுக்குஞ் சாவடி வாசலுக்கும்
சேனை யணி நெருங்கநீ
தெய்வப் பரியில் வருநேரம்
கண்ணாரக் காண்ப தெப்போ
கறுத்த பேர்க்கெல்லாம் வெறுப்பாச்சே
வாடி மலங்கிறேனே
வாள்போனா லுறையிருந் தென்ன செய்யும்
மறந்து யிருப்பேனோயென்
மண்ணாட்டுக்[597] கேட்பா ரொருவரில்லை
பிறந்ததாய் மனமகிழ்ந்தேன்
பிரமன் விதியை யறிந்தே னில்லை
கொள்ளி தண்ணீர்க் கடலும்
கூத்தின் கடன்கள் குறைகளுண்டு
இருந்துநீ தீராமல்
எந்தன் தலைவிதி யென்றழுதாள்
அலையில் துரும்பது போல்
என்னாவி யலையுதே பாலகனே
கரைந்தே யழுதாலும்
என்கண்ணீரை மாற்ற வொருத்தரில்லை

**சிவனணைஞ்சவர் தாயிடம் விடைவாங்கித் தெருவில் வரல்**

எல்லா மினி நல்லது
நானிங்கே யிருக்கக் கடனு மில்லை
மலங்காதே யென்தாயே
மதப்பட்டா லானை வணங்காது
இறக்க விதியானால்
என்றைக்குஞ் சாவது நிச்யெந்தான்
மறு தியக்கம்[598] பாராதே
மாதாவே வெட்ட விடைதா வென்றார்
அமுதூட்டிப் பாலனுக்கு
ஆசார வாயில் பாக்கு மிட்டு

மாலை கழுத்தி லிட்டாள்
மல்லிகை பிச்சி மணம் வீச
சாந்து கஸ்தூரி மஞ்சள்
சந்தன வாடை சவ்வா தணிந்தார்
பெண்க ளடைப்பமிட
பெத்ததோர் தாயாரைக் கும்பிட்டவர்
உதவியெனக் காவேன்
ஒன்றுக்கு மம்மா பதறாதே
கடையி லெடுப்பெடுக்க
காராணை போலே தெருவில் வந்தார்

## மடவார் புலம்பலும் வெட்ட மழுவெடுத்தலும்

மடவார்கள் கூடி நின்று
மாயவிதி வந்துதோ வுமக்கு
பெத்து வளர்த்தவள் தான்
பெரும்பாவி யுன்னை யிழப்பாளோ
மதிலேறிப் பாப்பாரும்
மஞ்சள் குளியோடிக் கொஞ்சிக் கொள்ள
பூத்தானக் காரனிவன்
பெண்கள் சிலபேர்கள் பின்தொடர
கேட்டு மறுகிடவும்
கினாக் கண்டுதென்று சிலபேர்கள்
இறப்போ மவரோடே
எனக்கெத்தனை நாளைக்குப் புத்திசொல்வாய்
ஊருக் கழுவேற
உன்னை வரச்சொல்லிச் சொன்னவரார்
ஆசை யகடடாதே
அறிவேனடி பெண்க ளருமையெல்லாம்
சமத்தமது பேசி
சாடைகள் பேசிறீர் பெண்ணரசே
ஏண்டி யிவனோடே
ஏதுக்குச் சாகிறீர் நீங்க ளெல்லாம்
கேட்ட பேர்க்கு மேறாது
கிளைவழிக் கெல்லாம் வசையாச்சு
அருமை சிறுமையதாய்
ஆகாது யென்று அலைந் தேனை
அகரத் தெருவுமிட்டு
அம்பலச் சந்தி யரண்மனையும்
கவரி வெண்சா மரைகள்

கன்னி யிருபிறம் வீசிவர
பகுத்தாய் வழிநடந்து
பாதையும் தெற்பக் குளமுமிட்டு
நடைச் சங்கீதத் துடனே
நாடாளுந் தென்காசி வூருமிட்டு
சுகவன் றிடிலதிலே
கட்டோடே கொண்டு களத்தில் வந்தார்

## விருத்தம்

களமது தன்னில்வந்து கவலைதா னில்லை யென்ன
வளமொடு சேனைசூழ மங்கையர் குரவை பாட
உளமது உருகி வாடி வுன்னைப்போ லொருவன்
சளமது[599] வய்யோவென்று தலையாரி மழுவெடுத்தான்

**(முற்றுப் பெறவில்லை)**

* * *

# கட்டு எண்.376. சிவனணைஞ்ச பெருமாள் கதை (மூலம்)

## நாட்டு வளம்

நாடான நாடு நல்ல. . . நாடு
நாடகங்கள் கெட்டிவிளை யாடும். . . நாடு
சூடானது போலிருக்குந் துங்கவளர் நாடு
சொல்தவறா மனுநீதியும் தோரண வாசலும்
விதவிதமாய் நெல்விளையும் வேந்தர்குல நாடு
. . . . . ஈங்கு மேடைதனில் மயிலேறி விளையாடும்
ஆடவர்க்கும் பரிமேல் ஏறும்மலை நாடே

## சீவல மாறனின் ஆட்சி

ஆண்டரச னானகுல தென்காசி மன்னன்
ஆண்டிருந்தார் சீர்வலம ராசனென வேதான்
குண்டலங்க ளும்புரளக் கோடிப்படை யோடே
கோட்டையுடன் கொத்தளங்க ளும்மதி லகலும்
நாட்டமுடன் சீர்வலம ராசமன்னன் தானும்
நாட்டையெல்லாம் கெட்டியர சாண்டிருக்கும் நாளில்

## பொன்னுருவி திருமணம்

தாட்டிமையாய் ராச்சியத்தை யாண்டிருந்த மன்னன்
தங்கையென வந்துதித்த பொன்னுருவித் தாயை
இளமையிலே செண்பகன் ராசமன்ன னுக்கு
ஏந்திழையை மாலையிட்டு யினிதிருக்கும் நாளில்
தன்னகரில் லாத்த மன்னன் செண்பகன் ராசன்
தயவுடனே மாலையிட்டுத் தானிருக்கும் நாளில்
பன்னிரெண்டு திருவயதில் பொன்னுருவித் தாயார்
. . . . . . தென்காசிப் படைவீட்டி லிருந்தாள்

## குழவிப் பேறின்மை

இருக்கின்(ற) நாளையிலே பொன்னுருவித் தாயார்
இருபது வயதாகியு (மின்ன) மலடாய் நின்றாள்
முருக்கு இதழ் போல்முகத்தாள் முப்பது வயதாகி

முருகனருளை நினைந்து ஒருபலனுங் காணாள்
நெருங்குகலப் பொன்னுருவி மருங்குதுவண் றசைய
நேரிழையு வயதுமொரு முப்பத. . . . .
மருக்கமிழும் பூங்(குழலா) ள் பொன்னுருவித் தாயார்
(வய)து மு(ப்பதாகிய) பின் மதலையில்லா திருந்தாள்
உருகுகின்ற நெய்யதுபோல் உருகியுள்ளம் வாடி
உலகாளுஞ் செண்பகன் ராசனுக்குச் சொல்வாள்
எனக்கிளைய பெண்க ளிருமூன்று மக்கள்பெத்தார்
என்தலையி னெழுத்தின்பல னிதுவோவெனச் சொல்வாள்
மனக்கவலை யாலேதன் மன்னனுக்குச் சொல்லி
மதலையில்லா வாறால் வருந்தியிருக்கும் நேரம்

**பிற பெண்டிர் ஏச்சு**

இணக்கமுத்துப் பெண்கொடிமா ரெல்லோருமே கூடி
புனல்கரைக்கு நீர்கோரப் போகையிலே சொல்வார்
மருக்கமிழும் பொன்னுருவி மலடியிவ ளென்ன
மங்கையர்கள் கூண்டுநின்று மகிழ்ந்துசொல்லு வாராம்
சொல்லியசொல் பொன்னுருவி தோழியர்கள் கேட்டு
தோகையர்க்குச் சென்றுநின்று துயரமுத்துச் சொல்வார்
மல்லிகைப்பூப் போல்வாடி. . . . . .

**பொன்னுருவி புலம்பல்**

மன்னவனிடத்தில் சென்று மாதுசொல்லு வாளாம்
மலடியென்று பெண்கொடிமார் வாதுசொல்லிப் பேச
மகாதேவர் தன்சியலோ மத(லையி) ல்லா வாறு
மலடியென்ற சொல்லி(னுக்கு மடி) வேனே நானும்
மங்கையர்கள் வசைசொ(ல்லவு) மென்செவியில் கேட்டேன்
கிள்ளைமொழி போலனயாள் பொன்னுருவித் தாயார்
கிலேசமெல்லா மனதடக்கி கிருபையுடன் சொல்வாள்
பிள்ளையில்லா யிருசியென்று சில பேதையர்க ளேச
பேடியிவ ளென்றுசொல்லிப் பெண்கொடிமா ரேச
பி. . . . . . . . த்தின் பயனோ பிரக்கினை வேண்டாமோ
வ. . . . . . . . .யிருந்தாலு மிந்த வய்யகத் தோர்க்கோர்
(ம)னக்கவலை தீர்க்கவுந்தான் மகன் வேண்டாமோ
தேடித் திரிந்தாலுந் தான்பெத்த பிள்ளைபோலே
தேசமதில் கிடைத்திடுமோ சிவனேயெனச் சொல்வாள்
கோடிப்பணம் கொடுத்துமொரு குழந்தைகொடு வந்தால்
கொண்டபிள்ளை யென்றும்வசை சொல்லியடிப் பாரே

வரிப்பணங் கொடுத்துமொரு மதலைகொடு வந்தால்
மனக்கவலை தீர்க்கவுமாம் வளத்தபிள்ளை யென்பார்
காரிகைமார் சொல்லுகின்ற களியாட்டந் தீர
காசினியை யாளக் கைக்குழந்தை வேண்டாமோ
நாட்டிலுள்ள பேர்கூடி நம்மவசை சொல்லி
நாள்தோறு மேபேசி நகைக்கவுமே யாச்சு
வீட்டில்மகனை யிருத்தி விளக்கேத்திப் பார்த்து
வேண்டுமன்னம் பால்கொடுத்து விளையாடிக் காணேனோ
. . . . . மையா யிவ் வனத்தோர் வே. . . .
வேதனிட்ட கட்டளையோ விமலனருள் தானோ
நாத்திசையில் மகனாரை நடத்திமுகம் நோக்கி
நாட்டமுடன் சித்தடிகண் டாசை தெளியேனோ
மாட்டமுட னாெனாருத்தி மதலை தனக்காக
மாது துயர்ப்பட்டு வருந்தியிருக்கும் நேரம்
நாட்டமுட னீர்கோர நான்போகும் வேளை
நளினமுடன் பிறகேவர நல்மகன் வேண்டாமோ
இவ்வூரில் பாலகர்க ளெல்லோருமே கூடி
இயல்வுடைய பள்ளியில்சென் றோதிவைக்கும் நேரம்
பள்ளியில்சென் றோதிவைக்கப் பாலகரோ டேகி
பலவிதமாய்த் தொழில்படிக்கப் பாலகன் வேண்டாமோ
இதமிதமாய்த் தொழில்படித்து யெனதுதுயர் தீர
ஏழை தனக்காக யிளமதலை தாராரோ
விதவிதமாய்த் தொழில்படித்து வேண்டுமண்ண மானால்
வேறேயொரு ராச்சியத்தில் வேணமனுச் செய்யேனோ
இப்படியே பொன்னுருவி. . . . .
இயலுடைய செண்பக ராச ம(ன்ன•னோடே)

## குழவி வேண்டி நேர்ச்சை

தெசப்பெரிய தென்காசி யாண்டிரு. . . . சீமைதனி லொக்க
தெய்வச் சிவாலயங்களுக்குத் திருப்பணிமுகிக்க நேருவாளாம்
செண்மையுள்ள தென்காசி யாண்டிருந்த மன்னன்
தேவியென வந்துதித்த பொன்னுருவித் தாயார்
உண்மையுள்ள கோவிலெல்லாம் நேந்திருக்க வென்ன
உலகாளும் பகவதிக்கு உடனேநேரு வாளாம்
ஆனாலு மொருபலனுங் காணாமல் தாயார்
அதினாலே மனஞ்சடைத்துப் பொன்னுருவிற் றாயார்
ஊருக்கு ளய்யனுக்கு உருவமிட வென்ன
உடையவன்மேல் கிருபைவைத்து ஒருபலனுங் காணாள்
ஆனாலு மொருபலனுங் காணாமல் தாயார்
அருமைமக ளாகியவ ளந்தப்பொன்னுருவித் தாயார்

குத்தால நாதருக்குக் கோவில்வைக்க வென்ன
கோதையரும் நேந்திருந்து ஒருபலனுங் காணாள்
கொம்மண்டவா எய்யனுக்கு குதிரைவிட வென்ன
கோதையரும் நேந்திருந்து ஒருபலனுங் காணாள்
தூரவழி பார்த்துச் சுமதாங்கியுமோ வைத்து
காதத்துக்குக் காதம் கல்கிணறு கெட்டுவாளாம்
ஓலமட மானதொக்க ஓட்டடுக் கடுத்த
உடனுடனே நேந்திருந்தாள் பொன்னுருவித் தாயார்
இனியேது கோவிலுக்கு நேந்திருப்போ மென்ன
ஏந்திழையு மோசடைத்து யேங்கியவ ளிருக்க

## பொன்னுருவியின் வருத்த மொழிகள்

கனிபோலு மேயிளகி. . . . . ளிந்து தாயார்
கள்ளியிலுப் பால்ம. . . . கைபோலே
மாஞால வாழ்வெனவே மங்கைதடு மாறி
மாநிலத்தில் மேலுமிருந் தாலுமினி யென்ன
சயமான தோடேகி பொன்னுருவித் தாயார்
தாட்டிமையாய்த் தன்னுடைய. . . . .
தன்னுடைய செண்பக ராசமன்ன னோடே
தயவுடனே மதலையில்லாச் சங்கடஞ்சொல் வாளாம்
பொன்னுமிருந் தாலுமொரு புதவல்வனில்லை யானால்
பூதலத்தை யாண்டிருந்து பொறுப்பதினி யேது
மாநிலத்தில் மேலுமிருந் தாலுமினி யென்ன
மடக்கொடிமா ரெல்லோரும் வசைசொல்லவுங் கேட்டு
நீணிலத்து தேவதைக்கு நேந்தும்பலன் காணேன்
நிண்ணயமாய் நாமிருந்து வாழ்வதினி யேது
சாவதுக்கு நீர்க்கடங்கள் செய்வதினி யாது
தாட்டிமையாய் ராச்சியத்தை யாளப்பிள்ளை யில்லை
வாழ்வதுக்கும் சாவதுக்கும் மதலையில்லை யானால்
வையகத்தை யாண்டிருந்து வாழ்ந்தாலு மென்ன
இந்தநல்ல ராச்சியத்தை யாண்டிருந்த மன்னன்
ஏதுகுறை செய்தாரோ யீசனருள் தானோ
அந்தவுரை யெல்லா மறிவிக்கவே தான்கே (ட்டு)
அரசாளுஞ் செண்பகமா ராயமன்னன் சொல்வார்
நாட்டிலுள்ள பேர்கள் நகைத்திடுலு மினியென்ன
நக்கன்றா னென்றுசொல்லி நா(ட்ட) த(னி லிரு) ந்தார்

இருக்குகின்ற நாளையிலே பொன்னுருவிற் றாயார்
இசம்பியும்பின் கேளாம லேதுமொழி சொல்வார்

### தவம் மேற்கொள்ளச் செல்லல்

உருக்கமுள்ள மனதா ராயராயே கேளீர்
. . . . . . . .தால் வாழ்வதில்லை யென்றாள்
பெருக்கமுள்ள ராச்சியமும் பேரரசுமாள
பிள்ளையில்லாம லிருந்தால் பின்னஞ்சொல்லு வார்கள்
நடுக்கமுத்து மாதுநல்லாள் நஞ்சுண்ட மீன்போலே
நாயகன்றன் தாள்பணிந்து பொன்னுருவி சொல்லுவாள்
வெத்துடல மானாலு வேத்துருவ மாச்சு
விதியெனவே யிருந்தாலு மீண்டுவசை சொல்வோர்
சித்துடல (மானாலுஞ் செல்வ) னில்லை யானால்
தேசமர சாளுதற்கோர் தப்பெடுத்துத் தாரும்
மாட்டிலுமே யேறும் மகாதேவர் திருவாணை
வளத்தெடுத்த பிள்ளை வர(லா)று சொல்லுகிறேன்
ஏட்டுக்கு மையானாக்கா லிதமாச்சு தென்பார்
இயல்கறையா னிதமாக யேட்டைவைக்கு மோதான்
பாம்புக்குப் பால்வாற்றாலும் பலனில்லையே மன்னா
பாருலகில் சென்றுதவஞ் செய்துகொடு வாரேன்
செம்புக்குப் புளிக்கரைத்துக் கூட்டும (ாப்)போலே
தேசமர சாளுதற்கோர் சிறுமதலை வேணும்
அத்தரசிய லிதென வுரைத்ததுகேள் மன்னா
ஆணுதவி யில்லாம லரசிருப்ப தென்ன
பத்தருட பங்கினி லமந்திருக்குந் தேவே
(ெ)பாக்குச முண்டோநமக்குப் பஞ்சாங்கஞ் சொல்லவேண்டாம்
செண்மையுள்ள திருக்கரத்தால் திருநீறு தந்து
செய்தியுட னேயெனையுந் திடனனுப்பு மய்யா
உண்மையுடன் பொக்குசத்துப் பொன்னையெல்லாம் வாரி
உடனுடனே வகவகயாய்ப் பொன்னுருவிற் றாயார்
வண்ணமுள்ள தோழியரை யங்கேவர வழைத்து
வகவகயாய்ப் பொன்னையெல்லாம் வாரிக்கொடுத் தாளே
தானுஞ்சில பொன்னையெல்லாம் வாரி(முடிப் பித்து)
தாட்டி(மையாய்) மன்னனையுந் தாள்பணிந்து பூண்டாள்
நாட்டிலும்போய் வாரேனெனப் பொன்னுருவித் தாயார்
நாயகன்றன் தாள்பணிந்து மீண்டுமெழுந் தாளே
தாட்டிமயாய் ராச்சியத்தை யாண்டிருந்த மன்னர்
தன்கையினால் நீறணிந்து தயவுசொல்லு வாராம்
மாட்டிலுமே யேறு மகாதேவா யென்ன

மங்கையரே போய்மீண்டு வரவேணு மென்றார்
வரவேணு மென்றந்த மன்னவனார் சொன்ன வார்த்தை
தனைக்கேட்டு
மங்கைநல்லா ளென்னும் பொன்னுருவிற்றாய் மனதுமிக மகிழ்ந்து
அரவணிந் தீச ரருளைமனதி லனுதினமும் நினைந்து
அரசாளுஞ் சீவலமாறன் தனையு மன்பாக வேதொழுது
அன்பாகச் செண்பகமா ராயனுடைய் யடியினையும் வணங்கி
அண்டைவீட்டு மடவார்களோடே யாதரவா யனுப்பி
முன்பானதோழியர் தங்களையெல்லாம் முன்னே நடங்கோவென்ன
மூப்புமுது காலாயு(ள்ள) பேரெல்லாம் மொய்குழல் கூடவந்து
கூடவே தென்காசி தெக்குத் தெருவிலே கூண்டுநின் றெல்லோரும்
கூறிடுவார்கள் பாசமுள்ளோர்க ளெல்லாங் கொம்பனையை நோக்கி
நாடு நகரு மினமுவிட்டு மறுநாட்டிலே நீபோனால்
நன்னுதல் மாரேநீ வருமட்டும் நாங்கள் மலங்கு வோமே
மலங்காமல் பொன்னுருவித் தாயாரே வையக மானதிலே
வாழுந் திருப்பதி யா. . . . தின்னில் சென்று வருந்தித் தவமிருந்து
கலங்காமல் நாடாளப் பாலனை வாங்கிக் கடுகவே வாருமென்ன
கரத்தா லணைத்து கி. . .த்தாலத்தைத் தடவிக் கைப்பிடித்து
மினவி
மினவிடு மடவார் தங்களை யங்கே விளம்புவாள் பொன்னுருவி
வேதன் விதித்த விதியதுதன்னை விலக்கி யிருக்க லாமோ
தன்சியல் விட்டுத் தலத்திலிருந்துநான் தானதர்மங்கள் செய்தும்
சனத்தோடே கூடித் தலத்திலிருக்கத் தலையிலெழுத் தில்லையே
இல்லையே மன்னவா யான்வரு முன்பாக யாது நடப்பினும்
இணங்கி யிருப்பதே யல்லாமல் வேறு யிடஞ்சல் படாதேயுங்கோ
நல்லதின் வண்ணம் தவசுபுரிந்து நான் வருவே. . . .
நாட்டிலுள் ளோர்களை வீட்டிலனுப்பி நடந்தாளே பொன்னுருவி

## பொன்னுருவி திருப்பயணம்

நடப்பாள் திரும்பிப் பார்ப்பாள் நடப்பாள் நாதனருளோ வென்ன
நன்னுத மார்கள் தலைமறை மட்டும் நடக்கக்கால் ஏறாமல்
கடப்பாள் தென்காசியில் தெற்பக்குளமும் கல்லுமடமு மிட்டு
கவண்டர்கள் சத்திரமுங் கடந்தேகி காட்டுவழி யாக
வழிநடந்து பொன்னுருவித் தாயாரும் மதலையென் றில்லாமல்
மகாதேவர் தம்மை நினைந்தேதோ சொல்லுவாள் மனத்துயர் தன்னால்
அம்புவி யாளு மரசனிருந்து யருளின மெய்யாச்சே
ஆச்சினை யாய்தெய்வந் தாட்சைப்படுத்தினா லாருயென் றாதவி
அல்லாமல் தென்காசி யூருமடவா ரறக்கொடிமைக் காரர்
மாச்சிமையாக யின்னாளிருந்த மகிமை கெடுவதாச்சே

வாருங்கோ தோழியர் சேரும்புத்தியாய் வகுத்துரைத்து நடங்கோ
நடந்தார் பழமைகள்சொல்லி மனந்தேத்தி நல்லத்திப்
பாறைவிட்டு
நாங்குமரச் சோலை பூங்கா வனமும் நடசாலை யுங்கடந்தாள்
துடந்து மடவார் நடந்திடவே சிறுத்தொண்டர் புரமும்விட்டு
சூரியன் போகுமுன் செல்ல வென்னவே சின்னக் குளங்கடந்தார்
சின்னக்குளங் குத்துக்கல் லிடுவையுஞ் சில்லுடங் காடும்விட்டு
சீரான கொம்மடித் தாவுங் குருக்கள்மடங் கடந்தேகினரே
ஏகும் பொழுதிலே. . . . . யேங்கிமுகம் வாடி
எங்கே போய்யு மென்னகஞ். . . . ஏந்திழையாளும் வந்தாரே
ஆகமும் வேறா யலைந்து மலைந்து யய்யோத்திய மானதுவே
அன்பான தோழியர் வந்த மார்க்கத்தை யன்னேரங் கண்ட போதே
கன்றறா பால்தேடி வந்த யிடத்திலே காட்டினில்
வேங்கைகொன்ற
காரண மின்று முகிந்து தெனவே கைப்பிடித்துப் பாப்பார்
இன்று தேவியர்க்கு வந்தமயக்க மிப்போ தெளியுமென்ன
இருந்துந் தெளியாத வாறதி னாலே யேந்திழையாள் தன்னையும்
தன்னையும் நாலஞ்சி தோழியர் கூடி தாங்கி யெடுத்திருத்தி
கூடிச் சுறாபோட்டுக் காச்சிக் கொடுத்தாரே தாகந் தெளிவதற்கு
முன்னும் பின்னுமாகத் தோழியர் கூடி முதுகு துடைத்திருத்தி
மூதாக்கள் செய்த நலத்தா லினிமேல் மோசமில்லை யெனவே
எனவே மடத்திலே கஞ்சியும் (வைத்து) எல்லோருந் தான்குடித்து
இன்பமுட ன(ன்)று தங்கி. . . யுதயத்தி லெ (முந்திருந்து)
மனங்கொண் . . . . . யாடுங். . . . . .

**பொன்னுருவி வணங்கிய திருத்தலங்களும், செய்த நேர்ச்சைகளும்**

திருச்செந்தூர் தன்னிலே வந்துஒரு நாளுஞ்சுத்தி
சேவித்து ஆயிரங்கால் மண்டபமுங் கண்டு
அருச்சனைகள் செய்து மாடத்தெரு வளப்பம் பாத்து
அன்பாகத் தெற்பக்குள மானதிலே வந்தாள்
வந்து தெற்பக்குளந் தனிலே யிறங்கித் தீத்தமாடி
மாத்துடுத்து யானைமுகன் வளர்பதியில் சென்றார்
உந்திவயித் தோனுடைய பதிதனையுஞ் சுத்தி
தொழுதுகொண்டு பொன்னுருவி தெருநீள நடந்தாள்
நடந்து சண்முக விலாச. . . . .
நடசாலை வழியாக நன்னுதல். . . .
திடனாகத் திருப்படியில் காணிக்கையு மிட்டு
தேசிக்கு மாண்டிக்குந் தானமது யீந்தார்

ஈந்தபின் பெரியகோவி லருகாகச் சென்று
இலங்கு கோபுரமுந் திருப்பதியுங் கண்டுதொழுது
ஆய்ந்த பொன்னுங் காதிலங்கப் பொன்னுருவிற் றாயார்
கரையேறித் துகிலுடுத்துப் பணிபலதும் பூண்டு
காணிக்கையால் மண்டபத்தில் மாணிக்கத்தை யீந்தாள்
வரையுருவ வேலெறிந்த வள்ளிமண வாளன்
வாழுந்திருக் கோவில்நடை வாசலிலே சென்றாள்
திட்டமுடன் பொன்பணத்தைப் பொட்டகத்தோ டெடுத்து
கன்றுகொண்டு கனியெறிந்த கண்ணர்திரு மருகர்
காணிக்கை யீதென்று வைத்துக் கைதொழுது சொல்வாள்
தொழுது சொல்வாள் தென்காசி யாளப்பிள்ளை யில்லை
துயரா லடியா ளுனதுபதி தனிலே வந்தேன்
பழுதில்லா மலடியாளுட பாருலகை யாள
பாலகனைத் தந்தனுப்பும் பரமனுட மகனே
உடனே நாடாள் வொருபாலகனைத் தந்தால்
ஓராண்டி னாண்டுதிரு நாள்நடத்தித் தாரேன்
கடலதிலே பிறந்தநஞ்சை யமுதாக வுண்ட
கங்காளர் தன்மகனே கரியமால் மருகா
மாலான நேரத்திலே சாலஇரு ளானால்
வாழுந்திருக் கோவிலிலே வைத்தவிளக் கொளிபோல்
விதனம் பொறுக்கரிதாய் வெய்யிலில் வேர்வையுடன் நடந்து
கோதை வழிநடந்து குன்றுமலைச் சாத்தா சன்னதியும்
பாதை வழியாகப் பைந்தொடியாள் நடந்தேகினளே
வீட்டுவழி நடந்து வெண்பூச்சிக்காடுங் கடந்தேகி
பட்டுத் தெரியாமல் வந்தோமே யிந்த வழியெனவே
சாலை வழியாகத் தையல் நடந்திடச் சஞ்சலமாம்
வேளை வருவதின்முன் வேதினையாக வழிநடந்(தே)
காடான முல்லைகளும் கள்ளிப்படலமுந் தான்கடந்(தே)
நாடான மடமும்விட்டு நாயகி பொன்னுருவிற் றா(யார்)
பாலை நிலங்கடந்து பய்ய நடவென். . . .
சாலை வழியாகச் சாத்தாங் குளத்திலே. . . .
அந்தரத்தில் நான்திரிந்து யலையயெந்தன் விதிவசமோ
விதிவசமோ யென்றுசொல்லி மெல்லிநல்லாள் பொன்னுருவி
பதியரவே யணிந்தோனிடம் பலன்காணாதே யிருந்து
நித்திரையு மில்லாமல் நெய்யாறு கடந்தனளே
பத்திரம்போல் பொன்னுருவி பச்சைமாலைத் தேடுவாளாம்
தேடுவாளாம் புதைத்துவைத்த திரவியத்தைக் கொடுப்பவர்போல்
பேடியென்ற சொல்தவிர்ப்பாய் பெருமாளே யெனப்புலம்பி
புலம்பியே தவித்திடுவாள் புத்தியும்வே றாகிடுவாள்
சலம்பியே யனந்தாபுரஞ் சன்னதிக்கே வரும்போது

வரும்போது பறவையின மலடியென்றே ஓடிடுமாம்
குண்டுங்குமடுங் குளமுங்கடந்து கொட்டியம்பலமுங் கடந்தாள்
குன்றிலிருக்கும் பெருமாளைத் தேடியே மங்கை நடந்தனளே
மூலதானத்துக் கடுக்க முத்துக்கள் நிரைத்து
முழுக்காப்புச் சாத்தித்தருவேன் மாதம்ஒரு நாளில்
தருவேனான் தேருங் கொடிமர மது. . . .
தங்கத்தாலே வாகனங்கள் தான்முகித்துத் தா(ரேன்)
ஒருசந்தியும் வைத்துவுண்டு ஆறுமாத மா(க)
உடையவனே துணையெனவே வயனமிருந் தாரே
இருந்தும்பலன் காணாமல் பொன்னுருவிற் றாயார்
ஏங்கிஏங்கி யேயழுது யெங்கே போய்யு மென்றாள்
திருந்திழையாள் தவங்கள்செய்து யிருந்தபதி விட்டு
தெருநீள மேநடந்து செந்தூருங் கடந்தாள்
கடந்தாள் தருவைப்பதி தாய்நடந்தாள் வெகுதூரம்
தசகுத்தங் கடைதனையுங் கண்டுஅதி லிருந்தாள்
சேயிழையாள் பொன்னுருவி திசைநோக்கி யேநடந்தாள்
நடந்தாளே பொன்னுருவி நல்லநாத னருளீதோ வெனவே
படந்தாலிலை துயிலும் பாலகனாகிய யய்யனுட
கர்த்தாவின் கோவிலிலே நல்ல சன்னதிவாயலில் போயிருந்து
பாத்தாள் பரதவித்தாள் பாலனாவீ. . . . .
களிபுரங் கடந்தேகி காட்டினில் வீத்திருந் தய்யனுடன்
மொழிவாள் துயரமெல்லா மோசமில்லாமல் சிவன்மகனே
தருவாய் மதலையென்றுஎன் தங்கடங் கொண்டிங்கே
வந்தேனென
இருந்தாளே பொன்னுருவி யீரஞ்சிநாளாய்த் தவசிருந்து
அதனால் பலனில்லையே யய்யய்யோ யினியெங்கே போய்யுமென்ன
சன்னையாய்ச் சொல்கிற பெண்கொடிமார்க்குச் சரிசொல்வ னோவெனவே
கொன்னையும் பின்னைமலர்கள் சொரிந்திடக் கோதைவரும் வழிக்கே
கூகூ வெனவே குரங்குடன்மந்தி குலாவி யுலாவிடுமாம்
ஆகூ வென்னவே யன்றிலுஞ் சேவலு மன்னமுந் தாராவும்
பூங்கா வனத்திலே புள்ளின மொக்கப் புரிந்தியல் பாடிடவே
பாங்கான சோலையும் நந்தாவனம் விட்டுப் பாறைச்சாலையில் வந்தாள்
பாறைச்சாலை தனியேவந்து பாவைமின்னாள் பொன்னுருவி
அறைச்சிலையி லணிந்தருளு மானடியைப் போத்திசெய்து
படிவாள் பகபதியாள். . . . . . . . . . . . . . . . . . .
கடிதாய் வழிநடந்து ஒரு காதலினால். . . . .
தருவாய் பகபதியேஎன் தாரணியாளுதற் கோர்மதலை
உருகா வடிவாளே உற்பனமாயிங்கு வந்தோ மம்மா
சதிராக் கொடிமரமுந் தாச்சைவராமலே தேர்முகிப்பேன்
விதியா லருளுமம்மே வேண்டுமண்ணந் திருநாள் நடத்தி
தருவேன் வடிவாளே என்தங்கடந் தீர்க்கவே வேணுமம்மா

. . . . கின்றேது சொல்வாள் உற்பனமாயந்தப் பொன்னுருவி
என்றே மனத்துயரா லிருந்தாள் மதலை உருக்கமுத்து
இருக்கப் பலனில்லையே யேங்கித் துயராலே பொன்னுருவி
வருத்தத்துடன் நடந்து மங்கையரே எங்கே போய்யுமென்று
நடந்தாளே மேக்காக நம்பிக்குறிச்சி வலமாக
கடந்தாள்வன் காசங்காடும் கடந்தந்தத் தாயாரும்
பாரில் நடந்தேகிப் பையநடவெனத் தோழியர்கள்
காரிக் குறிச்சிவிட்டு கள்ளிப்படலமுந் தான்கடந்து
இஞ்சிக்கரை ஓடை காரிகையாள் நடந்தேகினளே
புஞ்சவன காசம்பாதையுஞ் சில்லுடங் காடும் விட்டு
வெஞ்சாமரை யகத்தி வேத்திமையும் பல வேதினையும்
சஞ்சல மாய்நடந்து தாங்கிப் பிடித்திட ஓர்தோழி
தேர்மே லிருப்பவர்போல் தேசம்நடக்கலுத்தா ளம்மையும்
வேர்வை துடைத்திடவே வீசுவர்சில தோழியர்கள்
பாத்து வழிமறுக பய்ய நடவென்ன ஓர்தோழி
காத்தும் விசிறிடவே கையைப் பிடித்தந்தத் தோழியர்கள்
தூங்கா. . . . . . . .
. . . . . . . . வீசுவர் சில தோழியர்கள். . . விசைநா. . . .
. . . . . . த்தில் வந்து வீத்திருந்தா ளந்தத் தாயாரும்
அசையாமல் நீராடி யல்லப் பவுசுகளும் நடத்தி
வகையாகப் பொன்னெடுத்து வாழுந் திருக்கோவில் சுத்திவந்து
தகைமாறிப் பொன்னுருவி சாத்தன மாகிய மாசாத்தன்
(மறு) காத்த லய்யனுட வாழுந் திருக்கோவில் சுத்திவந்து
வெறுக்கேத்தம் பண்ணாதே வெய்யில் நடந்தலுத்தே னுனக்கே
திருநாள் நடத்திடுவேன் சிறந்தகொடி மரமுமிடுவேன்
குருவாகி நீயிருந்தா யுன்னைக் கும்பிட்டே னெந்தனக்கோர் மதலை
சடுதி யருளிடுவாய் த(ந்தாலு)கமா யுந்தன் பேரிடுவேன்
விடுவேன்பச் சானைகளுஞ் செய்த வேதினை தீத்தரு
ளய்யாவே
நடுவாகி நீயிருந்தா யுனைநம்பிய. . . .
. . . . .
சேனாபதி யாளுஞ் சேயொன்று மில்லாத வாதினால்
குமுர்தமொழி மடவாள் கோதையரே யெங்கே போய்யுமென
திமிர்தவொலி நடக்குஞ் சித்தூர்ப் பதியிலே போய்யுமென்ன
நடந்தாளே மேக்காக நாடுநகருங் கடந்தேதான்
படந்த மரச்சோலைப் பாதையுஞ்சில் லுடங்காடும் விட்டு
மத்தும்பல மடவார் மங்கையர் தன்னையுஞ் சூழ்ந்துவர
சித்தூர்ப் பதிதனிலே தென்கரை மகாசன சன்னதியில் வந்தாள்
தென்காசி யாள்வதற்குப் புதல்வனில்லை யெனவேங்கி

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . சமெல்லாமே யுருகிப் பரதவித்து யேதோ சொல்வாள்
தென்கரைமா மகதேவரே ஒரு சிறுமதலை தாருமய்யா
உன்புகழைக் கேட்டடியாள் உடனோடி யிங்கு வந்தேன்
ஊர்கேட்டு வந்ததுக்கோர் பிள்ளைதர வேணுமய்யா
ஊரதிலே கோவில்களு மொருதேரு முகித்து வைப்பேன்
(எ)ன்று சொல்லிப் பொன்னுரு (வித்தாய்) ஏதும்பலன் காணாமல்
மன்றுதனி லாடு மகாதேவர் சியலீதோ வென்ன
குண்டுங் குமடுங் கடந்து கோதையரும் நடந்தனளே
பண்டுவழி நடக்கறியாள் பரதவித்து முகம்வாடி
திக்குந்திசை தெரியாமல் திருக்கணங் குடியில் வந்தாள்
மைக்குழலாள் பொன்னுருவி மாயநம்பியைத் தொழுது
விருந்துபோல் வழிநடந்து வேத்தலுத்துச் சடைத்து வந்தேன்
மருந்துபோ லெந்தனுக்கு மதலையொன்று தாருமய்யா
திருவருள்தா நம்பியேயுன் சீர்பாதம் தொழவும் வந்தேன்
இருந்தும்பலன் காணாம லினியெங்கே போய்யுமென்ன
தெள்ளியபூங் காவனமுந் தேசமும்விட் டேகினளே
வள்ளிமலைப் பாறைவிட்டு வள்ளியூர் தனிலே வந்தாள்
திட்டமுடன் மூன்றுமுகங் கொண்டவளே போத்தியென்ன
கட்டழகி நோம்புயிருந்து காணிக்கைக்குப் பணமெடுத்தாள்
ஆணுவஞ்சேர் பொன்னுருவி யளந்தாள்முந் நாழிபணம்
. . . . . . . . மலர்பாதம். . . . . . பூவைதொழு தேத்தினளே
நாற்திசையி லொருபலனும் நாயகியும் காணாமல்
வேத்துமனம் விறுவிறுத்துவடி வேலவரே போத்தியென்ன
ஆத்துமணல் தனில்நடந்து வேத்துமண்ணி லிருந்து வந்தேன்
(அழ)குடைய தென்காசி யாளுதற்கு மகனில்லையே
. . . . . .   . . . . . . . . பாத்திருந்தும் கொதிப்பேனோ
இளமையிலே் மாலையிட்டார் என்கணவன் என்போமோ
பிள்ளையில்லா ததினாலே . . . . ய்க்க வைக்க யில்லையென்னை
வெள்ளைமயி லேறிவரும் வித்தகனே. . . . .
. . . . . . . . .
வல்லவளே யடியாளுக்கு மதலையொன்று தரவேணும்
அடிமடியி லிடும்பணத்தை யிடியிறையாகச் சொரிந்து
கடியமன சாலேயவர் கண்பார்த் திருக்கையினால்
ஆனாலு மொருபலனுங் காணாமல் பொன்னுருவி
போனாலு மாவதில்லை யென்றுசொல்லி யேநடந்து
பண்ணாரு மொழிமடவாள் பணகுடிக்காடுங் கடந்தாள்
. . . . . . .  காரிகையும் தோழியரும்
பாதவழி யாகவேதான் பாபான் தோழியுடன்
விதமாக வழிநடந்து வெள்ளத்தலவங் கோவில்வந்தாள்

வெள்ளத்தலவ னிடத்தில்வந்து வேதினையைச் சொல்லு வாளாம்
கள்ளமில்லை சொல்வதற்குக் கைக்குழந்தை கிட்டாமல்
வந்தேன்
வேங்கமர மானபடி வடி வேலவரே போத்தியென்ன
தேங்காய் கொடுத்தாலும் சிரட்டை கொடாத பேர்க்கு
பாயசமே வைப்பதற்குப் பணமாயிரங் கொடுத்தாள்
ஆயிரம் தேங்காயும் அடித்துடைக்க நேருவாளாம்
பொன்னிட வுடைவாளும் பூதலத்தோரு மறிய
என்முட்டத் தருவேனான் இளமதலை தாருமய்யா
கந்தமரும் பூங்குழலாள் கைக்குழந்தை கிட்டாமல்
சந்தமலர் பொன்னுருவி. . . . டமாய் நடந்தாள்
. . . . . .போல் மேனிநல்லாள் காதவழி ந. . . .
காட்டுவழிச் சாலையிலே கடுவாய்புலி ஓரிகளும்
நாட்டிலுள்ள மலடியிவள் நம்பாதே யென்றிடுமாம்
மாநிலத்துச் சோலையிலே மரங்களெல்லாஞ் சிரித்திடுமாம்
கானில் மிருகங்களே. . . . கறிக்காக மலடியிவள்
அத்தனையும் பொன்னுருவி யறிந்துசெவியில் கேட்டு
. . . . . . . . . யிருந்தேனோ மாநிலத்தில்
மானி . . . . . சொன்னதுக்கு வசையெனவே யிங்குவந்தேன்
சேணிலுள்ள (பற) வைகளுஞ் செடிமரங்கள் வசைசொல்லவும்
அழிந்த கரைபோல ஆத்துடலும் வேத்துமய
தோழியர்க ளிருபிறமுஞ் சூழ்ந்தம்மையைத் தாங்கிவர
பனிநெருக்க மாகையினால் பளபளென மின்னிடவே
இனியிருப்ப தில்லையென யேங்கிநடந்தா ளம்மையும்
பனியிருளால் வழிநடந்து பாதையுமுப் பந்தல்வந்தாள்
முப்பந்தல் வந்தாளே பொன்னுருவிற் றாயார்
மோசமில்லை யாவதென தண்ணித்தகை யாறி
கல்பந்தல் விட்டுக் கரையேறி நடந்தேறி
கள்ளிமலைப் பொத்தைகளுங் காடும்கடந் தாளே
வெள்ளிமணி மேடைதனி லேயிருக்கு மின்னாள்
விதமுடைய மண்பொத்தைக் காடும்கடந் தாளே
தெள்ளியபூங் காவனமும் விட்டேகி னாளே
தேன்மொழியே நாமளெங்கே போய்யுமென்றா ளம்மை
விதமுடையார்க் கொடிவா ளய்யனுட கோவில்
சென்றுதவ மாயிருந்தாள் பொன்னுருவிற் றாயார்
விதமாகப் பொன்பணம் வாரிக் கொடுத்து
எல்லாத் துயரு மறிவித்துப் போனாள்
அல்லாம லேஒரு ஆண்பிள்ளைக் காக
ஆயனார் தங்கைக் கடைக்கல மென்ன

பாலன் பவுசி பெறலா மெனவே
பளவைக் கருங்குளம்விட் டேகினாளே
செல்லத் துரையான் சீமான் திருமால்
திருப்பாக் கடலிலே பள்ளிகொண் டோ(னே)
. . . . . . . . . . . . . .
அழகான தங்கைக் கடைக்கல மென்ன
கானில் வழியாய் நடந்தேகிற் றாயார்
கன்னி பகவதியுடைய சன்னதியில் வந்தாள்

## விருத்தம்

வந்தாள் கன்னி குமரியிலே மதலை யதனால் வருத்தமுத்து
செந்தா மரையே யெனக்குமொரு சிறுவனாலே துயரமுத்தேன்
இந்தா வந்தே னுனதடிமை யேழை மொழிகள் பறையாதே
பிந்த. . . . . க்கு மோர்மதலை பேணித் தருவாய் பகபதியே

இப்படியே பொன்னுருவி யிளமதலை தன்னாலே
ஏகமெ(ன )வெயிருந்து யிறஞ்சித் தொழுதாளே
செப்பெரிய தென்காசி யாண்டிருந்த மன்னன்
செய்தகுறை தானுளதோ சேயொன்றில்லா வாறு
பாங்கியுடன் தோழியரும் பாலகன் தன்னால்
பகபதிக்கு நேச்சைத் திருநாள் நடத்தவென்ன
ஏங்கியழு தேந்திழையும் பாங்கினுட னேதான்
ஏகமென வேயிருந்து யிறைஞ்சித்தொழு தாளே
ஆய்ப்பாடியில் வளந்தோன்தனக் கிளைய தங்கை
பாற்கடலில் கண்துயின்ற பச்சமால் துணவி
பள்ளிகொண்டோன் றனக்கிளைய பகபதிற் றாயார்
ஆலிலைமேல் கண்துயின்றோன் தனக்கிளைய தங்கா
ஆதரவு சொல்லியெனக் காண்மதலை தாராய்
பாலினும்நெய் புகுந்தாப்போல் பாலகனைத் தந்து
பா(த்)து லெட்சித் தருள்புரிவாய் பகபதிற் றாயாரே
நானுமொரு பெண்ணலவோ பகவதியே னம்மா
நம்பிவந்தே னுனதடிமை நாடாளுந் தேவி
சம்பிவந்தே னுனதடிமை. . . . . . . . . . .
தயவிருக்க வேணுமம்மா தாயே பகபதியே
கும்பிட்டே னுனதடிமை குழந்தைதர வேணும்
கோவிலுட னேமுகிப்பேன் பகபதிற் றாயாரே
கோட்டையிட்டு நாலுதிக்குங் கொடிமரமும் நாட்டி

கொட்டகை பொன்னால் முகிப்பேன் குழந்தைதர வேணும்
பேட்டையிட்டு வாழ்ந்திருந்த பெண்கொடி யல்லோநீ
உன்பேர்கேட்டு வந்ததற்கோர் பிள்ளைதர வேணும்
ஊரும் தென்காசிமட்டு முன்பேர் நாட்டிவைத்து
உன்புகழையு மறவே னுறவுசெய்வாய் தாயே
தேருமுகிப்பே னுனது திருநாமமு மறவேன்
தேசமர சாளுதற்கோர் சிறுவனைத் தாரீரோ
கல்லுமிரங் காதிருக்க கடனிலையே தாயே
சாட்டியே திரிந்தலைய வேண்டாமெடி யம்மே
மல்லுப்பிடித் தாலுமுந்தன் வாயலுக் கடிமை
மதலையில்லை யானதுண்டால் போவதில்லை தாயே
என்றுசொல்லிப் பொன்னுருவி ஏழுமாத மாக
இருந்தும்பலன் காணாம லெங்கேபோய்யு மென்றாள்
மன்றுதனில் பகபதியாள் வாழும்பதி விட்டு
மங்கையருந் தோசக்கிண றானதிலே வந்தாள்
தோசக்கிண றானதிலே தொட்டுத்தீத்த மாடி
தேன்மொழியே நாமளெங்கே போய்யுமென்றா ளம்மை
காசமெல்லா மேபதறக் கருத்தழிந்து தாயார்
கானில்வழி யேநடக்கக் கல்பினையோ யென்ன
தங்கச்சி மடத்தில்வந்து தகையாறி யேதான்
தக்கயரி இத்துறையுந் தொட்டுத்தீத்த மாடி
பங்கையருஞ் செந்தாமரையாள் பொன்னுருவிற் றாயார்
பாலகனில் லாதமனத் துயரினாலே யேங்கி
தாட்டிமையாய்த் தோழியருந் தள்ளாட்ட மாக
தையல்நல்லாள் பொன்னுருவி தானும்நடந் தாளே
காட்டிலே திரிந்தலையக் கா(ர)ணமோ வென்ன
கன்னியரு மேநடந்து காட்டுவழி யாக
வழிநடந்து பொன்னுருவி வாரவழி தன்னில்
வளமையுள்ள வகத்தியரே வாழ்ந்திடக் கண்டாள்
கண்டுதொழு தேந்திழையுங் கைக்குழந்தை தன்னால்
காரணமாய் மனக்கவலை கன்னியுரைத் தாளே
மன்றுதனி லவதரித்த வகத்தியரே கேளீர்
வளமையுள்ள தச்சனுக்கு வரமருளி னோனே
கானில்வழி யேநடந்தே கைக்குழந்தை தன்னால்
கல்பித்த பணிவிடையே கேட்டு நிற்பேன்
வாட்டம்புரிந் தூட்டிவைப்பாய் மதலையில்லா பேர்க்கு
மதலைதரு வாமெனவே வோடிவந்தே னய்யா
இப்படிச் சொல்லியே தோழி. . . . . .
எழுந்து சந்தோசமாய்ப் பொன்னுருவித் தாய்நடந்தாள்

அப்பம்பல காரம் செப்பமுடன் பூசைகொள்ளும்
ஆனைமுகவ னமந்திருக்கும் பதியில் வந்தாள்
வந்து தேவி விநாயக னாரிடம்
வணங்கி நின்று மனத்துயர் சொல்லுவாள்
செந்தி லம்பதி தேசிகன் முன்னோன்
தேச மாள சிறுவனைத் தந்தருள்
. . . . . . முள்ள குழந்தையைத் தந்தாக்கால்
தாள மணித்தெரு முகிப்பே னான்
கோவிலு வாசலில். . . . . .
கன்ன லூஞ்சா லசையாமல் நாட்டுவேன்
நாட்டுநாடு யெங்குந் திரிந்துதான்
நான் செய்ததவம் நாய னறியார்காண்
வணங்கி நின்று பெருச்சாளி வாகனம்
வயிரத் தாலே முகித்துக் கொடுத்தனள்
கணக்கில் லாத திரவியம் வாரியே
கடலை சீனி யவலு மருளினாள்
அவலுற்படித்த ளுப்பசை சக்கரை ஆவின் பாலு மரிய தரத்துடன்
பவல்பொழுது வருந்திக் கொடுவந்து பருவப்பொண்ணுக்குப் பூசை செய்தனள்
பூசை செய்து முகிந்தங் கிருந்தபின்பு பகலோனும் மலையில் புகுந்தனன்
ஆசைமிஞ்சி மதலை தனக்காக அன்றுதங்கி யவதரித்தா ளம்மை
அவதரித்துத் தொழுது ஆனைமுகன் அருளிரங்கா திருப்பதைக் கண்டுதான்
உபசரித்துத் தவசுபுரிந் தோமே ஒண்ணுதலே யெனியெங்கே போவோம்நாம்
எங்கேபோவோ மெனவே நடந்துதான் எண்ணைவாணியன் ஓடை கடந்தனள்
சங்கையாய்ச்சில தோழியர் சூழவே தய்யல்நாகரு கோவிலிலே சென்றாள்
சென்றுதெப்பக் குளத்தில் நீராடியே தேவிநாகரைச் சென்று தெரிசிக்ச
மன்றுள் ளோரமேயிரும் நாகரிருக்கின்ற வாயல் தன்னிலே வந்தவள் கும்பிட்டாள்
. . . . . வேல்விழியே யெனக்கொரு ஆண்மதலை தாவென் றாவி பணிந்தனள்
பணிந்து கும்பிட்டு பாடகந் தண்டைக்கு பத்துநூறு பணத்தைக் கொடுத்தனள்
அணிந்தப் பொன்னுக் களகார மாகவே ஆபரண மாலைகள் நேரு வாளாம்
நேரும் நேச்சைகள் தானே பெருதல்ல நீயிரங்கியே கிண்ண. . . காணிப்பாய்

பாரு பாரம்மா பாலகனைத் தந்தால் பட்டர்போல் . . . பாரி
தாரேனான்
தாரே னென்றவ ளாறுநா ளாகவே சன்னதி வாசல் தன்னி லிருந்தனள்
கூறியதோர் நாகருவா ளம்மை குணந் திருந்தியே குழந்தை தந்தா ளில்லை
குழந்தை தந்தா ளில்லையென்று சொல்லியே. . . வாசல்கடந் தப்பா
லேகினாள்
கனத்து நெஞ்சந் தடுமாறி மெத்தவே. . . . சாலைவழியாய்
நடந்தாள்
நடந்திட்ட பொன்னுருவி நாயகி துயரமுத்து நல்லமர பூங்காவனச்
சாலைவழி யாகவேதான்
மடந்தை நடந்துவர வான்கதிரோன் ஒக்க மங்கையரும் பெருவிள
மடமுங் கடந்தனளே
கடந்துகணி யாகவே கள்ளியங்காட் டூரும்விட்டு
கதிரோன் விசிறுமுன்னே கைக்குளத்தில் செல்லவென்ன
துடந்து நடந்துசில தோழியர் செருமிவர
சோறு பலகாரம் வாய்க்கு சுங்காங்கடையுங் கடந்தாள்
மாறுசொன்ன பேர்கள் வசைசொல்லுவரே யென்றுசொல்லி
மங்கையரு மேநடந்து மணல்கரைப் பொத்தைவிட்டு
ஆறுதரித் தோனருளை யகத்தில் நினைந்துகொண்டு
அம்புபட்ட மானதுபோ லழுந்தியழு(து) அழுது
அழுதுதொழுது மங்கை யாலோசனை யாகமெத்த
ஆயி(ழையா)ள் பொன்னுருவி யவளேதோ சொல்லுவாளாம்
பழிவரு மோயெனி பாவங்கள் துலைந்திடுமோ
பரராசன் தேவியரில் சந்திரமதி யொருத்தி
சந்திரமதி யாளுக்கும் சமயந்தியாள் தனக்கும்
தப்பாவு செய்துயீச னிப்படித் தவித்துவிட
அந்திரங்கள் செய்துவகை யடக்கியர சாண்டதுண்டோ
ஆறிலொன்று அல்லாம லதியப்பிரப கீர்த்தி
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
கங்கையணிந் தீசர்மகன் கருத்தையறிவோ மென்ன
கருப்ப. . . யாலதுவும் கடந்து வில்லுக் கீறியினால்
வில்லுக்கீறி யம்பலத்தில் வேர்த்ததகையு மாறி
வேள்விமலைக் குமாரிடம் மெலிவேதோ சொல்லுவாளாம்
கல்லுங்கறடுந் தைத்துக் காலும்மேலும் நொந்ததய்யா
கைக்குழந்தை யில்லாமல் கலங்கிவந்தேன் குமரா
குமரா யெனக்குமொரு குழந்தை யருள்புரிவாய்
கொட்டகை சாலமுகித்து கொடிமரமு மிடுவேன்
அமரர் சிறையைமீண்ட ஆறுமுகவா யிரங்கி
ஆண்மதலை தாருமெனவே யடிபணிந்து கும்பிட்டாள்
பணிந்து கும்பிட்டிருந்தும் பார்பதியாள் தன்புதல்வா

பாத்திரங்க ளில்லையென்று பல்பனா புரத்தில் வந்தாள்
அணிந்தருள் நீறுமேலே யாலுபிறயும் பூணும்
அம்பலத்தில் வீத்திருக்கு மரனாரே தஞ்சமென்று
தஞ்சமென்று பொன்னுருவி சங்கடத்தைச் சொல்லுவாளாம்
சந்ததியொன் றில்லாத்த தவங்கங்கள் மெத்தவய்யா
வஞ்சகமா யொன்றும்என் மனத்தறியச் செய்யவில்லை
மதலையில்லா திருக்கும்வக யின்னதென் றறியேன்
அறியும்படி யெனக்கு ஆண்மதலை தந்ததுண்டால்
ஆண்டுக்கு ரண்டுதிருநாள் அடியாள் நடத்திடுவேன்
வெறிகொண்ட பித்தரைப்போல் மெத்தவே திசங்கிவந்தேன்
மெலி. . . றயைத் தீத்துயெந்தன் வீட்டிலே அனுப்புமய்யா
அனுப்புமென்று பொன்னுருவி யாறுநாள் தவசிருந்து
அதியதவம் புரிந்து மொருபலனுங் காணாமல்
இனியேது கோவிலிலே யிருந்துதவஞ் செய்வோமென்ன
ஏங்கியமு தேந்திழையும் பாங்கியாக்குச் சொல்லுவாளாம்
கலன்பொன்னைத் தான்களைந்தும் காட்டில்நடந்து சடைத்தும்
கண்டகண்ட கோவிலெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டும்
பலன்பெத்தே னில்லையென்று பல்பனா புரமும்விட்டு
பாதவழி யாய்நடந்து சாலைவழி நோக்கிவந்தாள்
வந்தாளந்தம் பொன்னுருவி மதலையதனால் வருத்தமுத்து
செந்தாமரையே தென்காசியாளச் சிறுவன் வேண்டுமென்ன
கொந்தார்குழலி செந்தூருங் குமரித்தீத்த மதுமாட
வந்தாள் சென்ற படைவீடு விட்டு
வாழும் பூங்கா வனத்தில் வந்தாள்
பூங்கா வனத்திலே தோழியரோடே பொன்னுருவித் தாயார்
புத்திகலங்கிக் கிலேசமுத்தே மனம்புண்ணாக யெண்ணி
யெண்ணி
பாலக னில்லா மனத்துய ராலே. . . .
பூராய மாகவே தோழிய ரோடே புலம்பி மனத்துயரால்
சீராகப் பொன்னுருவித்தாயாருஞ் செட்டிமடங் கடந்தார்
வேக மெனவே வ. . .மையிலந்த யம்பலம் கடந்து
ஆகமே வேறா யலைந்துமெலிந்து அழுது நடந்தனளே
நானிலந் தன்னில் திரிந்தலைந்தேனொரு நல்மதலை யதனால்
கானில்தனி யேநடந்து சடைத்துமோர் கைப்பிள்ளை யில்லையய்யா
வாடித் திரிந்துநான் வையகந்தன்னில் மதலைதா னில்லாமல்
நாடித் தவஞ்செய்து நானிலந் தன்னிலும் நான்பேடி யானேனே
காரிகைமார்கள் களிப்பாகப்பேசக் கடுந்தூர மேபோந்து
வாரிப் பணத்தையு மாதவர்க்கீந்து மதலைதா னில்லையய்யா
அரும்புமலர் வாடிடுமா மந்தியன்னம் ஓடிடுமாம்
குருந்துமா வதனிலிருக்குங் கொ(ா)க்கினங்க ளேசிடுமாம்

கரும்புவனீர் வத்திடுமாம் கருமந்திகுதித் தாடிடுமாம்
மந்திகுதித் தாடிடுமா மரநாய்கள் மலடியெங்கும்
சந்தியிலே கூடாத சண்டாள நரிக்கூட்டம்
வருதியலவாய்த் தான்கூடி மலடியென்றே ஓடிடுமாம்
தொந்திபெருத்த கோட்டான் சூளணி. . . சொல்லுமாம்
கொந்துலாத சாலையிலே கூவயினங் குழறிடுமாம்
கூவை குழறிடுமாம் குழந்தையில்லா ளென்றிடுமாம்
பாவை பன்னாள் (த)ான்கேட்டுப் பரதவித்து மூச்செறிவாள்
மூச்செறிந்து விம்மிவிம்மி முகுந்தனெங்கே யென்றிடுவாள்
பேச்செல்லாம் தான்குழறிப் பெருகமது உண்டவர்போல்
மதுகையுண்ட மானிடர்போல் வழிநடந்து மாறிடுவார்
பதுகைமலர்த் தாள்வருந்த பாத யெங்கே. . . .
தோழியரே நெம்ம. . . டீரே முண்டோ யென்றிடுவாள்
நாளிரவில் வழிநடந்து நா. லனிலம் ஆறுமிட்டு
ஆறதுவும் கடந்தேகி யமரர்விளை தனைக்கடந்து
வேறொன்றும் நினையாமல் திருவனந்தபுரம் வீதியில் வந்தனளே
வந்தா ளனந்தபுர மதிலே மாதுசடைத்து வழிநோக்கி
செந்தாமரை கண்டுலகின் துஞ்சிறகால் பறவை கட்டியதும்
முந்த யெனக்குத் தளர்ச்சையினால் முச்சிப் போதுமிக் கடந்ததுவும்
நந்தவனத்தில் மிருகமெல்லாம் நகைத்து வசைகள் பேசினதும்
. . . . . . . வாய்முடுகிப் பிரண்டே ஓடிடுமாம்
இந்தா வந்தே னுனதடிமை யேக்க மொழிகள் பறையாதே
பிந்தா தெனக்கு ஓர்மதலை பேணித்தருவாய் பெருமாளே
திருவனந்த புரம்தன்னிலே வந்தந்தச் சேயிழை பொன்னுருவி
சிந்தை குளிந்து மனந்தெளிந்தே யவள் செப்புவா ளாதரவாய்
மருவணிசீர் துளசிமணி மாலையனே. . . .
மகனில் லாளான. . . ஊரில் மடவார் வசைசொல் வதினாலே
ஆக்க்முடைய திருப்பதியே யங்குமலைந்து மிகத்திரிந்து
அடைக்கலமாக அரிகிட்டிணா வந்தேன் ஆண்பிள்ளை தந்தருள்வாய்
மார்க்கண்டனைப்போ லெனக்கொரு பாலனை மாயனே தந்ததுண்டால்
வருசத்தி லாண்டு திருனாள் அடியாள்வந்து நடத்திடுவேன்
நடத்தித்தருவே னனந்தாபுரமும் சங்குமந் துறையூரு மட்டும்
நாட்டிலுள்ளவர்கள் மகுந்திடப் பூப்பந்தல் நன்றாக யிட்டு வைப்பேன்
படந்தனில் கண்துயின் றோனே யுனதுபாதம் தொழுதிருந்த
பஞ்சவர்க்காகத் திரியோதன் பெரும்பாவி யிடந்தனிலே
தனியொருத்து நடந்து அவனிடம் தாரணி கேட்டதுக்கு
தந்தா னில்லையென்று நூறுநூறுபேர் மாண்டிட சாங்கமாய்
நின்றே
அநியாயப் பாவியிறக்கத் தன்மரை யரசாள வைத்ததுபோல
ஆனபுவி தன்னையும் ஆண்டிருக்கவொரு ஆண்பிள்ளை தந்திடுவாய்

தந்தா லுமக்கு கெருட வாகனமும் தங்கத்தி னலர்கித்து
தானமணித் தேரும் பொன்னால் முகித்துவந்து தருவேனய்யா
. . . . . . . . . . . .
எங்கெங்கும் உள்ள திருப்பதியுங் கண்டு யிங்கு
ஓடிவந்தே னய்யா ஓடிவந்தே னடியாள் மெலியாமல்
ஒருபிள்ளை தந்ததுண்டால் உடனே தெற்பக்குளம் கெட்டியே
கல்லு உறப்பாகக் கெட்டி வைப்பேன்
நாடியே பொன்பணம் பேராதரவாக நலம்பெறத் தந்துமக்கு
நானுள்ள மட்டுமே நித்தியபூசை நடத்தித் தருவேனய்யா
தருவே னென்னவ ளீன்று . . . . தவசிருந்து

### பொன்னுருவி பின்னும் தன் பயணம் தொடர்தல்

தரணியளந்தோன் தவத்துக்கிரங்கி தயவு வய்யாததினால்
மருவணி பூங்குழல் பொன்னுருவித் தாயார் வாடிமனங் கேவி
மாயனிரங்கா திருப்பதைக் கண்டந்த மங்கையர்க்குச் சொல்லுவாள்
அழுகத்துடனிந்தக் கோவிந்த னாரோ டறிவித்த தங்கடங்கள்
ஆற்றில் கரைத்த புளிப்போலே யாச்சுது யாரென்னை யாதரிப்பார்
பழுத்த பழம்போலே. . . . யேகாந்த வுரை மறுத்து
பாரில் நடந்து திரிந்து அலையப் பரமன் விதித்தாரோ
. . . . . . . . . . . . . . . . . . . .
திருப்பதி யெங்குமிருந்த தலங்களில் தெய்வமுந் தானில்லையோ
நாட்ட முடைய திருப்பதி தோறுமே நான்தவஞ் செய்ததுதான்
நன்னுதல் மாரென்னைக் கூடிக்கூடியே நகைத்தது போலாச்சே
சிறுவனை வாங்கலா மென்றுவந்தநேரஞ் சீவனை மாய்த்தாலும்
சிவகெதி தானும் பெறலா மென்றொரு திட்டமறிந்தே னில்லை
வலுமையுள்ளார் போலெனைத் தேடி மன்னன் மறுகித் தவிப்பாரே
வையகத்தில் சென்றுமன்னர் கண்டாலும் மங்கைய ரேசுவரே
மன்னன் மறுக்கவும் மங்கையர்கூடி மலடியென் றேசுவதும்
மகளில்லாம லிருந்தரசாள மனது பொறுத்திடுமோ
பொன்னைக் களைந்துமென் மண்ணை மறந்தேன் புதல்வ னில்லையானால்
பூமியிலிருந்து பொறுப்பது மில்லையே போக்கிடுவே னுயிரை
இப்படிச் சொல்லியே பொன்னுருவித் தாயார் ஏங்கி யழுதழுது
இப்படியும் சீவனை மாய்ப்ப தல்லாது இருப்பது மில்லைஎன்றாள்
அப்படிச் சொல்லியே பொன்னுருவியை யழைத்து முகந்தடவி
ஆயிழை யாளுக்கு உயிர்த்தோழி யானவ ளேதோ சொல்லுவாளாம்
பதின்மூன்றாம் நாளைப் படைப்போரு தன்னிலே பார்த்தன் மகன்மடிய
பஞ்சவ ரஞ்சிபேரில் மூத்த தன்மரும் பாரில் விழுந்திடவே

மதியணிந்தோ னருளை மறக்காத வயிட்டருங் கோசிகரும்
வரம்பெறவே தனியாக அகத்தியர் மாமுனி மூவரும் வந்து
கமண்டலத்தி லுள்ள தண்ணீரை யேயவர் கைநிறைய வாரி
கண்ணீர் தழுவியே தன்மரை யணைந்துதான் தேத்தினாப் போலே
வையகத்தை முன்னா ளாண்டதோர் மன்னர் வழமையுந்
தானுரைத்து
தங்கை மடவாள் மனமதுதேத்தி வழியும் நடந்தனளே
நடந்தனளே யலைந்தலைந்து நாதனரு ளீதோவென்ன
கடந்தனளே யனந்தாபுரங் காரிகையுந் தோழியரும்
வேகமுத்து நடந்தோமே விதி. . . . . . . .
காகம் வ. . . . ராய்க்கக் கடக்குவதுங் கடனிலையே
போகமுத். . . . ாதே (பொ)ற் கொடியே தோழியரே
ஏகமென வேநடந்தே யிங்குவந்தோம் தோழியரே
வெகுதூரம் தனிலிருந்து விரைந்துவந்தோ மித்தூரம்
கடல்பிறத்து வழியாகக் கன்னியரே போய்யுமென்றார்
நாட்டமுடன் கடல்வழிக்கே நாம்போனால் நா(ட்டிலுள்ளார்)
பேடைமயில் பெண்கொடியாள் பேடியென்றும் ஏசுவரே
மலைவழியே போனதுண்டால் மலைமிருகந் தின்றுவிடும்
மலைமிருகந் தின்றதுண்டால். . . . .
பிலமுள்ள தோழியுண்டால் பிறகாலே வாருமென்ன
பிலமில்லாத தோழியரே பிற (ந)ாட்டில் போய்ப்பிழையும்
நலமுடைய தோழியரே நான்போறேன் போய்யு மென்றாள்
கு(லமுடை)ய தோழியருங் கோதையரும் வரும்வழிக்கே
குன்றெனவே மலைகடுவாய் குறியபுலி யாளிசிங்கம்
நன்றெனவே மலைகடுவாய் மலடியிவள் நம்பாதே யென்றிடுமாம்
அத்தனையும் பொன்னுருவி அறிந்து . . . . . லக் கேட்டு
இத்தனைக்கும் பொன்னுருவி யிருந்தேனோ மாநிலத்தில்
மாநிலத்துச் சாலையிலே மரங்களெல்லாம் சிரித்திடுமாம்
சேணிலுள்ள பறவைகளும் செடிமரங்கள் வசை சொல்லவும்
கேடாலு மிருப்பதி. . . . . று சொல்லியே நடந்து
நாடாது கோதையென நடுக்கமுத்து நாயகியும்
செல்லநடை யாய்நடந்து தேன்மொழியாள் பொன்னுருவி
கொல்லிமலைச் சாத்தாவின் கோவிலரு காகவந்தாள்
கொல்லிமலைச் சாத்தாவின் கோவிலரு காக
கோதையரும் தோழியரும் கூண்டுவரும் போது
செல்லநடை யாய்நடந்து பொன்னுருவித் தாயார்
தேசமெல்லாம் திரிந்து திசங்கிவரும் போது
பாசமில்லா மலைமிருகம் பார்த்துநிற்கக் கண்டு
பளிங்கிமலைக் கருகாகப் பாதைவரும் போது

## மலைக் குறத்தி வருகை

வயதுசென்ற நரைக்கிழவி மலங்குறத்தி யொருத்தி
மங்கையரைக் கண்டுசில வார்த்தைசொல்லு வாளாம்
மிஞ்சியசொல் பெண்கொடியே வேண்டாம் மலங்குறத்தி
மேலுலகம் போன்றபழி காரிமுழு நீலி
கஞ்சி குடுக்கக் குடுக்கைப் பெட்டியு மிடுக்கி
காவணத்தில் வாழுமிலை வாழையிலை யுடுத்தி
விண்டித்தள வேங்கைரெண்டும் விழுந்துகிடந் தசைய
வெருகுசுட்டுத் தின்றமுடை மேனியெல்லாம் வீச
குண்டுகுழி விழப்பதறிக் குறுந்தடியு மூன்றி
கோடாத லே. . . . . விமலை குறமாது வரவே
வந்தகுற மாதுபெண்கள் வருத்தமதைக் கண்டு
வழிவினவி முகம்பார்த்து வாய்திறந்து சொல்வாள்

## குறத்தி கூற்று

சந்தமலர்ப் பெண்கொடியே தகையாறிப் போங்கோ
தண்ணீர்தா னிந்தமலைத் தளத்தருகே வுண்டு
என்றுபெண்கள் தனைக்கூட்டிக் கூண்டமலங் குறத்தி
ஏறிமலைக் கொட்டிச்சியர்க ளிருப்பிடத்தில் சென்றாள்
சென்றுநின்று சுனையருகே தேனுமிட்டு மாவும்
சேயிழைக்குத் தான்கொடுத்துத் தண்ணீர்த்தகை யாறி
தண்ணீர்தா னருந்தித்தகை யாறிருக்கும் நேரம்
தையல் நல்லாள் மலங்குறத்தி தானுமேதோ சொல்வாள்
மாதுயிவளுந் தி(ரு) முகம் வாடியிருப் பானேன்
மணவாள னில்லாமல் வழிவருவ தேது
ஏண்டி பெண்கா யித்தூரம் வழிநடந்து சடைத்து
எளியவள்தன் இடமதிலே வந்தவகை யேதுமகளே
வெத்திலைதின் னாமல்வரும் வேதினைகள் என்ன
மிருகமுள மலைவழியே வருவதேது மகளே
இத்தனையு மெடுத்துரைப்பேன் சற்றுமுகம் பாராய்
இல்லையம்மா உன்முகத்தில் நல்லகுறி சொல்வேன்
தப்பாவ மாட்டாது யம்மவள்ளித் தாயார்
தக்ககுறி யெனக்குச்சொல்லித் தந்ததடி மகளே
இப்புவியி லுள்ளவர்க ளென்முகத்தில் வந்தால்
இருபத்தொரு தலைமுறை சென்றாலு மெடுத்துரைப்பேன்
பகட்டுகிறாள் கிழவியென்று நகட்டாதே மகளே
பசுகிழடு ஆனாலும் பாலுருசி போமோ
மகுத்துவமாய்க் குறிகள் சொல்வேன் மகளாரே யென்ன

வலதுகையா லிடதுகையை மலங்குறத்தி பிடித்தாள்
. . . . . . . . . . . . . . . . . . . .

## குறத்தி குறி கூறுதல்

காணாத மனப்படை காட்டவர வேணும்
சேர்ந்தவரைக் காட்டியக்கி தேன்மொழிக் காட்டோடி
சூலிதுக்கா தேவியம்மா சொல்லுநல்ல சமயம்
ஏண்டிபெண்ணே தென்காசிப் படைவீட்டி லுன்னை
இளமையிலே மாலையிட்டார் பிள்ளையில்லா திருந்தாய்
வேண்டாமென்று நினைந்து கொண்டாய் மெய்யோபொய் தானோ
மேலுமுள்ள குறிகள் சொல்வேன் கூலிவைத்துக் கேளு
குறக்குடுக்கை தனையெடுத்துக் கொண்டுவந்த பணத்தை
கூசாமல் தானளந்து குறத்திமுன்னே வைத்தாள்
சிறப்புடைய பணத்தைக்கொண்டு சிரித்துக்கொண்டு குறத்தி
வள்ளிமலைச் சாத்தாவைச் சிந்தைவைத்துச் சொல்வாள்
வாரண முடையமயில் வீரனைய மாலே
மனதில் வழுகாமல்குறி வலம்வருவா யென்றாள்
காரணவர் மூதாக்கள் கைதொழுத தெய்வம்
கன்னியுட காரணமாய்த் தோணுதடி மகளே
நீதிபெறு வடமேல் மூலைக்கரு காக
நேரிழையே பகபதியாள் கோவிலது வுண்டும்
பாராளு மன்னனிடம் பாவினையாய்ச் சென்று
பகபதிக்குக் கோவிலது கெட்டிமுகித் தேதான்
நேராகப் பகபதிக்கு னேச்சைகொடுத் தாக்கால்
நிச்செயமாய்த் தென்காசி யாளுதற் கென்னவே
உனக்கும்நல்ல மகனாக வுலகுக்கும் நல்லவனாய்
ஓவியமே என்னாணை வுன்னாணை பெறுவாய்

## பொன்னுருவி மகிழ்ச்சியும் ஊர்திரும்புதலும்

மகனைப்பெறுவ ளென்றவாயில் மாணிக்கத்தைச் சொரிந்தாள்
மங்கைமட மாதுநல்லாள் பொன்னுருவிற் றாயார்
கொடும்போக்காய்ப் போறஎன்னைக் கூட்டித்துயர் தீர்த்தாய்
குறத்தியல்ல நீயெனக்குக் குருவையிட மென்ன
வடுப்பேசி மாதரெல்லாங் கடுப்பாகச் சொன்ன
வகப்படியே சொல்லியெந்த னம்மைபீடை தீர்த்தாய்
வயதுள்ள மலங்குறத்தி மலைத்தடத்தி லேதான்
மலைமிருகம் வாய்கெட்டி மலங்குறத்தி போனாள்

குடமலையி னருவிவிட்டுக் குன்றுமலை கடந்து
கோதையருந் தோழியருங் கூண்டுநடந் தாரே
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
கடந்து வருகையிலே கண்டாள் தென்காசியில் கோவில்முடி
கோவில் முடிதெரிய கொண்டாடு வண்டாடு பூங்குழலாள்
ஆவி வழிநடந்து ஆத்தங் கரைதனில் செல்கையிலே
பூத்தமதி நுதலாள் பொன்னுருவி நற்செய்தி தன்னை
சீத்தம் பெரிதான செண்பகராயன் தனக்கறிய
அறிய வுரைக்கவென்ன அதா . . . .சிலமாதர்
வெறிகொண்டே தானோடி வேந்தர் திருமுன்பில் சொல்லுவாராம்
சொல்லும்பொழுது மன்னன் துய்யஅமச்சரும் காலாளும்
அல்லல் தவிற்றுவரு மாயிழையாளுக் கெதிர்சொல்ல வென்ன
கொல்லத்து வில்லாளுங் கொ. . . தேலுங் காவடிக் காகளும்
வடக்கரொரு தகுதிம்பி வன்னியரும்கை யானைகளும்
இடக்கைக் கணிக்கணியா யிட்டார் பரிகளைக் கோலமுடன்
கோலத்து நாட்டாருங் குதிரைத் தளங்களு முன்னடங்க
சாலத் தளத்துடனே தங்கச்சிவிகை தனிலேறி
வாழும் புகழுடைய மன்னவன்சீவல மாறனுமோ
சீவல மாறனுடன் செண்பகராயனுங் கூடவந்து
வந்து சந்தோசமுடன் வாழுந்தென்காசியி லூர்புகுந்து
சிந்தை களிப்புடனே சிங்கார வெள்ளிமேடையில் சிறப்புடன்
வீத்திருந்தாரே

### பகவதிக்குக் கோயில் கட்டுதல்

காவலுள்ள காடதிலே கைக்கிணங்க மரங்கள்வெட்டி
ஆவலுடன் பணிகள்செய்து அடித்தாரே தும்பிதுளை
தும்பி துளையதிலே தொய்யாத வடம்பூட்டி
கம்ப மதையானை துதிக்கையதிலே தான்கொடுத்தார்
கொழுத்தவட மதனைவாங்கிக் கோலமத கரியானை
எடுத்துவிடும் மரத்தையெல்லா மிழுத்துக்கரை சேர்த்திடுமாம்
குடிபதியா யிருந்தோர்கள் கோவிலு. . . . .
படியதிரத் தென்காசிப் பதியில்மர மிழுத்து வந்தார்
இழுத்துவந்த மரத்தையெல்லா மிணக்கியே பணிப்படுத்தி
தாழ்த்துவானாம் பதித்துச் சாந்திட்டுக் கால்நெறுத்தி
வாழ்த்தியே தெச்சனையும் வாங்கியந்தக் கண்ணாளர்
ஏத்துவாரா முத்திரத்தை இராசமன்னர் மனமகிழ
மனமகிழக் கைபரத்தி வாமடையு மதில்சேர்த்து
கனமான துள்வளையைக் கைக்கிணங்க (அடித்திறுக்கி)
அடித்திறுக்கிப் பட்டியலு மாணிதைத்துக் கதி. . .

ஓட்டடுக்கிச் சாந்துமிட்டு உடன்கலயந் தானாட்டி
ஏடவிழும் பகபதிக்கு யிலங்குதிருக் கோவில் வைத்தார்
கோயில்வைத்த மாந்தையர்க்குக் கொறயாமல் நல்வரிசை
ஆவலுட னேவாங்கி யடிதொழுது தான்போனார்
போனதற்பின் மன்னவனும் பொங்கலிட்டுப் பூசைசெய்து
ஆனதிரு நாள்நடத்தி யரசாண்டங் கினிதிருந்தாரே

## மகப்பேறடைதல்

இருக்கையிலே பகபதியா ளீசுரனா ரிடத்தில்
இன்பமுடன் வாய்திறந்து யீசொரியுஞ் சொல்வாள்
சந்ததியா லெனைநோக்கிப் பொன்னுருவி தானும்
தயவுசெய்து வருந்துகிறாள் சங்கரரே யதனால்
ஆயிழையாள் தந்தனக்குப் பாலனைக் கொடுத்து
அம்புவியி லென்பேரை நடத்திவைக்க வேணும்
என்றுசொல்லிப் பகவதியும் வாதாடிக் கேட்க
ஈசுரனார் கணக்கர்தனை யின்பமுடன் வருத்தி
பகபதியாள் சொல்லுகின்ற பொன்னுருவி தனக்கு
பாலனுண்டோ கணக்கதிலே பாத்துச்சொல்லு மென்றார்
அன்னேரந் தான்பாத்துப் பாலனில்லை யென்று
அரனாரிடஞ் சொல்லிடவே பத்திரனை யழைத்து
மேதினியில் போய்ப்பிறந்து மீண்டுவரு வாயே
வேர்வைபத்தி ராயென வேஉரைத்த மொழிகேட்டு
ஆணாகப் பிறந்து அரசாண்டு வருவேனோ
ஆயிழையா ளொருத்திகூட வேணுமென்று சொன்னார்
தெய்வரம்பை யென்றபெண்ணைச் சீக்கிரத்தில் கூட
செனித்துவிடப் பிரமாவைத் திறமுடனே யழைத்து
தென்காசிப் பதியாளப் பொன்னுருவித் தாய்க்கு
செனித்துவ . . . . . . ஈன சீக்கிரம தாக
பரமாயி வண்ணாத்தி பரனேயென்று சொல்லி
பாலகிக்காத் தவசிசெய்து வருந்துவதி னாலே
அரம்பயரை அவள்வயத்தில் செனித்துவிடு மென்று
அரனாருஞ் சொல்லிடவே அணுப்பொழுதில் செனித்து
பூலோகந் தனில்பிறந்து பதினாறு வயதில்
பெருவாழ்வு வாழ்ந்துகூடி வரவேணு (மென்று)
அனுப்பிடவே பொன்னுருவி தன்வயித்தில் கெர்ப்பம்
அழகுடைய பத்திரனும் வந்தவ தரித்தாரே
மருவனைய பகபதியும் மங்கைகயி லாசம்விட்டு
கருவனப் பொன்னுருவி கினாவில்வந்து சொல்லுவாளாம்
அரவம்வந்து கையிலேறி மணியீன் றிடவும்

உரம்பெரிய. . . . . ரளுரை கழத்தித தந்திடவும்
பொன்னெழுத்து நாராசம் பூண். . . பொத்தகமும்
கன்னிசிறு பெண்பிள்ளைதான் கைதனிலே தந்திடவும்
இப்படியே கண்டகினா யிராசாவுக் கறிக்கைசெய்து
அப்படி யாகட்டெனவே யரசனுமோ வாழ்ந்திருந்தார்
கருவனைய பூங்குழலுக்குக் கருப்பம்தங்கி மாதம்என்று

## கரு வளர்ச்சி

ஓரான மாத்தையிலே ஓங்கா மெழும்பிடுமாம்
ஈரான திங்களிலே யிராச மன்னனு மறிந்தார்
மூணுநாலு மாத்தையிலே மொய்குழலாள் புளித்தபண்டம்
நாணாமல் தின்றுவிட்டு நல்லகஞ்சிக் குடிமறந்தாள்
அஞ்சான மாத்தையிலே யய்யோத்தியமாய் வருகுதென்று
பஞ்சணையிலே சரிவாள் பள்ளிகொள்ளக் கூடாது
ஆறுயேழு மாத்தையிலே யறிந்துசொல்வா ரவர்கள்
கூறாகப் பகபதி கோவில்வைத்த பலனாலே
பேறாகப் பொன்னுருவி பெத்திடுவா ளென்பாரும்
எட்டான திங்களிலே யிறையவர்க்குப் பொங்கலிட்டு
திட்டுமுட்டாக வருகுதெனத் திகைந்தொன்பது மாதம்பத்து
பத்தான மாதமது பதிவாகச் செல்லுமுன்பில்

## ஈத்துப்பிரை அமைத்தல்

சித்திரம்போ லீத்துப்பிரை சிறப்பிக்க வே(ணு)மென்று
ஈத்துப்பிரை முகிக்க யிசம்பினசொல் கேட்டு
இருந்த வமைச்சரவர் எல்லோரும் எழுந்திருந்தார்
. . . . . . ஆசாரி மார்களெல்லாம்
. . . . . . இன்பமுட னேயே . . . து
. . . . . . த்தான் மன்னவன் திருமுன்பிலே
. . . . . . வந்தடி பணிந்து நின்றார்
. . . . . . மாந்தயரே நீங்கள்சென்று
. . . . . . மரம் வெட்டி வாருமென்றார்
. . . . . . கூறிய மொழியைக்கேட்டு
. . . . . . . . . . . . . . . . . .
நல்லநல்ல மரம்பாத்து நாட்டியவர் தேடும்போது
வடந்தனையு மறுத்து மதையானை வந்ததுபோல்
வந்துமலைப் பூதமது மரம்வெட்டாது நெறுத்த
கண்டுமந்த மாந்தையர்களெல்லாங் கலங்கிக் கிலேசமுத்து

கன்மவிதி யென்றுசொல்லிக் காடும்பரந் தோடுவாராம்
நன்றுநன்று நாமள்மரம் வெட்டவந்தோம் பாரு
நானே தலை. . . . . க்குப் போதுமென்று ஓடுவாராம்
. . . . . . . . . . . . . . . . . . . . .
நல்லகிடா கோழிபொங்கல் பானையது வேணுமென்ன
வேணுமென்ற கோப்பதெல்லாம் வேந்தனுங் கொடுத்திடவே
வேண்டிஒட்ட னும்விரைந்து விச்சுவன்றன் கைக்கொடுத்தார்
ஆணுவஞ்சேர் விச்சுவனார் கோழிகிடா யாயிரமும்
அறுத்துவெலி கொடுத்து ஆவிப்பார் பூதமதை
ஆனாலும் பூதமது அசையாம லிருக்கக்கண்டு
. . . . . . . . . . . . . . . . .
. . . . . . . பரனிடத்தில் செல்வ தெப்படி யெனவே
. . . . . . . ரந்திடவே சென்றெடுத்தார் சித்துளியை
. . . . . . . தானெடுத்துச் சிறுவிரலைத் தறித்து
. . . . . . . கிவிட்டெறிந்தார் சீறிநின்ற பூதத்தின்மேல்
. . . . . . . பூதந் திசைமாறி ஓடிடுமாம்
. . . . . . . மாந்தையரு மரங்கள் வெட்டுவாராம்
மருது யிலுப்பைகளும் மஞ்சனத்தி மாமரமும்
வலுவுள்ள நெல்லிமரம் வண்டாள் குருந்தாழையும்
தெருவில் வளந்துநிற்குந் தென்னமரமுங் கமுகும்
சீரான வேம்புகளுஞ் சிறந்தாசனி மரமும்
அருதாய மரங்கள்வெட்டி யடித்தாரே தும்பிதுளை
ஆனை கையில் வடங்கொடுத்து யாரபிரமிட்டி
இழுத்துமலையுந் தடமு மெரியும்புறவும் விட்டு
இட்டமுட. . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . காவு மய்யன் சத்திரமுந் தான்கடந்து
தாக்குடன் மரமிழுத்து வாக்குடன்வந்து தொழுதுநின்றார்
தொழுதடி பணிந்துநின்ற துய்யதோர் மாந்தைவேந்தர்
பழுதில்லாக் காலும்நாட்டி பணிந்துஉத் திரங்கள்சேத்து
நளினமாய்க் கையும்பாவி நல்லவாய் மடையடித்து
. . . . னமாய்க் கைக்கிணங்கக் கழுக்களும் நிரப்பித்தாரே
. . . . . . . . . . . . . . . . . .
. . . . . . சந்தனத்தால் கோலமிட்டு
. . . . . . கிணங்க யீத்துப்பிரை முகிற்றார்
ஈத்துப் பிரைமுகித்த யியலுடைய மாந்தையர்க்கு
ஆய்ந்தகாதில் கடுக்கனிட்டு அழகுகையில் முடுகுமிட்டு
வாய்த்தபுகழ் மாந்தையரை மனைதனிலே யனுப்பிவிட்டார்
. . . . . .
மாந்தையர்கள் போனபின்பு மன்ன. . . . .
ஆவுதனை யடைத்து யதில்கலைய மாட்டி

பாவினையா யீத்துப்பிரை பால்காச்சிக் குடிபுகுந்தார்

## பொன்னுருவிக்கு வயிறு நோதலும் மருத்துவச்சி அழைப்பும்

குடிபுகுந்தங் கிருக்கையிலே கோதைநல்லாள் திருவயிறு
கடிதாய்மெய் நோகுதென்று காவலர்க்குக் கட்டுரைத்தார்
காவல னதுகேட்டுக் கடிதாக ஒட்டனையும்
ஆவலுடன் வரவழைத்து அரசனுமோ ஏதுசொல்வார்
மருவனைய பூங்குழலாள். . . . மருத்துவ (ச்சியை)
ஒருநொடியி லேகூட்டி ஓடியே வந்திடென்றார்
வந்திடென்று மன்னர்சொல்ல மலர்பாதந் தான்தொழுது
சந்தோசமா யோட்டாளன் சடுதியிலே ஓடுவானாம்
ஓடியே தென்காசி யூரும்பலதுங் கடந்து
ஆடிப்பாடி ஒட்ட னரியமுல்லை நிலங்கடந்தான்
முல்லைநிலம் பாலைநில முக்கிட்டு யிடுவைவிட்டு
வல்லபுகழ் மருத்துவத்தாள் வாழ்ந்திருக்கு மனைக்கருகே
ஒருநொடியில் தூதுவனு மோடியே சென்றவனும்
கருமேகம்போல் வளந்தகுத்துக் கல்லையவன் கண்டானே
கண்டுகல்லின் மேலிருந்து கணிகையாள் மருத்துவத்தை
வண்டனைய குழலாளை வாயார வேவிளித்தான்

## ஒட்டன் - மருத்துகம் உரையாடல்

. . . . . . . . கேட்டுகந்து மெல்லிநல்லாள் மருத்துவமும்
. . . . . . . . . .
ஊரேது பேரேது ஓடிவந்த கருமமென்ன
தென்காசி யாண்டிருந்த சேயிழை பொன்னுருவி
பொன்காசி யாளுதற்குப் புத்திரனால் தவங்கள்செய்து
வந்துகெர்ப்ப முருத்தரித்து வயிறதுமெய் நோவதினால்
கொந்தலருங் குழலேயுன்னைக் கூட்டிவர வனுப்பிவிட்டார்
அனுப்பிவிட்டா ரென்றபோதே யாயிழை யேதுசொல்வாள்
மனுப்பான தென்காசி வழமையெல்ல. . . .
தென்காசியர் மடவார் மெத்த சித். . . .
பொன்காசி பொலிக்கறியார் புளிக்கறிசோறு தரவறியார்
சத்தாகிலு மெண்ணைதாரார் தலைப்புண்ணாக்கு மில்லையென்பார்
வித்தார மானபெண்கள் வென்னீரைக் குடியுமென்பார்
குடியுமென்று சொல்வதல்லால் கொடுக்கறியாள் மனம்பொருந்தி
அடிபிடியாய்ச் சொன்னதுண்டா லன்னேரந் தான்கொடுப்பார்
தாராள மாகவும் சடுதியிலே யழைக்க வந்தாய்
வாராதே நானிருந்தால் மன்னனுமோ குறைசொல்லுவார்

. . . . . . . . . .மொழிதனைக் கேட்டு
சித்திடையாள் தனைநோக்கிச் செப்புவானாந் தூதுவனும்
ஒருகழஞ்சி பொன்னுமுதல் ஒன்பதுகழஞ்சி பொன்வரையும்
ஒ(ன்பதென்ற) போது மருத்துவத்தாள் ஊமைபோ லேயிருந்தாள்
பத்துக்கழஞ்சி யென்றபோது பாவையருஞ் சிரித்தெழுந்து
ஏனடாவா தூதுவனே என்ன (ே)ச) ாலி வருத்துகிறாய்
நானடா முதுகிழவி நடப்பேனோ தென்காசியில்
ஆனைமே லிருத்திவைத்து அசையாமல் கொடுபோவேன்
ஆனைமே லிருந்ததுண்டால் அசைந்துநா னிருக்கமாட்டேன்
குதிரைகொடு வந்துஒன்னைக் கொடுபோவேன் மருத்துவமே
குதிரையிலே யிருந்ததுண்டால் குலுங்கிநா னிருக்கமாட்டடேன்
பல்லாக்கு கொடுவந்து பதறாமல் கொடுபோவேன்
பல்லாக்கி லிருந்ததுண்டால் பதறிநா னிருக்க மாட்டேன்
மேனாநான் கொடுவந்து மெதுவாகக் கொடுபோவேன்
மேனாவி லிருந்ததுண்டால் மெலிந்துந(ா) னிருக்கமாட்டேன்)
இன்னமுண்டோ குறயுனக்கு யென்னோடே சொல்லுமென்றான்

## மருத்துவச்சி புறப்படல்

அன்னேர மருத்துவமு மளப்பாளி யிவனெனவே
கெட்டுப்பெட்டி தனையவிழ்த்துக் கெம்பிதமாய்ப் பிடவைதன்னைத்
திட்டமுட னெடுத்துடுத்துத் தீவிரமாய்ப் பிறப்பிடுவாள்
மக்கள்மரு மக்களுக்கும் வருமளவுஞ் சிலவுகளுக்குப்
பக்குவமே சொல்லாமல் பணங்காசி தான்கொடுத்து
கொத்தியாள்நெல் வாங்குதற்குக் கொட்டப்பெட்டி தனையெடுத்து
எல்லார்க்கும் புத்திசொல்லி யெழுந்துதலை வாசல்வந்தாள்

## எதிர்ப்பட்ட நற்சகுனங்கள்

வல்லபுகழ் மருத்துவமும் வாயொலியுந் தான்கேட்டு
. . . . . . . . . . . . . . . . . . . .
வால்நெடிய கருங்குருவி வலமிருந்து மிடம்பாய
நீலவிழி மருத்துவமும் நேரிழையு மேசிரித்தாள்
ஏதேது மருத்துவமே இப்போது சிரித்ததுதான்
போதுமோ கருக்குருவி பொதுவறவே யிடம்பாய்ந்தால்
வால்நெடிய கருக்குருவி வலமிருந்து யிடம்பாய்ந்தால்
கால்நடையாய்ப் போறவனுங் கனகதண்டிய லேறுவானே
மலங்காதே ஒட்டா மகனல்லவோ பெறுவாள்
கலங்காமல் தூதுவனுங் காரிகையுந் தானடந்து
செந்தலைக் கெருடன்வந்து சந்திரமாய் வட்டமிட்டு
இந்திரன்போல் இடம்பாய யேந்திழையுஞ் சந்தோசமாய்

தென்காசி தன்னிலவர் சிறுகன்னிகையா ளெதிரேவர
வன்காசி தன்னைக்கண்டோம் வந்தது நல்லதென்று
. . . . . . தெருவில் வருகையிலே
. . . . . . பொன்னுருவி கதறியழுங் குரல்கேட்டு
நடையிலே தானோடி நன்னுதலாள் மருத்துவமும்
சடையாதே மகளேயென்று தானுமீத்துப் பிரைபுகுந்தாள்

## மருத்துவத்தாளின் தேறுதல் மொழிகள்

ஈத்துப் பிரையிலே வந்தங் கிருந்தபொழுது
ஏந்திழையாள் மருத்துவத்தா ளேது சொல்வாள்
வாழ்ந்தீரே தென்காசிவூரு மடவாரே நீங்கள்
மக்களைப்பெத்து வளத்தீரோ மாநிலந் தன்னில்
பெத்து வளத்தவர்க் கித்தனைபுத்தி யுண்டானால்
பேறுக்கு வந்த மருத்துவத்தா ளேதுசொல்வாள்
சொத்துக்குப் பாலன் பிறக்கவே வேணுமகளே
தூங்குமஞ்சிசுத்திவ. . . நீ மலங்காதே யென்றாள்

## பொன்னுருவி பிரசவ வேதனையில் பேசுபவையும் மருத்துகத்தின் தேறுதல் மொழிகளும்

. . . . . லாளென்னும் பொன்னுருவித் தாயார் சொல்வாள்
தலங்கள் புகழும்பகபதி தன்னரு ளாலே
தான்காத்துக் கொள்வா யிதுவேளை யென்னையுந்தாயே
குதலை மொழியாரே நான்படும் பாட்டையுஞ்சென்று
கூறுவீ ரென்னுடை யண்ணருக்கு மன்னருக்கும்
மதலையில்லாம லிருந்தபே ரிங்கு மிலையோ
மன்ன னுரைக்கவுங் கேளாமலே மறுதேசம்
வாந்துவ மாகவே தென்காசி தன்னையுமாள
மகனுக்கு வேண்டிமெத்த வருத்தமு மானேன்
போந்துநான் பொன்னையும் வாரிச்சிலவு மிட்டேனே
பொல்லாங்கு யீதென நானறியேன் தாய்மாரே
வல்லமை யாகவேவூரில் மடவார்கள் சொன்ன
. . . . . . . . . . னென்று யிருந்தேன்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
முன்பிலும் நான்பட்ட பாடுபோலப் பாடுபட்டதாரு
மூதாக்கள் செய்த வினையோ யிதுவென் றறியேன்
அன்புள்ள தாய்மார்க ளுண்டா லருகிலிருந்து
ஆத்துமம் போகாமல் சேத்துப் பிடியுங்கோ யம்மா
சேத்துப் பிடியென்று பொன்னுருவித் தாயார்செப்ப

சிறந்த மருத்துவத்தாளு மிருந்தேது சொல்வாள்
நாத்திசை தன்னில் நடக்குமுறை தான்மகளே
நாடாளப் பாலன்பிறப்பான் மலங்காதே யென்றாள்
என்றமொழி தன்னைமெய் யென்றிருப்பே னான்தாயே
எடுபிடியாக வருகுது இருக்கொட்டு தில்லை
பாரிலுள்ளோர் படும்பாடு தனிலும் தன்ம
மாதுமார்க வருத்தினா னென்னைப் பிரமன்
பாடகந்தா னிட்டகர்லுந் தளர்ச்சை யாச்சு
பகபதியம்மா படும்பாடு பாத்து யிரங்காய்
தாடாள மாகிய நாக்கு ஒலருது காரே(ண)
. . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . தன்னிலே சாய்ந்து
சிறுவன் பெறயினிச் சீவனுமில்லையே யென்ப(ர)ள்
அமுது தொழுதவ ளாலோசனைப் படும்வேளை
ஆயிழையாள் மருத்துவத்தா ளேது சொல்வாள்
பழுது வாராமலே தென்காசி தனையுமாள
பாலன்பெறுவாய் பதறவும் வேண்டா மினித்தான்
குத்தமு மில்லையேநற் குணமாகப் பெறுவாய்

## மருத்துகத்தின் கூற்றும் பொன்னுருவி கருவுயிர்ப்பு

கொத்தியார் நெல்லு குறுணியளந் திங்கேவையும்
பிற்றார் மான மடவார்சில பேர்கள்கூடி
விரவுடன் நெல்லை யளந்தவள் கையில் கொடுத்தார்
கொடுத்திடும் நெல்லை யடுத்தவள் வாங்கிக்குமித்து
குளுந்து மனமது சந்தோச மானபொழுது
எடுத்தகரும மியல்வா யிருக்கணு மென்ன
எண்ணையை யோதி மருத்துவத்தாளுங் கொடுத்தாள்
. . . . . . . . . . . . . . . . . .
உடலேற மிஞ்சின எண்ணைத் துவாலைக ளிட்டார்
மாது நல்லாளுக்குக் கெர்ப்ப முருவாய் வளந்து
மைந்தன் பெறுவதற்காகவே பேறது காண்
காணும் பொழுதிலே பொன்னுங்கலங் கேட்டுவாங்கி
காரிகையந்த மருத்துவத்தா ளங்கு வைத்தாள்
பூணுமட வார்கள்கூண்டு குரவை யொலிக்க
பொன்னின் கலத்தில் புதல்வன் பிறந்தனராம்

## பிறந்தபின் நடந்தவை

பொன்னின் கலத்தில் பாலன்பிறக்க பூவையர்கூண்டு குரவை ஒலிக்க மன்னவர்கள் சந்தோசமாக யிருக்க மத்துள்ள அன்னியத்தோரு மகிழ

மகிழ்ந்தங் கிருக்க. . . வளை. . . டயுந்துரை மக்களுங்கூடி
அகமகிழ் பாலன் பிறந்தானே யென்ன யாரபாரித்து வெடிகளிளக்க
வேடிக்கையான மடவார்கள் கூடி வேண்டும்(வண்ண)ம் பாலனைப் பெத்தாளே யென்பார்
நாடித் தவங்களை மோடியாய்ச் செய்து நாடாளவென்று பிறந்தாளே யென்பார்
. . . . பொன்னுருவித் தாயா ரிசங்கப்பழம் போலே பெற்றாளே யென்பார்
. . . . . . . . மாணிக்கம் போலவே பெற்றாளே யென்பார்
. . . . . . . . . . . .
மஞ்சளெடுத்துக் கொடுக்க வொருத்தி மஞ்சளரைத்துத் திரட்ட வொருத்தி
சாலிலே மஞ்சக்கலக்க வொருத்தி தட்டிக்கவுத்துப் போட்டோட வொருத்தி
வாலப் பிராய மடவார்கள் கூடி வறட்டுக் கிழவியைச் சேட்டை யடிக்க
ஒருவீட்டுக் குண்டணி யென்பதுவீட்டி லோடியே குண்டணி சொல்ல வொருத்தி
மருவணி பூங்குழல் பொன்னுருவித் தாய்க்கு மலடியென்றசொல் லேச்சும் போச்சே
இப்படி மங்கையர் நிக்கிறவேளை யேந்திழையாள் பொன்னுருவி தனக்கு
சிறந்த மருத்துவத்தாளு மப்போது சேயிழை யாள்தன் மயக்கமுந் தீத்து
. . . . மடவார்க ளெல்லோரும்
அன்பாக நின்று மனது மகிழ
பூரண கும்பத்தில் வெள்ளந் தெளித்து
பிள்ளையைக் கொப்பாடை நீக்கி யெடுத்தாள்
காரண மாகிய பாலகன் றன்னைக்
கையில் வைத்து முழுகாட்டி நீராட்டி
மெய்ப்புடன் பாலகனுக் கந்த நேரம்
மின்னாள் மருத்துவத் தாளு மகிழ்ந்து
செப்பத் துடனே கொப்பு லிளக் (க)
சிறந்த மட(வார் குரவை) யு மிட்ட (ார்)
. . . . . தன்னில் பாவையர் கூண்டு பொலிவு பொலித்தார்
பொன்னாலே முத்துப் பொலிற்றா ளொருத்தி புட்ப ராகத்தைச் சொரிந்தா ளொருத்தி
தன்னா லியன்றது யின்னாரு மென்ன சந்தமிக்காசி பொலித்தா ளொருத்தி
ஒன்று மில்லையே யென்றுதான் சொல்லி யொருகோட்டை நெல்லுப் பொலித்தா ளொருத்தி

கற்றோரு மின்னாரும் விண்டு சொல்லக் கைநிறையப் பணம்வாரிச்
சொரிந்தாள்
பட்டத்துக் கேத்த மதுரைப் பணமு மாணிக்க முத்து மடவார்
(பொலித்தார்)
திட்ட முடன்சில பெண்கள் தான்வந்து திருனாக் கரையும் நெல்லும்
பொலித்தார்
மதலைபிறந்த மகிட்சையி னாலே மன்னரூ மேதானம் பொன்னைக்
கொடுத்தார்
குதலை மொழியாள் மருத்துவத் தாளுங் குளுந்து மனமது சந்தோசமாக
பொலித்தாள் கலத்தி லொருத்தி யன்னேரம் பொன்னுந் திருவாழி
மோதிரந் தன்னை
கலியம் பணமொரு முன்னூ றெடுத்துக் கலத்திலேவந்து பொலித்தா
ளொருத்தி
ஆளிட்ட காசியும் வில்லிட்ட காசியும் அவரவர் வந்து பொலித்ததை
யெல்லாம்
. . . . . . . வேல்விழியாள் ம. . . வாரிக் குமித்தாள்
விந்தைபெறு சந்தமிக்காசி விராகன் வெள்ளி ஒருபொன்னு மதுரைப்
பணமும்
சந்தோச மாகவே பொட்டகந்தன்னில் தானே யடைத்தவள் முத்திரி
யிட்டாள்
மானான மருத்துவத் தாளு மகிழ்ந்து மத்துள்ள பண்ட மெருத்தி
லடித்தாள்
போனாள் மருத்துவஞ் சாத்திரை கேட்டுப் பிறகாலே யேழு சிமடதுங்
கொண்டு
வந்த மருத்துவஞ் சந்தோசமாக வாயதி பொத்தி மனைதனில் போனாள்

## குழந்தைச் சீராட்டு

திருந்துபுகழ் மருத்துவத்தாள் போனபோது தென்னரு தேவியென்னும்
பொன்னுருவித் தாயார்
வருத்தமெல்லாந் தீர்க்கவந்த மகனார்தன்னை மங்கைநல்லாள்
பொன்னுருவித் தாயாரு மகிழ்ந்து
ஆசை மகனை யெடுத்துப் பாசமாய்ப் பாலூட்டி
அளவடை யானதோர் பட்டாடையில் கிடத்தி
நேசமுடன் பாலனுக்குச் சேனையும் புகட்டி
நித்த முச்சிபொத்தி யெண்ணவைத்து முழுக்காட்டி
வெம்புமத கரியானைக் கொம்பது க(ை)டந்து

. . . . . . . . . . . . .
செப்பமுட னேமுகித்து வச்சிரம தாக
வச்சிரம தாய்முகித்த மாணிக்கத் தொட்டிலில்
வள்ளல்மக ராயனுட பிள்ளையைக் கிடத்தி
அச்சிமா ருடனேயிளந் தாய்மாருங் கூடி
அம்மை பொன்னுருவி பிள்ளைதன்னையுந் தாராட்டு வாராம்

## தாலாட்டு

ராராரோ ராராரோ ராராரோ ராராரோ
மலடி மலடியென்று வையகத்தார் சொன்னதுக்கு
மலடியென்ற சொல்தவிர்க்க வந்துபிறந்ததோர் மாணிக்கமோ
இருசி இருசியென்று யென்னினத்தோர் சொ(ன்னதுக்கு)
இருசியென்ற சொல்தவிர்க்க யின்பமுடன் வந்த கண்மணிே(யா)
ஆகமெல்லா மிகத்தளன்று அன்புடனே யிருக்கையிலே
பகபதியாள் திருவருளால் பரிவினுட னீன்ற கன்றோ
பொன்காசி யாளுதற்குப் பூவுலகில் தவங்கள் செய்து
தென்காசிப் பகபதியாள் சிவனருளித் தந்த மகனாரோ
பச்சமுட னுச்சிதமாய்ப் பாலகன் பிறந்தானோ
பரிவினுட னிருபத்தேழு நாளான
. . . . . . . விட்டு மகனே திருவனந்த புரம்வரையும்
வன்காசி யாளுதற்கு மகனே-உன்னை
வருந்திநான் தவசிருந்து
ஒருபலனுங் காணாமல் என்மகனே
உடையோன் விதிப்படி யெனவே
திரும்பிவரும் வேளையிலே - என் மகனே
செல்வியொரு குறமகளும்
கொல்லிமலைச் ச(ா)ரலின் - என்மகனே
கோவிலரு காகவந்து
நல்லகுறி சொல்லி என்னை -என்மகனே
நாடனுப்பி விட்டாளே
பகபதிகோவில் கெட்டிநீ பவுசுட்னே திருவிழாவும்
அகமகிழ்ச்சை யாய்நடத்தி ஆண்குழந்தை பெறுவாயென்றாள்
அழகுடைய மகளேதா னருளினசொல் தப்பாமல்
களங்கமில்லாக் (குறத்தியவள்) கருதினசொல் தப்பாமல்
பூசைசெய்து பகபதிக்கு (புகழான) கோவில் கெட்டி
ஆகமெல்லா மிகத்தளன்று அன்புடனே யிருக்கையிலே
பகபதியாள் திருவருளால் பரிவினுட னீன்றகன்றோ
பொன்காசி யாளுதற்குப் பூவல. . . செய்து

தென்காசிப் பகபதியாள் சிவனருளித்தந்த மகனாரோ

## மாமன் சீவலமாறனின் சீர்

பச்சமுட னுச்சிதமாய்ப் பாலகன் பிறந்து
பரிவினுட னிருபத்தேழு நாளான போது
இச்சையுடன் செண்பக ராச மன்னனுக்கு
இயல்வுடைய சீவலமா ரா (சேந்) திரனுஞ் சொல்வார்
. . . . . . . ட்டும் பூங்குழலாள் தங்கையவள் பெத்த
மருமகனுக்கு யிருபத்தெட்டு கெட்டவேணு மென்ன
பருவட்டமுங் கொடுத்து ஒட்டனை அனுப்பி
பக்கவூரி லுள்ளதுரை மக்களை வருத்தி
இருத்தியே வுபசரித்து மன்னவ ரன்னேரம்
பொரு (த்தமு)ஞ் சோதிரமும் மேல்நாளும் பார்த்து
பிள்ளைதன்னைப் பொன்னுருவி யம்மைகொண்டு வந்தாள்
ஆலமுண்டோன் தன்னருளால் பாலகன் தனக்கு
ஆனதங்கத் தாலிருபத் தெட்டுகெட்டி னாரே
சேலான கிண்கிணி நூல்புரஞ் சதங்கை
செம்பொன்னால் கெச்சைமணி யாரமு மணிந்தார்

## திருப்பெயர் சூட்டல்

பரராசன் செண்பக ராசனந்த நேரம்
பாலகன் தனக்குநல்ல பேர்விட வேணுமென்றார்
வள்ளலெனுங் குடைக்கரத்தான் வடிவன் செண்பகம ராசன்
பிள்ளைக்கினி யாருடைய பேரிடுவோம் நாமென்றார்
சேரசோழ பாண்டியர்கள் திருநாமப் பேரிடவோ
பாருலகை யாண்டிருந்த பழய ராசாக்கள் பேரிடவோ
பூமன் செயலால் பிறந்தபிள்ளை மகராசனுக்கு
மாமன்மகன் பேரிடவோ மச்சினத்தார் பேரிடவோ
ஆருடைய பேரிடுவோ மழகுசிறு பாலனுக்கு
சீருடைய மன்னவர்கள் (தேர்)ந்துபாத் தேதுசொல்வார்
சிவமருளித் தந்தமகன் சிவனணைஞ்ச பெருமாளென்றார்
பவனமதி லுள்ளோர்கள் பாவித்து மனமகிழ்ந்து
இட்டதொரு பேர்தனையும் எல்லோருந் தான்விளித்து
கட்டான மாளிகையில் (கருத்து)டனே தானிரு(ந்தார்)
. . . . . . . . னுமுத்து மவரவரே வரிசை செய்து
நீளிப்ப முரையார்தங்கள் நிலைபதி தன்னில் போனார்

## குழந்தை ஐந்து வயதடைதல்

போனபொழுதிலே பொன்னுருவி யென்னுந் தாயார்
பிள்ளையைத் தொட்டிலில் மேலேகிடத்தித் தாராட்டி
மாமனார் குழந்தை வளரவே நாளும்பொழுதும்
வாப்பிலே வாத்து வகுத்திடுஞ் சித்திரம்போலே
சித்திரம் போலே சிவனணைஞ்ச பெருமாளும்
செப்பத்துடன் தள்ளை தன்முகம் பாத்துச் சிரிக்க
உத்திரமா யுடும்பாடி யுருண்டு புரண்டு
ஊந்து தவழ்ந்து விளையாடிப் பிள்ளைவளர
சப்பாணி கொட்டித் தவழ்ந்துதள்ளி நடையிட்டு
தாக்குடன் பிள்ளை சடத்துடனே நடக்க
பொற்பணி யாபரண முத்துமாலை யணிந்து
பிள்ளைவளந்து திருவய தொன்றான போதே
ஓரிரண்டான வயதி லணைஞ்சவ ராசர்
ஊரெல்லாஞ் சுத்தி யுடனேவர வேணுமென்ன
. . . . . . ணஞ்ச பெருமாளுக்கு
. . . . . . ஈறர்களாக சிறுக்கரை விட்டு
. . . . . . படையை யணியாய் வகுத்து
வேண்டுமண்ணந் தெருச்சுத்தி விளையாடு வாராம்
வாசம் புகழ்கின்ற மன்னணைஞ்ச பெருமாள்
வளந்து திருவய தஞ்சுபருவம தானார்
தேசம் புகழும் சிவனணைஞ்ச பெருமாளை
செண்பக ராசனு மன்பாகக் கண்டுமகிழ்ந்து
மகிழ்ந்தவர் சீவலமார்பன் மன்னவ னுடனே
மன்னவன் செண்பகராசனு மேதுசொல் வானாம்
புகழ்ந்திடவே யந்தப் பொன்னணைஞ்ச பெருமாளுக்கு
புத்தியுடனே பலகல்வி வருத்தவேணு மென்றார்

## இருள்சுவாமி வரலாறு

தென்காசி யடுத்த சிறந்த குத்தாலத் தூரில்
அன்பர்தன்னை காரங்காட்டா ரழகுவம்மிசந் தனிலே
அம்மையப்ப பிள்ளையுட ஆயிழையாள் தாயிஅம்மை
வம்மிசங்கள் தழைப்பதற்கு மதலையில்லை யென்றுசொல்லி
திருநெல்வேலி நெல்லையப்பர் சுவாமியென்றே தவசிசெய்து
மருவனைய குழல்மடவாள் மங்கைநல்லாள் தாயியர்க்கு

பிள்ளையது கொடுக்கவென்று பிரிசமுட னெழுந்தருளி
கயிலை . . . . கணக்கெழுது
கட்டான நயினாரை வருத்திவைத்து நெல்லையப்பர்
மங்கை நல்லாள் தாயி யார்க்கு
சந்ததிக ளுண்டோவென்று தான்பாருங் கணக்கையென்றார்
பாருமென்று யிவருரைக்கப் பார்த்தவரு மேது சொல்வார்
தாயிஅம்மை யானவளுக்குச் சந்ததிதா னில்லை அய்யா
என்றுசொல்ல நெல்லையப்பர் எடுத்துரைப்பா ரிவரோடே
. . . . . . மையவள்தான் வருந்துவதி னாலே
. . . . . . கொடுக்க வேணும் அழைத்திடுவீர் பிரமாவை
. . . . . . பேசிடுவார் நெல்லையப்பர்
குத்தாலத் தூரதிலே கோதை நல்லாள் தாயியார்க்கு
பாலனில்லை யென்றுசொல்லிப் பாவையரும் வருந்துகிறாள்
ஆனதினா லோர்குழந்தை அன்புடனே செனியு மென்றார்
நெல்லையப்பர் சொல்லதுவை நெறுத்திவைக்கக் கூடாதென்று
திருக்கூட்டந் தனிலிருந்த தேவர்களில் ஒருவரைத்தான்
பாலகனாய்ச் செனித்துவிட்டுப் பதித்துக்கொண்டார் கணக்கதிலே
மூணுபத்து ரண்டுவயது முகித்துவிட்டா ரிவர்தனக்கு
செனித்துவிடப் பிரமாவும் தேவிநல்ல தாயிவயித்தில்
மங்கை நல்லாள் கெர்ப்பமுத்து மாதம்பத்துந் தான்திகைந்து
பாலனையும் பெத்தெடுத்துப் பாவினையாய்ப் பேர்கூற
ஈசுரன் நெல்லையப்பர்தந்த இருளப்ப னென்றுசொல்லி
கண்ணான பாலகனைக் கட்டுடனே தான்வளத்தார்
அஞ்சான வயததிலே அரிஓம் பலதும் வருத்தி
அப்பியாசம் அடவுமுறை அறிவாக (த் தான் படித்தார்)
. . . . . . படித்தா ரிருளப்பரும்
. .(ச)ாலவித்தை எல்லாம் படித்தார் பின்னாலே
. .(கூ)டுபாயக் கூர்மையுடனே படித்தார்
(எல்)லாம் படித்து யிருளப்பரும் இருந்தார் குத்தாலந்தனிலே
(குத்தால)ந் தன்னி லிருளப்ப னாயானிருக்க
கொடி படையுள்ள சீவலமாறனுஞ் சொல்வார்

## கல்விக்குரிய ஆசானைத் தேர்ந்தெடுத்தல்

அன்பான தங்கை பெத்திடும் பாலகர்க்கு
அறிவு வருத்த அண்ணாவிவேணு மென்றாரே
வருத்தி திருத்தமதாகப் படித்துக் கொடுக்க

வாத்திமைக் காரினியென்று வுரைத்தாரே மன்னன்
கருத்தாகச் செண்பக ராசனுஞ் சொன்ன பொழுது
காவலன் சீவல மாறனுஞ் சொல்வார்
அண்ணாவி யென்றுநாட்டி லநேகம் பேருண்டு
அறிவுக் கிருளப்ப னாசானைப்போல் காணாது
பண்ணான கல்வி பலதும்வருத்திக் கொடுக்க
பண்பா யிருளப்பனாசான் (வர) வேணு மென்றார்

## பல வித்தைகளும் பயிலுதல்

என்ற மொழிதன்னைச் சீவலமாறனுஞ் சொல்ல
இயல்வுடன் செண்பக ராசனு ஓமென் றிசைந்து
நன்றென்றே னிருளப்ப னாசான் தனையும் வருத்தி
நாளுந் திவசமுங் கேட்டவர் பள்ளியில் வைத்தார்
நீள்அரிவிரி கொன்றை வேந்தன் முதலாய்
. . . . . ண்டு ஒருச்சொல் படித்தார் அணைஞ்ச பெருமாள்
(படித்)தார் பதினெட்டு பாசைக் கிசைந்த வடிவும்
(பட்ட)ாணி பாசையும் கட்டானதெலுங்குங் கத்தாரே
(பா)சை பதினெட்டும் படித்துக் கொடுத்து யிருளன்
. . . . . (ஆ)யுத வித்தையுஞ் சொல்லிக் கொடுத்தார்
. . . . . . ங்கரி யேத்துஞ் சொல்லிக் கொடுத்து யிருளன்
படித்துக் கொண்டாரே அணைஞ்சவ ராசனு மப்போ
இந்திரமா ஞால தந்திரமெல்லாம் படித்து
இன்பமாய்க் கூடுவிட்டுக் கூடுபாயப் படித்தார்

## ஆசான் பெற்ற சன்மானம்

எல்லாம் படித்து யியல்வாக வந்ததின் பின்னே
இருளப்ப னாசானைச் செண்பக ராசன் வருத்தி
நல்ல பதக்கனு மோகனமாலையு மீந்து
நாற்பத்து கோட்டை நிலமும்விட்டுக் கொடுத்தாரே
காவலவன் வல்ல சீவலமார்பன் மகிழ்ந்து
கைமுழுகிட்ட னிருளப்ப னாசான் தனக்கு
ஆவலுட னெல்லோரும் வெகுமானஞ் செய்ய
அன்பா யிருளப்ப னாயானும் வாங்கியே போனார்
போத்தியென் னாளும் வாத்தியே கைக்கு மெறுத்தி
ஆவலுடனே யென்னாளும் ஆயானுங் கூட
அணைஞ்ச பெருமாளை வாத்தி யருகே. . . .

. . . . . . (மாட)ப்பூத் தலைவன் தேவி
மந்திரப்பூ மாலையம்மை மதலையினால் வருத்தமுத்து
முத்தநயினார் சுவாமிகோவில் முழுமனசோடே யிவளும்
தவசிருந்தாள் பூமாலை சந்ததிதான் வேணுமென்று
பெண்கொடியாள் தவசிரங்கப் பெரியநயினார் மனதிரங்கி
கணக்கதுவைத் தான்பார்க்கக் கன்னியர்க்குப் பிள்ளையில்லை
என்றுசொல்லிக் கணக்கிருக்க யீசுரரோ டேதுசொல்வார்
மணி(க்)காஞ்சி நாடதிலே மந்திரப்பூ மாலையவள்
சந்ததியா லெனைநோக்கித் தவசிசெய்து வருந்துகிறாள்
ஆனதினா லொருகுழந்தை ஆதிசிவனே கொடுக்கவென்று
கணக்கதுவை நான்பாத்தேன் கா. . . . க்கு குழந்தையில்லை
எப்படியு மீசுரரே யேந்திழைக்கு ஓர்குழந்தை
கொடுத்து எந்தன் பேர்கேட்கக் கோவேநீர் செய்யவேணும்
என்றுசொல்லி நயினாரும் ஈசுரரைத் தொழுதுநிக்க
நயினாரை முகம்நோக்கி நாயகனா ரேது (சொல்வார்)
கணக்கதிலே யில்லாவிட்டால் கைலைவட வாசலிலே
வணக்கமுடன் காத்துநிற்கும் வன்னிய ராசனையும்
இணக்கமுடன் பிறவிசெய்து ஏந்திழைக்குக் குழந்தையதாய்க்
கொடுமெனவே சிவனார்சொல்லக் குழந்தையதாய்ச் செனிப்பதற்கு
பிரமாவைத் தான்வருத்திப் பிள்ளையதாய்ச் செனிக்கச்சொல்லி
வன்னிய ராசனையும் மாநிலத்தில் மனுவாக
அனுப்பிடவே நயினாரும் அணுக்கணக்கில் வயசெழுதி
நாலாறு வயசெனவே நமன்கணக்கிலு மெழுதி
பாலர்பலமு மிவர்கணக்கில் பதி. . . . க்கெடு பாலகனாய்
மாநிலத்தி லேயனுப்ப மந்திரப்பூ மாலையவள்
நயினாருட கிருபையதால் நாயகிக்குக் கருத்தரித்து
கருத்தரித்து உருவளந்து காரிகைக்கு மாசம்பத்தும்
திகைந்து. . . சேயிழையு மீன்றெடுத்தாள்
ஈன்றெடுத்தார் பாலனுக்கு எல்லோருந் தானறிய
காரணவர் பேரெனவே கண்டவர்கள் மனமகிழ
வன்னியப்பூத் தலைவரென்று வகுத்துவிட்டார் பேரதுவை
எல்லோரும் பேர்விளித்து இன்பமுட னேவளர
அஞ்சான திருவயதி லறிவுபலதும் வருத்தி
செஞ்சொல்லால் நால்வேதந் தேர்ந்தபுகழ் வாத்தியனை
வருத்தியவர் தான்படித்து வகைதுகையுந் தானறிந்து
திருத்தமுடன் ஆயுதவித்தை சிறப்புடனே தான்படித்தார்
பரியேத்துங் கரியேத்தும் பாவினையாய்த் தான்படித்தார்

பாசைபதி னெட்டுகளும் படித்தார் வன்னியத்தேவர்
இந்திரமாஞாலம் தந்திரவித்தை எல்லாம்படித்தா ரிவரும்
படித்திருக்க யிவர்தனக்குப் பதினாறுவய தானபோது
அனைபேரு மனங்கலங்கி அழகுவன்னியத்- தேவன்
இனவருடன் தான்கூடி யிருந்தரசு செய்யும்நாளில்

**வன்னியத்தேவனைப் பதவி தேடிவரல்**

தென்காசித் தேசத்தைச் சீவலமார்பனு மாண்டு
சிறப்பாக உடயாரை மந்திரிக்காக யிருத்தி
தேசத்தில்பல சட்ட வட்டங்களுஞ் செய்து
செல்வமாய்த் தேசத்தை யாண்டிருக்கின்ற நாளில்
மணிக்காஞ்சி நாட்டிலே மாடப்பதேவன் மகனை
வருத்தி யொண்டா மந்திரிக்காக யிருத்த
திருவுளமான தின்பின்னா லுடையார் மகிழ்ந்து
சீக்கிரமாகச் சுருட்டோலை ஒன்று எழுதி
மன்னரடையாளம் வைத்தஉடன் ஓட்டன் வாங்கி
மணிக்காஞ்சி நாட்டிலே வன்னியத்தேவனைத் தேட
வேட்டைக்குப் போய் விட்டாரென்று பேர்கள்சொல்ல
விரவுடன் ஓட்டனும் வேட்டைத்தலம் வந்துசென்றான்
காணும் பொழுதிலே பாசத்தில் நாயைப்பிடித்து
கையிலே கோணத்தடியொன்று ஊணியே நிக்க
இடுப்பதில் கச்சையிறுக்கியே கேடயம் சேர்த்து
இனமான சமுதாடு கையதி லொன்றுயிருக்க
தலைமீதில் கொண்டையும் கிருதாவும் மீசையுமாக
சந்தமாய்க் கண்ணுமுகமு மிருப்பது கண்டு
பயந்தந்த ஓட்டனும் ஓலையை நீட்டியேநின்று
பதறிப்பதறிப் பயந்தவன் செய்தியைச் சொன்னான்
ஓலை கொடுக்கவும் வன்னியத்தேவரும் வாங்கி
ஓட்டனு மிவரும் மணிக்காஞ்சிக்குப் போகவென்று
வேட்டையை விட்டு விசையா நடந்தந்தத் தேவன்
மெய்யாகத் தந்(தை)த தாயாரையும் வந்து தொழுது
எழுத்திலிருந்த செய்திக ளெல்லா மொரைக்க
எனமுறை யார்களு மெல்லோருங் கூடியே சொல்வார்
நலமான செய்திக்கு மந்திரியாய் வாரேனென்று
. . . . . . . . . . மொன்று எழுதி அனுப்பி
மந்திரியென்று மகிழ்ச்சி யுடனே வரவே
வண்ணப் புரவியுஞ் சேனைத் தளங்களும் வேணும்
வாச்சியங்கள் பலதும் அனுப்பியே கூட்ட

மந்திரிக்காக யிருத்திக் கொள்ள வேணுமென்றும்
சந்த முடன்மறு சாதனமொன்று எழுதி
தாராளமாய் ஒட்டன்கையில் கொடுத்தனுப்பி னாரே
அனுப்பிடும் ஓலையை வாங்கியே பார்த்து
அன்னேரம் ராசனுஞ் சந்தோச மாகி
தன்மான மந்திரி கூட வரவே
தளங்களைச் சேகரித்து விடச் சொன்னார்
அப்போது மந்திரி உடயார் மகிழ்ந்து
ஆனைபரி சேனைத் தளங்களும் சேர்த்து
வேண்டு மண்ணம் விருதொரு வாச்சியம்
வித்தாரமா யுடையார் சேகரித்தார்
சேகரித்த படைசன முன்னிக்க
திருவுள மானார் சேர்ந்திடு மரசன்
மந்திரி வன்னியத் தேவனைக் கூட்டி
வரவேணு மென்று விடையுங் கொடுக்க
கிட்டென வாச்சிய முன்னே நடக்க
சேனைத் தளங்கள் பின்னே வரவே
வண்ணப் படையுடனே மணிக்காஞ்சி நாட்டில்
வன்னியத் தேவனைக் கண்டு தொழுது
வண்ணப் பரியை முன்னே நெறுத்தி
வாழ்த்திப் பரிதனி லேறவே சொன்னார்
சொன்னது கேட்டு வன்னியத் தேவன்
துரிசமாய்ப் பொட்டகந் தன்னைத் திறந்து
வண்ணச் சரப்பளி யெடுத்தே அணிந்து
வாய்த்திடுங் கையதில் தாயித்துக் கட்டி
கழுத்தில் குவளை மாலை யணிந்து
காலினில் தங்கச் சிலம்பதும் பூண்டு
இடுப்பினில் தங்க அரஞாணும் சேர்த்து
இன்பமா காதில் கடுக்கனு மிட்டு
அரைதனில் நாராயந் தன்னையுஞ் சேர்த்து
அழகுடன் வன்னியத் தேவனு மப்போ
திட்டெனவே சீலை பொட்டலந் தன்னைத்
திறந்து யெடுத்து உருமாலுங் கெட்டி
கச்சையிட்ட சட்ட மார்பிலே போட்டு
காந்தமாய் உடுப்பது மிட்டு
மேலுக்கு வீராளி பட்டும் உடுத்து
மெதுவான ரேசியுங் கையில் பிடித்து
மூத்த நயினார் கோவிலில் வந்து

முழுமன தோடே தொழுது யிரங்கி
ஆசாரமாய். . . . . . .
அழகுமா வன்னியரும் நடந்தாரே
நடந்தார் சடுதியிலே நயினாரைமனதில் மிகநினைத்து
துடந்த பெரும்படையும் சுத்திவரும் சேனையுங்கூட்டி
மணிக்காஞ்சி நாட்டிலுள்ள மாக்குலங்கண்டு வழியனுப்பி
அணிஅணியாய்க் கடந்து அழகுமணிக்காஞ்சி நாடும்விட்டு
பரிமீதிலேயேறி பவுசு வந்ததென்று மனதிலெண்ணி
சரியான வாத்தியமும் தானேமுழங்கி வெடிக்குமுன்
தென்காசிதா னடுத்துவருவதை சீவலமார்பனுந் தானறிந்து
வன்காசி யூரிலுள்ள மனுதர்பலபேர்க ளத்தரையும்
உடையாரையு மனுப்பி உத்தமனை யெதிர்கொள்ளு மென்றார்
திடமாய் உடயாரும் திரண்டபடையுடன் எதிர்கொள்ளவே
சேர்ந்தா ரிருபேரும் சிறப்புடன் கைப்பிசந்து மினவி
வந்தார் தென்காசிதன்னில் மாவன்னியன் வந்தாரே
மாத்தானை வெல்லும்வீரன் மறவன்னியப் பூத்தலைவ ரிவர்தான்
சொல்லுவ தேதுபெண்கா வழகிலே சோமனோ கஞ்சனோ சுந்தரனோ
மல்குவளை புயத்தான் வடிவிலே வன்னியத்தேவனை வெல்லொண்ணாது
இலகுவ தெப்படியோ யென்னைச் சேரானோ யிவன் வாரானோ
புல்குவ தெப்படியோ புலிபோலே போறானே மந்திரிக்காய்
ஆக முருகுதய்யோ அருச்சுனன் போலொத்த ஆளிவர்காண்
தாகந் தருகுதய்யோ இச்சமயத்தி லென்னை மருகானோ
அணியா பரணமதை வன்னியர் பாத்துக்கொண் டிருகண் பூத்துக்கொண்டு
துணிவாய் மிகநடந்தார் சூரத்தினுட னாரபார மதாய்
தென்காசி ஆள்கைசெய்யும் சீலவமார்பனை யுந்தொழுது
வன்காசி தன்னிலே தான்வந்து மந்திரியா யிருந்தார்

## வன்னியத் தேவனின் சூழ்ச்சி

இருக்கின்ற நாளையில் மந்திரிவன்னியத் தேவன்
எண்ணங்க ளெல்லாங் கள்ளமாக வேநினைத்து
உடயாரைக் கொல்லவே உள்ளத்தி லெண்ணி நடந்து
உறுதியாக வரசனிடத்தில் குமண்டைகள் சொல்லி
பலநாளும் உடயாரைப் பாங்கமாய்க் கொல்லணுமென்று
பாவினையாக நடந்ததை யாரு மறியார்
தேசத்தை யாள்கின்ற சீவலமார்ப னொருநாள்
திருவாழி கழத்தியே யெண்ணைக்காப்பு சாத்தும்நேரம்

ராசனுக் கெண்ணைக்காப்பு சாத்துகின்ற நேரம்
நல்லதிரு வாழிதன்னைக் கழத்தியே வைக்க
கழத்திடும் வாழியைக் கண்டுமறவ னெடுத்து
காணாம லுடையாருட வாளுறைக் குள்ளே
திருவாழியைப் போட்டுச் சிக்கென வாளதைப் பூட்டி
தெருவி லிறங்கியே வீடதிலே யவன்சென்றான்

## உடையார் மரணம்

அன்னேரங் காப்புக் கழித்தவுடன் உடையாரை
அழகுள்ள வாழியை யெடுத்துவர ராசன் சொன்னார்
சொன்னது கேட்டு உடன்வந்து வாழியைப் பார்க்க
சொகுசுள்ள வாழியைக் காணாம லேமுகம் வாடி
மன்னவன் சீவலமார்பன் முன்னதில் சென்றார்
வாழியைக் காணோமென்று மறுகியே சொன்னான்
. . . . . . . . . . . . . .
மாயமதாய்ப் போனவாழி கிடைத்ததோ வென்றார்
வாழியைக் காணாமல் போ வாளு(த) லுடையார்
வரப்போகக் காணோம் என்றிவர் பேசியே நின்றார்
வல்லபடியே உடையாரை யிங்கே வருத்தி
வாளுறை தட்டவே வாக்கருள வேணுமென்றார்
மன்னவன் சீவலமார்பன் மனது சடைத்து
வாவென மந்திரி உடையாரை யங்கே வருத்தி
அருகினில் நின்றவ ரெல்லோருங் கண்டுமகிழ
அழகுள்ள வாளைஉருவி ஒறைதட்டச் சொன்னார்
சொன்னது கேட்டு உடையார் மனதுகலங்கி
சுருக்காக வாளை உருவியே ஒறைதட்ட
பொன்போலே வாழிகீழே விழுந்ததைக் கண்டு
புகழான சீவலமார்பன் மனது சடைத்து
. . . . . . . . . . . . . . . . . . .
சடைத்து இருக்க உடையார் மனதுகலங்கி
சட்டப்படியே கழுவதில் போட்டிடு மென்றார்
என்ற மொழி. . . . னென்று கேளாம லரசன்
ஏறிட்டுப் பார்த்திருக்கின்ற சாடை யறிந்து
திட்டமாய்க் கழுவதைத் திடலதில் நாட்டிடச் சொல்லி
சீக்கிரஞ் சேவுகர் கழுவுந் திடலதில் நாட்ட
இஷ்டமதாக யிறக்க உடையாருஞ் செல்ல
இன்பமான சீவலமார்பன் விலக்கி யிருக்க

திருவுளத்தின் வாழிதானே திருடின தாலே
சீக்கிரமாகக் கழுவி லிறந்து விடுவேன்
ஆருதடுத்தாலுங் கேட்டிட மாட்டேனே .யென்று
அரனா ராணை நீங்கள் தடுக்கவும் வேண்டாம்
என்றவன் சொல்லிடவே சீவலமார்பனுங் கேட்டு
இரங்கி மனதுகலங்கியே மண்டபஞ் சென்றார்
சென்றவுடனே உடையார் திடலதி லேறி
சீக்கர மாயவர் கையினால் (மா) ண்டிறந் தாரே

## வன்னியத் தேவன் சிவனணைஞ்ச பெருமாளின் மந்திரியாக மாற்றப்படல்

உடையா ரிறந்திட்ட பின்னாலே சீவலமார்பன்
உத்த செய்தி. . . . . . சடைத்து
இந்தப் படியாய் உடையாரைக் கொன்ற தலைவன்
இனிமேல் எனக்கு மந்திரி யாகவே வேண்டாம்
மருகனிளவர் மந்திரியில் லாதிருக்க வையகந் தன்னில்
முறைமையில்லை யென்று சொல்லி
வன்னியத் தேவனை மந்திரியாக அனுப்பி
மருமகனார்க்கு நீட்டு கொடுத்து விட்டாரே
செல்ல சிவனணைஞ்ச பெருமாளிடம் வந்து
செய்யும்மு. . . . கன் மந்திரியாகவே செயித்தார்
தயவுள்ள சிவனணைஞ்ச பெருமாள் ராசனுக்கு
தனித்தொரு மண்டபஞ்செய்து முகித்தார் தலைவர்
சிங்கார மண்டபம் பால்காச்சிக் குடியேறி
சிறப்புடன் மண்டபந் தன்னி லிருளப்பருமாய்
ஒத்திமை யாகவே மூன்றுபேரு மொன்றாய்க்கூடி
உச்சரித்துக் கொண்டுல கரசாண்டார்

## சின்னணைஞ்சி வரலாறு

மண்டபத்தி லிவர்களெல்லா மகிழ்ந்திருக்கச் சின்னணைஞ்சி
வந்தகதை கேட்டிடுங்கோ வகைப்படியே சொல்லுகிறேன்
அண்டர் புகழும் தென்காசி யடுத்தரசி விளத்தோப்பில்
தொண்டுசெய்யும் வண்ணார்குலந் தொழுதுகொள்ளும் மாடனவன்
தேவிபர மாயியரும் சேயதனால் வருத்தமுத்து
திங்கள்ஒரு சந்திவுண்டு சிவனெனவே தவசிருந்தாள்
தவசிருக்கும் வேளையிலே சங்கரனா ரிடமதிலே
தென்காசியம்மை பகபதியும் சேயிழை பொன்னுருவியர்க்கு

மதலைவேணு மென்றுசொல்லி மகாதேவரோடே வாதாடி
வேர்வைபத்திரனைப் பிள்ளையதாய் வேணியா னனுப்பும்போது
மனுவாகப் போயழிந்து வருவதற்கு என்கூட
வேணுமொரு கன்னியென்று விளம்பிடவே பத்திரனும்
அருகேநின்ற அரம்பையரில் அழகாயொருத்தி தனையழைத்து
தென்காசி சேந்திருக்குஞ் சிறந்தரசி விளத்தோப்பில்
வண்ணார்குல மானதிலே மங்கைபர மாயியர்க்கு
பிள்ளையதாய் நீபிறந்து பெருவாழ்வுந் தான்வாழ்ந்து
பத்திரனும் நீயுமதாய்ப் பாருலகில் மோகமுத்து
ஈரெட்டு வயதானதில் இருபேருந் தானிறந்து
வரவேணு மென்றுசொல்லி மகாதேவர் தானனுப்பி
பிரமாவைத் தானழைத்துப் பிள்ளையதாய்ச் செனிக்கச் சொல்லி
நயினாரைத் தான்வருத்தி நமன்கணக்கில் எழுதச்சொல்லி
வயசதுவும் நடப்பதுவும் வகைவகையாய்த் தானெழுத
பரமாயி வண்ணாத்தி பாவையருங் கெர்ப்பமுத்து
மாதம்பத்துந் தான்திகைந்து மங்கையரை யீன்றெடுத்தாள்
ஈன்றெடுத்த பாலகிக்கு இனத்தார்கள் மனமகிழ
சின்னணைஞ்சி யென்றுசொல்லிச் சிறப்பாகத் தான்விளித்து

## சின்னணைஞ்சி துறைக்குப் புறப்படுதல்

பேர்கூறி யெல்லோரும் பிரிசமுட னேவளத்து
ஆடையுட னாபரணம் அழகுடனே தான்பூட்டி
சந்தமுடன் சின்னணைஞ்சி தான்வயது பன்னிரண்டானாள்
பன்னிரண்டு திருவயதாகவே பாவைமுத்து சோபனமாகியே
திரட்டுக் கலியாணமானது செய்திட சிறந்த ஆபரணமது பூட்டினார்
கால்விரலுக்குக் கட்டுவம் பீலியும் கனத்தபாடகந் தண்டை சிலம்புகள்
கொலுசுடன் வீரதண்ட புலம்பிட கோதைநல்லாளுக்குக் கைவிரல்
மோதிரம்
தங்கத்தாலே சொருகுசந்து காறை தைய நல்லாளுக்கு தெ. . . .
காப்பு தங்கத்தால்
ஐந்துகொத்து சரப்பளிமாலையும் அவத்திக் காறை சவடி
காசுமாலை
இலங்குங் காதிலே தோடுஞ் சிமிக்கியும் இன்பமாகவே மூக்குத்தி
குத்தியே
மேல்முருகுடன் உச்சிப் பிறகளும் வீரமாகவே நெத்திப்பிறை வைத்து
அன்னக் கருக்கன்பட் டாடை யுடுத்தவள் அழகாக ரவுக்கை யிறுக்கியே
பட்டினாலே மேல்சீலையும் போட்டவள் பாவை யானவள் வீட்டிலி
(ருக்கிறாள்)

## தீச்சகுனங்கள்

அனுப்பியே யவர்கள் நிக்க அழகு சின்னணை தானும்
துணிப்புடன் சேலைகெட்டித் தோள்தனில் போடும்போது
மனைதனில் கெவுளிசொல்ல மங்கைய ரிடத்தே தும்ம
கனைப்புடன் கோட்ட(ரன்)துள்ளி காளகாள வெனவே(ரண்டு)சத்தம்
கேட்டவள் தடைகண் டஞ்சிக் கிளிமொழி மனதுநொந்து
வாட்டமாய்ச் சின்னணைஞ்சி வலதுகால் வைக்கும்போது
இட்டமாய் விருதுஓட யிடமொரு காகம் சாட
கொட்டுமா முலையாள்முன்னே கொசவனை எதிரேகண்டாள்

## மனமஞ்சி நடந்துவரும் சின்னணைஞ்சியின் எழில் தோற்றம்

கண்ட தடைகள் கொடியதுதான் காலம்நமக்குப் போறாது
சென்ற விடத்தில் பகைவருமோ சேலை பணிகள் பறிபோமோ
(பார)விதியால் பழவினைகள் பழுதுவந்து முடியுமோதான்
என்றுபுலம்பிச் சின்னணைஞ்சி யிளமா மயிலது போல்நடந்தாள்
நடத்தும் நாதன் நடத்திவைத்தால் நம்மா லெனிமே லென்செயலாம்
படைத்த பிரமன் லெவியதுக்குப் பத்தி யறைக்கு லொளித்தாலும்
அடைத்துக் கொண்டே யிருந்தாலு மங்கும்வரும் வரும்விதிதான்
தடுத்தே மனையில் போனாலும் தாயார் கோவிப் பாளெனவே
எடுத்த பிடவை யிறக்காம லிவள்மனது மிகச்சடைத்து
நடந்தனளே சின்னணைஞ்சி நல்லகாசித் தெருவதுக்கு
தென்காசித் தேசமதில் தெக்குத்தெரு வானதிலே
அன்னரிடை சின்னணைஞ்சி அவர்தோ ளதிலே மூட்டைபோட்டு
மடந்தைக்கிளி மொழியழகும் மஞ்சணைக் குறியும் பொட்டழகும்
ஆலிலை போலிலை வயிறு மாசாரக்கை வீச்சும்
இளமயில் போலவள் தேகம் ஏந்துதனமுங் குறுநடையும்
நடையுடையுந் தொடையிடையும் நாணயச்சொல் பாவினையும்
ஆடையாபரணந் தானிலங்க அழகு. . . . . கொஞ்ச
வஞ்சிக்கொடி யிடையழகும் மையிட்ட கண்ணழகும்
கொஞ்சும்சிமிழ் மூக்கழகும் கோரிமுடிந்த தலைமுடியும்
குளுந்தமுல்லை யிருவாச்சிபிச்சி கொண்டையில்பூச் சூடிக்கொண்டு
பட்டழகு மொப்பினையும் பாத்தவர்க்கு மையல் கொள்ளும்படி
குழந்தைகள்போல் சொல்லழகும் கோவில்சிலை போலழகும்
ஒப்பினையும் உடலழகும் ஒருபாகந் தலைமுடியும்
செந்தூரம் பொட்டுமிட்டுத் திருநீறுந் தான்பூசி
கெண்ணிதமாய்ச் சின்னணைஞ்சி கீழ்மாறிப் பார்த்தகண்ணும்
சின்னணைஞ்சி வண்ணாத்தி தெய்வரம்பை போலவேதான்

திட்டமுடன் தென்காசித் தெருத்தெரு வானதிலே
வந்தாளே சின்னணைஞ்சி வாப்புருக்கி வார்த்ததுபோல்

## கண்டோர் கூற்று

வருவழியில் சின்னணைஞ்சி வடிவுகண்ட பேர்களெல்லாம்
விரலதுவை மூக்கில்வைத்து விறுவிறுத்து நின்றிடுவார்
ஒருவருண்டோ யிவள்தனைப்போல் ஒப்பமுள்ள பெண்ணெனவே
தெருவதிலே கண்டவர்கள் திகைத்துமெத்த மசங்கிடுவார்
கண்டாசைப் பட்டிடுவார் காமப்பேய் கொண்டிடுவார்
இன்றுயிவள் நம்மோடே யிருந்துமுகம் பாராளோ
பாராளோ வாராளோ பஞ்சணைமேல் நித்திரைக்கு
சேராளோ யின்றிரவில் சின்னணைஞ்சி நம்மையென்பார்
தேடிவைத்த திரவியத்தைச் சேயிழைக்குக் கொடுத்திடலாம்
கொடுத்திடலா மொருவரிடம் கூசாமல் பேசாளோ
கடுத்தவரோ டொறவறியாள் கண்டவரிடம் பேசாள்
தெருவைவிட்டு ஒருநாளும் தூரவழி போகறியாள்
கட்டுத்தறி தன்னைவிட்டுக் கடராத ஆவினம்போல்
மட்டுத்தப்பிப் போகறியாள் வாழ்மயிலாள் சின்னணைஞ்சி
தனித்துவழி நடக்கறியாள் தங்கூரில் போகறியாள்
இனத்தில்வண்ணார் தன்னோடே யிருந்துவிளை யாடறியாள்
வஞ்சகங்கள் சொல்லறியாள் வரம்புதப்பி நடக்கறியாள்
தப்பாகச் சொல்வாரோடே சரசம்விளை யாடறியாள்
விற்பன மடந்தையவள் மெல்லிநல்லாள் சின்னணைஞ்சி
ஊரிலுள்ள பேர்கள்முன்னே ஒழுங்குதப்பி நடக்கறியாள்
பேருசொல்லி விளித்தாலும் பெருவழியில் நிக்கறியாள்
இரக்கமில்லாக் கசட்ருட னெதுத்துமொழி பேசறியாள்
மூக்கரைப்போ லேமுழிக்கும் முகடர்கண்ணில் முழிக்கறியாள்
வாக்கிடறா வார்த்தைசொல்லி வண்டரிடம் ஒறவாடாள்
ராசாக்கள் வம்மிசத்தில் நன்றாகப் பிறக்க வேணும்
வண்ணார்குலந் தாங்கிடுமோ வகுத்தபிரமன் செயலோ
சின்னணைஞ்சி செய்கைதனைச் சிலபேர்கள் சொல்லிநிக்க
நல்லவள்தா னென்றுசொல்லி நாட்டிலுள்ளோர் மெய்த்திடவே

## சிவனணைஞ்சவர் சின்னணைஞ்சியைக் காணல்

மடியாமல் சின்னணைஞ்சி வருந்தெருவி லணைஞ்சவரும்
படைவெருட்டும் மறத்தலவன் பார்புகழு மந்திரியும்
ஆயானா ரிருளப்பரும் அல்லோரு மொருமுகமாய்
வீதியுள்ள தெருவதிலே வேந்தன்சிவ னணைஞ்சவரும்

சோதிதிரு முகத்தழகன் தெறிவில்லுங் கையிலெடுத்து
(மூவ)ாதி (வல்லுந)ருமந்த மூங்கில்மரச் சோலையிலே
கூவுங்குயிலு மயிலதுவும் கொண்டஞ்சேறாடி சிட்டுகளும்
ஆளுக்கொரு வில்லெடுத்து அழகுடனே விளையாட
நான்பெரிது. . . . . . ல ராச மன்னன் சந்தோசமாய்
மந்திரிபெரிது என்றுசொல்லி மகிழ்ந்திடுவார் மறத்தலைவர்
ஆயான்பெரிது யென்றுசொல்லி அகமகிழ்ச்சை கொண்டிடுவார்
இப்படியே யிவர்களெல்லா மிணக்கமுடன் விளையாட
அன்னேரஞ் சின்னணைஞ்சி ஆயிழையாள் வருவதையும்
கண்டுகொண்டா ரணைஞ்சவரும் காமப்பேய் பிடித்ததுவே

### சிவனணைஞ்சவனார் கொண்ட மோகம்

மோகமதாய்த் தள்ளாடி மூளுமனதோடே கலங்கி
மங்கையரைக் கண்டவுடன் மதிமசங்கி மோகமதாய்
காமம்கொண்டே புலம்பலுத்தார் கண்ணான ராசமன்னன்
மந்திரியும் ஆயானும் மகராசனையுங் கூட்டிக் கொண்டு
சிங்கார மாய்வரவே சின்னணைஞ்சியுந் தெருவீதி வர
சிங்கம் போலே சிவனணைஞ்ச பெருமாளும்
எட்டியெட்டித் தான்பார்த்து ஏங்கியேங்கி யேநடந்தார்
சிங்கம்போலே சிவனணைஞ்ச பெருமாளும்
சின்னணைஞ்சி தெருவில் வரக்கண்டு
தங்கக் காப்பிட்ட செங்கை வீச்சினால்
சத். . . . . . . . . தலைக்கு ளிடிக்குமாம்
உச்சிப்பிறையுட அழகதைக் கண்டாக்கால்
உலகம் விலைகொள்ளு மென்று சொல்லலாம்
கோதி முடித்த குழலது தன்னாலே
கோப மாளுமே காம விகாரமும்
கொண்டைமேல் சூடும் பூவதைப் பார்த்தாக்கால்
கொல்லும் காம விகாரம் நம்மைவந்து
நெத்திப் பிறையதை யெட்டியே பார்த்தவர்
நெட்டுரங் கொள்ளுவார் கட்டபு . . . . யால்
காதில்போட்டிடுந் தோடுஞ் சிமிக்கியும்
கண்ட பேரெல்லாம் நின்றிடு வாரதில்
மேல்குச்சியுடன் நெத்திப் பொட்டு கண்டால்
மெல்லியர்க்கு மெல்லிய ராசை கொள்ளுவார்
கழுத்தில் கட்டிடுந் தங்கச் சவடிகள்
கண்ணுங் கொள்ளாது கணக்கி லடங்காது
தங்கக் காப்பதைக் கண்ணினாலே பார்த்தால்
தையல் நல்லாளுக்கு இந்திராணி யீடல்ல

மையிட்ட கண்கோதையுங். . . . . பார்த்திடில்
மைய லுண்டாக்கும் யாருக்கும் மோகமாய்
சந்து காறை கடையத்தைக் கண்டவர்
சாதி தெரியாமல் நின்று தயங்குவார்
பாடகந் தண்டை சிலம்பது பாத்தவர்
பாவை நல்லாளை யாரென்று எண்ணுவார்
கட்டுவம் பீலி கண்டதே உண்டானால்
காம மோகத்தை யாருங் கருதுவார்
ஆலிலை போலவள் வயிறு கண்டால்
ஆரும் பாத்து மசங்கிடு வார்களே
ஏந்திழையாள் இடையது பார்த்திடில்
எவருங் கொள்ளுவர் இன்ப. . . .
பாவை நல்லா(ள்)தன் பாதத்தைக் கண்டாக்கால்
பாம்பின் படமென்று பதறிடு வார்களே
(ஆ)சாரக் கைவீச்சு கண்ட துண்டால்
ஆரும் மனமசங்கி விழுந்திடு வாரதில்
கைவிரல் பத்து மோதிரமும் பார்த்தால்
கண்ணு மயங்கிடும் காம விரியாலே
விம்மிப் பூதித்த கொங்கையைக் கண்டிட்டு
மெத்தை போலக் கிடந்து விறைப்பாம்
அம்ம வாயில் சிகப்பதைக் காணச்சே
அய்யய்யோ வென்று தெய்வத்தை நேருவார்
எட்டிப் பாப்பார் நடப்பார் புலம்புவார்
என்றைக் கவளோடே கூடுவேனோ வென்பார்
கட்டிமையாக் கிட்ட வந்தா ளென்ன
இருகையா லாவி இருளனைக் கட்டுவார்
இப்படியே யவர்களெல்லாம் வர

## சிவனணைஞ்ச பெருமாள், சின்னணைஞ்சியின் வரலாறு கேட்டதும் உரைத்ததும்

ஏந்திழை யுந்தெரு விட்டுப் போனபின்
மகாசன் சிவனணைஞ்ச பெருமாளும்
வன்னியத் தேவ னிருளப்ப னாயானும்
கூட்டி மண்டபந் தன்னி லிருத்தவே
கோதை யிவளாரு யென்றவர் கேட்கவே
மாத்தெடுக்கும் வண்ணார் குலந் தனிலே
மங்கை சின்னணைஞ்சி யென்ற பெண்ணிவள்
என்றிருளனு மாக. . . . . .
ஏந்திழைதன் வரலாறு சொன்னார்

வண்ணாத்தி யென்றவளை (வகை)யறியா துரைத்தாயே
கண்ணுமணிப் பெண்மணியைக் கடைந்தெடுத்த மாணிக்கத்தை
கொஞ்சுகிளி மொழியாளைக் கோகனக முகத்தாளை
அஞ்சாமல் சொன்னாயே அழுக்கெடுக்குஞ் சாதியென்று
எல்லார்க்கும் எளியவளா யிருப்பாளோ சின்னணைஞ்சி
தெய்வலோகத் தரம்பையர்போல் சின்னணைஞ்சி யிருக்குகிறாள்
எந்தக்குல மானாலும் இவள்தனைப்போல் பெண்ணுமில்லை
அவள்சாதி ராசகுலம் ஆண்டிடுவாள் தேசமது
தேசமதி. . . . ப்போல் சேயிழையா ளொருவரில்லை
சந்திரமதி இந்திராணி தையலாரும் ஈடல்லவே
வாப்புருக்கி வாத்ததுபோல் மங்கையவ ளிருக்குகிறாள்
ஆயானே அணைஞ்சிதனை அழைத்துக்கூட்டி வராவிட்டால்
நெசஞ்சொன்னே னென்னுயிரு நிச்செயமாய் மாண்டிடுமே
மந்திரியும் நீருஞ்சென்று மங்கையரைக் கூட்டிவந்து
தந்திரமாய்த் தராதேபோனால் தன்னாணை மாண்டிடுவேன்

## ஆசானின் மறுப்புரையும் சிவனணைஞ்சவரின் உறுதியுரையும்

ஆணைசொல்ல ராசமன்னன் ஆயானுந் தான்பதறி
கேடுவரும் தேசமது கெடுதிவரும் ஒங்களுக்கு
தேசமாளு மரசமன்னன் செறைபிடித்தால் தேசமுண்டோ
ஆருசொன்ன வுத்தியிது அமைத்துவிடு மோகமதை
தாதியர்கள் வீடிருக்கு சட்டங்கெட்டிக் கூட்டிவாரேன்
மாமன்மகளை மாலையிட மங்களம் பேசிவாரேன்
என்றுசொல்ல யிருளப்பரு மெடுத்துரைப்பா ராசமன்னன்
நான்போறேன் பரதேசம் நாடு ந(கர் வேண்டாமே)
கேடுவந்தா லுன்தேசம் கெட்டிடுமோ ஆயானே
வாழ்ந்தகாலம் வாழ்ந்ததுண்டால் வருங்கெடுதி வந்துவிடும்
நிச்செயந்தா னதுவெனவே நெட்டுரமாய்ச் சொல்லிநிக்க
வன்னியத்தலைவன் மந்திரி மகாராசாவைத் தொழுது
சதிவுசெய்யு மிக்கோபஞ் சண்டாளக் கோபம்
முன்ன. . . . (பேரை) முகித்துவிட்ட கோபமிது
அறிந்திடுவன் பெருமை அறிந்தமட்டுஞ் சொன்னே னென்றார்
மந்திரிபோல் கோபமுத்து மகராசன் திருவுளமாய்
தந்திரமாய் அணைஞ்சிதனைத் தான்கூட்டி வராவிட்டால்
ஒன்பேரி லாணை (உன்)னுயிரிருக்க மாட்டாது
என்று சொல்ல ராசமன்னன். . . . .

. . . . . . . . . .மொழிதனைக் கேட்டு
சித்திடையாள் தனைநோக்கிச் செப்புவானாந் தூதுவனும்
ஒருகழஞ்சி பொன்னுமுதல் ஒன்பதுகழஞ்சி பொன்வரையும்
ஒ(ன்பதென்ற) போது மருத்துவத்தாள் ஊமைபோ லேயிருந்தாள்
பத்துக்கழஞ்சி யென்றபோது பாவையருஞ் சிரித்தெழுந்து
ஏனடாவா தூதுவனே என்ன (சே) ாலி வருத்துகிறாய்
நானடா முதுகிழவி நடப்பேனோ தென்காசியில்
ஆனைமே லிருத்திவைத்து அசையாமல் கொடுபோவேன்
ஆனைமே லிருந்ததுண்டால் அசைந்துநா னிருக்கமாட்டேன்
குதிரைகொடு வந்துஒன்னைக் கொடுபோவேன் மருத்துவமே
குதிரையிலே யிருந்ததுண்டால் குலுங்கிநா னிருக்கமாட்டடேன்
பல்லாக்கு கொடுவந்து பதறாமல் கொடுபோவேன்
பல்லாக்கி லிருந்ததுண்டால் பதறிநா னிருக்க மாட்டேன்
மேனாநான் கொடுவந்து மெதுவாகக் கொடுபோவேன்
மேனாவி லிருந்ததுண்டால் மெலிந்துந(ா) னிருக்கமாட்டேன்)
இன்னமுண்டோ குறயுனக்கு யென்னோடே சொல்லுமென்றான்

## மருத்துவச்சி புறப்படல்

அன்னேர மருத்துவமு மளப்பாளி யிவனெனவே
கெட்டுப்பெட்டி தனையவிழ்த்துக் கெம்பிதமாய்ப் பிடவைதன்னைத்
திட்டமுட னெடுத்துடுத்துத் தீவிரமாய்ப் பிறப்பிடுவாள்
மக்கள்மரு மக்களுக்கும் வருமளவுஞ் சிலவுகளுக்குப்
பக்குவமே சொல்லாமல் பணங்காசி தான்கொடுத்து
கொத்தியாள்நெல் வாங்குதற்குக் கொட்டப்பெட்டி தனையெடுத்து
எல்லார்க்கும் புத்திசொல்லி யெழுந்துதலை வாசல்வந்தாள்

## எதிர்ப்பட்ட நற்சகுனங்கள்

வல்லபுகழ் மருத்துவமும் வாயொலியுந் தான்கேட்டு
. . . . . . . . . . . . . . . . . . . .
வால்நெடிய கருங்குருவி வலமிருந்து மிடம்பாய
நீலவிழி மருத்துவமும் நேரிழையு மேசிரித்தாள்
ஏதேது மருத்துவமே இப்போது சிரித்ததுதான்
போதுமோ கருக்குருவி பொதுவறவே யிடம்பாய்ந்தால்
வால்நெடிய கருக்குருவி வலமிருந்து யிடம்பாய்ந்தால்
கால்நடையாய்ப் போறவனுங் கனகதண்டிய லேறுவானே
மலங்காதே ஓட்டா மகனல்லவோ பெறுவாள்
கலங்காமல் தூதுவனுங் காரிகையுந் தானடந்து
செந்தலைக் கெருடன்வந்து சந்திரமாய் வட்டமிட்டு
இந்திரன்போல் இடம்பாய யேந்திழையுஞ் சந்தோசமாய்

சிறுப்பத்திலும் விவேகமுள்ள. . . . . சேயிழையே
செய்திகொண்டு ஒன்னிடத்தில் (தீர்க்கமாய் வந்தேனம்மா)
ஆகட்டய்யா வந்தசெய்தி அடியாளுக்குச் சொன்னால்
ஆகுமென்றால் சட்டங்கெட்டி அனுப்பிடுவே னும்மை
அடியாளிடம். . . . . . வேண்டாம
ஆளதுவை விட்டாலும் அவசரமாய் வருவேன்
ஆனாலும் நீங்கள்வந்த செய்தி சொன்னால்
ஆகுமென்றால் சட்டங்கெட்டி அனுப்பிடுவே னய்யா
என்றவளுஞ் சொல்லிடவே ஆயானுஞ் சொல்வார்
ஏந்திழையே நின்றுபேசிக் கொள்ளவேணு மென்றார்
ஆகட்டென வேசிரித்து ஆயிழையும் நிக்க
ஆயானும் வாய்திறந்து அணைஞ்சியோடே சொல்வார்
நான்பேசும் பேச்சதனை நல்லதுயென் றெண்ணி
நடந்துவிட்டா லுனக்குமொரு நட்டமும் வராது
வண்ணார்குலந் தனிலிருந்து மாத்தெடுத்து வெளுத்து
வருத்தப்பட்டுத் துன்பமதை அடைந்திடவும் வேண்டாம்
தாழ்ந்தகுலந் தனில்பிறந்த சடவுவிட்டு நீயும்
தையலரே ராசகுலந் தன்னில்சேரு வாயே
முன்னா லுனக்குப் பிரமனவர் விதித்தவிதி தன்னை
மூடப்புத்தி தன்னாலே விட்டுவிடா தேநீ
நான்சொல்லும் புத்திதன்னை நாட்டிலுள்ளோர் கேட்டு
நாளுக்கு நாளாய் வாழ்ந்து நலமாய்
தாழும்படி யுள்ளபுத்தி சாதித் திடலுமா(ய்)
சங்கரனா ரிடமிருக்குஞ் சா. . . . . . . .
உந்தனக்குப் பெருவாழ்வு வந்து. . . . . .
உமையான ஒன்னிடத்தி லோடிவந்தே. . . . .
என்றுசொல்லி யிருளப்பரு. . . . . .
என்னிடத்தில் இனிப்பேச வேண்டாமென்று சொன்னா(ள்)
ஆசார வார்த்தைதன்னை யன்பாகச் சொல்லி
அழகுசின் னணைஞ்சிபோற வழிமறித்தா ராயன்

## சின்னணைஞ்சியின் அடுக்குமொழிகள்

போறவழி மறியாதே போக்கணம் கெட்டவனே
புத்திகெட்ட மாடெனவே சத்து மறிந்திலனே
செப்பமுட னிவ்வார்த்தை சின்னணைஞ்சி சொல்ல
சிறப்பாக மனதடக்கிச் செய்தியைக்கே ளென்றார்
சிவனணைஞ்ச பெருமாள் ராசன் தேவியென வந்து
தேசமதை யாண்டிடுவாய் சின்னணைஞ்சி யென்றார்
வாலிபட்ட பாடதிலும் ராவணன் பட்டபாடும்

வாசித்தறி யாதமுழு மட்டியளோ நீங்கள்
சீதையென்ற பெண்ணாலே தென்னிலங்கை யழிந்த
செய்திதனை யறியல்லையோ திருட்டுதனக் காரா
கன்னடியன் மகளாலே வள்ளியூ ரழிந்த
காரணங்கள் தெரியாதோ யென்று. . . .
கன்னடியன் மகளா. . .
கதை தெரியாதோ. . . . . .
பாவைநீலி யதனாலே பழகை (நல்லூ ரழிந்த)
பாவினைகள் தெரியாத. . . . . . . .
கோதை தோட்டுக் காரியா(லே) கும(ரப்பராச)
குத்தம் குறை தெரியாத கொடும்(பாவி).. . . . .
அரக்கனுரு கொடுத்தவரஞ் செயிக்கவென்று ஆயன்
அழகா(ன) பெண்வடிவு கொண்டதறி யல்லையோநீயும்
ஆலிலையைப் போலேபுல் கூத்தாடவே தொடுத்தால்
ஆகையாலே சொந்தக்கூத்து ஆடுவேனே நானும்
காசினியை யாளுகின்ற ராசமன்ன னுக்கு
கல்லுச்சீலை தப்பிஊருக் கழுதைமேய்க்க லாமோ
வேசியென்றா நீநினத்து யிங்குவந்தா யிப்பம்
வெடுவெடெனச் சின்னணைஞ்சி வேகமதாய்ச் சொல்வாள்
தொட்டுப்போட்டுப் பின்புதள்ளி விட்டிடுவா னானால்
சோலிவேண்டாம் வேசைகளைத் தாலிகட்டச் சொல்லு
மட்டுத்தப்பி யென்னைவந்து பெண்பிடிப்பா னானால்
வாழ்விழந்து ஒங்களுயிர் மாளுவது திட்டம்
நந்திகெட்ட ஆணெனவே கெஞ்சிடுவா னானால்
. . . . . . . நஞ்சி தின்று சாகச் சொல்வ. . . . .
பத்திரமா யென்னைவந்து பிடித்திடுவா னானால்
பல்லுப்பறி போமெனவே மெள்ளச்சொ(ல்லு)
கொண்டை கெட்டி வலைய. . . . . . . .
குத்திக் கெடு . . . . . ாவத. . . . . . க்குக். . . . .
வண்டத்தனம் . . . . . சின்ன. . . . . . . . . .
மாத்தெடுக்க மனசுண்டா. . . . . . .
ஒன்னைக் கேட்டுவந்து . . . . . யென்ன பைங். . . . . .
. . . . . . . . ள்ளே சொல்லிப் பார்க்க வாரியோ வண்ணாத்தி
. . . . . . . . றிந்தால் நானுமினி உடம்பெடுக்க மாட்டேன்
ரோசங்கெட்டு நீங்களெல்லாம் மோசம்கெட்டுப் போவீர்
என்னையொரு சின்னணைஞ்சி யென்றிருக்க வேண்டாம்
ஏவிவுன்னை விட்டவனுக் கேமார்ய னானே
ஆரறிவார் இம்முறைமை யருஞ்சாமந் தன்னில்
ஆகாத வார்த்தைசொன்னால் ஆளுண்டுமே யெனக்கு
இன்பமில்லாச் சின்னணைஞ்சி யேகுமெனச் சொல்ல

## இருளனாசானின் ஆணைமொழி

இயல்வுடைய யிருளனவன் ஏதுமொழி சொல்வான்
பின்கட்டாகக் கட்டியுன்னைக் கொண்டு போகும்போது
பேதவண்ணா ரவர்மயிர் பிடுங்கத்திற முண்டோ
எண்ணி (இடர்) விளைக்கத்தன் ஏந்திழையே ஒன்னை
இயல்வாகக் கொண்டுசென்று வருவேன் மண்டபத்தே
இட்டஆசை நானுமொரு ஏட்டிலெழு தாட்டால்
இருளென்ற பேரெனக்கு யில்லையென்றும் போனார்
. . . . . . . . . . . . . . . . . .

## இருளனாசான் சிவனணைஞ்சவரிடம் விவரம் கூறல்

வாய்த்த குலத்தை வதைக்கு
எங்கேதான் போனானோ யென்று
எட்டிப் பார்க்க. . . . .
சின்னணைஞ்சி . . . . . இருளன்
தேகமெத்த மதிமசங்கி செயலிழந்து
பொன்னனைய மேனிதன்னை. . . . . . .
புகழ்பெறவே செவிதனிலே. . . . . . . . . .
மெள்ள மெள்ளச் சீவன்வந்து வெப்பா . . . . . . போது
வீணிலே. . . . . . . செய்தி விளம்பெனவே (சொன்னார்)
சொல்வனோ சின்னணைஞ்சி நகைத்துச்சொன்ன வார்த்தை
நாட்டுக்குமே யேறாது நான்சொல்ல முசியாது
நாச்சிமார்கள் காட்டுகின்ற (நாடகங்க). . . . . ளெல்லாம்
நாயகமே அஞ்சாறு நாளைக்குள்ளே தீரும்
(உண்ம)மயாய் உண்ணவே மலங்கவேண்டு மென்ன
மருந்துண்டு வாரேனென்று எழுந்திருந்து போனான்

## இருளனாசான் வசிய மருந்து பெற்று வருதல்

வாலு . . . . . . . மாக சின்னணைஞ்சி சொன்ன
வார்த்தையினால் கோபமண்ட . . . . . . மேலேறி
காலில் சிலம்பு கலீரண்டு பாட
கண்டார் குத்தடி கொண்டே நடந்தார்
வரிசைக் கிழவியுட வாயொலி கேட்டு
வாழுங் குறவர்மலை மேலே போனார்
உருமை யுடனே யிருளப்ப னாயான்
. . . . . . . . . . . . . . . .
. . . . . லேதூது பேசியே போனேன்

எண்ணாம லவளென்னை ஏசினா ளென்று
நானுங்கள் வீட்டில் விருந்தாடி வந்தேன்
. . . . . . . மருந்துண்டு தந்தீரே யானால்
. . . . . . . பவுதி வாங்காமல் வைப்பேன்
மருந்து . . . . . . . மாட்ட மென்போல்
வாணா . . . . . . பழி வாங்குவது திட்டம்
சக்கரை யினிப்பா யினித்திடுவா னென்றோ
தலைகீழாய் நீங்களும் சாரித்த கருமம்
பருவப் பெண்கள் பிடித்தேய மி(க்கா)ல்
பாதிலுள்ள தமக்கோரது கண்டீர்
பெண்களே மடுக்கா பிடித்தயளே ய . . . . னல்
. . . . . கொள்ளு மறுப். . . . . ன்றார்
நீங்களு மிப்படிச் செய்த துண்டால்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மகுத்துவ மாக அனுப்பிடுவர் உம்மை
மலையிலே வாழும். . . . . . . ரும் பாம்பை வெட்டி
மலையில் . . . . . . துஞ் சோறுகறி சமைத்தார்
. . . . . . . . . தன். . . . . . . . . . யிருளப்ப னாயன்
. . . . . . . . . குறவர் உடன் கொண்டிருந்து
வாழை யிலையில் சமையலானது படைத்து
மலைக்குறவர் போலிருளனும் போயிருந்தான்
. . . . . . . . . . நந்துகறி வேடவர் யிடிக்க
. . . . . . . . . . . . கை தொட்டது விலக
தேனுங் . . . . . . . . . . . டனே காயக . . . . . . . டுத்து
சிமிள் வன. . . . . . த்து மருந்துங் கொடுத்தார்
வானுவமாய் நாலுவகை மருந்து கொடுத்து
மலைமிருகம் வாய்கெட்டி வழியனுப்பினார்
அருமையுடன் மறுமருந்தை அள்ளியவர் பறத்திவிட்டார்
உள்ளபடி கண்டபோதே வொருமுழத்துக் குய்ந்துகொண்டார்
வள்ளல்சிவ னணைஞ்சவனார் வாழ்ந்திருக்கு மண்டபத்தில்
மருந்துவந்து தென்றிருளன் வாசகத்தை . . . . து
திருந்து . . . . . . மன்னனுக்குச் சீவன்வந்து பரந்ததுவே

## சிறுக்கன், சின்னணைஞ்சிக்கு வசிய மருந்து தருதல்

கனிவாயில் பாக்குமிட்டார் கயிலாசம் பெத்தவர்போல்
இனிதாக மருந்தையெல்லாம் இயல்வாகத் தானெடுத்து
ஒருமருந்தை வெத்திலையில் ஒட்டியவ ரன்னேரம்
திருநீறு தான்பூசிச் சிறுக்கன்கையி லேகொடுத்து

வண்ணாத்தி சின்னணைஞ்சி வாரவழி பாத்திருந்து
. . . . . . . . . . .(சிறுக்கனவன் பாத்திருந்து கண்டுகொண்டான்
கண்டான் மனங்குளிர முகங்காட்டியே சந்திப்பு வேட்டையே
. . . . . . . . . . . . .
புனக்கோர் வாழ்மயிலே. . . . . . . .
மெத்த . . . . மாத்தம் விதிவந்த தறியாமல் சின்னணைஞ்சி
சித்தம் மிகமகிழ்ந்து கிறுக்கன்கை வெத்திலை தான்வேண்டி
வேண்டியே வாயிலிட வெத்திலையாகிய சத்துருவை
தின்ற வுடனேதான் திருமுகந் தன்னிலே வேர்வை சிந்த
. . . . . . . மருந்துஅது சுள்ளென்று வேகஞ் சுருக்கிடவே
. . . . . . . . . .
எனக்கோர் படியாச்சு வழியெங்கடா யிங்கே யிருத்திடடோ
மனத்தறி மாறி புலமாட னிருளன் பீடித்தானோ
முட்டாங்கை யிட்டிடட்டோ நான் மூப்பிட்ட வண்ணார் கூப்பிடட்டோ
கிட்டக் கிளைவாசல் கிடக்காமல் மெல்ல நடவுமென்றார்
நடந்தாளே சின்னணைஞ்சி . . . . . சிறுக்கன் வழிகாட்ட

## சின்னணைஞ்சி மண்டபஞ் சேருதல்

மடந்தைக் கிளிமொழி . . . . . முன்னே நின்று
வருவேனோ மண்டபத்தில். . . . . .
தருவேனோ மாத்துனக்கு . . . . . . .
. . . . . . . . . சின்னணைஞ்சி யென்னும் பெண்ணாளை
. . . . . . .
மடிபிடித்துக் கொண்டு. . . . . . . . .
மண்டபத்திலே சின்னணைஞ்சியை
மங்கை தன்னையுங் கொண்டு போனபின்
கொடிய யிருளனு மேதுசொல்வார்

## இருளனாசான் கருத்தும் சிவனணைஞ்சவர் மறுப்பும்

கோதைக் காகவே நான்பட்ட பாடுகள்
மெத்த மெத்த யிழிவுகள் சொன்னதே
வேண்டிக் கொடு கருமலை யேறியே
மருந்துக் கேடு மயக்கியே வந்தேனான்
மண்ட பத்திலவள் வந்து சேந்தனள்
சீவல மார்ப னாக்கினை யாடெ. . . ரம்
சீக்கிர மாக மாண்டிடுவோ மென்றார்

தென்காசி விட்டுப் பரதேசம் போனாக்கால்
சீவல மார்ப ராக்கினை. . . . . ளாது
என்று சொல்லி (யிருளப்ப) னாயனும்
எதுத்துச் சொல்வா ரிளமா ராசனும்
கேட்ட காரியஞ் சட்டங்கெட்டித் தந்தீர்
கிலேசமு மத்து யிருந்திடு மாயானே
வார தெல்லா வரட்டுமிரு மென்றார்
மங்கயர்க் காக்ப் பரதேசம் போகண்டாம்
நல்ல தென்று யிருளப்ப னாயானும்
. . . . . . . . . னினம் இருக்கின்ற வேளையில்

## சின்னணைஞ்சவர் - சின்னணைஞ்சி கூடல்

சின்ன ணைஞ்சவர் சின்ன ணைஞ்சியை
பூவின் மெத்தையின் மேலே யிருத்தினார்
சின்னச் செப்புக்(கு ளிருக்குஞ் சந்தனத்தாலே)
சித்திரப் பொட்டு மிட்டார் சின்னணைஞ்சிக்கு
குத்து மாமுலை தத்திப் பாயவே
கொங்கை கொண்டையைக் குலை. . . .
தொடுத்த காரியங் கிடைத்த. . . . . .
செல்வம் வந்தது யென்று. . . . . .
மெத்தையில் சின்னணைஞ்சியை யிருத்தியே
வித்தை யாகவே முத்தமு. . . . . .
கிட்டத்தி லுன்னையான் மோகத்தில் கண்டேனான்
செத்து போகு . . . . . . யிரங்கா. . . . . . . .
உன்னைநான் கண்டேன் என்னைநீ கண்டாய்
உயிருடம்பு போலுயிர் மா. . . . . . . து
என்று சொல்லி ராச மன்னனும்
எடுத்து ரைத்தனள் சின்ன ணைஞ்சியும்
வாடி தாய்தமர் நினைந்து தேடுவார்
வந்து நாழிகை சுணக்க மாச்சுதே
வீட்டில் போய்முகம் காட்டி வருகிறேன்
வேந்தனே யென்னை விட்டுவிடு மய்யா
கொடிய தாய்தந்தை ஒன்னையு . . . . . டினால்
. . . . . . . வருகிறேன். . . . . . யன்றனர்
கூட வந்திடில் நாடு கொள்ளுமா
கொச்சப் பேச்சிது யிச்சா . . . . . . ானது
வீடு வேண்டாவாம் நடா. . . . . .

வேந்தனே ஒன்னை வேசை கொள்ள லாமா
. . . . . . . . . நினைத் தொட லாகுமே
. . . . . . . . . . யென்று சின்னணைஞ்சி சொல்ல
. . . . . . யிலே காண் விதித்தவிதி
ஆயிழையே நீவந்து சேர்ந்து
என்று சொல்லி யமைச்சனும்
இன்பமாய் மெத்தைமீதில் கிடத்தியே
ஆசை காம விபாகமுஞ் செய்தவர்
அன்புடன் வாழ்ந்திருந் தாரே
வாழ்ந்தவ ரிருக்கும் நாளில் மங்கை. . . .
வாழ்ந்தது துலங்க வாழ்வுந்த
. . . . . . . . . . .

## சின்னணைஞ்சி வேண்டுதலும் சின்னணைஞ்சவர் மறுப்பும்

அலங்குல் படுவதற்கோ ஆயான்நம்மைச் சேத்துவைத்தார்
பலமுடன் காசியாண்டு பாவினை செய்வோம் பெண்ணே
என்றவர் சொன்னபோது யேந்திழை யேதுசொல்வாள்
நன்றய்யா தந்தார் நாட்டமா யென்னைக் (கூட்டி)
கன்றது யிழந்த மான்போல் கவலை. . . .
சென்றுகண்டு வாரேன் சீக்கிர மனுப்புமய்யா
அனுப்புமென் றவளுஞ் சொல்ல அரசனு மேதுசொல்வார்
தனுப்ப(வு)ங் கேடுநாமள் சடுதியாய்ச் சென்றுகண்டு
. . . . . . . . நாங்கள் கூடி மருவியே யிருக்கோ மென்று
. . . . . . னுவுடன் வழியனுப்பி வருகுவோம் வாநீ யென்றார்
வாநீயென் றழைத்தபோது மங்கையு மேது சொல்வாள். . . .
நானிலந் தன்னில் நாதன் நம்மையுஞ் செ. . . . வைத்து
. . . . . . . . . . . . . . . . . . . . . .

## தாய் தந்தையர் சின்னணைஞ்சியைக் காணாது புலம்புதல்

குளங்கரையு மாறுகளுங் குளியோடித் தேடிப்பார்த்து
. . . . . . . . . . காணாமல் நின்று
வாடியந்தத் தாயாரும் மகளே மகளே
வாடித் துக்கித்து. . . . . . . .
வீடுவழி தென்காசி வீதியெங்கும் காணாமல்
. . . . . . . . வயி மறப்பா . . . . . நின்று சொல்லுவாராம்
நாத்திசையி நாட்டிலுள்ளோர் மறைத்தாரோ
. . . . . . . . . . மிதுக்கு என்ன செய்வோ மய்யோ
சோறுதின்று . . . . . . லக்கெழுந்தார்

தொட்டவர் பிடித்தாரோ சோதினையோ யிது பாவமய்யோ
மாறு செய்துமு. . . . . மாத்து மருந்து செய்து மறைத்தாரோ
வகுத்த பிரம னெழுத்திதுவோ
கன்னி யழியுமுன்னே கணவனிடஞ் சேருமுன்னே
காணாமல் மறைத்துக் கொண்டார் பாவி
தவசிருந்து பெத்த மகள் தட்டழிந்தால். . . .
எப்படியோ நானறியேன். . . . .
அருமையுடன் பெத்தசின் னணைஞ்சியையும். . . .
மகளே மகளேயென்று வாய்விட் டழுதழுது. . .
ஆவி குலையுதய்யோ ஆதரிப்பா ரொருவரில்லை. . .
. . . . காளை அல்லாமல் உத்தார் பெத்தா ரில்லைஅய்யோ
உயிரதுவைப் பிரட்டிடுவே னிப்போ
ச. . . . . . . . . பண்ணி வைக்கக் கணவனையும். . . .
காரியம் . . . . . . வைத்தேன்
மகள் கலியாணஞ் செய் . . . . . .
வரப்போகப் பார்த்தாரில்லை அய்யோ. . . .
செத்திறந்து போனாக்கால் தீக்கடனும் நீர்க்கடனும்
செய்வதற்குத் தீர்ச்சை பெற்றே னில்லை
அடித்தலறி அவையமிட்டு ஆங்காரம் தான்குலைய
அவள் கணவன் மாடன் வண்ணான் வந்து
திங்களொரு சந்தியுண்டு சிவனேயென்று தவசிசெய்து
சிறப்புடனே யாண்டிருக்க ளங்கே
. . . . . . . . . . . . . . .
கொழுத்தவர்கள் பிடித்த துண்டால். . . . .
. . . . . . . . . . . . .
காணாமல் போனா யானால் காசிநக ரழிந்து விடும்
கட்டுடனே நிச்சயித்த கனமக்கா
தேடித்தேடி ஆபரணம் திரட்டியிட்டே னென்மகளுக்கு
திரவியம் திரவிய மதாக. . . .
. . . . . . . . . . . . . . . . .
அடுத்தவர்கள் உறமுறையார் அடித்தலறித் தான்புலம்ப
அய்யோ விதியிதுவோ அய்யோ

### தாய் தந்தையர் மகளைத் தேடுதல்

மகள்போன தடம் பார்த்திடுவோ மாத்தான் வந்ததறிவோம்
பாருமென்று கூட்டியவர் சென்று
. . . . . . . . . . . . .

படைவீட்டில் சமைத்தசாதம் பாவினையாய்க் கைமுறைக்கு
பகுந்து மூட்டை கெட்டிக் கொண்டு போக
வாட்டம் கொண்டு வண்ணாரெல்லாம். . . . . வரும் வெக்கயிலே
விழித்து (சிறுக்க னாரெனவே கேட்க) -
மக்கள் பறிகொடுத்த மாபாவி நாங்களய்யா
வண்ணார் குலம் என்றிவரும் சொல்ல
என்றவார்த்தை கொட்டவோ தேசத்துரைப்பாள் இவர்கள். . . . .
ஈன்றமகள் பாத்தியத்தை சேர்ந்தாள்
அமுதுகறி கொடுபோறேன் ஆயிழை பொசிப்பதற்கு
கண்பார்த்துக் காரணஞ் சொன்னே. . . . வேண்டாம்
என்றுசொல்ல வண்ணாரும் இனிப்பிழைத்தோம் நாமென்று
. . . . . . . . . . . . . . . . .

## சிவனணைஞ்சவரிடம் சீவலமாறனின் மந்திரியை அறிவுரை கூற அனுப்புதல்

மாத்திவாரு மென்று மந்திரிதன்னிடஞ் சொல்ல
வந்தந்த மந்திரி மன்னனை வணங்கியே சொல்வான்
தீண்டாத சாதியைத் தீண்டிப்போட்டீ ரென்றுசொல்லி
தேசத்தை யாள்கின்ற ராசன். . . . . . ந்தென்னை விட்டார்
தாழ்ந்த குலத்தைத் தீண்டின துண்டானா லிப்போ
தள்ளியே தீர்த்தமாடியே வந்திட வேணும்
விபாக முடித்திட வேணுமென் றேயவர்
மெத்தமனது சந்தோசமாக யிருக்கு
என்றவன் சொல்லிட ராசனும் கோபமதாகி
என்னுட வாளுக் கிரையாக்குவே னுன்னையென்றார்
அன்று பயந்தவன் சீவலமார்பரைக் கண்டு
ஆரு சொன்னாலும் விடுவதில்லை யென்றுசொன்னார்
என்றவன் சொல்லவே ராசமன்னனுங் கோவித்து

## சிவனணைஞ்சவரிடம் தாய் பொன்னுருவியை அனுப்புதல்

ஏந்திழை தங்கை பொன்னுருவி. . . . . .
தீண்டாத சாதியை ஒந்தன் மகன். . . . . . .
தேசத்தைப் பாழாய்க் கெடுத்திட. . . . . . .
என்றவர் சொல்லவே பொன்னுருவி. . . . . .
எல்லையே மண்டபத்தில். . . . . . . . . . .
வண்ணாத்தி தன். . . .

வையகந் தன்னில் தவசிருந்து பெத்தே னுன்னை
விபாகஞ்செய்ய வேணுமென்று நினைத்து உனக்கு
மாமன் மகளை வளத்துப்பிராயம தாக்கி
சந்தோசமாகக் கலியாணம் பண்ணிட வென்று
தமயனாரிடம் ஆள்சொல்லி விட்டதின் பின்னே
ஆகட்டெனவே சம்மதப்பட்டு இருக்க
அதுக்கு முன்னிப்படி கோரணி கொண்டாயே நீயும்
என்றுமொழிகிற தாயாரை ராசன் பணிந்து
இன். . . . மனும் மாமன் மகளைக் கலியாணஞ் செய்ய
மாப்பிள்ளை கிடையாதுயென்று யிருக்குமே யானால்
மட்டச்சி தாலியைக்கட்டி மடத்திலே வைப்பாய்
என்றவன் சொல்லவே பொன்னுருவி யம்மசொல்வாள்
எ. . . . . . . . .வண்ணார் குலந் தொட்டுநீ. . . .
மாண்டங் கிறந்தா லெனக்கு மகனாரு. . . . . . .
மாதாவே நானு . . . . வண்ணாத்திக் காணை(யுஞ் சொல்லி)
சேர்த்துக் கொண்டேனே திரவியம் போலே (யவளை)
திரும்பத் தள்ளிவிட்டால் தெய்வங்கைக் கொள்ளுமோ
முன்னாலெனக்குப் பிரமன் விதித்த விதியை
மோசமென்று சொல்லித் தள்ளிட ஒங்களாலாமோ
மாலணைஞ்சியோடே வாழாம லென்னை மற(ற)த்தால்
வாலசன்னாசியைப் போலவே போவேன் மக. . . .
கோதை யிவளைநான் விட்டுவிட்டால் செத்துப்போவேன்
குத்தம் பொறுத்தருளென்று தாயாரைக் கும்பிட்டார்
கும்பிட்ட கையைக் கண்டந்தத் தாயாருங் கண்டு
கோப மடக்கி. . . . மொழிந்திடு வாளாம்
மோகமாய்த் தொட்டதைக் களைந்திட வேண்டா மகனே
மேதினியில் காசினி யாண்டிடும் படிக்காக
கன்னிக் கலியாணம் செய்து அரசாள வேணும்
காரியம் பேசவே வாவென்று சொல்லிப்போனார்
திரும்பியே சீவலமார்பரை வந்து தொழுது
சீர்திருத்தப். . . . . . . . . . . . . . . . . .
தாயு மகனும் . . . . . . . . . . . . . .
சண்டாளன் ம. . . . . . . . . . . . . . . .
தள்ளமாட . . . . . . . . . . ஞ்சொல்லி
சடுதியில் கோபத்தை ராசனுக்கு மூட்டிவிட்டார்
தங்கச்சி வார்த்தையைத் தட்டினா னென்றே
சகலபுலிப் போலவே தான்கோவித் தாரே

## சிவனணைஞ்சவர் - சீவலமாறன் படைப்போர்

மங்கை வண்ணாத்தியைப் பெண்ணாகக் கொண்ட
வண்டனைப் பின்கெட்டா கெட்டிவா வென்றார்
என்றவார்த்தை ராசன் சொன்ன பொழுது
இமைக்கும் பொழுதில் படைகளும் வந்து
மண்டபந் தன்னை வளைத்தவர் சுத்த
வல்லயந்தா னெடுத்தா ரிருளனும்
சிந்து படைக்கு னம்பதைக் குத்தி
திரட்டியே வந்த படையைத் துரத்த
வாச லகத்தே யிருந்தாய். . . . . . . .
வாளும் பரிசையும் வலுவா யெடுத்தே
வாளும் பரிசையும் வாங்கியே சென்றார்
பூசுங் கொளுந்தும் பொட்டதுவும் . . . . . டு
போராக் கச்சைகட்டிப் புகுந்தாரே போரில்
மேலாளுங் காலாளும் கூடப் புகுந்து
வீசினார் வாளும் விழுந்தார் களத்தில்
கோலச் சமுதாடு கொண்டே நடந்து
குத்திச் சரித்தார் குதிரை மேலாளை
வில்லைப் பிடித்துச் சரங்கள் தூவி
வீறாக ஐந்தாறுபேர் விழுந்தார் களத்தில்
சொல்லிய யானைத் துதிக்கையை வெட்டி
துடிப். . . . இருளனும் பட்டான்
மண்டபக் கோவில் க. . . . . த்தினைச் சார்ந்து
மதயானை விட்டார் வாச லிடித்தார்
அன்னேரம் வன். . . . . . . . . . .
முன்னணிப் படைகளை வெட்டி (யே வீழ்த்தி)
மோசம் வந்தேனம். . . . . . . . . . . . .
பின்னணிப் படைகள். . . . . . . . . . . . . .

## மந்திரி வன்னியத்தேவன், இருளப்பனாசான் இறப்பு

பிசகாமல் மந்திரி துள்ளியே சாட
அன்னேரஞ் சீவல மார்பனும் வந்து
ஆரடா யென்று யதட்டி முழிக்க
நன்றி மதிக்கவொண்ணா தென்று சொல்லி
நாமளவன் சோறு உண்டங் கிருந்தோம்
. . . . . . . . . . ப்படி யிறப்ப தென்றெண்ணி
எண்ணாமல் சமுதாடு கொண்டவன் குத்தி
குத்தியே வன்னியத் தேவனும் பட்டு

கூடி யிருளப்ப னாயானும் சேர்ந்தார்

## சிவனணைஞ்சவர் செய்த போர்

(சட்டம்)ாய்க் கச்சை கட்டி யிறுக்கி
சமுதாடு வல்லயங் கையி லெடுத்தார்
கோலச் சமுதாடு கொண்டே நடந்து
கொட்டாடி முதுகிலே விட்டாடி வருவார்
முட்டி வருகின்றபே ரெட்டி பட்டார்
முடுகியே நின்றவர் குரவைக ளிடுவார்
வண்ணார் பெண்ணுக்குச் சீதனம் வெள்ளாட்டி
மாமன்மகளைக் கொண்டு வருகிறேன் பாரு
சீறும் புலிப்போலச் சினத்திடு வாராம்
சிவனணைஞ்ச பெருமாளு மதிகோப மாக
. . . . . . . பத்தா யறுபது. . . . . . . . . பேர்கள்
மண்ட யறுகின்றதோ ரொருகோடி பேர்கள்
வில்லொரு கையில் விழுவா ரொருகோடி
வெளுக்கும் வண்ணாத்திக்குப் பழிஒரு கோடி
. . . . . . . . வண்ணாத்தி யுங்களை யென்று சொல்வா
(பழுதாய்) நாம ளிறக்கிறோ மென்ன
(. . . . . . த்தி யோடா யிரம் பேர்க ளிற. . . . . )
ஆணுடை யுடுத்தி வரும் பெண்கள்தான்
ராகுத்தர் தனை யீட்டியினாலே யெறிவார்
அழகுள்ள ஆனை துதிக்கை பிடிப்பார்
. . . . . . த்து குதிரைவால் தேடிப் பிடிக்க
வீரர்க ளோடுமறு கோல மெடுத்தார்
இங்குள்ள பேர்களைச் சங்காரம் பண்ணி
இலங்கா புரியை யனுமார் சுடுவது போலே
சீவல மார்பனென்ற மாமன் தனையும்
செங்கிடாய் போலே பிளக்கிறேன் பாராய்
கோவமுடன் வார்த்தை கும்பிட் டெடுக்க
கெடுக்க ப. . . . . டித்த வழகும் பிடிக்கின்றாள்
என்னுடைய மன்னவன் றானும் வருகின்றான்

## சின்னணைஞ்சி போர் புரிதல்

எனக்குமொரு சமுதாடு தாரு மென்றாளே
உன்னுடைய சேவுகங் காண்(பேன் நானும்)
உடுதற்சீலை நீக்கியொரு சட்டையு மிட்டு
கொங்கை கனத்துக் குலுங்காமல் நிக்க

கொச்சு மஞ்சள் பட்டினால் கட்டினாளே
மங்கையுங் கோவித்து வாசலிடித் தாளே
. . . . . . மதகரி வெட்டி விட்டாளே
. . . . . . ஆனையது விழவே
ஆயிழையாளு மதிகோபங் கொண்டாளே
சிவனணைஞ்ச பெருமாளும் சின்னணைஞ்சியை விலக்கி
செப்ப முடன்தா னிப்போது கேளாய்
மலங்காம லான கையில். . . . காரம் பெத்து
மண்டபத் . . . . . . பெண்ணே
என்று பிடித்தவர் பின்னாலே விட்டு
இன்னமொரு காரிய முண்டென்று சொன்னாள்

## சின்னணைஞ்சி - சிவனணைஞ்சவர் இறப்பு

குன்றாம லெந்தனை வந்தொருவன் தொட்டால்
கொன்ற கற்புக்கொரு குத்தமுண் டாமே
மடியும் படிக்கென்னை வெட்டுவீ ரென்ன
. . . . . . . முத்திலே முத்தமிட்டாள்
உடனே யவளை யெடுத்தொரு . . . . . ரையில் வ. . . து
உன்னையல் லாலெனக் கொருஆதார மில்லை
அரனா ரிடத்தில்போ யிருக்கலா மென்று
ஆகா வென்று கழுத்தை யறுத்தார்
கொண்ட கோலத்துடன் தன்னுட நெஞ்சில்
குத்தினார் குமரப்பன் சமுதாடு கொண்டு
கைத்திற மான கணவனும் பட்டுக்
காரிகை யாளு மிருபேரு மாக
ஆயா னிருளப்பனு மிவர் கூட
அங்குள்ள மந்திரி வன்னியர் கூடி
தம்முட னிவரெல் லோருங் கூடி
தெய்வக் கயிலாச மானது தன்னில்
ஆதி சிவனா ரிடந் தன்னிலே
அல்லோருங் கூடி நடந் தாரே

## இறந்தவர் அனைவரும் கைலாசம் சென்றடைதல்

மண்டபந் தனிலிறந்த சிவனணைஞ்ச பெருமாள்
வால நல்ல சூரியன்போ லெழுந்தருளி
கொன்றமயி லாகச் சின்னணைஞ்சி யென்னுந் தாயார்
கூடவே யிளவரச ரோடுநடந் தாளே
நடந்திடச் சிவனணைஞ்ச பெருமாளும் மடமாதும்

. . . . . . . கயிலாச மலையானதிலே. . . . . .
. . . . . . யிருளான் வன்னியப்பூத் தலைவனு. . . . .
படந்தமரச் சோலையும் பருபத மலையும்
பராபர முனிவர்தவஞ் செய்யுகின்ற முறையும்
முறமுறத் தவசுபண்ணி நிற்போர் சிலர்கூடி
முப்பத்து முக்கோடி தெய்வர் செய்யுகின்ற முறையும்
கறையில்லாத பேர்கள் தவஞ்செய்து காணவில்லை
கங்காள மூர்த்தியைநான் காணுவ தெப்படியோ
காணுத(ற்குக்) கயிலாச பருபதக் கோணத்திலே
. . . . . . . . .

## சிவபெருமான் சிவனணைஞ்சவரின் பிறவிப்பேற்றை உணர்த்துதல்

நின்றது கண்டுசிவனார். . . நோக்கிப்பார்த்து
நீ வேர்வை பத்திரனே . . . . . யாகம்
பண்டு முன்னாள் தக்கனுட வேள்வி தான். . . . .
பார்வேர்வை பத்திரனே வுனையேவி விட்டோம்
விட்டமதி கோபத்துடன் மிகுத்ததக்கன் தன்னை
வேள்வியு மழித்து அவன் தலையையு மறுத்து
மட்டுப்படாத தலையைச் சுட்டுபோட்டு நீயும்
வான்பரி கடந்து கயிலாசத்திலும் வந்தாய்
வந்திருந்தா யெந்தனிடம் அந்தநேரம் தன்னில்
வான்பதி தென்காசியாள மதலையில்லை யென்ன
செந்தா மாப்பதி சிறந்திருக்கும் நாடு
தேச மரசாளச் சிறுமதலை வேணுமென்ன
பொன்காசி யாண்டிருந்த பொன்னுருவிக் காக
பூவைநல்லாள் பகபதியும் வாதாட்டஞ் செய்து
ஆனதுக்கோ யுன்னையவள் தன்வயித்தில் சென்று
அவதரித்து வரச்சொல்லி யனுப்பினமே நாமும்
அங்கேபோய் மீண்டு யிங்கேவர வேணுமானால்
காம . . . . . யரில் ஒருவர்கூட வரவேணு மென்றாய்
. . . . . . . . . . . . . . . . . . . . .
பூலோகத்தி லெந்தனக்கு புண்ணிய (மில) வோதான்
பிறப்பட்டார் வரம்வாங்க பெருமானே யென்றார்

## சிவபிரான், சிவனணைஞ்சவர் - சின்னணைஞ்சியை அவுணரை அழிக்க அனுப்புதல்

சங்குதரித்து வேட தாவடமும் கட்டி
சன்னாசி யாகச்சில ராயிரம்பேர் கூடி
ஆயிர(த்தெ) ட்டுப்பேர் வண்ணாத்திக ளொக்க

அவர் அவர்கள்தன் பாரிக ளருமடத்தை வைத்து
காசியிட்ட வேட்டியுடன் கண்ட கோடாலி
கமண்டலத்தில் நீர்கோரி கனதவசு பண்ணி
பண்ணின தவசுதன்னைப் பாத்துவரப் போனோம்
பயந்தோடி மாரெல்லோரும் நன்பிறகே வந்தார்
தன்னகரில்லா தவவேடத்திகள் தன்னைத்
தயவுபண்ணித் தங்களிடம் போகச்சொல்லி வந்தாய்
ஆச்சிப்போச்சி தென்றுசொல்லிய வண்ணாத்திக ளொக்க
அல்லோருங் கூடி நம்மோ. . . . . .கையாச்சு
வாய்ந்த அவுணாதிதன் வரமளிக்கப் பே(ப)ாவாய்
போவா(நீ) வேறுமொரு பூ (த)ரறி யாமல்
புத்தியினால் வென்றுவாராய் பத்திரனே யென்றார்
சேவுகனே ஒன்னுடைய திறமறிவேன் நானும்
சொல்லெனவே சொல்லியபின் திண்டாடி நிற்பதேது
(ஈ)தென் றுரைத்த பரமசிவனைப் பார்த்து
இசம்புவராஞ் சிவனணைஞ்ச பெருமாள் மனதீரன்
என்கூட வந்த யிருவர் தமக்கும்
இப்பன்வரங் கொடுத்தனுப் பிடவும் வேணும்
அவுணர்கள் செயித்துவந்த பின்னேவரம் வாங்கி
ஆயிழையும் நானுமாகப் பூலோகத்தில் போவோம்
அன்புட னணைஞ்சவரு மிவ்வா (றாகவேசொ)ல்ல
ஆதிசிவனார் மகிழ்ந்து அதியவரம் கொடுத்தார்
பூலோக மானதிலே அய்யன்மா ரிடத்தில்
பூசையுண்டங் கிருவுமென்று புண்ணியனார் சொல்ல
அதுகேட் டணைஞ்சவரு மன்புட னிவரை
அய்யன்மா ரிடத்தில்சென்று அன்புகூர்ந் திருங்கோ
திருவுள மானபடி அவுணர்களைச் செயித்து
சீக்கிரத்தில் வரம்வாங்கிச் சிறப்புடனே வருவோம்
வழியனுப்பி யவர்களையும் விட்டகன்று போக
மகாதேவ ரிடத்தில்பச்சை வில்லதுவுங் கேட்க
பாத்துவென்ற பச்சவில்லும் அம்புங் கைக்கொடுத்து
பவுசுகொண் டவுணர்தம்மை வென்றுவர விட்டாரே
விடைபெத்த சிவனணைஞ்ச பெருமாளும் பேச்சியரும்
தடையறவே கயிலைமலை தன்னருகே வந்துநின்று
நின்றுசிவ னணைஞ்சவரும் நேரிழை சின்னணைஞ்சியுமாய்
குன்றுவெள்ளிக் கயிலைவிட்டு கொடியமலைச் சாரலும்விட்டு
மலைச்சாரலும் பருபதமும் வாழுமலை கடந்தேகி
மலையாமல் அஞ்சுதலை நாகமும் வெள்ளானைகளும்
வெள்ளானைக் குப்பங்கண்டார் வேதமுனிவர் கூட்டங்கண்டார்
தள்ளாத தவமுனிவர் சங்கத்தர் கூட்டங் கண்டார்

கண்டுசிவ னணைஞ்சவரும் காரிகை சின்னணைஞ்சியுமாய்
நன்றுநன்று கயிலைவளம் நாமள் கண்டோ மதிசெயமே
அதிசெயமே என்றுசிவ னணைஞ்சவரும் பெண்ணாரும்
கதிப்புடனே மலையைவிட்டுக் கல்லாற்றங் கரையில்வந்தார்
ஆத்தங் கரையில்மடத் தருகாகவே வந்து
அழகான செல்வ னணைஞ்சபெரு மாளுமாக
பூதமதி போலச் சிவனணைஞ்ச பெருமாளும்
பூவைநல்லாள் சின்னணைஞ்சிப் பெண்ணாளும்
. . . . . . . . . . . . .

## அவுணரைத் தந்திரத்தால் வெல்லுதல்

முனத்தாலுங் கோட்டைக் கதவுங் கடாரவும் வொட்டார்
மூப்பு வண்ணார் குலம் போலவே நாமள். . . . .
நடந்து வண்ணார் குலம்போலவே நாமள்தான் போனால்
சங்கைக்கு மோராது தன்பகை தீர்க்கலா மென்றே
குமைத்துக்குமைத்து அஞ்சாறு கொட்டான் பிடித்து
கொஞ்சமாய் அஞ்சாறு சீலையைக் கெட்டியே வைத்து
கெட்டுச் சீலையொடு பட்டுப்பருவட்ட மொக்க
கெம்பித மாகவெளுத்துக் கோட்டானையி லேத்தி
முட்டுப் படாமலே அவுணர்கள் கோட்டையில் செல்ல
முன்னும்பின்னுமக் கோட்டானைக்கு வென்றடிக்க
கோட்டானைக்கு வென்றடிக்கவே சின்னணைஞ்சிதான்
கொண்ட கணவன் சிவனணைஞ்ச பெருமாளும்
மட்டாத பேர்கள் போலே வடிவுக ளாக
வண்ணாரில் ஏழை வண்ணார்களைப் போலுருமாறி
மாறி அவுணர் இருக்கின்ற கோட்டை முடுக
வண்ணானும் கோட்டானைக்கு வென்றடித்து வரவே
தேறியச் செல்வி சிவனணைஞ்சி யென்னும் பெண்ணாள்
சேலையைக் கட்டாய்த் தோளிலே மாராப்புப் போட்டாள்
மாராப்புப் போட்டு வண்ணானும் வண்ணாத்தியுமாய்
வாய்த்த அவுணரிடு கோட்டை வாசல் முடுகி
ஆ(றி)யே கோட்டானை. . . . . . டித்ததுடனே
. . . . . . . கூடி கோட்டை யில்வந்தார்
வழிஅதைக் கண்டு அவுணர்கள் கூடியே
வார்த்தைதா னென்ன வந்த வகையேது
ஏது எங்குள்ளா ராருநீ யென்னவே
இசம்பு சீக்கரம் இடிகள்படு முன்னே
முன்னே வாய்பொத்தி முடுகிநின் றதுதான்
மொழிகள் குழறியே குழறிச் சொல்வார்

சொல்லுவா ரெந்தன் தந்த தாயாரும்
மல்லுக் கெட்டியே வசைப்பறைந் தார்கள்
வசை பொறுக்காமல் வந்தே னடிமைதான்
அடிமை தானினி வுங்க ளடைக்கலம்
அழுக் கெடுத்துடன் வெளுக்குஞ் சாதிநான்
பறவை கொக்குப்போல் வெளுக்குஞ் சாதிநான்
சாதி தன்குலம் வண்ணா னென்றபின்
தயவு பெருகவுஞ் சொல்லிக் கூட்டிப்போய்
மோதி வளத்திடும் பச்ச மூங்கிலை
மூட்டுக் கரியதை யிட்டு
. . . . . . . . . . . . . . . . .
முன்னே. . . . பிறைகள் முகித்தனர்
முகித்த நித்திரை கொள்ள. . . . . .
சடை. . . . . ாலிருபேரும் இருக்க
தயவு கொண்டபின் படுக்க ஓரறை
அறைகள் தானதில் பிசகு வாராமல்
அழுக்கு வைத்தங்கே அடைக்க ஓரறை
முறைக ளாகவே வெளுத்த சீலையை
மோசம் வராமல் வைத்தெடுக்க வோரறை
வெளுக்குஞ் சீலையைச் சுமக்கும் கழுதைக்கு
வீக வீடக் கட்டி முகித்தபின்
முழுக்க வண்ணானும் அழுக்கெடுக்கவே
ஓறமுறய . . . . . . வெளுக்கும் சேலைக்கு
சீலை தனக்கொரு பணமும் அரிசியும்
சென்றா லாண்டுதான் திகைந்த பொழுதிலே
வேலை கொண்டு நெல்கோட்டை படியென்ன
விளம்பி யெபற போடச் சொல்லினார்
சொல்லி அவுணர்கள் தானிருத்தியே
சூர னறியாமல் அவுணர் பேசினார்
அவுணாதிகள் போனதற்பின் அவரவர்கள் மனைதோறும்
கெவனமுள்ள சின்னணைஞ்சி கிளைபோலும் தினந்தோறும்
தினந்தோறு மழுக்கெடுத்து சீலைகளுந் தான்(வெளு)த்து
மனந்தனிலே கவர்டு வைத்து மனைதோறும். . . . . .
இருந்துமனப் பூரணமா யெல்லார்க்கும். . . . .
சிரித்துமனங் களிகூர்ந்து சீலைவெளுத்துக் கொடுத்தாள்
கொடுத்திடவே சின்னணைஞ்சி கொடிய அவுணத்தி. . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பாத்துமனம் வேறாகி. . . . . . . . . . . . . . .
தன்னுடைய எழுத்திதுவோ தன்கணவன் எழுத்திதுவோ

மையிட்ட கண்கோதையுங். . . . . . பார்த்திடில்
மைய லுண்டாக்கும் யாருக்கும் மோகமாய்
சந்து காறை கடையத்தைக் கண்டவர்
சாதி தெரியாமல் நின்று தயங்குவார்
பாடகந் தண்டை சிலம்பது பாத்தவர்
பாவை நல்லாளை யாரென்று எண்ணுவார்
கட்டுவம் பீலி கண்டதே உண்டானால்
காம மோகத்தை யாருங் கருதுவார்
ஆலிலை போலவள் வயிறு கண்டால்
ஆரும் பாத்து மசங்கிடு வார்களே
ஏந்திழையாள் இடையது பார்த்திடில்
எவருங் கொள்ளுவர் இன்ப. . . . .
பாவை நல்லா(ள்)தன் பாதத்தைக் கண்டாக்கால்
பாம்பின் படமென்று பதறிடு வார்களே
(ஆ)சாரக் கைவீச்சு கண்ட துண்டால்
ஆரும் மனமசங்கி விழுந்திடு வாரதில்
கைவிரல் பத்து மோதிரமும் பார்த்தால்
கண்ணு மயங்கிடும் காம விரியாலே
விம்மிப் பூதித்த கொங்கையைக் கண்டிட்டு
மெத்தை போலக் கிடந்து விறைப்பாம்
அம்ம வாயில் சிகப்பதைக் காணச்சே
அய்யய்யோ வென்று தெய்வத்தை நேருவார்
எட்டிப் பாப்பார் நடப்பார் புலம்புவார்
என்றைக் கவளோடே கூடுவேனோ வென்பார்
கட்டிமையாக் கிட்ட வந்தா ளென்ன
இருகையா லாவி இருளனைக் கட்டுவார்
இப்படியே யவர்களெல்லாம் வர

## சிவனணைஞ்ச பெருமாள், சின்னணைஞ்சியின் வரலாறு கேட்டதும் உரைத்ததும்

ஏந்திழை யுந்தெரு விட்டுப் போனபின்
மகாசன் சிவனணைஞ்ச பெருமாளும்
வன்னியத் தேவ னிருளப்ப னாயானும்
கூட்டி மண்டபந் தன்னி லிருத்தவே
கோதை யிவளாரு யென்றவர் கேட்சுவே
மாத்தெடுக்கும் வண்ணார் குலந் தனிலே
மங்கை சின்னணைஞ்சி யென்ற பெண்ணிவள்
என்றிருளனு மாக. . . . . . .
ஏந்திழைதன் வரலாறு சொன்னார்

தொங்கலிட்ட யேத்தாப்பு மாத்தாப்பு மாக
தூக்கிவைக்குங் கா(லிலிடு) சிலம்பு கொஞ்சவேதான்
தோகையருஞ் சேலைகட்டித் தோள்மேலே போட்டாள்
போட்ட மாது டன்கையும் வீசியே
பொங்கு அவுணர்கள் தெருவில் வந்தனர்
செட்ட மாகிய சின்ன ணஞ்சிதான்
தெருவி லாவியே பதியில் வந்தனர்
வந்த போதிலே சின்ன ணைஞ்சியை
வழியில் கண்டபேர் வெருட்டி யோடவே
சொந்த மான வண்ணாத்தி . . . . . . ஆனால்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
நேரிழைமார் அவுணாதிக ளேதுமொழி சொல்வார்
குன்று தனத்தாளே சின்னணைஞ்சி யென்னுந் தாயே
கூடிப்பிரியா கணவனைத்தான் கூட்டி வாராய்
வாராய் நீயென்று சளித்து மறுநாளே யானால்
வருத்திக்கொண் டல்லாது நீயுமினி வரவேண்டாம்
காரிய மாக அவுணாதிகள் சேர்ந்திரண்டு
புத்திய தாக சின்னணைஞ்சி யோடுரை சொன்னார்
உரைத்தது கேட்டுச் சின்னணைஞ்சி யென்னுந் தாயார்
ஊரெல்லாஞ் சுத்தி வெளுத்த பிடவை கொடுத்து
துரத்தனமாய் கைவீச்சிட்டு மாராப்புப் போட்டுத்
தோக வருவது காணாமலே யந்தவண்ணான்
வண்ணானு மேயந்த சின்னணைஞ்சி தனைத்தேடி
வரும்போது கண்டு கரைமாடந் தன்னிலே வந்தான்
கண்ணான கண்ணே சின்னணைஞ்சி யென்னும்பெண்ணே
காணாமல் நானும்மனந் தடுமாறினே னென்றான்
என்று கரைமாடன் தந்நிலத்தை. . . . . . . . . . .
இனி(மேல்) செய்யு யிரு. . . . . . . . . .
அன்று முதலாய் அவுணரிடுெ. . . . . . . . . . .
அளிக்கினு மங்(கை). . . . . . . . . . . . . . .
என்றுதான் சொல்லச் சிவனணைஞ்ச. . . . . . . . . . .
இலங்குகின்ற சூரியன் போலவே
மன்று தனிலொரு பேர்களில்லா. . . . .
வா(ணி) பதித்த கதிரவன் போலுருவ
உருவாகப் பெண்ணுஞ் சிவனணைஞ்ச பெ(ருமாளும்)
அப்பின யாகச் சின்னணைஞ்சி யென்றபெண்ணும்
பருவத்தின் மடமாது கணவனு மாக
பண்டுபஞ் சேலை வெளுப்பாகக் கெட்டிமடித்து
மடத்துடன் கெட்டியே சேலையு மாராப்புப் போட்டு
மகுத்துவ மாகவே வண்ணானும் வண்ணாத்தியுமாய்

குடிமதியாக வெளுக்கும் பிடவைகள் கொண்டு
கூடவே போந்தார் தெருவதிலே வழி கொண்டார்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
மையல் கொண்டுநின்று மனந்தடு மாறியே யேங்கி
பளியின் றுவொக்கப் படுவது காணுவது திட்டம்
பார்த்துச் செயிக்கவும் ஒட்டாதுமே யினியேது
ஏது தானினி யென்றவுணாதிக ளொக்க
இச்சைப் பட்டேபல வண்ணான்தன் கூடஇசைந்து
மோதிவரும் அவுணாதிகள் சேரவளித்து
முன் புபோலத் தங்கள்கரை மாடந்தன்னில் வந்திருந்தார்
புகுந்துடனே கரைமாடம் பொற்கொடியும் வண்ணானும்
மகுத்துவமாய்த் தானிருந்து மகிழ்ந்திருக்கும் (வேளையிலே)
வேளையிலே அவுணர்களும் விதிமுறைக. . . . . . .
பாளயமாய்த் தங்களுட பதிதனிலே (வரும்போது)
வரும்போது தெருவதிலே மகுத்து.. . . . . . .
கரும்பினிய மொழியார்கள் காமி
வெகுவாகித் துயரமுத்து. . . . . . . . .
பகுமான அவுணர்களும் ப. . . . . . . . .
மறைந்து நின்று வேத்தொருத்தர்
சிறந்தபுகழ் வண்ணானும் சேடியரு மல்லாது
அல்லாதே அரண்மனைக்கே ஆரொருத்தர் வரமாட்டார்
வல்லாண்மை யாகவேதான் வண்ணானும் வாதழித்தான்
வாதழித்த வண்ணான்மேல் மறையவர்கள் படையெடுத்தார்
கலகமுத்த படையுடனே கலந்துகொண்டார் அவுணர்களும்
திரட்டியதோர் படையுடனே திரண்டுகொண்டு அவுணர்களும்
முரட்டுவித்தை கொண்டுவந்து மு. . . . . டந்தனை செய்த வண்ணானை
வண்ணானைத் தான்பிடித்து வாளதினால் . . . . . . யரிந்து
பெண்ணாக்கி விருந்திடுவே னென்றுசினத்தே யெழுந்தார்
ஆர்ப்பெரித்த பெரும்படையுங் கண்டுஅந்த வண்ணானும்
தாப்பிரிய மாயெடுத்துத் தானெடுத்தார் பச்சைவில்லை
வில்லதனைத் தானெடுத்து வேண்டுமண்ணம் பூசைசெய்து
பல்லுவமாய்ச் சிவன்கொடுத்த பானுவென்ற வில்லதுதான்
வில்லதுதான் ஆக்கினையாய் வேறுகண்டு சூரியனாம்
பல்லமுறும் நாணதுதான் பரம். . . . . . தானாகுமென
ஆகுமென்ற தாகுமென அக்கினிக்கணையை யேவினார்
. . . . . . . . . . . . . . . . . .
பாடுசெய்த அவுணாத்தி தங்களை. . . . . . .
அபடக் காரன்தான் ஆண்டி செய்வினை. . . . . .
ஆகுமோ யிதுயென்ற போதிலே. . . . . . .
சாவு நேரமும் கோட்டை. . . . . . . . . . .

சாம்ப லாக்கியே தூசிப் படுத்தினார்
அவுணரிடு கோட்டைகளும் ஆயிரத்தெட்டுப் பேரும்
கெவன மில்லாச் சிவன்பேரில் கேடுசெய்த அதினாலே
அவுணருட கோட்டைகளும் அவர்களுட தந்திரமும்
கோட்டைகளும் வெந்துருகிக் கூறுகெட்ட படியாலே

## தோற்ற அவுணாதிகளுக்குச் சிவனணைஞ்சவர் புகலிடந்தரல்

வாட்டமில்லா அவுணாதிகள் வந்துசிவ னணைஞ்சவரை
சிவனணைஞ்ச பெருமாள்தன் சீரடியைப் பூண்டுகொண்டு
புவனமெல்லாம் படைப்பவனே புகலிடந்தா னெங்களுக்கு
எங்களுக்கு யெனிமேலும் ஏதுபிழைப் பென்றுசொன்னார்
தங்களுட தன்பேரில் சங்கரனார் மய்யல் கொண்டதினால்
மயலான படியாலே வான்பரிக்கே போலிருந்து
சிவன்கோவில் கண்டிடத்தே சென்றாடிப் படித்திருங்கோ
படிந்திருங்கோ யென்றுசொல்லிப் பைந்தொடிமாரை நிறுத்தி
முடித்து வைத்த சின்னணைஞ்சி மொய். . . . .
அணஞ்சவரும் தன்னுடைய அகமு. . . . . . . . .
என்னுமந்த . . . . ரன் போலே பேருரு
பேருருவம் கொண்டு சிவனணை. . . . .
காருமெனச். . . . . . .

## சிவனணைஞ்சவரைச் சிவன் ஆட்கொள்ளுதல்

வந்தார் சிவன் கயிலாச மதிலேதான்
வள்ளல் சிவனை வணங்கியே நின்றான்
கொந்தார் குழலி சின்னணைஞ்சியும்
கோமான் சிவனணைஞ்ச பெருமாளும்
சீரான செல்வன் சிவனைணஞ்ச பெருமாளும்
சிவனாரைக் கண்டுதொழு தேத்தி நிற்க
பேராளா கண்டுநீ கிட்டவா வென்ன
பிஞ்ஞக மூர்த்தி திருவுரை செய்தார்
கிராயமா யவுணர் கோட்டையில் போனதும்
புத்தியில் லாத அவுணரைக் கொன்றதும்
சீராக யென்னுடனே திடனாக நின்று
செப்படா நீவேர்வை பத்திரா யென்றார்
என்ற சிவனுக் கெதிராக நின்று
இசம்புவார் சிவனணைஞ்ச பெருமாளு தீரன்
குன்றெனவே நின்றுதான் அங்கவ ரானாலும்
குத்தப் படாத அவுணர் சாவிப்பார்

வாசித்தறி யாதமுழு மட்டியளோ நீங்கள்
சீதையென்ற பெண்ணாலே தென்னிலங்கை யழிந்த
செய்திதனை யறியல்லையோ திருட்டுதனக் காரா
கன்னடியன் மகளாலே வள்ளியூ ரழிந்த
காரணங்கள் தெரியாதோ யென்று. . . .
கன்னடியன் மகளா. . .
கதை தெரியாதோ. . . . . .
பாவைநீலி யதனாலே பழகை (நல்லூ ரழிந்த)
பாவினைகள் தெரியாத. . . . . . . .
கோதை தோட்டுக் காரியா(லே) கும(ரப்பராச)
குத்தம் குறை தெரியாத கொடும்(பாவி).. . . . .
அரக்கனுரு கொடுத்தவரஞ் செயிக்கவென்று ஆயன்
அழகா(ன) பெண்வடிவு கொண்டதறி யல்லையோநீயும்
ஆலிலையைப் போலேபுல் கூத்தாடவே தொடுத்தால்
ஆகையாலே சொந்தக்கூத்து ஆடுவேனே நானும்
காசினியை யாளுகின்ற ராசமன்ன னுக்கு
கல்லுச்சீலை தப்பிஊருக் கழுதைமேய்க்க லாமோ
வேசியென்றா நீநினத்து யிங்குவந்தா யிப்பம்
வெடுவெடெனச் சின்னணைஞ்சி வேகமதாய்ச் சொல்வாள்
தொட்டுப்போட்டுப் பின்புதள்ளி விட்டிடுவா னானால்
சோலிவேண்டாம் வேசைகளைத் தாலிகட்டச் சொல்லு
மட்டுத்தப்பி யென்னைவந்து பெண்பிடிப்பா னானால்
வாழ்விழந்து ஒங்களுயிர் மாளுவது திட்டம்
நந்நிகெட்ட ஆணெனவே கெஞ்சிடுவா னானால்
. . . . . . . . நஞ்சி தின்று சாகச் சொல்வ. . . . . .
பத்திரமா யென்னைவந்து பிடித்திடுவா னானால்
பல்லுப்பறி போமெனவே மெள்ளச்சொ(ல்லு)
கொண்டை கெட்டி வலைய. . . . . . . .
குத்திக் கெடு . . . . . . ாவத. . . . . . க்குக். . . . .
வண்டத்தனம் . . . . . சின்ன. . . . . . . . . . .
மாத்தெடுக்க மனசுண்டா. . . . . . .
ஒன்னைக் கேட்டுவந்து . . . . . யென்ன பைங். . . . . .
. . . . . . . . ள்ளே சொல்லிப் பார்க்க வாரியோ வண்ணாத்தி
. . . . . . . . றிந்தால் நானுமினி உடம்பெடுக்க மாட்டேன்
ரோசங்கெட்டு நீங்களெல்லாம் மோசம்கெட்டுப் போவீர்
என்னையொரு சின்னணைஞ்சி யென்றிருக்க வேண்டாம்
ஏவிவுன்னை விட்டவனுக் கேமார்ய னானே
ஆரறிவார் இம்முறைமை யருஞ்சாமந் தன்னில்
ஆகாத வார்த்தைசொன்னால் ஆளுண்டுமே யெனக்கு
இன்பமில்லாச் சின்னணைஞ்சி யேகுமெனச் சொல்ல

முன்னேவேர்வை பத்திரனாய் முகனையுடன் நீபிறந்தாய்
பின்னே பொன்னுருவியார்க்குப் பிள்ளையதாய் நீபிறந்தாய்
என்னுடைய திருத்துடையில் இருபேருந் தான்பிறந்தீர்
முப்பிறவி பிறந்ததினால் முழுதுங் கயிலை . . . . தே
எப்பிறப்பிலேயும் ஓர்கணக்கு எழுதிடுவீரிவ் விடத்தில்
கணக்கறுதி யென்றுசொல்லிக் காலத்தே பிடித்து. . . .த்தாள்
பிணக்கமில்லா வுன்கணக்கும் பிசகாம லேபார்த்து
நயினார் கணக்கும் நான்பார்த்து. . . . . னாரைவிட்டு விட. . . .ம்
எனச்சொல்லி யரனாரும் இணக்கமுடன் வரங்கொடுத்தார்
மன்றுதனில் போவதற்கு மகிழ்வுடன்வரந் தரவேணும்
என்றுசொல்லச் சிவனாரு மெடுத்துரைப்பா ரிவருடனே

## சிவபிரானின் அறிவுரை

பூதலத்தில் போனதுண்டால் புண்ணியக்கேடு செய்யாதே
சாலோச் சாமியைப்போல் தர்மமதாய்க் கூடிவளர்ப்பாய்
அறிந்துவுன்னை ஊரவரும் ஆசாரஞ் செய்தபேரை
பிரிந்துநீ போகாமல் பேணிக்குடி தான்வளர்ப்பாய்
உன்னையறிந்து தொழாத பேரை உரு. . . . . கேடாய் நினையாதே
சன்னையல்ல அவர்களையும் தயவுசெய்வாய் தர்மமதாய்
புத்திசொன்னேன் உன்னிடத்தில் பூலோகத்தில் போயிருநீ
சத்தியுமையும் நானுந் தயவுசெய்வோ மிங்கிருந்து
கணக்கெழுத்து முடக்காதே கயிலையிலே யெப்போதும்
இணக்கமுடன் இருக்கவேணும் எங்கேநீ போனாலும்

## சிவனணைஞ்சவரின் பதிலுரை

சிவனணைஞ்ச பெருமாளென்று சிறப்புடனே தொழுதவர்க்குத்
தரமான செல்வமதைத் தான்கொடுப்பே னவர்களுக்கு
அணைந்தபெருமா ளெனவே ஆதாரமாய்த் தொழுதபேர்க்கு
இணைபிரியாச் செல்வமது யெப்போதும் நான்கொடுப்பேன்
பொன்னணைஞ்ச பெருமாளென்று போ(ய்)உன்னைத் தொழுதபேர்க்கு
என்னைத் தொழுதா ரெனவே யெப்போதும் நினைத்திருப்பேன்
பூவணைஞ்ச பெருமாளென்று பெருமையுடன் தொழுதபேர்க்கு
பாவதோசம் நீக்கிவைப்பேன் பாக்கியங்கள் நான்கொடுப்பேன்
வரங்கொடுக்க அணைந்தவனார் வார்த்தையொன்று சொல்லுவாராம்
. . . . . . . . . . . . .
தாமாக வாழுந்தந்தா தனிவழியே போ(வே)னோ
மலைவளங்கள் பார்ப்பதற்கும் வையகத்தார் போவதற்கும்

தலையாரிமார். . . . வேணும் சங்கீதக்காரர் வேணும்
கால்நடையாய் நடந்ததுண்டால் கணக்கெழுதக் கூடாது
எல்லோரு மனமகிழ எனக்குப்புரவி வேணுமென்றார்
சிவனாரு மனமகிழ்ந்து செவல் பரி. . . செயீந்து
எவனாலும் வெல்லாத ஏத்த. . . . . .
சங்கீதக்காரர் தாளக்காரர் தலையாரி மாரும்விட்டு
எங்குமவன் பிறகேசென்று ஏத்தபுவி மீதிலிட்டு
வாருமென்று வழியனுப்ப மகானவர் தனைப்பாத்து
பேருசொல்ல ஆபரணம் பிடவைகளுந் தாருமென்றார்
சடையரனார் தானணிந்து தன்பாத்திரத்தில் வைத்திருந்த
ஆடையாபரணம் தான்கொடுத்து அணைந்தவரை அனுப்பிவிட்டார்
சிவனணைந்த பெருமாளும் சிவனணைஞ்சி யம்மையுமாய்
தவமான பெரும் படையும். . . . . . . . . . .
மகா தேவரை யனுப்பி. . . . . . . . . . . . . . .
சகாயத்துடன். . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . .

## மலைகள் வளம் காணுதல்

. . . . . . . சிவனணைஞ்ச பெருமா. . . . .லத்தை
மலைவளம் பார்க்கவென்று யிங்(கே) வந்த. . . .
மத்தொரு காரியம் இல்லையென்று யவர் ம. . . . ந்தார்
பூமன் சியலாலே பொதிகை தனைக்கடந்து
கண்டவனே துணையென்று நடந்துஅதிக வனங்கடந்தார்
பறளிமலையில் சென்று படத்தே அதிசெயத்த
அன்புட னேமனஞ் சந்தோச(மாக) நடந்தார்
பறளிதனைக் கடந்து பாம்புடன் வாழுங்காடும்
கடந்தவர் நடந்துசென்று கரடிமான் வாழும்காடும்
கடந்ததோர் வாவிவிட்டு அருமலை பலதுங்கண்டு
விடபெறுஞ் சிவனார்மைந்தன் சிவனணைஞ்ச பெருமாள்தானும்
திடம்பெறச் செந்தூர்நோக்கிச் சீக்கிரம் நடந்தாரன்றே
செந்தூரில் சண்முகனார் சீர்பாதம் கண்ட(பின்னே)
செல்வோ மெனவுரைத்தார் சென்றார் படையுடனே
. . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . ரதையர் சிவனணைஞ்சி குணமுடனே. . . ன
முடவார் தண்டிகையாம் முன்னேபள்ளிச் சிவியாம்
முத்தமிழ் வாணர்கவி முழங்கியே பாடிவர
முன்னும் பின்னுமாக மல்லாரி பேரிகை
வானமலை போலணைந்தவரும் வன்ன. . . .

. . . . . . க்கும் புகழதிலே அன்மா . . . . . நடந்து
ஆனை குதிரை அணிஅணியாய்த் தான்வரவே
அணியா படைநெருங்க ஆதாளிச் சத்தமுமாய்
அட்டதிக்கி லுள்ளதுட்ட பிசாசுக ளோடுமாம்
திட்ட வட்டமான சிவனணைந்த பெருமாள் சுவாமி
தேவ சிவனணைஞ்சி சேனையுடனே வர
பந்தவெளிச் சரமாய் பகலத்தி யேந்திவர
பத்திபத்தி யாகவேதான் பகல்கொடி யிலங்க
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . )
(. . . . . . . . . . . பாத்து அருங். . . . . . . . . து
மலையும் பார்த்து வன்காசகாடு மிக்க. . . . . .
. . . . . . த்திர மாலே யல்லோ சிவனணைந்த சுவாமிகூட
. . . . த்திர வேல்விழியாள் அணஞ்சி ஆயிழை பக்கத்திலே
கோதண்ட மாமுனிக்கா யெடுத்த குடமா. . . . . னில் வந்து
மூதண்டமும் குலுங்க முத்தணைந்த வ. . . . . . . . . . .
வந்துமலையி லுள்ளவளங்கள் மனதிலறிந்து கொண்டு
சந்தோச மாகவல்லோ அணைந்தசுவாமி மனமகிழ
தாடகமா மலையில்வளங்கள் சந்தோசமா யறிந்து
சுவாமி சிவனணைந்த பெருமாள் சுவாமிசடாசு மலையில்வந்தார்
சடாசு மலையிலுள்ள வளமெல்லாஞ் சந்தோசமாய். . . மகிழ்ந்து
சத்துருசங்கார எத்திசைமெய்த்தவர் சகலகலை வல்லவர்
வல்ல முனியிருக்கும் மயேந்திர வாழ்மலையில்
. . . . . . . . . . . . . . . . . . . . . .
தவமுனிவோ ரிருக்கும் அவருட கூட்ட. . . . .
தற்பரனார் வேர்வைதன்னில் பிறந்தவர் சந்தோசமாய் நடந்தார்
சதுரகிரியிலுள்ள வன்னமகள் தானே யறிந்தவரும்
சத்தி சிவனணைஞ்சி மகிழவே சுவாமி நடந்தனரே
முல்லை வனங்கடந்து சிறப்பான காடும்விட்டு
. . . . . . ரமாக நடந்து அலுங்காக யமது த. . . . . . ந்தார்
. . . . . தேரி அடைந்தவனங் . . . . . . . . .
அய்யன் சொரிமுத்து அய்யனைக் கண்டு அடவாக வேதொழுதார்
தொழுத பொழுதிலேதான் சொரிமுத்து அய்யன் மன மகிழ. . . .
தோகையுமை பாகர் வேர்வையில் வந்தவர் சொல்லு. . . .
சொல்லுவா யென்றுரைக்க அவருடன் சொல்லு. . . . .
சோதியருளாலே வேள்விமலை வளம்சுத்தியே பார். . . .
மலைவளம் பார்க்கவந்தா யிங்கே வளமைகள். . .
மலைவளம் பெடாரனவர் மந்திரதந்திர வாதிகள்மெத்தவு. . . .
அவரிடஞ் சொல்லாமல் மலையி லழகுவளம் பார்க்க
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

வேதம் நாலு நின்றாடு மாமலை
வெள்ளி மாமலை த. . . . தங்கிலும்
எங்கள் நாதனார் வாழும் மாமலை
இருசி மாமுனி யிருந்த தோர்மலை
செங்கண் மாலய்யன் வாழும் மாமலை
தேவர் மாமுனி யிருக்கும் மாமலை
கணங்கள் நீர்பன்னீர் சொரிய வன்புடன்
வேத மாமுனி யிருந்த தோர்மலை
நன்றி தெண்ட பிடறைந்து. . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . டமொடு துளவ நல்புகை
. . . . . . அந்தணர் வேள்வியில் புகை
. . . . . . பேறு கயிலாச வீணையும்
. . . . . . நாதனென் றோதும் ஓசையும்
. . . . . . மத்துள்ள தொனியும் பலவரை
. . . . . . கியே ஒலியி னோசையும்
அத்த னடிய துலைச்ச பெறவேதான்
அருகில் யீசொரி காளி வேசமாய்
கணங் கணத்தினொலி மாதகத்தி னொலி
கையில் மான்மழு இலங்கு மோசையும்
சிங்கங் கரடிகள் வாழு மாமலை
சிவனணைந்த பெருமாள்சுவாமி செல்லு மலையிலே

**சிவனணைஞ்சவர் - சிவனணைஞ்சி வரவேற்றல்**

மேற்கே முகமாய் இவர்கள்வரவே மேலத்தெருவுவழி
மெய்யுள்ள வன்னியத் தேவனறிந்து விளம்பினா ரய்யனிடம்
மகராசராச அணஞ்சவராசர் வாரார் பரியேறி
மாது சிவனணைஞ்சியம்மை வாரதுகண்டு சொன்னேன்
சொன்னது கேட்டுச் சிவன்மகனாருஞ் சிரித்தேது சொல்லுவாராம்
சீக்கர மெதிர்கொண்டு கூட்டிவரச் சொல்லச் சிறுக்கனும் வன்னியனும்
ஓடி யெதிர்கொண்டு உத்தம. . . .
உமைமகன் . . . . . . கொண்டு விட்டு வெரு. . . .
ஆசாரஞ் செய்திட அணைந்தசுவாமியு மய்யன்
அப்போ அணைந்தசுவாமி தொழுதிட அய்யன் முன்னம். . . .
முன்னாலே பத்திரனாகப் பிறந்தாய் மோசமில்லை. . . .
மூத்த மகனாகப் பொன்னுருவிக்கு வீரனே நீபிறந்து
மூணாந் தரமாய்ச் சிவனார் துடைதன்னில் மீளப்பிற. . . .

(முன்டே)னாடும் பின்னோடும் வாரப்பனை தானேறி
. . . . . . . . த்தது நிரப்பியே யிருக்க
. . . . . . . . ட்டில் வந்ததுண்டால் இலந்தவிளை வூரதிலே
. . . . . . . . யிவர் பனைக ளேறுவாராம்
. . . . . . . . வீழ்நாட்டில் கோட்டாங் காட்டூரதிலே
. . . . . . . . பனைகள் ஏறுவாராம்
இப்படியே யிவரிருக்க ஏத்தகோட்டங் காடதிலே
இன்பமாகப் பெண்பேசி னாரே
அய்யனுட அடிமையதில் அருமையுள்ள பெண்பேசி
அழகு விபாகஞ் செய்திருந்தார்
இருக்கின்ற நாளையிலே ஏந்திழையாள் தந்தனக்கு
இளமதலை யில்லாத்த தினால்
குறிகேட்க வேணுமென்று குணமுடனே யிவர்கள்
குறத்தியை வருத்தி வைத்துக் கேட்க
வருத்துகுறி தான்கேட்க வகுப்புடனே சொல்லுவாளாம்
மகளே ஒன் சிறிதன் வழியாய்
தளுத்தமரக் காவதிலே சாத்தாவையுந் தொழுதால்
சந்ததிகள் உண்டுமென்று சொன்னாள்
என்று சொல்ல. . . . . . .
இருபேருஞ் சமமாக. . . . .
இன்பமாக அய்யன் (காவில்). . . . . .
தொழுது கொண்டு. . . . . . .
சொல்லிடு வாரே. . . . . . . . . .
சிவனணைந்த பெருமாள். . . . . . . .
. . . . . . . . த்துண்டால் பவனமதில் கோவில்கெட்டி
. . . . ன் ஒங்களைத் தொழுவேன்
(என்றுசொ)ால்ல நேச்சைநேந்து யிவரிருக்கும் நாளையிலே
. . . . . . . . . . .சிவனணைந்த சுவாமி
. . . . . . . . . னுந் தேவியுமாய்க் கண்ணுறங்கும் நித்திரையில்
காட்டிலே கினாவதிலே சொல்லுவார்
ஆண்குழந்தை பெத்தெடுத்து அணைஞ்சவனென்று சொல்லி
அருமையுடன் பேரது விளிப்பார்
பூலோக மானதிலே பெருகவே வாழ்வுதந்து
பின்னுநாலு பிள்ளையது தாரேன்
மனையருகே கோவில்கெட்டி வணங்கித் தொழுதிடுவாய்
வாரேன் என்று சொல்லியவர் போக
சுவாமிஅவர் போனபின்பு தையல்நல்லாள் தான்முழித்து
சந்தோச மாய்மகிழ்ந்து சாத்தாவுக்கு மிவர்க்கும்

சடுதியிலே ஓலைக்கோவில் கெட்டி
வடைமாலை வெத்திலைபாக்கு வாழப்பழ முதலாக
பரிை. . . . . . . . . . . . . . . .
அய்யனுட . . . . . . க்குந் தேவதைகள்
அனை பேருக்கும் பீடமி. . . . . . . . . . .
படுக்கவைத்துத் தொழுது பாலகனைப் பெத்தே. . . . . . .
படையி னணியுடனே பரபரென வெ. . . . .
பச்சமால் வாழுங் குறுங்குடி தன்னில் . . . . . .
வந்தனர் நம்பிவாழும் வளமெல்லாஞ் சுத்தி
சிந்தனையாகத் தீர்த்தமாடியே பூசை செய்து
செந்தமிழ்க் கதியயோகன் சிவனணைந்த சுவாமிதானும்
. . . . . வே நம்பிதன்னை முறமுற நினைத்து. . . . .
. . . . . முருகன் திருவடி குண. . . . .
குடதிசை விட்டு அணந்தசுவாமி மகிழ்ந்து
வரவே அணைஞ்சிமனம் மகிழ்ந்திட வேதான்
வளர்சங் கோசைமுழங்கிட மண்டலமெல்லாம்
அரமனை வாசல்பாளைய மழகுடன் கடந்து
அழகுள்ள படையு மணைந்த சுவாமியும் வரவே
தம்பட்டஞ் சின்னமுரசுடன் தவிலோசை முழங்க
தடவரை யதிரத் திடீரென வெடியது குமுற
பம்பம். . . யெங்கும் (பல) பலமென முழங்க
நம்பிடும் படியோர்தனக்கு நல்வினை நீக்கும்
நாதன் குமரன்திருவடி நலமுடன் காண
செந்தில் பதியேநோக்கிச் சிவனணைந்தவரும்
தேசமதான பலப்பல வூர்களும் நடந்தார்
வடிவேலவரை மனதிலே நினைத்து
வாசம் புகமும் சிவனணைஞ்சியும் வரவே
மகிழ்ந்துடன் பிச்சி கொழுந்து மல்லிக முல்ல
மனமது மகிழ அணைந்த சுவாமி. . .
புகழ்பெறச் சிந்தூர வேலர் பதித (ன்னில்) சென்றால்
பூசைகள் வெலிகள் நமக்குப் போதரவே தருவார்
என்றுதா னடந்து யிருளணைந்த பெருமாளு. . . . .
(இத)முடன் நடந்தாள் சிவனணைஞ்சியுங் கூட
கண்டவ ருடனேவரும் படைய. . . . நடக்க
. . . . . . மெள்ளப் பரிமேலேறி வி. . . . . .
. . . . . . வுடன் வரும் வெட்டா வெளி. . . .
. . . . . . இடியது குமுற. . . . . முழங்க
செந்தூர் கண்டு சிவனணைந்த சுவாமி
தேவி சிவனணைஞ்சியும் கூட வந்தார்

செந்திமா நகரில்வந்து சிவனணைந்த சுவாமி(யும்)
கந்தனே சரணமென்று கருத்தினில் நினைத்துக்கொண்டு
சிந்தனை யாகவெண்ணி சிவசுவாமி நமவோவென்று
வந்தனை செய்யவேண்டி வளர்செந்திப் பதியில்வந்தார்
மந்திவாழுஞ் செந்திநகரில் வளம்பார்க்க வேணுமென்று
. . . . . . ல்ல சிவனணைஞ்சி மாது யிவள்கூடத் தான்கூடி
. . . . . . ந்துசிவன் . . . . . . பெ. . . . .
சென்றனரே தெருவதிலே சிவ. . . . . யென்னவே
தெருவு மதிலுந் தெரு. . . . . . . . . .
தெருவதிலே நிருமந்த. . . . . . . ஞ்சுவாமி கண்டு
சிறப்புடைய சிவனணைஞ்சி சேயிழையு மகிழ்ந்து
ஊரிலுள்ள பெண்கொடிமார் ஒக்கநின்று கவிகூற
உத்ததிரு புகழ்பாடி ஊரிலுள்ளோர் தான்மகிழ
அகுதிபர தேசியர்க ளாகாவென்ற சத்தம்
கோபாலா அரிவோவென்ன கோவிந்தா வென்றசத்தம்
தேவாதிமார் கூட்டங்களும் திருச்சிறப்புந் திருநாளும்
சண்முகவிலாச மானதிலே தயவுசெய்வோர் சதர்கோடி
இப்படியே செந்திவளம் இவர்கள்கண்டு மனமகிழ்ந்து
நாலுதெரு வீதிகளும் நன்றாகக் கண்டருளி
மகிழ்ந்துடனே அணைந்தவர்தான் மன்னருடன். . . . .
மத்துமுள்ள பேர்களையும் வாத்தியமும் விட்டகன்று
சிவனாருட திருமகனார் திருச்சன்னதி தனிலேவந்தார்
சீருடனே தீர்த்தமாடிச் சிவமாலை தானணிந்து
சிவபூசை மிகமுகித்துச் செந்தில்வேலவரைத் தானினைந்து
திருவாசல் தன்னில்வந்து சிவன்மகன் தன்னைக்கண்டார்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
நாயகி யாளையு முந்தன் மகிமையும் நாட்டிலுள்ளோ ரறியார்
வேறுபொருளாக யெண்ணிடுவாருனை மேதினியோர்க ளெல்லாம்
வேர்வை பத்திரனாக முன்னால்பிறந்து வென்றாய்நீ தக்கனையும்
தென்காஞ்சி தேசத்தை யாண்டங் கிருந்து திரும்பிக்கயிலை வந்து
சீக்கரமாக அவுணரைச் செயித்தது தேசத்தி லாரறிவார்
மன்னனே யுன்னையுந் தேவியுங்கூட வைத்துச் சிவமதுவும்
மகிழ்ந்துகயிலை திருநடமாட மாறிப் பிறந்ததையும்
நாங்க ளறிவோமே யல்லாமல் வேறு நாட்டிலுள் (ளோ ரறிவார்களோ)
நாயகியு நீயுமிங்கே யிருக்க நளினமிராத கண்டா (ல்)
குளுந்தமரக் காவில் குன்று (டைய) அய்யன் கோவிலிருந்து
கூடவேஅங்கே நின்றுடன்பூசை குணமுடன் கண்டிருங்கோ

அந்த யிடத்திலே யுங்களுக்கும் பூசை யனுதினஞ் செய். . . .
அரியெண்ணை. . . . சந்தனமெல்லா மனுப்பியே ம. . . . .
விந்தையுடன் பூசையுண்டங் கிருந்து வேண்டு

## அய்யன் காவில் பூசையுண்டு இருத்தல்

அந்தப் படியே நம்பியான்பூசை யனுதினஞ் செய்திடவே
அய்யனிடமாய் அணைந்தசுவாமி அன்புடன்பூசை கண்டிருந்தார்
பூசையிவ ருண்டிருந்து புகழ்பெரிய அய்யன்காவில்
பொறுதியுடன் இருந்தரசு செய்தார்
மறவன்னியத் தலவன் மந்திரியாக இருக்க
மகராசனுக்கு ஆயா னிருளப்பன்
இப்படியே பரமராக்கு சத்தியம்மையுங் கூட
இசக்கியம்மையுங் காவில் நிக்க
அய்யனுக் கிடதுபிற மழகு சுடலமாடன்
அன்பாக நின்றேவல் செய்ய
அய்யனுக்கு முன்னோடு மழகுமுன்னோடி முருகன்
அழகுமரக் காவுக்கு (முன்னே) நிக்க

**(முற்றுப்பெறவில்லை)**

* * *

# சுவடி எண் 10ஏ: அரவமுத்து வீரன் கதை
(கிளைக் கதை)

ஸ்ரீராமஜெயம்

### காப்பு, அவையடக்கம்

வாலவ னரவமுத்தின் வழமையை முன்னோர்வில்லில்
சொல்நய மாகப்பாடச் செய்தனர் யானுமிந்த
கொல்ல மாயிரத்து நூற்று ஒன்பத்திற்றேழ் மாதத்தில்
சொல்லருந் தியதிஎட்டிற் சீவனிற் கூறினேனே

கூறினேன் கும்பமுனி புரத்தில் வாழுங்
குமாரசுவாமி நாடா ரீன்ற பாலன்
ஆறுமுகப் பெருமாளென் புன்சொல் லாலே
அரவமுத்து வீரனுட பிறவி தன்னை
மாறுதலை யில்லாமற் சுருக்கிச் சொன்னேன்
மகிழ்ச்சியுட னிக்கதையிற் குற்றங் கண்டால்
கூறுகின்ற மதலைமொழி எனஆன் றோர்கள்
கொண்டாடக் குஞ்சரத்தின் முகவன் காப்பாம்.

### நாடும் தாய் தந்தையரும்

நாடான நாடதிலே நல்லமணிக் காஞ்சியிலே
வடுகர்குலந் தனிலுதித்த வடிவழக னதிபெலவான்
ஒத்தைக்காலன் சீமையிலே உரம்பெறவே மானிபத்தால்
வெங்கலத்தால் கோட்டையிட்டு வேறுவினை யில்லையென்ன
ஆறிலொரு கடமைகொண்டு அறம்பிசகாது நடத்தி
ஆண்டிருக்கும் நாளையிலே அரசனிணை சூரனரி
சிவகாமி யம்மையெனும் செல்விதனை மணமுடித்து
ரதியும்மதன் போலவேதான் ரண்டுபேரும் வாழ்ந்திருக்க

### குழவிப் பேறின்மையின் கொண்ட வருத்தம்

இருக்குமந்த நாளையிலே ஏந்திழைக்கு வெகுநாளாய்
மதலையில்லா திருந்தமையால் மங்கையரும் மனம்வாடி
மன்னவன்தன் முகம்நோக்கி மடந்தையவ ளேதுசொல்வாள்
வெங்கலத்தால் கோட்டைகளும் வேணபணந் தானிருந்தும்
என்னுடைய மன்னவரே எல்லாஉல காண்டாலும்

மதலையில்லா வாழ்வதுதான் மாய்மால வாழ்வல்லவோ
இதுவிதியோ சிவன்செயலோ இறையவனார் கற்பனையோ
கற்பனையோ என்னைவந்து கைப்பிடித்த தோஷமிதோ
இன்னாளி லென்னசெய்தேன் இருளிஎன்று பெயரெடுக்க
கொத்தைக் குறைத்தேனோ குறைமரக்கா லளந்தேனோ
பிச்சைக்கு வந்தவரைப் பின்னேவா வென்றேனோ
ஆக்கிவைத்த சோறுகறி அடைத்துவைத்து உண்டேனோ
செய்தபிழை இன்னதென்று தெரியுதில்லை மன்னவரே
என்றுபுலம்பி யழுத ஏந்திழைக்கு மன்னவனும்
கேட்டிருந்து மறுமொழிகள் கீர்த்தியுடன் சொல்லுவானாம்

## வேறு

### மன்னனின் ஆறுதல் மொழிகள்

மானே மரகத மாதரசே யொன்றுகேளு
மண்டலந் தன்னில் மதலையில்லாத பேரெல்லாம்
மாக்ஷிமையோடு இருந்தர சாண்டு வயசாய்
மாண்டுபோம் மட்டும்புவியி லிருக்கலையோதான்
பெண்ணாணும் பெற்றுப் பெருமிதமாக இருந்து
பிறகுவளர்ந்து இறக்கக் கொடுத்தபேர் மெத்த
அத்தன் விளையாட்டை யாரறியப் போறார்பெண்ணே
ஆதிபரனா ரமைத்த படியே வருங்காண்
என்றுரை சொல்லிய மன்னவனைக் கண்டுமங்கை
ஏங்கியழுது மறுமொழி யானது சொல்வாள்

### குழவிப் பேறின்மையின் கொடுமை

செத்துக் கிடந்தாலும் புத்திரனில்லாதே போனால்
சீத்துவக் காரியைக் காட்டி லிழுத்தெறி யென்பார்
முப்பதுஞ் சென்றால் முழுதுங்கிழவி என்பார்கள்
மோசமாய்ப் பெண்களெல்லோருமே யேசி நகைப்பார்
இத்தனை நாளும் இருந்து என்னபலன் கண்டேன்
என்றுபல ஆலயங்களுக்கும் நேர்ச்சை செய்து
சடைத்துச் சிவகாமி புத்திரப் பேறின்றியேதான்
சங்கரனே துணைஎன்று இருக்கிற நேரம்

### குறத்தி குறி கூறுதல்

வடநாட்டிலே இருந்தோர் குறத்தியவள் வந்து

வாய்மையுடன் குறிசொல்லிடக் கேட்டந்த மங்கை
குறத்தியைக் கூட்டி உபசரித்தன்பா யிருத்தி
குணமுடன் கேட்க மறுமொழிஏது சொல்வாளாம்
உந்தனுக்குக் குறி தோன்றுது எந்தனம்மணீ
உண்மையுடன் துயர்தீரும் மதலையு முண்டு
சந்தேக மில்லடி தங்கையரே நீயுமிப்போ
சட்டெனப் பெட்டகத் துள்ளபணங் கொண்டுசென்று
தென்மதுரைச் சொக்கநாத ரடியினில் வைத்து
தோத்தரித்துத் தானதர்மங்கள் செய்து வணங்கி
மண்டலம் பத்தியுடன் தவமாக இருந்தால்
மானேயுனக்கு மதுரைச் சொக்கேசர் தருவார்
ஒன்றென்று எண்ணவே வேண்டாம் மாதரசேநீயும்
ஓராணும் ஓர்பெண்ணும் உந்தனக்குச் சலிப்பின்றி
மீனாக்ஷிபாகர் தருவாரெனச் சொல்லக் கேட்டு
மின்னொளி போன்ற குறத்திக்குப் பொன்பண மீய்ந்து

## மதுரை சென்று மீனாட்சி பாகரை வழிபடல்

வழிவிட்டு மன்னவனோ டுரைகூறி நிதியும்
வாங்கிஎழு தோழிமார் உடன்கூடி வரவே
வழியினிலே நல்ல சகுனங்கள் கண்டு
வாணுதல் மார்கள் மகிழ்ந்துதகை யாறியேதான்
நாடுபலதுங் கடந்து சிவன்செய லாலே
நல்லதிரு வாலவாயாம் மதுரையில் வந்தாள்
வந்து கொடிமரம் மண்டபமுங் கண்டுமெச்சி
வணங்கியே தெற்பக் குளத்திலே வந்து நீராடி
நீராடி மாத்து உடுத்தந்த மங்கைய ரெல்லாம்
நீதியுடன் வலம்வந்து நமஸ்காரஞ் செய்து
சன்னதி முன்பிலேவந்து சிவகாமி யம்மை
தான்கொண்டு வந்ததோர் காணிக்கை அங்கேவைத்து
பற்பல தானங்க ளற்புதமாகவே செய்து
பாங்கியர் கூடவரவே நடந்தால வாயன்
தன்னைத் துதிக்கணமென்னச் சிவகாமி யம்மை
சதிருடன் மீனாஷி பாகனைத் துதிக்கின்றாளே

## வேறு

## சொக்கநாதர் துதி

சுந்தரர்க் காகத் தூதன்று சென்றவர்

. . . . . . . கயிலாச மலையானதிலே. . . . . .
. . . . . . யிருளன் வன்னியப்பூத் தலைவனு. . . . .
படந்தமரச் சோலையும் பருபத மலையும்
பராபர முனிவர்தவஞ் செய்யுகின்ற முறையும்
முறமுறத் தவசுபண்ணி நிற்போர் சிலர்கூடி
முப்பத்து முக்கோடி தெய்வர் செய்யுகின்ற முறையும்
கறையில்லாத பேர்கள் தவஞ்செய்து காணவில்லை
கங்காள மூர்த்தியைநான் காணுவ தெப்படியோ
காணுத(ற்குக்) கயிலாச பருபதக் கோணத்திலே
. . . . . . . . .

**சிவபெருமான் சிவனணைஞ்சவரின் பிறவிப்பேற்றை உணர்த்துதல்**

நின்றது கண்டுசிவனார். . . நோக்கிப்பார்த்து
நீ வேர்வை பத்திரனே . . . . . யாகம்
பண்டு முன்னாள் தக்கனுட வேள்வி தான். . . . .
பார்வேர்வை பத்திரனே வுனையேவி விட்டோம்
விட்டமதி கோபத்துடன் மிகுத்ததக்கன் தன்னை
வேள்வியு மழித்து அவன் தலையையு மறுத்து
மட்டுப்படாத தலையைச் சுட்டுபோட்டு நீயும்
வான்பரி கடந்து கயிலாசத்திலும் வந்தாய்
வந்திருந்தா யெந்தனிடம் அந்தநேரம் தன்னில்
வான்பதி தென்காசியாள மதலையில்லை யென்ன
செந்தா மாப்பதி சிறந்திருக்கும் நாடு
தேச மரசாளச் சிறுமதலை வேணுமென்ன
பொன்காசி யாண்டிருந்த பொன்னுருவிக் காக
பூவைநல்லாள் பகபதியும் வாதாட்டஞ் செய்து
ஆனதுக்கோ யுன்னையவள் தன்வயித்தில் சென்று
அவதரித்து வரச்சொல்லி யனுப்பினமே நாமும்
அங்கேபோய் மீண்டு யிங்கேவர வேணுமானால்
காம . . . . . யரில் ஒருவர்கூட வரவேணு மென்றாய்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . .
பூலோகத்தி லெந்தனக்கு புண்ணிய (மில) வோதான்
பிறப்பட்டார் வரம்வாங்க பெருமானே யென்றார்

**சிவபிரான், சிவனணைஞ்சவர் - சின்னணைஞ்சியை அவுணரை அழிக்க அனுப்புதல்**

சங்குதரித்து வேட தாவடமும் கட்டி
சன்னாசி யாகச்சில ராயிரம்பேர் கூடி
ஆயிர(த்தெ) ட்டுப்பேர் வண்ணாத்திக ளொக்க

## ஊர் மீண்டு வீற்றிருத்தல்

ஏழு தோழிமார் தங்களுடன் கூடி
எழுந்து வேகமதாக நடந்துதான்
ஒத்தக் காலன் விளையூர் தனில்வந்து
ஒண்டொடியும் மனையில் புகுந்துதான்
கணவனோடு மதுரைக்குச் சென்றதும்
கண்டதோர் கனாவானதுஞ் சொல்லியே
மங்கை நல்லாள் சிவகாமி யம்மையும்
மன்னவ னிணைசூரப் பெருமாளும்
சந்தோச மாக வீற்றிருக்கும் வேளை
சங்கரன் வார்த்தையுஞ் சரியா குதாம்

## வேறு

## அரவ முத்துவீரன் பிறப்பு

அன்பினுடன் இணைசூரப் பெருமாளும் தேவியுடன்
அகரமதில் வீற்றிருக்கும் வேளை
மதுரைச் சொக்கநாத ரன்றுரைத்த மொழிபிசகாது
மதலைப்பலன் தான்கொடுக்க வென்ன
வடிவுடனே பாரியுடன் வானவர் பூமாரிபெய்ய
வளரும் வெள்ளிமலை தனிலே வந்தார்
வந்துவெள்ளிப் பாறைதனில் சந்தோஷமா யிருந்து
வருத்த வேண்டும் மதலைதனை யென்ன
விண்ணுலகம் மண்ணுலகம் மெய்க்கும்படி யாகவொரு
வீரனைப் பிறப்பிக்கவே எண்ணி
மெய்க்கவங்கே சொக்கநாத ரக்கினிக் கபாலமதை
மேலுலகந் தன்னை நோக்கி யேந்த
அக்கினிக் கபாலமது அனலா யெரிந்திடவே
ஆதித்த னுதயமது போலே
பன்னொரு பிராயமுடன் பாலகனுந் தானுதிக்க
பாவினையா யத்துடனே கூடி
முக்கியம தாகவொரு வெள்ளிக்கழுவும் பிறக்க
முகனை யுடனே சொக்க ரெடுத்து
வெள்ளிப்பாறை யானதிலே வேங்கைமர மூடதிலே
வீறுடனே நாட்டி வைத்தா ரீசன்
நாட்டிவைத்துப் பாலகர்க்கு நன்மைபெற நாமமிட

நம்பன் மனத் தெண்ணிமனை யோடே
அனலில் பிறந்தவ னரவமுத்து வீரனென்ன
அன்புடனே பேருமிட் டனுப்ப
வெங்கலத்துக் கோட்டையிலே வெற்றியுடன் சிவகாமி
வேடிக்கை யாகக் கணவனோடே
சந்தோஷமாய்க் கட்டிலிலே தானுறங்கும் வேளையிலே
சதிருடன் தங்கத் தடுக்கதிலே
சந்திர னொளியதுபோல் பாலகனும் வீற்றிருக்க
சந்தோஷ மாகச்சிவ காமி
மங்கை சிவகாமியம்மை வாரிஎடுத் தேயணைத்து
மன்னவனார் தன்மடியில் வைத்தாள்
வைத்துச் சொக்கரைத் துதித்துமதித்துச் சிவகாமிஉடன்
வாயார முத்தமிட்டுக் கொண்டு
தேனுங்கனியுங் கற்கண்டுந் திகட்டாத சீனியுடன்
சேர்த்தருந்தப் பாலகர்க்கு ஈந்து
அன்றிரவு தான்கழித்து அடுத்தநா ளுயத்திலே
அண்டை வீட்டார் யாவரு மறிந்து
வந்துபார்த் ததிசயமாய் மைந்தனைக் கண்டேயுருகி
வார்த்தை பலசொல்லி ஏகுவாராம்
மாதம்பத்துமோ சுமந்து மயங்காது சிவகாமிக்கு
மதுரைச் சொக்க ரீந்தாரெனச் சொல்லி
ஊரிலுள்ள பேர்நடக்க உத்தமி சிவகாமி
உறுதியாய்ப் பலபணியும் பூட்டி
மகிழ்ந்து மகனை எடுத்து
மணித் தொட்டிலில் கிடத்தி
மங்கை சிவகாமி தாலாட்டு வாளே

## வேறு

### தாலாட்டு

தூண்டா மணிவிளக்கோ சொக்கநாதர் தந்தகண்ணோ
காண்டா வனந்தனிலே பிறந்த கற்பகமே கண்வளராய்
சங்குமுத்தோ பாம்புமுத்தோ சாகரத்தின் சிப்பிமுத்தோ
எங்கள்குடி தழைக்கவந்த ரெத்தினமே கண்வளராய்
மணியோ மணிவிளக்கோ மரகத வைடூரியமோ
கனியோ கனிரசமோ கண்மணியே கண்வளராய்
தேனோ திரவியமோ திகட்டாத தெள்ளமுதோ

மானோ கோமேதகமோ மதுரைநாதர் தந்தகண்ணோ
காமாக்ஷி மீனாக்ஷி கருணாகடாக்ஷம் நல்கி
தாமெனவே அருளும் தாடாள்வா கண்வளராய்

## வேறு

### பெயர் சூட்டல்

தாலாட்டி அன்புடன் பாலகன்தன்னை எடுத்து
தந்தையும் தாயும் மகிழ்ந்து திருநாமம் கூற
வேண்டுமென் றெண்ணியே சந்தோஷமாக ஊரார்க்கு
இருந்து மளித்து இணைசூர மாயனுமப்போ
ஆருடை பேரிடுவோமெனத் தன்மனத் தெண்ணி
அல்லோருங் கேட்க அரவமுத் தென்னவே சொல்லி
எத்திசை மெய்க்கவே எல்லாப் பணிகளு மிட்டு
இங்கித மாக இருக்கின்ற நாளதி லேதான்

### அம்மையாரம்மை பிறப்பு

மங்கை சிவகாமியம்மை செய்த தவத்தாலே
மதுரைமீனாக்ஷி கருணா கடாக்ஷ மிரங்கி
அங்கயற் கண்ணி அறம்வளர்த்தா ளம்மைதானும்
ஆகம்மகிழவே பெண்பிள்ளை யொன்று கொடுத்தாள்
எப்படிப் பாலகன் வந்தானோ அந்தத் தடுக்கில்
இன்பமுட னொருபாலகி வந்து உதித்தாள்
தண்டா மரையினில் வாழ்பவனைக் கண்டாப் போலே
சந்ததி தன்னையும் கண்டெடுத்தா ரிருபேரும்
மங்கை சிவகாமி அம்மையுடன் பதிதானும்
மக்கள் கலியது தீர்ந்தது சொக்க ரருளால்
என்று மனத்தினி லெண்ணிச் சுதையை வளர்த்து
எழிலுடை அம்மையா ரம்மை எனவே பேரிட்டு
வளர்ந்து வரப்பல பொன்பணி யானதும் பூட்டி

### ஆசான் அழைப்பு

வாக்குடன் போஷித்துக் கல்வி பயிற்றண மென்ன
தன்னுட சேவகன்தன்னை யழைத்து விரைவாய்
சந்திரக்குட்டி அண்ணாவியைக் கூட்டிவா வென்றார்
என்ற மொழிகேட்டுச் சந்தோஷமாக நடந்து
எங்கும்புகழும் மணிக்காஞ்சி நாட்டிலே வந்து

சந்திரக்குட்டி அண்ணாவியைக் கண்டு சேவகன்
சாஷ்டாங்கமாகப் பணிந்து மறுமொழி சொல்வான்
ஒத்தைக்காலன் சீமைஆளும் இணைசூர மாயன்
உரிமை யுடனே உமையழைத்து வரச்சொன்னார்
என்றுரை செய்யவே அண்ணாவி ஏடெழுத்தாணி
எடுத்துக் குடையுங் கரத்திலேகொண்டு நடந்தார்
நடந்து பலப்பல ஊருங் கடந்தந்த ஆசான்
நாட்டமுட னொற்றைக்காலன் சீமையிலே வந்தார்
வந்தவர் வெங்கலக் கோட்டையில் சென்றிடவேதான்
வந்தனமாய் வரவேற்றான் இணைசூர மாயன்

## வேறு

### கல்வி கற்றல்

வரவேற்று அண்ணாவியை வாழ்த்தி உபசரித்த பின்பு
அரவமுத்து வீரனுக்கு அரிவிரிகள் துவக்கவென்ன
உத்தரவு செய்திடவே உடனாசா னேதுசெய்தான்
கணபதியை முன்னேவைத்துக் கனிவகைகள் பலபடைத்து
நிறைநாழி நீர்க்குடமும் நிறைவிளக்கும் ஏற்றிவைத்து
இனத்தோரும் ஊராரும் எல்லோரும் மகிழ்ந்திருக்க
அரவமுத்து வீரனையும் ஆசானும் அருகழைத்து
அரிஓம் நமவெனவே அக்ஷரத்தை முன்னோதி
அரிவரிகளு மெழுதி அன்புடனே ஆசானும்
கொடுத்திடவே அரவமுத்து குருவடியைத் தொழுதபின்பு
ஏடதனைக் கையில்வாங்கி எழிலுடனே தான்படித்து
மடமடவென வாத்தியிடம் மனப்பாடஞ் செப்புவானாம்
செப்பிவர ஆசானும் திட்டெனவே பலநூலும்
ஓதிடவே வல்லவனாய் உடன்வரக்கண் டம்மையப்பர்
மனமகிழ்ந்து பரிசீந்து மகுத்துவமா யிருக்கையிலே
பள்ளிமுறண் டெழுதிவைத்துப் பாலகனை உரையெனவே
வாத்தியாயர் சொன்னபோது வாசித்தான் பாலகனும்
பாலகனும் முறண்டெழுதப் படிக்கவில்லை ஆசானும்
இப்படியா யிருந்திடவே எழிலுடனே ஆசானும்
பாலகனை மெச்சிவிட்டுப் பரிசேற்றுச் சென்றனராம்
வரிசைமிக வாங்கிக்கொண்டு வாத்தியவர் போனபோது

### ஆயுதப் பயிற்சி பெறுதல்

சிலையழக னரவமுத்து சிறப்புடனே தகப்பனுடன்

உருக்கமுடன் உடைவாள்வெட்டு உடன்பயில வேணுமென்றான்
என்றுரைத்த மொழிகேட்டு இணைசூரப் பெருமாளும்
தூதுவனை வரவழைத்துச் சொல்லுவானாம் வாய்திறந்து
திண்டுக்கல்லுக் கோட்டையிலே சுந்தரனாம் பணிக்கன்தனை
சென்றழைத்து வாருமெனச் சீக்கிரமா யோட்டனுமே
ஓடிவந்து ஆசானை உடன்கூட்டி வந்தனனே
வந்தவுட னாசானை வணங்கிஉப சரித்தபின்பு
பலப்பல ஆயுதமெடுத்து பணிந்துநமஸ் காரஞ்செய்து
ஆசானும் அரவமுத்தும் அழகுடனே சிலம்பவித்தை
பழகவேண்டு மென்றுசொல்லிப் பாவினையா யன்னேரம்
ஆசானுஞ் சிலம்பத்தொழில் அரவமுத்துக் கோதிடவே
கொஞ்சநேரத்துக் குள்ளாகக் குணமுடனே அரவமுத்து
ஆசானை மடக்குதற்கு அரவமுத்து படித்துக் கொண்டான்
அப்போது அண்ணாவி அரவமுத்துக் கேதுரைப்பார்
இனிமேலும் வேறுமுறை இருக்குனக்கு இயம்பிடுவேன்
என்றுரைத்து ஆசானும் யானைசேர்த்துப் பிடிக்குந்தொழில்
இப்படியே பலமிருகம் எளிதாகப் பிடிக்கும்முறை
அரவமுத்துக் கோதிடவே அவனும்மனச் சந்தோஷமாய்
படித்தவனும் அம்மையப்பர் பாதநதனைத் தொழுதபின்பு
கட்டுடனே அண்ணாவிக்குக் காணிக்கையும் கொடுத்தனுப்பி
வெங்கலத்துக் கோட்டைக்குள்ளே வீற்றிருந்தா ரெல்லோரும்

## வேறு

## வேட்டையாடுதல்

வீற்றிருக்கும் நாளையிலே வீரனவ னரவமுத்து
வேட்டையாட வேண்டுமென எண்ணி
தாய்தந்தையரைத் தொழுது தானொரு சிறுக்கனுடன்
சட்டெனவே நாய்களும் பிடித்து
குறட்டுக்கம்புங் கையிலெடுத்துக் கூண்டவன மானதிலே
குணமுடனே வந்துவேட்டை யாடி
முயலுடும்பு புல்வாயும் மூட்டைகட்டிச் சிறுக்கன்றலை
மீதிலேற்றிக் கொண்டுவந்தான் வீட்டில்
வீட்டில்வரத் தாய்தகப்பர் மெத்தவுஞ் சந்தோஷமதாய்
விதம்விதமா யறுத்துக்கறி வைத்தார்

## மந்திரப் பயிற்சி பெறுதல்

வைத்தமுது உண்டபின்பு தோழனுடன் அரவமுத்து

வாக்கொன் றுரைப்பானாம் மறைவாக
மந்திர வேலனென்னும் மலையரச னிடத்திற்சென்று
மாய்மாலங் கற்று வர வேண்டும்
என்றுதந்தை தாய்தங்கையும் யாதுமறி யாதபடி
எழுந்து உடை வாளெடுத்துக் கொண்டு
வீறுள செருப்பணிந்து வீரனவ னரவமுத்து
வேண்டும் வண்ணம் சாமான்சுமை கட்டி
ஆசானுக்குப் பொன்னீய அரவமுத்து பொன்னெடுத்து
அர்த்த ராத்திரி பயணமாகி
சுமடெடுத்துச் சிறுக்கன்வரச் சுருக்குடனே தான்நடந்து
தோன்றும்பல ஆறடவி தாண்டி
மதுரைச்சொக்கர் மீனாக்ஷியை மனப்பூர்த்தியாய்த் தொழுது
மாமுனிவர் வாழிடமும் விட்டு
மந்திர வேலனென்னும் மலையரசன் வாழ்மலையில்
மகிழ்ந்து இருபேரும் வாரநேரம்
வாக்குடனே கண்டவுடன் மந்திரவேலன் மகிழ்ந்து
வாரும் வாரும் என்றரு கழைத்து
மாடப்புரை யானதிலே வந்தவரைத் தானிருத்தி
மகிழ்ந்து மந்திரவேலன் தானும்
கொண்டுவந்த கோப்பிறக்கிச் சந்தோசமாக வைத்து
குணமுடன் வந்தோர்க்குப் பசியாற்றி
மகிழ்ந்திவ ரிருக்கையிலே மந்திரவேல மலையரசன்
மன்னவரே உங்கள்விருத் தாந்தம்
சொல்லென உரைக்கையிலே சொல்லுவானா மரவமுத்து
சொந்த ஊரு ஒத்தக்காலன் சீமை
தகப்பனிணைசூர மாயன் தாயார் சிவகாமியம்மை
சந்ததி என்பே ரரவமுத்து
தங்கைய ரம்மையாரம்மை தானொருத்தி உண்டுஐயா
தங்களிடம் மாய்மாலங் கற்க
வேண்டு மென்றொருவ ரறியாது இங்குவந்தே னையா
விமலபரன் சொக்கரரு ளாலே
என்றுரைத்து எட்டு நாளைக்குள்ளே எல்லாத் தொழில்களையும்
எந்தனுக் குரைத்தனுப்ப வேண்டும்
என்குருவே என்னகொண்டு வந்தபண மத்தனையும்
எடுத்துக் குரு தக்ஷிணையாய் வைக்க
தந்திரமாய் மந்திரவேலன் தான்படித்த தொழில்களெல்லாம்
சந்தோஷமாய்த் தான்பயிற்று வாராம்
பயிற்று வாராம் பலப்பல வித்தையும்
பஞ்ச பக்ஷியும் மிஞ்சப் பயிற்றினார்
மாகம் மீதினில் பக்ஷியாய்ச் செல்லவும்

மனிதர் கண்ணினில் காணாமல் போகவும்
புனித மான இரும்பைப்பொன் னாக்கவும்
புதைத்து வைத்தபின் காணாமற் போகவும்
கண்ட பேர்கள்பின் காணா திருக்கவும்
கண்கெட்டுத் தொழில் கண்மாய வித்தையும்
கருங்காயைப் பழம்போல ஆக்கவும்
கால்புதை யாமல் நீரில் நடக்கவும்
சண்டப் பெண்களைக் கைவச மாக்கவும்
சத்தியம் பண்ணிச் சாதித்து நிற்கவும்
மாப்பிள்ளையைக் கிழவர்போ லாக்கவும்
மாவயசரைப் பிள்ளைபோ லாக்கவும்
கூப்பிட்டுப் பெண்கள் தான்வந்து சேரவும்
குத்து வெட்டு அறாம லிருக்கவும்
குட்டிச் சாத்தி குறளி வித்தையுடன்
கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையும்
இப்படியே பலவித்தைகள் தானும்
எட்டு நாளைக்கு உள்ளே படிப்பாராம்
மந்திர வேலன் மனச்சந்தோஷமாக
மன்றினை யாளும் ராஜர் குலத்திலும்
மலையரசன்மார் வங்கிசந் தன்னிலும்
மாய்மாலம் எட்டுநாளில் படிப்பாரை
உன்னை யன்றி ஒருவரைக் காணிலேன்
உலகந் தன்னில் மனிதப் பிறப்பிலே
திரு வயிற்றி லவதரி யாமலே
தெய்வ மாகவே வந்தது நீரென்பார்
என்று சாத்திக் குறளியும் ஈந்தபின்
ஈந்தனனே குழிநரிக் கொம்பதை
காட்டானை கரடி புலிகளும்
கண்ட துண்டால் நமஸ்காரஞ் செய்யுமே
ஆளி சிங்கமும் பூதமும் பேய்களும்
அடி தொழுது நமஸ்காரஞ் செய்யுங்காண்
என்று தேன்தினை மாவுடன் சக்கையும்
எடுத்துமே சுமையாகவே கட்டியே
மலை யரசன்மார் மக்களுங் கூடியே
மலைகள் தன்னைக் கடத்தி அனுப்புவார்

## வேறு

### தாசியரின் வீதி வருதல்

மலையை விட்டு இறக்கியந்த

மலையரசன் மக்களெல்லாம் போனார்
மதுரைச் சொக்க நாதருட
அருளெனவே இவர்கள்நடந் தாரே
நடந்து கடி தாகவேதான்
நாடெல்லாந் தான்கடந்து வாரார்
நாட்டிலுள்ள பேர்கள் கண்டு
கூட்டமிட்டுப் பார்த்துநின்று சொல்வார்
மடந்தையரும் ஆடவரும்
வந்த வந்த பேர்களெல்லாம் கண்டு
மனுட ரென்று பிறந்தவரில்
ஒருவருண்டோ இவர்க்குநிக ரென்பார்
என்றிடவே அரவமுத்து
அவருடைய சிறுக்கனுட னேதான்
ஏகிநடந் தேயவரும்
தென்மதுரைச் சொக்கரிடம் வந்தார்
வடிவுடைய தாசியர்கள்
வீற்றிருக்கும் தெருவதிலே வந்தார்

## வேறு

### தாசியின் ஆசையும் அரவமுத்துவின் ஆணையும்

தாசிமார்க ளிருக்குந் தெருவிலே
தாடாளன் வருகிற நேரத்தில்
தங்கம் போலொத்த மேனியைக் கண்டுதான்
தாசி மார்கள் தியங்கி மயங்கினார்
அங்க வர்களை ஏறிட்டுப் பாராமல்
அரவ முத்து வருகிற நேரத்தில்
செங்கதிரோ னொளியது போலவே
தெருவதிலே எதிர்வந்து தோன்றினாள்
சங்கை யாகிய தாசியைக் கண்டுதான்
தாடாளன் வெகு சந்தோஷ மாகினான்
எட்டுப் பெண்களுக் கொருபெண் பிள்ளை
இலங்கு லக்ஷுமி என்றந்தத் தாசியும்
இட்டமா யவர் கிட்டவே வந்துதான்
என்ம னைக்குநீர் வந்துபோ மென்றனள்
மன மகிழ்ந்து பிரியம தாகவே
மங்கை தாசி மனைதனிலே வந்தார்
வந்ததும் வெற்றிலை பாக்கருந்தியே
வழிவிடக் கண்டு தாசி யுரைப்பாளாம்

ஆணை யிட்டுப் போய்வாரு மெனச்சொல்ல
அரவ முத்து ஈர்நாலு நாள்தன்னிலே
வருவேனென் றாணையிட்டு ஒட்டனுடன்

### ஊர் மீளல்

வந்தனன் மணிக்காஞ்சி நகரிலே
மணிக்காஞ்சி நகரத்தினில் வர
மனித ரெல்லாம் வளைந்துகொண் டார்களே
தந்தை தாயாரும் ஊனுறக்க மின்றி
சஞ்சலமா யுனைத்தேடு றாரென
கேட்டதும் அதிவேக மதாகவே
கிளம்பி ஒற்றைக்காலன் விளையில் வந்தான்

### வேறு

### உற்றார் பெற்றோர் ஆதங்கமும் அரவமுத்துவின் விளக்கமும்

வந்தபோது ஊரவர்கள் வடிவழகன தன்னைக்கண்டு
தாய்தந்தைய ரறியாமல் தனியேநீர் போனதென்ன
எங்கேநீர் போனீர்காண் எல்லவரையும் வெறுத்து
என்றுரைத்து நிற்கையிலே ஏந்திழையாள் சிவகாமி
வந்துகண்டாள் புத்திரனை வாரிஎடுத்தே அணைத்தாள்
தந்தையருங் கூடவந்து தன்மகனை எடுத்தணைத்தார்
சிந்தையுடன் தங்கையரும் சேர்த்தணைத்து முத்தமிட்டாள்
முத்தமிட்டு அருகிருத்தி முகனையுட னேதுசொல்வாள்
சொல்லக் கேளாய் மகனே சொகுசுடனே உந்தனையும்
காணாம லழுதேனே கண்ணுறக்கம் வாராமல்
தனிவழிநீ போனசெய்தி சாற்றிடுவாய் என்மகனே
என்றிடவே அரவமுத்து இயம்புவானாந் தாயார்க்கு
மாய்மாலத் தொழில்படிக்க மலையரச னிடத்துச்சென்றேன்
என்றமொழி தான்கேட்டு இணைசூரப் பெருமாளும்
மாய்மால வித்தைகற்க மகனேஉனக் காசையுண்டால்
மலையரசன் மாரையிங்கே வருத்திடவுங் கூடாதோ
கூடாதோ பொன்பணங்கள் கொடுத்திடவும் தாமசமோ
என்றுஅய்ய ருரைத்திடவே ஏங்கியம்மையா ரம்மையும்
அழுதிடவே அரவமுத்து அவள்தேறப் புத்திசொல்ல
அரவமுத்து தெருவில்வர அவன்சிறுக்க னடைப்பமிட

சிங்காணி வில்லெடுத்துச் சிறுக்கனுடன் விளையாடி
இப்படியே அரவமுத்து இருக்குமந்த நேரத்திலே

### அரவமுத்து தாசி மனைக்கு வருதல்

எட்டாநாள் வாரோமென்று இயம்பினதோர் வார்த்தையினால்
தாசியவ ளினிதிருக்க தாடாள னரவமுத்து
தந்தைதாயை யடிதொழுது தடஸ்தமின்றி நாளைவர
விடைதாரு மெனக்கேட்டு வீரனவன் சிறுக்கனுடன்
தாசிக்கேற்கும் பண்டங்களைத் தானெடுத்துக் கடிதாக
சிறுக்கன்றலை மீதேற்றித் திட்டெனவே அரவமுத்து
உறப்புடனே தாசிஇல்லில் உடன்வந்தா ரிருபேரும்

## வேறு

### அரவமுத்து தாசி மனையில் தங்குதல்

தாசிமனை தன்னில்வரும் போதிலந்தத் தாசி
தாடாளன் வருவாரென அஸ்தமிக்கும் முன்னே
உறப்புடனே நீராடி தூசிமெத்தை மீதில்
உண்மையுடன் பொற்பட்டினால் திண்டு தலையணையும்
சாந்து சவ்வாதுபுனுகு சந்தனமும் வைத்து
தாசிப் பிரகாசமாகத் தங்கப் பணியணிந்து
அலங்காரப் பணியணிந்து தாசியவள் தானும்
ஆரொருத்தர் வந்தாலும் அங்கு யிருத்தாமல்
வெகுநேரம் பார்த்திருந்தும் காணாத்த தாலே
விசனமுட னிருக்கயெழு நாழிகையி லேதான்
சிறுக்கனுட னரவமுத்து திடுதிடென வரவே
சேயிழையுங் கண்டடுத்து முத்திமன மகிழ்ந்து
வெள்ளிமொந்தைத் தண்ணீர்விட்டுப் பாதமதைத் துலக்கி
வென்னீரில் குளிப்பாட்டி வெண்பட்டினால் துவட்டி
சாந்து சவ்வாது மணிந்து சந்தோஷமாக
சாப்பிட்டவர் தூசிமெத்தை மீதமர்ந் திருக்க
தாசியவள் வெற்றிலையும் பாக்கும்வெட்டிக் கொடுக்க
தான்புசித்துச் சரசமுடன் தாசியுடன் கூடி
மன்மதனும் ரதியுமெனச் சம்போகஞ் செய்து
மகிழ்ந்தவர்கள் கண்துயின்று விழித்திளகி உதயம்
சந்தோஷமாய்த் தாசியுடன் மஞ்சம் மீதிருந்து
தன்மனைக்கே போய்வருவே னென்றுரைக்கும் நேரம்

## மன்னன் சினமும் ஆணையும்

அந்தமுள்ள ராஜமன்னன் தண்டிகையி லேறி
ஆயிழையாள் தாசிமனை வாரதொரு வேளை
வடிவழகன் வாலைச்சந்திர னுதயம் போலே
வாரதையும் பார்த்துஇறு மாப்பினா லிருந்தான்
இருந்தவரைக் கண்டவுடன் அரசன்மனம் வேறாய்
எந்தஊரு உந்தனுக்கு இங்குவந்த தென்ன
என்னஒத்தக் காலன்விளை பேரரவ முத்து
இணைசூரப் பெருமாளென் தந்தையர்தா னென்றான்
தந்தையர்தா னென்றுரைத்த வார்த்தைதனைக் கேட்டு
தாரணியை ஆளுமன்னன் கோபமது மீறி
இந்தஉலகி லிருப்போர் இங்குவர மாட்டார்
ராஜனுட தாசியென்று நாடெல்லாம் அறிந்தும்
எந்தனுட தாசிதன்னைப் பங்கஞ்செய்த தாலே
இந்தஉலகி லிவனை இருந்திவைக்க லாமோ
என்றுஅழ கேசனவன் தலையாரி மார்க்கு
இப்போ இவனைப் பிடித்துச் சிரசினை இடற
வேண்டுமெனச் சொல்லத் தலையாரி வந்துபார்த்து
வீரனுட அழகுகண்டு வெட்டமன மின்றி
நாட்டையர சாளுமன்னன் நடுக்கேடு செய்தால்
நாதனுக்கு மேறாது நாடழியு மென்றார்
என்றாலும் இவனைக்கட்ட வேண்டுமென்று வளைய
இயலழக னரவமுத்து ஏதுரை சொல்வானாம்
துன்றுபட எனைப்பிடித்துக் கட்டவேண்டாம் நீங்கள்
சொன்னபடி உங்களுக்கு முன்னடப்பே னென்ன
நன்றியுள்ள சிறுக்கனையும் அருகில்வர வழைத்து
நல்மதுரைச் சொக்கநாதர் கோவிலில்போ வென்றார்
மனம்மறுகிச் சிறுக்கனவன் அழுதிடவே கண்டு
மலங்காதே சிறுக்காநீ நான்வருவே னென்றார்
அகம்புழுங்கித் தாசியவள் அழுது புலம்பிடவே
அரசனுரை தவறாமல் துரிசமாய் நடத்தினாரே

## வேறு

## அரவமுத்து மந்திர வலிமையால் மறைதல்

நடத்தித்தலை யாரிமார் மழுவரசர் ஆராட்சியார்
நாட்டமுடன் வெட்டவேண்டு மென்ன
கடத்தியே அழகாபுரிக் கோட்டையதுவுங் கடந்து

காட்டுவழிக் கூட்டிக் கொண்டு போறார்
ஊர்வழியே போகாமல் ஒருவருமோ அறியாமல்
ஊழ்வினையும் வாரதறி யாமல்
ஆருசெய்த பாவமிதோ யாதொன்றுமே இல்லாமல்
அரசனுமோ கொல்லச் சொல்லி விட்டார்
நானிலங்கள் தன்னிலுமே ராஜகுலந் தன்னிலுமே
நல்லபிள்ளை தானிவனைப் போலே
கண்டிலோ மிவனையீன்ற அன்னைதந்தைய ரறிந்தால்
கல்லதிலே மோதி உயிர் நீப்பார்
பாசமின்றி ராஜமன்னன் பழிஎடுக்கச் சொன்னானே
பாவமிது சாராதோ நம்மை
ஏறாது இப்பாவம் தீராது தோஷமிது
என்ன செய்வோம் நாமளினி என்பார்
அரச னுரைத்தமொழி ஆரால் செறுப்பதுண்டோ
அமைத்த விதியு மிவர்க் கிப்படி
என்னவே அரவமுத்து ஈசன்செய லன்றியொரு
எள்ளத் தனையும் நடவா தென்ன
நினைத்திருக்க மந்திரவாள் தன்னைக்கொண்டு தலையாரி
நீதியின்றி வெட்டவரும் போது
மாய்மாலத் தொழிலினாலே மறையவேண்டு மென்றுசொல்லி
மதுரைச் சொக்கநாதர் துணையென்ன
வடக்கேமுக மாயிருந்து வடிவழக னரவமுத்து
வந்தவர்கள் செய்கூத்தைக் கண்டு
வெட்டிடுவான் நம்மையென்று விண்ணிலொரு பக்ஷியாகி
வீறுடனே தான்பறந்து போக
மாய்மால வித்தையினால் மற்றொருவர் காணாது
மதுரைச் சொக்கர் பதிதனிலே வந்தார்
வந்திடவே தலையாரி வாளில்ரத்தங் காணவென்ன
வனமிருக ரெத்தந் தனைத் தோய்த்து
மன்னனுக்குக் காண்பித்தவர் மகிழ்வுடன் தான்போனார்
மதுரையிலே வந்தவீரன் றன்னை
கண்டவுடனே சிறுக்கனும் மகிழ்ந்து வேகமுடன்
களிப்பா யொற்றைக்கால னூரில் வந்தார்
வந்திடவே தாய்தங்கையும் தந்தையருங் கூடிவந்து
வந்தவர்க்குப் பசியமர்த்தி னாரே

## வேறு

### மதுரைத்தாசி கொண்ட ஆசையும் அரவமுத்துவின் ஆணையும்

பசியமர்ந்தே இருந்தஞ்சாறு நாள்கள் கழிக்க அரவமுத்து

பாவினையாய்ச் சொக்கநாதர் பதியில்திருவிழா பார்க்கவென்ன
மகிழ்ந்தவ ரோட்டனும் பின்வரவே மதுரைநகர்க் கேகிடவே
மாதா பிதாவுடன்கூடிச் சொக்கேசர் மனைதனில் செல்லவென்ன
நாடிவருகையி லந்தணர்கண்டு நம்மில்லிலே இன்றுதங்கி
நாளைக்குப் போகலாமென்று மொழிந்திட நாயகிசிவகாமி
சுவாமி தரிசனம் செய்தபின் வீட்டுக்குச் செல்கையில் வாரேனென்ன
சொல்லியே எல்லவரும் வாரவேளையில் சுந்தரனான வெங்கள்
அரவமுத்தைக் கண்டுமே இலவாணிச்சியாம் வள்ளி என்பவள்தான்
ஆதரவாகத் துடர்ந்திவர்க ளோடு அம்மை மீனாக்ஷியையும்
அன்பர்க் கிரங்கும் சொக்கேசரையும் போற்றி ஆவலுட னிவர்கள்
அல்லவருங் கூடி நிற்கையில் வள்ளி அரவமுத்தின் மேலே
கண்ணோட்ட மாயவள் நீங்கவே சென்றந்தக் காரிகை யானவளும்
காமன் கணையினால் வாடினேன் நானுமே கட்டழகா நீரும்
எந்தன் மனைக்கிங்கே வாருமெனச் சொல்ல எங்க ளரவமுத்து
இல்லையடி நானும் ஊர்சென்று வாரேன்உன் இல்லதிலே போவென
சொல்லியும் கேளாது நிற்கிற வேளையில் சொக்கர்மே லாணையிட்டு
சுந்தரியை வழிவிட்டு இனத்தவர் கூட்டத்தில் வந்தனனே

### ஊர் திரும்புதல்

வந்ததுமே திருநாளும் முடிந்திட வாக்குட னேநடந்து
வந்தவ ரொற்றைக் காலன் பதிதன்னிலே வந்தமர்ந் தார்களப்போ
அமர்ந்து சந்தோஷம தாகவே கூடியே அல்லோருந் தானிருக்க
அரவமுத்து தன்சிறுக்கனைக் கூட்டியே ஆதர வாய்நடந்து
சிங்காணி வில்லுமெடுத்துத் தெருவினில் சிறப்புட னேவரவே

### தாசி இல்லில் தங்குதல்

சேயிழை வள்ளிக்குச் சொன்னமொழி மனத்தெண்ணியே போகின்றாராம்
சிறுக்கனுடன் வழிநடந்து மதுரைப்படை வீட்டில்
சேயிழையாள் வள்ளிஇல வாணிச்சியைக் காண
ஆசை யுடன்வர அவளுங்கண்டு வீட்டில் கூட்டி
அன்புடனே சிறுக்கனுக்கு அமுதளித்து அடுத்த
மனைதனிலே பையனையும் உறங்கவிட்டு இவர்கள்
மன்மதனும் ரதியுமெனக் கூடிமறு நாளை
வள்ளியிடம் வழியனுப்பி வீடுபோக வென்ன
வாக்குரைக்க மங்கையரும் மனங்கசிந்து நிற்க
அரவமுத்து மனமகிழ்ந்து ஆயிழைக்குச் சொல்வாள்

அன்புடனே வீடுசென்று வருவனடி பெண்ணே
என்றுரைத்துக் கடிகையிலே வீடுவந்து சேர

## திருமண ஏற்பாடும் சோதிடன் கூற்றும்

இன்பமுடன் தாய்தகப்பர் புத்தியுரைப் பாராம்
புத்திபல சொல்லியவர் உத்தமக னார்க்கு
புதுமையதாய் உலகத்து வழமைகளுஞ் சொல்லி
நற்றமிழ்சேர் தென்மதுரைச் சொக்கநாத ரருளால்
நலமான மகனார்க்குக் கலியாணஞ் செய்ய
வேண்டுமென்று மனமகிழ்ந்து சோதிரியை அழைத்து
வித்தாரமாய்ப் பொருக்ஷம் சுற்றிவைத்துக் கேட்டார்
கேட்டவுடன் சோதிரியும் ராசிப்பலன் பார்த்து
கெம்பீர மானஇணை சூரப்பெரு மாளுக்கு
இயல்வுடனே சொல்லுகிறேன் பொய்யாது அப்பா
எண்ணான்கு வயசுவந்தா லீசனருள் படியே
சாதகர்க்கு மாரகந்தான் வருமெனவே உரைக்க
சஞ்சலமாய் மன்னவனும் சிவன்செய லென்றிக்க

## திண்டுக்கல் மன்னனின் அழைப்பு

இருக்கையிலே சோதிரிசி சொன்னபடி போலே
எண்ணான்கு வயதுவரத் திண்டுக்கல்லு ராஜன்
அரவமுத்தைத் தாய்தகப்ப ரறியாது இங்கே
அரைநொடியிற் கூட்டிவர வேண்டுமென் றுரைத்தான்
உரைத்தமொழி தவறாது ஒட்டன்கடி தாக
ஒத்தக்காலன் விளைதனிலே வீட்டில்வரக் கண்டு
அரவமுத்து வெளியில்வர ஆசாரஞ் செய்ய
ஆரனுப்புந் தூதனென ஆங்கார மாக
கேட்டிடவே ஒட்டனவன் நீட்டதையுங் கொடுத்து
கெம்பீரர் திண்டுக்கல்லு ராஜனுனைக் கூட்டி
வரவேண்டி என்னைவிட்டார் வார்த்தைபிச காது
வடிவுடையோய் என்னுடனே வரவேண்டு மென்றான்
என்றவுடன் நீட்டதையும் பார்த்துவந்த வர்க்கு
இதமுடனே பலவரிசை கொடுத்தனுப்பும் வேளை
தந்தையருந் தாயாருந் தங்கையறி யாது
தான்வருவே னென்றுஒட்டன் தனையனுப்பி விட்டார்

அந்தமுள்ள ஓட்டனவ னரைக்ஷணத்தி லோடி
அரசனிடந் தானும்வந்து விசேடமது சொன்னான்
சந்தோஷ மாகத் திண்டுக்கல் லரசனிருக்க

### அரவமுத்துவின் திண்டுக்கல் பயணம்

தமிழ்மதுரைச் சொக்கநாதர் வரமதனா லிவர்க்கு
வரமதனால் முப்பத்திரு வயசுவந்த வேளை
வடிவுடைய மன்னனிடம் போகமனம் வைத்து
கன்னாளர் தனைவருத்திப் பொன்னதுவுங் கொடுத்து
கனிவகைகள் சமைத்தவனும் தங்கத்தட்டி லெடுத்து
சிறுக்கனிடம் மூட்டைகட்டித் தலைதனிலே வைத்து
திரும்பவந்து தந்தைதாயைச் சுற்றிநமஸ் கரித்து
தென்மதுரைச் சொக்கநாத ராலயத்தி லேதான்
திருநாள்பார்த்து வாரேனென விடையதுவும் வாங்கி
சிறுக்கனுட னேநடந்து சொக்கர்பதி வந்து
திடமுடைய மீனாக்ஷி சொக்கரையுந் தொழுது
சூரிய னுதிக்குமுன் னிரண்டுபேருங் கூடி
திண்டுக்கல்லுக் கோட்டையிலே வந்துசேர்ந்தா ரப்போ

### வேறு

### அரவமுத்து அரசனைக் காணல்

சேரத் தெருவினில் கண்டபேர் கண்கூசி நின்று
திட்டெனவே உமதூரும் பேரும் உரையென்ன
பேரரவ முத்து தந்தை யிணைசூர மாயன்
பிரபல மாகியஊ ரொற்றைக்காலன் விளைதான்
இந்தஊர் ராஜனைக் காணவேண்டி இங்குவந்தேன்
என்னத் தலையாரி ராஜர்க்குரைத் தாளனுப்பி
வீரனைக் கோட்டைக் ககத்து வரச்சொல்லிடவே
விரைவாய்ச் சிறுக்கனுட னரவமுத்து கூடி
வரவே யரசனிவனைக் கண்டமாத் திரத்தில்
வாருமையா இருமென் றாசன மீந்தான்
ஈயஇவர்கள் கொடுவந்த தங்கக் கனிகள்
இராஜ னடிகளில் க்ாணிக்கையாகவே வைத்து
இட்டதோ ராசனந் தன்னிலிருக்கின்ற நேரம்
இராஜ னிவர்க்குப் பசிதீர அன்னங் கொடுத்து

## அரசனின் எண்ணைக் காப்பால் அரவமுத்துவுக்கு நேர்ந்த பழி

அன்றுதங்கி மறுநாள் சனிவார மானதால்
ஆனந்த மாகஅரசன் நல்லெண்ணை முழுக
எண்ணங் கொண்டு ராஜன் ஆசனந்தன்னி லமர
ஏத்ததோர் மண்டபந் தன்னிலொரு மறத்தீரன்
வந்து அரசன் பருவட்டமெல்லாங் கழற்றி
வாக்குடன் வைத்துமே ஆழிதனையும் கழற்றி
ஆழிகழற்றிப் பருவட்டம் மீதிலே வைத்து
அரசனுக்கு எண்ணைக்காப் பிட்டிருக்கிற நேரம்
அடுக்க இருந்த அரவமுத்து வீரன்கண்டு
அரசனுக்குத் தான்சிறுக்கனைவிட் டெண்ணை தேய்க்க
ஏவிடவே மறவீரன் சினத்து விலக
ஏந்தலுக்குச் சிறுபையலும் நல்லெண்ணை தேய்க்க
தேய்க்குஞ் சமையத்தில் ராஜனுக்குக் கண்துயின்று
ஸ்ரீமமதாக இருக்குஞ் சமையம் மற்றும்
அண்டையி லுள்ளவன் வந்துஇன்று எண்ணை தேய்த்தால்
அரசன் மறுநாளை நம்மை மதிப்பானோ வென்று
ஆழியைக் கள்ளமதா யெடுத்து வாளுருவி
அறைக்குள்ளே போட்டுமே மூடியிருந்தான் மறவன்
இருக்குஞ் சமையம் ஒருவருமே காணவில்லை
இராஜனுங்கண் விழித்தன்று நீராடி வெண்பட்டால்
ஈரந்துவட்டிப் பருவட்டஞ் சாத்தியே ஆழி
எங்கே யெனக்கேட்க எல்லோருந் தேடியேபார்த்தார்

### வேறு

தேடமன்ன னாழியொரு திக்கிலுங் காணாமல்
திகைத்திடுவார் புலம்பிடுவார் தேடினபே ரெல்லாம்
அரசன் அமுதருந்தி வரும்முன்னே காணாவிட்டால்
அனர்த்தம் வருமெனப் பலரும்பேசிப் பேசித்தேட
அரவமுத்து வீரனுடன் அரசன்வந்து தானும்
அமுதருந்திக் கூடிவந்து பவுசியமா யிருந்தார்
இருந்திடவே ஆழிதன்னைக் காணாது வந்து
இராஜனுட னிந்தஆழி எடுத்தவர்க ளாரோ
இங்குநின்ற பேர்களல்லா லெவரோ யெடுக்கிறது
இதுவரையி லரண்மனையில் களவுபோன தில்லை
என்றுரைக்க ராஜன் கோபமுண்டாகி வந்து
இந்தக்கரு மறவனல்லால் எடுப்பாரு முண்டோ
என்றரச னுரைத்திடவே மறத்தலைவ னோடி

இயலழக னரவமுத்தின் சிறுக்கன்கையி லிருந்த
நன்றியுள்ள உடைவாளைத் தாருமென்று வாங்கி
நரபதியின் முன்னேகொண்டு வாளுறையை உருவி
உருவஅந்தத் திருவாழி தரைதனிலே விழவே
ஒக்கவுமே பாருமென்று சிக்கெனவே உரைத்தான்
இதுவரையில் திருவாழி எடுத்தவர்க ளில்லை
இவ்வுறைக்குள் ஆழிதனை வைத்தவரா ரென்றார்
என்றுமன்னன் கேட்டபோது ஒன்றுமுரை யாமல்
இயல்பெரிய மந்திரிமா ரேதுசொல்லு வாராம்
கண்டிதமா யுமைக்காண வந்தவரைச் சதிக்க
கருமறவன் செய்ததல்லால் வேறொருவர் செய்ய
இல்லையென்று மந்திரிமா ரியம்பினசொற் கேட்டு
இயலழக னரவமுத்து ஏதுசொல்லு வாராம்

## பழி ஏற்ற அரவமுத்துவின் பயணம்

என்றுஎந்தன் உடைவாளுக்குள் தொண்டிகண்ட போதே
இனிமேலும் பூதலத்தி லிருப்பதில்லை யென்றான்
இருப்பதில்லை என்றுசொல்லி அரவமுத்து உரைக்க
ராஜனுடன் மந்திரிமார் கூடிஇரைந் தழுது
சதிவுசெய்ய நினைந்தகரு மறவனைத்தான் பிடித்து
தக்கபடி ஆக்கினைகள் செய்வேன்தம்பி என்றார்
இதுவரையும் பூதலத்தி லிருக்கவர முண்டு
இனிமேல்நா னிருப்பதில்லை ராஜமன்ன ராணை
ஆணையிட்டு இருப்பதில்லை என்றுரைத்த போது
அரசனுடன் மந்திரிமா ரெல்லோரு மழுதார்
சதியோநா னுமைக்காண வேண்டுமென்று விரும்ப
தானேநீர் வந்திடத்தில் சதிநினைந்தீ ரென்ன
விதியதனை விலக்கிடவு மொருவரா லாகாது
வேந்தனேநான் போய்வாரேன் விடைதாரு மென்றான்
விடைதாரு மென்றவுடன் வேந்தன்மனம் மகிழ்ந்து
வெங்கலத்துக் கோட்டைக்குள்ளே போய்வாரு மென்றார்
என்றவுட னரவமுத்து சிறுக்கனுடன் கூடி
எண்ணமதாய் வெள்ளிமலை தேடிநடந் தாரே

## வேறு

## சிறுக்கனின் உறுதியுரை

நடந்துவெகு துரிதமுடன் நாடிவெள்ளி மலைக்கேக

உத்தபுகழ்ச் சிறுக்கனுடன் உரைத்திடுவா ரொருவார்த்தை
இத்தனைநா ளென்னிடத்தில் இணைபிரியாதே இருந்தாய்
சித்தமுட னுந்தனுக்குத் திரவியமும் நான்தருவேன்
தருவேன்நான் வெகுவரிசை சந்தோஷமாய் வாங்கி
உரிமையுடன் ஊரதில்போய் உண்மையொன்றும் உரையாமல்
செல்லெனவே விடைகொடுக்கச் சிறுக்கனவ னேதுசொல்வான்
திரவியங்கள் வெகுவரிசை சேரவேநீர் தந்தாலும்
ஒருபொழுதும் உம்மைவிட்டு உடன்தரிக்க மாட்டேனே
இருந்தாலும் உம்மோடே இறந்தாலும் உம்மோடே
உம்மிடத்தில் வருவதல்லால் ஒருஇடமும் போவதில்லை

## அரவமுத்து கழுவேறுதல்

போவதில்லை என்றஉடன் புத்தியெல்லாம் வேறாகி
ஆவதினி யிக்கருமம் அமைத்தபடி தப்பாது
தப்பாமல் சொக்கநாதர் தந்தவயதுஞ் சரியே
சரியாக வந்துதென்று தன்மனது உள்ளடக்கி
அடக்கியவர் சிறுக்கனுடன் அருங்காட்டு வழியாக
வெள்ளிப்பாறை தன்னில்வந்து வெற்றிலையுந் தானருந்தி
விருந்துசெய்த மன்கொடுத்த வேண்டும்பல உருப்படியை
தானணிந்து பட்டுடுத்துத் தலைப்பாகை கட்டியல்லோ
நின்றவரும் சொக்கர்தமை நினைந்தவரும் வருகையிலே
வேங்கைமரத்தின் நடுவாய் வெள்ளிக்கழு தோன்றிடவே
காணாமல் மறைந்துநின்ற கழுவதுவும் வெளியாக
வெளியாகித் துலங்கிடவே வேங்கைமரம் நீங்கிநிற்க
கழுவேறுஞ் சமையமது கடுகவந்து முடுகிடவே
சொக்கர்தமையும் நினைந்து தொழுதிடவும் கழுவளைய
கழுவளைய அதன்முனையில் கட்டழக னரவமுத்து
சாடியவ னிருக்கையிலே சட்டெனவே வாள்நிறுத்தி
அரவமுத்தின் முன்னிலையில் அன்புடனே சிறுபையனும்

## தாய் தந்தையரின் கவலை

சாடிஉயிர் நீத்திருக்கும் சமையத்திலே தாய்தகப்பர்
திருநாளுக்குப் போனமகன் திரும்பிவர வில்லையென்ன
சங்கடமா யிருக்கையிலே தான்வந்தா ரினத்தோர்கள்
இனத்தோர்க ளிடம்வினவ எல்லோருஞ் சொல்லலுற்றார்
நாங்களவனைக் காணோம் நாயகமே எனஉரைத்தார்
உரைத்திடவே மனங்கசிந்து ஊரெங்குந் தேடிவந்து
சடைத்தவர்கள் சொக்கநாதர் சந்நிதியிற் செல்லுவாராம்

சென்றிவர்க ளிருந்திடவே திரும்பியங்கே பானுவர

## அரவமுத்து இடைச்சிக்கு ஈந்த வரம்.

வாடாமற் கழுவதிலே வந்துவிழுந்த வடுவும்
காணாம லிவரிருக்கக் கட்டுடனே மோருகொண்டு
திண்டுக்கல்லு ஊரில்விற்கச் சேயிழைமார் இடைச்சியர்கள்
கொண்டுசென்ற பேர்களைத்தான் கூப்பிடவே அதிலொருத்தி
அஞ்சாமல் மோருகொண்டு அரவமுத்துக் கீந்திடவே
அரவமுத்துக் கீந்திடவே அவன்மனது களிகூர்ந்து
மாரிமுத்து இடைச்சியர்க்கு மலங்காது பானையிலே
முட்டிநிற்க வரங்கொடுத்து முகனையுடன் நாள்தோறும்
அதிகாலையிற் கொடுத்து ஆயர்குல மாரிமுத்து
மாரிமுத்து இடைச்சியவள் மகிழ்ந்தாறு நாளாக
கொடுத்துவர அரவமுத்து கோதையம்மையா ரம்மைக்கு

## அம்மையாரம்மை கனவும் அரவமுத்துவைக் காணுதலும்

ஆறாநா ளிரவில் அரியகனாவி லுரைத்தார்
வாடாதே தங்கையரே வாடிமனங் கோடாதே
விடியுமுன்னே எழுந்திருந்து வெள்ளிமலைச் சார்வதிலே
மோருகொண்டு வாவெனவே முன்னறிக்கை செய்தனராம்

## வேறு

கனவதைக் கண்டுமுயித்து இளகியே கன்னியம்மையா ரம்மை
கண்ணான அண்ணனைக் கண்ட கனாவால் கதறியழுதிடவே
அண்டையி லுள்ளவரும் உறவின் முறையாரும் முழித்திளகி
அம்மணியே இவ்விரவிலே நீயும் அழுதவகை ஏதெனக்
கேட்டவுடன் கனாதானு முரைத்துக் கருவியே மோர்கடைந்து
கீர்த்தியுடன் மறுநா ளதிகாலையில் கெம்பீரமா யெழுந்து
மதுரைக்குச் சென்றதோர் தாயுந்தகப்பனும் வாரதும் பாராமல்
மங்கைநல்லா ளதிவேகமுடனே நடந்து கடிதாக
வெங்கலக் கோட்டையை விட்டொருநாளும் வெளியில் வராதவள்தான்
வேகத்தி னாலே தயிர்க்குடங் கொண்டுமே வெள்ளி மலையில்வந்தாள்
வந்து வேங்கைமர மூட்டினில் வெள்ளிக் கழுவினில் தொங்குகிற
வல்லவ னண்ணனைக் கண்டுஅழுதனள் வடிவழகி தங்கையும்
தங்கை அழுதிட அண்ணனுங் கூப்பிட தான்கழு சாய்ந்துவர
தயிர்க்குடந் தங்கையரீந்திட அண்ணனுஞ் சங்கையாய்த் தான்குடித்து

தங்கக் குடத்தினைக் கையில்கொடுத்திடத் தங்கையுங் கீழேவைத்து
சாடியலறி யழவே தமையனும் சாந்தப் படுத்திடவே
தந்தையுந் தாயாரும் நம்மைவந்து கண்டால் சற்றுஞ் சகிப்பாரோ
தமிழ்மதுரைச் சொக்கநாத சுவாமி தணல்வேள்வி தாருமென்றாள்

## வேறு

### அம்மையாரம்மை தணல்வேள்வி வேண்டிச் சாடுதல்

தாருமென் றம்மையா ரம்மை துயர மதினாலே
சங்கரனைத் தொழுதவளும் ஏதுரை சொல்வாளாம்
அன்னை சிவகாமியம்மை செய்த தவத்தாலே
அன்புடன் மனதிரங்கிப் பிள்ளையாக்கிக் கொடுத்தீர்
பார்தனிலே இப்படி யாரொருத்தர்க்கு மில்லாத
பாதகமாம் கழுவேற விதித்தீரே சிவனே
விதித்த விதியை விலக்க ஒருவரூமே இல்லை
வேள்வியொன்று எனக்குத்தர வேண்டும்பர னாரே
தாராது இருந்தாக்கால் தீராது பாவம்
சங்கரனே எனவணங்கி யங்கவளும் நின்றாள்
நின்றிடவே ஆதிபரன் அன்றுவேள்வி யொன்று
நீதியுடன் வெள்ளிமலை வேங்கைமரத் தருகாய்
எட்டுமூலை தன்னுடனே வேள்வியது துலங்க
எழுகுலத்து விறகும் ஈஸ்பரனா ரருள
விறகடுக்கி எண்ணையூற்றி வேள்விதனி லேதான்
வீறுடனே அக்கினியைப் பற்றவைக்க வென்ன
ஆதிசிவ னிடமதிலே அம்மையா ரம்மையும்
அக்கினிதாரும் மதுரைச் சொக்கநாதா வென்றார்
என்றுரைத்தும் ஈஸ்பரர் தீஅருளாத்த தாலே
ஏந்திழையும் ஊதிடவே வேள்வியிற்தீ யெரிய
வேள்விதனை மூன்றுதரம் சுற்றிவந்து தொழுது
வேகமாக அம்மையாரும் கோபமாய்ச் சாடினாளே

## வேறு

### பெற்றோர், அரவமுத்து, அம்மையாரம்மையின் இறுதிமுடிவு

சாடினாள் வேள்விதன்னிலே தங்கையும்
        தணலானது தீயா யெரியவே
வாடிமுகங் கோடாமல் நின்றதோர்
        வல்லவ னரவமுத்துவுங் கழு தன்னைச்

சென்றிவர்க ளிருந்திடவே திரும்பியங்கே பானுவர

## அரவமுத்து இடைச்சிக்கு ஈந்த வரம்.

வாடாமற் கழுவதிலே வந்துவிழுந்த வடுவும்
காணாம லிவரிருக்கக் கட்டுடனே மோருகொண்டு
திண்டுக்கல்லு ஊரில்விற்கச் சேயிழைமார் இடைச்சியர்கள்
கொண்டுசென்ற பேர்களைத்தான் கூப்பிடவே அதிலொருத்தி
அஞ்சாமல் மோருகொண்டு அரவமுத்துக் கீந்திடவே
அரவமுத்துக் கீந்திடவே அவன்மனது களிகூர்ந்து
மாரிமுத்து இடைச்சியர்க்கு மலங்காது பானையிலே
முட்டிநிற்க வரங்கொடுத்து முகனையுடன் நாள்தோறும்
அதிகாலையிற் கொடுத்து ஆயர்குல மாரிமுத்து
மாரிமுத்து இடைச்சியவள் மகிழ்ந்தாறு நாளாக
கொடுத்துவர அரவமுத்து கோதையம்மையா ரம்மைக்கு

## அம்மையாரம்மை கனவும் அரவமுத்துவைக் காணுதலும்

ஆறாநா ளிரவில் அரியகனாவி லுரைத்தார்
வாடாதே தங்கையரே வாடிமனங் கோடாதே
விடியுமுன்னே எழுந்திருந்து வெள்ளிமலைச் சார்வதிலே
மோருகொண்டு வாவெனவே முன்னறிக்கை செய்தனராம்

## வேறு

கனவதைக் கண்டுமுயித்து இளகியே கன்னியம்மையா ரம்மை
கண்ணான அண்ணனைக் கண்ட கனாவால் கதறியழுதிடவே
அண்டையி லுள்ளவரும் உறவின் முறையாரும் முழித்திளகி
அம்மணியே இவ்விரவிலே நீயும் அழுதவகை ஏதெனக்
கேட்டவுடன் கனாதானு முரைத்துக் கருவியே மோர்கடைந்து
கீர்த்தியுடன் மறுநா ளதிகாலையில் கெம்பீரமா யெழுந்து
மதுரைக்குச் சென்றதோர் தாயுந்தகப்பனும் வாரதும் பாராமல்
மங்கைநல்லா ளதிவேகமுடனே நடந்து கடிதாக
வெங்கலக் கோட்டையை விட்டொருநாளும் வெளியில் வராதவள்தான்
வேகத்தி னாலே தயிர்க்குடங் கொண்டுமே வெள்ளி மலையில்வந்தாள்
வந்து வேங்கைமர மூட்டினில் வெள்ளிக் கழுவினில் தொங்குகிற
வல்லவ னண்ணனைக் கண்டுஅழுதனள் வடிவழகி தங்கையும்
தங்கை அழுதிட அண்ணனுங் கூப்பிட தான்கழு சாய்ந்துவர
தயிர்க்குடந் தங்கையரீந்திட அண்ணனுஞ் சங்கையாய்த் தான்குடித்து

தங்கக் குடத்தினைக் கையில்கொடுத்திடத் தங்கையுங் கீழேவைத்து
சாடியலறி யழவே தமையனும் சாந்தப் படுத்திடவே
தந்தையுந் தாயாரும் நம்மைவந்து கண்டால் சற்றுஞ் சகிப்பாரோ
தமிழ்மதுரைச் சொக்கநாத சுவாமி தணல்வேள்வி தாருமென்றாள்

## வேறு

### அம்மையாரம்மை தணல்வேள்வி வேண்டிச் சாடுதல்

தாருமென் றம்மையா ரம்மை துயர மதினாலே
சங்கரனைத் தொழுதவளும் ஏதுரை சொல்வாளாம்
அன்னை சிவகாமியம்மை செய்த தவத்தாலே
அன்புடன் மனதிரங்கிப் பிள்ளையாக்கிக் கொடுத்தீர்
பார்தனிலே இப்படி யாரொருத்தர்க்கு மில்லாத
பாதகமாம் கழுவேற விதித்தீரே சிவனே
விதித்த விதியை விலக்க ஒருவருமே இல்லை
வேள்வியொன்று எனக்குத்தர வேண்டும்பர னாரே
தாராது இருந்தாக்கால் தீராது பாவம்
சங்கரனே எனவணங்கி யங்கவளும் நின்றாள்
நின்றிடவே ஆதிபரன் அன்றுவேள்வி யொன்று
நீதியுடன் வெள்ளிமலை வேங்கைமரத் தருகாய்
எட்டுமூலை தன்னுடனே வேள்வியது துலங்க
எழுகுலத்து விறகும் ஈஸ்பரனா ரருள
விறகடுக்கி எண்ணையூற்றி வேள்விதனி லேதான்
வீறுடனே அக்கினியைப் பற்றவைக்க வென்ன
ஆதிசிவ னிடமதிலே அம்மையா ரம்மையும்
அக்கினிதாரும் மதுரைச் சொக்கநாதா வென்றார்
என்றுரைத்தும் ஈஸ்பரர் தீஅருளாத்த தாலே
ஏந்திழையும் ஊதிடவே வேள்வியிற்தீ யெரிய
வேள்விதனை மூன்றுதரம் சுற்றிவந்து தொழுது
வேகமாக அம்மையாரும் கோபமாய்ச் சாடினாளே

## வேறு

### பெற்றோர், அரவமுத்து, அம்மையாரம்மையின் இறுதிமுடிவு

சாடினாள் வேள்விதன்னிலே தங்கையும்
தணலானது தீயா யெரியவே
வாடிமுகங் கோடாமல் நின்றதோர்
வல்லவ னரவமுத்துவுங் கழு தன்னைச்

சாய்த்துத் தணல்கரையில் வந்து
சங்கரரே வரந்தாரு மென்னவே
தங்கக் குடந்தன்னி லெலுமிச்சம்
தன்பழம் வைத்து ஊசி நிறுத்தியே
ஊசிமுனை தன்னிற் பெருவிரல்
ஊன்றியே அரவமுத்துவுந் தவம்
செய்து நிற்கிற வேளையி லீஸ்பரன்
தேவியோடும் இடபாருடராக
வெள்ளிப் பாறைக்கு வாரதோர் வேளையில்
வேக மாகவே தாயுந் தகப்பனும்
வந்து வெள்ளிமலை வேங்கை மூட்டிலே
வெகுண்டு வந்தவர் பிள்ளைகளைக் கண்டு
அழுதுகொண்டு சிவகாமி யம்மனும்
அப்பரா மிணைசூரப் பெருமாளும்
ஈஸ்பரனைத் தொழுதவர் வேள்வியில்
இரண்டுபேரும் உடன்சாடி னார்களே
சாடிவிட்டார் தணல் வேள்வி தன்னிலே
சங்கர னுமையம்மையுங் காணவே
காணவே சிவனாரும் மகிழவே
காக்ஷி செய்தாலே தேவாதி தேவரும்
வானம் முட்ட வளரும் திருவேள்வி
வரிசையாய் வெள்ளிப் பாறையது தன்னில்
தீவிரமா யெரிகிற வேளையில்
செங்கதிரோன் பிரகாசம் போலவே

## மாண்டோர் பெற்ற வரம்

வேள்வி உள்ளே இருக்கிற அம்மைக்கு
வீர மான வரங்கள் கொடுக்கவே
இரங்கியே மதுரை மீனாக்ஷி யம்மை
இளமயிலே கரையிலே வாவென்றார்
வாவெனவே கரையேறி அம்மையும்
வணங்கி நிற்கவே நாம மிடுவாராம்
அக்கினிக்குள் பிறந்த வகையினால்
அனற்காரி எனவே நாமமிட்டு
இலங்கவே தெய்வலோகம் பூலோகமும்
எங்கும் எங்கும் பிரகாச மாகவே
குவலயந்தனிற் பூசைகள் கொள்ளவும்
கூண்ட நாடு நகரெங்குஞ் சுற்றவும்
அடுத்த பேர்களை அன்பாகக் காக்கவும்
அசத்தியஞ் செய்த பேரை மயக்கவும்
பெருக்க மாகவே பூசைகள் கொள்ளவும்
பூசையுண்டு குடியை வளர்க்கவும்
விருப்ப மாகச் சிவகாமி அம்மைக்கும்
வீரனா மிணைசூரப் பெருமாளுக்கும்

அரவமுத்து சிறுக்கனுக்கும் ஈசன்
அலங்கார மதாக வரம் ஈய
திக்கெல்லாம் புகழ்பெற்றிடுந் தீரனே
சூரியப் பிரகாச வடிவனே
வடிவான அரவமுத்து வீரனே
வளரும் வெள்ளிக் கழுக்காரத் தீரனே
குடிபதிப் பூசை உண்டு வளர்க்கவும்
கொல்லவும் வரம் வெல்லத் தந்தோ மென்றார்
ஆயிழையாள் அனல்காரி யம்மைக்கு
ஆதிநாதன் வரங்கள் கொடுப்பாராம்
தீமுழுகுந் திருவேள்விக் காரியே
தீயெரிக்கின்ற தீக்காந்தல் காரியே
அக்கினிக் காரியே அனல்காரியே
அழியாத வரமுனக்கே தந்தோம்
காச்சலோடு களிச்சலுஞ் சத்திப்பும்
காந்தல் மண்டைக் கனப்பு மயக்கமும்
வாயி னாலே உதிரங்கள் கக்கவும்
வயிற்றுக் காந்தலுஞ் சொரியோ டிருமலும்
மாய மாகவே வல்பிணி போடவும்
மாடாடு மனிதரைக் கொல்லவும்
பாலி சூலிகள் பக்குவப் பெண்களை
பதை பதைக்கவே கொல்ல வரங்களும்
மந்திர தந்திரத்தி லடங்காமல்
வம்புகள் செய்து கொல்ல வரங்களாம்
கும்பிட்ட அடியார்களைக் காக்கவும்
குடி வளர்த்து வெகுபூசை கொள்ளவும்
வரங் கொடுக்க அனற்காரி யம்மையும்
வாம தேவனோடே ஏதுரை சொல்வாளாம்

## வேறு

### அம்மையாரம்மை பழி வாங்குதல்

ஈஸ்பரரே மகதேவா எமைப்பிறவி செய்தவரே
பாவமதைத் தானெதிர்க்கும் பரஞ்சுடரே எங்களையும்
தேசம்மெய்க்கச் சிவகாமி செய்த தவத்தால் கொடுக்க
வாசம் பொருந்தி வளர்ந்து வாழுமந்த நாளையிலே
மலையரச னிடத்திலண்ணர் மாய்மாலம் படித்துவர
படித்துவரும் வேளையிலே பாங்குடனே எந்தனண்ணர்
தாசிமனையி லமர்ந்து தான்கடந்து வருகையிலே
அவ்வூரை யாளுகின்ற அழகேசன் வேகமதாய்
பழிஎடுக்க வேண்டுமென்று பாதகனும் மனதிலெண்ணி
கொல்லெனவே தானுரைத்த கொடும்பாவி மன்னவனை
இப்போசென்று கொல்லவேண்டும் ஈஸ்பரரே மறுபடியும்

வெங்கலத்துக் கோட்டைக்குள்ளே மீண்டு அண்ணர் தானிருக்க
திண்டுக்கல் லாளரசன் திறமுடனே தானழைத்து
விருந்தளித்து வீற்றிருக்க வேந்தனுக்கு எண்ணை இட்ட
கருமறவனை நீக்கிக் கடுகளங்க ளண்ணருட
சிறுக்கனவ னெண்ணையிட சினத்துக்கரு மறவனவன்
அரசனுட மோதிரத்தை அண்ணனுட சிறுக்கன்வைத்த
உடைவாளில் வைத்துப்பின்பு உண்மையுடன் திருடினதாய்
காவலருக்கு உரைத்த கருமறவன் குலத்துடனே
கொன்றுஐந்து மரக்காலில் குறையாத தாலியையும்
அண்ணர்நிற்குங் கழுவடியில் அற்றுவைத்தா லீஸ்பரரே
வஞ்சமற வேஎனக்கு மனவேகந் தீருமையா
என்றுரைத்த அனற்காரிக்கு ஈஸ்பரரும் வரங்கொடுத்தார்
வரம்வாங்கி அனல்காரி வடிவுடனே தான்கடந்து
தாசியுட சங்கதியால் தான்கொலைக்கு விடைகொடுத்த
அழகேசன் குடும்பத்துடன் அவனையுமோ தான்வதைத்து
திண்டுக்கல்லில் கருமறவன் தீங்குசெய்த கோபமதால்
காந்தலுடன் உதிரங்கக்கிக் கனகனப்புங் காச்சலிட்டு
அவன் குலத்தோடு அவனை அரைக்ஷணத்தில் கொல்லுகையில்

## சோதிடன் கூற்றும் வழிபாடும்

பலபேரும் இறந்திடவே படிப்பாளி யொருவன்வந்து
ஈதேது புதுமையினா லிப்படிக்கு வந்ததென்ன
புரோகிதனைத் தானழைத்துப் பொருத்தமது கேட்டனனே
கேட்டபோது சோசியனும் கெருவிதமா யேதுசொல்வான்
ஒத்தக்காலன் விளையூரை உரிமையுட னரசாண்ட
இணைசூரப் பெருமாளுட ஏத்தமைந்த னரவமுத்தை
உன்குலத்துக் கருமறவன் உயிர்நீக்க வகைசெய்ததால்
அவன்தாயுந் தந்தையுடன் அரியதங்கையு மிறந்து
கடவுளிடம் வரம்வாங்கிக் கட்டுடனே இங்கேவந்து
இக்கோஷ்டம் பண்ணிவிட்டார் இவர்களுக்கு இவ்வூரின்
தென்சிசையிற் கோயில்வைத்துச் சிறப்புடனே பீடமிட்டு
அரவமுத்துக் கொருகழுவும் அன்புடனே தான்நாட்டி
அனற்காரி அம்மைக்கொரு அனற்குழியும் அதிலேவெட்டி
தந்தையுடன் தாயார்க்கும் தானரவ முத்தினுட
சிறுக்கனுக்கும் பூசையிட்டால் தீருமிந்நோ யெனஉரைத்தார்
உரைத்த மொழிப்படி மறவர் உறப்புடனே பீடமிட்டு
கோழிகிடா வெலிகொடுத்து கொடைகொடுத்தா ரந்நாளே
கொடைவாங்கித் தாலிகொண்டு கூண்டகழு மூட்டில்வைத்து
அண்ணரிரு காலைத்தொட்டு அனற்காரி தொழுதுநின்றாள்
தொழுதிடவே அரவமுத்து தொல்லுலகில் பேர்விளங்க
போகவேணு மென்றுசொல்லிப் புறப்படுமென் றுரைத்தாரன்றே

## வேறு

### பல்தலமும் சென்று கோட்டைவிளையில் கோயில் கொள்ளல்

வேணுமென்று மனது சந்தோஷமாய்
வெற்றிசேர் சொக்கநாதரைப் போற்றியே
ஆணுவமா யரவமுத்து வீரன்
ஆயிழையா ளனற்காரி அம்மையும்
தாயான சிவகாமி அம்மையும்
தந்தையா மிணைசூரப் பெருமாளும்
இங்கிதமாய்ச் சிறுக்கனும் பின்வர
எந்தஎந்தத் தலத்திலே போகுவோம்
என்று எண்ணி வரப்பல ஊரிலும்
இங்கித மான பூசையும் உண்டபின்
சாலப்புது ஊரதில் தங்கியே
தானவர்களும் பூசையது உண்டு
தெக்ஷணம் போகவேண்டு மெனவெண்ணி
தீவிர மாகவே நடந்தெல் லோரும்
எருக்கலை வெட்டி ஊரதிலே வந்து
ஏற்ற மானதோர் பூசையதும் உண்டு
சுயம்புலிங் கேசர் வாழு முவரியில்
சென்று பூசையும் உண்டு இவர்களும்
சுயம்பு லிங்கத்திடம் வரம் வாங்கியே
தெக்ஷ ணத்தில் புறப்படு வார்களே
புறப்பட்டிவர் நட்டாறும் விட்டல்லோ
புளகித மாகக் கொத்தங் குளமிட்டு
கூடங்குளம் உப்பாறும் விட்டல்லோ
கூட்ட மாக நடந்து மேற்கே வர
காடுசோலை கடந்து குளமிட்டு
தட்டுடை பண்ணையூருங் கடந்தல்லோ
கன்னங்குளம் காணிமடம் விட்டு
கனமுடை அஞ்சுகிராமங் கடந்தல்லோ
கோஷ்ட மாக நடந்து ஒற்றைப்பனை
கோட்டை வாயலுந் தான்கடந் தெல்லோரும்
நாட்டமாய்ப் பட்டணத்தா ரோடை விட்டு
நாடிப் பஞ்சலிங்க புரமு மிட்டு
காட்டுப் பாதையாய்ச் சுக்குப்பாரும் விட்டு
கடந்து கோட்டைவிளையி லிருக்கிற
ஸ்ரீராமன் கபாலக்காரி யம்மைதீரன்
செங்கிடாய்க் கார னிவர்களுக்கு
தோழமை யாகிய பூசையது உண்டு
சிறப்புடன் கோட்டைவிளையி லிருந்தனரே.

* * *

## அருஞ்சொற் பொருள் விளக்கம்
## (46-47- சிவனணைஞ்ச பெருமாள் கதை)

1. வெள்ளிலங்கும் - வெள் + இலங்கும், வெள்ளை நிறமாக விளங்கும் (பனியினால் வெண்மை நிறம் தோன்றுதல்)
2. அரனார் - சிவபெருமான்
3. பூதலம் பூந்த திருமால் - பூமியில் புகுந்த திருமால். திருமால் அவதாரங்களெடுத்துப் பூமியில் பிறத்தலால் இவ்வாறு சுட்டப் பெற்றுள்ளது.
4. சரசோதி - சரசுவதி, கல்விச் செல்வத்துக்கு அதிபதி
5. சியல் - செயல்
6. வில்லினுரை - வில்லில் உரைக்கும் வில்லுப்பாடல்
7. ஆணுவம் - ஆணவம், செருக்கு (செல்வ வளத்தால் விளைந்த செருக்கு).
8. அத்தர் - அத்தன், உலக உயிர்களுக்குத் தந்தையாகிய சிவன்.
9. அவிராமி - அபிராமி, பார்வதி.
10. வலங்கைகுலம் - சாணார் எனப்படும் நாடார் குலம்.
11. மின்வெட்டம் - மின்வெட்டாம்பூச்சி, மின்மினிப்பூச்சி, ஒளிவீசும் ஒருவகைப் பூச்சி.
12. பொன்னுலகில் மன்னனுட வேழம் .- தேவருலகத்துத் தேவேந்திரனின் வெள்ளை யானையாகிய ஐராவதம்
13. மண்ணனை - மண்ணுணி ஆகலாம். மண்ணுணி = மண்ணுளிப் பாம்பு. மண்ணை உண்ணும் மண்புழுவும் ஆகலாம்.
14. பொற்படி - பொன்னாலாகிய நிறுத்தலளவுப் படிக்கல்
15. கல்படி - கல்லாலாகிய படிக்கல்
16. தென்காசி நாடு - குற்றாலத்துக்குக் கிழக்கே மூன்றுகல் தொலைவில் சிற்றாற்றின் கரையிலுள்ள ஊர். வடநாட்டில் புகழ்பெற்ற காசி இருப்பது போன்று, தென் நாட்டிலும் ஒரு காசி அமையவேண்டும் என்று கருதி அரிகேசரி பராக்கிரம பாண்டியன் தென்காசி நகரையும், நடுவில் விசுவநாதர் கோயிலையும் கி.பி. 1447-ல் அமைத்தாகத் தெரிகிறது.
17. அஞ்சிமுடி மன்னவர்கள் - பஞ்சபாண்டவர்கள் என்றும், ஐவர் ராசாக்கள் என்றும் அழைக்கப்பட்டனர். (1) குலசேகர பாண்டியன் 2) கோமாறன் வீரபாண்டிய தேவர் 3) கோமாறன் ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியதேவர் 4) ஜடிலவர்மன் குலசேகர பாண்டிய தேவர் 5) ஜடாவர்மன் விக்ரம பாண்டிய தேவர் என்ற இந்த ஐந்து சகோதரர்களே தென்காசியைப் புகழோடு ஆண்ட

பஞ்சபாண்டவர்கள் என்றும், கி.பி. 1370 முதல் 1422 வரை இவர்கள் ஆட்சி இருந்தது என்றும், இவர்கள் ஒருவருக்குப் பின் ஒருவர் ஆண்டனரா அல்லது இருவர், மூவர் ஒரே காலத்தில் பல தலைநகர்களிலிருந்து தேசத்தைப் பிரிவு செய்துகொண்டு ஆண்டனரா என்பது புரியாத புதிராக உள்ளது என்றும், டாக்டர் நா. வானமாமலை அவர்கள் ஐவர் ராசாக்கள் கதை முன்னுரையில் (பக்.13-14) விளக்கியுள்ளார்.

18. செம்பவளராசன் - செண்பகன் ராசன், செண்பகமாற பாண்டியன் செண்பகமாராயன் என்று பிற கதைப் பிரதிகளில் குறிப்பிடப் பட்டுள்ளான்.
19. அய்பேர் - ஐபேர், ஐந்துபேர்.
20. திருப்பூத்தாள் - பூப்படைந்தாள். வயதுக்கு வருதல், சமைதல், பக்குவமடைதல், இருதுவாதல், பெரிய மனுசியாதல், பருவமடைதல் போன்ற சொற்களும் இப்பொருள் குறித்தனவே. பெண் பருவமடைதலைப் பூ மலர்தலோடு ஒப்பிட்டு ஆண்டுள்ள இச்சொல் வழக்கு, தமிழரின் இயற்கையோடியைந்த வாழ்வுக்கு மேலும் ஒரு சான்றாகத் திகழ்கிறது எனக் கூறலாம்.
21. குடஞ்சுமக்க - கொள்ளிக் குடம் சுமக்க. இறப்புச் சடங்குகளில் ஒன்றாக, குடும்ப வாரிசின் (சிறப்பாக மூத்தமகள்) தலையில் நீர் நிறைந்த சிறிய மண்குடம் ஒன்று வைக்கப்பெற்று, பிணத்தைச் சுற்றிவரச் செய்து, ஒவ்வொரு சுற்றின்போதும், அரிவாள் முனையால் அப்பானையில் ஒரு துளையிட்டு நீர் சிந்தச் செய்து, மூன்று சுற்றின் பின் குடத்தண்ணீரோடு பிணத்தின் காலடியில் போட்டு உடைப்பது கொள்ளிக் குடம் உடைத்தல் எனப்படும். இதுவே இங்கு கொள்ளி வைத்துக் குடஞ் சுமப்பதாகக் குறிக்கப்பெற்றுள்ளது.
22. இருளி - இருதுவாகுந் தன்மையில்லாப் பெண். இருதுவான அதாவது பூப்படைந்த பெண்ணுக்கே குழந்தைப்பேறடையும் வாய்ப்புண்டு என்பதால், தான் ருதுவானவள் தானா என்பதிலேயே உலகோர் ஐயுற்று, தன்னை இருளி என்று ஏசுவரோ எனக் கூறுகிறாள்.
23. மலங்கி - குழம்பி, குழப்பமடைந்து.
24. முத்தம் - முற்றம், வீட்டின் உள்ளேயுள்ள முன்வெளி.
25. பெட்டகம் - பெட்டி. மரம் அல்லது இரும்பால் செய்யப் பட்டிருக்கும். இதில் மணப்பெண்ணுக்கு வரிசைகள் வைத்தனுப்புவதுண்டு.
26. தள்ளை - தாய்
27. குழவி - அம்மியில் அரைக்கப் பயன்படுத்தும் கல்
28. முன்னெத்தி - முன் நெற்றி
29. சுரித்தேன் - வற்றினேன்

30. கல்பனை - கற்பனை, கட்டளை.
31. தொட்டு வலக்கை பிடித்துச் சுத்திவந்த பாவம் - திருமணத்தின் போது கணவனின் வலது கைப்பற்றித் தீவலம் வந்த பாவம்
32. சதர் கோடி - சதகோடி, நூறு கோடி, அளவற்ற என்ற பொருளில் வந்துள்ளது.
33. வேதன்-பிரமதேவன். பிரமனின் நான்கு முகங்களிலிருந்து நான்கு வேதங்கள் பிறந்ததால் வேதன் எனப்பட்டான்.
34. பால் கொச்சை - பால் வீச்சம். பால் கவிச்சி. குழந்தைக்குப் பாலூட்டும் மகளிரின் உடையிலிருந்து வரும் பால் வாசனை.
35. சம்பிமுகம் - சுருங்கி முகம்
36. முறத்தால் - முறத்தினால். முறம் - தானியம் முதலியன புடைக்க உதவும் கருவி.
37. நெட்டோலம் - நீண்ட ஓலம், நீண்ட பேரழுகை.
38. அல்லனய - இருள் ஒத்த
39. கிங்கிணி - கிண்கிணி எனவும் படும். குழந்தைகளுக்குப் பாதத்தில் அணியும் சதங்கை.
40. நூல்புரம் - நூபுரம். பாத கிண்கிணி. சிலம்பு.
41. பாவினை - பாவனை, நடையழகு
42. பாவினை - பாவனை. இங்கு எல்லோரையும் போலப் பாவித்து என்ற பொருளில் வந்துள்ளது.
43. அங்கம் - இடம். ஆயுதப் போட்டி நடக்கும் இடம்.
44. சங்கீதம் - இசை. நிகழ்ச்சியைக் கண்ணுறும் இனிமை சங்கீதமாக உருவகிக்கப் பெற்றுள்ளது.
45. மிய்க்க - மெய்ச்ச - மெச்ச, புகழ.
46. உமைதேவர் - உமாதேவியின் கணவரான சிவன்.
47. மின்னனையே - மின்னலை ஒத்தவளே
48. வாய்வெருவி - வாய்பேசப் பயந்து
49. நாட்டுக்குப் பாட்டோலை காட்டாதே - நாட்டாருக்குப் பாடல்கள் எழுதிய ஓலையைக் காட்டாதே. செயலுக்கான காரண, காரியங்களை விரித்துக் கூறவேண்டாம் என்ற பொருளில் வந்துள்ளது.
50. தெப்பெடுத்து - தெத்தெடுத்து, தத்து எடுத்து, பிறர் பிள்ளையைத் தன் பிள்ளையாக. வாரிசாக எடுத்து
51. என்றலையில் பல்லியல்லோ - என் தலையில் பல்லியல்லவா, தலையில் பல்லி விழுவது மரணம் என்பது பல்லி பலன். தத்துப் பிள்ளை மரணத்துக்கு ஏதுவானது என மறுக்கிறாள்.
52. கொத்துக் கோட்டை மச்சேறுமோ - கூலியாகப் பெறும் நெல்

சிறிய அளவினதாதலின் மச்சில் (தானியங்களைச் சேர்த்துவைக்கும் அறை) சேர்த்து வைக்க முடியுமோ என்பதாம்.

53. கொண்ட மோர் கடைவார்களோ - மோராக ஆனதைத் திரும்பவும் கடைவார்களோ. பிறரிடமிருந்து கொள்ளப்பட்ட மோர், அளவில் சிறிதாக இருக்குமாதலின் கடைவார்களோ என்றும் அமையலாம்.

54. கெட்டுப்பொட்டி - கெட்டிப்பெட்டி, உறுதியான பெட்டி, கெட்டி வைத்த பெட்டி.

55. பட்டுப் பருவட்டம் - பட்டுப் பரிவட்டம். பட்டால் நெய்த நேர்த்தியான சேலை.

56. பணிச் சேலை - அலங்காரச் சீலை.

57. கன முதல் - மிகுந்த பணம்

58. பர்த்தா - கணவன்

59. அன்ன சுத்தத்தார் - அன்ன சுற்றத்தார். நிலம் போன்ற சொத்தில் உரிமையுடைய சுற்றியுள்ள பங்காளிகள். மூங்கில் போல் அன்ன சுற்றம் முசியாமல் வாழியதே என்றும் பல கதைப்பாடல்களில் அன்ன சுற்றம் என்ற தொடர் ஆளப்பட்டுள்ளது.

60. படைவீடு - இராசதானி எனப்படும் தலைநகர்

61. ஆதித்த பகவான் - சூரியபகவான்

62. அடையமுது - இனிப்புப் பொருள். அடைப் பாயாசம், இனிப்புச் சோறுமாகலாம்.

63. அரசி - அரசு, அரசமரம்.

64. குரவை - குரவை, குலவை, நாவால் குழறியிடும் ஒலி.

65. தடம் - பாதை

66. வலம்புரிச் சங்கு - வலமாகச் சுழித்துள்ள சங்கு வகை. இது அரிதாகக் கிடைப்பது என்றும், சிறப்பாகக் கருதப்படுவது என்றும் தெரிகிறது.

67. கொய்தகம் - கொய்சகம். ஓரங் கொய்து சுருக்கப்பட்ட உடை

68. எந்தரத்தோர் - என் வயது ஒத்தோர்

69. வல்லவர் - உரியவர், கணவர். இங்கு உதவி செய்ய வல்லவர். எல்லாரும் என்ற பொருளில் அமைந்துள்ளது. தென்மாவட்ட வழக்கு.

70. ஆந்தல் - ஆந்தை. தென்மாவட்ட வழக்கு.

71. சுருதி - ஒத்து, இங்கு மேற்கொண்ட செயலில் ஒத்துள்ளவராக என்ற பொருளில் அமைந்துள்ளது.

72. விடம் - இடம்

73. சடைத்து - வருத்தமுற்று, சோர்வுற்று

74. வேனல் - வெப்பம்

75. சமர்த்து - திறமை

76. வலக்காரம் - தந்திரம்
77. சாத்துகிறேன் - சாற்றுகிறேன், சொல்லுகிறேன்.
78. பீடை - துன்பம்
79. பில்லு - பணச்சீட்டு
80. புள்ளிக்காரி - பணக்காரி
81. வையார் - வைக்கமாட்டார்
82. கச்சிக் களபம் - கச்சணிந்த, கலவைச் சாந்து பூசப்பெற்ற மார்பகம்.
83. ஆச்சி - தாய்
84. கொந்தார் - கொத்தார், கொத்துக்களை உடைய அழகிய.
85. வரையடங்க - மலையடங்க
86. ஆவினங்கள் மேய்த்தவன் - பசுக்கூட்டங்களை மேய்த்தவன், கண்ணன்.
87. பூச்சக்கற்றாடை - பூச்சிக்கராடை. பூச்சட்டை. தெய்வத்திற்குப் பூவினால் செய்தணியும் அங்கி.
88. பொற்கலை - பொன்னால் செய்த மான்
89. அலைவிதம் - அலைய வைத்தல், அலைக்கழித்தல்.
90. கழித்தல் பொன் - ஒரு தங்கநாணயம், ஒன்றே கால் ரூபா மதிப்புள்ள பொன்னாணயம்.
91. மோச்சம் - மோட்சம், நற்கதி.
92. அறுபது போய் - அறுபது வயது போய்
93. கூறாட்டு - கூறாக இட்டு ஆட்டுவித்தல்
94. திருத்தவசி - திருத்தவசு, திருத்தவம்.
95. கவ்வை - காரியம்
96. கயம் - நீர்நிலை
97. தேத்தம் - தேறுதல், தேறுதலான வார்த்தைகள்.
98. கோப்புடைய திருச்செந்தூர் - ஒழுங்கான அமைப்புடைய திருச்செந்தூர்
99. அட்டவந்தனம் - அட்டபந்தனம், கோயிற் சிலைகள் அசைவின்றி யிருக்கும்படி சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமை வெண்ணெய், குங்கிலியம், நாற்காவி ஆகிய எட்டுவிதக் கூட்டுப் பொருட்களை அடியிடத்துச் சாத்துதல் அட்டபந்தனம் ஆகும்.
100. தம்பட்டம் - கோயில் திருவிழா, ஊர்வலங்களில் பயன்படுத்தப் படும் தப்பட்டையாகும். தப்பு, தண்டோரா, தம்பட்டம், தமுக்கு ஆகியவற்றுக்கிடையே பெரிய மாறுபாடுகள் இல்லை. ஒலியால் பெயர்கள் மாறுபடுகின்றன."பறை திமிலை திமிர்தமிகு தம்பட்டம்" என்பது திருப்புகழ் (18).
101. பேரிகை - பேரி எனும் வன்மைக் கருவி. முரசு, திமிலை, கரடிகை,

பதலை, சல்லரி, தவில் ஆகிய கருவிகளுடன் முழக்கப்படும். ஊர்க் காவல், போரில் மிகுதியும் பயன்படுத்தப்பட்டது. திருப்புகழ், கம்பராமாயணம், தேவாரத்தில் இக்கருவி பற்றிய குறிப்புகள் உள்ளன.

102. டம்மானம் - குறுந்தடியால் அடிக்கப்படும் தண்டோல் எனப்படும் கருவி. தண்டோரா போட உதவுவது.
103. நடசாலை - நடக்கும் பாதை
104. திருநாள் - திருவிழா
105. இத்தரை - இத்தனை, தென்மாவட்ட வழக்கு.
106. உத்திரம் - பதில்
107. கதிர்மை - ஒளி
108. வாணாள் - வாழ்நாள்
109. மறுக்கம் - துன்பம், மனக் கலக்கம்.
110. தேறுவாள் - தேறுதல் கூறுவாள்
111. சரப்பணி - வயிர மழுத்தின கழுத்தணிவகை
112. பவுசி - செல்வம், செருக்கு, கௌரவம்.
113. சோருது - சோர்வடைகிறது
114. சப்பிரமஞ்சத்தேர் - மேற்கட்டமைந்த சிங்காரக் கட்டிலுடன் கூடிய தேர்
115. ஒப்பரவு - ஒப்புரவு. நல்பந்தம் (agreement).
116. மாத்து - மாற்று, வண்ணான் வெளுத்த உருப்படி.
117. மறுபதி - மறு இடம், மறுதலம்.
118. காடுமிட்டாள் - காடும் விட்டாள், காடும் கடந்தாள்.
119. அகரம் - அக்கிரகாரம், அந்தணர் வீதி.
120. பல்பனாபுரம் - பற்பனாபுரம், பத்மநாபபுரம்.
121. தெண்டம் - தெண்டனிடுதல், தண்டனிடுதல், மார்பு நிலத்துற விழுந்து வணங்குதல்.
122. பழவினைகள் - முன்வினைகள், முற்பிறவிச் செயல்கள்.
123. பட்டாங்கு - சாத்திரம்
124. மூதாக்கள் - முன்னோர்கள்
125. காவலன் - மனைவியைக் காத்தல் செய்யும் கணவன்
126. ஆலித்தட்டிக்காரர் - ஆலி - பூதம். பெரிய உருவங்களை உட்கூடானவைகளாகச் செய்துகொண்டு உள்ளே ஆள் புகுந்து கொண்டு ஆடுவர். இவ்வமைப்பு ஆலித்தட்டிக்காரர் எனப்படுகிறது.
127. வாகுபெறு - அழகுடைய, சாமர்த்தியம் கொண்ட.
128. காசினி - பூமி
129. பதஞ்சேவித்தேன் - திருவடி வணங்கினேன்

130. ஆலாத்தி - ஆரத்தி
131. கட்டளைப்பூசை - கோயிலுக்கு முக்கிய நிகழ்ச்சி குறித்து ஏற்படுத்தப்படும் தருமபூசை
132. முதல் - மூலதனம்
133. வேண்டி - வாங்கி (தென்மாவட்ட வழக்கு).
134. வலக்காரம் - அதிகாரம்
135. மூன்று முகங் கொண்டாள் - முத்தாரம்மன் எனும் பெண் சிறு தெய்வம்
136. கவுந்து - கவிழ்ந்து, தலை குனிந்து.
137. சுத்தரங்கு - சுற்று மதிலுடன் கூடிய உள்ளறை கொண்ட மாளிகை
138. அத்தியுரித் தாடைசாற்று மரசன் - யானைத் தோலை உரித்து ஆடையாக உடுத்திய சிவபெருமான்
139. குரவையொலி - முக்கிய நிகழ்ச்சி நடக்கும் காலங்களில் மகளிர் நாவாற் குழறி இடும் மகிழ்ச்சியொலி
140. கெருவிதம் - கர்வம், செருக்கு.
141. காயம் - உடல்
142. கசை - பசை (செல்வமாகிய பசை)
143. அகுதி - அகதி, கதியற்றோர்.
144. நடு - மையம், முக்கியம்.
145. மாசாந்தம் - மாதாந்தம், மாதந்தோறும்.
146. சென்னியுள - தலை நிலந் தோய
147. பித்த மீறி - மயக்கம் கொண்டு. மேற்கொள்ளும் செயலால் வெற்றி விளையுமா என்று சிந்தித்துப் பாராமல் மனமயக்கம் கொண்டு.
148. தாமசம் - தங்கியிருத்தல் (தென்மாவட்ட வழக்கு).
149. பாக்கிசம் - பாக்கியம், நல்வினை.
150. குதிரை மேலாள் - குதிரையின் மேல் ஆள் அமர்ந்திருப்பது போன்ற உருவச்சிலை
151. கரும்பனை - கரமனை
152. திருவிளம் - திருவுளம். இறையின் உள்ளம்.
153. கூழயாய் - கூழையாய், குட்டையாய்.
154. முத்திரி - முத்திரை
155. நன்னாஞ்சி - நன்நாஞ்சி, நல்ல நாஞ்சில்.
156. பஞ்சவர்கள் - பஞ்ச பாண்டியர்கள் எனப்படும் ஐவர் ராசாக்கள்
157. காரு - கார் நெல்
158. கலி - துன்பம்
159. பேடி - அச்சம். (தென்மாவட்ட வழக்கு).
160. திருவுரு - உருவ பொம்மை

161. இடைக்கிடை - எடைக்கு எடை
162. முகித்து - முடித்து
163. திருநாள் - திருவிழா
164. மாதாந்தக் கட்டளை - மாதந்தோறும் கோயிலில் சிறப்புப் பூசைக் கென ஏற்படுத்தப்படும் தருமம்.
165. விட்டிளகி - விட்டேகி
166. அடப்பம் - அடைப்பம், தாம்பூலப்பை.
167. தம்புரான் - தம்பிரான், கடவுள்.
168. அடியாள் - தொண்டு செய்பவள்
169. வச்சிரமணி மேடை - வயிரக்கல் மேடை
170. அருந்தவிசாய் - அருந்தவசாய்
171. அம்பலம் - கோயில்
172. சியல் - செயல்
173. கொத்து - தானியமாகக் கொடுக்கும் கூலி
174. பட்டறை - தானியம் குவித்து வைக்கும் இடம்
175. பதர் - உள்ளீடற்ற நெல்
176. நீர்ச்சாவி - வெள்ளக் கெடுதியால் உண்டாம் நெற்பதர்
177. அடைக்கலம் - அடைக்கலப் பொருள் (ஒப்புவிக்கப்பட்ட பொருள்)
178. ஏறாது - ஏற்காது (பொருந்தாது)
179. மருதுணிகள் - மருதூணி - மருதோன்றி (செடிவகை)
180. காவு - சோலை
181. மட்டுத்தப்பு - நிதானமின்மை
182. உம்பளம் - உப்பளம்
183. அலம்பல் - துன்பம்
184. பூச்சியம் - இன்மை (ஒன்றுமில்லாமை)
185. பருவரை - பெரிய மலை
186. கவ்வை - துன்பம்
187. குமடு - மலைப்பக்கம்
188. தடவரை - அகன்ற மலை
189. மாறி - அகன்று, தள்ளி (தென்மாவட்ட வழக்கு).
190. பிறங்காணித்து - புறமுதுகு காட்டி, பின்புறம் காட்டி.
191. மடிபிடியாய் - ஆடை பற்றி (விரைவாக உடன் கொண்டு)
192. குத்தி - குற்றி = மரம் (மரத்தில் செய்த குடுவை)
193. அடக்காய் - அடைக்காய் = வெற்றிலை பாக்கு.
194. பழுத்திலை - பழுத்த இலை
195. தரந்தரம் - தரம் = வகுப்பு, பிரிவு. இங்கு வகைவகையாக என்ற பொருளில் அமைந்துள்ளது.
196. நிறை நாழி - மங்கலக் குறியாக நெல்வைத்து நிரப்பிய நாழி
197. குறி - முன்னறிந்து கூறும் நிமித்தம்

198. தந்திமுகத்தைங்கரன் - தந்தம் கொண்ட முகமும், துதிக்கையுடன் கூடி ஐந்து கரமும் உடைய விநாயகர்
199. விடலை - இளநீர்
200. சண்டாமிர்தம் - சண்டமாருதம் = பெருங்காற்று. இங்கு மிகுதியாக என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.
201. வந்துதகுவாய் - வந்து உதவுவாய்
202. கோசிகனார் - கௌசிக முனிவர்
203. நமன் - எமன்
204. வலக் கெவுளி - வெற்றிதரும் பல்லி (பல்லி கூறிய நற்சகுனம்)
205. தோத்தாய் - தோற்றாய்
206. காரணவர் - முன்னோர்
207. ஏது - காரணம்
208. அந்தம் - அழகு
209. அயல் - அருகிலுள்ளோர்
210. ஆசாரம் - செய்கின்ற முறைப்படி செய்தல்
211. குடுக்கைமுட்ட - தேங்காய், சுரைக்காய் முதலியவற்றாலான குடுவை நிறைய.
212. கஞ்சம் - தாமரை
213. காறை - பெண்களும், குழந்தைகளும் கழுத்தில் அணிந்து கொள்ளும் ஒருவகை அணி.
214. பூசணங்கள் - அணிகலன்
215. மஞ்சு - இளமை, அழகு.
216. ஆதித்தவேளை - சூரியன் உதிக்கும் வேளை.
217. பத்தி -பற்றி
218. ஒட்டுதில்லை - விருப்பமின்மை
219. சரப்பளி - சரப்பணி, (கழுத்தின் வகை).
220. முப்பதுஞ் சென்றால் - முப்பது வயது கடந்தால்
221. முட்டுப்பட்டு - இடர்ப்பட்டு
222. சீத்துவக்கேடி - திறன் கெட்டவள்
223. சூத்தை - சொத்தை
224. குறட்டாடு - குள்ள ஆடு
225. ஊதியங் கெட்ட - பயனில்லாத
226. சுணை - சுரணை
227. இத்தரசோலி - இத்தனை வேலை
228. தெற்பம் - தெப்பம் = மிதவை.
229. மகரதோரணம் - மீன் வடிவாயமைந்த ஓரலங்காரத் தொங்கல்
230. பூத்தல விதானம் - பூவேலைப்பாட்டுடன் கூடிய மேற்கட்டி
231. மந்தாரம் - மந்தாரை மலர்

232. வாரிட்ட - முலைக்கச்சணிந்த
233. கண்ணாளர் - கம்மாளர் (தட்டான், கன்னான், சிற்பன், தச்சன், கொல்லன் முதலானோர்)
234. கதிர்நொடி - சூரியன் உதிக்கும் நொடிப் பொழுது ஆகலாம்
235. சம்பா - உயர்தர நெல்வகை
236. முந்தி - முந்தானை
237. துவராமல் - காயாமல்
238. அசனம் - உணவு
239. குஞ்சி - ஆடவரின் தலைமுடி
240. வெட்டுவாளி - வெட்டுக்கிளி?
241. குகை - உலோகங்களை வைத்தூதும் கலம்
242. குஞ்சி - குஞ்சு
243. கோவில் - அரண்மனை
244. திருப்பூ - மாதவிலக்கு
245. வெயில் வெறிக்கும்போது - மழை நின்று வானம் தெளியும்போது
246. விறி - வெறி
247. கிறக்கிடும் - மயக்கிடும்
248. சத்திப்பு-சர்த்திப்பு=வாந்தி (தென்மாவட்ட வழக்கு).
249. வேலை - வேல் (ஆயுதம்)
250. கிறாவி - குறாவி, வாடி மெலிந்து.
251. மஞ்சணை - சில சாதி மகளிர் கழுத்திலும், சிறு தேவதைகளின் உருவங்களிலும் பூசப்படும் எண்ணெய்க் குங்குமம்.
252. அனர்த்தம் - துன்பம்
253. சோதித்து - விசாரித்து (தென்மாவட்ட வழக்கு).
254. லெச்சை - கூச்சம், வெட்கம்.
255. பட்டாங்கு - உள்ள நிலைமை
256. மறுக்கம் - துன்பம்
257. மொழிகள் - விரல் மூட்டுகள்
258. சழன் - துன்பம்
259. படம் - பாதத்தின் முன்பகுதி
260. கட்டுவிட்டு - தேகக்கட்டு விட்டு
261. வலித்துக்கொண்டு - வலிந்துகொண்டு = பலவந்தமாக வரவழைத்துக் கொண்டு
262. பொங்காலை - பொங்கல்
263. கொம்பனரிசி - ஆனி, புரட்டாசி மாதங்களில் விதைக்கப்பட்டு 5 மாதங்களில் விளையும் சம்பா நெல்வகை.
264. நிறைமரக்கால் - முகத்தலளவைக் கருவிவகை. நான்கு படி (நாழி) கொண்டது ஒரு மரக்கால். இந்த மரக்கால் நிறைய நெல் அளந்து வைப்பது நிறை மரக்கால் எனப்பட்டது.

265. திவசம் - நாள். (தென்மாவட்ட வழக்கு).
266. மொழுகி - மெழுகி
267. பணி - அணிகலன்
268. கொப்பு - மகளிர் காதணி வகை
269. கடையம் - கடயம் = கடகம் = கங்கணம்.
270. மதன் - மன்மதன்
271. உத்தரீகம் - உத்தரீயம் = மார்பிலும், முதுகிலும் அணியும் படங்களுள்ள இரு துணித்துண்டு
272. விதப்பலகை - விசிப்பலகை, ஊஞ்சற் பலகை.
273. கூற்றையுதைத்தோர் - எமனைக் காலால் உதைத்த சிவன். மார்க்கண்டேயன் கதை இங்கு சுட்டப்பெற்றுள்ளது.
274. கோது குலம் - கோதுகம் = உள்ளக்களிப்பு.
275. அந்தர் - உயர்ந்தோர்
276. விஸ்தாரம் - வித்தாரம் = விரிவு.
277. ஈத்துப்புரை - ஈனும் அறை, குழந்தை பெறும் அறை.
278. மாந்தையர் - தச்சுவேலை செய்வோர்
279. ஆசாரிமார் - மரவேலை செய்யும் இனத்தார்
280. பணிப்படுத்தி - வேலை செய்தல். இங்கு வேலை செய்வதற்கு ஏற்றபடி துண்டாக்குதல் என்ற பொருளில் வந்துள்ளது.
281. நாட்கால் - முகூர்த்தக்கால்
282. நல்லவளை - நல்ல உத்திரம்
283. வெகுமானம் - வெகுமதி
284. பார்ப்பார்கள் - பார்ப்பனர்கள் = அந்தணர்கள்.
285. கொண்டிற்கூலி - மிகுதியான கூலி
286. நாழிகை - அப்போதே, உடனே என்ற பொருளில் வந்துள்ளது.
287. சிறுக்கன் - சிறு பையன். குழந்தைப் பருவம் - வாலிபப் பருவத்துக்கு இடைப்பட்ட நிலையினன்.
288. கச்சை கெட்டி - ஆடையை இறுகக் கட்டி
289. கழஞ்சு - பன்னிரண்டு பணவெடை கொண்ட நிறை (பணவெடை = பணவிடை = வராகனிலொன்பதிலொரு பங்கு. வராகன் - மூன்றரை ரூபாய் மதிப்புள்ளதும் பன்றி முத்திரை கொண்டதுமான ஒருவகைப் பொன் நாணயம்.
290. முத்தம் - முற்றம்
291. சிலவடவா - சிலவு அடைக்காது (சிலவு = பொந்து, ஓட்டை).
292. இருப்பிளகி - இருந்த இடத்திலிருந்து எழுந்து
293. ஓட்டன் - ஓடிச்சென்று செய்தி தருபவன்
294. குன்றிமணி - குன்றிச் செடியின் சிவப்பு விதை
295. காதம் - நாலு கூப்பிடு கொண்ட தூரம்

296. தாமசம் - தாமதம்
297. நகட்டி - அகன்று
298. உதக - உதவ
299. பதிவு - வழக்கம் (தென்மாவட்ட வழக்கு).
300. ஒட்டிரெட்டி - ஒன்றுக்கு இரண்டு
301. எதிப்பு - எதிரே வருவது (சகுனம் பார்த்தல்).
302. சல்லி - சிறுகாசி, 1/2 அணா.
303. ஈடு - பிரதி. பணம் பெறுதற்குப் பிரதியாகப் பிறபொருளை ஈடாக வைத்து என்ற பொருளில் அமைந்துள்ளது.
304. பரிவட்டம் - துணி
305. பொன் - ஒன்றேகால் ரூபாய் மதிப்புள்ள பொன் நாணயம்
306. திருவன் உறை - அழகிய உறை
307. குறுணி - எட்டுப்படி கொண்ட தானிய அளவு
308. விசாரம் - கவலை
309. தட்டு - சுற்று
310. சுங்கான் - புகை குடிக்கும் குழாய்
311. விசர்ப்பாள் - வியர்ப்பாள்
312. நடு - நடுநிலை
313. கிலேசம் - துக்கம்
314. தடை - தண்டு
315. லெக்கு - இலக்கு = அடையாளம்.
316. சனித்த - உண்டான
317. நுன்பப்பட்டே - நொம்பலப்பட்டே = துன்பப்பட்டே.
318. அமத்திடுவார் - அமைதிப்படுத்திடுவார்
319. குமுர்தக்குடம் - கர்ப்பப் பையிலுள்ள தண்ணீர்க் குடம் என்று கூறப்படும் அமைப்பு இவ்வாறு குறிக்கப் பெற்றுள்ளது.
320. அவையம் - அபயம் = அடைக்கலம்.
321. கும்பிக்கடி - வயிறுகடி (வயிற்று வேதனை)
322. குண்டனி - குறளைச் சொல் = கோட்சொல்.
323. தொப்பாடை - பிறந்த குழந்தையின் மேலிருக்கும் சளி போன்ற பொருள்
324. தங்கடங்கள் - தன் கடன்கள், தன் கடமைகள்
325. வார் - நீளம், மேகம்.
326. வாச்சி - வாச்சாத்து எனப்படும் வெட்டுங் கருவி
327. சீத்துவம் - திறன்
328. சங்கை - கனம்
329. முகிழ்த்தம் - முகூர்த்தம்
330. முத்தமிளக்கி - முத்தம் அளித்து

331. சாலுகை - சால்வை = மயிர்க்கம்பளம்.
332. ஒக்கரை - ஒக்கலை = இடுப்பு.
333. ஆயன் - ஆசான், ஆசிரியர்.
334. கொத்தவர் - கொற்றவர், அரசர்.
335. தாடாளன் - மேன்மையுள்ளவன், பெருமுயற்சியுள்ளவன்.
336. பணிக்கன் - படைக்கலம் பயிற்றுவோன்
337. சிரம்பம் - சிலம்பம் = கழிவீசுதல் முதலிய படைக்கலப் பயிற்சி.
338. அடவு - அடைவி = முறை.
339. நீட்டு - திருமுகவோலை
340. தகையாறாமல் - இளைப்பாறாமல்
341. போல்லாமென்றார் - போகலாமென்றார்
342. தகடப் பொந்தி - மரத்தினால் செய்த வாள்
343. கட்டாரி - குத்துவாள்
344. விருது - வெற்றிச் சின்னம்
345. சாயமுச்சை - சாயரட்சை = மாலைப்பொழுது.
346. முகி - முடி
347. தடவரை - அகன்ற மலை
348. விலாசம் - விசாலம் = அகலம்.
349. சல்லடம் - இடுப்பிலிருந்து அடித்தொடை வரை தரிக்கும் காற்சட்டை
350. பகுந்து - வகுந்து, பிரித்து.
351. வாய்த்தாரம் - மிகுந்த ஒலியுடன் வார்த்தைகளைக் கூறி
352. கவடு - அடிவைப்பு
353. திருக்கப் பரிசை - கேடய வகை
354. கட்டியல் - அழகிய வேலைப்பாடு மிக்க ஒரு ஆயுத வகை
355. முன்னந்தம் - முன்பார்வை
356. புருஷம் - புருடப்பிரமாணம் = நான்கு முழு நீளம்.
357. மண்டி போட்டு - முட்டி போட்டு
358 சக்கப் போருகள் - சக்கைப் போருகள், வெற்றுப்போர் (வெறுமனே சண்டை செய்தல்).
359. சபர்தம் - சபதம் = சூளுரை, பந்தயமிடுதல்.
360. பிறத்திலே - பின்புறத்தில்
361. கூண்டு - கூடி
362. வன்னியர் - கள்ளர் முதலிய சாதியாரின் பட்டப்பெயர்
363. பூரையிட்ட - அலுப்பிட்ட
364. பூரே பூரே - பூரை பூரை = போதும் போதும்
365. தண்டிகை - பல்லக்கு வகை
366. குப்பாயம் - சட்டை

367. பாளயம் - பாளையம் = பாசறை.
368. தண்டக்காரர் - வேலைக்காரர்
369. ஆரிய நாடு - ஆரியவர்த்தம் = இமயத்துக்கும் விந்தத்துக்கும் இடையிலுள்ள தேசம்.
370. வல்லயக்காரர் - ஈட்டி ஏந்துபவர்
371. சங்கை - வழக்கம்
372. தாயக்காரன் - கொடையாளி
373. போதம் - அறிவு
374. சிங்கிகள் - நாணமற்றவர்கள்
375. கட்டச்சி - குட்டையானவள்
376. சித்திரம் - அழகு
377. மருந்து - வசிய மருந்து
378. அகம்புடையான் - அகமுடையான் = கணவன்.
379. கருப்பு வில் - கரும்பு வில்
380. முருக்கிதழ் - சிவந்த இதழ்
381. பிடாகை - உட்கிடையூர்
382. வெள்ளாவி - ஆடையை வெளுக்க உதவும் நீராவி
383. பதி - இடம்
384. கையாச்சை - கையாட்சி = தொழில்.
385. காணி - பரம்பரை யுரிமை
386. துவரை வண்ணான் - துவரவண்ணான். வண்ணாருள் ஒரு வகையினர்.
387. வாலசிங்கன் - இளம் பருவத்தான்
388. கருவலம் - கருவூலம் = பொக்கிசம் (செல்வம்).
389. வார்ப்புருக்கி - இரும்பு முதலான உலோகங்களை உருக்கி வார்த்து
390. அச்சு - உருள் கோத்த மரம்
391. குமிழ்மூக்கு - உருண்டு திரண்ட மூக்கு
392. பச்சுடம்பு - வளமான உடம்பு
393. ஒப்பினை - ஒப்பனை = அணி செய்தல்.
394. ஏற்றாப்பு - ஏத்தாப்பு = மேலாடை.
395. சாமத்தியம் - சமைதல், பக்குவம், பருவம், வயதுக்கு வருதல்.
396. மூக்கறையர் - குறை மூக்குள்ளவர்
397. முகடர் - மூடர் = அறிவற்றவர்.
398. வண்டர் - வண்டத்தனம் (குறும்பு) செய்வோர்
399. சல்லாரிச்சேலை - அலசற் சீலை
400. பணிச்சேலை - வேலைப்பாடுள்ள சீலை
401. பருக்கன் - பரும்படியானது
402. பருமுறி - முரடான வேட்டி வகை

403. துப்பட்டி - போர்வை, மேல்விரிப்பு.
404. தலப்பாளுருமால் - தலைப்பாகை
405. பச்சரி - பச்சரிசி
406. குழிதாழி - குழிந்த பெரிய பானை
407. கோட்டானை - கழுதை
408. கொம்பனையாள் - சாமர்த்தியமுடையவள்
409. கலுங்கு முகம் - கலிங்கு = நீர் வழியும் அணைக்கட்டு முகம்.
410. தருவை - பெரிய ஏரி
411. கோடி - வரிசை
412. சாணாகம் - சாணம், சாணி.
413. அப்பு - தண்ணீர்
414. பிடிவை - புடவை
415. பூத்தானம் - அருமை பாராட்டுகை
416. தனுப்பு - குளிர்ச்சி (தென்மாவட்ட வழக்கு).
417. கெவுளி - கவுளி = பல்லி.
418. கோட்டான் - கூகை
419. வெருகு - ஆண்பூனை (காட்டுப்பூனை)
420. போறாது - போதாது
421. பொங்காரம் - பொங்குகை
422. கசவு - சரிகை (தென்மாவட்ட வழக்கு).
423. முந்தாங்கி - முந்தானை
424. பிடி - பெண்யானை
425. மண்டலீகர் - அரசர்
426. கொண்டங்கிளாத்தி - கொண்டலாத்தி = குருவி வகை.
427. சிட்டு - சிட்டுக்குருவி
428. கொப்பு - மகளிர் காதணி வகை
429. ஆசார வார்த்தைகள் - வழக்கமாய்ப் பேசிக்கொள்ளும் வார்த்தைகள்
430. துடர்ந்தது - தொடர்ந்தது
431. கொட்டார வாசல் - அரண்மனை வாசல்
432. கெண்டை - கெண்டைமீன்
433. நெறுத்தாதே - நிறுத்தாதே
434. பூவணை - பூமெத்தை
435. மோடி - செருக்கு
436. பறைந்நீரே - சொன்னீரே
437. மெய்க்க - மெச்ச
438. வண்டத்தனம் - குறும்பு
439. கசுமாலி - அசுத்தமுள்ளவள்

440. விசனம் - துக்கம்
441. பத்தி - பற்றி
442. ஆசாரம் - ஒழுங்கு
443. வேள் - மன்மதன்
444. வழமை - வழக்கம்
445. அலகை - பேய்
446. வாச்ச - வாய்த்த
447. வாடையுடை - குளிர்ந்த உடை
448. ஏலநெடும் - மிகுந்த நெடிய
449. செறுத்து - தடுத்து
450. புனம் - மலைசார்ந்த காடு
451. கிஞ்சுக வாயஞ்சுகமே - சிவந்த வாயுடைய கிளி
452. தானம் - இடம்
453. உகம் - யுகம்
454. அயன் - பிரமன்
455. கல்பனை - கற்பனை = கற்பித்தது, காரிய ஏற்பாடு.
456. மல்பொரவும் - மற்போர் செய்யவும். துணிவெளுத்துத் துயருறுதல் இவ்வாறு குறிக்கப்பெற்றுள்ளது.
457. அம்மான்மார் - தாயுடன் பிறந்தவர்
458. ஆகெடியம் - ஆகடியம் = பரிகாசம்
459. சலுவை - சலவை = துணி வெளுத்தல்.
460. உத்திரம் - உத்தரம் = மறுமொழி.
461. சுத்தியல் - கம்மாளர் கையாளும் கருவி
462. ஏழைமதி -ஏழையறிவு (குறைந்த அறிவு என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது).
463. தர்க்கிச்சி - தருக்கித்து
464. மெட்டித்தனம் - மேட்டிமைத்தனம் =- அகந்தைக் குணம்
465. அட்டி - மறுத்தல்
466. ஆலத்தி - ஆரத்தி
467. தொட்டியர் - தெலுங்கு தேசத்தில் உழவுத்தொழில் செய்துவந்த, மதுரை நாட்டில் நாய்க்கன் என்ற பெயர் கொண்டு வாழும் ஒரு சாதியார்.
468. பரிசைக்காரர் - கேடகம் பிடிக்குந் தொழிலாளிகளின் வமிசத்திற் பிறந்த சாதியார்
469. தெக்கித்து - தென்பாகத்து
470. சேவுக்கள் - சேவகம் செய்பவர்
471. விரசாய் - விரைவாய்
472. பன்னகசாலை - பன்னசாலை = பர்ணசாலை = இலைவேய்ந்த குடில்.

473. வந்தி - வணக்கம்
474. சுத்து கையில் - சூழ்ந்து
475. பரம்பு - மூங்கிற்பாய்
476. பரத்தி - நெய்தல் நிலப்பெண்
477. பல்லியம் - பல்வகை வாத்தியங்கள்
478. நாற்பதுமா - 400 குழி நிலம்
479. குறிச்சூர் - குறித்த ஊர்
480. முடுகு - அரக்கால் செய்யப்பட்ட கங்கணம்
481. வலுமை - பலம்
482. கோசிமை - நியாயந் தீர்க்கின்றமை?
483. வீரவாளி - வீர அம்பு
484. முண்டு - சிறுவேட்டி
485. தொங்கல் - தொங்கவிட்டுள்ள ஆடை, முந்தி.
486. தாயிற்று - தாயித்து = தாயத்து = மந்திரத்தகடு அடங்கிய அணி.
487. கடயம் - கடகம் = கங்கணம்.
488. கடுக்கன்- ஆடவர் காதணி
489. சமுதாடு - ஈட்டி வகை
490. தூவட்டம் - ஏத்தாப்பிலுள்ள தொங்கும் அழகிய வேலைப்பாடு
491. ஏத்தம் - ஏத்தாப்பு
492. வட்டுவம் - வெற்றிலை முதலியன வைக்கும் பை
493 பாரவளை - சக்கராயுதம்
494. வளைதடி - எறியாயுத வகை
495. கட்டாரி - குத்துவாள்
496. சொட்டை உடைவாள் - வளைந்த வாள் வகை
497. குறடு - செருப்பு
498. களபம் - கலவைச் சாந்து
499. அம்புறாணிக்கூடு - அம்பறாத் தூணி, அம்புக் கூடு.
500. வெண்டாயம் - வெண்டையம் = சதங்கை.
501. மேர்வை - மேருவை
502. செட்டு - வியாபாரம்
503. ஆக்கிரமம் - வலிந்து கவர்தல்
504. வங்கு - சொறி
505. வங்கம் - வறுமை
506. பரிசி - தூய்மைத் தன்மை
507. பக்ஷம் - பட்சம் = அன்பு.
508. வில்லும் - விற்றுக்கொள்ளும்
509. பெட்டி - பட்டி = நாய், விபசாரி.
510. வெட்டாவெளி - வெட்டவெளி

511. கோழியல் - சத்தற்றது
512. கப்பி - நொய்
513. அறாமல் - பிரிக்காமல்
514. தேட்டம் - சேகரிக்கப்பட்ட பொருள்
515. ஊட்டு - உணவு
516. வக்கணம் - நிந்தை
517. விசழம் - விசயம் = செய்தி.
518. மசக்க - மயக்க
519. உருத்து - அக்கறை (பேச்சு வழக்கு).
520. உச்சாயம் - உயர்வு
521. கொந்து - கொத்து
522. கூண்டோமம் - கூடி ஓமம்
523. ஆளி - யானையாளி, யானையும், சிங்கமும் இணைந்தது போன்ற விலங்கு.
524. கதின்மை - கதிமை = பருமை.
525. குமடு - குவடு, குன்று, மலையுச்சி.
526. பயங்காரம் - பயங்கரம், அச்சமூட்டுபவை.
527. ஏலாத - இயலாத
528. கடுவாய் - கழுதைப்புலி
529. கப்பரை - கிடாரம் = பெரியபாஷனை
530. கூளி - குள்ளப்பூதம்
531. ஏது - காரணம்
532. சுளிக்க - வருந்த
533. சுணைக்கேடு - சுரணைக்கேடு
534. பறத்தி - பறக்க வைப்பது
535. எழுப்பி - எழுப்புவது
536. உறவாட்டி - உறவாட வைப்பது
537. ஸ்திரு - ஸ்திரி = பெண்
538. அடந்தேடி - அடர்ந்தேடி, அடர் = வருந்துகை.
539. பலிப்பு - பயன்தருதல்
540. காராக்கள் - நாக்கும், முலைக்காம்பும் கருநிறமாக உள்ள பசுச்சாதி
541. லக்காக - இலக்காக = குறிபார்த்து.
542. பறியநின்ற - தூர நின்ற
543. மறுகுதல் - சுழலுதல்
544. வாது - தருக்கம்
545. கவடி - கபடமுள்ளவன்
546. பரமாத்தி - பரமார்த்தி = மேலான பொருள்.

547. பூப்படை - பூப்பலி, மலரர்ச்சனை.
548. மூப்பன் - ஒருசார் சாதிகளின் தலைமைக்காரன்
549. ஏக்கறைத் தெய்வங்கள் - ஏக்கறவு = இச்சை-இஷ்ட தெய்வங்கள்.
550. முட்டாங்கு - முட்டாக்கு, தலையில் துணியிடல்.
551. கிடவாமலே - படுக்காமலே (தென்மாவட்ட வழக்கு).
552. அயிராணி - இந்திராணி
553. கவ்வை - துன்பம்
554. சழக்காரன் - தீயவன்
555. அனுபோகம் - இன்பநுகர்ச்சி
556. வண்டி மலயன் - வண்டி மலையன் - சிறுதெய்வம். இச்சிறு தெய்வம் போன்றவனாகச் சிவனணைஞ்ச பெருமாள் குறிக்கப் பெறுகிறான்.
557. சிந்து - இசைப்பா வகை
558. கொச்சைப் பேச்சு - இழிந்த பேச்சு
559. கூவல் - கிணறு
560. குளிபோடி - மூழ்கி
561. திட்டிவாசல் - பெரிய கதவுகள் சாத்தப்படும்போது, உட்செல்வதற்கு அமைக்கப்படும் சிறிய நுழைவாயில்.
562. வாசமிட்டு - வசிப்பதைவிட்டு
563. சர்கம் - சாறு
564. மறுகாதே - சுற்றாதே
565. சூதகமாயிருத்தல் - தீட்டாக இருத்தல்
566. வேற்றொழுக - வேர்த்தொழுக
567. மாறுகண்ணி - மாறுகண் உடையவள்
568. பிலக்காரர் - பலக்காரர் = பலமுடையவர்.
569. பதிவு - பதுக்கம்
570. தொண்டி - களவு போன பொருள்
571. பகட்டி - அதட்டி
572. பரமார்த்தம் - உண்மைப்பொருள்
573. அன்னா - அந்தா (அதோ).
574. பட்டிநாய் - பசு, ஆட்டுக்கிடைக் காவல் நாய்.
575. மாச்சிமை - மாட்சிமை, அழகு.
576. கெய்த்துப்பேய் - கெத்துப்பேய் (கெத்து = தந்திரம்).
577. பொட்டிமகள் - வேசிமகள்
578. கெருவிதம் - கர்வம்
579. கள்ளி - திருடி
580. கன்மம் - கருமம் (வினை).
581. தொம்பர வண்ணாத்தி - பலருடன் தொடர்புடையவள் என்ற பொருளில் இங்கு ஆளப்பட்டுள்ளது.

582. பங்கப்படுவாய் - அவமானப்படுவாய்
583. வாய்த்தாரம் - வாயால் பேரொலி எழுப்பி
584. உண்டசோற் - உண்ட சோறு
585. வேதை - வேதனை
586. அவத்தம் - அபத்தம்
587. சமுதாடு - ஈட்டிவகை
588. திவலகள் - திவலைகள் = மழை.
589. பாச்சலாய் - பாய்ச்சலாய்
590. கழங்கம் - சூதாடுகருவி
591. பரிசு - பெருமை
592. மட்டித்தொழில் - ஒழுங்கீனமான தொழில்
593. சிரிப்பாணி - சிரிப்பு
594. கர்ணகையாள் - கண்ணகி
595. கரையாளர் - கிராமக் கரைப்பங்குக்கு உரியவர்
596. விண்ணாந்து - ஏமாந்து
597. மண்ணாட்டு - மன்றாட்டு = விரும்பி வேண்டுகை.
598. மறுதியக்கம் - மறுமுறையும் மனச்சஞ்சலமடைதல்
599. சளம் - துன்பம்

* * *

## சமூகக் கதைப்பாடல்கள் - அகரவரிசைப் பட்டியல் *


1. அண்ணன்மார் சுவாமி கதை, பதிப்பாசிரியர். சக்திக்கனல், வெற்றி வேல் பதிப்பகம், கோயம்புத்தூர், 1977.
2. அரவமுத்து வீரன் கதை, பதிப்பாசிரியர். முனைவர்.சூ.நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998
3. அழகுத்தேவர் கதைப்பாடல், பதிப்பாசிரியர். ச.முருகானந்தம், தேன் மழை வெளியீடு, ஆகஸ்டு, 1991.
4. அனந்தாயி கதை, வெளியாகியுள்ளது, பிற விவரங்கள் தெரியவில்லை.
5. ஆந்திரமுடையார் கதை, வெளியாகவில்லை.
6. இலட்சுமி அம்மன் தவநிலை, வெளியாகவில்லை.
7. ஈனமுத்துப் பாண்டியன் கதை, பதிப்பாசிரியர். மு.சண்முகம்பிள்ளை, தமிழாய்வு, தொகுதி-3, பக்.iv, சென்னைப் பல்கலைக் கழகம், 1974.
8. உடையார் கதை, கூடல் பப்ளிஷர்ஸ், 1980.
9. எட்டுவீட்டுப் பிள்ளைமார் கதை, வெளியாகவில்லை.
10. கருவலங் காத்த பெருமாள் கதை, வெளியாகவில்லை.
11. காத்தவராயன் கதைப்பாடல், பதிப்பாசிரியர். நா.வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம்.
12. குமாரசுவாமி நாடார் கதை, ப.யோ. தங்கசுவாமி, தங்கம் பதிப்பகம், சென்னை, 1993.
13. குருக்குளாஞ்சி கதை, (The Wandering Vioce) பதிப்பாசிரியர். முனைவர். இரா.நிர்மலாதேவி, ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, 1987.
14. கௌதல மாடன் கதை, டாக்டர். நா.வானமாமலை, Studies in Tamil Folk Literature, NCBH, Madras, 1969, Page 120.
15. சிதம்பர நாடார் கதை, பதிப்பாசிரியர். சு.தங்கத்துரை, ஸ்ரீபரந்தாமன் பிரிண்டர்ஸ், நாகர்கோவில், மே, 1982.
16. சிவனணைஞ்ச பெருமாள் கதை, பதிப்பாசிரியர். முனைவர் சூ.நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
17. சின்னண்ணன் சின்னச்சாமி கதை, பன்னீர்செல்வம், புலமை, 7:1, 81-95, சென்னை, 1981.


---

* தொகுப்பிற்கு ஆய்வுக்கோவைகள், தமிழில் கதைப்பாடல் (டாக்டர் ஏ.என். பெருமாள்), தன்னனானே (கதைப்பாடல் சிறப்பிதழ், ஜன.1997) என்ற நூல்கள் துணைசெய்தன. சுவடி, வில்பாட்டு வடிவில் பதிவானவை மட்டும் இத்தொகுப்பில் அடக்கப்பட்டுள்ளன.

18. சின்னத்தம்பி கதை, (The Wandering Vioce) பதிப்பாசிரியர். முனைவர் இரா.நிர்மலாதேவி, ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, 1987.

19. சின்ன நாடான் கதை, டாக்டர் நா.வானமாமலை, Studies in Tamil Folk Literature, Page 120, NCBH, Madras, 1969.

20. செண்பகமாற பாண்டியன் கதை, வெளியாகவில்லை.

21. சின்னாண்டி கதை, ஓர் அறிமுகம், 18ஆவது ஆய்வுக்கோவை, தொகுதி3, பக்.195-199, ஈரோடு,1986.

22. தடிவீர சுவாமி கதை, பதிப்பாசிரியர். முனைவர். சூ.நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

23. தம்பிமார் கதை, பதிப்பாசிரியர். டாக்டர். தி.நடராசன், & சர்வேஸ்வரன், சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 1977.

24. தோட்டுக்காரி கதை, பதிப்பாசிரியர். முனைவர். வ.அலமேலு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மார்ச், 1995.

25. நந்தனார் கதை, வெளியான விவரம் தெரியவில்லை.

26. நல்லதங்காள் கதை, புகழேந்திப்புலவர், பத்மநாப விலாசம், சென்னை, 1949.

27. பச்சையம்மாள் கதை, வெளியாகவில்லை, பிற விவரங்கள் தெரியவில்லை.

28. பலவேச சேர்வைக்காரன் க்தை, The Unsung Melodies, ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, 1989.

29. பளிச்சியம்மன் கதை, டாக்டர் நா.வானமாமலை, முத்துப்பட்டன் கதைப் பதிப்பு முன்னுரையில் (மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு, அக்.1971) விளக்கியுள்ளார்.

30. பிச்சைக்காலன் கதை, இராஜா தம்பையா நாடார், சூரன்குடி.

31. புருஷாதேவி கதை எனும் பெண்ணரசியர் கதை, பதிப்பாசிரியர்கள். டாக்டர். கி. ஜெய்குமார், திரு. த. பூமிநாகநாதன், ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, மார்ச், 1995.

32. புலமாடன் கதை, வெளியான விவரம் தெரியவில்லை.

33. பூலங்கொண்டாளம்மன் கதை, அணஞ்ச பெருமாள் புலவர், ஆறுமுகப்பெருமாள் நாடார் வெளியீடு, அகத்தீசுவரம், 1977.

34. பெரியண்ணன் சின்னண்ணன் கதை, வெளியான விவரம் தெரியவில்லை.

35. பொன்னிறத்தாள் கதை, பதிப்பாசிரியர். சூரநாட்டுக் குஞ்ஞன் பிள்ளை (தமிழ் எழுத்து + மலையாள மொழி).

36. பொன்னுருவி கதை, பதிப்பாசிரியர். முனைவர். சூ. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998 (குறிப்பு: சிவனணைஞ்ச பெருமாள் கதையின் முற்பகுதியாகிய இவரின் தாயைப் பற்றிய கதையே இது).

37. மதுரைவீரன் கதை, புகழேந்திப்புலவர், ஆர்.ஜி. பதி கம்பெனி, சென்னை, 1969, பல்வேறுபட்ட பதிப்புகள், பல ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

38. முத்துப்பட்டன் கதை, பதிப்பாசிரியர். டாக்டர். நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம், அக்.1971.

39. மெச்சும் பெருமாள் பாண்டியன் கதை, பதிப்பாசிரியர். டாக்டர். சு. சண்முகசுந்தரம், கொடுமுடி சண்முகப் பிரசுரம், 1976.

40. வண்ணார மாடன் கதை, வெளியாகவில்லை.

41. வலங்கைநூல் கதை, வெளியாகியுள்ளது, பிற விவரங்கள் தெரியவில்லை.

42. வன்னியராயன் கதை, (தடிவீரசுவாமி கதை & வன்னியராயன் கதை) பதிப்பாசிரியர். முனைவர். சூ.நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

43. வீணாதி வீணன் கதை, பதிப்பாசிரியர். டாக்டர். நா.வானமாமலை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ஜன.1967.

44. வெங்கலராசன் கதை, The Dateless Muse, ஆசியவியல் ஆய்வு நிறுவன வெளியீடு, 1988.

45. வெள்ளைக்காரன் கதை,பதிப்பாசிரியர். டாக்டர். ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ஜுலை, 1983.

* * *

## துணை நூற் பட்டியல்


1. தமிழில் கதைப்பாடல், டாக்டர். ஏ.என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, செப்.1987.
2. தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வுக் கட்டுரைகள், பொன் கோவிந்த சாமி, 1984.
3. The Wandering Voice, Editor. Dr. R. Nirmala Devi, Institute of Asian Studies, Feb. 1987.
4. தடிவீர சுவாமி கதை & வன்னியராயன் கதை, பதிப்பாசிரியர். முனைவர். சூ. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1996.
5. முத்துப்பட்டன் கதை, பதிப்பாசிரியர். டாக்டர். நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம், அக்.1971.
6. காத்தவராயன் கதைப்பாடல், பதிப்பாசிரியர். டாக்டர். நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம்.
7. சிதம்பர நாடார் கதை, பதிப்பாசிரியர். சு. தங்கதுரை, ஸ்ரீபரந்தாமன் பிரிண்டர்ஸ், மே, 1982.
8. ஆராய்ச்சி (மலர் 2, இதழ் 2), ஆசிரியர் டாக்டர். நா. வானமாமலை, மார்ச், 1971.
9. ஐவர் ராசாக்கள் கதை, பதிப்பாசிரியர். டாக்டர். நா. வானமாமலை, மதுரைப் பல்கலைக் கழகம், ஜன. 1974.
10. தோட்டுக்காரி கதை, பதிப்பாசிரியர். முனைவர். வ. அலமேலு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.
11. திரு. நாராயண குருவும் தமிழகமும், பதிப்பாசிரியர். டாக்டர். கி.நாச்சிமுத்து, திரு. நாராயணா வெளியீடு, நாகர்கோவில், 1985.
12. காத்தவராய சுவாமி கதை (பெரிய எழுத்துக்கதை), பி.இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை, 1872.
13. கோபல்ல கிராமம், கி.ராஜநாராயணன், வாசகர் வட்டம், ஜூலை, 1976.
14. கரிசல் காட்டுக் கடுதாசி, கி.ராஜநாராயணன், அன்னம் வெளியீடு, சிவகங்கை, டிச.1988.
15. பொருநை நாடு, புலவர் எஸ். கணபதிராமன், ஸ்ரீ எம்.ஜி.எம். வெளியீடு, டிச.1966.
16. Castes and Tribes of Southern India, E.Thurston. Vol.VII, Cosmo Publications, Delhi, 1975.

17. தமிழ் அகராதிகள், சென்னைப் பல்கலைக் கழகம்.
18. வாழ்வியற் களஞ்சியம், தஞ்சைப் பல்கலைக் கழகம்.
19. கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை, பதிப்பாசிரியர். முனைவர். சூ.நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.
20. தமிழ்ச் சுவடிகள் (அட்டவணை), பதிப்பாசிரியர். முனைவர். சூ.நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.
21. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகக் கதைப் பாடல் சுவடிகள்.
22. 'தன்னனானே'- கதைப்பாடல் சிறப்பிதழ், பொங்கல் மலர், ஆசிரியர். டாக்டர். சு. சண்முகசுந்தரம், ஜன. 1997.
23. ஆய்வுக்கோவைகள் (நாட்டுப்புற இலக்கியக் கட்டுரைகள்).
24. தினமலர் நாளிதழ் (27.12.97)
25. சிவனணைஞ்ச பெருமாள் கதைப்பாடல் சுவடி, தமிழ் ஓலைச் சுவடிகள் பாதுகாப்பு மையம், 1/45, முட்டுக்காடு சாலை, கொட்டி வாக்கம், சென்னை - 41.
26. பொன்னுருவி கதை, மேற்படி.
27. செண்பக மாற பாண்டியன் கதை, மேற்படி.

* * *

# சிறப்புச் சொல்லகராதி

## எண் - பக்க எண்


| | |
|---|---|
| அச்சங்குளம் | 88 |
| அச்சிமார் | 194 |
| அஞ்சுகிராமம் | 269 |
| அடவு கம்பு | 114 |
| அடைக்காய் | 113 |
| அடி முறைகள் | 33 |
| அண்ணாவி | 113,197,198,248,249 |
| அம்பா சமுத்திரம் | 98 |
| அய்யன் காவு | 241 |
| அரசிக்கரை | 82 |
| அரவமுத்து | 63 |
| அரவமுத்து தெய்வம் | 74 |
| அவத்திக்காறை | 205 |
| அறுகுல மாடன் | 148 |
| ஆசனி மரம் | 187 |
| ஆசாரிமார் | 186 |
| ஆண்டார் மடம் | 88 |
| ஆதவி | 167 |
| ஆரியங்கா வய்யன் | 94 |
| ஆலங்குளம் | 81,82 |
| ஆலடிப்பட்டி | 82 |
| ஆழ்வார் குறிச்சி | 99 |
| ஆளிட்ட காசி | 51 |
| ஆறுமுகப்பெருமாள் புலவர் | 10,11 |
| ஆனைக் காத்தய்யன் கோவில் | 99 |
| இடையன் குளம் | 99 |
| இணகூரப் பெருமாள் | 246 |
| இராமயணக் கதை | 47 |
| இராவணன் | 19 |
| இருசி | 194 |
| இருளப்பன் | 148,197 |
| இலந்தையம்பலம் | 93 |
| இலுப்பை | 187 |
| ஈத்தங்கரை | 89 |

ஈத்தங்காட்டு மடம் 88
ஈத்துப்பபிரை 186
ஈத்துப் புரை 105
உச்சிப் பிறை 205
உருக்கிராம்பூசி மடம் 81
உருமால் 201
உலக முழுதுடையாள் கதை 60
உவரி 269
ஊட்டுப் பற்று 89
எருக்கலை வெட்டி 269
எருதுவிழுந்தான் பாறை 100
எழுத்து முறைகள் 11
எழுத்து வடிவங்கள் 5
ஐயனார் கதை 47
ஐவர் ராசாக்கள் கதை 27
ஒத்தக்கண் பொத்தை 81
ஒத்தக்காலன் விளை 246,256
ஒற்றைக்காலன் விளை 254
ஓட்டன் 188,200
ஓட்டாளன் 188
கட்டுவம் 205
கடுக்கன் 187
கடையத்தூர் 99
கடையம் 209
கதைக்கரு 15
கதை நிகழ்ச்சிகள் 17
கதைப்பாடல்கள் காலம் 1
கரமனை 93
கருங்குருவி 189
கருணையாறு 99
கரும்புழியூர் 83
கருமறவன் 71
கரையாளன் மடம் 81
கல்லாறு 99
கல்வெட்டாங்குழி 91
கலியம் பணம் 50
கவண்டர்மடம் 86
கழு 203
கழுக்கள் 187
கழுமரம் 67

| | |
|---|---|
| கழுவேற்ற முறைகள் | 65 |
| கள்ளவாள் | 157 |
| கள்ளியங் காட்டூர் | 177 |
| களியக்காவிளை | 93 |
| கன்னங்குளம் | 269 |
| கனனடியன் படைப்போர் | 47 |
| கன்னிமாகுமரி | 90 |
| கனக தண்டியல் | 189 |
| காசுமாலை | 205 |
| காட்டூர் | 93 |
| காணி மடம் | 269 |
| காத்தவராயன் | 23 |
| காறை | 205 |
| கிட்டிணபுரம் | 99 |
| குட்டி நாடார் | 29 |
| குத்தாலத்தூர் | 196 |
| கும்பமுனிபுரம் | 242 |
| குமாரப்பற்று | 89 |
| குருந்தாழை | 187 |
| குல்லா | 137 |
| குழந்தை மணச்சட்டம் | 31 |
| குழந்தை மணம் | 30 |
| குழித்துறை | 93 |
| குறியீடு | 10 |
| குறுணி | 191 |
| குறைப் பிரதி | 10 |
| கூடங்குளம் | 269 |
| கெச்சை மணியாரம் | 195 |
| கொட்டப்பெட்டி | 189 |
| கொட்டாரத்தூர் | 88 |
| கொட்டிச்சியர் | 182 |
| கொத்தங்குளம் | 269 |
| கொத்தியார் | 107,108 |
| கொத்தியாள் | 189 |
| கொத்து | 124 |
| கொம்மடித் தாவு | 168 |
| கொம்மண்டவாளய்யன் | 165 |
| கொல்லி மலைச் சாத்தா | 181 |
| கொலுசு | 205 |
| கோட்டாறு | 91 |

| | |
|---|---|
| கோட்டானை | 227 |
| கோட்டைவிளை | 269 |
| கைப்பிரளி மூலிகை | 145 |
| கையறுத்தான் பச்சிலை | 145 |
| சங்குமந் துறையூர் | 179 |
| சடக்கன்மடம் | 86 |
| சதுர வளை | 105 |
| சந்தமிக்காசி | 50 |
| சமுதாடு | 138,200,222,223 |
| சரப்பளி | 205 |
| சல்லா | 137 |
| சவடி | 205 |
| சாத்தாங்குளம் | 169 |
| சாத்தான்குளம் | 91 |
| சாஸ்தா கதை | 47 |
| சிங்களூர் | 98 |
| சிதம்பரநாடார் | 23 |
| சிமிக்கி | 205 |
| சிரம்பம் | 113,114 |
| சிலம்பக் கலை | 33 |
| சிலம்பு | 205 |
| சிவத்தாபுரம் | 90 |
| சிவந்தநிழல் வாடி | 145 |
| சிவனணைஞ்ச பெருமாள் | 48 |
| சிறுக்கன் | 105,146,147,156,215,250,255,260,261 |
| சிறுத்தொண்டர்புரம் | 168 |
| சிறுவாள் | 157 |
| சின்னணைஞ்சி | 49 |
| சின்னம்மை கதை | 56 |
| சீர்மைகள் | 11 |
| சீவலமாறன் | 48 |
| சுங்காங்கடை | 177 |
| சுங்கான் கடை | 87 |
| சுடலை மாடன் | 241 |
| செங்கோட்டை | 13,75 |
| செண்பகராசன் | 48 |
| செட்டியர் குளத்தூர் | 99 |
| செட்டியர் குளம் | 99 |
| செட்டியார் மடம் | 81 |
| செந்தூர் | 86 |

| | |
|---|---|
| சொருகுசந்து | 205 |
| சொல் வடிவங்கள் | 8 |
| தகடம் | 115 |
| தண்டை | 205 |
| தலைமைத் தெய்வம் | 55 |
| தலைவெட்டும் வழக்கம் | 19 |
| தளவாபுரம் | 89 |
| தாழ்ந்த குலம் | 13 |
| திக்கணம் | 89 |
| திண்டுக்கல்லு ராசன் | 259 |
| திரட்டுக் கலியாணம் | 205 |
| திருக்கணங்குடி | 172 |
| திருச்செந்தூர் | 83 |
| திருவட்டாறு | 93 |
| திருவனந்தபுரம் | 179 |
| திருவனந்தாபுரம் | 93 |
| தீட்டுமுடி | 112 |
| தீண்டத்தகாத இனம் | 13 |
| தீண்டாத சாதி | 220 |
| துணைத் தெய்வம் | 55 |
| துவர வண்ணான் | 131 |
| தூண்டிமுத்து முதலியார் | 24 |
| தென்காசி | 13,76,80,99,150,151,162,178,183,184,190,196 |
| தென்காசி மன்னவர் | 40 |
| தேவர்மடம் | 81 |
| தொட்டிச்சி குளம் | 89 |
| தொட்டிப்பாலம் | 88 |
| தொன்னூல் | 113 |
| தோசக்கிணறு | 175 |
| தோட்டுக்காரி | 213 |
| தோட்டுக்காரி கதை | 27 |
| நட்டாறு | 269 |
| நம்பிக்குறிச்சி | 171 |
| நம்பிபற்று | 89 |
| நம்பிமார்கள் | 101 |
| நன்னாஞ்சி நாடு | 91 |
| நன்னூல் | 113 |
| நாகருகோவில் | 176 |
| நாய்ப்பாறை | 148 |
| நாராயண குரு | 30 |

| | |
|---|---|
| நாராயம் | 201 |
| நாவல் குளம் | 81 |
| நாற்பத்து கோட்டை நிலம் | 198 |
| நீலி | 213 |
| நீலி எனும் இசக்கி கதை | 47 |
| நூல்புரம் | 195 |
| நெத்திப்பிறை | 205 |
| நெய்யாத்தங்கரை | 93 |
| நெல்லையப்பர் | 197 |
| நேமம் | 93 |
| பகபதி கோவில் | 186 |
| பஞ்ச பாண்டியர்கள் | 29 |
| பஞ்சலிங்கபுரம் | 269 |
| பட்டாணி பாசை | 198 |
| பண்ணையூர் | 269 |
| பணகுடி | 172 |
| பணிக்கன் | 113 |
| பத்திரன் | 185 |
| பருவட்டம் | 107,195,261 |
| பல்பனாபுரம் | 87,178 |
| பல்லாக்கு | 189 |
| பலவேச சேர்வைககாரன் கதை | 64 |
| பழகை நல்லூர் | 213 |
| பஸ்மாசுரன் கதை | 47 |
| பாசை பதினெட்டு | 198 |
| பாடகம் | 205 |
| பாடுகிற பரசி | 136 |
| பாம்பன் குளம் | 89 |
| பாரச்சாலை | 93 |
| பால்குளம் | 90 |
| பாவநாசத் துறை | 98 |
| பாவநாசம் | 98 |
| பிடிபலகை | 105 |
| பிழை வடிவங்கள் | 7 |
| பின்னம் | 166 |
| பீலி | 205 |
| புத்தன் குறிச்சி | 83 |
| புதுக்குளம் | 91 |
| புலமாடன் | 148 |
| புலிக்குறிச்சி | 87 |

புளிக்கறிச் சோறு 188
புளியரை 113
பேச்சுவழக்குச் சொற்கள் 7
பொத்தை 99
பொத்தைக்காடு 89
பொன் 51
பொன்னுருவி 49
மஞ்சனத்தி 187
மணிக்காஞ்சி 57,202,242
மணியாச்சி 49
மத்தாளப் பாறை 99
மதுரைப் பணம் 50
மதுரை வீரன் 23
மந்திரப்பூ மாலையம்மை 199
மந்திரமூர்த்தி 24
மருத்துவச்சி 188
மருது 187
மருமக்கள் தாயம் 24,28
மாத்து 124,128,213
மாந்தயர் 100,104,105,111,112
மாந்தையர் 185,186,187
மாடப்பூத் தலைவன் 199
மாடன் 49
மாலையம்மை கதை 60
மானூர் 82
முடுகு 187
முத்துப்பட்டன் 23
முப்பந்தல் 173
மூன்றுமுகங் கொண்டவள் 172
மூன்று முகங் கொண்டாள்89
மேகவர்ணப் பச்சிலை 145
மேல்முருகு 205
மேலக்கோட்டை 93
மேனா 189
மோகினி கதை 47
வசிய மருந்து 19
வட்டக் கோட்டை 90
வடுகர் குலம் 63
வண்ணச் சரப்பளி 201
வண்ணார் கலகம் 56

| | |
|---|---|
| வண்ணார் குலத்தவர் | 39 |
| வர்மக் கலை | 33 |
| வலங்கைக் குலம் | 18,29,39 |
| வள்ளி மலைச் சாத்தா | 183 |
| வள்ளியூர் | 89,172,213 |
| வன்னியப்பூத் தலைவர் | 199 |
| வன்னியராசன் | 47 |
| வாகைக் குளம் | 99 |
| வாத்திமை | 198 |
| வாதை | 55 |
| வாமடை | 184 |
| வாரியூர் | 90 |
| வாள்மானம் | 105 |
| விச்சுவனார் | 187 |
| விசயநாராயணம் | 91 |
| விணிக்குத்தூர் | 93 |
| விபீடணன் | 19 |
| விராகன் | 51 |
| வில்லிட்ட காசி | 51 |
| வில்லுக்கிறிம்பலம் | 177 |
| வில்லுப்பாட்டு | 10 |
| வில்லுருதி | 87 |
| வீரதண்டை | 205 |
| வீராளிப் பட்டு | 201 |
| வெங்கலத்துக் கோட்டை | 247 |
| வெட்டும் பெருமாள் கதை | 60 |
| வெருகு | 182 |
| வெள்ளமடம் | 81 |
| வெள்ளாவி | 211 |
| வெள்ளாவிக்கல் | 123 |
| வெள்ளாவித் துறை | 123 |
| வெள்ளிக் கழு | 263 |
| வேதன் | 164 |
| வேர்வை பத்திரன் | 38 |
| வேர்வைபத்திரர் | 185 |
| வேள்வி மலை | 177 |
| வைகுண்டசாமி | 30 |
| ரவுக்கை | 205 |
| ரேசி | 201 |


* * * * *

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை – 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் | 110. 00 |
| நன்னூல் மூலமும் கூழங்கைத்தம்பிரான் உரையும் | 65. 00 |
| யாப்பருங்கலம் | 170. 00 |
| மண்டல புருடர் வழங்கிய சூடாமணி நிகண்டு | 65. 00 |
| தமிழ் நாடகமேடை முன்னோடிகள் | 40. 00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் – ஓர் ஆய்வு | 60. 00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோயில் வரலாறும் பண்பாடும் | 60. 00 |
| வெள்ளுடை வேந்தர் தியாகராயரின் வாழ்வும் பணியும் | 65. 00 |
| தமிழ்நாட்டு வரலாற்றில் இலக்கிய ஆதாரங்கள் | 100. 00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், தொகுதி – 1 | 100. 00 |
| கதிர்வேற்பிள்ளை – தமிழ்ச் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600. 00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 65. 00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி--3 | 30. 00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40. 00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–1 | 50. 00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள், தொகுதி–2 | 40. 00 |
| நாட்டிய நன்னூல் | 25. 00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20. 00 |
| கபிலர் | 70. 00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75. 00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65. 00 |
| தமிழக மேடை நாடகப் பெண் கலைஞர்கள் – குறிப்பேடு | 25. 00 |
| A Grammar of Contemporary Literary Tamil | 80. 00 |
| Cilappatikaram (மொ.நூ.ம.ப) | 100. 00 |
| காதம்பரி மூலமும் வசனமும் (ம.ப) | 125. 00 |
| Tani pacura togai (மொ.நூ.ம.ப) | 30. 00 |
| Dedication (மொ.நூ.ம.ப) | 25. 00 |
| Temple chimes (மொ.நூ.ம.ப) | 20. 00 |
| Nala venba (மொ.நூ.ம.ப) | 45. 00 |
| Tamil Heroic Poems (மொ.நூ.ம.ப) | 40. 00 |
| Six Long Poems From Sangam Tamil (மொ.நூ.ம.ப) | 30. 00 |
| Kurinci-p-pattu-Muttollayiram (மொ.நூ.ம.ப) | 40. 00 |
| Kuruntokai (மொ.நூ.ம.ப) | 110. 00 |
| Landscape And Poetry (ம.ப) | 50. 00 |
| Tamil Culture and Civilization (ம.ப) | 60. 00 |
| Tolkappiyam and Astadhyayi | 110. 00 |

---

**சின்னணைஞ்சான் கதை** **75.00**